அரசியலமைப்புச் சட்ட ஆய்விற்கு
ஓர் அறிமுகம் - I.
- டைசி (ஏ வி)

அரசியலமைப்புச் சட்ட ஆய்வுக்கு ஓர் அறிமுகம் - I

ஆசிரியர்

ஏ. வி. டைசி

தமிழாக்கம்

பா. சூரியநாராயணன்

தமிழ் வெளியீட்டுக் கழகம்

தமிழக அரசு

தமிழ் வெளியீட்டுக் கழக வரிசை எண் – 186

அரசியலமைப்புச் சட்ட ஆய்வுக்கு ஓர் அறிமுகம் - I

(Introduction to the Study of the Law of the Constitution - I)

ஆசிரியர்

ஏ. வி. டைசி

தமிழாக்கம்

பா. சூரியநாராயணன், எம்.ஏ.,எம்.ஏ.,எம்.லிட்.,
அரசியல் - வரலாற்றுத்துறைப் பேராசிரியர்,
அழகப்பா கல்லூரி,
காரைக்குடி.

தமிழ் வெளியீட்டுக் கழகம்

தமிழக அரசு

First Edition—December 1968

B.T.P. No. 186

© Bureau of Tamil Publications

Introduction to the Study of the Law of the Constitution—I

A. V. Dicey

Translation

P. Surianarayanan

Price Rs. 5-75

This Tamil edition of the work 'Introduction to the Study of the Law of the Constitution' by A. V. Dicey is published by arrangement with M/s. Macmillan and Company, Ltd., London.

Printed by :
Srinivasam Press of Jupiter Enterprises,
1, Smith Lane,
Madras-2.

அணிந்துரை

(திரு. இரா. நெடுஞ்செழியன், தமிழகக் கல்வி-தொழில் அமைச்சர்)

தமிழைக் கல்லூரிக் கல்வி மொழியாக ஆக்கி ஏழு ஆண்டுகள் ஆகிவிட்டன. குறிப்பிட்ட சில கல்லூரிகளில் பி.ஏ., வகுப்பு மாணவர்கள் தங்கள் பாடங்கள் அனைத்தையும் தமிழிலேயே கற்று வருகின்றனர். தொடக்கத்தில் இருந்த இடர்ப்பாடுகள் மெல்லமெல்ல மறைந்துவருகின்றன. நாடு முழுதும் பரந்துள்ள மாணவர்களின் ஆர்வம், 'தமிழிலேயே கற்பிப்போம்' என முன்வந்துள்ள கல்வி ஆசிரியர்களின் ஊக்கம், பிற பல துறைகளிலும் தொண்டு செய்வோர் இதற்கெனத் தந்த உழைப்பு, தங்கள் சிறப்புத் துறைகளில் நூல்கள் எழுதித் தர முன்வந்த நூலாசிரியர்கள் தொண்டுணர்ச்சி இவற்றின் காரணமாக இத்திட்டம் நம்மிடையே மகிழ்ச்சியும் மனநிறைவும் தரத்தக்க வகையில் நடைபெற்றுவருகிறது.

பல துறைகளில் பணிபுரியும் பேராசிரியர்கள் எத்தனையோ நெருக்கடிகளுக்கிடையே குறுகிய காலத்தில் அரிய முறையில் நூல்கள் எழுதித் தந்துள்ளனர்.

வரலாறு, அரசியல், உளவியல், பொருளாதாரம், புவியியல், வேதியியல், உயிரியல், வானியல், புள்ளியியல், தத்துவம் ஆகிய பல துறைகளில் தனி நூல்கள், மொழி பெயர்ப்பு நூல்கள் என்ற இருவகையிலும் தமிழ் வெளியீட்டுக் கழகம் நூல்களை வெளியிட்டு வருகிறது.

இவற்றுள் ஒன்றுன 'அரசியலமைப்புச் சட்ட ஆய்வுக்கு ஓர் அறிமுகம்-I' என்ற இந் நூல் தமிழ் வெளியீட்டுக் கழகத்தின் 186ஆவது வெளியீடாகும். கல்லூரித் தமிழ்க் குழுவின் சார்பில் வெளியான 35 நூல்களையும் சேர்த்து இதுவரை 221 நூல்கள் வெளிவந்துள்ளன.

கணக்கிலடங்காத் தடைகளை எல்லாம் அகற்றித் தமிழன்னை கல்லூரிக் கலை மண்டபத்தில் கொலு வீற்றிருக்கிருள். எனவே, இவ்வன்னையை வாழ்த்துவோமாக! உழைப்பின் வாரா உறுதிகள் இல்லை; ஆதலின், உழைத்து வெற்றி காண்போம். தமிழைப் பயிலும் மாணவர்கள் உலக மாணவர்களிடையே சிறந்த இடம் பெறவேண்டும்; அதுவே தமிழன்னையின் குறிக்கோளுமாகும். சென்னைப் பல்கலைக் கழகத்தின் பலவகை உதவிகளுக்கும் ஒத்துழைப்புக்கும் நம் மனம் கலந்த நன்றி உரித்தாகுக.

இரா. நெடுஞ்செழியன்

முதற் பதிப்புக்கு நூலாசிரியர் எழுதிய முன்னுரை

இந் நூல், அதனுடைய தலைப்பு உணர்த்துவதுபோல அரசியலமைப்புச் சட்டத்தின் ஆய்வுக்கு ஓர் அறிமுகமாக இருக்கிறது. இது ஒரு சுருக்கமான நூலும் அன்று; மேலும் இது அரசியலமைப்புச் சட்டத்தைப்பற்றிய ஒரு முழுமையான விளக்கமும் அன்று. இது, தற்கால இங்கிலாந்தின் அரசிய லமைப்பில் ஊடுருவிக் காணப்படுகின்ற, வழி காட்டியாக அமைந்த இரண்டு அல்லது மூன்று விதிகளைப்பற்றி மட்டுமே குறிப்பிடுகிறது. இந்த முக்கியமான விதிகளை மாணவர்க ளுடைய மனத்தில் பதிய வைத்தற்கு உதவியாக ஒரு சிறு கைப் புத்தகத்தை வெளியிடுவதும், அதன் மூலமாக இங்கிலாந்தின் அரசியலமைப்புச் சட்டத்தை உருவாக்கியுள்ள ஆசிரியர் பிளாக்ஸ்டனின் 'விளக்கங்களையும்' (Blackstone's Commentaries), அவைகளைப் போன்ற வேறு பல சட்ட விளக்கங்களையும் பயனுள்ள வகையில் மாணவர்கள் படித்துத் தெரிந்து கொள்ளச் செய்வதும்—ஆகிய இவையே இந் நூலை வெளி யிடுவதில் என்னுடைய நோக்கம் ஆகும். இந் நோக்கத்தை நிறைவேற்றும் முயற்சியில், இப்பொழுது நடைமுறையில் இருந்துவரும் அரசியலமைப்புக்கு அடிப்படையாக அமைந் துள்ள பாராளுமன்ற இறைமை போன்ற கோட்பாடுகளை நான் வலியுறுத்தியுள்ளேன்; அதுமட்டுமல்லாமல், ஆங்காங்கே ஆங்கில அரசியலமைப்புத் தத்துவத்தை ஒரு பக்கம் அமெரிக்க ஐக்கிய நாட்டின் அரசியலமைப்புத் தத்து வத்தோடும், மறுபுறம் பிரெஞ்சு குடியரசின் அரசியலமைப்புத் தத்துவத்தோடும் ஒப்பிட்டு விளக்கியுள்ளேன். எனது நோக்கத்தை ஓரளவேனும் நான் நிறைவேற்றியிருக்கிறேனு என்பதை வாசகர்களின் தீர்ப்புக்கு நான் விட்டுவிடவேண்டும். மேலும் வாசர்களுக்கு நான் கீழ்வரும் கருத்துகளை இங்கு நினைவுபடுத்துவதும் நல்லது. நடைமுறையில் செய்யப்பட்ட சொற்பொழிவுகளடங்கிய இந்த நூல், வெளியிடுவதற்கேற்ற வகையில் திருத்தி அமைக்கப்பட்டபோதிலும், இது, வாய்

மொழியாகக் கொடுக்கப்படும் விளக்கத்துக்கு இயல்பாக உள்ள சில தன்மைகளை வெளிப்படுத்துகிறது; மேலும் அரசியலமைப்புச் சட்டத்தின் விதிகளைப்பற்றிய இதனைப் போன்ற ஒரு கட்டுரையானது, தனது அளவையும், நோக்கத்தையும் பொறுத்தவரையில், இங்கிலாந்தின் அரசியலமைப்பு வரலாற்றினின்றும் எவ்வளவில் மாறுபட்டிருக்கிறதோ, அவ்வளவில் இக் காலப் பாராளுமன்ற அரசாங்க முறையின் சிக்கலான அமைப்பு நடைமுறையில் செயல்படும் விதத்தை ஆய்வு செய்வதும், பிறவற்றோடு ஒப்பிடற்கரியதுமான ஆசிரியர் பேஜாட் என்பவரின் 'ஆங்கில அரசியலமைப்பு' (Bagehot's English Constitution) போன்ற நூல்களினின்றும் மாறுபடுகின்றது.

ஆயினும், எனது நூலுக்குத் தனியான ஒரு நோக்கம் உண்டு என நான் வலியுறுத்துவேனாயின், ஆங்கில அரசியலமைப்பைப்பற்றிய நூல்களை எழுதியுள்ள சட்ட அறிஞர்களும், வரலாற்றாசிரியர்களும் எடுத்துக்கொண்ட முயற்சிகளுக்கு நான் பட்டுள்ள நன்றிக்கடனை எவ்வளவிலும் குறைத்துக் கூற முடியாது. எனது சொற்பொழிவுகளுள் எதனையும் நான், அரசியலமைப்பு ஆசிரியர்களான பிளாக்ஸ்டன் (Blackstone), ஹாம்ல (Hallam), ஹெர்ன் (Hearn) கார்டினர் (Gardiner), பிரீமன் (Freeman) போன்றோரின் நூல்களை அவ்வப்போது மேற்கோளாகக் காட்டாமல், ஒரு பக்கங்கூட எழுதியிருக்க இயலாது. இவ்வாசிரியர்களின் நூல்களெல்லாம் ஒவ்வொரு மாணவரிடமும் உள்ளன. இவ்வாசிரியர்களுள் முக்கியமாக மூவருக்கு நான் வெகுவாகக் கடமைப்பட்டுள்ளேனாதலால், அவர்களுக்கு நான் எவ்வளவில் கடமைப்பட்டுளேனென்பதை நான் தனிப்படக் காட்டி ஒப்புக்கொள்ளுதல் என்னுடைய கடமை உணர்வையும் மகிழ்ச்சியையும் வெளிப்படுத்துதல் ஆகும். அரசியலமைப்பின் அடிப்படையாக அமைந்துள்ள சாதாரண விதிகளைப் பழங்காலத்தில் ஏற்படுத்திய சட்ட அறிஞர்களுடைய அரிய முயற்சிகளை வேறு எந்த ஒரு நூலையும்விடப் பேராசியர் ஹெர்னின் 'இங்கிலாந்தின் அரசாங்கம்' (Government of England) என்ற நூல் எனக்கு எடுத்துக் காட்டிற்று. ஆசிரியர் கார்டினர் எழுதிய 'இங்கிலாந்தின் வரலாறு' (History of England) என்ற நூல் எனது நூலில் வலியுறுத்தப்பட்டுள்ள ஒரு கருத்தினை எனக்குக் குறிப்பாக உணர்த்திற்று. பிரான்ஸ் நாட்டின் ஆட்சித்துறைச் சட்டத்தைப்பற்றி (administrative law) நான் திரட்டிய செய்திகளினால் மேற்படி கருத்து வலியுறுவதைக் கண்டேன். மேற்படி

கருத்து என்னவெனில், டியூடர் (Tudors), அரசர்களுடைய காலத்திலும் ஸ்டூவர்ட் (Stuarts) அரசர்களுடைய காலத்திலும் அரசாங்க வழக்கறிஞர்கள் (Crown Lawers) அரசருடைய விசேட அதிகாரம் (prerogatives) என்பதைப்பற்றிக் கொண்டிருந்த கருத்துகளெல்லாம், இப்பொழுது பிரான்ஸ் நாட்டில் மூன்றுவது குடியரசு அமைப்பில் உள்ள ஆட்சித்துறைச் சட்டத்துக்கு (droit administratif) இன்னும் ஆதாரமாக இருக்கின்ற சட்ட இயல்பான, ஆட்சி இயல்பான கருத்துகளைப் பெரிதும் ஒத்திருக்கின்றன என்பதே. எனது நண்பரும், உடன் அலுவல் செய்பவருமான மிஸ்டர் பிரீமனுக்கு நான் வேறொரு வகையாகக் கடமைப்பட்டிருக்கின்றேன். அவருடைய 'ஆங்கில அரசியலமைப்பின் வளர்ச்சி' என்ற நூல் (Growth of English Constitution) படித்துப் பாராட்டுதற்குரியதே யன்றி, பின்பற்றக் கூடிய ஒன்று அன்று. உணர்ச்சியற்ற (dry), காணுதற்கரிய கருத்துகளையும், யாவருக்கும் ஈடுபாட்டை உண்டாக்கக்கூடிய, பயனுள்ள பொருள்களாகக் கையாளுவதில் ஓர் எடுத்துக் காட்டாக அவருடைய நூல் எனக்கு இருந்துள்ளது. நமது அரசியலமைப்பில் 'எழுதப்பட்டுள்ள சட்டம்' என்று கூறப்படும் பகுதிக்கும், 'நமது வழக்கங்களை ஆதாரமாக உடைய அரசியலமைப்புக்கும்' உள்ள வேறுபாட்டை மேற்படி நூல் தெளிந்த முடிபாக எடுத்துக் காட்டுகிறது. இந்த முடிபே ஒரு வினவுக்கு விடைகாணுமாறு என்னைத் தூண்டுகிறது. அவ்வினு யாதெனில் சட்டங்களாக இல்லாமல், அரசியலமைப்பில் சில பழக்கங்களாக இருப்பவற்றுக்கு உள்ள (constitutional understanding) கட்டுப்படுத்தும் அதிகாரம் (binding power) எந்த மூலாதாரத்தினின்றும் தோன்றுகிறது என்பதே. இதே நூலில், அரசியலமைப்பின் வளர்ச்சியிலுள்ள ஒரு பகுதி ஒரு வரலாற்றுசிரியனுக்குத் தோற்றமளிக்கும் வகையைப் பற்றியும் பல தொடர்கள் (statements) காணப்படுகின்றன. அவை, நமது நிறுவனங்களை (institutions) வரலாற்று முறையாக (historical method) ஆய்வதற்கும் சட்டவகையாக (legal method) ஆராய்வதற்கு முள்ள முக்கியமான வேறுபாட்டை எனது கவனத்துக்குக் கொண்டுவந்தன. அரசியலமைப்பானது வளர்ச்சி யடைந்துள்ள பல்வேறு நிலைகளையும் (steps) தனித்தனியாக நாம் ஆராய்ந்தால், அத்தகைய பழக்கமானது இப்பொழுது நடைமுறையில் இருந்துவரும் அரசிலமைப்புச்சட்டத்தைப் போதிய அளவு கவனத்துடன் மாணவர்கள் ஆராயவிடாமல் தடுக்கக் கூடுமல்லவா என்பதையும் ஆராயுமாறு மேற்படி நூலின் தொடர்கள் தூண்டின. எவ்வாறுயினும் அரசியல் நிறுவனங்களின் வளர்ச்சியைப் பற்றிய ஆராய்ச்சியில்

கையாளப்படுகின்ற வரலாற்று முறையிலே ஒரு குறைபாடு உண்டு. அது என்னவெனில், அது இப்பொழுது ஒரு நிறுவனம் எவ்வாறு அமைந்துள்ளதோ, அவ்வாறு அது எப்படி உருவாயிற்று என்பதை ஆய்வதிலேயே கவனம் செலுத்துமாறு நம்மைத் தூண்டுகிறபடியால், அந்த நிறுவனம் என்னவாக இப்பொழுது இருக்கிறது என்பதை முழுக் கவனத்துடன் நாம் ஆராய இயலாமலிருக்கிறோம்.

ஆல் சோல்ஸ் கல்லூரி,
ஆக்ஸ்போர்டு, 1885.

ஏ. வி. டைசி

பத்தாம் பதிப்புக்குப் பதிப்பாசிரியர் வேட் (Wade) எழுதிய குறிப்பு

பேராசிரியர் டைசி தனது நூலை 1908ஆம் ஆண்டில் வெளியான எட்டாம் பதிப்பு உள்ளிட்ட பதிப்புகளைத் திருத்தி வெளியிட்டார். இதனுல் 1885ஆம் ஆண்டிற்குப் பின்னர் 'அரசியலமைப்பில் ஏற்பட்டுள்ள, அல்லது அதனைப் பாதித்த மாறுதலைத் தனது நூலில் சேர்க்க அவரால் முடிந்தது'; ஏனெனில், (1908ஆம் ஆண்டில்) இருந்த அரசியலமைப்பினுடைய முக்கியத் தன்மைகளையே டைசி விரித்துரைக்க முற்பட்டார். 1914ஆம் ஆண்டில் இவ்வாசிரியருடைய கடைசிப் பதிப்புஎனக் கருதப்பட்ட பதிப்பை அவர் எழுதும்போது, அவர் வேருெரு முறையைக் கையாண்டார். நூலில் அவர் மேலும் பல மாறுதல்களைச் செய்யாமல், அவர் ஒரு நீண்ட முன்னுரையை (Introduction) எழுதினுர். அது இரு நோக்கங்களை நிறைவேற்றிற்று.

(1) அரசியலமைப்பின் முக்கியமான விதிகளைப் பொறுத்த மட்டில், சட்டத்திலுள்ள மாறுதல்கள், அல்லது 1885ஆம் ஆண்டுக்கும் 1916ஆம் ஆண்டுக்கும் இடைப்பட்ட காலத்தில் ஆசிரியர் விளக்கியவாறு அரசியலமைப்புச் செயல்பட்ட வகையிலே காணப்பட்ட மாறுதல்களினுல் தோன்றிய விளைவை ஆய்வதும், விளக்கம் செய்வதும் ஒரு நோக்கம் ஆகும்; (2) 1914ஆம் ஆண்டில் புதியனவாகக் கூறப்பட்ட அரசியலமைப்புக் கருத்துகளை ஆய்வு செய்வது இன்னெரு நோக்கம் ஆகும். 1914-ல் புதியனவாகக் கூறப்பட்ட அரசியற் கருத்துகள் அப்பொழுது நடைமுறைக்கு வந்திருக்கக்கூடியனவாகவோ, அப்பொழுது ஒரு புதிய ஆற்றலை வெளிப்படுத்தத் தொடங்கியோ இருத்தல் கூடும்.

1939ஆம் ஆண்டில் ஒன்பதாம் பதிப்பு வெளிவந்தபோது செய்ததைப்போல, நான் இங்கும் அதிலுள்ள முறையைக்

கையாள முயன்றிருக்கிறேன். ஆசிரியர் டைசியின் கருத்தின் முக்கியத்துவம் இந்த நூலில் கூறப்பட்டுள்ள கொள்கைகளில் அல்லது விதிகளில் (principles) காணப்படுகிறதே தவிர, 1914ஆம் ஆண்டில் அவர் எழுதிய முன்னுரையில் சுட்டிக் காட்டப்படுவதும், அக் காலத்திலிருந்தவையுமான வாதப் பிரதிவாதங்களில் (matters of controversy) காணப்படவில்லை. இவ் வகையிலேதான் எக்காலத்துக்கும் உரியதான ஒரு நூலின் செய்தியை (the text of a book which is a classic) நாம் பாதுகாப்பாக வைத்துக்கொள்ள இயலுகிறது; அதனோடு கூட, டைசி தனது கொள்கைகளை அல்லது விதிகளை (principles) இக் காலச் சூழ்நிலைகளின் வாயிலாக எடுத்துக் காட்டுவதற்குக் கையாண்ட அரசியலமைப்பின் கூறுபாடுகளையும் (aspects of the Constitution) நாம் ஆராய்ந்து பார்க்க இயலுகிறது. ஆசிரியர் டைசி, தான் விளக்கிய அரசிலமைப்புக் கருத்துகளெல்லாம் வெளிப்படையான உண்மைகளெனவும், அவை எக்காலத்தும் அவ்வாறே உள்ளன எனவும் ஒருபோதும் கூறவில்லை. உண்மையில் 1885ஆம் ஆண்டாகிய அக்காலத்திலேயே, 'அரசியலமைப்பு வளர்ந்துள்ள நிலைகளை யெல்லாம் தனித்தனியாக ஆய்வு செய்யும் பழக்கமானது, இப்பொழுது நடைமுறையிலிருந்து வரும் அரசியலமைப்புச் சட்டத்தை முழுக் கவனத்துடன் ஆராயவிடாமல் மாணவரைத் தடுக்கக் கூடுமல்லவா?' என்பதை அவர் கருத்தில் கொண்டிருந்தார். நிறுவனங்களின் வளர்ச்சியை ஆய்வு செய்வதில் வரலாற்று முறை கையாளப்படுவதனாலுண்டாகும் இடர்ப்பாட்டினை அவர் நன்கு உணர்ந்திருந்தார்; இந்த முறை, ஒரு நிறுவனமானது இப்பொழுது என்ன நிலையிலிருக்கிறது என்பதை முழுக் கவனத்துடன் ஆராய விடாமல் நம்மைத் தடுக்கிறது என்பதை அவர் அறிந்திருந்தார்.

டைசி, தற்கால அரசியலமைப்பைப்பற்றி எழுதுவாராயின், எந்த அளவுக்கு அவர் தமது கருத்துக்களை மாற்றிக் கொண்டிருப்பார் என்று கற்பனை செய்வது பயனற்ற எண்ணமாகும். இங்கு எனது வேலையெல்லாம், அவ்வாசிரியரே கூறியுள்ள சில மாறுதல்களையும், குறிப்பாக அவர் ஆட்சித்துறைச் சட்டத்தை இறுதியில் ஒப்புக்கொண்டுள்ளதையும் சுருக்கிக் கூறுவதும், இக் காலச் சூழ்நிலைகளில் அவருடைய மூன்று விதிகளைக் கையாளுதலைப்பற்றி ஆராய்வதும் ஆகும். டைசியின் கருத்துகளைக் குறை கூறுவோர், அவர் கூறிய மூன்று விதிகளுக்கும் கூடுதலாக எதனையும் குறிப்பிடவில்லை என்பது இங்குக் கவனிக்கத்தக்கது. அவர்கள் அவருடைய

மூன்று விதிகள் சரியா அல்லது தவரு என்று தீர்மானிக்க முயலுகின்றனரே யன்றி, வேறு விதிகள் உள்ளன என்று கூற வரவில்லை. கடந்த இருபது ஆண்டுகளிலும் சட்டத்தின் ஆட்சி என்ற கருத்தில் மக்களுக்கு முன்பு இருந்த ஈடுபாடு மீண்டும் தோன்றியிருக்கிறது. பாராளுமன்ற இறைமையைப் பற்றியும், அரசியலமைப்பின் வழக்கங்களைப்பற்றியும் அவர் கொடுத்த விளக்கத்தைவிட, சட்டத்தின் ஆட்சியைப்பற்றிய (rule of law) அவருடைய கருத்து, இந்த நாட்டில் அரசாங்கச் சட்டத்தின் (public law) வளர்ச்சியை உருவாக்கியுள்ளது. மேலும், சட்டத்தின் ஆட்சியைப்பற்றிய கருத்திலுள்ள ஈடுபாடு பொதுச் சட்டத்தில் மட்டுமே (common law) காணப்படுவது அன்று. இக் காலத்தில், காமன்வெல்த்தினுள்ளே, எழுதப் பட்டுள்ள அரசியலமைப்புச் சட்டங்களோடு சுதந்திர அரசுகள் தோன்றியுள்ளன. இந்த நிலையில் பாராளுமன்ற இறைமை என்ற கொள்கையே தாக்குதலுக்கு உள்ளாகி யுள்ளது. இந்த நிலையிலும், யுனைடெட் கிங்டத்தின் அரசிய லமைப்பினுடைய அடிப்படைக் கொள்கையாகிய, 'சட்டத்தின் முன்னர் பாராளுமன்றமே உயர்தர் அல்லது தலைமையான அதிகாரம் உடையது', என்பதைத் தகர்க்க முயலுகின்ற குறைகூறுவோர் வெற்றி பெறவில்லை. டைசியினுடைய நூலை அறிந்தவர் எவரும், ஆட்சித்துறை நீதி மன்றங்களையும், அரசாங்க விசாரணைகளையும்பற்றிய குழுவின் அறிக்கையைப் (Report of the Committee on Administrative Tribunals and Public Inquiries) படிக்கும்போது, அந்தக் குழுவின் முன்னர் அளிக்கப்படும் சான்றுகளையும், அதனுடைய ஆய்வு உரை களையும், சட்டத்தின் ஆட்சியைப்பற்றிய டைசியின் விளக்க மானது உருவாக்கியுள்ளதென்பதைக் காணுமலிருக்க முடியாது.

பேராசிரியர் எஃப். எச். லாசன், தாம் எழுதிய 'டைசியைப் பற்றிய மறு ஆய்வு' (Dicey Revisited) என்ற கட்டுரையை அது திருத்தப்படும்போதே தான் படிக்க இசைந்தார். இந்தக் கட்டுரை, அரசியல் ஆராய்ச்சிக் கழகத்தாருடைய வெளி யீடான அரசியல் ஆய்வுகள் (Political Studies) என்பதில் 1959-ல் வெளிவர இருக்கிறது. அதில் அவ்வாசிரியர், டைசி எழுதிய காலத்திலிருந்த சூழ்நிலைகளை அறிந்துகொண்டு அவருடைய நூலைப் படிக்கவேண்டுமென்று கேட்டுக்கொள் கிருர். சட்டத்தின் ஆட்சி என்பதை அதற்குரிய வரலாற்றுப் பின்னணியில் வைப்பதுதான், அதனைப் பிழையற அறிவதற்கு உதவும் என்று அவர் உறுதியாகக் கூறுகிருர். ஆட்சித்

துறையின் சட்டம் என்பதைப்பற்றி டைசி அறியாமலிருந்த தாக அவரைப்பற்றி அடிக்கடி குறை கூறப்படுகிறது; அவ்வா றிருந்தபோதிலும், பேராசிரியர் லாசன் (Lawson) 1885ஆம் ஆண்டிற்கும் 1908ஆம் ஆண்டிற்கும் இடைப்பட்ட காலத்தில் ஆட்சித்துறைச் சட்டம் வளர்ந்து வந்ததைப்பற்றி டைசி எவ்வளவுக்கு அறிந்திருந்தாரெனக் கூறப்படுகிறதோ, அவ் வளவினும் மிகக் கூடுதலாகவே அவர் அறிந்திருந்தாரென்று நாம் ஒப்புக்கொள்ளக் கூடியவாறு எடுத்துக் காட்டுகிறார். மேலும், 1908ஆம் ஆண்டிலும்கூட, அரசாங்க அலுவலரால் செய்யப்பட்ட தவறுகள், ஆள் சுதந்திரத்தையோ, அல்லது உடைமையையோ பாதிப்பனவாக இருந்தனவெனவும், எனவே, அவை சட்டத்தின்படி சரியாகவுள்ள ஏதேனுமொரு செயலைக் கவனக் குறைவாகச் செய்வதனால் தோன்றும் நட்டத்தைப் (damage) பற்றியவையாக இல்லையென்றும், அவர் ஒரு முக்கியமான குறிப்பைத் தருகிறார். கீழ் நீதிமன்றத்தி னின்றும் மேல் நீதிமன்றத்துக்கு வழக்கை மாற்றும் ஆணையைப் பற்றி (writ of certiorari) டைசி ஏதுங் கூறாமல் ஏன் விட்டு விட்டாரென்பதற்குச் சுவையான ஒரு விளக்கம் இருக்கிறது. தவறு செய்யும் அரசாங்க அலுவலரைத் தடுப்பதைப்பற்றியே அவர் மிகவும் வலியுறுத்தினார். எனவே, பொறுப்புள்ள அரசாங்க அலுவலரெவருக்கும் எதிராக நட்ட ஈடு கொடுக்கப் படுமென்ற கேள்வியே எழுவதற்கு இடமில்லாமல், சட்டத் துக்கு முரணான செயல்களைத் தள்ளுபடி செய்வதற்கு உதவுகின்ற முக்கியக் கருவியான மேற்படி ஆணையைப் பற்றி அவர் கூறாமல் விட்டுவிட்டார். சட்டத்தின் ஆட்சியைப் பற்றிய டைசியின் விளக்கத்தைத் தருக்க முறையை ஒட்டி ஆய்வு செய்தால், மேற்கூறிய இரு முக்கியமான இயல்புகள் தோன்றுகின்றன. ஒப்புமை செய்வதில் சிறந்த அறிஞரான பேராசிரியர் லாசன், டைசியின் முறையை விளக்குவதிலும், முக்கியமாக 'ஆட்சித்துறைச் சட்டத்துக்கும், சட்டத்தின் ஆட்சிக்கும் உள்ள ஒப்புமை' என்ற தலைப்பிட்ட பன்னிரண் டாம் இயலிலுள்ள செய்திகளை விளக்குவதிலும் சிறந்த தொண்டு செய்துள்ளார்.

கான்வில் அன்ட் கேயஸ் கல்லூரி,
கேம்பிரிட்ஜ், அக்டோபர் 1958. } **இ. சி. எஸ். வேட்**

பொருளடக்கம்

பக்கம்

தோற்றுவாய்

1. பொது ... 1
2. நூலின் சுருக்க உரை ... 14
3. பாராளுமன்றத்தின் இறைமை ... 20
4. சட்டத்தின் ஆட்சி ... 93
5. அரசியலமைப்பின் வழக்கங்கள் ... 161
6. முடிவுரை ... 208

நூலின் சுருக்கம்

அரசியலமைப்புச் சட்டத்தின் உண்மையான இயல்பு ... 217

அரசியலமைப்புச் சட்ட ஆய்வுக்கு ஓர் அறிமுகம்-I

தோற்றுவாய்

1. பொது

(General)

'தற்காலத்தில் நடைமுறை யிலிருந்துவருகிற அரசியல் அமைப்புச் சட்டத்தைப் பற்றிப் போதிய அளவு நுட்பமாக ஆராய்ந்து பார்க்காமலிருப்பதனுல்' தோன்றக் கூடிய இடர்ப் பாட்டைப்பற்றி ஆசிரியர் டைசி முன்னொரு காலத்தில் விடுத்த எச்சரிக்கையானது, அவர் அவ்வாறு எச்சரிக்கை விடுத்த காலத்தைவிட இக் காலத்துக்கு மிகவும் பொருத்த மானது. 1852ஆம் ஆண்டிலிருந்த அரசியலமைப்புச் சட்டம், 1958ஆம் ஆண்டிலிருந்த அரசியலமைப்புச் சட்டம் அன்று. யுனைட்டெட் கிங்டத்தின் அரசாங்க அமைப்பும், பாராளு மன்றமும் வளர்ச்சி பெற்ற வகையை வரலாற்று முறையை ஒட்டி ஆராய்ந்து பார்ப்பவருக்கு, இந்த நிறுவனங்கள் இப் பொழுது உள்ள நிலைக்கு வளர்ந்து வந்த வழியைப்பற்றி மட்டுமே மிகுதியும் ஆராயத்தோன்றும். இதைத் தவிர இந்த நிறுவனங்கள் இருபதாம் நூற்றுண்டின் இரண்டாம் பாதியில், இரு உலகப் போர்களினுல் எவ்வாறு மாற்றப்பட்டு, அவை இப்பொழுதுள்ள நிலையில் அமைந்துள்ளன என்பதைப் பற்றி வரலாற்றுமுறை ஆராய்ச்சியாளருக்குச் சரிவர அறிய இயலாது; இது ஆசிரியர் டைசியின் கருத்து ஆகும். எனினும் ஆசிரியர் டைசியின் 'அரசியலமைப்பின் சட்டம்' (The Law of the Constitution) என்ற நூலிலுள்ள கருத்துகள் பொதுச் சட்டத்தைப்பற்றிய (public law) ஆராய்ச்சியைப் பொறுத்தவரை, காமன்வெல்த் நாடுகளிலும் (Common wealth) அயல் நாடுகளிலும் வெகுவாகப் பரவியுள்ளன; இதன் விளைவாக, இந் நூலாசிரியரின் காலத்திற்குப் பின்னர் 'அரசியலமைப்பின் வளர்ச்சியிலுள்ள பல்வேறு நிலைகளைப்

பற்றியே, தனியாக ஆராய்வதனுல்' உண்டாகக் கூடிய இடர் மிகவும்பெரியதாக ஆகிவிட்டது; இதனுல் தற்காலத்திய அரசியலமைப்பின் சட்டமும் நடைமுறையும் பற்றி முழுமையாக ஆராயப்படாமல் போய்விடலாம். இந்த முன்னுரையின் நோக்கம் ஓரளவு, டைசி அறிந்தவாறு, மூன்று கொள்கைகளைத் தற்கால நிலைமைகளுக்குப் பொருந்தக் காட்டுவதாகும். அரசியலமைப்பை, அதனுடைய எல்லா நுட்பமான விதிகளின் மூலமாக விளக்குவதைவிட, அதனுடைய கொள்கைகளின் மூலமாக அதனுடைய வடிவத்தைக் காட்டுவதையே அரசியல்நூலோர் பெரிதும் விரும்புவர்; ஆயினும், அரசியலமைப்புச் சட்டத்தின் கொள்கைகளை விவரித்துக் கூறும்போது, அச் சட்டத்தின் விதிகளெல்லாம் தொகுத்துக் கூறப்படுகின்றனவாகையால், அவைகளை [கொள்கைகளை(principles)] விளக்குதல் வேண்டுமென்று சட்ட அறிஞர் (lawyers) கூறுவர். சட்டப்படியான அதிகாரத்துக்கு உள்ள வரம்புகளைப் பற்றி ஆராய்வதற்கான செய்திகள் எதனையும் (அரசியலமைப்புக் கோட்பாட்டை ஆராய்வார்), யுனைட்டெட் கிங்டத்தின் அரசியலமைப்பில் காண இயலாது. ஆயினும், சிற்சில சமயங்களில் இங்கிலாந்தினின்றும் வேறுபட்ட சூழ்நிலைகளில், காமன் வெல்த் நாடுகளில் பாராளுமன்றஅரசாங்க முறைகளை ஒட்டிய அரசியலமைப்பு வளர்ச்சிகள், பாராளுமன்ற இறைமை (Parliamentary sovereignty) என்பது யுனைட்டெட் கிங்டத்தின் சட்டமன்றத்திற்கு மட்டுமே உரியது அல்ல என்பதை உறுதியாக ஆக்கிவிட்டன. கடல்கடந்த அயல்நாடுகளில் பாராளுமன்ற அரசாங்க முறைகளின் அமைப்பில் காணப்படும் அரசியல் சட்ட நுட்பங்களையெல்லாம், வெஸ்ட் மின்ஸ்ட்டரிலுள்ள ஆங்கிலப் பாராளுமன்றம் வளர்ந்த வரலாற்றின் உதவியால் முழுவதும் விளக்க இயலாது. இந்த நுட்பங்களையெல்லாம் கொண்டு, அண்மையில் ஆராய்ந்து, அதன் விளைவுகளைத் தான் எழுதிய 'பாராளுமன்ற இறைமையும், காமன் வெல்த்தும்'(Parliamentary Sovereignty and the Commonwealth) என்ற நூலில் டாக்டர் ஜாஃப்ரே மார்ஷல் என்ற அரசியல் நூலாசிரியர் எழுதியுள்ளார்.

டைசி, பெரும்பாலும் தனது வழக்கறிஞர் கண்ணோட்டத்தில் இந்நூலை எழுதியிராவிட்டால், அரசியலமைப்புச் சட்டத்தைப்பற்றிய ஆராய்ச்சிக்கு அவர் மூலமாக இதுவரை கிடைத்துவரும் ஓர் முக்கியத்துவம், இப்பொழுது நீடித்து இருக்க முடியாது; இவ்வாறு நாம் கூறலாம். பாராளு

மன்றத்தின் இறைமை, சட்டத்தின் ஆட்சி (rule of law) முதலியவற்றைத் தற்கால நிலைமைகளுக்குப் பொருத்தமாக நாம் கையாள முற்படும்போது, டைசி கூறியவாறு, அரசியல் அமைப்புச் சட்ட விதிகள் என்ன என்பதைப்பற்றி நாம் கவனிக்காமல் இருந்துவிடக் கூடாது. அரசியலமைப்பு வழக்காறுகளைப்பற்றிக் (conventions) கூறும்போது, எந்த வழக்கறிஞரும் மிகவும் கவனமாக வரையறை செய்து கூறுவார்; அவருக்கு ஒரு வாழ்நாளின் கால அளவில், பல முக்கியமான அரசியலமைப்பு வழக்காறுகளெல்லாம் சட்டங்களாக இயற்றப்பட்டிருக்கின்ற ஓர் அனுகூலமான நிலையைக் காணும் பேறு இருந்தாலும், இத்தகைய பேறு நூலாசிரியருக்கு இல்லாமற்போனாலும், அவர் வழக்காறுகளைப் பற்றிக் கூறுகையில் கவனமாக இருப்பார்.

இத்தகைய முன்னுரையில் பதிப்பாசிரியரால் முழுவதும் குறிப்பிடப்பட இயலாத ஓர் அம்சம் இந்த நூலுக்கு உண்டு. எழுத்து மூலமாக விளக்கவுரை கொடுப்பதில் டைசி மிகவும் வல்லவராவார். அவருடைய கருத்துகளிலுள்ள உண்மையைப் பல தலைமுறைகளைச் சேர்ந்த வாசகர்களும் ஒப்புக்கொண்டுள்ளார்கள் என்பதில் ஐயமேதும் இல்லை; எனவே, ஒரு காலத்தில் அவருடைய கருத்துகள் தன் இயல்பிலே பொருத்தமானவை (axiomatic), பொதுவான உண்மைகள் அல்ல என்றுகூடக் கருதப்பட்டன. ஒரு அரசாங்கக் குழுவிலுள்ள அல்லது ஒரு முக்கியமான ஆட்சித் துறைக் குழுவிலுள்ள உறுப்பினர்களுக்குக் கொடுக்கப்படும் மேற்கோள் குறிப்புகளில் (terms of reference), இந் நூலாசிரியர் கூறும் கொள்கைகளையே ஆராயும்படியாக ஒரு கட்டளையும் அடங்கி இருப்பதைச் சிலர் காணலாம். எனினும், டைசியின் மரணத்திற்குச் சில ஆண்டுகளுக்குள்ளாக, 1929-ல் அப்பொழுதிருந்த சான்சலர் பிரபு, பாராளுமன்ற இறைமைச் சட்டத்தின் தலைமையான அதிகாரம் என்ற அரசியலமைப்புக் கோட்பாடுகளைப் பாதுகாப்பதற்கு என்னென்ன செய்யப் படுதல் வேண்டுமென்று, அமைச்சர்களுடையஅதிகாரங்களைப் பற்றிய குழுவிற்கு, ஆராய்ந்து அறிக்கை செய்யும்படிக், கட்டளையிட்டார். இந்தக் குழுவின் அறிக்கையானது, அரசியலமைப்பின் சட்டம் என்ற இந் நூல் முதன் முதலில் வெளிவந்ததற்கு அடுத்த 50 ஆண்டுக் காலத்திலும் ஓர் ஆதாரமான நூல் என்று ஒப்புக்கொள்ளப்பட்டதைக் காட்டுகிறது.

எனினும், இக்கால அரசாங்க அமைப்பு செயல்படுவதை ஆராய்ந்து பார்க்கும் எவருக்கும், இப்பொழுது சில ஆண்டுகளாக, பாராளுமன்றத்தின் இறைமை அதிகாரம் என்ற கோட்பாடும், சட்டத்தின் ஆட்சி என்ற கோட்பாடும் ஒன்றுக்கொன்று பொருந்தக் கூடியனவாக அல்லாமல், முரண்பாடுடையனவாக இருக்கின்றன என்பது தெரியவரும்; எவ்வாறெனில், பாராளுமன்றம் செய்யவேண்டிய சட்டத்தை அரசாங்கங்களே அதற்கு எடுத்துக் கூறுவதும், தனி மனிதனுடைய செயல் சுதந்திரத்தைப் பறிக்கக்கூடிய வகையில் அரசாங்கத்தின் பொதுப்பணிகளை ஆளுவதுமாகிய நிலைமை ஏற்பட்டிருக்கின்றது; இத்தகைய பொதுப்பணிகள், தற்கால பொதுநல அரசாங்கத்தின் இயல்பாகவோ அல்லது வெளி நாட்டிலிருந்து வரக்கூடிய அரசியல் அல்லது பொருளாதார ஆதிக்கத்தின் விளைவாகவோ இருக்கலாம். இந்த நூலின் முதற்பதிப்பு வெளிவந்தபோது, மிக உச்சநிலையில் நிலவியிருந்த தனியார் தன்முயற்சிக் கொள்கை (laissez faire) என்ற விக்குக் (Whig) கட்சியின் மரபில் பாராளுமன்றங்களுக்கும், அரசாங்கங்களுக்கும் இருந்த அலுவல்களே வெவ்வேறானவை. 1914-ல், டைசி தனது நூலாகிய, '19ஆம் நூற்றாண்டில் இங்கிலாந்தில் சட்டமும் கருத்தும்' (Law and Opinion in England during the Nineteenth century) என்பதன் இரண்டாவது பதிப்பை வெளியிடும்பொழுது, அதனுடைய முன்னுரையில் பின்வருமாறு எழுதினார்: 'தனியார் தன் முயற்சிக் கொள்கை என்பதில் நிறைய உண்மைகள் அடங்கியிருந்தபோதிலும், 1900 ஆண்டை ஒட்டிய காலத்தில் அதற்கு ஆங்கில மக்களிடத்தில் பிடிப்பு குறைந்துவிட்டது. இதற்குப் பின்னர் செய்யப்பட்ட தேசிய சுகாதார காப்புத் திட்டத்திலும், கூலிகளை ஒழுங்குபடுத்தும் சட்டத்திலும், சில முக்கியமான தொழில்களிலுள்ள வேலை நிலைமைகளை ஒழுங்குபடுத்தும் சட்டத்திலும் அவருக்கு நம்பிக்கையில்லை. அவர் பிற்காலத்தில் வெளியிட்ட கருத்துகள் இப்பொழுது ஆட்சித்துறைச் சட்டம் என ஒப்புக்கொள்ளப்படுகின்றன; இவை 1915-ல் வெளியான Law Quarterly Review என்ற வெளியீட்டில் ஒரு கட்டுரையில் காணப்படுகின்றன; இவை இந் நூலின் பிற்சேர்க்கையில் கூறப்பட்டுள்ளன. தற்காலப் பொதுநல அரசாங்கத்தைப்பற்றி (Modern Welfare State) முந்திய தலைமுறையைச் சேர்ந்த ஓர் ஆசிரியர் என்ன கருதி இருப்பார் என்று நாற்பது ஆண்டுகளுக்குப் பின்னர் எண்ணிப் பார்க்க ஆவல் தோன்றுகிறது. பாராளுமன்ற இறைமை அதிகாரம், சட்டத்தின் ஆட்சி ஆகியவற்றைப் போன்ற

நன்கு நிலைபெற்றுவிட்ட கோட்பாடுகள், எவ்வாறு எப்பொழுதும் மாறிக்கொண்டேயிருக்கும் சமுதாய, பொருளாதாரச் சூழ்நிலைகளில் ஒன்றுக்கொன்று முரண்பாடு இல்லாமல் பொருந்த முடியும் என்பதை, நாம் விளக்க முயல்வோம்; அதுவே பயனுள்ளதாக இருக்கும்.

பாராளுமன்றமானது கடந்த எழுபது ஆண்டுகளில் பொதுமக்களுடைய எண்ணத்தில், தனது மதிப்பை இழந்து விட்டதென்பது மறுக்க முடியாது. வழக்கற்றுப்போன செயல்முறைகளைத் தற்கால முறைகளுக்கேற்ப மாற்றுவதெப்படி என்பதை நாம் இங்கு கூற வேண்டுவதில்லை. எனினும், இறைமை அதிகாரத்தைக் கையாளுவதென்பது செயல்முறை விதிகளினின்றும் வேறுபட்டதன்று. பாராளுமன்றத்தில், முக்கியமாகப் பொதுமக்கள் மன்றத்தில், அரசியல் வாழ்வை அடைவதற்குரிய வாய்ப்புகள் தற்காலச் சூழ்நிலைகளில் மிகவும் குறைவு. அரசாங்கத்துக்கும், எதிர்க்கட்சிக்குமிடையே உள்ள வேறுபாடு குறைவாக இருக்கும்போது, கட்சி அமைப்பு செயல்படும் விதமே, சட்டமன்ற உறுப்பினர்களுக்குச் சிறிது நேர அரசியல் வேலை என்ற (பழைய) நிலையை மாற்றி, முழுநேமுரம் அரசியலையே தொழிலாக உடைய அரசியல்வாதியைத் தோற்றுவிக்கும் இயல்புடையதாக இருக்கிறது; முற்காலத்தில் சட்டமன்றத்தின் பின் வரிசைகளில்கூட இத்தகைய முழுநேர அரசியல் தொழில்வாதியைக் காண இயலாது. ஆயினும், பாராளுமன்றத்துக்கு நாடெங்கிலும் மதிப்பு இருந்த நாட்களைவிட, இப்போதுதான் இறைமை அதிகாரத்தைக் கையாளும் அரசியற் கட்சியானது மிகவும் நிலையற்றதாக இருக்கிறது. சட்டமியற்றும் அலுவலைப் பொறுத்தவரையில், பாராளுமன்றத்துக்குத் தலைமையான நிலைமை இருப்பதனுல், பொதுமக்கள் மன்றத்தில் (House of Commons) பெரும்பான்மையாளருடைய ஆதரவைப் பெற்றுள்ள அரசாங்கத்துக்கு, அதிகாரத்தைக் கட்டுக்கடங்காமல் கையாளுவதில் யாதொரு தடையுமில்லை. இதை நாம் மறந்துவிட லாகாது. முப்பது ஆண்டுகளுக்குள்ளாக, அப்போது முக்கிய எதிர்க்கட்சிகளுள் ஒன்றின் தலைவர், தனது கட்சி ஆட்சி அதிகாரத்தைப் பெற்றதும், அது இரண்டாவது சட்டமன்றத்தை நீக்குவதற்கும், ஒரு பொருளாதாரப் புரட்சியைத் தோற்றுவிப்பதற்காக ஆணைகளின் மூலம் நடைபெறும் அரசாங்க அமைப்பை ஏற்படுத்துவதற்காகவும், பாராளுமன்ற இறைமை அதிகாரத்தைக் கையாளுதல் வேண்டும் என்று கூறினுர்.

புரட்சி முறைக்கு மாருக, அரசியலமைப்புக்கு ஏற்ற படிப் படியான வளர்ச்சி முறைக்கே நாம் பழக்கப்பட்டிருப்பதனுல், பாராளுமன்ற உறுப்பினருக்குள்ள மதிப்பில் மேலும் குறைவு ஏற்படுவதனுல் தோன்றக்கூடிய இடர்ப்பாட்டை நாம் மறந்துவிடுதல் கூடும். மன்றத்தினுடைய தன்மையே, அதற்குப் பொதுமக்கள்மீது உள்ள அதிகாரத்தையும், அது நன்மையோ, தீமையோ செய்வதற்குரிய திறமையையும் பாதிக்கிறது. ஆயினும், பாராளுமன்றத்திற்குரிய மதிப்பில் ஏற்பட்டுள்ள மாறுதலினுல், பாராளுமன்றத்தால் செய்யப் படும் சட்டங்களைப்பற்றி நீதிமன்றங்கள் கொண்டுள்ள கருத்தில் மாறுதல் எதுவும் ஏற்பட்டுவிடவில்லை. இவ் விடத்தில்தான் இறைமை அதிகாரத்தின் தன்மையைப்பற்றி மிகவும் நுட்பமாக ஆராய வேண்டுமென்ற எண்ணத்தைச் சட்ட அறிஞர்கள் கைவிடுதல் வேண்டும். இதற்கு மாருக, சட்டம் இயற்றுபவர்களின் தன்மைகள் மாறினுலும், இவர் களால் இயற்றப்பட வேண்டிய சட்டத்தை உருவாக்கும் சக்திகள் மாறினுலும், நாட்டின் சட்டம் எதுவென்பதைத் தீர்மானிப்பது பாராளுமன்றமேதான் என்பதாகச் சட்ட அறிஞர்கள் வலியுறுத்த வேண்டும்.

முன்பொரு காலத்தில், தனது குறைகள் எல்லாம் அரசரால் தீர்த்து வைக்கப்படும்வரை, அரசர் கேட்கும் செலவுப் பணத்தைத் தான் கொடுப்பதில்லை என்ற அலுவலைப் பொது மக்கள் மன்றம் செய்து வந்தது. வரலாற்று முக்கியத்துவம் பெற்ற இந்த அலுவலுக்கு இப்பொழுதும் சொல்லளவிலேனும் மதிப்புக் கொடுக்கப்படுகிறது; பாராளு மன்றத்தின் ஒவ்வொரு அமர்வுக் காலமும் தொடங்கும்போது, பாராளுமன்றத்தின் ஒவ்வொரு சபையிலும், மிகப் பழமையான தலைப்புடன் ஒரு மசோதா கொண்டுவரப்படுகிறது; இதனுல் அரசாங்க அலுவலுக்கும் முந்தியதாக, மன்றங்களினுல் விரும்பப்படும் ஒரு மசோதா கவனிக்கப்படுகிறது. இன்றளவும் இருந்து வருவது இவ் வியத்தகு வழக்கமாகும்; நாட்டிலுள்ள சமுதாய அல்லது பொருளாதாரச் சீர்கேட்டைச் சீராக்கும் பொருட்டு இரண்டு கட்சிகளும் இடைவிடாமல் கேள்விகளை விடுப்பதற்கு உரிய அரங்கமாகப் பொதுமக்கள் மன்றம் இருக் கிறதென்ற உண்மையை மேற்கூறிய வழக்கமானது மறைக்க முடியாது. மக்களால் விரும்பப்படும் பணியைச் செய்வதற்கு, அல்லது கட்டுப்பாட்டைக் கையாளுவதற்குத் தேவைப்படும் பணத்தை அரசாங்கம் கூடுதலாகக் கேட்கும்படியாக, மேற் கூறிய குறை தீர்த்தல் (remedy) என்னும் முறை தூண்டுகிறது.

மாறுதலுக்குட்பட்ட நிலைமைகளெல்லாம் பாராளுமன்றத்தின் செயலாலேயே தோற்றுவிக்கப்பட்டுள்ளன. சட்டத்தில் செய்யப்படும் மாறுதல் அடிப்படையானதொன்றாக இருந் தாலும், அல்லது மிகச் சிறியதாக இருந்தாலும், பாராளு மன்றம் ஒன்றுதான் சட்டத்தை மாற்ற முடியும்; எதனைச் சட்டமாகப் பாராளுமன்றம் வெளிப்படுத்தினாலும், அதனை அவ்வாறே நீதி மன்றங்கள் ஏற்றுக்கொள்ளவேண்டும். பாராளுமன்றத்தால் செய்யப்பட்ட சீர்திருத்தங்களைப் போல, சமுதாய, பொருளாதாரச் சீர்திருத்தச் சட்டங்களை மற்ற நாடுகளும் செய்துள்ளன. எனினும், அத்தகைய நாடுக ளெல்லாவற்றிலும் இல்லாவிட்டாலும், பெரும்பாலானவற்றில் பாராளுமன்ற இறைமை என்ற கோட்பாடு நடைமுறையில் இல்லை; ஏனென்றால், அவையெல்லாம் எழுதப்பட்ட அரசிய லமைப்புச் சட்டங்களால் ஆளப்படுகின்றன. இத்தகைய அரசியலமைப்புச் சட்டங்கள், சட்டமன்றம் சில வகைப்பட்ட சட்டங்களைச் செய்யக்கூடாதென அதன் அதிகாரத்துக்கு வரம்பை ஏற்படுத்துகின்றன. இந்த (இங்கிலாந்து) நாடும், பாராளுமன்ற இறைமை என்ற கோட்பாட்டைத் தனது அரசியலமைப்பின் தன்மையாகக் கொள்ளாமலேயே, அது இதுவரை செய்துள்ள சட்டங்களை நிறைவேற்றி இருத்தல் கூடு மென்ற கருத்தை நாம் ஒப்புக்கொள்ளுதல் கூடும். எனினும், இந்தக் கருத்தும், 'யுனைட்டெட் கிங்டத்தில் பாராளுமன்றத்தி னால் மாற்றப்பட முடியாத சட்டம் ஏதும் கிடையாது' என்று டைசியினால் வலியுறுத்தி வகுக்கப்பட்ட உண்மையை மாற்ற வில்லை. மற்ற நாடுகளில் இருப்பதை விட, மிக அமைதியாக இந்நாட்டில் சட்டத்தில் உள்ள மாறுதல்கள் செயல்பட் டிருக்கலாம்; ஏனெனில், இங்கு எந்தச் சட்டத்தினுடைய செல்லுபடியாகும் தன்மையையும் எவரும் ஒப்புக்கொள்ள மறுக்க முடியாது.

இதற்கு மாறாக, இந் நூலின் ஆசிரியர் சட்டத்தின் ஆட்சி (rule of law) என்ற கொள்கைக்குக் கொண்டுள்ள பொருள், பாராளுமன்றத்தின் இறைமை என்பதனோடு எவ்வாறு பொருந்துமென்பதை நாம் ஆராய்ந்தால், சட்டமானது, தனிமனிதர் சுதந்திரத்தை முற்காலத்தில் செய்ததுபோல இப்பொழுது வலியுறுத்தாமல், பொது மக்கள் நலனுக்கான பணிகளை ஆக்குவதையே வலியுத்துகிறது என்பதைக் காண்போம். இந்த இரண்டு கொள்கைகளையும் முரண்பாடு இல்லாமல் இணைப்பதே டைசியின் நோக்கமாகும். இதனை அவர் செய்வதற்காகவே, அரசியலமைப்பில் நீதி மன்றங்

களுக்கு அளிக்கப்பட்டுள்ள சுதந்திரமான நிலைமையை வலியுறுத்தினார். நீதிபதிகளின் சுதந்திரமான நிலைமையின் அடிப்படையிலேயே சட்டத்தின் ஆட்சி (rule of law) என்பது பாதுகாப்பாக அமைந்துள்ளது. நீதிபதிகளின் சுதந்திரமான நிலைமைக்குப் பாராளுமன்றம் பொறுப்பாக இருக்கிறது; இதற்கு எதிராக, எத்தகைய சட்டம் நிலவவேண்டுமென்பதை முடிவாகத் தீர்மானிப்பது பாரளுமன்றமே என்பதாக நீதிபதிகள் ஒப்புக்கொண்டுள்ளனர். 1958ஆம் ஆண்டிலே இவ்விரண்டு கருத்துகளையும் முரணின்றி இணைப்பதென்பது முந்தைய காலத்தைவிடக் கடினமானதாக இருக்கலாம்; ஏனெனில் பொதுச் சட்டத்தைச் (common law) செயல்படுத்தும் அதிகார எல்லையானது பல தடவைகளில் எழுதப்பட்ட சட்டத்தின் மூலமாகக் (statute) குறைக்கப்பட்டுள்ளது. தற்காலத்தில் சட்டத்தைச் செயல்படுத்தும் பணிகள், அவற்றை நிறைவேற்றும் ஆட்சியாளருக்கு வெகுவாகச் சமயோசித அதிகாரங்களை (discretion) வழங்குகின்றன; இந் நிலைமையை நாம் ஒப்புக்கொண்டால், ஆட்சியாளர், தனி மனிதருடைய செயல் புரியும் சுதந்திரத்தைப் பாதிக்கக் கூடிய நிலையிலிருக்கிறார் என்பதும் தெளிவாகத் தெரிகிறது. இவ்வாறு இருந்தாலும் ஆட்சி முழுமையும் சட்டத்துக் கேற்பவே நடைபெறுகிறதென்பதாக உறுதி செய்யப்படவேண்டியது முக்கியமாக இருக்கிறது. ஒரு சில துறைகளில் தனி மனித சுதந்திரத்துக்குப் பொதுச் சட்டம் பாதுகாவலனாக இருத்தல் வேண்டுமென்று இப்பொழுது நாம் கருதுவதில்லை. ஆயினும், ஆளின் உடலுக்கும், உயிருக்கும் உள்ள சுதந்திரம் (freedom of the person), பேச்சுரிமை முதலிய ஒரு சில துறைகளில், முன்புபோல் பொதுச் சட்டமானது எப்பொழுதும் முக்கியமான பாதுகாப்பாளனாக இருந்துவருகிறது. வேறு சில வகைகளில் எழுதப்பட்ட சட்டம் ஒன்று — அச் சட்டமானது நேராகப் பாராளுமன்றத்தால் செய்யப்பட்டதாயினும் சரி, அல்லது, பாராளுமன்றத்தால் தனக்குக் கொடுக்கப்பட்ட அதிகாரத்தின் விளைவாக நிர்வாகத்தினால் (executive) செய்யப்பட்டதாயினும் சரி— எந்த ஒரு தனி மனிதருடைய அல்லது நிறுவனத்தினுடைய செயலும் அவருடைய விருப்பத்தினாலன்றி, அரசாங்க ஆணையின் மீதே செய்யப்படுவதாகக் கூறலாம்; இவ்வாறு அச் சட்டம் கூறினாலும், அந்த நிறுவனத்துக்கு (அல்லது தனி மனிதருக்குப்) பாராளுமன்றத்தா லளிக்கப்பட்ட அதிகாரமானது தேவைக்கு அதிகமாகவோ, தவறான வழியிலோ கையாளப்படலாகாது என்று பொறுப்பேற்றுக்கொள்ளும் அளவுக்கு நீதி மன்றம் சுதந்திரமாக இருக்கிறது. பொதுச்செலவை (public expenditure)

ஒழுங்குபடுத்துவதென்ப தொன்றே இப்பொழுதெல்லாம் அரசாங்கத்தின் அலுவலாக இருக்கவில்லை. இக் காலத்தில் சொத்துகளைப் பயன்படுத்தும் முறையையும் அரசாங்கம் கட்டுப்படுத்த முயலுகிறது; மேலும் அது வரிப்பளு சாரும் நிலையை வகுத்தும் (incidence of taxation), கட்டாய உயிர் காப்பு முறையைக் (compulsory insurance) கொண்டுவந்தும், மக்களின் பொதுவான வாழ்க்கைத் தரத்துக்குகந்த சட்டங்களைச் செய்கிறது. ஆட்சித்துறையின் செயல்கள் விரிவாக ஆக, எல்லா ஆட்சித்துறைச் செயல்களும் சட்டத்துக்கு ஒத்திருத்தல் வேண்டுமென்பது மிகவும் முக்கியமாக ஆகிறது. பாராளுமன்றமானது தனக்கு உள்ள இறைமை அதிகாரத்தைக் கையாண்டு, 'ஆட்சியின் செயலெல்லாம் (administration), ஆட்சியாளருடைய (administrator) சமயோசித அதிகாரத்தைப் (discretion) பொறுத்தே அமையும்' எனக் கூறி ஒரு சட்டத்தைச் செய்தல் இயலும். ஆயினும், இத்தகைய விரிவான சமயோசித அதிகாரத்தை அது வழங்குவதில்லை; இவ்வாறு அது செய்யாததற்கு முக்கியமான காரணம், சட்டத்தின் ஆட்சி என்ற கருத்துக்கு மக்களால் அளிக்கப்படும் ஆதரவே ஆகும்; இக் கருத்து பண்டைய வரலாற்றில், உறுதியாகப் பரவி, அரசர்களும், அரசிகளும் நடத்த முயன்ற எதேச்சாதிகார (tyranny) ஆட்சி முறைக்கு எதிரான ஒரு வலிய அரணாக இருக்குமாறு முதலில் பாராளுமன்றத்துக்கும், அடுத்து நீதிபதிகளுக்கும் அதிகாரம் கொடுத்தது.

இப்பொழுதெல்லாம், அரசியல் தொடர்பில்லாதன எனவும், சட்டத் தொடர்புடையவை எனவும், வழக்கறிஞர்களால் கொள்ளப்படும் பிரச்சினைகளை, அரசியல் ஆசிரியர்கள் ஆராயும் இயல்பு காணப்படுகிறது. பாராளுமன்ற இறைமை என்ற கோட்பாட்டைப் பொறுத்தவரையில் இவ் வியல்பு உண்மையே. அரசியல் ஆசிரியர்களின் சார்பாக இவ் வியல்புக்குப் பின்வருமாறு அமைதி கூறுதல் வேண்டும்: சட்டங்களென்பதற்குரிய முழு இயல்பில் சில பகுதிகள் அரசியலமைப்புச் சட்டத்தில் (Constitution) காணப்படுகின்றன. எனினும், அவற்றை அவற்றுக்குரிய அரசியல் சூழ்நிலையில் அல்லது பின்னணியில் (political back-ground) விளக்குவதற்கு, வழக்கறிஞரால் இயலாது. அரசியலமைப்புப் பற்றிய வழக்காறுகளை, அல்லது வழக்கங்களைப் (constitutional conventions) பொறுத்தவரையில், அரசியலமைப்பைப்பற்றி ஆசிரியர் குறிப்பிடும்போது, 'அது சட்டம் அன்று; அது அரசியல்; எனவே அதனைப்பற்றி எந்த வழக்கறிஞரோ,

அல்லது சட்டப் பேராசியரோ ஆராய வேண்டுவதில்லை' எனக் கூறினர். இவ்வாறு இருப்பினும், பாராளுமன்ற இறைமை அதிகாரம் கையாளப்படுகையில் அதற்கு அமைக்கப் பட்டிருக்கும் உள்ளார்ந்த வரம்புகளையும், புற வரம்புகளையும் (external limitations) அவர் காணவும், இவ்வாறு காணுகையில் சட்டப்படியான இறைமை அதிகாரியை நடை முறையிலுள்ள இறைமை அதிகாரியினின்றும் வேறுபடுத்திக் கூறவும் அவர் தவறவில்லை. மேலும், அவர் அரசியல் அமைப்பை விரிவாகக் கூறுமிடத்து, வழக்காறுகள் என்ற அரசியல் தொகுப்பையும் (political code) அதனோடு சேர்த்துக் கூறினர். அரசியலமைப்புச் சட்டத்தையும், அரசியல் நூலையும் பிரித்துக் காட்டும் வேறுபாடு தெளிவாகக் காணப்பட இயலாதவாறு இருக்கிறது. இவ் விவாதத்தில் சட்ட அறிஞர் தமது எல்லையில் அரசியல் ஆசிரியர் தலையிடுவதாக அவர் மீது குற்றம் கூறினலும், அது ஏற்றுக் கொள்ளுதற்குரியதன்று; ஆயினும் ஒருவர் மற்றவருடைய கல்விப் பயிற்சியிலுள்ள முறைகளைப் பற்றி அறிந்திருத்தல் வேண்டும். இச் செய்தியினை மேலும் விளக்கத் தேவையில்லை. 1911ஆம் ஆண்டு, 1949ஆம் ஆண்டு ஆகியவற்றில் செய்யப்பட்ட பாராளுமன்றச் சட்டங்கள், 1931ஆம் ஆண்டின் வெஸ்ட்மின்ஸ்ட்டர் சட்டம் முதலியவற்றை, அவற்றுக்குரிய அரசியல் பின்னணியின லல்லாமல் எவ்வாறு அறிதல் இயலும்? இவற்றுள் கடைசியில் சொல்லப்பட்ட சட்டமானது, வழக்காறுக்கும், சட்டத்துக்கு முள்ள வேறுபாட்டைக் காண்பதிலுள்ள இடர்ப்பாட்டை விளக்குகிறது. அரசியல் நூலுக்கு வழக்கறிஞர் மிகவும் கடமைப்பட்டுள்ளனரென்பது ஒப்புக் கொள்ளப்படுதல் வேண்டும்; எனினும், இதனல் யுனைட்டெட் கிங்டத்திலுள்ள அரசியலமைப்பு ஏற்பாடுகளெல்லாம் கொள்கையளவிலே ஆராயப்படுவதற்கு உகந்தவை அல்ல என்ற உண்மை மறைக்கப்படுதல் கூடாது. ஒரு எழுதப்பட்ட அரசியலமைப்புச் சட்டத்தை ஆராய்பவருக்கு, குறிப்பாக வேற்றுநாட்டவருக்கு, விஞ்ஞானக் கோட்பாடுகளை நடைமுறையில் செயல்படுத்துவதற்கு அவ் வரசியலமைப்பு முயலுவது இயல்பானதாகத் தோன்றும். ஆயினும் இத்தகைய ஆராய்ச்சி முறை யுனைட்டெட் கிங்டத்தின் அரசியலமைப்பை ஆய்வு செய்பவரால் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது.

அரசியலமைப்புச் சட்டம் என்ற நூலை ஆராய்ந்து கற்பதற்கு எத்தகைய முறையில் அதனை அணுகுதல் வண்டும்? மூன்று வழிகளில் அதனை ஆய்வு செய்தல் கூடும்.

(i) டைசி எழுதிய கொள்கைகளை, முக்கியமாகப் பாராளுமன்ற இறைமை, சட்டத்தின் ஆட்சி என்ற கொள்கைகளை, அவர் எழுதிய காலத்தின் இயல்பைக் காட்டுவனவாக மட்டுமே ஏற்றுக் கொள்ளுதல்;

(ii) இக்கொள்கைகளில் குற்றம் காணுமாறு ஆய்வு செய்து, அவற்றுக்குப் பிற்பட்ட காலத்திய நிகழ்ச்சி களின் வாயிலாக, அவை பத்தொன்பதாம் நூற்ருண் டுக்கு ஓரளவு பொருந்தும் உண்மைகளெனவும், தற் காலத்துக்கு அவை பொருந்தா எனவும் ஒப்புக் கொள்ளுதல்;

(iii) பிற்காலத்திய வளர்ச்சிகளினுல் திருத்தப்பட்டவை யாக இக் கொள்கைகளை ஏற்றுக்கொண்டு, அவை எவ்வாறு இக்காலப் பொதுச் சட்டத்தில் பொருந்தக் கூடியவை என்று காட்டுதல்.

முதலில் கூறப்பட்டதே மிகவும் எளிய வழியாகும்; ஏனெனில், அது பழங்கால அமைப்பை இக்கால வளர்ச்சி யோடு முரண் இன்றி இணைப்பது என்ற சிரமத்தைத் தவிர்க்கிறது. ஆய்வாளர்கள் இரண்டாவது கூறப்பட்ட அணுகும் முறையை ஏற்று, அதில் கவனம் செலுத்து கின்றனர். மூன்ருவது முறைக்கு எதிராக அதில் பல குறைபாடுகள் சுட்டிக் காட்டப்பட்டபோதிலும், அதுவே பலராலும் விரும்பி ஏற்றுக்கொள்ளப்படுகிறது. பல தலைமுறை களைச் சேர்ந்த வழக்கறிஞர்களுக்கும், அரசியல்வாதி களுக்கும் 'அரசியலமைப்பின் சட்டம்' என்ற நூலைப் படித் ததன் விளைவாகவே முதன் முதலில் பொதுச் சட்டத்தையும், அரசாங்கத்தையும்பற்றி அறிவதில் ஈடுபாடு தோன்றிற்று என்பதை ஒருவரும் மறுக்கமாட்டார். அமைச்சர்களின் அதிகா ரங்களைப்பற்றிய குழுவுக்கு மேற்கோள்களாகக் கொடுக்கப் பட்ட வரையரைகளைப் பற்றி (terms of reference) முன்னரே குறிப்பிடப்பட்டுள்ளது; இவ் வரையறைகளும் டைசி காட்டிய மரபுகளில் நன்கு பயிற்சி பெற்ற ஒருவரால்தான் கொடுக்கப் பட்டிருத்தல் வேண்டும். (டைசியின் கருத்துகளில்) குற்றங் கண்டுபிடித்தவர்கள் பலர் இருப்பினும், அவற்றை ஆதரித் தவர்களும் பலர் உண்டு; இத்தகையோருள் சர் வில்லியம் ஹோல்ட்ஸ்வொர்த் என்பவரும் ஒருவர்; மிகச் சிறந்த கருத்துரை ஒன்று அண்மையில் ஆக்ஸ்ஃபர்ட் பல்கலைக் கழகத்தின் ஒப்பியல் சட்டப் பேராசிரியராகிய டாக்டர்

ஆட்சித்துறை நீதி அலுவலரின் சமயோசித அதிகாரத்துக்கு வரம்புகளை அமைப்பது முன்னைவிட இப்போது எளிதாக இருக்க வேண்டும்.[1] ஆட்சித்துறை நீதிமன்றங்கள், நேர்மையான தன்மை, ஓரஞ்சாராமை ஆகிய இயல்புகளை வெளிப்படுத்துகின்றன என்று குடிமக்களை நம்பச் செய்வதற்கு, வெகுவாக ஆராயப்பட்ட காரணங்களோடு பொருந்திய தீர்ப்புகளை அத்தகையை நீதிமன்றங்கள் வழங்குவதுதான் பெரிதும் துணை செய்யும்.

இருபத்தைந்து ஆண்டுகட்கு முன்பாக அமைச்சர்களைப் பற்றிய குழுவினுல் (Committee on Ministers' Powers) நன்கு ஆராயப்பட்ட விஷயம், பகிர்ந்தளிக்கப்பட்ட சட்டம் இயற்றும் அதிகாரம் (delegated legislation) என்பதாகும்; இது பிராங்ஸ் குழுவினுடைய ஆராய்ச்சிக்கு எடுத்துக் கொள்ளப் படவில்லை. இந்தக் குழு தனது அலுவல்களைச் செய்வதற்கு உதவும் முறையில் அதற்கு அளிக்கப்பட்ட மேற்கோள் குறிப்புகள் (terms of reference) சட்டத்தால் நிறுவப்பட்ட சாதாரண நீதிமன்றங்களல்லாத மற்ற நீதிமன்றங்களின் அமைப்பு, அவை வேலைசெய்யும் முறை, விசாரணை நடத்துதல் உட்படப் பல ஆட்சித்துறையின் செயல் விதிகள் கையாளப் படும் விதம் ஆகியவற்றைப்பற்றி மட்டுமே தெளிவாகக் கூறின. ஆட்சித்துறை நீதிமன்றத்தின் சட்டத்தினுடைய இந்தப் பகுதியைப்பற்றிக் கூறப்படும் குறையை விளக்கக்கூடிய ஒரு கூறுபாடு இந்த அமைப்பில் (அதாவது பகிர்ந்தளிக்கப்பட்ட சட்டம் இயற்றும் அதிகாரம் என்ற அமைப்பில்) இருக்கிறது. பகிர்ந்தளிக்கப்பட்ட சட்டம் இயற்றும் அதிகாரம் என்பது அதன் வடிவத்தைப் பொறுத்து அல்லாமல், வேறு வகையாக, ஒரு குடியாட்சி முறையில் தேர்ந்தெடுக்கப்பட்ட சட்டமன்றத்தால் ஆராயப்படுவதுமில்லை, கட்டுப்படுத்தப்படுவது மில்லை. ஒரு பாராளுமன்றச் சட்டத்துக்குக் கீழ்படிதல் என்பது, மிக எளிதில் கிடைத்து விடுகிறது; எவ்வாறெனில், சட்டமானது மக்களுடைய பொதுவான விருப்பத்தைக் காட்டுவதாகக் கருதப்படுகிறது. பாராளுமன்றத்தில் ஒரு மசோதா நிறைவேறுவதைச் செய்தித் தாள்களின் மூலமாக அறியலாம்; மக்கள் அதுபற்றிக் கூறக்கூடிய குறைகளை நீக்குவதற்காக, அந்த மசோதாவின் பிரிவுகள் பலதடவை மாற்றப்படுகின்றன. நிலவரச் சட்டத்தின் கருவிகள் சட்டத்தன்படி (Statutory Instruments Act) ஒரு சட்டத்தின் பிரிவுகளை நிறைவேற்றுவதற்கு அதிகாரம் பெற்றுள்ள ஒரு அரசாங்கத்தின் துறை

[1] Tribunals and Inquiries Act, 1958.

பாதுகாப்பானவை என டைசியினல் கொள்ளப்பட்ட சட்ட வழக்கு முறைகளெல்லாம் (processes of law), மேற்படி குழுவின் கருத்திலே, இக் காலத்தில் மிகவும் குறை காணப்படக் கூடிய, சர்ச்சைக்குரிய ஒரு பொருளுக்கும், அதாவது, 'ஒரு சொத்தி னுடைய தனி உடைமையாளருடைய விருப்பத்திற்கு மாருகப் பொதுமக்கள் நலன் அமையும்போது, அச் சொத்தைச் சில கட்டுப்பாட்டு விதிகளுக்கு உட்பட்டே பயன்படுத்துதல் வேண்டும்' என்ற கருத்துக்கும் பொருந்துமாறு கையாளப் படக்கூடியவை என்பதை ஒப்புக் கொள்ளுவார். சட்டத்தின் ஆட்சி என்பதில் உள்ள ஈடுபாடு மீண்டும் தோன்றி இருப்பதன் காரணத்தை இரண்டாம் உலகப் போரோடு தொடர்பு படுத்திக் காணலாம்; இத்தகைய புதிய ஈடுபாடு டைசியின் கருத்துகளைக் குறை கூறுவோருக்கு ஒரு புதிய மறுப்பு ஆகும். மேற்படி குழுவின் பரிந்துரைகளில் அல்லது சிபாரிசுகளில் பலவும் ஏற்றுக்கொள்ளப்பட்டு, அவை 1958ஆம் ஆண்டின் நீதிமன்றங்கள், விசாரணைகள் பற்றிய சட்டத்தி னுலும் (Tribunals and Inquiries Act) அரசாங்கச் செயல் முறையினுலும் நடைமுறைக்குக் கொண்டுவரப்பட்டுள்ளன.

2. நூலின் சுருக்க உரை

ஆசிரியர் டைசி தனது நூலின் சுருக்க உரையில், ஒரு அரசியலமைப்புச் சட்டப் பேராசிரியரால் கொள்ளப்பட வேண்டுவனவாகக் குறித்துள்ள வரம்புகளை வலியுறுத்துவது அவசியமாகும். தான் எதனையும் குற்றம் கண்டுபிடிக்கவோ, அல்லது ஆதரித்துக் கூறவோ, அல்லது புகழ்ந்து கூறவோ அவர் தன்னைக் கருதாமல், எந்தக் கருத்தையும் விளக்க வந்தவராகவே கருதினார். எழுதி வைக்கப்படாத எந்த ஒரு அரசியலமைப்புச் சட்டத்தின் பிரிவுகளையும் எடுத்து விளக்க முற்படும் எந்த ஒரு ஆசிரியருக்கும் ஏற்படக்கூடிய தனிப்பட்ட சில இடர்ப்பாடுகளை டைசி நன்கு அறிந்திருந்தார். அவருடைய கருத்திலே, நாட்டின் சட்டத்தில் எத்த ஒரு பகுதியையும் தெளிவாக 'இதுதான் யுனைட்டெட் கிங்டத்தின் அரசியலமைப்பு' என்று பதிவு செய்யக்கூடியதாகக் காட்ட இயலாது. டைசியின் முழுக் கவனத்துக்கும் உள்ளான மூன்று வழிகாட்டியான கொள்கைகளை (guiding principles), நாம் நன்கு விளங்கிக் கொள்ளுவதற்கு, 'நீதிமன்றங்களால் ஒப்புக்கொள்ளப்பட்ட விதிகள் மட்டுமே அவருடைய நேரடியான கவனத்தில் இருந்தன' என்பதை வலியுறுத்த வேண்டும். 'அரசியல் அமைப்பிலுள்ள சில வழக்காறுகள் அல்லது சம்பிரதாயங்கள் (conventions) கடைசியில் நீதிமன்றங்களின் ஆதரவையே சார்ந்துள்ளன என்ற அவருடைய கருத்தும், ஐயப்பாட்டுக்கும், சிந்தனைக்கும் உரியது; இதனையும் அவரே ஒப்புக் கொண்டுள்ளார். ஆயினும், ஆங்கில அரசியலமைப்புச் சட்டத்தின் கொள்கைகளெல்லாம் முழுவதும் நீதி மன்றங்களாலேதான் ஆக்கப்பட்டுள்ளன என்பது, அவர் சட்டத்தின் ஆட்சி என்ற கருத்தை விளக்கும்போது, வாசகர்களுக்கு ஐயத்துக்கு இடமின்றி விளங்கிவிடுகிறது.

தற்கால அரசாங்க அமைப்பைப்பற்றி அறிந்த எவருக்கும் ஆசிரியர் டைசியின் நூலின் சுருக்கவுரையைப் படிக்கும்போது இரண்டு கருத்துகள் தோன்றுகின்றன:

(i) டைசி தனது காலம் வரையிலும் உள்ள அரசியல் அமைப்புச் சட்ட ஆசிரியர்களினுடைய முழுக் கவனத்தையும் ஈர்த்த அரசாங்க உறுப்புகளைப்பற்றி மட்டுமே குறிப்பிடுகிறார். அவையாவன : பாராளுமன்றம்; காபினெட் அரசாங்கத்தைப் பொறுத்தவரை விசேட அதிகாரம் (prerogative) உடைய அரசர் அல்லது அரசி; உயர்நீதிமன்றமும், பாராளுமன்றத்தின் தலைமையான அதிகாரத்தை ஒப்புக்கொள்ளவும், பொதுச் சட்டத்தை நிறைவேற்றவும் (common law) அவ்வுயர்நீதி மன்றத்துக்குள்ள கடமையும் ஆம். ஆட்சித்துறை (administration) என்பதைப் பொறுத்தமட்டில் அவருடைய கவனம் எதிர்மறையாக, அதாவது ஆள் சுதந்திரம், பேச்சு உரிமை, பொதுக் கூட்டங்களைக் கட்டுப்படுத்துவதில் போலீசார் எடுக்கும் நடவடிக்கை முதலிய காரியங்களைப் பொறுத்தவரையில், ஆட்சியினர் அதிகாரம் வரம்பு கடந்து செலுத்தப்படுமானால், அவற்றை நீதி மன்றங்கள் எவ்வாறு தடுக்கலாம் அல்லது கட்டுப்படுத்தலாம் என்பதைப்பற்றி ஆராய்வதிலேயே சென்றது.

(ii) அரசாங்கத்தின் ஆட்சி இயந்திரம் நடைமுறையில் இயங்குவதைப்பற்றி ஆய்வு செய்யவும் இங்கு முயற்சி செய்யப்படவில்லை.

முந்திய பதிப்பிலுள்ள முன்னுரையில், இச் செய்திகளெல்லாம் இந் நூலில் இக்காலச் சட்ட வகைகள் சேர்க்கப்படாததற்குக் காரணச்களாகக் காட்டப்பட்டன. இவை சேர்க்கப்படாதது இந் நூலில் உள்ள ஒரு குறை என்று சில ஆய்வாளர்கள் எழுதினர். எனினும், டைசி தான் எழுதிய ‘பத்தொன்பதாம் நூற்றாண்டில் சட்டமும் கருத்தும்’ (Law and Opinion during the 19th Century) என்ற நூலில் தற்காலச் சட்ட வகைகளின் போக்கை ஆராய்வதை நாம் காணும் போது, அவர் தீர்மானமாகவே தற்காலச் சட்ட வகைகளைச் சேர்க்கவில்லை என்று தெரிகிறது. ஆட்சி என்பது ஒவ்வொரு அலுவலின் நுட்பமான விஷயங்களோடும் நெருங்கிய தொடர்புடையது என அவர் கருதினாராகையால், ஆட்சியினை அரசியலமைப்புச் சட்டத்தின் ஒரு பகுதியாகச் சேர்ப்பதற்கு அவர் விரும்பவில்லை என்பதில் ஐயமில்லை. இது அவர் படைத்துறை, வருமான வரித்துறை (Revenue) முதலியவற்றை எடுத்து ஆயும் வகையிலேயே தெரிய வருகிறது. பொதுப் பணிகளினுடைய இத் துறைகள் எல்லாம் எவ்வாறு சட்டத்துக்குக்

கீழ்ப்பட்டனவாக உள்ளன என்பதைக் காட்டுவதற்காகவே அவர் இவற்றைப்பற்றிச் சிறிது கூறுகிருர். இவ்வாறு அவர் கருதியதெல்லாம் மரபுக்கு ஒத்ததே ஆகும். இந்நாளில் கூட, பொதுப் பணித்துறைகள் இயங்குவதைப்பற்றிய ஆராய்ச்சியைத் தனியாக ஆட்சித்துறைச் சட்டத்தை ஒட்டிய ஒன்ருக ஒதுக்கிவிட்டு, அரசியலமைப்புச் சட்டத்தை ஒரு குறுகிய நோக்கத்தில் காணும் பழக்கம் இருந்து வருகிறது. இப் பொருளை (subject) விரிவானதொரு கோணத்தில் காண வேண்டுமென வலியுறுத்திச் சொன்னவர் ஆசிரியர் மெயிட்லண்ட்தான்[1]. இந்தக் கருத்து 'அரசியலமைப்பின் சட்டம்' (The Law of the Constitution) என்ற நூலின் முதற் பதிப்பு வெளிவந்த இரண்டு அல்லது மூன்று ஆண்டுகட்குப் பின்னர் மெயிட்லண்டின் விரிவுரைகளில் வெளியிடப்பட்டது. ஆயினும் டைசியே (அரசியலமைப்புச் சட்ட ஆராய்ச்சி செய்யப்படுவதற்கு உரிய) பொருளின் அளவு முழுவதும் வரையறுக்கப் படவில்லை என்று கூறினுர். ஆஸ்டின் என்ற ஆசிரியரோ, இறைமை அதிகாரத்தைக் கையாளும் அரசாங்க உறுப்புகளை ஆய்வு செய்யும் அளவுக்கு மட்டுமே மேற்கூறிய பொருளை வரையறை செய்துகொண்டார்.

அரசியலமைப்புச் சட்டப்பிரிவு விரிவாக வளர்ந்துள்ளதைப் போல, சட்டநூலின் எந்தப் பிரிவும் விரிவடையவில்லை; இது நெடுங்காலமாகவே ஒப்புக்கொள்ளப்பட்டது. அரசியலமைப்புக்குப் பொருந்தும்படியாக நீதி மன்றங்களால் கையாளப்படுபவைகளை மட்டுமே அரசியலமைப்புச் சட்டமாக டைசி ஒப்புக்கொண்டார்; இதனைமட்டுமே தற்கால ஆய்வாளர் அரசியலமைப்புச் சட்டத்தின் வரம்பாக ஒப்புக்கொள்ளுவாரெனினும், அவர் அரசாங்கத்தின் பெரும் ஆட்சித்துறைகளினுலும், உள்ளூர் அதிகாரிகளாலும், பாராளுமன்றத்தால் சட்ட மூலமாக நிறுவப்பட்ட சில பணித்துறைகளினுலும் (services) நடை முறையில் கையாளப்படுகிற சில சட்டங்களையும் (அரசியலமைப்புச் சட்டத்தின்) வரம்பாகச் சேர்த்துக் கூறவேண்டியவராக இருக்கிருர்; பாராளுமன்றத்தால் சட்ட மூலமாக நிறுவப்பட்ட துறைகளாவன போக்குவரவு நிறுவனம் (Transport Commission), தேசீய சுகாதார மருத்துவக் கழகங்கள் (National Health Service Hospital Boards), நிர்வாகக் குழுக்கள், உதவிக் கழகம் (Assistance Board) முதலியனவாம். சட்ட மூலமாகக் கிடைக்கக் கூடிய தீர்வுகளை அல்லது

[1] Constitutional History of England, பக்கங்கள் 526-529.

நிவாரணங்களைப்பற்றிய (legal remedies) எல்லையை ஆராய்பவர், சிறைவைக்கப்பட்டவரை நீதி மன்றத்துக்குக் கொணர இடப்படும் கட்டளையை மட்டும் (habeas corpus) ஆராயாமல், தடை ஆணை (prohibition), பத்திரத்தைத் தாக்கல் செய்யக் கட்டளை (writ of certiorari), அரசாங்க அலுவலரை ஒரு அலுவலைச் செய்யென்று ஏவும் கட்டளை (writ of mandamus) முதலியவற்றையும், தடைக் கட்டளை (injunctions), மற்றும் இது சம்பந்தமான நடவடிக்கைகளையும், ஆட்சித்துறை நீதிமன்றங்களுள் (administrative tribunals) மிக முக்கியமானவற்றின் அமைப்பையும் சேர்த்து ஆய்வு செய்தல் வேண்டும். மேலும், அவ்வாறு ஆய்பவர் யுனைட்டெட் கிங்டத்துக்கும், காமன்வெல்த்தின் மற்ற உறுப்பு நாடுகட்கும், குடியேற்ற நிலங்களுக்கும் (colonial territories) இடையே உள்ள அரசியலமைப்புத் தொடர்பையும் பிழையற உணரக் கூடிய நிலையிலிருக்க வேண்டும். இன்னும் தெளிவாகக் கூறினால், மெயிட்லண்ட் கூறியதுபோல அரசாங்க இயந்திரத்தின் வெளித் தோற்றப் பகுதிகளை (showy parts) ஆராயாமல் அதனுடைய இயக்க முறையை விரிவாக ஆராய ஆராய, இதுவரை மறுக்கப்பட்டிராத, வெளிப்படையான உண்மையெனக் கொள்ளப்பட்ட கருத்துகளை ஏற்க முடியாமற் போகிறது. டைசி, ஆட்சித்துறையின் முரண்பாடில்லாத தன்மையை ஆய்வு செய்ய விரும்பினாரென்று நாம் வைத்துக் கொண்டால், அவர் 1885ஆம் ஆண்டிலேயே, ஆட்சித்துறையின் இயல்பில் பெரும் பகுதி பாராளுமன்றச் சட்டங்களையே அடிப்படையாக உடையவை என்றும், இச் சட்டங்கள் அரசரின் நிலையையும், அவருடைய அலுவலரின் நிலையையும் தீர்மானித்தன என்றும், இச் சட்டங்கள் பல அதிகாரிகளை நிறுவின என்றும், இவ் வதிகாரிகள் அரசாங்க அமைப்பின் பகுதிகளாக இருப்பினும், அவர்கள் அரசருக்கு உட்பட்டு இருக்கவில்லை என்றும், எழுதியிருக்க வேண்டும். இத்தகைய புதிய வளர்ச்சி, 'நீதி மன்றங்களால் வரையறுக்கப்பட்டுக் கையாளப்படும் தனிமனித உரிமையிலிருந்துதான் அரசியலமைப்புச் சட்டம் தோன்றுகிறது,' என்ற கருத்தை நிறுவுவதாக அவர் கொள்ளமாட்டார். மேலும், பல்வேறு ஆட்சித் துறைகளிலும் பொது அலுவலரால் கையாளப்படும் சட்டத் தொடர்பான அதிகாரங்களை யெல்லாம், அவர், ஒழுங்கான சட்டமுறைக்கு மாறுன எதேச்சாதிகாரம் எனவும் கொள்ளமாட்டார்.

டைசி எழுதிய சூழ்நிலைகளைப்பற்றி நாம் நன்றாக அறிந்து கொள்ள வேண்டுமாயின், சில எண்ணங்களை நன்றாக மனதில் பதித்துக் கொள்ளவேண்டும். இவ்வெண்ணங்கள், டைசியின் நூல், இக் காலப் பொதுச் சட்டத்தைப் பற்றி ஆராய்வதற்கு உதவியாக இருப்பதைவிட, பத்தொன்பதாம் நூற்றாண்டின் வரலாற்றை ஆராய்வதற்கே மிகவும் உதவியாய் இருப்பதை வலியுறுத்துகின்றன. ஆயினும், டைசி தனது காலத்தைப் பற்றிய அளவில்தான் எழுதினார்; முதலில் எதனையும் திட்ட வட்டமாகக் கூறுவது அவருடைய நோக்கம் அன்று. மேலும் அவருடைய நூலைப் படிப்பவர்கள், 'ஒரு நிறுவனம் எத்தகைய தாக ஆகியுள்ளது என்பதைப்பற்றித் தக்க கவனத்துடன் ஆய்வதை நிறுத்திவிட்டால்' ஏற்படும் குழப்பங்களைப்பற்றி வெளிப்படையாக அவர் எச்சரித்திருந்தார்.

நூலில் சொல்லப்பட்ட மூன்று வழிக் கொள்கைகளைப் பற்றி நாம் ஆராயும்போது, அவை எவ்வாறு வகுக்கப்பட்டன என்பதைப் பற்றி விளக்குவதில் நாம் கவனம் செலுத்தவில்லை; அதற்கு மாறாக, அவற்றைக் கடந்த எழுபத்தைந்து ஆண்டு கால வரலாற்றின் வாயிலாக மறு ஆராய்ச்சி செய்வதே நமது நோக்கமாகும். இந்த முறையே ஆசிரியரால் அவருடைய நூலின் பிந்திய பதிப்புகளில் கையாளப்பட்டது. 1914-ல் அவர் எட்டாவது பதிப்பை வெளியிட ஆயத்தம் செய்யும் போது, 1908ஆம் ஆண்டின் ஏழாவது பதிப்பிலுள்ள மூல பாடத்தை மாற்றாமல் விட்டுவிட்டு, அப்பொழுதைய மாறுதல் களைப் பற்றிய தனது கருத்துகளையெல்லாம் ஒரு நீண்ட முன்னுரையில் சேர்த்துக் கொண்டார்; இம் முன்னுரை அப் பொழுது ஓரளவு இருந்த சில கருத்துகளில் அவர் தமது கவனத்தைச் செலுத்தியதைக் காட்டிற்று. இப்பொழுது எழுதப்படுகிற இந்த முன்னுரையானது முக்கியமான அரசிய லமைப்பு மாறுதல்களைப் பற்றிய விளக்கங்களையும் கூறுகிறது. ஆயினும், டைசியின் 'அரசியலமைப்பின் சட்டம்' என்ற நூலுக்கு இன்றைய நாளிலுள்ள மதிப்பைச் சுட்டிக்காட்டுவதே இம் முன்னுரையின் முக்கிய நோக்கமாகும். குறிப்பாகக் காணுமிடத்துக் கடந்த சில ஆண்டுகளில், பாராளுமன்ற இறைமை என்ற கோட்பாட்டிற்கு ஒரு புதிய எதிர்ப்பு அல்லது மறுப்பு (challenge) தோன்றியுள்ளது. ஆனால், இரு உலகப் போர்களுக்கும் இடைப்பட்ட காலத்தில் பலராலும் குற்றங் கண்டுபிடிக்கப்பட்ட சட்டத்தின் ஆட்சி என்ற

கருத்தோ, இன்றைய நாளில் ஒரு குடியாட்சிக்கொத்த சட்ட முறையின் மூலமாக எய்துதற்குரிய, விரும்பத்தக்க குறிக்கோள் என ஒப்புக்கொள்ளப்படுகிறது. அதனோடு, அக் கருத்து ஏற்றுக் கொள்ளப்படுவற்கு உரிய சில தக்க மாறுதல்களும் ஒப்புக் கொள்ளப்படுகின்றன.

3. பாராளுமன்றத்தின் இறைமை

(The Sovereignty of Parliament)

கோட்பாடும் அதனைக் கையாளுதலும்: பாராளுமன்ற இறைமை என்ற கோட்பாடானது நூலாசிரியரால், தனது நூலின் ஒவ்வொரு பதிப்பிலும் 1914ஆம் ஆண்டுவரை வலியுறுத்தப்பட்டது; இந்த ஆண்டில் அவர் இக் கோட்பாட்டின் உண்மை மறுக்கப்படவில்லை என்பதை வலியுறுத்தினர். அவையாவன:

(1) எந்தச் சட்டத்தையும் ஆக்கவோ, நீக்கவோ பாராளுமன்றத்துக்கு உரிமை உண்டு.

(2) பாராளுமன்றத்தின் சட்டத்தை மீறவோ, அல்லது புறக்கணிக்கவோ எந்தத் தனி ஆளுக்கும் அல்லது குழுவுக்கும் உரிமை இருப்பதாக இங்கிலாந்தின் சட்டத்தில் ஒப்புக் கொள்ளப்படவில்லை.

(3) பாராளுமன்றத்தின் அதிகாரம் அல்லது உரிமையானது அரசியின் ஆட்சியிலுள்ள நாடுகளின் ஒவ்வொரு பாகத்துக்கும் பரவியுள்ளது.

'எந்தச் சட்டத்தையும் ஆக்கவோ, நீக்கவோ பாராளுமன்றத்துக்கு உரிமை உண்டு' என்ற கருத்துக்கு அண்மையில் மறுப்பு இருந்தபோதிலும், அதுவே யுனைட்டெட் கிங்டத்தின் சட்டத்தின் அடிப்படையாக உள்ளது என்பது இன்றும் உண்மையாக இருந்து வருகிறது. யுனைட்டெட் கிங்டத்திலுள்ள எந்த நீதி மன்றமும் பாராளுமன்றத்தால் செய்யப்பட்ட எச் சட்டத்தின் வாசகங்களையும் புறக்கணிக்கவும் முடியாது. மேற்படி சட்டத்தைப் பொறுத்தவரையில் சட்ட நீதிமன்றம் செய்யக் கூடியதெல்லாம் அதனைக் கையாளுவதே; அதாவது, அச் சட்டத்தின் பொருளை எடுத்து அது விளக்குதல் வேண்டும். ஒரு வழக்கறிஞருக்கு இது செய்தால் மட்டும் போதுமான

தாகும்; ஆயினும் இவ் வகையான கருத்து முழுவதும் சட்ட பூர்வமான கருத்தே என்பதையும் நாம் ஒப்புக்கொள்ள வேண்டும். நூலாசிரியர் தனது நூலில்கூறுகிற எடுத்துக்காட்டுக ளோடு அண்மையிற் செய்யப்பட்ட பின் கூறப்பட்ட சட்டங் களையும் சேர்த்து விரித்துக் கூறலாம்: 1911ஆம் ஆண்டின் பாராளுமன்றச் சட்டம், 1920ஆம் ஆண்டின் அயர்லாந்தின் அரசாங்கச் சட்டம், 1922ஆம் ஆண்டின் ஐரிஷ் சுதந்திர நாட்டு (உடன்படிக்கை) சட்டம், 1936ஆம் ஆண்டின் மாட்சி மிக்க அரசருடைய முடிதுறப்பு அறிக்கை. இவற்றோடு 1931ஆம் ஆண்டின் வெஸ்ட்மின்ஸ்டர் சட்டத்தையும், இன்னும் 1947ஆம் ஆண்டின் இந்தியச் சுதந்திரச் சட்டத்தைப்போல, காமன்வெல்த்திலுள்ள மற்ற உறுப்பு நாடுகளுக்குச் சுதந்திர நிலையை அளிக்கும் சட்டங்களையும் சேர்த்துக் கூறுதல் நல்லது என்று தோன்றுகின்றது.

'சட்டம் இயற்றும் அதிகாரத்தை எந்த ஒரு நீதிமன்றமும் மறுக்க முடியாது' என்ற உண்மை அத்தகைய அதிகாரத்தின் வரம்பு எனவும் முடிவாக ஆகாது. வரம்பு மீறிய சட்ட மியற்றும் அதிகாரம் எனப்படுவது, சட்ட மன்றத்துக்கும், வாக்காளர்களுக்குமிடையே தோன்றும் ஒரு சர்ச்சையாக இருக்கலாம். பெல்ஜியமும், பிரான்சும், இறுக்கமான நெகிழ்ச்சி யில்லாத (rigid) அரசியலமைப்புச் சட்டங்களைப் பெற்றிருந்த போதிலும், அவற்றிலுள்ள நீதிபதிகள் அங்கு செய்யப்படும் சட்டங்கள் அரசியலமைப்புச் சட்டத்திற்கு ஒத்தவையா எனத் தீர்ப்பு வழங்குவதில்லை; இதனை டைசி எடுத்துக் கூறுகின்றார். ஒரு கூட்டரசு (Federal) அரசியலமைப்பினு லாளப்படும் ஒரு நாட்டுக்கு மாறாக, ஓரரசு முறையிலுள்ள (unitary) ஒரு நாட்டில் 'சட்டங்களினுடைய செல்லுபடியாகும் தன்மையைப்பற்றி நீதிமன்றங்கள் தீர்ப்பளிக்க முடியும்'என்று காண்பது வழக்கத்திற்கு முற்றிலும் முரணானது; ஆயினும், காமன் வெல்த்தில், தென்னாப்பிரிக்காவையும், இலங்கையை யும் பொறுத்தவரையில் இது உண்மை அன்று.

ஒரு இறைமை அதிகாரி, 'தன்னைத்தானே கட்டுப்பாடு செய்துகொள்ள இயலுமா, இயலாதா?' என்ற கேள்விக்கு இறைமையை வலியுறுத்திக் கூறுவது மட்டுமே விடையாகாது. இக் காலக் குடியாட்சிச் சமுதாயத்தில் பல நூற்றுக்கணக்கான உறுப்பினர்களை உடைய இரு சபைகளும் சேர்ந்த ஒரு சட்ட மன்றத்தில் இறைமை அதிகாரமானது விடப்பட்டுள்ளது; இத் தகைய நிலையில் மேற்படிக் கேள்வியானது மிகவும் சிக்கலாக

ஆகின்றது. ஒருபுறம் நடு அரசாங்கத்திற்கும், நடுப் பாராளு மன்றத்திற்கும், மறுபுறம் உறுப்பு மாகாணங்களின் அரசாங்கக் கூறுகளுக்குமிடையே அதிகாரங்கள் பிரிக்கப்பட்டுள்ள ஒரு கூட்டரசு நாட்டில் (Federal State) முடிவான உயர்தர அதிகாரத்தின் ஒரே மூல ஆதாரமானது, தானே இயங்கவல்ல ஒரு சட்டமன்றத்திலும் விட்டுவைக்கப்பட மாட்டாது. இவ்வாறு விட்டுவைக்கப்பட்டிருக்குமானால், கூட்டரசின் (நடு அரசாங்கத்தின்) சார்பாகவும் உறுப்பு மாகாணங்களுக்கு எதிராகவும் (அரசியல் ஆதாரங்களின்) சமநிலையை (balance) மாற்றிவிட்டு, இவ் வகையாக, கூட்டரசுப் பிரச்சினைக்கு ஒரு தீர்வாகவே அமைந்துள்ள (இணைப்பு) ஒப்பந்தத்தைத் தகர்த் தெறிவதற்கு உள்ள அதிகாரமும் கூட்டரசுச் சட்டமன்றத்தின் அதிகாரங்களில் சேர்ந்துவிடும். குறிப்பாக அரசியலமைப்புச் சட்ட விஷயங்களைப் பொறுத்த வரையில், சட்டம் இயற்றும் முறையானது சில தனிப்பட்டச் செயல் விதிகளுக்கு உட்பட்டே இருக்கவேண்டியது தவிர்க்க முடியாதது. இந்த தனிப்பட்ட செயல் விதிகள், கூட்டரசு அரசாங்கத்தால் கொண்டு வரப் படும் எந்த அரசியலமைப்புச் சட்ட மாறுதலுக்கும் (அல்லது திருத்தத்துக்கும்) உறுப்பு மாகாணங்களில் பெரும்பாலான வற்றினுடைய ஒப்புதலாவது இருத்தல் வேண்டு மென்பதை உறுதிப்படுத்துகின்றன. காமன்வெல்த்தில் கூட்டரசு நாடு களுக்கு எடுத்துக்காட்டாக ஏற்கெனவே ஆறு இருக்கின்றன; இவற்றுள் ஒன்று மட்டுமே இந் நூலின் முதற்பதிப்பு வெளி யாகும் காலத்தில் இருந்தது. காமன்வெல்த்திலுள்ள ஓரரசு நாடுகளை எடுத்துக் கொண்டாலும்கூட, இவை ஒவ்வொன் றுக்கும் தனித் தனியாக எழுதப்பட்ட அரசியலமைப்புச் சட்டம் இருப்பதால், அத்தகைய எழுதப்பட்ட அரசிய லமைப்புச் சட்டம் எங்கெங்கெல்லாம் சில முக்கியமான அரசியலமைப்புச் சட்டம் பற்றிய விஷயங்களைத் தனிப்பட்ட சட்டமியற்றும் முறைக்கு (special legislative procedure) உட் படுத்துகின்றதோ, அங்கெல்லாம் ஆசிரியர் (டைசி) வரை யறுத்துக் கூறுகின்ற சட்டமன்றத்தின் இறைமை என்ற கொள்கை பொருந்துமா என்ற ஐயப்பாடு தோன்றுகின்றது. டைசி ஒப்புக்கொண்டது போல நாமும், வரையறுக்கப்படாத சட்டமன்றத்தின் இறைமை அல்லது உயர்தர அதிகாரம் என்ற கோட்பாட்டை யுனைட்டெட் கிங்டத்தின் பாராளுமன்றத்தி லுள்ள அரசியாருக்குப் பொருந்துவதாக ஒப்புக்கொண்டால் இக் கோட்பாட்டைக் காமன்வெல்த் நாடுகளுக்கு ஏற்பக் கையாளுவதால் தோன்றும் இடர்ப்பாடுகளை நாம் எதிர்பார்க்க வேண்டும். இதற்கு ஏற்ற எடுத்துக்காட்டு 1931ஆம் ஆண்டின்

வெஸ்ட்மின்ஸ்டர் சட்டம் ஆகும். இச் சட்டத்தின் 4ஆம் பிரிவு எந்த ஒரு 'டொமினியன் அல்லது குடியேற்ற நாட்டின் வேண்டுதலும், ஒப்புதலும் இல்லாதபோது, அந்த டொமினியனுக்காக யுனைட்டெட் கிங்டத்தின் பாராளுமன்றமானது வருங்காலத்தில் சட்டம் செய்யாது' என்று கூறுகிறது. நூலாசிரியர் கூறுவது போல பாராளுமன்றத்தின் உரிமையும், அதிகாரமும் அரசரின் கீழுள்ள எல்லா நாடுகளுக்கும், நிலங்களுக்கும் செல்லுபடியாகுமென்றால், எதிர்காலத்தில் இந்த 4ஆம் பிரிவைத் தள்ளுபடி செய்வதற்கும் பாராளுமன்றத்துக்கு அதிகாரம் உண்டு என்ற முடிவு தோன்றுகின்றது. 'இத்தகைய ஒரு அதிகாரம் கையாளப்படுதல் கூடும்' என்ற ஒரு குறிப்பே காமன்வெல்த்தை உருக்குலைத்து விடுமென்பதும், எவ்வெவற்றிற்கு இறைமை அதிகாரத்தை வழங்குதல் விரும்பத்தக்கதோ, அத்தகைய காமென்வெல்த் உறுப்பு நாடுகளுக்கு அதனை வழங்குவதே வெஸ்ட்மின்ஸ்டர் சட்டத்தின் நோக்கமாக இருக்க, அவ்வாறு ஒரு முறை வழங்கப்பட்ட இறைமை அதிகாரத்தைத் திரும்ப எடுத்துக் கொள்ளுதல் (revoke) நடைமுறை அரசியலில் இயலாத ஒன்று என்பதும் எல்லோருக்கும் தெரியும். இந்த விஷயத்தைப்பற்றிப் பின்னர் மீண்டும் கூறுவோம்.

கூட்டரசு அரசாங்கம் என்பது, நடு அரசாங்கத்துக்கும் பல வட்டார அரசாங்கங்களுக்கும் (regional authorities) இடையே அதிகாரங்களைப் பிரித்துள்ள ஒரு அரசாங்க அமைப்பாகும். வட்டார அரசாங்கங்களுள் ஒவ்வொன்றும் மற்றவற்றோடு சமமான நிலையிலும் (co-ordinate), 'மற்றவற்றினின்றும் சுதந்திரமாகவும் இருக்கின்றது.'[1] இதனால் முழு அதிகாரங்களும் பிரிக்கப்படுதல் வேண்டுமென்பதும், அவ்வாறு பிரித்தலும் இறைமை அதிகாரத்தை மறுப்பது ஆகும். ஆயினும், இவ் வதிகாரப் பிரிப்பை அல்லது பாகுபாட்டை (division) யும் மாற்றுவதற்குரிய அதிகாரம் எவ்விடத்தில் இருக்கிறதோ, அவ்விடத்தில் சட்டப்படியான இறைமை அதிகாரம் (legal sovereignty) காணப்படுகிறது. சாதாரணச் சூழ்நிலையில் இவ் வதிகாரம் கையாளப்பட மாட்டாது; எனினும் இவ்வாறு கையாளப்படுகையில் அரசியல் அமைப்பு பல மாறுதலடையும் என்பது பல நிகழ்ச்சிகளில் தெரியவருகின்றது.

[1] K. C. Wheare எழுதிய Federal Government, மூன்றும் பதிப்பு, 32-33ஆம் பக்கங்கள்.

கனடா டொமினியனிலும், ஆஸ்திரேலிய காமன்வெல்த்திலும் சட்டம் இயற்றும் அதிகாரம் எங்கு இருக்கிறது என்பதைத் தீர்மானிப்பதற்கு உதவக்கூடிய தீர்ப்புகள் பிரிவிக் கௌன்சிலின் நீதிக்குழு (judicial committee)வின் சட்ட அறிக்கைகளில் நிறையக் காணப்படுகின்றன. கனடாவைப் பொறுத்தவரையில் யாவரையும் கட்டுப்படுத்தவல்ல முடிவுகளைச் செய்யும் அதிகாரத்தின் மூலாதாரம் கனடிய உயர் நீதிமன்றத்தில் (Supreme Court) இக் காலத்தில் காணப்படுகின்றது. ஆனால், ஆஸ்திரேலியாவோ அரசியலமைப்புச் சட்டம் பற்றி அங்கு எழும் வழக்குகளைத் (battles) தீர்ப்பதற்காக இன்னும் டௌனிங் தெருவிலுள்ள கழக அறைக்கு (Board room) அதாவது ஆங்கில அரசாங்கத்துக்கு அனுப்பிக் கொண்டிருக்கின்றது.

யுனைட்டெட் கிங்டத்தின் பாராளுமன்றத்தின் இறைமை அதிகாரத்தைப் பற்றிய டைசியின் விளக்கவுரைக்கு மீண்டும் வருவோம்; இதில் அவருடைய விவாத முறையானது பாராளுமன்றத்தின் அதிகாரங்களுக்கு வரம்புகளாகக் (limitations) காட்டப்பட்டவையெல்லாம் உண்மையில் வரம்புகளல்ல எனக் காட்டுவதற்குக் கையாளப்பட்டது. அவருடைய விளக்கம், ஆலோசனைக் குழுவும், அரசியாரும் பாராளுமன்றத்துக்குக் கீழ்ப்பட்டிருத்தலைக் காட்டுகின்றது; இவ்வாறு இருத்தல் 1610ஆம் ஆண்டில் விளம்பரங்களைப் பற்றிய வழக்கு (The Case of Proclamations, 1610) தோன்றிய நாளில் இருந்து நடைபெறுகின்றது; இதில் அவர், எவ்வாறு பாராளுமன்றத்தின், ஒரு சட்டமன்றத்தின் தீர்மானங்கள் (resolutions) சட்டத்தை மாற்ற இயலாது என்பதைக் காட்டுகிறார். ஒரு சட்டக் கருத்து என்ற அளவில் இறைமை அதிகாரம் என்பது வாக்காளர்களிடத்தில் காணப்பட முடியாதது என்றும், வாக்காளர்களுடைய உரிமை பாராளுமன்ற உறுப்பினர்களைத் தேர்ந்தெடுத்தலோடு வரையறைக்குள்ளாகிறது என்றும் அவர் காட்டுகிறார்; மேலும், மேற்படி இறைமை அதிகாரம் சட்ட நீதிமன்றங்களிலும்(Law Courts)காணப்படமுடியாது என்றும், ஏனெனில், நீதிமன்றங்களின் தீர்ப்பு, நீதிமன்றத்தின் சட்டத்துக்கு (Judicial Legislation) ஒப்பாக இருந்தாலும், அந்தத் தீர்ப்பானது பாராளுமன்றத்தால் நீக்கப்படுவதற்கு (repeal) உரிய நிலையில் இருக்கின்றது எனவும், அவர் காட்டுகிறார். ஒழுக்கச் சார்பான சட்டத்தின் மூலம் (moral law) விளக்கப்படக்கூடிய சட்டச் சார்பான வரம்புகள் (legal limitations) (பாராளுமன்ற இறைம அதிகாரத்துக்கு) இல்லை என அவர்

விவாதிக்கிருர்; உண்மையில் பாராளுமன்றத்தின் சட்டம் இயற்கை நீதிக்கு (natural justice) முரணுனது என்ற விவாதம் 17ஆம் நூற்ருண்டிலேயே எடுபடாமல் தோற்றுவிட்டது. கடந்த நூற்ருண்டுகளிலே, அரசருக்குக் கட்டளையின் (ordinance) அல்லது விளம்பரத்தின் (proclamation) மூலமாகச் சட்டம் இயற்றுவதற்கு விசேட அதிகாரம் (prerogative) இருந்த போதிலும், அத்தகைய விசேட அதிகாரத்தின்மீது பாராளுமன்றத்தால் அடிக்கடி கட்டுப்பாடு (control) கையாளப் படுகிறது என்பதைப்பற்றி இக் காலத்தில் எந்த ஐயப்பாடும் தோன்ருது. 'ஒரு பாராளுமன்றமானது, தனது சட்டங்களைத் தனக்குப்பின் வரும் பாராளுமன்றம் நீக்க முடியாதபடி அதனைத் தடுக்க முடியும்' என்பதும், இறைமை அதிகாரத்தின் பொருள் அன்று.

பாராளுமன்றத்தின் உயர்தர அதிகாரம் என்பதை ஒரு சட்டச் சார்பான கருத்தளவில் மட்டும் கொண்டால் அதனை இக் காலத்தில் மறுக்க இயலாது.

'யார் சட்டப்படியான இறைமை அதிகாரி?' என்ற கேள்வியானது, 'ஏன் அவர் இறைமை அதிகாரி?' 'யார் அவரை இறைமை அதிகாரியாக ஆக்கிஞர்?' என்ற கேள்விகளினின்றும் முற்றிலும் மாறுபட்டது ஆகும். யாராவது ஒரு இறைமை அதிகாரியிடத்து அதிகாரத்தை ஒப்படைத்த வரலாற்று நிகழ்ச்சிகளும், அவருக்கு மற்றவர் கீழ்ப்படிதல் வேண்டுமென்பதை நிறுவக்கூடிய ஒழுக்கச் சார்பான காரணங்களும், சட்டத் தொடர்பான கேள்விகளோடு தொடர்பில்லாமல் தனித்து நிற்கின்றன; அவை வரலாற்று அல்லது அரசியல் தத்துவத்தோடு, அல்லது ஒழுக்கத் தத்துவத்தோடு சேர்ந்துள்ளன; அவற்றை இறைமை அதிகாரியைத் தீர்மானிப்பதற்கும், அவருடைய அதிகாரங்களை வரையறை செய்வதற்கும் ஆராயப்படும் கேள்விகளோடு இணைப்பதனுல் குழப்பத்தைத் தவிர வேருென்றும் விளைவதில்லை.[1]

இந்த மேற்கோளை மனதில் கொண்டு, பாராளுமன்ற இறைமை என்ற கோட்பாட்டை ஒரு அரசியல் தத்துவமாகக் கருதுகின்ற தற்கால நூல்களையும் மனதில் கொண்டு, இந்தக்

[1] Bryce எழுதிய Studies in History and Jurisprudence, 1901 என்ற நூலின் 2ஆம் பாகம், 57ஆம் பக்கத்தில், இதனை D. R. Crown எழுதிய Legislature and Judiciary என்ற நூலில் 295-296ஆம் பக்கங்களில் குறிப்பிடுகிருர்.

கோட்பாட்டையே இப்பொழுதைய கிரேட் பிரிட்டன், வட அயர்லாந்து ஆகியவற்றின் பாராளுமன்றமாக விளங்கும் மன்றத்தின் முதன்மையான, முக்கியமான இயல்பாக அல்லது தன்மையாகக் (characteristic) காட்டுவதே டைசியின் நோக்கம் என்பதை நாம் வலியுறுத்த வேண்டும். வரலாற்று வகையில், இந்தக் கோட்பாடானது, மற்றவற்றைவிடக் காலத்தால் மிக அண்மையிலுள்ளது; அதனுடைய இப்பொழுதைய வடிவத்தில், அதனுடைய தோற்றமானது, பதினேழாம் நூற்றுண்டில் பாராளுமன்றத்துக்கும், பொதுச்சட்ட வழக்கறிஞர்களுக்கும் (common lawyers) இடையே ஏற்பட்ட நெருங்கிய தொடர்பில் காணப்படுகின்றது. இது எழுதப்பட்ட சட்டத்திலிருந்தோ அரசியலமைப்புப்பற்றிய ஏதாவதொரு சட்டத்திலிருந்தோ வருவிக்கப்படுவது அன்று. பாராளுமன்றத்தால் வெளியிடப்பட்ட சட்டத்துக்குக் கீழ்ப்பட்டதாக அரசருடைய அதிகாரம் அமைக்கப்பட வேண்டுமாயின் இந்தக்கோட்பாடு மிக முக்கியமானது. இந்த நோக்கத்தை அடைவதற்காக, சட்ட அறிஞர்கள் அல்லது வழக்கறிஞர்கள் 'பாராளுமன்றமானது பொதுச் சட்ட விதிகளுக்கு முரண்பாடான வகையில் சட்டத்தை இயற்ற இயலாது' என்று தாங்கள் கூறிவந்த கோரிக்கையை, மனமில்லாதவாறு கைவிட வேண்டியதாயிற்று. 'அரசரால் பாராளுமன்றத்தில் செய்யப்பட்ட சட்டத்தின் செல்லுபடியாகும் தன்மையானது, நிர்வாக சபையின் தலைவர் என்ற முறையில் அரசராலும் மறுக்கப்பட முடியாதது' என்ற கொள்கையைத் தீர்மானமாகப் பாராளுமன்றம் நிறுவிவிட்டபடியால், 'அரசருடைய குடிமக்களும் அவரைப் போலவே அச் சட்டத்தால் கட்டுப்படுத்தப்படுவதற்கு உரியர்' என்பதும் பெறப்படுகின்றது. இனி எக்காலத்திலும், பாராளுமன்றச் சட்டம் எதனையும் தள்ளுபடி செய்யவோ, அல்லது மறுக்கும்படியாகவோ, எவரும் எந்த நீதிமன்றத்தையும் கேட்க முடியாது. ஆயினும், சட்டம் செய்யப்பட்ட வகையை நீதிமன்றம் விசாரணை செய்ய இயலாது என்பது முன்பே நிறுவப்பட்டது. 1637ஆம் ஆண்டில் தோன்றியதும், புகழ்பெற்றதுமான கப்பல் வரிப்பண வழக்கு—ஹாம்ப்டனின் வழக்கில், நீதிமன்றமானது *Statutum de Tallagio non Concedendo* என்ற சட்டத்தை, அது பாராளுமன்றச் சட்ட நூல் தொகுப்பில் காணப்பட்டபடியால், ஏற்றுக் கொண்டது; ஆயினும், குறிப்பிட்ட இச் சட்டமானது எந்த ஒரு பாராளுமன்றத்தாலும் நிறைவேற்றப்படவில்லை என்று தெரிகிறது. முற்காலத்திய இந்த முன் நிகழ்வானது (precedent) 'ஒரு சட்டமானது நிறைவேற்றப்படுதற்கு எத்தகைய

முறை கையாளப் பட்டாலும், அது பாராளுமன்றச் சட்டத் தொகுப்பில் காணப்பட்டால் அது சட்டமாகவே நன்றுகக் கொள்ளப்படும்' என்பதைக் காட்டுகிறது.

'பாராளுமன்றத்தில் என்ன நடைபெறுகிறது?' என்று விசாரிப்பதற்கு நீதி மன்றங்களுக்கு ஆற்றலில்லாவிட்டாலும், விருப்பமில்லை என்பது உண்மையே. இப் போக்கு அண்மையில் ஒரு வழக்கில் வலியுறுத்தப்பட்டது. இந்த வழக்கு 1954ஆம் ஆண்டில் பாராளுமன்ற எல்லை ஆணைக் குழுவினரின் (Parliamentary Boundary Commissioners) அறிக்கைகளின் செல்லுபடியாகும் தன்மையை மறுப்பதற்காகச் செய்யப்பட்ட முயற்சியின் விளைவாகத் தோன்றிற்று. எங்கே எல்லாக் காரியங்களுக்கும் உரிய இறைமை அதிகாரி ஒரு ஆளாக இல்லாமல் பலராக இருக்கிருரோ, அங்கே அவ் விறைமை அதிகாரியின் முடிவுகளை உறுதிப் படுத்துவதற்கு விதிகள் தேவைப்படுகின்றன; இத்தகைய விதிகள் (rules) இயற்றப்படும் சட்டங்களின் செல்லுபடியாகும் தன்மைக்கு (validity) இன்றியமையாதவை (condition) எனக் கருதப்பட வேண்டுமெனவும், எனவே தர்க்க முறையாகப் பார்த்தால் இவ் விதிகள் இறைமை அதிகாரிக்கு மேம்பட்டவை எனவும் இந் நூலில் முந்திய பதிப்பில் கூறப்பட்டது; எனவே, அரசியாரும், பிரபுக்களும், பொதுமக்களும் ஒரே கூட்டு மன்றமாகக் (a single joint assembly) கூடியிருக்கும்பொழுது அவை ஒரு தீர்மானத்தை—அது ஒருமனப்பட்டதாக இருப் பினும், நீதி மன்றங்களால் ஏற்றுக் கொள்ளப்படக் கூடிய ஒரு சட்டமாகச் செய்ய முடியாது.[1] பாராளுமன்றத்தினுள் நடப்பவைகளை விசாரிப்பதற்கு நீதிமன்றங்களால் இயலாது, அல்லது முடியாது என்றுல், பாராளுமன்றத்தின் ஒவ்வொரு மன்றமும், ஒவ்வொரு மசோதாவுக்கும், அது அரச ருடைய ஒப்புதலைப் பெறுமுன், வழக்கமாகக் கையாளப்பட வேண்டிய பல்வேறு நிலைகளுக்குப் பதிலாக (customary stages) சட்டத்தை நிறைவேற்றும் முறையாக ஒரு எளிய தீர்மானத்தை நிறைவேற்றுவதில் என்ன தடை இருக்கிறது?' என்ற கேள்வி எழலாம். சட்டமன்றத்தின் ஒவ்வொரு மன்றத்திலுமுள்ள செயல் முறை விதிகளில் ஏற்படும் மாறுதல்களை எந்த நீதி மன்றமும் விசாரிக்க இயலாது என்பதும், வெஸ்ட்மின்ஸ்டரி

[1] இந்தக் கருத்து R. T. E Latham என்பவர் எழுதிய The Law and the Commonwealth in Survey of the British Commonwealth Affairs, 1937, Vol. I, 523-524ஆம் பக்கங்களில் காணப்படுவதை அடிப்படையாகக் கொண்டது.

லுள்ள பாராளுமன்றத்தின் சட்டம் இயற்றும் செயல் முறையைக் கட்டுப்படுத்துவதற்கு நீதிமன்றம் எதுவும் கிடையாது என்பதும் புதிய கருத்துகளாகும்.

ஒவ்வொரு சட்டமன்றத்தாலும் வகுக்கப்பட்டுள்ள பாராளுமன்ற அலுவல் விதிகளெல்லாம் மேற்கூறப்பட்ட வழக்கமாகக் கையாளப்பட வேண்டிய நிலைகளை வலியுறுத்து கின்றன; இவ்வாறு அவை வலியுறுத்தும்வரையில் சட்டத்தை ஒரு தீர்மானத்தின் மூலமாக மட்டுமே (resolution) மாற்றும் முயற்சியை, ஒழுங்கான செயல்முறைகளின் மூலமாக நிறை வேற்றப்பட்ட ஒரு சட்டத்தினுல் செய்யப்படும் மாறுதலுக்கு ஒப்பாக ஏற்றுக்கொள்ள நீதிமன்றங்கள் மறுக்கும். இந்த நிலைமை நூற்றிருபது ஆண்டுகளுக்கு முன்னர் தீர்க்கப் பட்ட பாராளுமன்ற உரிமைகளைப்பற்றிய பெரிய வழக்கு ஒன்றில் காட்டப்பட்டது. ஆயினும், சட்டமன்றத்தின் ஏதாவதொரு மன்றத்தினுல் செய்யப்படும் ஏதாவதொரு தீர்மானத்தை மட்டிலும் ஓர் சட்டமாக ஒப்புக்கொள்ள நீதிமன்றங்கள் மறுக்கும் மனப்பான்மையே 'எல்லாச் சட்டங் களும் அவ்வவற்றுக்குரிய நிறைவேற்று நிலைகளின் மூலமாகச் (stages of enactment) செல்லுதல் வேண்டுமெனப் பாராளு மன்றச் சட்டம் குறிக்கிறது,' என்பதை ஒப்புக் கொள்கிறது. பாராளுமன்றமே தனது செயல்முறையில் மாறுதல் ஏதேனும் செய்வதற்குத் தடையாக, ஸ்டாக்டேல்—ஹான்சர்ட் வழக்கில் அரசியாரின் நீதிமன்றத்தால் அளிக்கப்பட்ட தீர்ப்பின்படி எதுவும் இல்லை. உண்மையில் பல ஆண்டுகளாக இத்தகைய மாறுதல்கள் பல இருந்திருக்கின்றன; அவற்றின் செல்லுபடி யாகும் தன்மையை எந்த நீதிமன்றமும் மறுக்கவும் இல்லை. எடுத்துக்காட்டாக, 1880ஆம் ஆண்டுகளிலிருந்து, சொற் போர்களை முடிவுபெறச் செய்வதற்காகப் பல செயல்முறைகள் கையாளப்படுகின்றன; மேலும், மசோதாக்களை மன்றத்தில் கொண்டுவருவதில் பல நிலைகள், மசோதாக்களைக் குழுவின் பரிசீலனைக்குவிடும் நிலை, பின் குழு அவற்றை மன்றத்திற்கு அறிவிக்கும் நிலை முதலியவற்றைப் பற்றிய விதிகளில் அவ்வப் போது மாறுதல்கள் செய்யப்பட்டுள்ளன.

'எந்தச் சட்ட நீதி மன்றமும், இயற்றப்பட்ட எச் சட்டத்தையும் சட்டப்படி செல்லக் கூடியதா என்று தீர்மானிப் பதற்கு முடியும்' என்ற கருத்து எந்த ஆங்கில அல்லது ஸ்காட்லாந்திய நீதிமன்றத்திலும் தோன்றவில்லை; இது நினைவில் கொள்ளத்தக்க ஒன்று ஆகும். ஒரு கூட்டரசு அரசிய

லமைப்பு முறையை உடைய நாடுகளிலே, இதற்கு மாறுன நிலைமை காணப்படுகின்றது; அவற்றில் மேற் கூறிய அலுவல் இந் நாட்களில் நீதிமன்றங்களால் ஏற்றுக்கொள்ளப்பட்டு, அல்லது பெரும்பாலும் வழங்கப்பட்டு உள்ளது. ஓரரசு அரசியலமைப்பு முறையை உடைய பல நாடுகளில், சட்டமன்றத்தின் அதிகாரங்கள் வரம்புக்குள்ளாக்கப்பட் டிருக்கின்றன; ஆயினும் இத்தகைய நிலையிலிருந்து, அவற்றில் சட்டங்களை மீறக்கூடிய விசேட அதிகாரம் நீதிமன்றத்துக்கு உண்டு என்ற முடிபு தோன்றுவதில்லை. 'வெஸ்ட் மின்ஸ்டரிலுள்ள பாராளுமன்றத்தைப் பொறுத்த வரையிலும், நீதி மன்றங்களோ, அல்லது வேறு எந்த அதிகாரியோ பாராளுமன்றத்தின் அதிகாரங்களின்மீது கட்டுப்பாடுகளை விதிக்க முடியாது' என்ற கருத்தை நிலைநாட்ட டைசி முயற்சி எடுத்துக்கொண்டார். தனது கருத்துக்கு ஏற்ற ஆதரவை அவர் வலியுறுத்திச் சொல்லாமல் விட்டுவிடவே, அவருடைய மேற்படி கருத்தில் குற்றம் கூறப்பட்டது. சில அடிப்படை உண்மைகளுக்கு ஆதரவாக நீதி மன்றங்களின் அதிகாரம் என்ன என்று, சட்டக் கோணத்திலிருந்து நாம் டைசியே செய்ததுபோல, மேற்படிக் கேள்வியை ஆராய்ந்தால், மேற்படிக் குற்றச் சாட்டுக்கு மறுப்புக் கூறமுடியும். அடிப்படைக் கருத்துரைகளாவன:

(1) பாராளுமன்றத்தில் ஒரு மசோதா சட்டமாக நிறைவேற்றப்படும் செயல் முறையைப்பற்றி எந்த நீதி மன்றமும் ஆராயாது;

(2) நீதி மன்றங்களுக்கு முறைமை அதிகாரம் (jurisdiction) இல்லாத ஏதேனும் ஒரு துறையில்(sphere)பாராளுமன்றத்துக்கு முறைமை அதிகாரம் இருக்கும்போது, அத் துறையில் நீதிமன்றம் நீதி வழங்கும் முறையைக் (judicial process) கையாளாது.

(3) பாராளுமன்றமானது, தனக்குப் பிற்பட்ட காலத்தில் செய்யப்படும் வேறெந்தச் சட்டத்தின் அமைப்பினுலும் தன்னைக் கட்டுப்படுத்திக் கொள்ளாது; ஆகையால் பிற்காலத்திய எந்தச் சட்டத்தின் பகுதிகளும், முந்திய சட்டத்தோடு முரண்பட்டுள்ள வரையிலும், பிற்பட்ட சட்டப் பகுதிகளே நிறைவேறும்.

முதலில் கூறப்பட்ட கருத்துக்குச் சான்ருக மன்றத்தின் தனி நலன்பற்றிய மசோதா சட்டமாக ஆக்கப்படுவதைக் (Private

Bill legislation) கூறலாம். லீ என்பவருக்கும், பியூட், டாரிங்டன் ஜங்ஷன் ரயில்வே கம்பெனிக்கும் இடையே தோன்றிய வழக்கில் (Lee v. Bude and Torrington Junction Railway Company, 1871), சட்டம் செய்யப்படுதற்கு ஏற்ற செயல் விதியைக் கையாளுதல் என்பது பாராளுமன்றத்தின் இரு சபைகளுக்கும் உள்ள ஒரு உரிமையாகும் என வற்புறுத்தப் பட்டது. அதில் நீதிமன்றங்களின் தலையீடு கூடாதென இரு சபைகளும் தனித்தனியே வற்புறுத்துகின்றன. இவ்வாறு ஒரு மசோதா சட்டமாக்கப்படும்போது பாராளுமன்றத்தில் கையாளப்படும் செயல் விதியைக் கண்டுகொள்ள நீதிமன்றம் மறுக்கிறது. 'ஒரு ஏமாற்று முறையாகவே மசோதா பாராளு மன்றத்தில் நிறைவேற்றப்பட்டது' என்ற குற்றச்சாட்டி னின்றும், மேற்கூறிய வழக்கு எழுந்தது. பொது நலன் பற்றிய மசோதாவை (Public Bill) ஆராய்ந்ததனுல் தோன்றிய மேற் கூறிய கருத்துரைக்கு ஆதாரம் ஏதும் இல்லை; எனினும், 'பொதுநலன்பற்றிய மசோதாவை ஒரு அமைச்சரோ, அல்லது தனிப்பட்ட உறுப்பினரோ கொண்டுவந்தாலும் அல்லது தனி நலன் பற்றிய மசோதாவை அல்லது சில இடங்களைப் பற்றிய மசோதாவை (Private or Local Bill) ஒரு தனிப்பட்ட மன்ற உறுப்பினர் (private member) கொண்டு வந்தாலும், அது எப்பொழுது சட்டமாக ஆக்கப்படுகிறதோ, அதற்கும் மற்ற சட்டங்களுக்கும், 'சட்டத்துக்குறிய ஆற்றல்' (legal effect) என்பதைப் பொறுத்த மட்டில் எந்த வேறுபாடு கிடையாது என்பதை நாம் குறிப்பிட வேண்டும். மேலும் இதற்கு ஆதாராம் எடின்பரோ, டால்கீத் ரெயில்வே கம்பெனிக்கும், வாச்சோப்புக்கும் இடையே தோன்றிய வழக்கில் (Edinburgh and Dalkeith Railway Company v. Wauchope, 1842) காணப்படுகிறது. இவ்விடத்தில் ஒரு தனி நலன் பற்றிய சட்டமானது செல்லுபடியாகாது என்று தடங்கல் செய் வதற்காக வீணுன முயற்சி செய்யப்பட்டது; இதற்குக் காரணம் பின் வருமாறு கூறப்பட்டது; பாராளுமன்றத்தின் இரு சபை களின் நிரந்தர ஆணைகளினுல் (Standing Orders) விதிக்கப்பட்ட செயல்விதி ஓரளவு நீதிமன்றத்தின் செயல் விதியைப் (quasi-judicial) போன்றது; அவ் விதியின்படி, ஒரு தனி நலன் பற்றிய சட்டம் ஒரு நீதி மன்றத்தின் தீர்ப்புக்குச் சமம் ஆகும். ஒரு நீதி மன்றத் தீர்ப்பை ஏமாற்று முறையின் மூலமாகப் பெறும் பொழுது, அதனைத் தள்ளிவிட முடியும்; அதேபோல் ஒரு சட்டம் ஏமாற்று முறையில் செய்யப்படும்போது, அதனைத் தள்ளிவிடக் கூடும். மேற்கூறிய வழக்கின் தீர்ப்பு பிரபுக்கள் அல்லது பெருமக்கள் சபையால் அளிக்கப்பட்டது; பாராளு

மன்றத்தின் ஒவ்வொரு சபையும் தனது நிரந்தர விதிகளின் மூலமாக, ஒரு மசோதாவைச் சட்டமாக ஆக்குவதற்குரிய செயல் விதியை வகுத்திருக்கவும், அச் செயல்விதிக்கு எதிர்ப் பாக நீதிமன்றங்களில் செய்யப்படும் முயற்சி வெற்றி பெருது. யுனைட்டெட் கிங்டத்தின் பாராளுமன்றத்தின் வரலாற்றிலேயே இத்தகைய முயற்சி எதுவும் வெற்றியாகச் செய்யப்படவில்லை என்பது உறுதி.

'பாராளுமன்றத்துக்கு மட்டுமே உரிய முறைமை அல்லது ஆட்சி எல்லைக்குள் (exclusive jurisdiction), நீதிமன்ற முறை காணப்பட மாட்டாது' என்ற முடிபு உரிமை பற்றிய கேள்வியின் மீதும், தனி நலன் மசோதாவைச் சட்டமாக்குதல் என்ற கேள்வியின் மீதும் எழுந்த வழக்குகளில், நீதி மன்றங்கள் வழங்கிய தீர்ப்புகளில் ஒப்புக்கொள்ளப் பட்டிருக்கிறது. எழுபது ஆண்டுகளுக்குமுன் பிராட்லாவுக்கும், கோசட்டுக்கும் இடையே தோன்றிய வழக்கில் (Brodlaugh v. Gossett), நீதிபதி திரு. ஸ்டீபன் பொதுமக்கள் மன்றத்தினுள் நடைபெறும் செயல் விதியைப் பற்றிய விஷயங்களில் நீதி மன்றங்களுக்கு எவ்வளவில் கட்டுப்படுத்தும் அதிகாரம் உண்டு என்பதை ஆய்வுசெய்துத் தனது சொந்த செயல் விதிகளை ஒழுங்கு படுத்திக்கொள்ளுவதற்குப் பொதுமக்கள் மன்றத்துக்கு இருக்கும் உரிமையே, அந்த உரிமைக்கு நீதிமன்ற அதிகாரத்தின் தன்மையை அளிக்கிறது என்று ஒப்புக்கொண்டார். இரண்டில் எந்தச் சட்ட மன்றத்தி னுள்ளும் கையாளப்படும் செயல் விதிகள் அந்த மன்றத் திலேயே ஆய்வு செய்யப்படவும், அதுபற்றித் தீர்ப்பு வழங்கப் படவும் கூடும், மற்றெந்த இடத்திலும் அவ்வாறு செய்யப்பட மாட்டாது, என்ற உண்மையை இன்று எந்த நீதி மன்றமும் மறுத்துரைக்காது. இந்த நிலைமையினுல், நீதி மன்றங்கள் இப் போது ஸ்டாக்டேல்—ஹான்சர்ட் (Stockdale v. Hansard, 1839) வழக்கில் அரசியின் நீதி மன்றம் கொண்டிருந்த நிலைமையை விட்டு, விலகிப் பின்னேக்கிச் சென்றுவிட்டன என்று கூறுவ தாகாது; மேற்படி வழக்கில், ஒரு பாராளுமன்றச் சட்டத்தின் மூலமாக, நாட்டின் எச்சட்டத்தையும் மாற்ற முடியுமே தவிர, சட்டமன்றத்தின் எந்த மன்றமும், தனது தீர்மானத்தின் மூலமே மாற்ற முடியாது என்ற முடிபு அரசியின் நீதி மன்றத்தால் அளிக்கப்பட்டது.

பாராளுமன்றத்திற்கும், உயர் நீதி மன்றத்துக்குமுள்ள உறவைப்பற்றிய கேள்வி ஒன்று 1954ஆம் ஆண்டி னிறுதியில் ஒரு முக்கியமான தீர்ப்பின் பொருளாகக் காணப்பட்டது;

இவ் வாண்டில் ஹார்பர் - உள்நாட்டுச் செயலாளர் வழக்கில் (Harper v. Home Secretary, 1955) மேல்முறையீட்டு நீதி மன்றம் (Court of appeal) அரசருடைய அமைச்சரை, அவர் ஆலோசனை மன்றத்தின் ஆணை வரைவு ஒன்றை (Draft order in Council) பிரிவி கௌன்சிலுக்கு வழங்காதபடித் தடுப்பதற்கு மறுத்துவிட்டது. இந்த ஆணையானது பாராளுமன்றத்தின் இரு சபைகளிலும் தீர்மானங்களினால் ஒப்புக்கொள்ளப்பட்டது. இதற்கு ஆலோசனை மன்றத்தில் அரசியின் ஒப்புதல் கிடைக்கப் பெறும்போது, இதற்கு 1949ஆம் ஆண்டின் பொதுமக்கள் மன்றத்தின் (இடங்களை மீண்டும் பிரித்தல்) சட்டத்தில் கூறப்பட்டுள்ளபடி (House of Commons Redistribution of seats Act, 1949) சட்டத்துக்குரிய ஆற்றலும் கிடைக்கும். மாஞ்செஸ்டர் வட்டாரத்தில் உள்ள தேர்தல் தொகுதிகளை மாற்றியமைத்தல் வேண்டுமென்று கூறிய இங்கிலாந்தின் எல்லைக் குழுவின் (Boundary Commission for England) அறிக்கையை செல்லுபடியாகாதது, உரிமை வரம்பை மீறியது (ultravires) எனத் தீர்ப்பு வழங்கும்படியாக, மாஞ்செஸ்டர் நகர மேயர் பிரபு, அந் நகரில்தான் ஒரு சாதாரண வாக்காளர் என்ற முறையில் நீதிமன்றத்தில் வழக்குத் தொடுத்தார். மேலும் அவர், 'இவ் வழக்கில் காணப்படுவதுபோல் மேற்படிக் குழுவின் அறிக்கையை சட்ட மன்றத்தின் ஒவ்வொரு மன்றமும் தனது தீர்மானத்தின் மூலம் ஒப்புக்கொண்டிருந்தபோதிலும் அறிக்கையின் பரிந்துரைகளை (recommendations) உள்ளாக்கிய ஆணையின் வரைவை உள்நாட்டுச் செயலாளர் பிரிவி கௌன்சிலுக்கு அனுப்புதல் வேண்டுமெனச் சட்டத்தால் விதிக்கப்படவில்லை' எனவும் கூறினார். இதற்கு எதிராக மேல்முறையீட்டு நீதிமன்றமானது, மேற்படி குழு அறிக்கையானது விதிகளுக்கு முரணானது அன்று என்று கூறிற்று; மேலும், ஆவண, அல்லது பத்திர அலுவலகத்தின் உயர் அலுவலர் (master of the rolls) நீதிமன்றத்தின் கருத்தின் படி, எந்த ஒரு விஷயமும் குழுவின் சமயோசித அதிகாரத்தில் அடங்கியதா, இல்லையா என்பதைத் தீர்மானிப்பது, பாராளு மன்றம் மட்டுமே தவிர, எந்தச் சட்ட நீதிமன்றமும் அன்று' என்று கூறினர். 'அறிக்கையின்மீது இத்தகைய தீர்ப்பு எதுவும் வழங்குவதற்கு நீதிமன்றங்களுக்கு அதிகாரம் அல்லது தகுதி இருக்குமானால், இத் தகைய போக்கு எதில் போய் முடியும் எனவும், அப்பொழுது பாராளுமன்றத்தின் அலுவல் என்னவாகி விடுமெனவும், என்னால் கூறமுடியவில்லை'.

மேற்படி வழக்கை நீதிமன்றத்துக்குக் கொண்டுவந்த விண்ணப்பத்தை, அரசாங்க வழக்கறிஞர் (Attorney-general) எதிர்த்துக் கூறுகையில், ஓர் ஆணையின் வரைவு (draft order) பாராளு மன்றத்தின் இரு சபைகளினுடைய தீர்மானத்தினால் ஒப்புக்கொள்ளப்பட்டுவிட்டால் அப்பொழுதே அது ஒரு மசோதாவை இரு சபைகளும் சாதாரணமான மூன்று வாசிப்பு நிலைகளின் மூலமாக (ordinary stages of three readings) நிறைவேற்றியதற்குச் சமமாக ஆகிறது,' என்று கூறினர். எனினும், இங்கு எடுத்துக்கொள்ளப்பட்ட கருத்தைத் தீர்மானிப்பதற்காக, மேற்கூறிய விவாதத்தை ஒப்புக்கொள்ள வேண்டிய தேவை இல்லை. எனினும், 'ஒவ்வொரு சட்டமன்றத்திலும் மூன்றுவது வாசிப்பு முறையின் மூலமாக நிறைவேற்றப்பட்ட ஒரு மசோதாவை, அரசருடைய ஒப்புதலைப் பெறும் பொருட்டு, அவருக்கு ஒரு அமைச்சர் எடுத்துச்சொல்லுவதைத் தடுப்பதற்குத் தடைஆணை (injunction) வழங்குவதற்கு எந்த அதிகாரியும் கிடையாது' என்ற மேற்படி வழக்தறிஞரின் விவாதத்தை மேல்முறையீட்டு நீதிமன்றம் குறிப்பாகவும், தெளிவாகவும் ஒப்புக் கொண்டது. குறிப்பிட்ட இக் காரியத்தில் ஒரு அமைச்சரை வலுக்கட்டாயம் செய்வதற்கு ஒரு செயல் முறையும் இல்லை என்பதுமட்டுமே இங்கு காணவேண்டிய உண்மை அன்று; இறைமை அதிகாரியான பாராளு மன்றத்தால் தனக்குத்தானே தீர்மானித்துக்கொண்ட பல விஷயங்களுள் மேற்கூறியதும் ஒன்று என்பதே இங்கு காண வேண்டியதாகும். எனவே, பாராளுமன்றத்தில் அரசி ஆளுகிற துறையில் உயர்தர அதிகாரம் அல்லது இறைமை என்பது இருக்கிறது.

பில்ஸன் கழகத்துக்கும், உல்வர்ஹாம்ப்டன் கழகத்துக்கும் இடையே தோன்றிய வழக்கில் (Bilson Corporation v. Wolverhampton Corporation) உயர்தர நீதிமன்றமானது, பாராளு மன்றத்தில், மேற்கூறிய கழகங்களுள் ஒன்றினால் கொண்டு வரப்பட்டதும், ஒருசில இடங்களைப் பாதிக்கக்கூடியதுமான மசோதாவுக்கு ஏற்பட்ட எதிர்ப்பை ஒடுக்குவதற்குத் தனது செயல்முறை (process) கையாளப்படுவதற்கு இணங்க மறுத்து விட்டது. இத்தகைய எதிர்ப்புக் காட்டப்படல் தடுக்க ஏற்ற ஓர் உடன்பாடு இதற்கு முந்தியதொரு லோக்கல் சட்டத்தில் (local act) சேர்த்துக்கொள்ளப்பட்டது; அந்தத் தனிச் சட்டமானது, அதனுடைய பிரிவுகளினால் கட்டுப்பட வேண்டிய கட்சியினர் (parties) எதிர்காலத்திய பாராளுமன்ற நடவடிக்கைகளில் ஒரு குறிப்பிட்ட போக்கைக் கையாளுதல்

கூடாது என்று திட்டம் செய்திருந்தது. 1893ஆம் ஆண்டின் ஒரு தனிச் சட்டத்தின் மூலமாக, எந்தப் பிற்காலத்திய மசோதாவையும் எதிர்க்கலாகாதென விதிக்கப்பட்டு, நடைமுறையிலிருந்துவரும் சட்டத்தின் மூலமாக உள்ள ஒரு கடமையை, நீதிமன்றமானது தனது தடையாணையின் மூலமாக (injunction) நிறைவேற்ற மறுத்தது; மேற்படி எதிர்ப்புக்கு உள்ளான மசோதா சட்டமாக நிறைவேற்றப் பட்டால், அதனை எதிர்க்கும் கழகத்தின் நலனுக்கு ஊறு விளைவிக்கும் வகையில் அந்த மசோதாவைக் கொண்டுவரும் கழகத்தின் உரிமைகள் மாறிவிடும். இவ்வாறு (தனித் தடையாணையை) நீதிமன்றம் வழங்குவதற்கு மறுத்த காரணம் என்னவெனில், பாராளுமன்றத்தின் அலுவல், நீதிமன்றத்தின் அலுவலினின்றும் முற்றிலும் வேறுபட்டது என்பதே. தடை ஆணையை வழங்குவதனால், தனி நலன் பற்றிய மசோதாவுக்கு உரிய நிரந்தர விதிகளிலுள்ள செயல்முறை சாதாரணமாகப் பின்பற்றப்படாமல் போயிருக்கும்; நிரந்தர விதிகள் எந்த மசோதாவுக்கும் தோன்றும் எதிர்ப்பாளர்களின் கருத்து (opponent) அவர்களால் கூறப்படுவதற்கு வழிசெய்கிறது. உண்மையில் நீதிமன்றமானது, சட்டத்தில் இருந்துவரும் உரிமையைக்கூடத்தான் நடைமுறையில் செயல்படுத்தாது எனவும், ஏனெனில், அவ்வாறு செய்யும் உரிமை நீதிமன்றங்களின் அதிகார எல்லையில் இல்லாமல், பாராளுமன்றத்தின் அதிகார எல்லையில் அடங்குமெனவும் கூறிற்று. எனவே, பாராளுமன்றத்தின் நடவடிக்கைகளோடு, நேராகத் தொடர்புள்ள ஓர் ஆணையை நீதிமன்றமானது விடுக்குமானால் அது பாராளுமன்றத்தின் அதிகார எல்லையை மீறிய செயல் எனவும் (infringment), பாராளுமன்றத்தின் அதிகாரம், அதனுடைய சொந்த செயல் முறையைப் (procedure) பொறுத்த வரையில் வேறெதனோடும் சேர்ந்து இராமல் தனித்தே இருக்கிறது எனவும், அவ்வாறு இருப்பதனால், சட்டப்படியாக இருந்துவரும் ஒரு கடமையை ஓர் ஆணையின் மூலம் விதிக்க வேண்டுமா, வேண்டாமா என்ற கேள்வியைத் தீர்மானிக்கும் பொறுப்பைப் பாராளுமன்றத்துக்கே, நீதிமன்றம் விட்டுவிடும் எனவும் நாம் விவாதம் செய்யலாம்.

1911ஆம் ஆண்டில் பாராளுமன்றச் சட்டமானது (Parliament Act, 1911), அச் சட்டத்தில் கூறப்பட்டுள்ளபடி பண மசோதாக்கள் (Money Bills)சட்டமாக நிறைவேற்றப்படுவதற்குக் கையாளப்படவேண்டிய செயல்முறைக்கும், மற்றப் பொது மசோதாக்கள் (Public Bills), பிரபுக்கள் அல்லது பெரு

மக்கள் மன்றத்தில் (House of Lords) நிறைவேற்றப்படும்போது கையாளப்படவேண்டிய செயல்முறைக்கும் ஒரு வேறுபாடு உண்டு என்பதைக் காட்டிற்று. அது அவ்வாறு காட்டி, ஒரு மசோதாவைப் பண மசோதா என அதற்கு உறுதிவழங்கும் பொறுப்பைப் பொதுமக்கள் மன்றத் தலைவருக்கு (speaker) வழங்கி, மேலும் அத் தலைவரால் வழங்கப்பட்ட உறுதி முடிவான உறுதியே எனவும், அதனை எந்த நீதிமன்றத்திலும் வழக்கிட முடியாது எனவும் கூறிற்று. பாராளுமன்றம் தனக்கு மட்டுமே வகுத்துள்ள தனியான ஒரு அதிகார எல்லையிலிருந்து, நீதிமன்றங்களின் செயல்முறை விலக்கப்பட்டுள்ளது என்பதற்கு இதுவும் இன்னொரு எடுத்துக்காட்டு ஆகும். இதனை நாம் பின்வருமாறு விளக்கலாம்: சபைத் தலைவரால் பண மசோதா என முறையாக உறுதி வழங்கப்பட்டுக் கொடுக்கப் பட்ட ஆணையைத் தள்ளிவிடும்படி, எந்த ஒரு நீதிமன்றமானது கேட்டுக்கொள்ளப்பட்டால், அவ்வாறு செய்ய நீதிமன்றம் மறுக்குமானால், அது பாராளுமன்றத்தின் வெளிப்படையான கருத்தைச் செயல்படுத்துவதே ஆகும்; மேலும், இத்தகைய மறுப்பு, முன்பு கூறப்பட்ட எடுத்துக்காட்டுகளில் காணப் படுவதுபோல, பாராளுமன்றத்தின் செயல் துறையில் நீதி வழங்குவதற்குத் தனக்கு (நீதிமன்றத்துக்கு) இயல்பிலேயே ஆற்றலில்லை என்ற தன்மையை வெளிப்படுத்தியதாகாது.

'நடைமுறையிலிருந்துவரும் பாராளுமன்றத்தினுடைய சட்டமியற்றும் அதிகாரம், அதற்கு முன்பிருந்த பாராளு மன்றங்களின் சட்டங்களால் வரம்பு படுத்த இயலாது' என்பதைப்பற்றி டைசிக்கு எள்ளளவும் ஐயமிருக்கவில்லை; அவர் கோக், பிளாக்ஸ்டன் முதலியோரை மேற்கோளாகக் காட்டுகிறார்; இந்தத் தனது கருத்துரைக்கு ஆதரவாக அவர் ஏதேனும் ஒரு நீதிமன்றத்தின் கருத்தை மேற்கோளாகக் காட்டவில்லை. அண்மையில் ஒருசில ஆண்டுகளுக்குள்ளாக மூன்று நீதிமன்றத் தீர்ப்புகள் மேற்கூறிய கருத்துக்கு நேரான ஆதரவாகக் காணக்கிடக்கின்றன; இதைப்போல நேரான ஆதரவு எதுவும் இருபதாம் நூற்றாண்டிற்கு முன்னர் காணப் படுவது எளிதன்று. இவற்றுள் இரண்டு வழக்குகள் (cases), கட்டாயமாக ஒரு நிலத்தை அரசாங்கம் எடுத்துக் கொள்ளும்பொழுது அதற்கு அளிக்கப்படும் நஷ்டஈடு வரி விதிப்புக்கு உரியது என்று கூறும் இரண்டு சட்டங்களின் பிரிவுகளைப்பற்றிய விளக்கத்தைக் கூறுகின்றன. இவ் விரண்டு சட்டங்களுள் முந்தியது நிரந்தரமான ஒரு சட்டத்தை உண்டாக்க முயன்றது; அவ்வாறு செய்யும்பொழுது நிலத்தை

எடுத்துக் கொள்ளுவதற்கு அரசாங்கத்துக்கு அதிகாரம் அளிக்கும் எந்தச் சட்டத்தின் பிரிவுகளும் இந்தச் சட்டத்தோடு முரண்படுமாஞல், அந்தப் பிரிவுகள் செல்லுபடியாகாது என்று பாராளுமன்றம் சட்டமியற்றியது. இதற்கு 6 ஆண்டுகளுக்குள்ளாக பாராளுமன்றமானது ஒன்றுக்கொன்று மாறுபட்ட பிரிவுகளைச் சட்டமாக ஆக்கிற்று; அப்பொழுது முந்திய சட்டத்தின் பிரிவுகள் நிலைபெற வேண்டுமா, வேண்டாமா என்று தீர்ப்புக் கூறும்படியாக நீதிமன்றம் அழைக்கப்பட்டது. இந்த வழக்குகள் வாக்ஸால் எஸ்டேட்டு லிமிடெட்டாருக்கும், லிவர்ப்பூல் கார்ப்பொரேஷனுக்கும் இடையே 1932-லும், எல்லன்ஸ் ஸ்டிரீட் எஸ்டேட் லிமிடெட்டாருக்கும், சுகாதார அமைச்சருக்கு மிடையேயும் 1934-லிலும் தோன்றின. பிற் கூறப்பட்ட வழக்கில் தீர்ப்புக் கூறும்போது நீதிபதி F. G. மோஹாம் (Maugham) கூறியதாவது, ‘நமது அரசியலமைப்புச் சட்டத்தின்படி, சட்ட மன்றமானது தனக்குப் பிற்காலத்திய சட்ட வடிவம் எதற்கும் கட்டுபட்டிருக்க முடியாது; மேலும் ஒரே விஷயத்தைப்பற்றிப் பிற்காலத்தில் செய்யப்படும் ஒரு சட்டம் அதைப்பற்றிய முற்காலத்திய சட்டத்தைத் தள்ளுபடி செய்ய முடியாது எனவும் பாராளுமன்றத்தால் சட்டம் செய்ய முடியாது. பிற்காலத்திய ஒரு சட்டத்தில் பாராளுமன்றமானது, முந்திய சட்டம் ஒரு குறிப்பிட்ட அளவுக்குத் தள்ளுபடி செய்யப்பட்டதாகக் கூறிவிடுமாஞல் இத்தகைய ஒருநோக்கத்தை நிறைவேற்றியே ஆகவேண்டும். ஏனென்ருல், இந்த நோக்கம் சட்டமன்றத்தின் விழுப்பமாகும்.’

இவ்வாறு இந்த வழக்கு முந்திய ஒரு சட்டத்தின் பிரிவுகளைப் பிந்திய ஒரு சட்டமானது மறைமுகமாகத் தள்ளுபடி செய்வதற்கு, ஒரு நேரான ஆதரவு அல்லது மேற்கோளாக இருக்கிறது. இந்தத் தீர்ப்பிலிருந்து கொடுக்கப்பட்டுள்ள பகுதியின் தொடக்க வாக்கியமே ஒரு குறிப்பிட்ட ஈடுபாட்டை உண்டாக்குகின்றது; ஏனென்ருல் அது, ‘எந்தப் பாராளுமன்றமும் தனக்குப் பிந்திச் செய்யப்படுகிற சட்டத்தின் பொருளை மட்டும் அல்லாமல் அமைப்பையும்கூட மாற்ற முடியாதபடி தனக்குப் பிந்திய எந்தப் பாராளுமன்றத்தையும் கட்டுப்படுத்த முடியாது’ என்ற உண்மைக்கு மேல் முறையீட்டு நீதிமன்றத்தின் நேரடியான ஆதரவு இருப்பதை மேற்கூறிய வாக்கியம் காட்டுகின்றது.

மூன்ருவது வழக்கு—பிரிட்டிஷ் நிலக்கரி கார்ப்பொரேஷனுக்கும், அரசருக்குமிடையே (1935-ல்) தோன்றியது—பல கடினமான கேள்விகளை எழுப்புகின்றது; எனினும் பிற்பட்ட பாராளுமன்றம் எதுவும் தனக்கு முந்தியவற்றின் சட்டங்களைத் தள்ளுபடி செய்யக் கூடும் என்ற உண்மைக்கு ஆதாரமாக இவ் வழக்கு இருப்பதால்தான் இது இங்கு மேற்கோளாகக் கூறப்படுகின்றது. (இந்த வழக்கில்) மேல்முறையீடு செய்து கொண்டவர்கள் சுங்கம் கட்டாத குற்றத்திற்காக குவெபெக் மாகாண நீதிமன்றத்தில் தண்டப்பணம் விதிக்கப்பட்டார்கள். மேல் முறையீட்டில் குற்றச்சாட்டு உறுதி செய்யப்பட்டது. குவெபெக் மேல்முறையீட்டு நீதிமன்றத்திலிருந்து பிரிவி கௌன்சிலின் நீதிக்குழுவிற்கு (Judicial Committee) மேல் முறையீடு செய்வதற்காக அனுமதி அல்லது இசைவு கேட்டு விடுக்கப்பட்ட விண்ணப்பமும் மறுக்கப்பட்டது. 1931ஆம் ஆண்டின் வெஸ்ட்மின்ஸ்டர் சட்டத்துக்கு முந்திய காலத்தில் கிரிமினல் அல்லது குற்ற வழக்குகளில் நீதிக்குழுவுக்குக் கீழ் நீதிமன்றத்தின் ஒப்புதல் பெற்று மேல் முறையீடு செய்துகொள்ள முடியும். எந்தக் குற்ற வழக்கிலும் கனடாவில் உள்ள எந்த நீதி மன்றத்தின் எந்தத் தீர்ப்புக்கும் அல்லது ஆணைக்கும் எதிராக, மாட்சிமை தங்கிய அரசருக்கும் விடுக்கப்படும் விண்ணப்பங்களை, அல்லது மேல்முறையீடுகளை விசாரிப்பதற்கு உரிய யுனைட்டெட் கிங்டத்திலுள்ள எந்த மேல்முறையீட்டு நீதிமன்றத்துக்கு அல்லது நீதி அதிகாரிக்கு மேல்முறையீடு எதுவும்—அரசருக்கு விசேட அதிகாரம் இருந்தபோதிலும்—கொண்டு செல்லப்படக் கூடாது' என்பதாகக் கூறி 1933ஆம் ஆண்டில் ஒரு கனடியச் சட்டத்தை டொமினியன் பாராளுமன்றம் செய்தது. இந்தச் சட்டம் செல்லுபடியாகுமென்ருல், ஒரு மேல் முறையீட்டு விண்ணப்பமும் செல்லாதவாறு தடுக்கப்படும் என்பது உறுதி. எனினும் விவாத அளவிலே, ஒரு கேள்வி எழுந்தது; 'யுனைட்டெட் கிங்டத்தின் பாராளுமன்றம் கனடாவுக்குச் செல்லுபடியாகக் கூடியதென்று தான் கருதுகின்ற எந்தச் சட்டத்தையும் செய்வதற்குப் பெற்றிருக்கும் அதிகாரம் மாறுதல் ஏதுமில்லாமல் நீக்கப்படாமலிருந்தது' என்பது ஒன்று; 'எந்த ஒரு குறிப்பிட்ட டொமினியனுவது யுனைட்டெட் கிங்டத்தின் பாராளுமன்றத்தைத் தனக்கு ஒரு சட்டத்தைச் செய்யுமாறு கேட்டுக்கொண்டது, அல்லது அதற்கு இணங்கிற்று என்பதாக வெளிப்படையாகக் கூறப்பட்டாலல்லாமல், வெஸ்ட் மின்ஸ்ட்டர் சட்டம்நடைமுறைக்கு வந்ததற்குப் பின்னர், யுனைட்டெட் கிங்டத்தின் பாராளுமன்றத்தால் செய்யப்பட்ட எந்தச் சட்டமும், ஒரு

டொமினியன் சட்டத்தின் ஒரு பாகமாக அந்த டொமினியனுக்குப் பரவி நீடிக்கமாட்டாது' எனக் கூறுகிறது. வெஸ்ட்மின்ஸ்ட்டர் சட்டத்தின் 4ஆம் பிரிவு 'சட்டம் என்ற அளவிலே நுட்பமாகப் பார்த்தால், மேற்படி நான்காம் பிரிவும், கொள்கையளவிலே, பாராளுமன்றத்தால் நீக்கப்படுதல் கூடும்' என்பதும் மேற்படி கேள்வி ஆகும். தனியாக ஓர் சட்டம் என்ற அளவில் மேற்படி (4ஆம்) பிரிவை நீக்குவதோ, தள்ளிவிடுவதோ பாராளுமன்றத்தின் அதிகாரங்களுக்குள் அடங்கியதே என்ற கருத்தை நீதிக்குழு (Judicial Committee) ஏற்றுக் கொண்டது; ஆனால் இது (நடைமுறைக்கு வராத) கொள்கை அளவுக்கு மட்டுமே உள்ளது எனவும், அது நடைமுறையோடு தொடர்பு இல்லாதது எனவும் அது கூறிற்று. எனவே, ஈண்டு வெஸ்ட்மின்ஸ்டர் சட்டத்தின் நான்காம் பிரிவு, மேற்கூறிய வகையாக இனிமேல் யுனைட்டெட் கிங்டத்தின் பாராளுமன்றம் சட்டம் இயற்றுவதற்கு உள்ள அதிகாரத்திற்குச் சட்டப்படியான ஒரு தடையாக அமைந்துள்ளது என நாம் ஒப்புக் கொள்ளாவிட்டாலும், பாராளுமன்றத்தின் இறைமை அதிகாரம் அரசியல் நோக்கங்களால் தடைப்படுத்தப்பட்டிருத்தற்கு ஓர் எடுத்துக்காட்டு இருக்கிறது. பிற்கூறப்பட்ட இந்தக் கருத்து இப்பொழுது ஆஸ்திரேலியாவின் முக்கிய நீதிபதி (1954), தென்னாப்பிரிக்க உயர்நீதி மன்றத்தின் மேல் முறையீட்டுப் பிரிவு (1937) முதலியோர் உள்ளிட்ட பல காமன்வெல்த் நாடுகளின் ஆசிரியர்களாலும் வெளியிடப்பட்டுள்ளது.

'அதிகாரத்துக்கு நடைமுறையில் வரம்புகள் இருக்கின்றன என்பது, பாராளுமன்றத்தின் இறைமை அதிகாரத்தோடு முரண்பாடானது அன்று,' என ஆசிரியர் கொள்ளும் கருத்துக்கு, மேற்கூறிய நீதிபதிகளின் கருத்து, நீதி மன்றங்களின் ஒப்புதலை அளித்துள்ளது என்று கூறத் தோன்று கிறது. இறைமை அதிகாரியின் உண்மையான அதிகாரத்துக்கு வெளிவரம்பாக (external limitation) அமைந்துள்ளது எது வென்றால், சில சட்டங்கள் மிகவும் வன்மையுள்ள எதேச்சாதிகார முடியாட்சிகளால் செய்யப்பட்டிருப்பினும், அவற்றைக் குடிகள் ஏற்றுக்கொள்ள மறுக்கவோ, எதிர்க்கவோ கூடுமென்ற நிச்சயம் இருப்பதுதான். ஏதாவதொரு டொமினியன் கேட்டுக்கொண்டாலல்லாமல், அந்த டொமினியனுக்கு நீடிக்கக்கூடிய சட்டத்தை யுனைட்டெட் கிங்டத்தின் பாராளுமன்றம் நிறைவேற்றுவதில்லை என்பது, வெஸ்ட்மின்ஸ்ட்டர் சட்டம் நிறைவேற்றப்படுவதற்கு நெடுநாட்களுக்கு முன்னரே

ஒரு நடைமுறையிலுள்ள வழக்கமாக (convention) இருந்து வருகிறது. இவ் வழக்கம், கனடா டொமினியனைப் பொறுத்த மட்டில் செயல் முறையில் இருந்துவந்தது; அந் நாட்டில் 1867ஆம் ஆண்டில் கூட்டரசு அரசியலமைப்பு நடைமுறைக்கு வந்த காலத்திலிருந்து, அந்த அரசியலமைப்பைத் திருத்துவதற்குரிய அதிகாரம் வெஸ்ட்மின்ஸ்ட்டரிலுள்ள பாராளுமன்றத்திடம் இருந்தது. இந்த வழக்கம் இருந்ததனாலேதான், 1867ஆம் ஆண்டின் பிரிட்டிஷ் நார்த் அமெரிக்கச் சட்டத்தைத் திருத்துவதற்குரிய சட்டங்கள், யுனைட்டெட் கிங்டத்து அரசாங்கத்திலுள்ள செயலாளரால், கனடா டொமினியனின் அரசாங்கத்தால் கொண்டுவரப்பட்ட வடிவத்திலேயே (யுனைட்டெட் கிங்டத்து) பாரா்ளுமன்றத்தில் கொண்டு வரப்பட்டபோது, அவை எந்தவிதச் சர்ச்சைக்கும் இடமில்லாமல், யாதொரு குறைபாடும் கூறப்படாமல், அவற்றின்மீது எந்தவித விவாதமும் நடைபெறுமல், அவை எவ்வித மாறுதலும் செய்யப்படாமல், முறையாக நிறைவேற்றப்பட்டன. அப்பொழுது வெஸ்ட்மின்ஸ்ட்டர் சட்டம் செய்ததெல்லாம், நெடு நாட்களாக இருந்துவந்த ஒரு அரசியல் வழக்கத்துக்கு ஒரு சட்டப்படியான ஆற்றலைக் கொடுத்ததேயாம். பாராளுமன்ற இறைமையின் ஆதாரம் அல்லது தன்மை என்பதன் அமைப்பைப்பற்றி வழக்கறிஞர்கள் எத்தகைய கருத்தைக் கொண்டிருந்தபோதிலும், அவ் வதிகாரத்துக்கு முடிவான ஒப்புதல் (ultimate sanction) எங்கு காணப்படுகிறதென்றல், அது அவ் வதிகாரத்துக்குக் கட்டுப்படவேண்டியவர்கள் அதைக் கையாளப்படுவதை எதிர்க்கக் கூடும் என்ற நிலையில்தான். ஏதாவதொரு காரணத்தை முன்னிட்டு, கனடா டொமினியனின் வேண்டுகோளின்படி யல்லாமல், வெஸ்ட்மின்ஸ்ட்டர் சட்டத்தின் 4ஆம் பிரிவுக்கு மாறுனதொரு முறையிலே, வெஸ்ட்மின்ஸ்ட்டரிலுள்ள பாராளுமன்றம் கனடா டொமினியனுக்காக ஒரு சட்டத்தைச் செய்ய முயலுமேயானல், எதிர்பார்க்கக் கூடிய எந்த நிச்சயமான விளைவையும்போல, அவ்வாறு செய்யப்பட்ட சட்டத்தை ஏற்றுக்கொள்ள கனடாவிலுள்ள நீதிமன்றங்கள் மறுக்கும். ஆயினும், கனடாவுக்காகச் சட்டம் இயற்றக்கூடிய நோக்கத்தைக் கொண்ட யுனைட்டெட் கிங்டத்துப் பாராளுமன்றத்தின் ஒரு சட்டத்தை விளக்கும்படியாக இந்த நாட்டிலுள்ள நீதிமன்றங்கள் அழைக்கப்பட்டால், அவை அத்தகைய சட்டத்தை ஒப்புக்கொள்ள மறுக்கும் என்று அவ்வளவு உறுதியாகச் சொல்ல முடியாது. இக் கேள்வி ஒரு கற்பனையான கேள்விதான் (hypothetical).

இந்தக் கேள்வி கற்பனையான ஒரு கேள்விதான்; கனடாவின் சட்டம் இயற்றப்பட்டாலும், அதனை விளக்குவதற்காக இந்த நாட்டிலுள்ள நீதிமன்றங்கள் கேட்கப்படும் என்பது நடைபெறாது. இப்பொழுது கனடாவிலிருந்து பிரிவி கௌன்சிலின் நீதிக் குழுவுக்கு மேல்முறையீடுகளாக வழக்குகள் எடுத்துச் செல்லப்படுவது தடைப்படுத்தப்பட்டிருக்கிறபடியால், மேற்குறிப்பிட்ட சட்டம் செல்லுபடியாகுமா என்ற கேள்வியைத் தீர்மானிப்பது கனடாவின் உயர் நீதிமன்றத்துக்கே வந்து சேரும்; கனடியச் சட்டத்தைத் தள்ளுபடி செய்யக் கூடிய யுனைட்டெட் கிங்டத்துப் பாராளுமன்றச் சட்டத்தை நீக்கி, கனடிய உயர் நீதி மன்றம் அளிக்கும் தீர்ப்பே முடிவானதாக இருக்கும். ஆயினும், யுனைட்டெட் கிங்டத்துப் பாராளுமன்றத்தின் இறைமையை மறுக்கக் கூடிய தீர்ப்பு எதனையும் யுனைட்டெட் கிங்டத்திலுள்ள எந்த நீதிமன்றமும் அளிக்காது.

பாராளுமன்றத்தின் சர்வவல்லமைக்கு (omnipotence) அரசியல் சார்பான வரம்புகளே (restriction) உண்டு என்ற டைசியின் கொள்கையை(thesis) வழக்கறிஞர்களுக்கு உண்மையென உறுதிப் படுத்திக் காட்டுவது எதுவென்றால், நடைமுறையில் இருக்காத, கேலிக்கு உரிய நிலைமைகளில் உயர்ந்த எடுத்துக்காட்டுக்களைக் காணுதற்குச் சிலர் எடுக்கும் முயற்சியே ஆகும்.[1] அண்மையில் நடைபெற்ற சர்ச்சைகளெல்லாம் (controversies), இறைமையைப்பற்றிய டைசியினுடைய விளக்கத்தை இக் காலத்திய, எழுதப்பட்டுள்ள அரசியலமைப்புச் சட்டங்களை உடைய மற்ற நாடுகளுக்குப் பொருந்துமாறு கையாள முயலுதல் வலுவான ஐயப்பாடுகளுக்கும், வாத, எதிர்வாதங்களுக்கும் இடம் தரும் என்பதைக் காட்டுகின்றன. 'பாராளுமன்ற இறைமை என்ற மரபுவழிக் கருத்தில் பயிற்சி பெற்ற நீதிபதிகளைக் கொண்டு, அரசியலமைப்புச் சட்டங்களுக்கு விளக்கம் கொடுக்கச் செய்தால், அது பொருத்தமான விளைவாக இருக்காது,' என்று கூறப்படும் குற்றச்சாட்டில் உண்மை இருக்கிறது. ஆயினும், இவ்வாறான குற்றச்சாட்டும் ஒரு வேண்டுகோளே ஆகும்; அதாவது, "அரசியலமைப்புச் சட்டங்களை விளக்கும்படியாக நீதிபதிகள் கோரப்படும்போது, அவர்கள் சாதாரணத் தனியான சட்டங்களல்லாதவற்றுக்குப் பயன் அல்லது விளைவு இருக்கத்தக்க

[1] 'Adventures in Metaphysics' என இதனை சர் ஐவர் ஜென்னிங்ஸ் ஒரு புதிய சொற்றொடரில் அமைத்துக் குறிப்பிடுகிறார்.

வகையில், தாங்கள் மரபுவகையாகக் கையாளும் போக்கைச் சிறிது விரிவாக ஆக்குதல் வேண்டும்', என்பதே ஆகும்.

பொதுவான சர்வதேசச் சட்டத்தின் விதிகளை நிர்வாகத்தினர் ஏற்றுக்கொள்ளுகின்றனராகையால், அவற்றுக்குப் பாராளுமன்றம் சாதாரணமாக ஒப்புதல் அளிக்கிறது; எனினும், இதனால், சர்வதேசச் சட்ட விதிகளினால் பாராளுமன்ற இறைமை அதிகாரமானது வரம்பு படுத்தப்படவில்லை; சட்டமன்றமானது மேற்படி சர்வதேசச் சட்டவிதிகளை மீறியது என்பதாகக் கொண்டுவரப்படும் எந்த வழக்கையும் நீதிமன்றங்கள் ஏற்றுக் கொள்ளமாட்டா.[1] பாராளுமன்றத்தால் செய்யப்படும் எந்தச் சட்டமும், அது பொதுவாக யாவராலும் ஒப்புக்கொள்ளப்படும் ஒழுக்கக் கோட்பாடுகளையோ அல்லது சட்டக் கோட்பாடுகளையோ முரண்பாடு உடையது என்ற காரணத்தால் செல்லுபடியாகாது எனக் கொள்ளப்பட மாட்டாது. ஒரு நாட்டில் உள்ள சட்டமானது, பொதுவான சர்வதேசச் சட்டத்தோடு (Public International Law) ஒத்திருத்தல் வேண்டுமென்று அதன் அரசியலமைப்புச் சட்டத்தில் வகுக்கப்பட்டிருந்தாலல்லாமல், அந் நாட்டின் சட்டம் அவ்வாறு இருத்தல் வேண்டுமென்ற கட்டாயம் இல்லை;[2] எனவே, பொதுவான சர்வதேசச் சட்டத்தை மீறுவதற்குப் பாராளுமன்றத்துக்கு உள்ள தகுதி அல்லது ஆற்றல், பாராளுமன்றத்தின் இறைமை அதிகாரத்தினால் பெறப்படுவதாக நாம் கூற முடியாது. மேலும் பாராளுமன்றத்தின் இத்தகைய ஆற்றல் அதனுடைய முழு வல்லமைக்கும் ஓர் எடுத்துக்காட்டு ஆகும்.

பாராளுமன்றமானது, சாதாரணமாகச் சட்டம் செயல்படும் எல்லையைத் தனது நாட்டின் எல்லைக்குள் இருக்கும்படியாகவே வரையறுத்துக் கொள்ளுகின்றது; அதன் நில எல்லைக்குள், பிரிட்டிஷ் கப்பல்களும், அவை எவ்விடத்திலிருப்பினும், அடங்கும். இந்த நிலைமையே சர்வதேசச் சட்டத்துக்கு இயைபு உடையதாகும். ஆயினும், பாராளுமன்றம், தனது குடிமக்கள் வெளிநாடுகளில் இருக்கும்போது, அவர்களுடைய செயல்களைக் கட்டுப்படுத்தவல்ல சட்டங்களைச் சில சமயங்களில் செய்கிறது. இவ் வகையில் நில எல்லைக்குள் செல்லுமென்ற சட்டம்பற்றிய கருத்து (territorial conception of

[1] மார்ட்டென்சன்—பீட்டர்ஸ் வழக்கு, 1906.

[2] இவ்வகையில் ஐக்கிய அமெரிக்க நாட்டின் அரசியலமைப்புச் சட்டத்தின்படி முறையாக வேற்று நாட்டுடன் செய்யப்பட்ட உடன்படிக்கை அந் நாட்டுச் சட்டத்தின் ஒரு பாகமாக ஆகின்றது.

law), மற்ற நாடுகளிலுள்ள இதே கருத்தைவிட (இங்கிலாந்தில்) மிக ஆற்றல் வாய்ந்ததாக இருக்கின்றது. செயலளவிலே, மிகப் பெரிய கிரிமினல் குற்றங்கள், ஒரு பிரிட்டிஷ் குடியினுல் எந்த இடத்தில் செய்யப்பட்டிருப்பினும் அவற்றுள் ஒரு சிலவே யுனைட்டெட் கிங்டத்தின் நீதி மன்றங்களினுல் தண்டிக்கப் படுகின்றன. இங்கு எழும் கேள்வி, பாராளுமன்றத்தின் முழு வல்லமைபற்றியதாக இல்லாமல், சட்டத்தைச் செயல் படுத்துவதில் நடை முறையில் தோன்றும் இடர்ப்பாடு பற்றிய தாகும். எனவே, பாராளுமன்ற உயர்தர அதிகாரம் என்பது அதற்குக் குடிமக்கள் கீழ்ப்படிய மறுக்கும் தன்மையினுலோ, அதற்குக் காட்டும் எதிர்ப்பினுலோ மட்டுமே வரம்புப் படுத்தப் படாமல், அத்தகைய அதிகாரத்தைச் செயல்படுத்துவது நடைமுறையில் இயலாது என்ற நிலைமையினுலும் வரம்பு படுத்தப்பட்டிருக்கின்றது. வெளிநாட்டிலே ஆங்கில நீதிமன்றங்களின் அதிகார எல்லைக்கு வெளியே ஒரு குற்றம் செய்யப்படுமாயின், குற்றவாளி அதிகார எல்லைக்குள் வரும்போது, அவருக்கு உரிய சட்டம் நிறைவேற்றப்படுதலை எவரும் தடுக்க முடியாது.

பாராளுமன்ற இறைமை அதிகாரம் என்ற விதி ஒரு சட்டக் கருத்து என்ற அளவில் மட்டுமே கொள்ளப்பட்டு அதி நீதி மன்றங்களுக்குப் பாராளுமன்றங்களோடு உள்ள தொடர்பை மட்டுமே குறிப்பாகக் கொண்டால், சட்டப்படியான இறைமை அதிகாரம் என்பது (legal sovereignty) இறைமை அதிகாரம் ஆகாது எனவும், அது வழக்கறிஞர்களால் ஏற்றுக் கொள்ளப் பட்டுக் கையாளப்படுகின்ற ஒரு விதி எனவும் மறுத்துரைக்கப் படும்; ஏனெனில், வரம்புப் படுத்தப்படாத சட்டம் இயற்றும் அதிகாரம் பாராளுமன்றத்தில் இருத்தல் வேண்டு மென்பதற்கு உரிய அரசியல் நிலைமைகளோடு மேற்கூறிய இறைமைபற்றிய கருத்து பொருந்துகின்றது. இறைமை அதிகாரியை அரசி, பிரபுக்கள் சபை, பொது மக்கள் சபை ஆகியவற்றில் காண்பதில் ஆஸ்டினுக்கு ஏற்பட்ட இடர்ப் பாட்டை டைசியே ஒத்துக்கொண்டார். ஆயினும், "வாக்காளர்கள் நாளாவட்டத்தில் பாராளுமன்றத்தின்மீது தமது கருத்துகளை விதிக்கக் கூடியவர்களாக இருப்பதால், வாக்காளர்களின் பொறுப்பாளிகளாகவே (trustees) பொது மக்கள் மன்ற உறுப்பினர் இருக்கின்றனர்' என்று ஆஸ்டின் கூறிய விளக்கத்தை டைசி ஏற்றுக்கொள்ளவில்லை. மேற் கூறியவாருன பொறுப்பாண்மை எதுவும் (trusteeship) இருப்பதாக நீதிமன்றங்களால் ஒப்புக்கொள்ளப்படவில்லை;

மேலும் இப்பொறுப்பாண்மை என்பதைச் சட்டத்துக்குரிய ஒரு விஷயமாக நிறுவமுடியுமா என்பது கடினமான கேள்வி ஆகும்.

சட்டப்படியான விதிக்கு (legal rule) அரசியல் வகையாக அமைந்த வரம்புகள், டைசியால் ஒப்புக்கொள்ளப்படக்கூடிய அளவைவிடக் கூடுதலாகச் செல்லுகின்றன என்பதைப் பல நிகழ்ச்சிகள் காட்டுகின்றன. சட்டங்களுக்கு ஏற்படக்கூடிய எதிர்ப்புக்களுக்கு எடுத்துக்காட்டுகள் அவரால் கூறப்படுகின்றன; அவையெல்லாம், எதேச்சாதிகாரிகளின் செயல்களுக்குக் கீழ்ப்படியாமல் குடிகளின் எதிர்ப்புத் தோன்றக் கூடும், தோன்றுதல் உறுதி என்பதையும் இத்தகைய உறுதிப்பாடே இறைமை அதிகாரியின் உண்மையான அதிகாரத்துக்கு ஒருபுற அல்லது வெளிவரம்பாக (external limit) அமைந்துள்ளது எனவும் காட்டுகின்றன. எனினும், டைசியின் செயல் நிறைந்த வாழ்க்கையின் கடைசிக் காலத்தில், பலராலும் ஆராயப்பட்ட பெண்கள் வாக்குரிமைபற்றிய கேள்வியைப் பற்றியும், குறிப்பாக அயர்லாந்தின் அரசியலமைப்பு விஷயங்களைப் பற்றியும், பாராளுமன்றம் செய்யும் செயல்களுக்கு, அரசியல் வகையான எதிர்ப்பு தோன்றக் கூடுமென்று அவர் எதிர்பார்த்தார். இவ்வாறு அவர் எதிர்பார்த்தது, அவருடைய நிலைக்குப் பலவீனமாயிற்று. மேலும், அவர் எதிர்பார்த்ததைப் போன்ற எதிர்ப்புகள் எதுவும் இல்லாமலே, 1936ஆம் ஆண்டில் எட்டாம் எட்வர்ட் அரசர் முடிதுறந்தபொழுது அரியணைக்கு உள்ள வழி உரிமை முறையைப் பாராளுமன்றம் மாற்றி யமைத்ததைப் பிற்கால நிகழ்ச்சிகள் காட்டுகின்றன; மேலும், பாராளுமன்றமானது எதிர்ப்பு எதுவுமில்லாமலே, இரண்டு உலகப்போர்கள் நடைபெற்றபோது பல தடவைகளில் செய்ததைப்போல அது வாக்காளர்களைக் கலந்து கொள்ளாமலே, தனது ஆயுட் காலத்தைத் தானே நீடித்துக் கொண்டது என்றாலும், அரசியல் காரணங்களுக்காகப் பாராளுமன்றமானது பல விஷயங்களைப்பற்றிச் சட்டம் இயற்றுவதற்கு மறுக்குமென்பதிலும், அத்தகைய விஷயங்கள் இன்னின்னவை எனக் கூறுவதிலும் கடினம் இராது.

அரசியல் வகையான தேவையினால்தான் (political expediency), சட்டப்படியான விதிக்கு வரம்பு தோன்றுகிறதென்பதைத் தடையில்லாமல் ஒப்புக்கொள்ளலாம்; ஆனால், 'இறைமை அதிகாரம் எந்த இடத்திலிருக்கிறது?' என்ற அரசியல் சார்பான கருத்துடைய கேள்விக்கு விடை அளிக்கப்

படவில்லை; இக் கேள்விக்கு அரசாங்கத்தின் அதிகாரமும் அதனோடு பாராளுமன்றத்தைக் கட்டுப்படுத்தக்கூடிய அதிகாரமும், ஒரு பொதுத் தேர்தலின் விளைவையே கடைசியாகச் சார்ந்துள்ளது. ஆயினும், இக் கேள்வி ஒரு வழக்கறிஞரால் விடை இறுக்கப்படக் கூடிய ஒன்று அன்று.

ஆயினும், பாராளுமன்றத்தின் எல்லாச் சட்டங்களையும், எந்த மறுப்புமின்றியே, நீதிமன்றங்கள் செயல்படுத்துகின்றன என்பது ஒரு விதியாக ஆனது ஏன் என்பதை வழக்கறிஞர் விளக்கவே முற்படுகின்றனர். இவ்வாறுதான் நீதிமன்றங்கள் செய்தல் வேண்டுமென்பதாகக் கூறக்கூடிய பாராளுமன்றச் சட்டம் எதுவுமில்லை என்பது தெளிவு. எனவே, இத்தகைய மூல ஆதாரமாக இருப்பது பொதுவான சட்டத்தில்தான் (common law) காணப்படுதல் வேண்டும். பொதுவான சட்டத்தின் மற்ற விதிகளெல்லாம் பாராளுமன்ற இறைமை அதிகாரத்துக்கு உட்பட்டிருக்கும்போது இந்த விதியைமட்டும் பாராளுமன்றம் ஏன் மாற்றவில்லை? காமன்வெல்த்தின் சில நாடுகளில் உள்ள நீதிமன்றங்களில், அந் நாடுகளின் சட்டமன்றங்களில் செய்யப்பட்ட சட்டங்களினுடைய செல்லுபடியாகும் தன்மையை மறுத்து வழக்கு போடக்கூடிய வகையில் பிரிட்டிஷ் பாராளுமன்றம் அவ்வந் நாடுகளுக்கு அரசியமைப்புச் சட்டங்களை அமைத்துள்ளது. இதுவே மேற்கூறிய கேள்விக்கு ஒரு விடை ஆகும். ஆனால், பாராளுமன்றச் சட்டங்களுக்கு யுனைட்டெட் கிங்டத்தில் நீதிமன்றங்கள் கீழ்ப்படிதல் வேண்டுமென்ற விதியை வரையறை செய்யவோ, கட்டுப்படுத்தவோ, எல்லாவற்றையும்விட அதனை நீக்கவோ பாராளுமன்றம் ஒருபோதும் முயலவில்லை என்பது தெளிவு. இந்தக் கேள்வி H. W. R. வேட் (Wade) என்ற ஆசிரியரால், சட்டப்படியான இறைமை அதிகாரத்தின் மூலாதாரம் (The Bases of Legal Sovereignty, 1955) என்ற கட்டுரையில் ஆராயப்பட்டது. அதில் அவர், சட்டங்களுக்கு நீதிமன்றங்கள் கீழ்ப்படிதல் வேண்டும் என்ற விதியே சட்ட அமைப்பைத் தாங்கி நிற்கிற அடிப்படை விதிகளில் ஒன்றாக இருக்கிறதென்ற உண்மையைக் காண்கிறார். பாராளுமன்றத்தின் தொடர்ச்சியான இறைமை அதிகாரத்தினின்றும் உறுதியாகத் தோன்றும் விளைவே மேற்கூறிய இந்த விதியின் புனிதமான தன்மையாக உள்ளது என அவர் கூறி நிலைநாட்டுகிறார். பாராளுமன்றத்தின் சட்டங்கள் சட்டத்தின் ஆற்றலை உடையவை என்ற விதியே சட்டப்படியான முடிவு (legally ultimate) என்ற உண்மைக்கும், இந்த விதிக்கு மூலாதாரமாக இருப்பது வரலாறே தவிர (historical), சட்டம்

அன்று (not legal) என்ற உண்மைக்கும், மேற்கோளாக, அவர் சால்மண்ட் என்ற ஆசிரியர் (Salmond) எழுதிய சட்ட நூல் (Jurisprudence) என்ற நூலிலிருந்து ஆதாரம் காட்டுகிருர். 'அது சட்டமாக இருப்பதனுலும், சட்டத்தினுல் ஏற்றுக் கொள்ளப்படக்கூடிய காரணம் எதுவும் இல்லாததாலும், அது சட்டமாக இருக்கிறது. இத்தகைய அதிகாரத்தை எந்தச் சட்டமும் பாராளுமன்றத்துக்கு அளித்தல் இயலாது;ஏனெனில் இவ்வாறு செய்தல், எந்த அதிகாரம் அளிக்கப்பட விருக்கிறதோ, அந்த அதிகாரத்தையே ஏற்றுக்கொண்டு அதனையே கையாளுவது என ஆகும்.

இந்த உண்மையைப் புரிந்து கொண்டுவிட்டால், (இக் கருத்து பற்றி எழும்) சிக்கல் தீர்ந்து விடும் என ஆசிரியர் வேட் கூறுகிருர். எவ்வாறெனில், 'பாராளுமன்றத்தின் சட்டங்களுக்கு நீதிமன்றங்கள் கீழ்ப்படிய வேண்டும்' என்ற விதியை எந்த ஒரு சட்டமும் ஏற்படுத்த முடியாது என்ருல், எந்த ஒரு சட்டமும் மேற்படி விதியை நீக்கவோ, அல்லது மாற்றவோ இயலாது என்பதும் தெளிவாகிறது.

'சட்டத்துக்கு நீதிமன்றங்கள் கீழ்ப்படிதல் என்ற விதி ஒரு வகையில் பார்த்தால், நாட்டின் பொதுவான சட்டத்தில் உள்ள விதி ஆகும்; ஆனுல், வேருெரு வகையாகப் பார்த்தால் —இவ்வகையாக நாட்டின் பொதுவான சட்டத்தின் மற்ற விதிகளைப் பார்ப்பது பொருந்தாது— சட்டம் இயற்றும் அலுவலின் முழு அமைப்பையுமே தாங்கி நிற்கிற அரசியல் நிலைமையாகவே அல்லது அரசியல் கருத்தாகவே (political part) மேற்கூறிய விதி இருக்கிறது'.

அரசியல் உண்மைகள் விளக்கப்படுவதற்கு வரலாற்றுச் சார்பான விளக்கங்களே தேவைப்படுகின்றன. பதினேழாம் நூற்ருண்டிலே, ஒரு அரசர் தூக்கிலிடப்பட்டபோதும், ஒரு குடியரசு நாடு (Common wealth) நிறுவப்பட்டபோதும், வேருெரு அரசர் முடிதுறந்த போதும், முன்பிருந்த இறைமை அதிகாரியான சட்டமன்றத்தின் ஆணை அல்லது கட்டளை எதுவும் இல்லாமலே, நீதிமன்றங்கள், தங்களுடைய பற்றுறுதியை அல்லது விசுவாசத்தை (allegiance) பாராளு மன்றத்திலுள்ள அரசரிடமிருந்து, அரசரில்லாத பாராளு மன்றத்துக்கு மாற்றிக் கொண்டன என்று திரு வேட் கூறுகிருர்.

இறைமை அதிகாரம் எங்கு தங்கி இருக்கிறதோ, அந்த இருப்பிடத்தில் தோன்றிய மாறுதலை எல்லாம் ஒரு அரசியல் நிகழ்ச்சியாகவே ஒப்புக்கொள்ள ஆயத்தமாக இருந்தன; இந்த மாறுதலைத் தோற்றுவித்த அரசியல் நிகழ்ச்சியிலிருந்து சட்டப்படியான வினாவுகள் தோன்றின. இதே போலவே காமன்வெல்த் குடியரசு முடிவுக்கு வந்தபோது நீதிமன்றங்கள் தமது சொந்த அதிகாரத்தின் பேரிலேயே, மீண்டும் தமது பற்றுறுதியைப் பாராளுமன்றத்திலுள்ள அரசருக்கு மாற்றவும், பிற்பட்ட காலத்தில் நாட்டை விட்டு நீங்கிய இரண்டாம் ஜேம்சிடமிருந்து வில்லியத்துக்கும், மேரிக்கும் தங்களது கீழ்ப்படிதலை மாற்றவும் செய்தன. விளக்கத்தின் இப்பகுதி கீழ்க்கண்ட வகையாக முடிவு பெறுகிறது.

'முடிவான சட்டக் கொள்கை' என சால்மண்ட் கூறுவது, பாராளுமன்றத்தினுல் மாற்றப்பட முடியாத தனித்த நிலையிலுள்ள ஒரு விதியாகும்; இது புரட்சியினுல் மாற்றப்படுவதேயன்றி, சட்டத்தினுல் மாற்றப்படுவது ஆகாது; அது நீதிமன்றங்கள் நிலைபெற்றிருத்தல் என்ற செயலில் காணப்படுகிறது; அதனை எந்தப் பாராளுமன்றச் சட்டமும் அவற்றினின்றும் எடுத்துவிட முடியாது. இதனையே இன்னொரு விதத்தில் சொன்னுல், செல்லுபடியாகத்தக்க பாராளுமன்றச் சட்டம் எதுவோ அதனைக் கடைசியாகக் கூறக்கூடியவை நீதிமன்றங்களே என்பதாம்; மேலும், இந்தக் கேள்வியைத் தீர்ப்பது என்ற செயல், நீதிமன்றங்களுக்கு வெளியே எந்த அதிகாரியாலும் மாற்றப்படவோ, விதிக்கப்படவோ கூடிய ஏதேனுமொரு சட்டவிதியினுல் (any rule of law) தீர்மானிக்கப்படவில்லை. இச் செயல் முழுவதும், ஒரு அரசியல் சார்பான உண்மையே ஆகும்.[1]

சட்டப்படியான இறைமை அதிகாரத்தின் மூலாதாரத்தைப் பற்றிய மேற்கூறிய ஆராய்ச்சி எதனுல் தூண்டப்பட்டது என்ருல், அது, தென்னுப்பிரிக்காவில் வெள்ளையரல்லாதவருடைய வாக்குரிமைபற்றிய கேள்வி அரசியலமைப்புச் சட்டச் சார்பானதொரு நெருக்கடியான நிலைமையை உண்டாக்க, அப்போது நீதிமன்றங்கள் அளித்த

[1] இதே கருத்து K. C. Wheare என்பவரால் அவருடைய The Statute of Westminster and Dominion Status என்ற நூலில் (1955), 155-156ஆம் பக்கங்களில் தெளிவாகக் கூறப்படுகிறது.

தீர்ப்புகளினுல் தூண்டப்பட்டதாகும்.[1] பேராசிரியர் கௌவன், பாராளுமன்ற இறைமை அதிகாரத்தைத் தென்னுப்பிரிக்க யூனியனின் எல்லைகளுக்கும் (confines) அப்பாற்பட்ட நிலையில் வைத்து ஆராய்கிருர். மேலும் அவர், பாராளுமன்றச் சட்டங்களின் தொகுப்பையும் அல்லது பட்டியலையும் (Parliament Role) இறைமை அதிகாரத்தின் மற்ற இயல்புகளையும் யுனைட்டெட் கிங்டத்துப் பாராளுமன்றத்தோடு தொடர்புபடுத்திப் பார்த்து, மேற்படி தொகுப்பும் அல்லது பட்டியலும், இறைமை அதிகாரத்தின் இயல்புகளும் யாவரும் ஏற்கக் கூடிய முடிந்த முடிபுகளாக ஆகுமா எனவும் ஐயப்பாட்டை உண்டாக்குகிருர்; தென்னுப்பிரிக்க யூனியன் பாராளுமன்றத்தைப் பொறுத்தவரையில், தென்னுப்பிரிக்க நீதிமன்றம் அந்தப் பாராளுமன்றம் வெஸ்ட்மின்ஸ்டரிலுள்ள பாராளுமன்றத்தினின்றும் வேறு வகையானதெனவும், ஏனென்ருல் யூனியன் பாராளுமன்றம், யுனைட்டெட் கிங்டத்துப் பாராளுமன்றத்தின் சட்டமாகிய 1909ஆம் ஆண்டின் தென்னுப்பிரிக்கச் சட்டத்தில் (South Africa Act, 1909) காணப்பட்டுள்ள சில வரம்புகளை வைத்தே தனது வாழ்க்கையைத் தொடங்கிற்று. யூனியன் பாராளுமன்றத்தில், அரசி, செனட், அசெம்பிளி மன்றம் ஆகிய மூன்று கூறுகளும், சாதாரணச் சட்டம் இயற்றுதல், சட்டங்களை விரிவாக நிலைபெற ஆக்குதல் (entrenched business), இரு மன்றங்களுக்கும் இடையே உள்ள முட்டுக்கட்டையைத் தீர்த்தல் ஆகிய அலுவல்கள் ஒவ்வொன்றுக்கும் தக்கபடி பல்வேறு வகைகளில் ஒன்றுகூடிச் சட்டம் இயற்றுதல் வேண்டுமென விதிக்கப்பட்டுள்ளது. யூனியன் பாராளுமன்றத்தின் அரசியலமைப்புபற்றிய கூறுகளில் விரிவாக நிலைபெற ஆக்கப்பட்டச் சட்டப் பிரிவுகளும் சேர்ந்து இருக்கின்றன; எனவே, இவை அதன் அதிகாரங்களுக்கு ஒரு வரம்பு ஆகமாட்டா. இறைமை அதிகாரத்தைப் பொறுத்தவரையிலும் தென்னுப்பிரிக்க அரசியலமைப்புச் சட்டத்தைத் திருத்து

[1] இதற்கு மேற்கோள்கள்: D. W. Cowen எழுதிய Legislature and Judiciary, 1952; The Entrenched Sections of the South Africa Act (1953); B. Bainart எழுதிய Parliament and the Courts; Butterworth (1954) முதலியவை. South African Senate, (1957); H. R. Grey எழுதிய The Sovereignty of Parliament Today (1953); E. N. Griswold எழுதிய The Coloured Vote Case in South Africa (1952); The Demise of the High Court of Parliament in South Africa (1953); E. Mcwhinney எழுதிய The Union Parliament, The Supreme Court and the 'Entrenched clauses' of the South Africa Act (1952); G. Marshal எழுதிய Parliamentary Sovereignty and the Commonwealth (1957); South Africa; The Courts and the Constitution: H. W. R. Wade, The Senate Act case and the Entrenched Sections of the South Africa Act, 1957.

வதற்கு யூனியன் பாராளுமன்றத்துக்கு எப்பொழுதும் ஒரு முழு அதிகாரமும் இருந்து வந்துள்ளது. சட்டம் செய்தலை வரையறை செய்தலிலும், அதைச் செய்யும் வகையிலும், யாதொரு மாற்றத்தையும் வெஸ்ட்மின்ஸ்டர் சட்டம் செய்ய வில்லை; என்றுலும், 1909ஆம் ஆண்டின் தென்னுப்பிரிக்கச் சட்டத்தை இயற்றிய யுனைட்டெட் கிங்டத்தின் பாராளுமன்றத் துக்குத் தென்னுப்பிரிக்காவில் இருந்த சட்டப்படியான உயர்ந்த அதிகாரத்தை அல்லது இறைமையை முடிவுறச் செய்தது.எனவே, நீதிமன்றத்தின் தீர்ப்பு கீழ்க்கண்டவாறு அமைகிறது. அடிப்படையில் அரசியல் சார்பான காரணங்களுக் காக, ஹாரிஸ்-உள் நாட்டு அமைச்சர் வழக்கில்(Harris v.Minister of the Interior, 1952) நீதிமன்றங்கள் யூனியன் பாராளுமன்றத்தி னுடைய இறைமை அதிகாரத்தை ஒப்புக்கொள்ள வேண்டிய கட்டாயம் ஏற்பட்டது. அந்த நாட்டின் பாராளுமன்றமானது தென்னுப்பிரிக்கச் சட்டத்திஞல் தோற்றுவிக்கப்பட்டது; அச் சட்டமே அதற்கு அதனுடைய அதிகாரங்களை வழங்கி, அவை எவ்வாறு கையாளப்பட வேண்டுமெனவும் வரையறை செய்தது. வெஸ்ட்மின்ஸ்டர் சட்டமானது, யூனியனில் சட்டமியற்றுதல் பற்றிய வரையரையையும், சட்டம் செய்யும் வகையையும் மாற்றவில்லை என்பதாக நீதிமன்றம் கருதிற்று; எனவே, அது விரிவாக நிலைபெற ஆக்கப்பட்ட சட்டப்பிரிவு களையும் (entrenched provisions) ஒப்புக்கொள்ள வேண்டிய கட்டாயம் ஏற்பட்டது. இத்தகைய சட்டப் பிரிவுகளை ஒட்டியே வெள்ளையரல்லாதாருக்கு வாக்குரிமை உள்ளிட்ட பல்வேறு அரசியலமைப்புச் சட்டத்தின் சில பிரிவுகளைத் திருத்துதல் வேண்டுமென்பதாக, வெஸ்ட்மின்ஸ்டர் சட்டம் செய்யப் படும் முன்னரே, தென்னுப்பிரிக்கச் சட்டத்தில் கூறப்பட்டது.

தென்னுப்பிரிக்காவைப்பற்றிய கேள்வியைப்பற்றியே விட்டு விட்டுப் பேராசிரியர் கௌவன், பாராளுமன்றச் சட்டங் களின் பட்டியல் யாவராலும் ஒப்புக்கொள்ளப்படத்தக்க முடிந்த முடிவு ஆகுமா என்ற ஐயப்பாட்டை எழுப்புகிருர். ஆயினும், அவர் இதற்காக பில்கிங்டனின் வழக்கை (Pylking-ton's Case) எடுத்தாள வேண்டிய கட்டாயம் ஏற்படுகின்றது; இந்த வழக்கில் பாராளுமன்றச் சட்டங்களின் பட்டியலில் காணப்படாத தனித்த அல்லது விசேடமான ஒரு சட்டம் செல்லுபடி ஆகாது (void) என்பதாக முடிவானதொரு தீர்ப்பை அளிக்கவில்லை. எனவே, இறைமையைப்பற்றிய சர்ச்சை நிகழும்போது, அக் கொள்கையைக் கற்பனை வகை யாகவும், வழக்கத்துக்கு மாறுன வகையிலும் கையாள

வேண்டிய கட்டாயம் அடிக்கடி ஏற்படுகிறது. பேராசிரியர் கௌவன் கீழ்வருமாறு ஒரு நிலையைக் கற்பனையாகக் கூறுகிறார்: பாராளுமன்றத்தின் வாழ்நாளை (life) நீடிக்கச் செய்யும் சட்டத்தைப்போல் எந்த ஒரு சட்டமும் செய்யப் படுவதற்கு, அது பிரபுக்கள் மன்றத்தின் ஒப்புதலையும் பெற வேண்டுமென 1911ஆம் ஆண்டின் பாராளுமன்றச் சட்டம் கூறுகிறது. இவ்வாறு அது கூறினாலும் பொதுமக்கள் மன்றம் மட்டுமே, பாராளுமன்றத்தின் வாழ்நாளை நீடிக்கச் செய்யும் சட்டம் ஒன்றை நிறைவேற்ற, அதற்கு அரசியார் ஒப்புதல் அளித்தார் என நாம் கருதிக் கொள்வோம். அப்பொழுது அச் சட்டத்தின் செல்லுபடியாகுந் தன்மையை (validity) வெற்றி யாக உயர்நீதிமன்றத்தில் மறுத்து வழக்காட முடியுமா? பொதுமக்கள் மன்றத்தின் தலைவர் (Speaker), பாராளுமன்றச் சட்டத்தின் பிரிவுகளின்படியே (Parliament Act) மேன்மை தங்கிய அரசியாரின் ஒப்புதலுக்கு சட்ட மசோதா (Bill) அனுப் பப்பட்டது என் வழங்கும் பத்திரத்தை (certificate) யாவரும் ஏற்றுக்கொள்ளக்கூடிய முடிந்த முடிவு என நீதிமன்றம் ஏற்றுக் கொள்ளவேண்டும்; இதை நாம் நினைவில் கொள்ளுதல் வேண்டும். இதற்கு மறுமொழியாகக் கீழ்வருமாறு கூறப் படலாம்: மேற்கூறியவாறு செய்யப்பட்ட சட்டத்தின் செல்லு படியாகும் தன்மையை நீதிமன்றம் மறுக்கமுடியாது; ஏனென்றால் மேற்கூறிய பாராளுமன்றச் சட்டமானது, எல்லா நோக்கங்களுக்கும் அல்லது காரியங்களுக்கும், மன்றத் தலைவரால் கொடுக்கப்பட்ட உறுதிப்பத்திரத்தை யாவரும் ஏற்றுக்கொள்ளக்கூடிய முடிந்த முடிவாக ஆக்குகிறது. எனவே, அதனை எந்த நீதிமன்றத்திலும் எதிர்த்து வழக்காட முடியாது அல்லவா? இங்கே பாராளுமன்றம் தமது சட்டங் களின் செல்லுபடியாகும் தன்மையின்மீது நீதிமன்றங்கள் தீர்ப்புக்கூற முடியாதபடி (Judicial Review) தடுப்பதற்காக முன்னதாகவே ஏற்பாடு செய்துள்ள ஒரு நிலைமை இருக்கிறது. கற்பனையான சட்டங்களே வேறெந்தத் துறையிலும் எழுப்புதல் தான் நல்லது; ஆனால், பாராளுமன்றச் சட்டப் பட்டியலின் யாவராலும் ஏற்றுக் கொள்ளப்படத்தக்க முடிவான தன்மையை (conclusiveness) ஒப்புக் கொள்ளாமல் மறுப்பதற்காகச் செய்யப் படும் எந்த முயற்சிக்கும் சட்ட அறிக்கைகளிலிருந்து (Law Reports) எந்த முறையான மேற்கோளும் இதுவரை ஆதரவு அளிக்கவில்லை. இத்தகைய இடர்ப்பாட்டைத்தவிர்ப்பதற்கான ஒரு வழி, பாராளுமன்ற இறைமைக்கும், யாவராலும் ஏற்கத் தக்க முடிவான தன்மைக்கும் யாதொரு தொடர்பும் இல்லை எனவும், முடிவான தன்மை என்பதே, சட்ட விதிகள் கடைப்

பிடிக்கப்படுதலில் எந்த அளவுக்கு நீதிமன்றங்கள் விசாரணை செய்யலாம் என்பதைத் தீர்மானிப்பதற்காக ஒரு சான்று விதியாக (a rule of evidence) மட்டுமே உள்ளது எனவும் கூறலாம். பாராளுமன்றம் நிலையான விதிகளுக்கு உட்பட்டே தனது கருத்தைக் கூறுகிறது என்று வைத்துக் கொண்டால், நீதிமன்றங்கள் கவனிக்க வேண்டிய கேள்வியெல்லாம் 'பாராளுமன்றம் ஏதாவது கூறிற்று?' என்பது மட்டுமே. அதற்குச் சான்று பாராளுமன்றச் சட்டப் பட்டியலில் காணப்பட்டது என்றால், இதற்கு எதிராக, ஒரே விடைதான் உண்டு எனக் கூறலாம்.

பாராளுமன்ற உரிமை என்ற தலைப்பின்கீழே, பேராசிரியர் கௌவன், 'பிரிட்டிஷ் பாராளுமன்றத்தின் சபைகள் தத்தம் சொந்தச் செயல் முறைகளினுடைய சட்டபூர்வமான இயல்பைப் (legality of their own proceedings) பற்றித் தீர்ப்புச் செய்வதற்குத் தாங்களே தனி நீதிபதிகளாக இருக்கும் உரிமை பெற்றுள்ளன' என்ற அடிப்படையான கருத்துரையை ஒப்புக்கொள்ளுகிறார். பிரிட்லாவுக்கும் கோசட்டுக்கும் நிகழ்ந்த வழக்கைப்போன்ற (Bradlaugh v. Gossett, 1884) பல்வேறு வகையான வழக்குகளின் வரிசையிலே, உயர்நீதி மன்றத்தா லளிக்கப்பட்ட தீர்ப்பை மனத்தில் கொண்டால் (மேற்கூறிய உரிமையைப்பற்றி) (மேற்கூறிய பேராசிரியர் கருத்து அல்லாத) வேறெந்தக் கருத்தும் நிலைபெற முடியாது. ஆயினும், தென்னாப்பிரிக்க அரசியலமைப்புச் சட்டத்திலே, விரிவாக நிலைபெற ஆக்கப்பட்ட சட்டப்பிரிவுகள் (entrenched sections) முக்கியமான உரிமைகளைப் பாதுகாக்கின்றன; எனவே, அத்தகைய பிரிவுகள் கடைப்பிடிக்கப்படுகின்றனவா என்று நீதிமன்றங்கள் விசாரிக்கமுடியும்; அவ்வாறு விசாரித்தலுக்கு எதிராக, யூனியன் பாராளுமன்றத்தில் சட்டம் இயற்றப்படுதற்குரிய செயல்முறை விதிகளை நீதிமன்றங்கள் ஆராய்ந்தால், யூனியன் பாராளுமன்றத்தின் உரிமையானது மீறப்படுகிறது என்ற (மறுப்பு) விடை தோன்றுது. எவ்வாறாயினும், தென்னாப்பிரிக்காவில், பாராளுமன்ற உரிமை அல்லது அதிகாரம் என்ற விஷயம் முழுவதுமே, எழுதப்பட்ட சட்டத்திலிருந்து தோன்றியதாகும்; ஆனால் யுனைட்டெட் கிங்டத்திலோ, உரிமையின் தோற்றங்களோடு தொடர்புடைய பாராளுமன்றச் சட்டமும், வழக்கமும், அந்த நிறுவனத்தின் மரபுகளிலேயே காணப்படுகின்றன; அவை விதிவிலக்காக மட்டுமே (exceptionally) சட்டத்தினால் வரையறை செய்யப்பட்டுள்ளன.

பாராளுமன்ற இறைமையினுடைய 'சட்டம் இயற்றும் வரம்பற்ற அதிகாரம்' என்ற தன்மையை எடுத்து ஆராய்வதற்கு வேண்டிய செய்திகள், வெஸ்ட்மின்ஸ்ட்டரிலுள்ள பாராளுமன்றத்தின் வரலாற்றிலே காணற்கு அறியன. ஆயினும் தென்னுப்பிரிக்க அரசியலமைப்புச் சட்டத்திலுள்ள விரிவாகவும், நிலையாகவும் ஆக்கப்பட்ட பிரிவுகளைக் கொண்டு (entrenched sections) சட்டம் இயற்றுவதற்குப் பாராளுமன்றத்துக்கு வரம்பற்ற அதிகாரம் இருப்பதைக் கீழ்க்கண்ட மூன்று தலைப்புகளில் நாம் ஆராயலாம் எனப் பேராசிரியர் கௌவன் கூறுகிருர்:

(i) எந்தச் சட்டத்தையும் செய்வதற்கு உள்ள அதிகாரம்;

(ii) சட்டம் செய்வதில் ஒரு வகை;

(iii) பிற்காலத்திய பாராளுமன்றங்களைக் கட்டுப்படுத்துவதற்கு அல்லது தடை செய்வதற்கு அதிகாரம் இல்லாமை.

விரிவாகவும், நிலையாகவும் ஆக்கப்பட்ட சட்டப் பிரிவுகளைத் தென் ஆப்பிரிக்கப் பாராளுமன்றம் மாற்ற முடியும்; எனவே, அத்தகைய பிரிவுகள் இருத்தலினுல், எந்தச் சட்டத்தையும் ஆக்குவதற்கோ, அல்லது நீக்குவதற்கோ பாராளுமன்றத்திற்கு இருக்கும் அதிகாரம், மாறிவிடாது, அல்லது இரண்டும் முரண்பாடு உடையன ஆக மாட்டா; ஆயினும் சட்டம் இயற்றுவதற்கு ஒன்றுக்கு மேற்பட்ட வழிகள் இருத்தல் கூடும். இவ்வகையாக தென்னுப்பிரிக்காவில் சட்டப்படியான இறைமை அதிகாரம் பகுக்கப்பட, அல்லது பிரிக்கப்படக் கூடியதாக (divisible) இருக்கிறது; எவ்வாறெனில், சாதாரண விஷயங்களைப் பொறுத்தவரையில் மேற்படி சட்டப்படியான இறைமை அதிகாரமானது, சட்ட மன்றத்தின் ஒவ்வொரு கூறும் தனித்துச் செயல் படக்கூடிய அளவுக்கு அந்தக் கூறுக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது; ஆனுல் விரிவாகவும் நிலையாகவும் ஆக்கப்பட்ட சட்டப் பிரிவுகளை மாற்றுதல் என்பதைப் பொறுத்தவரையில் மேற்படி சட்டப்படியான இறைமை அதிகாரமானது செனட்டும் (Senate) அசெம்பிளி மன்றமும் (House of Assembly) சேர்ந்துள்ள கூட்டுக் கூட்டத்தில் (joint sitting) ஒரு தனிப்பட்ட பெரும்பான்மை நிலை (a special majority) இருத்தல் வேண்டுமென்ற நிலையில் கொடுக்கப்பட்டுள்ளது. இந்த நிலையானது, '(பாராளுமன்ற) இறைமையும், (அரசியலமைப்பின்) நெகிழ்ச்சியான தன்மையும் (flexibility) ஒன்றுக்

175175 W:2(2) 31K8-1

கொன்று பொருத்தமானவையே' என்று டைசி கூறியது சரியா என்ற ஐயப்பாட்டை உண்டாக்குகிறது. எவ்வாறெனில், 'தென்னுப்பிரிக்கப் பாராளுமன்றம் இறைமை அதிகாரம் உடையது' என்ற முடிவு சரியென்று கொண்டால் அதன் அரசியலமைப்புச் சட்டமானது அதிலுள்ள விரிவான நிலையாக ஆக்கப்பட்டுள்ள பிரிவுகளினுல் வரம்புக்குள்ளாக்கப் படுதலினுல், அவற்றைப் பொறுத்தவரை, நெகிழ்ச்சி குறைந்ததாக (less flexible) (அல்லது இறுக்கமாக) இருக்கிறது; இரு மன்றங்களினுடைய சட்டமியற்றும் சாதாரண முறையின் மூலம் மாற்றப் படுவதற்குரிய பகுதிகள் அவ்வரசியலமைப்பில், மற்ற பகுதிகளை விட கூடுதலாகவே இருக்கின்றன.

தனக்குப் பிற்காலத்தியப் பாராளுமன்றங்களைக் கட்டுப்படுத்தப் பாராளுமன்றத்துக்கு அதிகாரம் உண்டா? வெள்ளையரல்லாதார் வாக்குரிமைபற்றி எழுந்த மூன்று வழக்குகளில், தென்னுப்பிரிக்கப் பாராளுமன்றமானது, 1909ஆம் ஆண்டின் தென்னுப்பிரிக்கச் சட்டத்தினுல் கட்டுப்பாட்டுக்கு, அல்லது வரம்புக்கு உள்ளாக்கப்பட்டிருக்கிறது என்று கொள்ளப்பட்டது. இக் கருத்துக்கு ஆதாரம், 'வெஸ்ட் மின்ஸ்ட்டர் சட்ட்மானது, வெளிப்படையாகவோ அல்லது குறிப்பாகவோ தென்னுப்பிரிக்கச் சட்டத்தை நீக்கவோ, அல்லது மாற்றம் செய்யவோ இல்லை' என்று நீதிமன்றம் கொண்ட கருத்தாகும். ஆயினும் தென்னுப்பிரிக்கச் சட்டத்திலேயே (South Africa Act) கூறப்பட்டுள்ள வகையை ஒட்டி யூனியன் பாராளுமன்றமானது, அச் சட்டத்தை மாற்றி அல்லது நீக்கி அமைத்தாலொழிய, அவ்வாறு அது செய்யும் வரையில் தென்னுப்பிரிக்கச் சட்டமொன்றுதான் யூனியன் பாராளு மன்றத்தைக் கட்டுப்படுத்துவதாகும். இதற்கு விளக்கம் என்னவெனில், 'தென்னுப்பிரிக்காவில், பாராளுமன்றம் அரசியலமைப்பை ஆதாரமாகக் கொண்டுள்ளது; அந்த அரசியலமைப்பும் ஓர் அடிப்படையாக எழுதப்பட்ட சட்டத்தை ஆதாரமாக உடையது', என்பதாம். தென்னுப்பிரிக்காவில் அடுத்தடுத்து வரும் ஒவ்வொரு பாராளுமன்றமும் தனக்கு முந்திய பாராளுமன்றங்களின் சட்டங்களை நீக்கவோ அல்லது மாற்றவோ கூடிய அதிகாரத்தை யுடையது; இத்தகைய அதிகாரமானது யூனியன் பாராளுமன்றத்தின் இறைமை யதிகாரத்தில் சேர்ந்திருக்கிறது. இதற்கு உள்ள ஒரே வரம்பு, அரசியலமைப்புச் சட்டத்துக்கு ஒத்த வகையில் சட்டம் இயற்றப்பட வேண்டும் என்பதே ஆகும்.

'இறைமை அதிகாரமுடைய ஒரு பாராளுமன்றமானது, தனக்குப் பின் தோன்றுதல்களான பாராளுமன்றங்களைக் கட்டுப்படுத்த அல்லது வரம்புக்கு உட்படுத்த இயலாது', என்ற விதியை நாம் தென்னுப்பிரிக்க அரசியலமைப்புச் சட்டத்தின் வாயிலாக அல்லாமலும், கவனமாக ஆராய்தல் வேண்டும். அதிகாரத்தை முற்றிலும் துறத்தல், அதிகாரத்தை ஓரளவுக்கு நீக்குதல் (partial divesting) அதிகாரத்தை நீக்கிவிடாமல் கொடுத்தல் ஆகிய இச் செயல்களோடு, மேற்கூறிய பாராளுமன்றத்துக்குள்ள தொடர்புபடுத்தி ஆராய்தல் வேண்டுமென்று பேராசிரியர் கௌவன் வாதிக்கிருர். டைசி, தனது நூலின் 68-70ஆம் பக்கங்களில் எழுதிய நீண்ட அடிக்குறிப்பில், 'மாற்ற முடியாத சட்டங்களைச் செய்வதற்குப் பாராளுமன்றம் ஏன் தவறிவிட்டது' என்று ஆராய்கிருர். 'இறைமை அதிகாரத்தைக் கையாளுதலில் எவ் வரம்பையும் ஏற்படுத்த இயலாது' என்ற நிலை, தடுக்க வகையாகவோ அல்லது நடைமுறையிலோ, இறைமை அதிகாரத்தைத் துறத்தல் என்ற செயலை (abdication of sovereignty) எவ்வகையிலும் தடுக்கவில்லை என்று அவர் கண்டார். 'தனக்குப் பின் ஒரு பாராளுமன்றம் எதுவும் சட்டப்படியாகக் கூட்டப்படுவதற்குரிய வழிகளை விட்டு வைக்காமலும், சட்டப்படியாகத் தன்னைக் கலைத்துக் கொண்டும், பாராளுமன்றம் தனது நிலைமைக்கு ஒரு முடிவு தேடிக்கொள்ளுதல் கூடும்'. இங்கிலாந்தும், ஸ்காட்லாந்தும் இணைக்கப்பட்டபோது, இங்கிலாந்து, ஸ்காட்லாந்து ஆகியவற்றின் பாராளுமன்றங்களினுல் இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டது.[1] இந்தக் கூட்டான செயலினுல், ஒரு புதிய இறைமையுடைய மன்றம், அதாவது கிரேட் பிரிட்டனில் பாராளுமன்றம் என்பது தோன்றிற்று. ஆயினும், அதிகாரத் துறப்பு என்பது ஒரு அரசியல் சார்பான நிகழ்ச்சியாக மட்டுமல்லாமல், சட்டச் சார்பான நிகழ்ச்சியாகவும் இருக்கிறது; மேலும், அரசியல் சார்பான மாறுதலை ஒப்புக் கொள்வதன் மூலமாகவே புதிய சூழ்நிலையின் சட்டச் சார்பான தன்மையை நீதிமன்றங்கள் ஒப்புக்கொள்ள இயலும்.

இவ்வாறு இறைமையை முழுவதும் துறத்தல் என்பது இயலும் என்று நடைமுறையில் இருக்குமாயின், வெஸ்ட்மின்ஸ்ட்டர் சட்டத்தின் 4ஆம் பிரிவு எதற்கு ஒரு தெளிவான

[1] T. B. Smith எழுதிய The Union of 1707 (1957), Public Law 99. 'பிரிட்டிஷ் பாராளுமன்றமானது, இணைப்பின் (Union) விதிகளினுல் தோன்றியதாகும்—இணைக்கத்தினுல் வந்த ஒரு புரட்சியின் விளைவாகத் தோன்றியதாகும்.'

எடுத்துக்காட்டாக இருக்கிறதோ, அந்த 'ஓரளவு அதிகாரத்தை நீக்குதல்' என்ற செயலும் இயலக்கூடியதே; இதில் இடர்ப்பாடு எதுவும் இல்லை. நாம் ஏற்கெனவே பார்த்துள்ளபடி, சட்டத்தில் இதுபற்றி, நிலைமை எவ்வாறிருப்பினும், ஓரளவு அதிகாரத்தை விட்டுவிடுதல் என்ற இக் கேள்வி எழுவதற்கு இடமில்லை; எவ்வாறெனில், மற்ற காமன்வெல்த் நாடுகளின் சட்டம் இயற்றும் அதிகாரங்களில் வெஸ்மின்ஸ்ட்டரிலுள்ள பாராளுமன்றம் தலையிடுதலைத் தவிர்க்கக்கூடிய வழக்காறு ஒன்று (convention) இருந்து வருகிறது.[1] இறைமை அதிகாரத்தை ஓரளவு நீக்குதல் என்ற செயலையும், அதிகாரத்தை நீக்காமல் இறைமையைக் கொடுத்தல் என்ற செயலையும் பிரித்தல் என்பது முற்றிலும் எளிய செயலன்று; இவற்றுள் பிற்கூறப்பட்ட செயலுக்கு ஒரு எடுத்துக்காட்டாக வெஸ்ட்மின்ஸ்ட்டர் சட்டத்தின் 4ஆம் பிரிவைக் கருதுபவரும் உளர். இவ்வகையாக இரண்டுக்கும் ஒரு பொருத்தத்தைக் காணுதல் ஒரு வேளை இயல்பாக இருக்கலாம். டொமினியன்களுடைய வேண்டுகோளும், உடன்பாடும் இல்லாமல், அவைகளுக்காகத்தான் சட்டங்களைச் செய்வதில்லை என்று, வெஸ்ட்மின்ஸ்ட்டரிலுள்ள பாராளுமன்றம் வகுத்திருக்கிறபடியால், அது, தான் முற்காலத்தில் எத்துறையில் அதிகாரத்தைக் கையாளுதற்குத் தகுதி உடையதாக இருந்ததோ, அத் துறையில் தனது அதிகாரத்தை இப்போது நீக்கிக்கொண்டதாக ஆகிறது; ஆயினும் அது மேற்கூறிய (4ஆம்) பிரிவைத் தள்ளுபடி செய்வதற்குரிய அதிகாரத்தை அத் துறையில் தன்னிடமே வைத்துக்கொண்டிருக்கிறபடியால், அத் துறையில் சட்டம் இயற்றுவதற்குரிய அதிகாரத்தை வெளிப்படையாக அது நீக்கிவிடவில்லை. 4ஆம் பிரிவானது நீக்கப்பட முடியாத ஒன்று அன்று. ஆயினும், தள்ளுபடி செய்யப்படுவதன் மூலமாக, மீறப்படக்கூடியதும், ஏற்கனவே நன்கு நிலைத்துவிட்டதுமான ஒரு வழக்காற்றையே மேற்படி 4ஆம் பிரிவானது நிறைவேற்றுகிறது.

லார்ட் பிரெசிடெண்ட்டினுல் (Lord President) ஆங்கிலக் கோட்பாடு எனக் கூறப்படுவதாகிய பாராளுமன்ற இறைமை அதிகாரம் என்பது, மக்கார்மிக்—வழக்கறிஞர் பிரபு (Mac Cormick v. Lord Advocate) ஆகிய இருவருக்குமிடையே தோன்றிய வழக்கு ஒன்றில்

[1] T. B. ஸ்மித் தான் எழுதிய The Union of 1707 (1957) நூலில், 'பிரிட்டிஷ் பாராளுமன்றமானது ஸ்காட்லாந்து—இங்கிலாந்து இணைப்பின் விதிகளினுல் தோன்றியதாகும்—உடன்பாட்டினுல் விளைந்த ஒரு புரட்சியினுல் தோன்றியதாகும்' என்று கூறுகிருர்.

செஷன் நீதிமன்றத்தில் (1953) குறைபாடு உடையதாகக் கூறப்பட்டது. இந்த வழக்கில் கிளாஸ்கோ பல்கலைக் கழகத் தலைவர் (Rector) ஒரு சட்ட மாணவருடன் சேர்ந்து, 1947ஆம் ஆண்டின் அரசர் செயல் நடவடிக்கைச் சட்டத்தின் 21ஆம் பிரிவில் அனுமதிக்கப்பட்டுள்ளபடி (Crown Proceedings Act, 1947), ஒரு விளம்பர ஆணை கொடுக்கும்படி (a declaratory order) கேட்டார்; இதில் அவர் 'அரசருடைய பட்டத்தில் அல்லது பெயர்த் தலைப்பில் (title) II என்ற எண்ணைச் சேர்ப்பது, வரலாற்று உண்மைக்கும், அரசியல் நிலைக்கும் மாறானது மட்டுமின்றி,1706ஆம் ஆண்டின் இணைப்புச் சட்டத்திலுள்ள (Act of Union) முதல் விதிக்கு மாறானதுமாகும்' என்று காரணம் கூறியிருந்தார். இங்கிலாந்து, ஸ்காட்லாந்து ஆகிய இரு நாடுகளும் இனி எப்போதும் ஒரே நாடாக இணைந்திருத்தல் வேண்டுமென்று விளம்பரப்படுத்தியதே மேற்படிச் சட்டத்தின் முதற் பிரிவுதான். இதில் பாராளுமன்றத்தின் இறைமையைப்பற்றிய கேள்வி பின் வருமாறு எழலாயிற்று. எலிசபெத் அரசி அரியணை ஏறும்போது, அவளால் ஏற்றுக் கொள்ளப்பட்டப் பட்டமானது அரசருக்குரிய விசேட அதிகாரத்தின்படி, அவளாலும், அவளுடைய ஆலோசனையாளர்களாலும் தீர்மானிக்கப்பட்டது. இதன் பின்னர் பாராளுமன்றம் அரசர் பட்டங்கள் சட்டத்தை (Royal Titles Act) 1953-ல் நிறைவேற்றிற்று; இது, அரசி அரியணை ஏறுகையில் பட்டத்தில் செய்யப்பட்ட சில மாறுதல்களை ஒப்புச்கொள்ளுவதற்காக நிறைவேற்றப்பட்டது; இம் மாறுதல்களும் 1952ஆம் ஆண்டின் கடைசியில் நடைபெற்ற காமன்வெல்த் முதலமைச்சர்களுடைய ஒரு கூட்டத்தின் விவாதத்தின் விளைவாகவே செய்யப்பப்பட்டன. இந்தச் சட்டமானது, அரசருடைய பெயருடன் சேர்க்கப்பட வேண்டிய எண் எது என்ற செய்தியைக் குறிப்பிடவில்லை; இது காமன்வெல்த்தின் நிலைமையிலுள்ள மாறுதல்களைப்பற்றியும், அயர்லாந்தைப் பொறுத்த வரையில் அதனுடைய நில எல்லையைப் பற்றியுமே கூறிற்று. இந்தச் சட்டம் நீதிமன்றத்தின் முன்பு வைக்கப்பட்டுள்ள வழக்கில் காணப்படுகிற எண்ணைப்பற்றிய கேள்வியோடு பொருத்தமான தொடர்பு ஏதும் உடையது என்று கூப்பர் பிரபு (Lord Cooper) கருதவில்லை; மேலும் இச் சட்டத்தின்படி விடுக்கப்பட்டுள்ள விளம்பரத்தில், தான் அரியணை ஏறுங்கால் அரசியால் ஏற்றுக்கொள்ளப்பட்ட II என்ற எண் எந்த மாறுதலுக்கும் உள்ளாகவில்லை எனினும் மேற்படி வழக்கில் தீர்ப்பளித்த நீதிபதிகளுள், கூப்பர்பிரபு ஒருவரே, 1706ஆம் ஆண்டில் தோன்றிய புதிய கிரேட் பிரிட்டனின் பாராளுமன்ற

மானது, பழைய ஆங்கிலப் பாராளுமன்றத்தினுடைய இறைமை அதிகாரம் உள்ளிட்ட எல்லா இயல்புகளையும் மட்டுமே (characteristics) வழிமுறையாக அல்லது தாய முறையாகப் பெற்றுக்கொண்டு, பழைய ஸ்காட்டிஷ் பாராளுமன்றத்தின் இயல்புகளில் ஒன்றையாவது ஏற்றுக்கொள்ளாமற்போனது ஏன் என்று தனக்கு விளங்கவில்லை என்று கூறினர். 'இரு நாட்டின் இணைப்புச் சட்டமானது ஓர் உடன்படிக்கையே,' எனவும், 'அதனைத் திருத்துவதற்கான உரிமையை வெளிப்படையாகப் பாராளுமன்றத்துக்கு ஒதுக்கி வைக்கும் பிரிவுகள் அவ் வுடன்படிக்கையில் அடங்கியுள்ளன' எனவும், 'ஆயினும் அதன் முதலாவது விதி அத்தகையது அன்று' எனவும் மேற்படி நீதிபதி கூறினர். ஆகையால், 'இரு நாட்டு இணைப்பு ஏற்பட்ட பின்னர், (எலிசபெத் என்ற) பெயரைத் தாங்கிய முதலாவது அரசியாக இருப்பவர் தனது அரச பட்டத்தில் I என்ற எண்ணைத் தவிர வேறு எண்ணை ஏற்றிருந்தால், அது இரண்டு நாடுகளின் இணைப்பையும் ஏற்படுத்துகிற உடன்படிக்கைப் பிரிவை மீறியதாகும்' என்பது விவாதமாயிற்று. பாராளுமன்றத்தின் இறைமை என்பது ஒப்புக்கொள்ளப்பட்டு விட்டால் அரச பட்டத்தில் சட்டத்தின் மூலமாகச் செய்யப்பட்ட மாறுதல் செல்லுபடியாகாதெனக் கூறமுடியாது; இது உண்மையே. இதில் அரசியல் நிகழ்ச்சிக்கும், பாராளுமன்ற இறைமையை ஸ்காட் மக்களின் சட்டம் ஒப்புக்கொள்ள வேண்டுமென்ற நூல் அளவான தடுக்க நியதிக்கும் இடையே, கூப்பர்பிரபு, ஒரு வேறுபாடு காண முயன்றார். மேலும் அவர், யுனைட்டெட் கிங்டத்தின் பாராளுமன்றமே வரம்பற்ற இறைமை உடைய அதிகாரியாக இருத்தல் வேண்டும் என்று இணைப்புச் சட்டத்திலோ, அல்லது வேறெதிலுமோ கூறப்படவில்லை என்ற ஐயப்பாட்டுக் கிடமில்லாத உண்மையையும் தனது கருத்துக்கு ஆதாரமாகக் கொண்டார். இந்த விவாதத்துக்கு விடையாக, '1706ஆம் ஆண்டில் ஆங்கிலப் பாராளுமன்றமானது, தான் கடந்த காலத்தில் தனது இயல்பாகப் பெற்றிருந்த இறைமை அதிகாரத்தை விட்டுக்கொடுத்து விட்டதாகக் கொள்ள இயலாது,' என்ற விளக்கத்தைக் கூறலாமல்லவா? இன்னர் ஹவுஸ் (Inner House) நீதிமன்றத்தில் கூப்பர்பிரபுவோடு நீதிபதியாக வீற்றிருந்த ரஸ்ஸல் பிரபு, இணைப்புக்கு முற்பட்ட இரு நூறுண்டுக் காலத்தில் ஸ்காட்லாந்தின் எந்தப் பாராளுமன்றத்துக்கும் எவராலும் மறுக்க இயலாத இறைமை அதிகாரம் இருந்ததா என்று ஐயப்பட்டார். எனவே, புதிதாகத் தோன்றிய இணைப்பு நாடுகளின் முதல் பாராளுமன்றமானது, அதில் உள்ள

ஆங்கிலப் பங்காளியாகிய ஆங்கிலப் பாராளுமன்றத்தினுடைய, யாவராலும் ஒப்புக்கொள்ளப்பட்ட இறைமைத் தன்மையை ஏன் ஏற்றுக் கொண்டது என்பதற்கும், எனவே ஆங்கிலப் பாராளுமன்றத்தின் இறைமை அதிகாரமானது, யுனைடெட் கிங்டத்தின் இறைமை அதிகாரம் ஆனது ஏன் என்பதற்கும் இவ்வகையாகக் காரணம் இருக்கிறது. கூப்பர் பிரபுவே பின்வருமாறு கூறினர்: (1953) இந்த ஒரு கருத்தாயினும் தெளிவாக இருக்கிறது; ஸ்காட்லாந்திலுள்ள உள்ளூர் நீதிமன்றங்களாவது, அல்லது இங்கிலாந்திலுள்ள நீதிமன்றங்களாவது, இங்கு வழக்குக்கு உள்ளாக இருக்கிறதைப் போன்ற எந்த ஒரு அரசாங்கத்தின் செயலும், ஒரு உடன்படிக்கையின் பிரிவுகளுக்கு ஒத்து இருக்கிறதா,இல்லையா என்று தீர்ப்பு அளிப்பதற்கு அதிகாரம் உடையவை என்ற கருத்துக்கு எந்த விதமான ஆதார அதிகாரமோ (authority) அல்லது மேற்சான்ருே (precedent) கிடையாது; மேலும், அத்தகைய உடன்படிக்கையானது, ஸ்காட்லாந்தும் இங்கிலாந்தும் தனித்த நாடுகளாக இருந்ததை விட்டுவிட்டுத் தங்களுடைய தனித்த நிலையை இணைக்கும் இணைப்பில் சேருவதற்கு வழிசெய்யும் ஒரு உடன்படிக்கையாக இருக்குமாஞல், அதற்கொத்த அரசாங்கத்தின் செயல் இருக்கிறதா, இல்லையா என்று நீதிமன்றங்கள் தீர்மானிப்பதற்கு மேற்சான்று இல்லை.

இதனுல் இணைப்புச் சட்டத்தை அரசியலமைப்புச் சட்டத்தின் ஒரு மூலாதாரமான பாகமாகக் கூப்பர் பிரபு கருதினரென்பதும், ஒரு அடிப்படையான வகைகூட பாராளுமன்றச் சட்டம் ஒன்றினல் மாற்றப்படுதற் குரியதாகவும், இத்தகைய சட்டத்தை நீதிமன்றங்கள் ஏற்றுக் கொள்ளக் கூடியதாகவும், சட்டநிலை இருக்கிறதே என அவர் கவலையுற்ருர் என்பதும், நமக்கு விளங்குகின்றன. ஒரு புகழ் மிக்க ஸ்காட்லாந்திய நீதிபதியிடமிருந்து நியாயமாக எதிர்பார்க்கப் படக்கூடிய நாட்டுப்பற்று இவ்வாறு வெளிப்படவும், அதனை யுனைட்டெட் கிங்டத்தினுள்ளே யிருக்கக்கூடிய பாராளுமன்ற இறைமை என்ற கோட்பாட்டிற்கு ஒரு கடுமையான எதிர்ப்பு அல்லது மறுப்பு ஆக இவ்வாறு ஆக்கப்பட்டிருப்பது உண்மையில் வியப்பை அளிக்கின்றது[1].

[1] T. B. Smith எழுதிய The Union of 1707 (1957) Public Law, பக்கம் 108; G. Morshall எழுதிய Parliamentary Sovereignty and the Commonwealth, Chapter 5; Hood Philips எழுதிய Constitutional Law முதலிய நூல்களைப் பார்க்கவும்.

சட்ட வகையான இறைமை யதிகாரத்துக்கு உள்ள உள்வரம்புகள் (Internal Limitations upon Legal Sovereignty): உள் ஆட்சித்துறையைப் பொறுத்தவரையில் பெரிய அளவிலும், வெளி ஆட்சித்துறையைப் பொறுத்தவரையில் குறைந்த அளவிலும், பாராளுமன்றம் தனது இறைமை யதிகாரத்தைக் கையாளுவதில் வரம்புகள் இருக்கின்றன; இவற்றை 1885ஆம் ஆண்டில் எதிர்பார்த்திருக்க இயலாது. வெளி ஆட்சியை முதலில் காண்போம்; இதில் ஐக்கிய நாடுகள் சபையில் (United Nations) ஒரு வல்லரசாக (Great Power) சேர்ந்துள்ள எந்த ஒரு நாட்டுக்கும், அந்நாடு நிறைவேற்ற வேண்டிய கடமைகளே, அது அயல் நாட்டு விஷயங்களில் தன் விருப்பம்போல் செயலாற்றக்கூடிய சுதந்திரத்தைக் கட்டுப்படுத்துவதாக இருக்கிறது; மேலும் ஐக்கிய நாடுகள் சபையிலுள்ள எந்த உறுப்பு நாடும் தனது சர்வதேசக் கடமைகளுக்கு மாறுன, அல்லது முரணுன வகையில் தனது பாராளுமன்றத்தில் சட்டம் இயற்ற இயலாது. உள்ளாட்சித்துறையிலே இறைமைக்குள்ள வரம்பானது, அரசாங்கத் துறைகளுக்கும், அரசாங்க வட்டாரங்களுக்கும் வெளியே நன்கு அமைக்கப்பட்டுத் தனியார் நலன்களை வெளிப்படுத்துகிற கழகங்களுக்கும் (Associations) இடையே கலந்து ஆலோசனை நடத்துதல் என்ற முறை விரைவாக வளர்ந்துள்ளதால், தோன்றுகிறது. இற்றை நாளில் ஒரு சிறு மசோதாவைக் கொண்டுவரும் எந்த அமைச்சரும், அவ்வாறு கொண்டுவரப்படும் சட்டப்பிரிவுகள் நன்கு அமைக்கப்பட்ட தனியார் நலன்களைப் பாதிக்குமாயின் அந் நலன்களின் பிரதிநிதிகளினுடைய கருத்துக்களை ஆராய்ந்து கொள்ளாமல் கொண்டுவருவதில்லை. இம் முறையானது, அரசாங்கத்தின் கொள்கையையுடைய பெரிய விஷயங்களிலும் கையாளப் படுவதில்லை என்பது உண்மையே; ஆனுல், மற்ற விஷயங் களில் சட்டம் இயற்றுதலில் முன்னதாகக் கலந்துகொள்வது என்பது (prior consultation) ஒரு விதியாக இருக்கிறது. உண்மையில் சில விஷயங்களில் முன்னதாகக் கலந்துகொள்ளுதல் என்ற கடமையானது ஒரு அமைச்சர்மீது ஒரு சட்டத்தின் மூலமாக விதிக்கப் பட்டுள்ளது; இதற்கு ஒரு சிறந்த எடுத்துக்காட்டு தேசீய உயிர்காப்பு ஆலோசனைக் குழு (National Insurance Advisory Committee) ஆகும்; இக் குழுவின் முன்னர் தேசீய உயிர் காப்புச் சம்பந்தமான திட்டம் எதுவும், அதனுடைய சட்ட வரைவு (draft) வடிவத்தில் வைக்கப்படுதல் வேண்டும்; இவ் வரைவுச் சட்டம் என்ற கருவியின் மூலமாகக் கட்டுப்

படுத்தும் ஆற்றல் கொடுக்கப்படுகிறது. இதனால் ஏற்படும் விளைவு என்னவெனில், ஏற்கனவே பெரும்பாலும் சட்டமென்று ஒப்புக்கொள்ளப்பட்ட ஒன்றைச் சட்டமாக ஆக்கும்படியாக வேண்டிக்கொண்டு, அரசாங்கமானது பாராளுமன்றத்திடம் வருகிறது என்பதே. இத்தகைய முன்னர்க் கலந்து கொள்வது என்பதனால் ஏற்படும் விளைவு மிக நன்றாக, 1929ஆம் ஆண்டில், அப்பொழுது தனது பொறுப்புகளில் உள்ளூர் ஆட்சித் துறையும், சேர்த்து வைத்துக்கொண்டிருந்த சுகாதார அமைச்சரகத்தினால் அமைச்சர்களின் அதிகாரங்களைப்பற்றிய குழுவுக்குச் சான்றுடன் எடுத்துக் காட்டப்பட்டது.[1] இச் சான்று கீழ்த்தர அலுவலரது சட்டம் செய்யும் அதிகாரங்களைப்பற்றியே பெரும்பாலும் கூறிற்று; எனினும் கீழ்த்தர அலுவலரது சட்டமியற்றும் அதிகாரமானது (subordinate legislation) ஒரு பாராளுமன்றச் சட்டத்தினுடைய பொதுவான பிரிவுகளை நிறைவேற்றுவதற்காகவே சாதாரணமாகக் கையாளப்படுவதால் இங்கு குறிப்பிடப்படும் சான்றானது, அரசாங்கமோ, அல்லது பாராளுமன்றமோ சட்டமியற்றும்பொழுது, நன்றாக உருவாக்கப்பட்ட பொது மக்கள் கருத்தைப் புறக்கணிக்க முடியாது என்ற கருத்தை ஆதரிக்கிறது. பாராளுமன்றத்தினால் சட்டம்செய்யும் அதிகாரம் கையாளப்படுதலில் அது பொதுமக்கள் கருத்தின் (public opinion) ஆற்றலினால் கட்டுப்படுத்தப்படுவதை அண்மையில் சில தெளிவான எடுத்துக்காட்டுகள் காட்டுகின்றன. இற்றை நாளில் சட்டமியற்றும் அதிகாரம் ஆட்சியில் இருக்கும் அரசாங்கத்தினால் கட்டுப்படுத்தப்படுகிறது; தன்னால் கொண்டு வரப்படும் திட்டங்கள் பொதுமக்கள் மன்றத்தில் (House of Commons) கொள்கை மாற்றம் எதுவுமில்லாமல், நிறைவேற்றி வைக்கப்படும் என்ற உறுதியான எண்ணமும் அதற்கு உண்டு என்றாலும், 'கருத்து மாறுபாட்டுக்கு இடமான பொருள்களைப் பற்றி, முக்கியமாக ஒழுக்கச் சார்பான குறிப்புகளடங்கிய பொருள்களைப்பற்றி ஏற்றுக்கொள்ளத்தக்க அறிவுரையை அல்லது ஆலோசனையை (advice) அரசாங்கத்துக்கு வெளியே யுள்ள மூலதாரங்களிலிருந்து, அரசாங்கமானது பெற்றாலும், அப்பொழுதுகூட, அரசாங்கமானது அத்தகைய ஆலோசனைச் சட்டத்தின் ஆற்றலைக் கொடுக்குமாறு பாராளுமன்றத்தைக் கேட்கும்' என்பது பொருளன்று. திருமணம், மணமுறிவு பற்றிய சட்டங்கள் (Marriage and Divorce Laws), பந்தயங் கட்டுதல், கேளிக்கைபற்றிச் சட்டங்கள் (Betting and Gaming

[1] Minister's Powers Report (1932-ல்) இரண்டாம் பாகம், Minutes of Evidence ஐப் பார்க்கவும்.

Laws), முதலியவற்றைப்பற்றி அண்மையில் அரசர் குழுக்களும் (Royal Commissions), ஒருபாலவர் இழைக்கும் சிற்றின்பக் குற்றங்களையும், பரத்தமையைப்பற்றி ஒரு குழுவும் (Committee on Homosexual Offences and prostitutions) பல கருத்துகளைப் பரிந்துரைகளாகக் கொடுத்தன; ஆயினும், இவற்றுள் பலவற்றின் அடிப்படையிலே அமைந்த சட்ட வரைவு ஏதும் பாராளுமன்றத்தின் முன்னர்க் கொண்டுவரப் படவில்லை; இது எதனைக் காட்டுகிறதென்றால், யாவரும் ஏற்றுக் கொள்ளத்தக்க வகையில் ஒரு கருத்தை ஓரஞ்சாராமல் ஒரு குழு கூறிவிட்டது என்ற ஒரே காரணத்தினாலேயே, பாராளுமன்றமானது சட்டத்தைக் கட்டாயமாக ஏற்படுத்தி விடாது என்பதே ஆகும். ஆலோசனைக் குழுக்களின் ஆட்சியே இப்பொழுது பெரும்பாலும் விரும்பப்படுகிற படியால் (ஒரு சட்டம் நிறைவேற்றப்படுதற்கு முன்னதாகக் கலந்தாலோசித்தல் நடக்குமென்பதும், எனவே கடைசியில் சட்டமாக நிறைவேற்றப்படுவது பாராளுமன்றத்தின் முன்னர் வருமாயின், அது பெரும்பாலும் யாவராலும் ஒப்புக் கொள்ளப் படும் சட்டமாகவே இருக்கும் என்பதும் இப்பொழுது தெளிவாக இருக்கிறது. திருமணம், மணமுறிவுச் சட்டங்கள் பற்றிய அரசர் குழுவின் அறிக்கையைப் பொறுத்தவரையில் அக் குழுவின் உறுப்பினர்கள் ஒருமனதாகக் கருத்துகளைத் தவறியமையால், அவர்களுடைய பரிந்துரைகளினால் தோன்றிய சில சிறு செய்திகளைப்பற்றி மட்டுமே சட்டம் இயற்றப்படவும், மற்றெல்லாவற்றையும்பற்றிச் சட்டம் இயற்றப்பட வாய்ப்பு இல்லாமலும் போயிற்று.[1] சட்டம் இயற்றப்படுவதற்காக முன்னரே கலந்துகொள்ளுதல் என்பதற்கு மிக அண்மையில் உள்ள ஒரு எடுத்துக்காட்டு, சிற்றின்பக் குற்றங்களைப்பற்றிய குழுவின் அறிக்கையில் (Report of the Committee on Sexual offences) காணப்படுகிறது.[2] வயதுவந்த ஒரே பாலவர் தம்முள் இயங்கிச் செய்யும் சிற்றின்பச் செயல்களை (homosexual practices between consenting adults) குற்றவழக்குச் சட்டத்தினின்றும் (Criminal law) எடுத்து விடுதல் வேண்டுமென்று இக்குழுவிலுள்ள ஒருவர் நீங்கலாக மற்றவர் யாவரும் அறிவித்தனர். இத்தகைய கருத்துக்குப் பொதுமக்கள் கருத்து ஆதரவாக இல்லை என்று காரணம் காட்டி, இந்தப் பரிந்துரைகளைப்பற்றிய பொருளின்மீது அரசாங்கம் சட்டம் கொண்டுவர மறுத்துவிட்டது. எனவே, முன்னர் கலந்துகொள்ளுதல் என்ற வழக்கத்தைவிடக் கூடுதலாகச் சட்டமியற்றும் அதிகாரத்தைக் கையாளுதலின்

[1] 1956 [2] 1952

மீது கட்டுப்பாடுகள் இருக்கின்றன என்றும், சட்டம் செய்யப் படுவதற்குரிய சில பொருள்களைப் பொறுத்தவரையில் தீர ஆய்வு செய்யப்பட்ட பரிந்துரைகள்கூட ஏற்றுக்கொள்ளப் படுவதில்லை என்றும் தெரிய வருகின்றன.

ஆயினும் இவையெல்லாம், 'முதல் உலகப்போர் முடிவடைந்த காலத்திலிருந்து, முன்னரே கலந்து கொள்ளுதல் என்ற ஒரு கடமைக்குச் சட்டத்தின் ஆற்றலைக் கொடுக்காமல், ஆலோசனைக் குழுவின் ஆட்சிமுறை மிகவும் விரும்பி ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளது' என்ற கருத்தின் உண்மையை மறுக்க வில்லை. இந்த வரம்பானது சட்டத்தின் ஒப்புதல் இல்லாத ஒன்று ஆகும்; ஆயினும், நாம் முன்னரே பார்த்துள்ளவாறு, சட்டம் இயற்றுதலின் மூலமாகச் செயல்படுத்துவதற்கு முன்னர், அது பற்றிய ஆலோசனையைப் பெறுதல் என்பது ஒரு தெளிவான நிபந்தனையாக இப்பொழுது சாதாரண பழக்கத்தில் வந்து விட்டது; இதன் விளைவு என்னவெனில், சட்டங்களைச் செய்வதற்கோ, நீக்குவதற்கோ பாராளுமன்றத்தின் இறைமை அதிகாரமானது அமைச்சரால் வேண்டப்படுவதற்கு முன்னதாக, முக்கியமாக உள்நாட்டின் பொதுப்பணித்துறைகளைப் பொறுத்தவரையில், அவற்றுக்கேற்ற ஆலோசனைக் குழுவின் அறிவுரையை அல்லது ஆலோசனையை அமைச்சர் கேட்டுப் பெறுதல் வேண்டுமென்ற சாதாரணமான செயல்முறை தோன்றிவிட்டது என்பதே ஆகும். அமைச்சர் தான் விரும்பிய அளவுக்குப் பிரதிநிதித்துவ இயல்புடைய பல குழுக்களைக் கலந்து ஆலோசிக்கலாம். இத்தகைய கலந்தாலோசனைகளின் விளைவாகத் தோன்றும் மசோதாவானது எங்கு ஒரு சட்டத்தின் ஆற்றல் கொடுக்கப்படுகிறதோ, அத்தகைய பாராளுமன்றத்தின் முன்னர் வரும்பொழுது, அது, அதிலுள்ள ஒருசில விஷயங்களைத்தவிர, யாவராலும் ஒப்புக் கொள்ளப்பட்ட வழக்கமான ஒரு மசோதாவாகவும், அதனுடைய செயல்களினுல் மிகவும் பாதிக்கப்படுபவர்களால் கூட அது விருப்பமில்லாமல் ஏற்றுக்கொள்ளப்படுவதாகவும் இருக்கிறது. ஒப்படைக்கப்பட்ட சட்டமியற்றும் அதிகாரத்தைப் பொறுத்தவரையிலும் (delegated legislation) இந்த நிலை உண்மையே. இவ் வகையான சட்டம் இயற்றும் அதிகாரம் இல்லாவிட்டால், இறைமையான பாராளுமன்றத்தால் தனது ஆட்சியின் எல்லையை விரிவுபடுத்தியிருக்க இயலாது. இவ் வகையான சட்ட அதிகாரத்தின் விளைவு யாதெனில், பாராளுமன்றத்தின் கட்டுப்பாட்டு அதிகாரத்தைப் பலவீனப் படுத்துதல் என்பதே; ஆயினும் இவ் விளைவு, அதிகாரம்

வேறொருவருக்கு ஒப்படைக்கப்படும்போது தோன்றுவது இயல்பே. என்றாலும், விதிகளை ஏற்படுத்தும் அதிகாரத்தை உண்டாக்கியுள்ள சட்டம் அதற்கு என்னென்ன வரம்புகளை விதித்திருக்கிறதோ, அந்த வரம்புகளுக் குட்பட்டே சட்டமியற்றும் அதிகாரத்தைப் பெற்றவர் இருக்கிறாரா என்று உறுதி செய்துகொள்ளும்பொருட்டு நீதிமன்றங்கள் தலையிடுதல் கூடும்.

இவ்வாறு அரசியல் வகையாகப் பாராளுமன்றத்துக்கு இருக்கும் உயர்தர அதிகாரமானது (political supremacy of parliament), ஒரு சட்டமியற்றும் உறுப்பாகச் சட்டபடியான முழு ஆற்றலினின்றும் வேறுபட்டு, இப்பொழுது நடைமுறையி லல்லாமல் போய்க்கொண்டிருக்கிறது. எல்லாச் சட்டமும், ஒன்றுக்கொன்று முரண்பாடான பல நலன்களையும் (conflicting interests) முரணின்றி ஒருமைப்படுத்தியதனால் (compromise) தோன்றியதே ஆகும். சட்டமன்றம் மட்டும் செயல்பட்டால் உண்மையான பிரதிநிதித்துவ அரசாங்கமென்பது, ஓரளவு தான் நடைமுறையில் இயங்கும். ஆயினும், சட்டம் இயற்று வதற்கு முன்னர் கலந்து கொள்ளுதல் என்ற வழக்கம் இருப்பத னால், கோட்பாடுகளைப்பற்றிய விஷயங்களில் அரசாங்க மானது பிறர் சொல்வதை ஏற்றுக்கொண்டாக வேண்டு மென்பது பொருளன்று. எடுத்துக்காட்டாக, போர்க் கருவிகளை அரசாங்க ஆணைகளின்மீது செய்து அளிக்கக்கூடிய ஒரு சிறிய, வலி மிக்க தொழிற்சங்கம் மறுப்பு தெரிவிப்பதன் மூலமாக ஒரு நாட்டின் அயல்நாட்டுக் கொள்கையானது மாறிவிடக்கூடும் என்றிருந்தால், அது மிக்க இடர்ப்பாட்டை விளைவிக்கக்கூடிய கோட்பாடு ஆகும். சட்டம் இயற்றுவதற்கு முன்னதாக அமைச்சர் தனியார் நலன்களைக் கலந்து கொள்ளுதல் என்பது சட்டப் பொருளிலுள்ள விவரங்களைப்பற்றிதான் நடை முறையில் இருக்குமே தவிர, கோட்பாட்டிலுள்ள அடிப்படை யான கேள்விகளைத் தீர்மானிப்பதாக இராது. அரசர் குழுக்களின் பரிந்துரைகளை ஏற்பதற்கு அரசாங்கம் மறுத்து விட்டதிலிருந்து தெரிவது என்னவென்றால், பாராளு மன்றத்துக்கு வெளியே யாவராலும் ஒப்புக்கொள்ளப்படக் கூடிய கருத்து தெரிவிக்கப்பட்டது என்ற காரணத்திற்காகப் பாராளுமன்றம் அதனை ஏற்றுக் கொள்ளுதற்காகக் கட்டாய மாகக் கூட்டப்படாது என்பதே.

இறைமையைப் பெற்றிராத சட்டமன்றங்கள் (Non-Sovereign Legislatures): டைசி தனது நூலை எழுதிய

காலத்திலிருந்த குடியேற்ற நாடுகளின் அரசியலமைப்புகளை, ஓரளவுக்குச் சட்டங்களை இயற்றக்கூடிய அதிகாரங்களைப் பெற்றிருந்த இரயில்வே கழகங்கள், பள்ளி நிர்வாகக் குழுக்கள், நகராண்மைக் கழகங்கள் முதலியவற்றோடு ஒப்பிட்டுக் கூறினர். இக் காலத்தில், காமன்வெல்த்தைச் சேர்ந்த எந்த மாணவரும், 1885ஆம் ஆண்டில் ஒரு குடியேற்ற நாடாக இருந்த நியூஸீலாந்தின் அரசியலமைப்புச் சட்டத்தை கேம்பிரிட்ஜ் நகராண்மையின் துணைச்சட்டங்களோடு கூறத் துணியமாட்டார்; என்றாலும் டைசி, மேற்படி அரசிய லமைப்புச் சட்டத்தைப் பழைய கிரேட் வெஸ்டர்ன் இரயில்வே கழகத்தின் துணைச் சட்டங்களோடு ஒப்பிடுதல் பொருத்தமே என்று எண்ணினர். காமன்வெல்த்திலுள்ள இறைமையைப் பெற்றிராத சட்டமன்றங்களை ஆங்கில உள்ளூர்க் கழகச் சட்டத்தின்படி இயங்கும் சட்டப்படியான கழகங்களோடு ஒப்பிடுதல் முற்காலத்தில் பொருத்தமில்லாமல் இருந்ததைப் போலவே, இப்பொழுதும் பொருத்தமின்றி இருக்கிறது; காமன்வெல்த்தில் இறைமையைப் பெற்றிராத சட்டமன்றங்கள் இருக்கின்றன. குடியேற்ற நிலங்களிலுள்ள சட்டமன்றங்களும், சுய ஆட்சி நிலைமையை நோக்கி முன்னேற்றமடைந்துள்ள குடியேற்ற நிலங்களின் சட்டமன்றங்களும், அவ்வந் நாடுகளின் 'அமைதிக்கும், ஒழுங்குக்கும், நல்லாட்சிக்கும்' ஏற்ற சட்டங்களைச் செய்வதற்கு அதிகாரம் கொடுக்கப்பட்டுள்ளன. இச் சொற்கள் ஒரு உள்ளூர்ச் சட்டமன்றத்துக்குச் சட்டம் இயற்றும் முழு அதிகாரத்தை வழங்குகின்றன; மேலும் எந்த ஒரு குடியேற்ற நாட்டின் நீதிமன்றமாவது, (அந்நாட்டுச் சட்டமன்றத்தால் செய்யப்பட்ட) எந்த ஒரு சட்டத்தையும் செல்லுபடியாகாது எனவும் தேவையற்றது எனவும் கூறவோ, அல்லது நல்லாட்சிக்கும், ஒழுங்குக்கும் முரணானதென ஒரு நீதிமன்றத்தால் கருதப்படக்கூடிய பிரிவுகளை அச் சட்டம் கொண்டு இருக்கிறது எனவோ தீர்ப்பு அளிக்காது. சட்டமியற்றக் கூடிய அதிகாரமானது, அந்த அரசியலமைப்புச் சட்டத்திலேயே அடங்கியுள்ள வரம்புகளால் மட்டுமே கட்டுப்படுத்தப்பட்டிருக்கிறது. சாதாரணமாக, இத்தகைய அரசியலமைப்புச் சட்டங்களெல்லாம், அரசர் தனது விசேட அதிகாரங்களைக் (prerogative power) கையாளுதலின் மூலமாகவே தோன்றுகின்றன. ஆயினும் இவ் விதிக்கு விலக்காக இவ் வரசியலமைப்புச் சட்டங்களெல்லாம், அரசருடைய விசேட அதிகாரமானது எங்கு விட்டுவிடப்பட்டிருக்கிறதோ, அந்த யுனைட்டெட் கிங்டத்துப் பாராளுமன்றத்தினுடைய ஏதாவதொரு

சட்டத்தில்தான் அடங்கியிருக்கின்றன; இது விசேட அதிகார மானது, இறைமையை உடைய சட்ட மன்றத்தினுல் ஒதுக்கி வைக்கப்பட்டு அல்லது தள்ளி வைக்கப்பட்டு இருப்பதைக் (superceded) காட்டுகிறது. எனவே, ஒருகுடியேற்ற நாட்டின் சட்டமன்றமானது, குடியேற்ற நாட்டிலுள்ள மற்ற அதிகாரி களுக்குச் சட்டம் செய்யும் அதிகாரங்களை ஒப்படைக்கும் சட்டங்கள்உள்ளிட, எந்தச் சட்டத்தையும் செய்தற்கு ஆற்றல் அல்லது தகுதியுடையது. அச் சட்டமன்றமானது தனது அலுவல்களைத் துறந்துவிட முயற்சிக்காமலும், அல்லது இதனை அது செய்தல் ஐயப்பாட்டிற்குரியதாயினும், அது தனது சட்டங்களுக்குத் தனது நிலஎல்லைக்கப்பாலும் கட்டுப்படுத்தும் ஆற்றலைக் கொடுக்காமலும் இருக்கும்வரை, அக் குடியேற்ற நாட்டின் நீதிமன்றங்கள் குடியேற்றநாட்டுச் சட்டமன்றத்தின் சட்டங்களை உரிமை வரம்புக்கு அப்பாற்பட்டவை எனக் (ultra vires) கூறமாட்டா.

எனினும், குடியேற்ற நாட்டுச் சட்டமன்றங்களின் அதிகாரங்களுக்கு ஒரு முக்கியமான வரம்பு இருக்கிறது. இது 1865ஆம் ஆண்டின் குடியேற்ற நாட்டுச் சட்டங்களின் செல்லுபடியாகும் தன்மையைப்பற்றிய சட்டத்தின் 5ஆம் பிரிவில் காணப்படுகிறது;'ஒவ்வொரு குடியேற்ற நாட்டின் பிரதி நிதித்துவச் சட்டமன்றமும் தனது அமைப்பு, அதிகாரங்கள், செயல் முறைகள் ஆகியவற்றை ஒட்டிச் சட்டங்களை இயற்றுவ தற்கு அதிகாரத்தைப்பெற்றிருக்கும்; ஆனுல், அச் சட்டங்கள், குடியேற்ற நாட்டில் அவ்வப்போது நடைமுறையில் இருந்து வரும் பாராளுமன்றச் சட்டம், பாதுகாப்பு உரிமைப்பத்திரம் (letter patent), கௌன்சில் ஆணை (Order in Council) அல்லது குடியேற்ற நாட்டுச் சட்டங்கள் ஆகியவற்றினுல் விதிக்கப் பட்ட வகையிலும், வடிவத்திலும் நிறைவேற்றப்பட்டிருத்தல் வேண்டும்,' என்று மேற்படிச் சட்டத்தின் 5ஆம் பிரிவு கூறுகிறது. பிரதிநிதித்துவச் சட்டமன்றம் என்பதற்குச் சட்டப் படியாகக் கொடுக்கப்படும் வரையறை யாதெனில், தேர்ந் தெடுக்கப்பட்ட உறுப்பினர்களைப் பெரும்பான்மையாக (majority) உடைய சட்டமன்றம், அல்லது இரண்டு மன்றங்கள் இருந்தால், கீழ்ச்சபை என்பதே. எனவே, மற்ற வற்றைவிட முன்னேற்றமடைந்துள்ள குடியேற்ற நாடுகளில் தான் சட்டமன்றமானது அரசியலமைப்புச் சட்டத்தை மாற்ற இயலுமென்பது நடைமுறையில் விளங்குகிறது; மேலும், இவ்வாறு அது செய்யும்போது, அத்தகைய சட்டம் செய்வதற்காக அரசியலமைப்புச் சட்டத்தில் கூறப்பட்டுள்ள

செயல்முறையை அச் சட்டம் பின்பற்ற வேண்டுமென்பதும் பொருளாகிறது. இத்தகைய செயல் முறையும் சாதாரணமாக வெஸ்ட்மின்ஸ்டர் பாராளுமன்றச் சட்டம் ஒன்றிலோ, அல்லது யுனைட்டெட் கிங்டத்திலுள்ள அரசாங்கத்தின் ஆலோசனையின் பேரில் மாட்சிமிக்க அரசியாரால் விடுக்கப்பட்ட பாதுகாப்பு உரிமைப் பத்திரத்திலோ கூறப்பட்டிருக்கும். ஒரு குடியேற்ற நாட்டின் சட்டமன்றமானது, இவ்வாறு விதிக்கப்பட்ட வகையையும், வடிவத்தையும் பின்பற்றுமல் தனது அரசியலமைப்புச் சட்டத்தை மாற்ற முயலுமாயின், அப்பொழுது, அதனுடைய அச் சட்டம் குடியேற்ற நாட்டின் நீதி மன்றங்களால் உரிமை வரம்புக்கு அப்பாற்பட்டதாகத் தள்ளி விடப்படும்.

நியூசௌத்வேல்சின் அரசாங்க வழக்கறிஞருக்கும், டிரெத்தோவன் என்பவருக்கும் 1932-ல் நடந்த வழக்கில் (Attorney-general for New South Wales v. Trethowan) பிரிவி கௌன்சிலின் நீதிக் குழுவானது, ஆஸ்திரேலிய உயர்நீதி மன்றத்தின் தீர்ப்பை உறுதிசெய்தது; மேற்படி உயர் நீதி மன்றம் நியூசௌத்வேல்சின் சட்டமன்றக் கௌன்சிலை நீக்கி விடுதல் வேண்டுமெனக் கூறும் ஒரு மசோதாவைச் செல்லுபடியாகாததெனத் தீர்ப்புக் கூறிற்று. 'இத்தன்மையதான எந்த ஒரு மசோதாவுக்கும் பாராளுமன்றத்தின் ஒப்புதலோடு கூட, வாக்காளர்களுடைய ஒப்புதலும் இருந்தால்தான் சட்டமாக ஆகும்' என்று கூறும் ஒரு சட்டம் ஏற்கனவே இருந்து வந்தது; இந்தச் சட்டத்தின் பிரிவுகளை ஒட்டி, மேற்படி மசோதா (அதாவது சட்டமன்றக் கௌன்சிலை நீக்கும் மசோதா) நியூசௌத்வேல்சின் பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்படவில்லை. 'வாக்காளர்களுடைய ஒப்புதலைப் பெறுதல் வேண்டுமென்று விதிக்கும் இந்த முந்திய சட்டமானது, எதிர்காலத்தில் வரும் ஒரு பாராளுமன்றத்தின் சுதந்திரத்தைத் தடுப்பதாகு மாகையால் அச் சட்டம் செல்லுபடியாகாது' என்று இவ் வழக்கில் கூறப்பட்ட விவாதத்தை பிரிவி கௌன்சில் ஏற்க மறுத்தது. உண்மையில் 'பாராளுமன்றத்தின் இறைமையிலே, பிற்காலத்து வரும் பாராளுமன்றத்துக்கு எந்தச் சட்டத்தையும் செய்யவோ, நீக்கவோ கூடிய உரிமையும் அடங்கியுள்ளது' என்ற டைசியின் கருத்துரையை (இவ் வழக்குக்கு) பொருந்தக் கையாளுவதே மேற்கூறிய வாதத்தின் நோக்கமாகும். ஆயினும் டைசி தனது கருத்துரை கீழ்ப்பட்ட நிலையிலுள்ள (subordinate) சட்டமன்றங்களுக்குப் பொருந்துவதென்று ஒருபோதும் கூறவில்லை.

நியூசௌத்வேல்சின் சட்டமன்றமானது குடியேற்ற நாடுகளின் சட்டங்களைப்பற்றிய சட்டத்தின் 5ஆம் பிரிவினால் வரம்புக் குள்ளாக்கப்பட் டிருக்கும் அளவுக்கு, அது இறைமை யில்லாததேயாகும். 'சட்டப்படியான ஒரு இறைமை அதிகாரி, தன்மீதே சட்டப்படியான வரம்புகளை ஏற்படுத்திக் கொள்ளுதல் கூடும்' என்ற ஒரு கருத்துரையை விளக்குவதாக மேற்கூறிய இந்த வழக்கை, ஆசிரியர் டைசியின் கருத்தைக் குறை கூறுவோர் எடுத்துக் காட்டுகின்றனர்[1]. ஆயினும் நாம், டிரெத்தோவன் வழக்கில் நீதிபதிகள் தீர்ப்பளித்து 'இது யுனைட்டெட் கிங்டத்தின் பாராளுமன்றச் சட்டத்தோடு பொருத்தமில்லாத, கோட்பாடாகிய சட்ட உரிமைக்கு அப்பாற்பட்டது என்னும் கோட்பாட்டைக் (principle of ultra vires) கையாளுவதேயாகும்' என்று கூறிய கருத்தை நாம் ஏற்றுக்கொள்வோம்[2].

இவ்விடத்து (1955-ல்) ஹார்ப்பருக்கும் உள்நாட்டுச் செயலருக்கும் இடையே தோன்றிய வழக்கில் (Harper v. Home Secretary) ஆய்வு செய்யப்பட கருத்தாகிய பாராளு மன்றத்துக்கும், உயர்நீதிமன்றத்துக்கு மிடையே உள்ள உறவைப்பற்றிய கருத்தை நாம் நமது கவனத்துக்குக்கொண்டு வருதல் வேண்டும். ஆலோசனை மன்றத்திலுள்ள அரசியாரிடம் (Queen in Council) கௌன்சில் ஆணையின் வரைவை (draft Order in Council) உள் நாட்டுச் செயலர் கொடுப்பதைத் தடைசெய்யும்படியான ஒரு தடை ஆணையை (injunction) விடுப்பதற்கு மேற்படி வழக்கில் முறையீட்டு நீதிமன்றம் (Court of Appeal) மறுத்தது. டிரெத்தோவன் வழக்கில் நியூ சௌத்வேல்சின் உயர் நீதி மன்றம் (Supreme Court), அம் மாகாணத்துப் பாராளுமன்ற அலுவலர் அதன் ஆளுநரிடம் (Governor) அவரது ஒப்புதலுக்காக ஒரு மசோதாவை அளிப்பதைத் தடுக்கும் பொருட்டு ஒரு தடையாணையை வழங்கிற்று. பிரிவி கௌன்சில் இந்த மசோதா செல்லுபடி யாகாதெனக் கருதிய காரணத்தினால், மேற்படித் தடையாணை சரியாக வழங்கப்பட்டதா என்று தீர்ப்புக் கூறும்படி பிரிவி கௌன்சில் கேட்கப்படவில்லை.

[1] Gennings எழுதிய The Law and the Constitution, 1950 என்ற நூலின் 148ஆம் பக்கத்தைப் பார்க்கவும்.

[2] H.W.R. Wade எழுதிய The Basis of Legal Sovereignty (1955) என்ற நூலின் 177-183 பக்கங்களைப் பார்க்கவும். டைசியைக் குறை கூறுவோரால் டிரெத்தோவன் வழக்கானது, யுனைட்டெட் கிங்டத்துப் பாராளுமன்றமானது தனக்குப் பின்வரும் பாராளுமன்றங்களைக் கட்டுப் படுத்த இயலும் என்ற வாதத்துக்கு ஆதரவாகக் கையாளப்பட்டது என இக் கட்டுரை குறிப்பிடுகிறது.

1911ஆம் ஆண்டில் பாராளுமன்றச் சட்டம் செய்யப் பட்ட காலத்திலிருந்து யுனைட்டெட் கிங்டத்துப் பாராளு மன்றமே, தனது சட்டம் செய்யும் அலுவலுக்காக வேறு வகை ஒன்றையும், வேறு வடிவம் ஒன்றையும் வகுத்திருக்கிறது என்று சில சமயம் கூறப்படுகிறது. பாராளுமன்றச் சட்டத்தி லுள்ள செயல் முறையின்படி, அரசியாருக்கும் பொதுமக்கள் மன்றத்துக்கும் சட்டம் செய்யும் அதிகாரம் ஒப்படைக்கப் பட்டிருத்தல் ஒரு வடிவமாகும் என்று வேறு ஒரு கருத்துக் கூறப்படுகிறது. இப் பாராளுமன்றச் சட்டமே சாதாரணச் சட்டமியற்றும் முறையின் மூலம் திருத்தி அமைக்கப்படக் கூடும்; ஆகையால், இத்தகைய சீர்திருத்தம் செய்யப்படுதற் கான முறையைப் பற்றியும், வடிவத்தைப் பற்றியும் எக் கேள்வியும் எழவில்லை. பிரபுக்கள் சபையை (House of Lords) நீக்குவதற்குப் பெரும்பான்மையான வாக்காளர்கள் வெளிப் படையாக ஒப்புக்கொண்டாலல்லாமல் அதனை நீக்குதல் கூடாதெனவும் இவ்வாறு அதனை நீக்கும் சட்டத்தையே நீக்குவதற்கான சட்டமும் மேற்கூறியதைப் போன்ற குடியொப்பத்தின் மூலமாகவே (referendum) நிறைவேற்றப் படுதல் வேண்டுமெனவும், பாராளுமன்றம் ஒரு சட்டத்தை இயற்றுவதாக சர் ஐவர் ஜென்னிங்ஸ் கூறுகிறபடி வைத்துக் கொள்ளுவோம்; அப்படியிருந்தாலும் மேற்படி நீக்கும் சட்டத்தைப் பெரும்பான்மையான வாக்காளர்களின் ஒப்புதலைப் பெறுமலேயே பாராளுமன்றம் நிறைவேற்றுவதை எதுவும் தடுக்க இயலாது. குடியொப்பம் இருத்தல் வேண்டு மென்று விதிக்கின்ற சட்டம் நிறுவுவது என்னவென்ருல் ஒரு குடியொப்பம் இல்லாமல் நீக்கம் (repeal) இருத்தல் கூடாது என்பதே சட்டத்தைச் செய்த பாராளுமன்றத்தின் நோக்கம் என்பதே. குடியேற்ற நாடுகளின் சட்டங்களைப் பற்றிய சட்டமானது (Colonial Laws Validity Act) யுனைட்டெட் கிங்டத்துப் பாராளுமன்றத்துக்குப் பொருந்து மென்பதாகக் கருத்துடன் வாதிட முடியாது; மேலும், நாம் முன்பே பார்த் துள்ளபடி, ஒரு பாராளுமன்றச் சட்டத்தை விரிவுபடுத்தி நிலையாக ஆக்குவதற்கு எந்த வழியும் எந்த திறமான சட்டத்தை வரைபவருக்கும் கிடையாது. பாராளுமன்றத்தின் இறைமை என்ற பழமையான கோட்பாட்டை மறுப்பதற்கோ, அல்லது, அதனைக் கூறிய ஆசிரியரின் தவருன கருத்து அது என்று அதனைத் தள்ளிவிடுவதற்கோ, டிரெத்தோவன் வழக்கை எடுத்துக்காட்ட இயலாது. எந்தஒரு ஆங்கில நீதிபதியின் கருத்துக்கும் ஆதரவாக இருப்பது, நீதித் துறைத் தொழிலிலேயே அவருக்கு மூத்தோராயுள்ளவர்க

ளுடைய கருத்துகளேயாம்; இத்தகையோருள் பேக்கனுடைய (Bacon) கருத்து நூலில் தரப்படுகிறது. ஆனால், ஆங்கிலச் சட்டத்தின்கீழ் இயங்கும் சட்டப்படியான கழகங்களின் நிலைமையோ வேறு. பிரதிநிதித்துவமும், பொறுப்பும் கொண்ட அரசாங்கத்தையுடைய குடியேற்ற நாடுகளின் சட்டமன்றங்களை இரயில்வேக் கழகங்களோடு டைசி ஒப்பிட்டுக் கூறினார்; இரயில்வேக் கழகங்கள் தனியார் நிர்வாகத்தில் இயங்கிய காலத்தில்கூட துணைச்சட்டங்களை இயற்றுவதற்கு ஓரளவு அதிகாரங்களைப் பெற்றிருந்தனர்; இத்தகைய அதிகாரங்களைக் கௌண்ட்டி மன்றங்கள் (county councils) போன்ற உள்ளூர் அதிகாரிகளும் பெற்றிருந்தனர். ஆயினும், மேற்படி கழகங்களும், காரணத்துக்கு மாறான, கடுமையான துணைச் சட்டங்களைச் செய்யக் கூடாது; செய்யவும் இயலாது; மேலும் சட்டப்படியான அதிகாரம் தமக்கு இருந்தாலல்லாமல் அவை தமது சட்டமியற்றும் அதிகாரங்களை வேறொன்றிடம் ஒப்படைக்கவும் இயலாது. வேறுவகையாகச் சொன்னால், குடியேற்ற நாடுகளின் சட்டமன்றங்களின் அதிகாரங்கள் அவற்றுக்குரிய எல்லைகளுக்குள் இறைமையாக இருக்கின்றன எனவும், அவை அரசியலமைப்புச் சட்டம் ஒன்றினாலேதான் வரையறைக்குள்ளாக இருக்கின்றன எனவும், ஆனால் உள்ளூர் அதிகாரிகளின் (local authorities) சட்டங்களினுடைய செல்லுபடியாகுந் தன்மையும், இதைவிடத் துணைச் சட்டங்களை இயற்றக்கூடிய அதிகாரங்களைப் பெற்றிருக்கிற வாணிபக் கழகங்களினுடைய சட்டங்களின் செல்லுபடியாகும் தன்மையும் நீதி மன்றங்களினால் ஆய்வு செய்யப்பட்டுத் தீர்க்கப்படுதற்கு உரியன எனவும் கூறலாம். இவற்றுள் முற்கூறப்பட்டுள்ள அதிகாரங்கள் முழுமையான அதிகாரங்கள்; பிற்கூறப்பட்டவை அவை வழங்கப்பட்ட வடிவத்தினால் வரம்புக்குள்ளாகி இருக்கின்றன.

ஒண்ட்டாரியோ (Ontario) மாகாணத்தின் சட்டமன்றமானது, ஒரு ஆணையர் குழுவுக்கு அம் மாகாணத்தில் உள்ள 1877ஆம் ஆண்டின் மதுபானம் விற்கும் தனி உரிமைச் சட்டத்தை ஒட்டிச் சில விதிகளைச் செய்யவும், அக் குற்றங்களுக்குத் தண்டனைகளை இணைக்கவும் அதிகாரங்களை வழங்குவதற்கு அதிகாரம் உடையதா, இல்லையா என்ற கேள்வி, 1883ஆம் ஆண்டில் ஹாட்ஜ் என்பவருக்கும் அரசியாருக்குமிடையே தோன்றிய வழக்கில்[1] எழுந்தது. இத்தகைய

[1] Hodge v. The Queen.

அதிகாரம் உண்டு என்ற கருத்தைப் பிரிவிகௌன்சிலின் நீதிக்குழு தெரிவித்தது. மாகாணச் சட்டமன்றங்கள் 1867ஆம் ஆண்டின் பிரிட்டிஷ் வடஅமெரிக்கச் சட்டத்தின்படி, பேரரசுப் பாராளுமன்றத்தினுடைய (Imperial Parliament) பிரதிநிதிகளாகவோ, அல்லது அதனுடைய ஆணையைப் பெற்று அதனை ஒட்டி நடப்பவைகளாகவோ ஒருபோதும் இல்லை. மேற்படி சட்டமானது, அதில் வரையறுக்கப்பட்ட பொருள்களைப்பற்றி ஒண்ட்டாரியோ மாகாணத்துக்காகச் சில சட்டங்களைச் செய்யும்பொருட்டு அதற்கெனத் தனியான அதிகாரத்தையுடைய ஒரு சட்டமன்றத்தை ஒண்ட்டாரியோ மாகாணத்துக்காக உண்டாக்கிற்று. அச் சட்டமன்றம், இச் சட்டத்தின் மூலம், பேரரசுப் பாராளுமன்றத்தினிடமிருந்து அதன் பிரதிநிதியாகவோ அல்லது செயலாளராகவோ கையாளுவதற்காக எவ்வகையிலும் அதிகாரங்களைப் பெற வில்லை; ஆனல் இச் சட்டம், பேரரசுப் பாராளுமன்றம் தனக்கு இருந்ததைப்போல, அல்லது தான் வழங்கக்கூடிய அளவுள்ள முழுமையான, நிறைவான அதிகாரத்தைக் கூட்டரசுச் சட்டத்துக்கு எதிராக மாகாணச்சட்டத்துக்கு விதிக்கப் படும் வரம்புகளுக்கு உட்படுத்தி வழங்கிற்று[1]. எனவே, சட்டம் என்ற விஷயத்தின் அளவிலே, மேற்கூறிய ஒரு சட்ட மன்றத்தின் அதிகாரங்களுக்கும், சில தனிப்பட்ட பொருள் களைப் பற்றித் துணைச் சட்டங்களை இயற்றக்கூடிய ஒரு நகராண்மைக் கழகத்தின் அதிகாரங்களுக்கும் இடையே ஒப்புமை காணப்பட இயலாது; நகராண்மைக் கழகமானது, தனது சொத்தை நல்ல வகையாக ஆளுதற்காக ஒரு சட்ட மன்றமாக இருந்து செயல்படுவதற்குச் சட்டத்தில் எந்த அதிகாரமும் கிடையாது; ஆனல், அது தெளிவாக பாராளு மன்றத்திடமிருந்து துணைச் சட்டங்களை இயற்றும் அதிகாரம் ஒப்படைக்கப்பட்டு, அதனைக் கையாளுகின்ற ஒரு பிரதிநிதியே ஆகும். இவ் வளவில்கூட ஒரு வாணிபக்கழகத்தால் செயல்பட இயலாது.

பாராளுமன்ற இறைமையும், கூட்டரசுக் கோட்பாடும் (Parliamentary Sovereignty and Federalism): 'ஒன்றோடொன்று ஒரே இனமாக இணைந்தும், ஒன்றிலிருந்து மற்ற ஒவ்வொன்றும் சுதந்திரமாகவும் உள்ள உறுப்புகளுக்கு (bodies) வரம்புக்குட் பட்ட நிர்வாக அதிகாரங்களையும், சட்டமியற்றும் அதிகாரங் களையும், நீதிவழங்கும் அதிகாரங்களையும் பிரித்து அளிப்பது

[1] Queen v. Burah (1878) வழக்கையும், Powell v. Apollo Candel Company (1885) வழக்கையும் பார்க்கவும்.

தான்' கூட்டரசுத் தத்துவத்தின் முக்கியமான இயல்பு ஆகும். ஒரு சங்கமாக (Union) இணைவதற்கு விருப்பத்தோடும், ஆனால் அதே சமயத்தில் தத்தம் தனித்தன்மையை ஒரே முழுமை நிலையில் (unity) கலந்துவிட ஆயத்தமில்லாமலும் இருக்கும் உறுப்பு மாகாணங்களின் தனிப்பட்ட தேவைகளை நிறைவு செய்வதற்காக(கூட்டரசில், கூட்டரசுக்கும் மாகாணங்களுக்கும் இடையே) அதிகாரமானது வெகு நுட்பமான அளவில் சமநிலையில் (delicate balance of power) அமைக்கப்பட்டிருக்கிறது; இந்த நுண்ணியச் சமநிலையைக் கூட்டரசின் சட்டமன்றமோ அல்லது உறுப்பு மாகாணங்களின் சட்டமன்றங்களோ மாற்றவோ அல்லது அழிக்கவோ செய்யாதபடி அவற்றைத் தடுக்கும்பொருட்டு, அதனுடைய அரசியலமைப்புச் சட்டம் தலைமையானதாக இருத்தல் வேண்டுமென்பது கூட்டரசு நாட்டின் அடிப்படையான நிலைமை ஆகும். அரசியலமைப்புச் சட்டத்தின் தலைமை (Supremacy of the Constitution) என்ற இந்த நிலைமையானது, அதிகாரங்களின் பகிர்ந்தளிப்புத் திட்டத்தை விளக்கம் செய்பவராக இயங்கும் சுதந்திரமுடைய நீதிமன்றத்தின் அதிகாரத்தினால் பாதுகாக்கப்படுகிறது. கூட்டரசின் அல்லது மாகாணத்தின் சாதாரணச் சட்டமியற்றும் முறையினால் அரசியலமைப்புச் சட்டத்தில் எந்த மாறுதலும் செய்யப்பட இயலாது.

எனவே, இதிலிருந்து நாட்டின் ஒற்றுமைக்காகக் கூடுதலான அதிகாரத்தை ஒரு கூட்டரசு அரசாங்கம் பெறுதல் என்பது, அரசியலமைப்புச் சட்டத்தைத் திருத்துவதன் மூலமாகத்தான் சட்டபூர்வமாக நடைபெற முடியும் என்பது பெறப்படுகிறது. இத்தகைய அதிகாரத்தைப் பெறுவதற்காக எத்தகைய வடிவம் விதிக்கப்பட்டிருப்பினும், அதனை நடைமுறையில் செய்வது கடினமே ஆகும். ஏனென்றால்,இச் செயல் கூட்டரசை ஏற்படுத்தியுள்ள மாகாணங்கள் நடு அரசாங்கத்துக்கு அதிகாரங்களை விட்டுவிட வேண்டும் என்ற பிரச்சினையைத் தெளிவாக எழுப்புகிறது. கூட்டரசு அரசாங்கத்துக்கும், மாகாண அரசாங்கங்களுக்கும் இடையே உள்ள உறவுகளில் பெருத்த மாறுதல் ஏற்படுதல் வேண்டுமெனக் கூட்டரசு அரசாங்கம் கருதினால், அதிலுள்ள செயலர் குழு (cabinet) அதனைச் செய்வதற்காக நேராக அரசியலமைப்புச் சட்டத்தைத் திருத்துவதை மேற்கொள்ளாமல், அரசியலமைப்புச் சட்டத்தின் வெளிப்படையான விதிகளையோ அல்லது குறிப்பான விதிகளையோ நேராக மீறுத வகையில் தேசீய ஒற்றுமை என்ற நோக்கத்தை

நிறைவேற்றுவதற்கு உகந்த சட்டத்தைச் செய்யும்; இதனையே கடந்தகால அனுபவம் காட்டுகிறது. இதற்கான எடுத்துக் காட்டுகளை 1930ஆம் ஆண்டுகளில் யுனைட்டெட் ஸ்டேட்சின் ஆட்சியாளரால் அதன் காங்கிரஸ் சட்டமன்றத்துக்கு அளிக்கப் பட்ட புதிய பொருளாதாரப் பங்கு முறைச் சட்டங்களில் (New Deal legislation) நாம் காணலாம். பொருளாதாரத் துறையில் ஏற்பட்ட உறைபனிப்புயல் போன்ற மந்தநிலையின் கடுமையான தீங்குகளைத் தவிர்ப்பதற்காகக் கூட்டரசு அரசாங் கத்தின் செயல் அல்லது நடவடிக்கை தேவை என்று கருதப் பட்டது. தேசீய அளவில் வறியவர்களுக்கு உதவி யளிப்பதற் காகவும், வேலையில்லா நிலைமையைக் குறைப்பதற்காக அரசாங்கம் அலுவல்களை மேற்கொள்ளுவதற்காகவும், வாணிபத்தையும், தொழிலையும் கட்டுப்படுத்துவதற்காகப் பல்வேறு இயல்புள்ள விதிகளைச் சட்டம் தோற்றுவித்தது. அரசியலமைப்பு விதித்த வரம்புகளுக் குள்ளாக அமைக்கப் பட்ட இச் சட்டத்தின் செல்லுபடியாகும் தன்மையானது, கூட்டரசு உயர்நீதிமன்றத்தில் (Federal Supreme Court) எதிர்ப் புக்கும், வழக்குக்கும் உள்ளாயிற்று. வெகுவாகப் பாதுகாக்கப் படவேண்டுமென்று அரசியலமைப்பை வரைந்தவர்களால் விரும்பப்பட்ட மாகாண உரிமைகளை அழிக்கும் வகையான அவற்றை மேற்படிச்சட்டம் (New Deal legislation) கைப்பற்று கிறதா என்று ஆய்ந்து தீர்ப்புக் கூறும்படி நீதிமன்றம் கேட்டுக் கொள்ளப்பட்டது. இத்தகையதொரு கேள்விக்கு விடை அளிப்பது எளிதன்று. முன்பு வேருெரு காலத்தில் இயற்றப் பட்டதும், இக் காலத்திலுள்ளதைவிடச் சுருக்கமாக இருப்பது மான ஒரு சட்டப் பத்திரத்தை, கூட்டரசு தோன்றிய நாளில் எதிர்பார்க்கப்படமுடியாத நிலைமைகளை உடைய தற்காலச் சூழ்நிலைகளில் வைத்து எவ்வாறு ஆராய்தல் கூடும்? இதனை விளக்கும் அலுவலைச் செய்வதற்குப் பல அணுகுமுறைகள் (ways of approach) இருக்கலாம். இவற்றுள் எதனைக் கையாளுவ தென்பது தனி நீதிபதிகளைப் பொறுத்தது; எனவே, நீதிமன்ற மானது சில சமயங்களில் ஒரு வழியையும், வேறுசில சமயங் களில் வேறு முறையையும் பின்பற்றக்கூடும். அதிலுள்ள மொழி அமைப்புத் தெளிவில்லாமலிருப்பின், அப்பொழுது நீதிபதிகள் சட்டம் இயற்றுபவர்களாகவும் ஆகவேண்டி இருக்கும். அவர்கள் சுதந்திரமான நிலைமைகளி லிருப்பவர்க ளென்பதனுல், அவர்கள் கூறும் தீர்ப்புகள் அரசியல் வெறுப்பு, விருப்புகளின் ஆதிக்கத்துக்கு அப்பாற்பட்டு இருக்கும் என்று ஆகாது. யுனைட்டெட் ஸ்டேட்சின் உயர்நீதி மன்றமானது ஒன்பது நீதிபதிகளை உடையதாகையால், அரசியலமைப்புச்

சட்டத்தைப் பற்றிய வழக்குகளில் அது அளித்தத் தீர்ப்பு எப்பொழுதுமே ஒருமித்ததாக அல்லது ஏகமனதாக (unanimous) இருந்ததில்லை; ஆயினும் எவ்வகையிலேனும் ஒருமித்த மனப்பான்மை என்பது வழக்கமாக அண்மைக்காலம் வரையிலும் எய்தப்பெற்றது என்று வழக்குகள் காட்டுகின்றன. வேறுபட்ட கருத்துகள் நீதிபதிகளிடையே எழுமாயின், சட்டத்தின் மூலமாக அடிப்படையான மாறுதல்கள் செய்யப்படுவதை நீதிமன்றங்கள் தடுக்கக்கூடும்; என்றாலும், அத்தகைய மாறுபட்ட கருத்துகள், கடைசியில் மிக்க வல்லந்தமான முறைகளின் மூலமாக (violent methods) மாறுதல்களைத் தூண்டிவிடலாம்; அல்லது அதை ஒரு அரசியலமைப்புத் திருத்தத்தைக் கட்டாயமாகக் கொண்டுவரும்படிச் செய்யலாம்.

யுனைட்டெட் ஸ்டேட்சிலாயினும் அல்லது கனடாவிலாயினும் ஒரு புதிய பொருளாதாரப் பங்குச் சட்டத்தை, ஒரு சட்டக் குறிப்பின்பேரில் ஒரே தீர்ப்பின் மூலமாக நீதிபதிகள் தடுக்க இயலும். இவ்வகையான அலுவல் எதுவும் மேல்முறையீட்டு மன்றம் என்ற தன்மையில் இருந்து செயல்படும் பிரபுக்கள் மன்றத்துக்கு வராது.[1] யுனைட்டெட் ஸ்டேட்சிலோ அல்லது கனடாவிலோ தனி மனிதரின் உடைமைகளையும், சிவில் உரிமைகளையும் வெகுவாகப் பாதிக்கக்கூடிய வகையில் இதுவரையில் செய்யப்பட்ட எதனையும்விட மிகவும் தீவிரமான சட்டம் ஒன்று செய்யப்படுமாயின், அத்தகைய சட்டமானது இந்த நாட்டின் (இங்கிலாந்தின்) நீதிமன்றங்களிலே மறுத்து வழக்காடற்குரியதன்று; ஏனென்றால், எந்த நீதிமன்றத்துக்கும் எந்த ஒரு பாராளுமன்றச் சட்டத்தின் பிரிவுகளையும் எந்தக் காரணத்தின் பேரிலும் செல்லுபடியாகாதெனத் (invalid) தீர்ப்புக் கூற இயலாது. ‘பாராளுமன்றத்தினால் செய்யப்படும் சட்டத்தினுடைய அரசியலமைப்புச் சட்டத்துக்கு முரணான தன்மை’ என்பதாக யாதொருவிதமான கோட்பாடும் (இங்கிலாந்தில்) கிடையாது. யுனைட்டெட் கிங்டத்தில் நிறைவேற்றப்பட்ட சமுதாயப் பணிகளோடு ஒப்பிட்டால், மிகவும் மிதமானவை என்று கூறக்கூடியனவாக கனடாவின் இரண்டாம் உலகப்போருக்கு முற்பட்ட காலத்தில் நிறைவேற்றப்பட்ட சமுதாயநலச் சட்டம் இருந்தது. அப்படியிருந்தும், அச் சட்டமானது, 1867ஆம் ஆண்டின் பிரிட்டிஷ் வடஅமெரிக்கச் சட்டத்தினால் கூட்டரசிலுள்ள மாகாணங்

[1] ஆனால் வடஅயர்லாந்திலிருந்து வரும் மேல்முறையீடுகளைப் பொறுத்தவரை இவ் வகையாக ஓரளவு அதிகாரம் பிரபுக்கள் மன்றத்துக்கு உண்டு.

களுக்கு ஒதுக்கப்பட்ட அதிகார எல்லைகளைக் கைப்பற்றியதாகக் காரணம் காட்டப்பட்டுப் பல தீர்ப்புகளிலே அழிக்கப்பட்டது. பல சுதந்திர நாடுகளடங்கிய குடும்பத்தில்தான் ஒரு சுதந்திர உறுப்பினர் என்ற நிலைமை கனடாவுக்கு உண்டு; எனினும், அது காமன்வெல்த்தின் உறுப்பு நாடு என்ற நிலையில் அனுபவிக்கக்கூடிய ஒரு அதிகாரமும் அதற்கு மறுக்கப்பட்டது. இத்தகைய விளைவு தோன்றியது எதனாலென்றால், 1867ஆம் ஆண்டின் பிரிட்டிஷ் வடஅமெரிக்கச் சட்டத்தின் 132ஆம் பிரிவானது, யுனைடெட் கிங்டத்தின் காபினெட் அளிக்கும் ஆலோசனையின் பேரில், பிரிட்டிஷ் பேரரசின் ஒரு பாகமாகிய கனடாவுக்காக அரசரால் பேசி முடிக்கப்பட்ட உடன்படிக்கைகளை (treaties) நிறைவேற்றும் பொருட்டுச் சட்டம் இயற்றும் அதிகாரத்தைக் கனடாவின் பாராளுமன்றத்துக்குக் கொடுத்ததனால்தான். எழுபது ஆண்டுகளுக்குப் பிறகு சர்வதேசச் சட்டத்திலே சட்டப்படியான உரிமை உள்ள ஓர் ஆள் என்ற ஒரு புதிய நிலையைக் (international juristic person) கனடா நாடு அடைந்தது; அப்பொழுது கனடாவுக்காக ஒரு சர்வதேச வழக்கக் கோட்பாடு (convention) கனடிய அமைச்சர்களால் ஒப்புக்கொள்ளப்படவும், உடன்படிக்கைச் செய்யும் அதிகாரமானது கனடிய அமைச்சர்களால் கையாளப்படவேண்டியது எவ்வாறு என்பதைப்பற்றி அரசருக்கு ஆலோசனை கூற வேண்டியது அவசியமாயிற்று; அத்தகைய சூழ்நிலைகளில் மேற்கூறியவாறு சட்டம் செய்யும் அதிகாரமானது மேற்படி (1867ஆம் ஆண்டின்) சட்டத்தினால் வழங்கப்படவில்லை. ஒரு குடியேற்ற நாட்டின் அரசாங்கத்துக்கு, உடன்படிக்கை செய்யும் அதிகாரத்தை ஒப்படைப்பதுபற்றி 1867ஆம் ஆண்டில் எண்ணப்படவில்லை. 1967ஆம் ஆண்டில் கனடாவின் அரசாங்க வழக்கறிஞருக்கும், ஒண்ட்டாரியோவின் அரசாங்க வழக்கறிஞருக்கும் (Attorney-General for Canada v. Attorney-General for Ontario) இடையே எழுந்த ஒரு வழக்கிலே, 1935ஆம் ஆண்டின் தொழிற்சாலைகளில் வாராந்திர ஓய்வுச் சட்டம் (Weekly rest in Industrial Untertakings Act, 1935), 1935ஆம் ஆண்டின் குறைந்தபட்சச் சம்பளங்கள் சட்டம் (Minimum Wages Act, 1935) ஆகியவை அரசியலமைப்புச் சட்டத்துக்கு ஒத்திருக்கின்றனவா என்று ஆய்ந்து தீர்ப்பு வழங்குபடியாகப் பிரிவி கௌன்சிலின் நீதிக்குழு கேட்டுக்கொள்ளப்பட்டபோது, மேற்படி (உடன்படிக்கை செய்யும் குடியேற்ற நாட்டு அரசாங்கத்தின்) அதிகாரமானது ஏறக்குறைய பத்து ஆண்டுக் காலமாகவே நடைமுறைக்கு வந்து நிலைபெற்றுவிட்ட காரியமாக ஆயிற்று. டொமினியன்

அரசாங்கத்துக்கும், மாகாணங்களின் அரசாங்கங்களுக்கும் இடையே சட்டம் இயற்றும் அதிகாரத்தைப் பிரித்தல் என்பது (சட்டப்) பொருள்களின் வகைகளை (classes of subjects) அடிப்படையாக உடையது. ஒரு மாகாணத்தில் 'சொத்து உரிமையும், சிவில் உரிமைகளும்' அரசியலமைப்புச் சட்டத்தினுல் மாகாணச் சட்ட மன்றங்களுக்கு ஒதுக்கப்பட்டிருக்கின்றன. கனடா டொமீனியன் சர்வதேச நிலையை (international status) ஏற்றுக்கொண்டதன் மூலமாகத் தனது நிர்வாக அலுவல்களைப் பெருக்கிக்கொண்டபோதிலும், அது மேற்கூறிய நிலையின் மூலமாகத் தனது சட்டம் செய்யும் அதிகாரத்தை, அரசியல் அமைப்புச் சட்டத்தைத் திருத்துதல் என்ற வழியினு லல்லாமல், பெருக்கிக்கொள்ள இயலாது. உடன்படிக்கைக் கடமைகளை நிறைவேற்றுதல் உள்ளிட்ட எல்லாப் பொருள்களையும்பற்றிச் சட்டம் இயற்றுவதற்குக் கனடா முழுத் தகுதி உடையது; எனினும், சட்டம் இயற்றும் அதிகாரங்கள் பகிர்ந்தளிக்கப்பட்டுள்ளன. எந்த ஒரு சட்டமாகச் செய்யப்படவேண்டிய பொருளும் மாகாணங்களினுடைய அதிகார வரம்புக்கு உட்பட்டதாக இருந்தாலும், அது டொமினியன் முழுவதற்கும் செயல்படுத்தப்படவேண்டிய தகுதியுடையதாயின், அதனைப் போன்ற எந்தப் பொருளையும்பற்றி சட்டவகையாக உண்மையான முன்னேற்றம் ஏற்படுதல் என்பது, டொமீனியனுக்கும், மாகாணங்களுக்கும் இடையே இருக்கும் ஒத்துழைப்பின் மூலமே ஏற்படும்.

இந்த எடுத்துக்காட்டு பல்வேறு வழக்குகளிலிருந்து எடுக்கப்பட்டுள்ளது; இவ் வழக்குகளில் இரண்டைத் தவிர மற்றவற்றிலெல்லாம், கனடா டொமீனியனில் புதிய பொருளாதாரப் பங்குச் சட்டத்தின் (New Deal Act) செல்லுபடியாகும் தன்மைக்கு மாருகத் தீர்ப்பு அளிக்கப்பட்டது; இந்த எடுத்துக்காட்டு ஒரு கூட்டரசு அரசியலமைப்பிலே காணப்படும் கீழ்க்கண்ட இயல்புகளை விளக்கிக் காட்டுகிறது. (1) மாறுதலடைந்துகொண்டிருக்கும் அரசியல் நிலைமைகளுக்கு ஏற்ப, அரசியலமைப்புச் சட்டத்தை மாற்றி அமைப்பது கடினமானதாகும்; (2) நடைமுறையில் மாற்றப்பட முடியாததாக இருக்கும் இயல்பை உடைய அரசியலமைப்புச் சட்டத்தின் எல்லைகளுக்கு உட்பட்ட நிலை ஒன்றின் மூலமாக அல்லாமல், வேறெந்த வகையாகவும், மாகாணத்தை விடத் தேச முழுமைக்கும் மிக உடனடியாகச் செய்யப்படவேண்டிய செயலைச் செய்யும் பொருட்டு, கூட்டரசின் ஆட்சி

யாளர், அதிகாரக் குவிப்பு என்ற கொள்கையை (policy of centralisation) மேற்கொள்ளுதற்குச் சுதந்திரம் உடையவரல்லர்; (3) உறுப்பு மாகாணங்களெல்லாம், தத்தம் சட்டமியற்றும் அதிகாரத்தைக் கைவிடுவதற்கு ஒத்துக்கொண்டாலல்லாமல், பாராளுமன்ற அரசாங்க வடிவத்தைப் பெற்றிருக்கின்ற, எந்தக் கூட்டரசுநாடும், ஓர் எதேச்சாதிகார நாட்டிற்கு இன்றியமையாததாக இருக்கும் அதிகாரக் குவிப்பு (concentration of power) என்ற இயல்பை அரசியலமைப்புச் சட்டத்தின் மூலமாக அடைய முடியாது. இந்த இயல்பை வேறு வகைப்பட்ட சூழ்நிலைகளில் அடைய முடியுமென்பது, சோவியத் சோஷியலிஸ்ட் குடியரசுகளின் இணைப்பினுல் தெளிவாகத் தெரியவருகின்றது. இந்த நாடு நாற்பது ஆண்டுகட்குப் பின்னரும் ஒரு எதேச்சாதிகார நாடாக (a dictatorship) தெளிவாக விளங்குகிறது.

எனவே, ஒரு கூட்டரசுநாடு எதேச்சாதிகாரத்துக்கு எதிராக ஓர் அரண்போல இருப்பதென்ற வாதம் தோன்றும். ஒவ்வொரு கூட்டரசு நாட்டிலும் இரட்டை அலுவலர் குழு (dual bureaucracy) இருக்கிறது; ஆயினும் அது அரசியலமைப்புச் சட்டத்தினுல் கட்டுப்படுத்தப்பட்ட அலுவலர்குழு ஆகும். அதில் ஒன்று மற்றதினுடைய அதிகாரங்களை அழித்துத் தனது அதிகாரங்களைப் பெருக்கிக் கொள்ள இயலாது. இதில் நீதிபதிகள் அளிக்கும் தீர்ப்பு, அல்லது விளக்கம், கூட்டரசு அரசாங்கத்துக்குச் சார்பாகவோ அல்லது மாகாண அரசாங்கத்துக்குச் சார்பாகவோ சக்தி சமநிலையை மாற்றக்கூடும்; ஆயினும் இவற்றுள் ஒரு வழியாகவாயினும் அல்லது மாற்ற வழியாகவாயினும் தீவிரமாக அதிகாரத்தைப் பெருக்குதல் என்பது அடைய முடியாததாகும். இதற்கு மாருகத் தற்கால நாகரிகத்தில் மிக முக்கியமானதாக கருதப்படுகின்ற சுதந்திரத்தைப்பற்றிய புதிய கருத்தை அத்தகைய சூழ்நிலைகளில் அடைவது கடினமாகும். பொருளாதாரச் சமத்துவம் அடையப்பெருமல், அரசியல் துறையில் மட்டும் சமத்துவம், குடிமக்களால் அடையப்பட்ட நாடுகளில் கூட, சமுதாய, பொருளாதார நிலைமைகளை அரசாங்க அதிகாரத்தின் மூலமாக ஒழுங்கு செய்தலே இக் காலத்தில் சுதந்திரத்தினுள் அடங்கிக் கிடப்பதாகும். யுனைட்டெட் கிங்டத்தைப்போன்ற ஓர் ஓரரசு நாட்டைவிட (Unitary State) அரசாங்க அதிகாரத்தை விரிவடையச் செய்தலென்பது கூட்டரசு நாடுகளுக்குக் கடினமான செயல் ஆகும்; ஆயினும், இவ்வாறு அதிகாரம் விரிவடையாவிட்டால், அரசியலமைப்புச்

சட்டத்தின் நுட்பங்களைக் காரணங்களாகக் கொண்டிராத ஏதேனுமொரு ஆற்றலின் முன்னர் அரசியலமைப்புச் சட்டமானது செயல்பட முடியாமல் தகர்ந்து போகக்கூடிய பேரிடர் தோன்றுவது உறுதி.

ஓர் ஓரரசு நாட்டின் அமைப்பில் காணப்படுவதைப்போல, ஒரு கூட்டரசு அமைப்பிலும் ஒரு சட்டப்படியான இறைமை அதிகாரம் இருக்கிறது எனவும், எனினும் அதைக் கண்டு பிடிப்பது கடினம் எனவும், அதனைச் செயல்படத் தூண்டுவது அதனினும் கடினம் எனவும் காட்டுவதில் டைசி ஈடுபாடு உடையவராய் இருந்தார். இதன் பொருட்டு அவர் எடுத்துக் காட்டிய ஒப்புமை (comparison), யுனைட்டெட் கிங்டத்துப் பாராளுமன்றத்துக்கும்,அரசியலமைப்பைத் திருத்துவதற்காக யுனைட்டெட் ஸ்டேட்ஸில் மிகச் சிக்கலான அமைப்புடைய இறைமையதிகாரிக்கும் இடையே காட்டப்பட்டதாகும். ஆயினும், ஒரு அரசியலமைப்பின் நெகிழ்ச்சியற்ற இறுக்கமான தன்மை, ஓர் ஓரரசு நாட்டின் இயல்பாகவும் காணப்படுகிறது. வேறுபாடு காணப்படுவதற்கு உரிய அடிப்படை என்ன வென்றால், சட்டமன்றத்தின் ஒரு சாதாரணச் சட்டம் செய்யும் முறையின்மூலமாக அரசியலமைப்புச் சட்டத்தை மாற்றக் கூடிய முறையையுடைய நாட்டுக்கும், இத்தகைய மாறுதலை உண்டாக்குவதற்குத் தனிப்பட்ட செயல்முறையை(machinery) உடைய நாட்டுக்கும் இடையேதான் காணப்படுகிறது. இங்குக் குறிப்பிடப்பட்டவற்றுள் முற்கூறப்பட்டதில் அரசியல் வகையான இறைமையதிகாரி (political sovereign) சட்ட வகையான இறைமையதிகாரியைவிட ஆற்றல் மிக்கவராக இருக்கிறார். எவ்வாறெனில், தற்காலத்துக்கு ஆட்சியாளர் எத்தகைய அரசியல் இயல்புடையவராக இருத்தல் வேண்டு மென்று தீர்மானிக்கக்கூடியவராக, அரசியல் வகையான இறைமையதிகாரி இருக்கிறார்; இவ்வாறு அவர் செய்வதால் சட்டமன்றத்தின் ஒரு சாதாரணச் சட்டமியற்றும் செயலின் மூலமாகப் பெரும் மாறுதல்கள் செய்யப்படுமளவிற்கு அவர் உறுதியோடிருக்கிறார். ஆனால், இரண்டாவது வகையைச் சேர்ந்த நாட்டின் அரசியலமைப்பிலோ, குறிப்பாக பல மாகாணங்களடங்கிய ஒரு கூட்டரசு நாட்டிலே, எந்த அரசியலமைப்புத் திருத்தத்தையும் செய்தல் என்பது எளிதன்று. மேலும் அவ்வாறு செய்தல் நீதிமன்றங்களில் அரசியலமைப்பின் தன்மையைப் பற்றிய கேள்விகளை அல்லது வழக்குகளைத் தோற்றுவிக்கும்.

இறைமையும் வெஸ்ட்மின்ஸ்டர் சட்டமும்: கூட்டரசு அமைப்பினுல் எழும் பிரச்சினைகளைத் தவிர, பாராளுமன்ற இறைமைஎன்ற சட்டப்படியான விதியானது (legal rule), காமன் வெல்த் நாடுகளுக்கிடையே உள்ள தொடர்புகளைப் பொறுத்த வரையிலும், காமன்வெல்திலுள்ள உறுப்பு நாடுகளிலுள்ள அரசியலமைப்புச் சட்டத்தைப் பொறுத்தவரையிலும், மேலும் கடினமான பிரச்சினைகளை எழுப்புகின்றது. 'வெஸ்ட்மின்ஸ்ட்டரிலுள்ள பாராளுமன்றத்தில் அரசியார் விடுக்கும் விதியான்து அரசியாரின் நாடுகளெல்லாவற்றிலும் பரவிற்று' என்பதாக டைசி கூறிய உரை இப்பொழுது சட்டமாக இருக்கவில்லை. 1931ஆம் ஆண்டுக்கு நெடுங்காலத்துக்கு முன்னரே காமன் வெல்திலுள்ள பழைய உறுப்பினர்களுடைய சுதந்திரமானது ஒப்புக்கொள்ளப்பட்டுவிட்டது. யுனைட்டெட் கிங்டத்திலிருந்து சுதந்திரமாக இருத்தல் என்பது முதல் உலகப்போரை அடுத்த ஆண்டுகளிலேயே ஒரு அரசியல் உண்மை நிலையாக ஆயிற்று. இதுவே சுதந்திரமான நிலையை ஒப்புக்கொண்ட 1926ஆம் ஆண்டின் பேரரசு மாநாட்டின் புகழ்மிக்க அறிக்கை என்ற உச்சநிலையில் கொண்டுபோய் விட்டது. ஒரு மசோதாவை நிறைவேற்றும்படியாக ஒரு குறிப்பிட்ட டொமீனியன், பிரிட்டனை வெளிப்படையாகக் கேட்டுக் கொண்டாலல்லாமல், அப்பொழுது டொமீனியன்கள் என அழைக்கப்பட்ட குடியேற்ற நாடுகளுக்காகச் சட்டம் செய்தல் என்னும் அலுவலினின்றும் யுனைட்டெட் கிங்டத்துப் பாராளுமன்றம் வழக்கமாக ஒதுங்கிக் கொண்டு விட்டது; இவ்வாறு சட்டம் இயற்றும்துறையில் அடையப்பட்ட சுதந்திர நிலைமைக்குச் சட்டபூர்வமான ஆற்றலை அளிப்பதே 1931ஆம் ஆண்டின் வெஸ்மின்ஸ்டர் சட்டத்துக்கு விடப்பட்டிருந்த வேலையாகும். இவ்வாருகவே, கனடா தனது தலைநகரமான ஒட்டாவாவில் உருவாக்கப்பட்டு, வெஸ்ட்மின்ஸ்ட்டரில் நிறைவேற்றப்பட்ட சட்டத்தின் வடிவத்தில் தனது மாறுதலடைந்துகொண்டுவரும் அரசியலமைப்புச் சட்டத்துக்குச் சட்டபூர்வமான ஆற்றல் கொடுக்கப்படுவதற்குத் தொடர்ந்து முயன்றுவந்தது. ஒரு டொமீனியனுக்காகச் சட்டம் செய்யப்படுவதற்கான, முதல் முயற்சி வெஸ்ட்மின்ஸ்டரிலிருந்து வருவதென்பது நெடுங்காலமாகவே நின்று விட்டது. ஆயினும், இந்த நிலை அல்லது வழக்கம் சட்டமாகாது. 1867ஆம் ஆண்டின் பிரிட்டிஷ் வடஅமெரிக்கச் சட்டம் வெஸ்ட்மின்ஸ்டரில்தான் மாற்றப்பட முடியுமென்பதே ஒரு சட்டபூர்வமான விதியாகும். மேலும், 1865ஆம் ஆண்டின் குடியேற்ற நாடுகளின் சட்டங்களைப்பற்றிய சட்டமானது

ஒவ்வொரு குடியேற்ற நாட்டிற்கும் பரவிற்று; ஆகையால், ஆஸ்திரேலிய மாகாணங்கள், கனடாவின் மாகாணங்கள் ஆகியவற்றைப்போன்ற முந்திய குடியேற்ற நாடுகள், குடியேற்ற நாட்டு ஆட்சியிலிருந்து, சுய ஆட்சிக்கு மாறின; அப்படியிருந்தும், அவையெல்லாம் ஒரு குடியேற்ற நாட்டுக்குப் பரவியுள்ள யுனைட்டெட் கிங்டத்தின் நிலவரச் சட்டத்தோடு (statute law) முரண்படுகிற எந்த மசோதாவையும் செய்வதினின்றும், குடியேற்ற நாட்டுச் சட்டமன்றத்தைத் தடுக்கும் சட்டத்துக்குக் கட்டுப்பட்டே யிருந்தன. சட்டம் இயற்றும் துறையில் தலையிடாமை என்ற வழக்கம் இருந்தபோதிலும், அரசருக்குரிய பல்வேறு அரசியலமைப்பு நிலைகளை உடைய நிலங்களிலே, மிகப் பிந்திய காலமாகிய 1930ஆம் ஆண்டிலும் கூட வெஸ்ட்மின்ஸ்டர் பாராளுமன்றத்தின் பல சட்டங்கள் செயல்பட்டு வந்தன. எடுத்துக்காட்டாக, 1833ஆம், 1844ஆம் ஆண்டுகளின் நீதிக்குழுச் சட்டங்கள் (Judicial Committee Acts), நீதிமன்றத் தீர்ப்புகளைப் பற்றிச் சட்டம் செய்வதற்கு டொமீனியன் பாரளுமன்றங்களுக்கு உள்ள தகுதியின்மீது கட்டுப்பாடுகளை விதித்தது. 1894ஆம் ஆண்டின் வாணிபக் கப்பல் சட்டம் (Merchant Shipping Act, 1894) குடியேற்ற நாடுகளில் கையாளப்படுவதற்கு ஏற்ற வகையில், அதில் குடியேற்ற நாட்டுச் சட்டமன்றங்கள் மாறுதல்களைச் செய்வதற்கு அதிகாரம் பெற்றிருந்தாலும், மேற்படிச் சட்டம் எல்லா பிரிட்டிஷ் கப்பல்களுக்கும் பொருந்துவதாகும்,

எனவே வெஸ்ட்மின்ஸ்டர் சட்டம் இயற்றப்பட்ட காலத்தில் டொமீனியன்களாகக் கருதப்பட்ட கனடா, ஆஸ்திரேலியா, நியூஸிலாந்து, தென்னாப்பிரிக்கா, சுதந்திர ஐரிஷ்நாடு[1], நியூபௌண்ட்லண்ட்[2] ஆகியவற்றுக்கும் பொருந்துமாறு கையாளப்பட்ட குடியேற்ற நாடுகளின் சட்டங்களைப்பற்றிய சட்டத்தை (Colonial Laws Validity Act) நீக்குவகுதே வெஸ்ட்மின்ஸ்டர் சட்டத்தின் முதல் பிரிவு செய்த அலுவல் ஆகும். இந்தச் சட்டம் ஏதேனுமொரு குடியேற்ற நாட்டுக்குப் பரவியுள்ள யுனைட்டெட் கிங்டத்துப் பாராளுமன்றத்தின் நிலவரச் சட்டத்துக்கு முரண்பாடாக இல்லாமல் அந்தக் குடியேற்ற நாட்டின் சட்டமன்றம் சட்டங்களைச் செய்யவேண்டும் எனவும், ஆனல்

[1] 1949ஆம் ஆண்டின் அயர்லாந்துச் சட்டத்தின்படி காமன்வெல்த்துக்கு வெளியே அயர்லாந்துக்கு உள்ள குடியரசு நிலை ஒப்புக் கொள்ளப்பட்டது.

[2] பிற்காலத்தில் கனடா டொமீனியனேடு செய்யப்பட்ட ஒரு ஒப்பந்தத்தின் மூலமாக நியூபௌண்ட்லண்ட் டொமீனியனின் ஒரு மாகாணமாக ஆயிற்று.

அச் சட்டங்கள் ஆங்கிலப் பொதுச்சட்டத்துக்கு (English Common Law) முரணுக இருக்கலாம் எனவும் வகுத்தது. இணைப்பிலுள்ள (Union) அயர்லாந்துக்கு இந்தச் சட்டம் ஒரு போதும் கையாளப்படவில்லை. ஆகையால், அப்பொழுது ஐரிஷ் சுதந்திர நாட்டுக்கு இது கையாளப்படவில்லை. 1865ஆம் ஆண்டுக்குமுன்னர், பிரதிநிதித்துவ சட்டமன்றங்களை உடைய குடியேற்ற நாடுகளில், சுதந்திரமாகச் சட்டமியற்றுவதைப் பொறுத்த அளவில் நிலவிய ஐயப்பாட்டுக்கு உரிய நிலைமை மீண்டும் ஏற்படாதபடி தடுப்பதற்காக ஒரு விதியைச் சேர்த்தல், மேற்படி குடியேற்ற நாடுகளின் சட்டங்களைப்பற்றிய சட்டத்தை நீக்கும்போது, அவசியமாயிற்று. எனவே, இச் சட்டத்தை நீக்கும் விதியானது கீழ்க்கண்டவாறு வகுத்துள்ளது:

'இந்தச் சட்டம் நடைமுறைக்கு வந்ததற்குப்பின், எந்த ஒரு டொமீனியனின் பாராளுமன்றத்திலும் செய்யப்பட்ட சட்டமும் அல்லது எந்த ஒரு சட்டத்தின் பகுதியும், அது இங்கிலாந்தின் பொதுச் சட்டத்திற்கோ, அல்லது யுனைட்டெட் கிங்டத்தின் இப்பொழுதைய அல்லது எதிர்காலத்திய பாராளுமன்றத்தின் எந்தச் சட்டத்தின் பிரிவுகளுக்கோ, அல்லது அத்தகைய சட்டத்தின்படி விடுக்கப்படும் எவ்வகையான கட்டளைக்கோ, விதிக்கோ, ஒழுங்குக்கோ மாறுனது என்ற காரணத்திஞல் செல்லுபடியாகாததாகவோ செயல்முறைக்கு வராமலோ போகாது; மேலும் ஒரு டொமீனியனின் சட்டத்தின் ஒரு பாகமாக மேலே கூறிய (யுனைட்டெட் கிங்டத்தின் பாராளுமன்றத்தின்) சட்டமோ, அல்லது கட்டளையோ, அல்லது விதியோ, அல்லது ஒழுங்கோ இருக்குமாஞல், அதனை நீக்கவும் திருத்தவும் கூடிய அதிகாரமும் டொமீனியன் பாராளுமன்றத்தின் அதிகாரங்களுள் அடங்கும்' [இரண்டாம் பிரிவு (2)].

இந்தத் துணைப்பிரிவு, இவ்வாறு முரண்பாட்டைப்பற்றிய கோட்பாடானது (doctrine of repugnancy) ஒரு டொமீனியனுக்குப் பொருந்துமாறு கையாளப்படலாகாது எனவும், ஏதாவதொரு டொமீனியன் சட்டத்தினுடைய நிகழ்காலச் சட்டமோ அல்லது எதிர்காலச் சட்டமோ, நிகழ்காலத்திலோ அல்லது எதிர்காலத்திலோ இருக்குமாஞல், அத்தகைய சட்டத்தை நீக்குவதற்கோ அல்லது திருத்துவதற்கோ அதிகாரத்தை அந்த டொமீனியனின் பாராளுமன்றம் பெற்றிருக்கும் எனவும் உறுதி செய்தது. இவ் வதிகாரத்தை

எவ்வகையாக ஒரு டொமீனியனின் பாராளுமன்றம் கையாள வேண்டும் என்பதைப்பற்றி ஒரு விதியும் கூறப்படவில்லை. இந்தப் பிரிவு தென்னுப்பிரிக்க யூனியனிலுள்ள சட்டமியற்றுதலைப் பற்றிய வரையறையையோ அல்லது வழியையோ மாற்றவில்லை என்பதாக எவ்வாறு தென்னுப்பிரிக்க நீதிமன்றங்கள் கூறி விளக்கம் செய்தன என்பதை நாம் மேலே பார்த்திருக்கிறோம். வெஸ்ட்மின்ஸ்டர் சட்டமே தனது, 7-8-9ஆம் பிரிவுகளிலே இது செய்யப்படுவதற்கு முற்பட்ட காலத்தில், கனடா, ஆஸ்திரேலியா, நியூஸிலாந்து முதலிய நாடுகளில் இருந்து வந்த அவ்வவற்றின் அரசியலமைப்புச் சட்டங்களைத் திருத்துவதைப்பற்றிய சட்டங்கள் தற்காலத்துக்கு நடைமுறையில் இருத்தல் வேண்டுமென்று கூறிற்று. இச் சட்டத்தின் இரண்டாம் பிரிவைப் (2) பாராளுமன்றம் இயற்றியதன் நோக்கம் என்ன என்பதைப்பற்றியும் இப் பிரிவு 1931ஆம் ஆண்டிற்குப் பின்னர் காமன்வெல்த்தில் கையாளப்படவிருக்கும் சட்டமியற்றும் அதிகாரத்தின் தன்மையை எவ்வாறு பாதிக்கும் என்பதைப் பற்றியும் மிக்க வாதங்களும் எதிர் வாதங்களும் நடைபெற்றன[1]. ஹாரிஸ் என்பவருக்கும் உள்நாட்டு அமைச்சருக்குமிடையே தோன்றிய வழக்கில் (Harris v. Minister of the Interior) தீர்ப்பு வழங்கப்பட்ட காலத்துக்கு முன்னரெல்லாம், 'எந்தெந்த டொமீனியனுக்கு 2ஆம் பிரிவு கையாளப்பட்டதோ, அந்தந்த டொமீனியனை, அரசியலமைப்புச் சட்டத்தைத் திருத்துவதைப் பற்றி அப்பொழுது இருந்துவந்த கட்டுப்பாடுகளினின்றும் எந்தவித வரையறையுமில்லாமல் விடுபட்டிருக்கச் செய்தது' என்பதாகச் சட்டபூர்வமான கருத்து காமன்வெல்த்தில் நடைமுறையில் ஒருமித்ததாக இருந்தது[2]. தென்னுப்பிரிக்காவின் முடிபு அல்லது தீர்ப்பு, அதனுடைய சொந்த அதிகார எல்லைக்குள் மட்டுமே கட்டுப்படுத்தும் ஆற்றலை உடையது.

ஆனால், இன்று இறைமை யதிகாரத்தைக் கையாளுதல் என்பது, வெஸ்ட்மின்ஸ்டர் சட்டத்தை ஒத்துக்

[1] G. Marshall எழுதிய Parliamentary Sovereignty and the Commonwealth 6ஆம் இயலைப் பார்க்கவும். இதில் இச் சட்டம் செய்யப்பட்ட வரலாறு சொல்லப்படுகிறது; இதில் 2ஆம் பிரிவினுல் வரையறையல்லாமல் கொடுக்கப்பட்டதுபோன்றிருக்கும் அதிகாரங்களை வரம்புபடுத்துவதற்காகக் கட்டுப்பாட்டுப்பிரிவுகள் ஏதும் சேர்க்கப்படலாகாதெனத் தென்னுப்பிரிக்கா மறுப்புத் தெரிவித்தது என்று கூறப்பட்டுள்ளது.

[2] இந்தக் கருத்து இந்த நூலின் 9ஆம் பதிப்பின் முன்னுரையில் கூறப்பட்டது. பேராசிரியர் T. D. கௌவன் தான் எழுதிய Parliamentary Sovereignty and the Entrenched Sections of the South Africa Act, 1951 என்ற கட்டுரையில் இந்தக் கருத்தை மறுக்கிருர்.

கொண்ட (பழைய) டொமீனியன்களில் மட்டுமல்லாமல் வெஸ்ட்மின்ஸ்டர் சட்டத்தின் 2ஆம் பிரிவு (2) ஐப்போன்ற குறிப்பிட்ட நிலவரச் சட்டத்தின் காரணமாக காமன் வெல்த்திலுள்ள ஆசிய உறுப்பு நாடுகளிலும், கனு நாட்டிலும் வெஸ்ட்மின்ஸடர் சட்டத்தை ஆதாரமாகக் கொண்டமைந் திருக்கின்றது. இவற்றுள் ஒவ்வொன்றைப் பொறுத்தவரை யிலும் வெஸ்ட்மின்ஸ்டரிலுள்ள பாராளுமன்றத்தின் சட்டம் செய்யும் அதிகாரத்தின் எல்லையை ஒரு வரம்புக்குட்படச் செய்வதே நோக்கமாகும். நாம் முன்பே பார்த்தவாறு இதனைப் பொறுத்தவரையில், இறைமை யதிகாரத்தை ஓரளவிலாயினும், அல்லது முழுவதுமாயினும் துறத்தல் என்பது பாராளுமன்றத்தின் இறைமை என்பதைப்பற்றி டைசி கொண்டிருந்த கருத்துக்கு முரண்பாடுடையது அன்று; இதனைப்பற்றி டைசிக்கு ஐயப்பாடு எதுவுமில்லை. ஒரு இறைமை யதிகாரியானவர் தனது அதிகாரத்தை இரண்டு வழிகளின் மூலமாக மட்டுமே நீக்க முடியும் எனவும், அவற்றுள் ஒருவழி அவ் வதிகாரி தனது நிலைமைக்கு ஒரு முடிவு செய்து கொண்டு தனக்குப் பின்னர் சட்டபூர்வமாக ஒரு பாராளு மன்றம் கூட்டப்படுவதற்கு உரிய வழிகளை விட்டு வைக்கா திருத்தல் எனவும், இன்னொரு வழி, அவ் விறைமை யதிகாரி தனது இறைமை யதிகாரத்தை முழுவதுமாகவோ, அல்லது ஓரளவிலாகவோ ஒரு புதிய இறைமையுடைய குழுவுக்கு மாற்றுதல் எனவும் அவர் வாதம் செய்தார்.

எதிர்காலத்தில் சட்டம் இயற்றும் துறையில் சுதந்திரமான நிலைமையை உறுதியளிக்க வேண்டியிருந்தது. இந்த நோக்கம் மேற்படி சட்டத்தின் 4ஆம் பிரிவின் மூலம் கீழ்வருமாறு நிறைவேற்றப்பட்டது.

'ஒரு குறிப்பிட்ட டொமீனியன் யுனைட்டெட் கிங்டத்தின் பாராளுமன்றத்தை ஒரு சட்டத்தை நிறைவேற்றுமாறு கேட்டுக்கொண்டது அல்லது அதற்கு இணங்கியது என்ப தாக யுனைட்டெட் கிங்டத்துப் பாராளுமன்றத்தின் சட்டத்தில் தெளிவாகக் கூறப்பட்டிருந்தாலொழிய மேற்படி சட்டமானது இந்த வெஸ்ட்மின்ஸ்டர் சட்டம் நிறைவேறிய காலத்துக்குப் பின்னர் செயல்படுமாயின், அந்தச் சட்டம் மேற்படி டொமீனியனின் சட்டத்தின் பகுதியாகப் பரவாது'.

இந்தப் பிரிவானது யுனைட்டெட் கிங்டத்துப் பாராளு மன்றத்தின் சட்டபூர்வமான இறைமை என்ற விதிக்கு ஒரு

மறுப்பு ஆகும்; எவ்வாறெனில், இந்த வெஸ்ட்மின்ஸ்டர் சட்டத்தின் 4ஆம் பிரிவை நீக்க அல்லது மாற்ற வகை செய்யும் ஒரு வெஸ்ட்மின்ஸ்டரிலுள்ள பாராளுமன்றத்தின் விளைவு என்ன? என்ற கேள்வியை இது எழுப்புகின்றது. இக் கேள்வி ஒரு நூல் இயல்பு அளவில் மட்டுமே (academic) முக்கியத்துவமுடையது என ஒப்புக்கொள்ளப்படலாம். மேலும் பாராளுமன்றத்தின் உயர்தர அதிகாரம் கையாளப் படுதலுக்கு வெளிவரம்பாக டைசியினால் சுட்டிக் காட்டப் பட்ட வரம்பு, யுனைட்டெட் கிங்டத்தின் தன்முயற்சியினால் மட்டுமே மேற்கூறியவாறான ஒரு நீக்குதல் சட்டமோ அல்லது திருத்தச் சட்டமோ செய்யப்படுவதைத் தவிர்க்கும் எனவும் கூறப்படும். எவ்வாறெனில் காமன்வெல்த் அமைப்பின் இருப்பையே இத்தகையதான செயல் சிதற அடித்துவிடும் என்பது உறுதி.

இந்தக் கருத்து பிரிட்டிஷ் நிலக்கரிக் கழகத் துக்கும், அரசருக்கும் இடையே தோன்றிய வழக்கில் [British Coal Corporation v. The King (1935)] அளிக்கப்பட்ட நீதி மன்றத் தீர்ப்பில் ஒரு பொருளாக இருந்தது என்பது மேலே கூறப்பட்டது. காலத்தில் பிந்தி வந்த ஒரு பாராளுமன்றமானது தனக்கு முந்திய பாராளுமன்றங்களின் சட்டத்தை நீக்கு வதற்குப் பெற்றிருக்கும் அதிகாரமானது, சட்டம் என்ற ஒரு கருத்தின் அளவிலே யிருக்குமெனவும், ஆனால், இவ் வதிகாரம் நடைமுறையில் கையாளப்பட முடியாது என ஒப்புக்கொள்ளப்பட்டது எனவும் டைசி கூறிய கருத்தை நீதிக்குழு ஒப்புக்கொண்டது. வெஸ்ட்மின்ஸ்டர் சட்டத்தின் 4ஆம் பிரிவின் மூலமாகப் பாராளுமன்றம் செய்ய முயன்றது என்னவென்றால், அந்தச் சட்டத்திலுள்ள முன்னுரையிலேயே, 4ஆம் பிரிவில் கையாளப்பட்டிருக்கிற மொழியை ஒத்து, பல்வேறு வழக்காறுகளோடுகூட நடைமுறையில் இருக்கும் ஒரு வழக்காற்றையும் (convention) சொல்லி, அதற்குச் சட்ட பூர்வமான ஆற்றலைக் கொடுப்பதே ஆகும்.

அரசியல் சூழ்நிலை என்ற அளவிலே (as a matter of political expediency) மேற்படிப் பிரிவை பாராளு மன்றமானது நீக்கவோ அல்லது திருத்தவோ செய்யும் இயல்பில் இல்லை. 1936ஆம் ஆண்டில் எட்டாம் எட்வர்ட் அரசர் முடிதுறந்தபோது, அதுபற்றிய சட்டம் செய்தலை டொமீனியன் அரசாங்கங்கள் மேற்கொள்ளவேண்டி யிருந்தன. அப்பொழுது ஒரே ஒரு நிலைமையில் மட்டும், அதாவது

கனடாவைப் பொறுத்தமட்டில், இந்த 4ஆம் பிரிவை ஒட்டி யுனைட்டெட் கிங்டத்துப் பாராளுமன்றத்தால் செய்யப்பட்ட, மாட்சிமிக்க அரசரின் முடிதுறப்பு விளம்பரச் சட்டத்துக்கு (His Majesty's Declaration of Abdication Act) உடன்பாடும் அது செய்யப்படுதல் வேண்டுமென்று வேண்டுகோளும் அளிக்கப்பட்டன. பிரிவி கௌன்சிலின் நீதிக்குழு உட்பட யுனைட்டெட் கிங்டத்தின் எல்லா நீதிமன்றங்களையும் பொறுத்த வரையில் வெஸ்ட்மின்ஸ்டர் சட்டத்துக்கு, சட்டம் என்ற அளவிலே, பாராளுமன்றத்தின் மற்றெந்த சட்டத்துக்கும் உள்ள ஆற்றல் உண்டு என்பது மறுக்கப்பட முடியாததாகும். ஆகையால், அதனை நீக்கவோ அல்லது திருத்தவோ பாராளு மன்றத்தால் முடியும். ஆயினும், காமன்வெல்த்திலுள்ள மற்ற நாடுகளுக்காகச் சட்டம் செய்வதினின்றும் வெஸ்ட் மின்ஸ்டரிலுள்ள பாராளுமன்றத்தைத் தடுப்பதும் நெடுங் காலமாக நடைமுறையிலிருந்துவருவதுமான ஒரு அரசிய லமைப்பு வழக்காறு தொடர்ந்து கடைப்பிடிக்கப்படுமாயின், அதில் வியப்பொன்றுமில்லை. சட்டவடிவத்தில் ஆக்கப்பட்ட அரசியலமைப்புகளில், முக்கியமாக பிரிட்டிஷ் காமன் வெல்த்தில் நடைமுறையில் இருக்கும் அத்தகைய அரசிய லமைப்புகளில் காணப்படும் இயல்பு என்னவென்றால், அவற்றில் பல வழக்காறுகள் குறிப்பாக அடங்கியிருக்கின்றன என்பதே ஆம். 1937ஆம் ஆண்டில் அயர்லாந்து ஒரு அரசியலமைப்பைச் சட்டமாக நிறைவேற்றும்வரையில், எந்த ஒரு நாட்டின் அரசியலமைப்பிலாவது அமைச்சர்களின் பொறுப்பு என்ற கோட்பாடானது ஒரு சட்டமாக ஆக்கப் படவில்லை என்பது குறிப்பிடத் தக்கது. எனவே, காபினெட் அரசாங்கம் என்பது (Cabinet Government) கனடாவிலும், ஆஸ்திரேலியாவிலும், அவை கூட்டரசு அரசியலமைபுகளைப் பெற்றிருந்தபோதிலும், யுனைட்டெட் கிங்டத்தில் காணப் படுவதுபோல ஒரு வழக்கத்தின் அடிப்படையில்தான் அமைந்திருக்கிறது. இதில் ஒரு விலக்கு என்னவெனில் காபினெட் அலுவல்களைச் செய்கின்ற நிறுவனமானது, அதாவது ஆஸ்திரேலியாவிலுள்ள பெடரல் நிர்வாகக் கௌன்சிலானது (Federal Executive Council) அரசியலமைப்புச் சட்டத்திலேயே கூறப்பட்டிருக்கிறது என்பதே. காமன் வெல்த்திலுள்ள நாடுகளுக்குச் சட்டம் செய்யும் சுயஉரிமை (autonomy) வழங்குவது என்ற கருத்தினளவில் வெஸ்ட் மின்ஸ்டர் சட்டமானது ஒரு அரசியலமைப்பின் சாசனத்துக்கு ஒப்பாகக் கருதப்படுமானால், அச் சட்டத்தின் 4ஆம் பிரிவினால் வழங்கப்படும் சட்டமியற்றும் சுய உரிமையை நிலைபெருக

அல்லது நிரந்தரமாக ஆக்கும்பொருட்டு, அந் நாடுகளில் தலையிடாமை (non-interference) என்ற வழக்கத்தை 4ஆவது பிரிவு நிறுவுவதாகக் குறிப்பாகப் பொருள் கொள்ளவேண்டும். இந்தக் குறிப்புப் பொருள் இச் சட்டத்தின் முன்னுரையின் (preamble) வாசகத்தில் பொதிந்து கிடக்கிறது. 'காமன் வெல்த்தின் ஒவ்வொரு உறுப்பின் பாராளுமன்றமும் அரியணைக்கு உள்ள தாய முறையிலும் அல்லது அரசப் பெயரிலும் பட்டங்களிலும் ஏற்படும் மாறுதல்களை ஒத்துக் கொள்ளுதல் வேண்டுமெனவும், வெஸ்ட்மின்ஸ்டரிலுள்ள பாராளுமன்றத்துக்குச் சட்டமியற்றுவதைப் பொறுத்தவரையி லுள்ள நிலைமையானது ஏற்கனவே 4ஆவது பிரிவினுல் சட்டமாக்கப்பட்டவாறு இருக்கிறது எனவும் இருப்பதே இப்பொழுது நிலையாக இருக்கும் அரசியலமைப்பு நிலைமைக்கு ஒத்து இருப்பதாகும்.

பாராளுமன்றமானது காமன்வெல்த்திலுள்ள மற்ற நாடுகளுக்காகச் சட்டம் இயற்றக் கூடாது என வெஸ்ட்மின்ஸ்டர் சட்டம் கூறவில்லை. இது கவனிக்க வேண்டிய ஒன்று ஆகும். உண்மையில் அவ்வாறு சட்டம் இயற்றும் தொழில் தொடர்ந்து இருக்க வேண்டியதே ஆகும். கனடா வேண்டிக்கொண்டதன் பேரில் மேற்படிச் சட்டத்தின் 7ஆம் பிரிவு,பிரிட்டிஷ் வட அமெரிக்கச் சட்டங்களைத் திருத்தும் அதிகாரத்தைக் காப்பாற்றிற்று; மேலும் கனடா டொமீனிய னின் அரசியலமைப்புக்குத் திருத்தங்கள் ஓரளவு இன்னும் வெஸ்ட்மின்ஸ்டரில் நிறைவேற்றப்படுகின்றன[1]. ஆஸ்திரேலிய மாகாணங்களுக்காக 1931ஆம் ஆண்டுக்குமுன், யுனைட்டெட் கிங்டத்தின் பாராளுமன்றமானது அந் நாட்டின் நடு அரசாங்க மான காமன்வெல்த் அரசாங்கத்தின் ஒப்புதல் இல்லாமல் சட்டம் இயற்ற முடியும்; மேற்படி சட்டத்தின் 9ஆம் பிரிவின் (2ஆம்) துணைப் பிரிவின்படி ஆஸ்திரேலிய காமன் வெல்த்தின் பாராளுமன்றமோ, அல்லது அதன்அரசாங்கமோ மேலே குறிப்பிட்ட ஆஸ்திரேலிய மாகாணங்களின் அதிகாரத்தில் தலையிடுவதற்குத் தகுதி கிடையாது. இந்தத் துணைப் பிரிவில் ஆஸ்திரேலிய மாகாணங்களின் அதிகாரத் துக்கு உட்பட்ட சில விஷயங்களைப் பொறுத்தவரை,

[1] 1949ஆம் ஆண்டின் பிரிட்டிஷ் வடஅமெரிக்கச் சட்டம் (2ஆம் எண்) டொமீனியன் பாராளுமன்றத்துக்கு அரசியலமைப்புத் திருத்தங் களைச் செய்வதற்குச் சட்டம் செய்யும் அதிகாரத்தை வழங்கிற்று; அதுவே மாகாணங்களின் அதிகாரங்களைக் காப்பாற்றுவதற்காகச் சில விஷயங்களை (topics) மேற்படி அதிகாரத்தினின்றும் விலக்கிற்று.

யுனைட்டெட் கிங்டத்தின் பாராளுமன்றத்தினுல் சட்டம் செய்யப்படுவதைப்பற்றி நடைமுறையில் உள்ள அரசியலமைப்பு வழக்கத்தை மேற்படி துணைப்பிரிவு வெளிப்படையாகக் காட்டுகிறது; ஆகையால் இந்தத் துணைப்பிரிவு நடைமுறையில் உள்ள ஒரு வழக்கத்துக்குத் திட்டவட்டமான சட்டம் என்ற வகையில் ஒப்புதல் அளிக்கிறது. இவ்வகையாக 1900-ல் கூட்டரசு அரசியலமைப்புச் சட்டம் நிறைவேற்றப்படுவதற்கு முன்னரே செய்யப்பட்ட யுனைட்டெட் கிங்டத்துப் பாராளுமன்றச் சட்டங்களிலே ஆஸ்திரேலிய மாகாணங்களின் அரசியலமைப்புச் சட்டங்கள் அடங்கியிருப்பதால் தலையிடாமை (non-interference) என்ற அரசியலமைப்பு வழக்கமானது கையாளப்படும் வரையில், சட்டப்படியான இறைமையதிகாரமானது யுனைட்டெட் கிங்டத்துப் பாராளுமன்றத்தில் தங்கியுள்ளது என்று வாதம்செய்ய இடமிருக்கிறது; எந்த ஒரு குறிப்பிட்ட மாகாணமும் கேட்டுக் கொண்டாலல்லாமல், எந்த ஒரு மாறுதலும் செய்யப்பட மாட்டாது என்பது இதன் பொருளாகும்.

1934ஆம் ஆண்டில் தென்னுப்பிரிக்க யூனியனின் பாராளுமன்றம் தான் நிறைவேற்றிய யூனியனின் நிலைமைச் சட்டத்தின் (Status of the Union Act) 2ஆம் பிரிவில் பின்வருமாறு கூறிற்று: 'யூனியனின் பாராளுமன்றமானது யூனியனிலுள்ளும், யூனியனின்மேலும் இறைமையான சட்டம் இயற்றும் அதிகாரத்தை உடையது; வேறு எந்தச் சட்டத்திலும் வேறு எந்த வகையாகக் கூறப்பட்டிருப்பினும், யுனைட்டெட் கிங்டத்துக்கும், வட அயர்லாந்துக்குமான பாராளுமன்றத்தின் எந்தச் சட்டமும், 1931ஆம் ஆண்டு டிசம்பர் 11ஆம் நாளுக்குப்பின் செய்யப்படுமாயின், அது யூனியனின் பாராளுமன்றத்தினுடைய ஒரு சட்டத்தின் மூலம் ஏற்றுக்கொள்ளப்பட்டாலல்லாமல், அது யூனியனின் சட்டத்தின் ஒரு பகுதியாக யூனியனுக்குக் கையாளப்பட மாட்டாது.

இந்தச் சட்டத்தின்மூலம் தென்னுப்பிரிக்கா, யூனியன் சட்டத்திலே, பொதுவாகக் கையாளப்படுவதற்காக வெஸ்ட்மின்ஸ்ட்டர் சட்டத்தில் கூறப்பட்ட பிரிவுகளைச் சேர்த்துக் கொண்டது; ஆயினும் 2ஆம் பிரிவின் கடைசிச் சொற்கள், வெஸ்ட்மின்ஸ்ட்டர் சட்டத்தின் 4ஆம் பிரிவைவிட மேலும் செல்லுகின்றன. பிற்கூறப்பட்ட சட்டத்தின் 4ஆம் பிரிவு, யுனைடெட் கிங்டத்தின் சட்டத்தில் டொமினியனின் வேண்டுகோளும், உடன்பாடும் கூறப்பட

வேண்டுமென்ற நிபந்தனையை மட்டுமே விதிக்கிறது. யுனைட்டெட் கிங்டத்தின் பாராளுமன்றத்தில் கொண்டு வரப்படும் ஒரு சட்டத்திலுள்ள செய்திகளை, அது செய்யப் படும் சமயத்திலாவது, அல்லது அதற்கு முன்னரேயாவது, தென்னாப்பிரிக்காவில் சட்டமாக நிறைவேற்றுவதன் மூலமாக வேண்டுகோளும், உடன்பாடும் தென்னாப்பிரிக்கச் சட்டத்தின் மூலமாக அளிக்கலாம். அவ்வாறு அளிக்கப்படாமலிருப்பதற்குக் காரணம் எதுவும் இல்லை; ஆனால் இவ்வாறு செய்தல் நடை முறையில் விகாரமான செயல் ஆகும். மேலும், இது வெஸ்ட் மின்ஸ்ட்டர் சட்டத்தைச் செய்தவர்களால் கருதப்படாத ஒரு செயலும் ஆகும். வேறொரு வகையாகப் பார்த்தால் யூனியன் சட்டத்தின் 2ஆம் பிரிவு, வெஸ்ட்மின்ஸ்ட்ர் சட்டத்தின் 4ஆம் பிரிவைத் திருத்தியதுமாகும். இந்தக் கருத்து யுனைட்டெட் கிங்டத்தின் பாராளுமன்றத்தினுடைய சட்டப் படியான இறைமைக்கு நேர் முரண்பாடான ஒன்று ஆகும்; எவ்வாறெனில் யுனைட்டெட் கிங்டத்தின் பாராளுமன்றமானது, யூனியன் பாராளுமன்றத்தின் மூலமாகத் தனது சட்டப் படியான உரிமைகளை 4ஆம் பிரிவின்கீழ் வரம்பு செய்து கொண்டதாக அனுமானிக்க முடியாது. தென்னாப்பிரிக்கச் சட்டத்தின் பகுதியாக அமைந்து நடைமுறையில் இருக்கும் யுனைட்டெட் கிங்டத்துப் பாராளுமன்றச் சட்டங்களையும், அவ்வாறு இருக்கக்கூடிய எதிர்காலத்திய யுனைட்டெட் கிங்டத்துப் பாராளுமன்றச் சட்டங்களையும் திருத்துவதற்கு 1931ஆம் ஆண்டு முதல் (யூனியன்) பாராளுமன்றத்துக்கு அதிகாரம் இருக்கிறது (வென்ஸ்மின்ஸ்டர் சட்டத்தின் 2ஆம் பிரிவு). ‘யூனியனுக்கு இந்த அதிகாரத்தை அளித்த சட்டத்தை மாற்றுவதற்கான அதிகாரம் உண்டு’ என்ற கோரிக்கையானது மேற்படி 2ஆம் பிரிவை ஆதாரமாகக் கொண்டிருப்பதுபோலத் தோன்றுகிறது. ஆனால், இதற்கு மாறாக யூனியன் பாராளு மன்றமானது தனக்கு உரிய அதிகார எல்லையில் இறைமை உடையது எனவும், தென்னாப்பிரிக்காவுக்கு இந்த (1909ஆம் ஆண்டின்) அரசியலமைப்பை வழங்கிய 1909ஆம் ஆண்டின் தென்னாப்பிரிக்கச் சட்டத்தைத் திருத்துவதற்கு யூனியன் பாராளுமன்றத்துக்கு உள்ள அதிகாரம், மேற்படிச் சட்டத்தி லிருந்துதான் பெறப்படுவது என்றும், அது வெஸ்ட்மின்ஸ்ட்டர் சட்டத்தின் 2ஆம் பிரிவினின்றும் பெறப்படுவது அன்று என்றும் கூறப்படும் கருத்தைத் தென்னாப்பிரிக்காவிலுள்ள நீதி மன்றங்கள் ஏற்றுக்கொண்டன.[1] முழு சுயஆட்சி

[1] ‘பாராளுமன்ற இறைமையைப் பற்றி அண்மையில் தென்னாப்பிரிக் காவில் எழுந்துள்ள மாறுதல்களை அறிய 46ஆம் பக்கம் பார்க்கவும்,

அல்லது அதிகாரம் வேண்டுமென்ற தென்னுப்பிரிக்க யூனியனின் கோரிக்கை நிலைபெற வேண்டிய ஒன்றே; இதில் எவருக்கும் ஐயப்பாடு இருக்க முடியாது. வெஸ்ட்மின்ஸ்ட்டர் சட்டத்தின் 4ஆம் பிரிவைத் திருத்த வேண்டும் அல்லது நீக்க வேண்டுமென்ற கேள்வி எதிர்காலத்தில் எழும்போது அக் கேள்வியானது தலையிடாமை என்ற அரசியலமைப்புப் பழக்கத்தினுல் வரம்புபடுத்தப்பட்டுள்ளது என்று கருதப் பட்டால், தென்னுப்பிரிக்காவின் சுயஉரிமைக் கோரிக்கையை எளிதில் விளங்கிக் கொள்ளலாம்.

வெஸ்ட்மின்ஸ்டர் சட்டமானது அப்பொழுது காமன் வெல்த்திலிருந்த நான்கு நாடுகளாகிய கனடா, ஆஸ்திரேலியா நியூஸிலாந்து, தென்னுப்பிரிக்கா முதலியவற்றுக்கு மட்டுமே பொருந்தியதாக இருந்தபோதிலும், அதனுடைய 4ஆம் பிரிவின் விளைவை அல்லது ஆற்றலைத் திரும்பவும் கூறுகின்ற சட்டப் பிரிவுகள், காமன்வெல்த்தினுள் இந்தியா, பாகிஸ்தான், இலங்கை, கனு, மலேயாக் கூட்டரசு முதலியவற்றுக்குச் சுதந்திர நிலைமையை அளிக்கின்ற சட்டத்திலே காணப்படு கின்றன. அதேபோலவே சட்டபூர்வமான பொருளிலே குடியேற்ற நாடுகளாகக் கருதப்படாத (Colonies) இந்தியா, பாகிஸ்தான், மலோயா முதலியவற்றைத் தவிர, மற்றவைகளைப் பொருத்தவரையில், அவை சுதந்திரம் அடையும் முன்னரே, அவற்றுக்குக் கையாளத்தக்க குடியேற்ற நாடுகள் சட்டங்களின் செல்லுபடியாகும் தன்மையைப்பற்றிய சட்டமானது நீக்கப்பட்டது.

குடியேற்ற நாடுகளின் முழுச் சுதந்திர நிலைமைக்கு மாருன பொதுச் சட்டத்தினுடைய ஒரு விதியையும் வெஸ்ட்மின்ஸ்ட்டர் சட்டம் மாற்றி அமைத்தது. ஒரு குடியேற்ற நாட்டின் சட்டத்தை அதன் நிலவெல்லைக்கு மட்டுமே செல்லுபடியாகக் கூடியவாறு அதற்கு வரம்பு ஏற்படுத்து வதற்கு முயற்சித்தது இந்த விதி. குடியேற்ற நாடுகள் சுய ஆட்சி நிலையை அடைந்தனவாகையால், மேற்கூறிய விதியானது மிக்க எதிர்ப்புக்கு உரிய ஒரு விஷயமாயிற்று. இந்த விதியானது இனிமேல் டொமினியன்களின் பாராளு மன்றங்களுக்குப் பொருந்தக்கூடியது அன்று எனவும்; தம் நிலவெல்லைக்கு அப்பாலும் செயல்படும் ஆற்றலை உடைய சட்டங்களை டொமினியன்களின் பாராளுமன்றங்கள் செய்வ தற்கு முழு அதிகாரத்தையும் பெற்றுள்ளன எனவும், வெஸ்ட்மின்ஸ்ட்டர் சட்டத்தின் 3ஆம் பிரிவு கூறிற்று. இந்தப்

பிரிவானது கனடாவின் மாகாணங்களுக்கோ, அல்லது ஆஸ்திரேலியாவின் மாகாணங்களுக்கோ, அல்லது இப்பொழுது உள்ள குடியேற்ற நாடுகளுக்கோ பொருந்தக் கூடியது அன்று. ஆயினும், அது வெளிப்படையான சட்டத்தின் மூலமாக 1931ஆம் ஆண்டுக்குப் பின்னர் தோற்றுவிக்கப்பட்ட காமன்வெல்த் நாடுகளுக்குப் பொருந்துவது ஆகும்.

1911ஆம் ஆண்டின் பாராளுமன்றச் சட்டத்தைப் பற்றிய டைசியின் கருத்துகள்: ஆசிரியர் டைசியினுல் கடைசியாக வெளியிடப்பட்டதும், 1914ஆம் ஆண்டில் எட்டாம் பதிப்பாக வந்ததுமான நூலின் முன்னுரையில், அவர் பாராளுமன்றத்தின் இறைமை அதிகாரத்தைப் பொறுத்த வரையில் 1911ஆம் ஆண்டின் பாராளுமன்றச் சட்டத்தின் ஆற்றலை விவாதித்தார். இறைமை அதிகாரமானது இன்னும் பாராளுமன்றத்தின் இரண்டு மன்றங்களிலும் அரசரிடத்திலும் இருப்பதாகவும், ஆயினும், இறைமை அதிகாரத்தில் பொது மக்கள் மன்றத்துக்கு இருந்த பங்கை இந்தச் சட்டம் கூடுதலாக்கிற்று எனவும் அவர் முடிவு கண்டார். பிரபுக்கள் சபையினுல் தள்ளுபடி செய்யப்பட்ட சட்டத்தைப் பொறுத்த வரையில் பொதுமக்கள் சபைக்கு உள்ள அதிகாரங்கள் 1914ஆம் ஆண்டுக்குப் பின்னர் கூடுதலாகியுள்ளன என்பதை நாம் கண்டிருக்கிருேம்; பண மசோதாக்கள் அல்லாத மற்ற மசோதாக்களைப் பொறுத்த வரையில் பிரபுக்கள் சபைக்கு உள்ள ஓரளவு நிறுத்தி வைக்கக்கூடிய தள்ளுரிமையானது (suspensive veto) பன்னிரண்டு மாத கால அளவுக்கு 1949ஆம் ஆண்டின் பாராளுமன்றச் சட்டத்தினுல் குறைக்கப்பட்டது; ஆனுல் மேற்படி மசோதாக்களை ஒத்த மசோதாக்கள் பொது மக்கள் மன்றத்தில் அடுத்தடுத்த இரண்டு கூட்டங்களில் நிறைவேற்றப்பட்டிருத்தல் வேண்டும்; இந்தச் சட்டம் பண மசோதாக்களைப் பொறுத்த வரையில் யாதொரு மாறுதலும் செய்யவில்லை; பண மசோதாக்கள் 1911ஆம் ஆண்டின் சட்டத்தில் கூறப்பட்டது போல, பிரபுக்கள் சபையின் ஒப்புதலைப் பெருமலே அரசருடைய ஒப்புதலைப் பெறக்கூடியவை. பணமசோதாக்களல்லாத மசோதாக்கள் மூன்று மட்டுமே, 1911ஆம் ஆண்டின் சட்டம் நிறைவேற்றப் பட்டதன் பின்னர், கடந்த நாற்பத்தேழு ஆண்டுகளில், பாராளுமன்றச் சட்டங்களின் பிரிவுகளின்படி சட்டமாக வந்துள்ளன; இது கவனிக்கத்தக்கது. 1945ஆம் ஆண்டிலிருந்து 1951ஆம் ஆண்டுவரை நடைபெற்ற தொழிற்கட்சி அரசாங்கத்தின்கீழ், ஒரு சட்டம் மட்டுமே, அதாவது

1949ஆம் ஆண்டின் பாராளுமன்றச் சட்டமாக வந்த சட்டம் மட்டுமே, பிரபுக்கள் சபையின் ஒப்புதலைப் பெறுமல், சட்டமாக நிறைவேற்றப்பட வேண்டியிருந்தது என்பது இங்கு சுட்டிக்காட்டப்பட வேண்டியதாகும். 'ஏதாவது ஒரு நிலையில் பிரபுக்கள் சபையினர் பொதுமக்கள் சபையினருக்கு விட்டுக்கொடுத்தல்வேண்டும்' என்ற வழக்கமானது, முதலில் மறுக்காமல் விட்டுக்கொடுத்தல் வேண்டும் என்ற கடமையைச் சுட்டிக்காட்டுவதாகுமென்று பாராளுமன்றச் சட்டங்களின் மூலமாக விளக்குதல் வேண்டும்; இந்த நிலைமையை ஏற்றுக் கொள்ளும்படி பொதுமக்கள் சபையில் அளவில் பெரியதாக இருந்த எதிர்க் கட்சி கேட்டுக்கொள்ளப்பட்டது என்பதே மேற்படி 1949ஆம் ஆண்டின் சட்டம் நிறைவேறியதற்குப் பொருள் ஆகும்.

1958ஆம் ஆண்டின் வாழ்நாள் பிரபுத்துவச் சட்டமானது (Life Peerages Act, 1958) நிறைவேற்றப்படுதற்கு முன்னர், பாராளுமன்றத்திலும், வேறு இடங்களிலும் நடைபெற்ற சொற்போர்கள், இரண்டாவது மன்றத்தை முற்றிலும் ஒழித்து விடுவதென்பதாகத் திட்டவட்டமான கொள்கை எதுவும் எந்தக் கட்சிக்கும் இல்லை என்று காட்டுகின்றன.[1] பரம்பரை அடிப்படையிலமைந்த (உறுப்பினர்) கோட்பாட்டை (hereditary principle) நீக்கப்படுதல் வேண்டுமென்ற ஒரு தெளிவான கருத்து தொழிற் கட்சியில் இருக்கிறது. 'பிரபுக்கள் சபையின் பெரும்பான்மை உறுப்பினர்களுடைய பரம்பரைத் தகுதியை (hereditary character) மாற்றுமல், வாழ்நாளுக்கு மட்டும் பிரபுக்களாக இருக்கக் கூடியவர்களைச் சேர்ப்பதன் மூலம் பிரபுக்கள் சபையின் அமைப்பை மாற்றுவதற்குக் காரணம் இல்லை' என்ற மறுப்பின் அடிப்படையில் மேற்படிச் சட்டத்துக்கு எதிர்ப்புத் தோன்றிற்று. இந்தச் சட்டத்தைக் கொண்டுவருவதற்கு அரசாங்கத்தால் காட்டப்பட்ட காரணம் என்னவெனில், வாழ்நாள் பிரபுக்களை அமர்த்தும் அதிகாரமானது, பிரபுக்கள் சபையில் தொழிற்கட்சிக்குப் போதிய அளவில் பிரதிநிதித்துவம் கிடைக்கச் செய்யும் என்பதே ஆகும். ஒரு அரசாங்கத்துக்கு எதிர்க்கட்சியினரைப் பற்றி இருக்கக்கூடிய இத்தகைய விநோதமான கவலைக்குக் காரணத்தை, 'பிரபுக்கள் சபையானது மறு பரிசீலனை செய்யும் மன்றமாக இருந்து செய்யவேண்டிய முக்கியமான

[1] இங்கிலாந்தில் இரண்டாவது சபை என்று குறிப்பிடப்படும் மேற் சபையாகிய பிரபுக்கள் சபையானது பல ஐரோப்பிய நாடுகளில் முதற் சபை என்று (First Chamber) குறிப்பிடப்படுகிறது.

கடமை உண்டு,' என்று ஒப்புக்கொள்ளுவதன் மூலம் அறியலாம். மறுபரிசீலனை செய்தல் என்பது, இருதரப்பினருடைய விவாதங்களும் நன்கு சீர்தூக்கிப் பார்க்கப்படுமாயின் மிகவும் பயனுள்ளதாக இருக்கும். நீதிமன்றங்களில் மறுக்கப்பட முடியாதவாறு, சட்டத்தில் ஒரு மாறுதல் செய்தல் என்பது ஒரு முக்கியமான அலுவல் ஆகும்; அது செய்யப்படு முன்னர், பொதுமக்கள் சபையினுடைய குழு முறையைப் போன்ற (Committee procedure) ஒரு கவனமான பரிசீலனை அதுபற்றி இரண்டாம் மன்றத்தில் செய்யப்படுதல் வேண்டுமென்பதே, மறு பரிசீலனை செய்தலுக்கும் பாராளுமன்ற இறைமைக்கும் உள்ள பொருத்தம் ஆகும். இறைமையான பாராளுமன்றம் ஒரு முறை செயல்பட்டு ஒரு சட்டத்தை நிறைவேற்றிவிட்டால், அதனை நீக்கவோ அல்லது திருத்தவோ கூடிய ஒரு சட்டத்தைத் தவிர வேறு எதுவும் அதனை மாற்ற முடியாது. எனவே, எல்லாச் சட்டமும் நிறைவேற்றப்படு முன்னதாகப் பாராளுமன்றத்தின் இரு சபைகளிலும் போதிய பரிசீலனை பெற வேண்டுமென்ற உறுதியே முக்கியமானது. திடீரென விவாதத்தை முடித்துவிடும் கில்லட்டீன், அல்லது விவாதத்தை முடித்து விடுவதற்காகக் கையாளப்படும் வேறு வகைகளின் மூலமாகப் பொதுமக்கள் சபையில் விவாத உரிமை குறைக்கப்படக் கூடிய நிலைமை இருக்கிற காரணத்தால், மேற்கூறிய மறு பரிசீலனை இருப்பது இன்றியமையாததாகிறது. உண்மையில், ஒரு உறுதியான இரண்டாம் மன்றத்துக்கு ஆதரவான விவாதம் இது ஒன்றுமட்டும் அன்று. கூட்டரசு நாடுகளில், கீழ்ச்சபையானது ஒவ்வொரு மாகாணத்திலும் வெவ்வேறு அளவில் உள்ள மக்கள்தொகையைக் காட்டுவதாக இருக்கவும், மேற்சபையோ உறுப்பு மாகாணங்களிடையே ஒத்த அளவில் உரிமையைப் பாதுகாக்கும் நோக்கத்தோடும் வழக்கமாக அமைக்கப்படுகின்றன. இத்தகைய கூட்டரசு நாட்டில் நடுச் சட்டமன்றமானது ஒருபோதும் இறைமையாக இருப்பதில்லை; ஏனெனில், அவ்வாறு அதற்கு முழு அதிகாரங்களையும் கொடுப்பதனால், உறுப்பு மாகாணங்களின் ஒப்புதல் இல்லாமலே அவற்றின் சட்டமன்றங்களின் அதிகாரங்களை அது குறைக்க முடியும்.

ஓரளவு நிறுத்தி வைக்கக்கூடிய தள்ளுரிமையின் மூலமாகச் சட்டத்தைத் தள்ளிவிடுவதற்குப் பிரபுக்கள் சபைக்கு இருக்கும் தகுதியை ஒரு சில மாதங்களுக்கு மட்டுமே செயல்படக் கூடியதாக இரண்டு பாராளுமன்றச் சட்டங்களும் குறைத்துவிட்டன. தொழிற் கட்சி ஆயின் அரசாங்கம் நடை

பெற்ற காலமாகிய 1945ஆம் ஆண்டிலிருந்து 1951ஆம் ஆண்டு வரையில், பிரபுக்கள்சபை கையாண்ட கொள்கையின் விளைவாக, பொதுமக்கள் சபை தனது தலைமை அதிகாரத்தை நிலைநிறுத்த வேண்டிய கட்டாயம் இல்லாமற் போய்விட்டது. 1914-க்குப் பின் வந்த ஆண்டுகளிலே, முதல் உலகப்போர் பொதுமக்கள் சபையில் பெரும்பான்மையாக இருந்த லிபரல் கட்சிக்கும், பிரபுக்கள் சபைக்கும் இடையே மேலும் பூசல்கள் ஏற்படுவதைத் தவிர்த்தது; அப்பொழுது பிரபுக்களுக்கும் அரசாங்கத்துக்கும் பூசல் ஏற்படுவதற்கு உரிய நிலை ஆறு ஆண்டுகளுக்கு மட்டுமே இருந்தது. பிரபுக்கள் தள்ளிவிடக் கூடுமென்ற அச்சத்தின் காரணமாக மிஸ்டர் அட்லியும் (அவர் அப்பொழுது பிரபுவாக இல்லை) அவருடைய சகாக்களும் பாராளுமன்றத்தில் சட்டங்களைக் கொண்டுவராமல் இருந்திருக்கலாம். ஆயினும், இதுவே நிலைமை என்பதற்கு நேரான ஆதாரம் எதுவும் இல்லை. அரசாங்கத்துக்கு எதிராக இருந்த பிரபுக்கள், பெருமளவில், எண்ணிக்கையில் இருந்த போதிலும், இரண்டாவது உலகப்போருக்குப் பின்னர் அரசாங்கத்தால் பாராளுமன்றத்தில் கொண்டு வரப்பட்ட சட்டங்களின் திட்டத்துக்கு வாக்காளர்களின் அதிகாரம் கொடுக்கப்பட்டிருக்கிறது என்று ஒப்புக்கொள்ள இசைந்தார்கள். 1947ஆம் ஆண்டின் பாராளுமன்ற மசோதா எதிர்பாராத விதமாகக் கொண்டுவரப்படுகிற வரையில், தொழிற் கட்சி அரசாங்கத்தால் நிறைவேற்றப்படும் எந்த மசோதாவையும் தள்ளிவிடுவது என்ற கேள்வியே எழவில்லை என்று தெரிகிறது. பொதுமக்கள் சபையினால் நிறைவேற்றப் பட்ட சட்டத்தைத் தள்ளிவிடுவதற்குத் தனக்கு உரிமை இல்லை என்கிற விதியைப் பிரபுக்கள்சபை தானே ஒத்துக் கொண்டு நடக்கிறவரையில் பாராளுமன்றச் சட்டமானது பொதுமக்கள் சபைக்கு (ஏற்கனவே) இருக்கும் இறைமை அதிகாரத்தின் பங்கை மிகவும் கூடுதலாக ஆக்கியுள்ளது என்ற டைசியின் முடிபில் உண்மை இருப்பதாக ஒத்துக் கொள்ளுதல் எளிதன்று. ஆயினும், இரு சபைகளுக்கும் இடையே உள்ள உறவு மாறிவிட்டது என்பதை ஒத்துக் கொள்ள இயலும்.பிரபுக்கள் சபை, பொதுமக்கள் சபையோடு பூசலிடும் பேரிடரை வரவேற்க விரும்பவில்லை என்று தெளிவு படுத்திவிட்டது; மேலும், அது பாராளுமன்றச் சட்டத்தின் செயல்விதியை எழுப்ப மனமில்லாமல், தனது ஒத்திப்போடக் கூடிய அதிகாரங்களைக் கையாண்டு தனது ஆற்றலற்ற நிலையை வலியுறுத்துவதைவிடப் பொதுமக்கள் சபையின் பெரும் பான்மைக் கட்சியானது தனது சட்டக் கருத்துகளை வலுவாக

நடைமுறைக்குக் கொண்டுவருவதற்கு அதற்கு உரிமை உண்டென்று ஒப்புக்கொண்டுவிட்டது. ஒத்திப்போடும் அதிகாரங்களின் மதிப்பு, அவற்றைக் கையாளாததால் கூடுதலாக ஆயிற்று போலும். எதிர்காலத்தில் ஒரு அரசாங்கமானது பொது மக்கள் மன்றத்தில் தனக்கு இருக்கும் பெரும்பான்மை நிலையைப் பயன்படுத்தி வாக்காளர்களில் மிகப் பெரும்பாலோருடைய விருப்பங்களுக்கும் தெளிவாக மாறுபட்ட ஒரு சட்டத்தைக் கொண்டுவர விரும்பினுல், ஓரளவு நிறுத்திவைக்கக்கூடிய தள்ளுரிமை அதிகாரமானது, இப்பொழுது உள்ளபடி மிகக் குறுகிய காலத்துக்குச் செயல்படுமாயின், அக் குறுகிய கால அளவு கூட மக்களால் விரும்பப்படாத சட்டத்தைச் செயல்படாதபடி தடுத்து நிறுத்தக்கூடியதாக இருக்கிறது. ஐரோப்பியக் கண்டத்து நாடுகளிலே, புரட்சிகரமான மாறுதல்களெல்லாம் மிக எளிதாக நிறைவேற்றப்படுவதை நாம் காணும்போது, மேற்சபைக்கு அனுப்பாமலே சட்டம் இயற்றுவதற்குப் பொதுமக்கள் சபைக்கு முழு அதிகாரம் உண்டு என்று ஒப்புக்கொள்ளுதல் தீர ஆராயாமல் கூறுவதாகும்.

4. சட்டத்தின் ஆட்சி

(Rule of Law)

கொள்கை, அதன் பொருள் என்ன என்பது: நாட்டின் சட்டமே தலைமையானது என்பது பத்தொன்பதாம் நூற்றுண்டில் ஒரு புதுமையான கோட்பாடாக இருக்கவில்லை. சட்டத்தின் விதி என்ற கருத்தை டைசி புதிதாக கண்டு பிடித்ததாக எவரும் எண்ணவேண்டாம். அந்த விதியைப் பற்றிய பொருளுக்கு டைசி தனது விளக்கங்களை அளித்தார் என்பது உண்மையே. ஒரு சட்டத்துக்கு ஆதாரமாக மனித நிலைக்கு அப்பாற்பட்ட ஒன்றைக் கற்பித்தாலும் சரி, அல்லது மனித நிலைக்கு உட்பட்ட ஒன்றைக் கற்பித்தாலும் சரி, சட்டமே உலகத்தை ஆளுதல் வேண்டும் என்ற மத்திய காலத்தவருடைய கருத்திலே இந்தச் சட்டத்தின் ஆட்சி என்ற கருத்துக்கு ஆதாரம் காட்டலாமென்று ஹோல்ட்ஸ் வொர்த் கூறியுள்ளார்.[1] இரண்டாம் உலகப் போரில் நேசக் கட்சியாருடைய முக்கியமான போர் பற்றிய நோக்கம், ஐரோப்பாவில் சட்டத்தின் ஆட்சியை மீண்டும் நிலை நாட்டுதலே என்று கூறப்பட்டது நினைவி லிருக்கிறது. போர்ச் செயலின் மூலமாக ஒரு நாடு மற்றொரு நாட்டின்மீது படையெடுத்து அதைக் கைப்பற்றித் தனது சட்டத்தை நிறுவியிருக்குமானுல், அதை நீக்கிவிட்டுக் கைப்பற்றப்பட்ட நாட்டுக்குத் தனது சொந்த அமைப்பையே அல்லது ஆட்சி முறையையே மீட்டுக் கொடுப்பது என்று மேற்படி நோக்கத்துக்குப் பொருள் கூறப்பட்டது. இதற்கு யுனைட்டெட் கிங்டத்திலோ, அல்லது அதனேடு சேர்ந்த மற்ற நாட்டிலோ உள்ள அமைப்பை ஒத்த அமைப்பை மீட்டல் என்பது பொருளன்று; ஆனுல், படைவலியின் மூலமாக ஒரு நாடு தனது ஆட்சி அமைப்பைத் தன்னுல் கைப்பற்றப்பட்ட

[1] Holdsworth, History of English Law, Vol. ii (1923), Vol. X (1938), Pageg 647-650.

நாட்டில் நிறுவியிருக்குமாயின் அத்தகைய ஆட்சி அமைப்புக்குப் பதிலாக, கைப்பற்றப்பட்ட நாடு தான் விரும்பிய சட்டத்தின் அமைப்பு எதுவாயினும் அதனைக் கையாளுவதற்கு அது சுதந்திரமாக இருத்தல் வேண்டும் என்பதே மேற்படி நோக்கத்தின் பொருளாகும். நாடுகள் ஒன்றுக்கொன்று வைத்துக் கொண்டுள்ள தொடர்புகளில் அவைகளைக் கட்டுப்படுத்தக்கூடிய சில அடிப்படையான கடமைகளை ஒப்புக்கொள்ளுதல் என்பதேசட்டத்தின் ஆட்சி யென்பதற்கு வெறொரு கருத்தில் உள்ள பொருள் ஆகும். இவையே பொதுவான சர்வதேசச் சட்டத்தின் விதிகள் ஆகும். இன்றுள்ள ஐக்கியநாடுகள்சபையானது,எவ்வளவுதான்நடைமுறையில் சில குறைபாடுகளுடன் செயல்பட்ட போதிலும், அது சட்டத்தின் ஆட்சி என்ற கருத்தைச் செயலாற்றுவதற்கு ஏற்படுத்தப்பட்ட ஒரு நிறுவனமாகக் காட்சியளிக்கிறது. தனிப்பட்ட குடிமக்கள் ஒவ்வொருவருக்கும் மனித உரிமைகள் தத்தம் நாடுகளில் உண்டு என ஒப்புக் கொள்ளப்படுதல் வேண்டுமென்ற குறிக்கோளை எய்துவதில் இதுவரை ஏற்பட்ட முன்னேற்றமெல்லாம், சட்டத்தின் முன்னர் சமத்துவம் என்ற டைசியின் கருத்துக்கு மிகவும் நெருங்கி வந்திருக்கிறது. சட்டத்துக்குக் கட்டுப்படாத ஒரு சிறுபான்மையினரால், சட்டத்தின் ஆட்சி என்பது குழப்பத்தை விளைவிக்கும் என்பதோ, அல்லது அரசியல் சூழ்வினைத் திறத்தினுல் சட்டத்தின் ஆட்சி என்பது மிகவும் தடைப்படும் என்பதோ, மேற் குறிப்பிட்ட பொருளில் சட்டத்தின் ஆட்சி என்பதே நாகரிக உலகம் முழுவதும் கடைப்பிடிக்கப்படுதல் வேண்டும் என்ற கருத்து ஒப்புக்கொள்ளப்படுவதைத் தடுக்கவில்லை.

சில சமயங்களில் இந்தத் தொடரானது (சட்டத்தின் ஆட்சி என்ற தொடரானது) சட்டமும் ஒழுங்கும் நிலை நிறுத்தப்படுதல் என்ற கருத்தைக் குறிப்பதாகக் கொள்ளப்படுகிறது. இந்தப் பொருளில் எந்த நாடும், இதனை ஒப்புக் கொள்ள மறுக்காது. சட்டமும் ஒழுங்கும் ஒரு எதேச்சாதிகார ஆட்சியினுலும், ஒரு பாராளுமன்ற அல்லது அதைப்போன்ற தாராள இயல்புள்ள வேறொரு வகையான அரசாங்கத்தினுலும் காக்கப்படுதல் கூடும். விசேட அதிகாரத்தின் மூலம் நாட்டை ஆளுவதற்கு ஸ்டூவர்ட் அரசர்கள் கோரிய உரிமை வெற்றியடைந்திருக்குமானுல் அப்போதும் இங்கிலாந்து சட்டத்தின் ஆட்சி என்ற முறையை அடைந்திருக்கும்; அத்தகைய வடிவம் சட்டத்தையும் ஒழுங்கையும் நிலைநிறுத்துவதற்கு ஏற்ற திறமுடையதாக இருக்கும்; ஆயினும், அதனுடைய கருத்து

அடிப்படையானது மிகவும் பழமையாக இருக்கும். இதனுல் கொடுங்கோலாட்சி தொடர்ந்து வந்திருக்குமெனவும் கூற இயலாது. எவ்வாறெனில் அரசருடைய ஏதேச்சாதிகாரம் என்பது ஆங்கில வரலாற்றுக்கே அறிமுகம் ஆகாத ஒரு இயல்பு ஆகும். அரசர் எட்டாம் ஹென்றிகூட 'அரசியலமைப்பு' என்ற சொற்றெடரையே அறியாத அந்தக் காலத்திலே, அரசியலமைப்பு பற்றிய சில நுட்பங்களை (nicities) மிகவும் கடுமையாகப் பின்பற்றினுர். 1539ஆம் ஆண்டின் புகழ் பெற்ற 'அரசர் சட்டம்' (Lex Regia) (விளம்பரங்கள் பற்றிய சட்டம்), அரசருடைய கட்டளை அல்லது ஆணையின் மூலமாக மட்டுமே தாங்கள் விரும்பியவற்றையெல்லாம் செய்தற்கு அரசருக்கும், ஆலோசனைக் குழுவுக்கும் அதிகாரம் கொடுக்கவில்லை. விளம்பரங்களுக்கு இருந்த அதிகாரத்தைப் பற்றிய ஒரு தெளிவில்லாத பிரச்சினைக்கு முடிவு காணும் பொருட்டு அரசராலும், பாராளுமன்றத்தாலும் விரும்பிச் செய்யப்பட்ட முயற்சியே மேற்படி சட்டமாகும். அது பொதுச்சட்டம் (common law), நடைமுறையிலிருந்து வரும் பாராளுமன்றச் சட்டங்கள், சொத்துப் பற்றிய உரிமைகள் முதலியவற்றை யெல்லாம் பாதுகாத்து, ஒரு விளம்பரத்தை மீறுவதற்கு மரணதண்டனை விதிக்கப் படுவதை அது தடுத்தது.[1]

மேற்படி சட்டமானது ஆரும் எட்வர்ட் அரசர் அரியணை ஏறியபோது, ஆருண்டுகள் கழித்து நீக்கப்பட்டாலும், மேரியும், முதலாம் எலிசபெத்தும் அரசிகளாக இருந்தபோது, அவர்கள் சட்டம்இயற்றும் பொருட்டு,விளம்பரங்கள் செய்யும் முறையைத் தொடர்ந்து பயன்படுத்தினர். ஸ்டூவர்ட்டுகள் ஆட்சிக்கு வந்தபோது, முதலாம் ஜேம்ஸ் அரசர் (இத்தகைய) சட்டத்துக்கு முறையிடவும், தனது எதிரிகளுக்கு எவ்வளவு மன உறுதிப்பாடு தங்களுடைய நிலையைப்பற்றி இருந்ததோ, அவ்வளவு மனஉறுதிப்பாட்டுடனே, அவர் தனது செயல்களுக்கு ஏற்ற முன் நிகழ்வுகளை அல்லது மேற்கோள்களை (precedents) கடந்தகால வரலாற்றிலிருந்து எடுத்துக் காட்டவும் முடிந்தது.

விளம்பரங்கள் பற்றிய வழக்கானது (1610), விசேட அதிகாரத்தின் மூலமாகச் சட்டம் செய்வதற்கு அரசருக்கு

[1] Holdsworth, History of English Law, Vol. IV(1924), பக்கங்கள் 102, 103; Adair, English Historical Review, Vol. xxxii (1917), பக்கம் 35. இந் நூலில் இது பற்றி டைசி கூறியிருக்கும் கருத்தைப் பார்க்கவும்; அதற்குத் தற்கால ஆசிரியர்களின் ஆதரவு இல்லை.

அதிகாரம் அளிக்க மறுக்கிறது; இத்தகைய மறுப்பு நியாயமானதே. இந்தத் தீர்ப்பு அரசர் முதலாம் சார்லஸினுல் மறுக்கப்பட்டபோதிலும், சட்டத்தின் வரம்புக்குள் அரசரைக் கொண்டுவந்துள்ள இக்காலத்திய அரசியலமைப்பு நிலைகளை மேற்படித் தீர்ப்பு தோற்றுவித்ததென்பதில் ஐயமில்லை.

நாட்டின் சட்டத்தின் தலைமையான நிலைமை என்ற சுருங்கிய பொருளில் சட்டத்தின் ஆட்சி என்ற கருத்து, சில அடிப்படையான சட்டங்களின் தலைமை என்ற வடிவத்தில் வழக்கமாக அமைந்துள்ளது. பிரிட்டிஷ் அரசியலமைப்பைவிட மற்ற ஐரோப்பிய நாடுகளின் அமைப்பை ஒட்டிய இக் கால அரசியலமைப்புச் சட்டங்கள் சில அடிப்படை உரிமைகளின் மதிப்பை வலியுறுத்துகின்றன. அத்தகைய உரிமைகள் ஒரு அரசியலமைப்பில் இருப்பதே அவற்றின் நிலையான தன்மைக்குப் பொறுப்பாக (guarantee) இருக்கிறது; கொள்கை அளவிலே, நாட்டின் பாதுகாப்புக்காக அவை தற்காலிகமாக நிறுத்திவைக்கப்படலாமே தவிர, அவை மாறுதலுக்கு உட்படக்கூடியவை அல்ல. நம்முடைய நாட்டில்கூட மாற்றப்பட முடியாத சட்டத்தின் விதிகள் என்ற கருத்துக்குச் சிறிது ஆதரவு இருக்கிறது; ஓரளவு அத்தகைய ஆதரவு மாபெரும் பட்டயம் (Magna Carta) என்ற சட்ட நூலின் முன் பக்கத்திலும், இக்கால அரசியலமைப்புக்கு ஆதாரமாக அல்லது அடித்தளமாக ஒப்புக்கொள்ளப்பட்ட உரிமைகள் மசோதா (Bill of Rights), செட்டில்மென்ட் சட்டம் (Act of Settlement) முதலியவற்றின் பிரிவுகளில் நேரடியாகவும் காணப்படுகிறது.

மேற்படி உரிமைகள் மசோதாவே இக் காலத்திய பாராளுமன்ற அரசாங்க முறையைத் தோற்றுவிக்கும் தொடக்க நிலை என்று கூறப்படும்போது, மேற்படி மசோதாவில் காணப்படும் எதுவும், அரசருக்கு விசேட அதிகாரம் உண்டு என்பதை மறுத்துக் கூறவில்லை என்பது இங்கு முக்கியமாகக் காணப்படவேண்டிய ஒன்று ஆகும். இந்த மசோதா விசேட அதிகாரத்தின் மூலமாக இதுவரை செய்யப்பட்ட செயல்களை யெல்லாம் ஒவ்வொன்ருக எடுத்துக் கூறிற்று. மேலும் அது அவ்வாறு செய்யப்பட்ட செயல்களைப் பாராளுமன்றத்தின் கட்டுப்பாட்டில் வைக்கவோ, அல்லது, அதற்கு மாருக, அத்தகைய செயல்களைச் செய்வதற்குரிய அதிகாரம் அரசருக்கு இல்லை என்று மறுக்கவோ செய்தது. இவ்வாறு தனது சமயோசிதம்போல் கையாளப்படுதற்குரிய அதிகாரம்

(discretionary power) அரசரிடத்தில் ஓரளவுக்கு எப்போதுமே இருந்து வந்திருக்கிறது. இத்தகைய சமயோசித அதிகாரமானது பொதுச்சட்டத்தின் விதிகளினாலும் (rules of common law), நிலவரச் சட்டத்தின் விதிகளினாலும் (rules of statutory law) வரம்புபடுத்தப்பட்டிருக்கிறது என்ற காரணத்தினால் தான், 'இங்கிலாந்தில் நிர்வாகத்துக்கு மிக விரிவான அளவில் வரம்பற்ற சமயோசித அதிகாரங்கள் எப்போதுமே கொடுக்கப்படுவதில்லை,' என்ற கருத்து தெரிவிக்கப்படுகிறது. வேறு வகையாகச் சொல்லப்போனால், அரசர், அதாவது நிர்வாகமானது சட்டத்துக்கு உட்பட்டதாக (அல்லது கீழ்ப் பட்டதாக) இருப்பதாகும்.

இங்கிலாந்தில் பொதுச்சட்டத்தின் தலைமை (supremacy of the common law) என்ற கோட்பாடானது, பாராளுமன்றத்துக்குத் தலைமை என்ற கருத்தோடு முரண்பாடு இல்லாத வகையில் இணைக்கப்படவேண்டிய ஒன்று ஆகும். சட்டம் செய்வதற்குப் பாராளுமன்றத்துக்கு அதிகாரம் உண்டு என வழக்கறிஞர்கள் (lawyers) ஒப்புக்கொள்ளுவதால், பொதுச் சட்டத்திலே நீதிபதிகளால் மட்டுமே விளக்கப்படுவதற்கு உரியதும், பாராளுமன்றத்தால் மாற்றப்பட முடியாததுமான அடிப்படைச் சட்டங்களின் அமைப்பு ஒன்று காணப்படுகிறது என்று வற்புறுத்த இடமில்லை. தனது விசேட அதிகாரத்தால் மட்டுமே (prerogative) நாட்டை ஆளுதற்கு அரசர் கோரிய உரிமையைச் செல்லுபடியாகாததாகச் செய்தது எது எனில், அது நீதிபதி கோக் (Coke) என்பவரும், அவருடன் கருத்தில் ஒன்றுபட்டிருந்தவர்களும் பாராளுமன்றத்தோடு கூட்டாகச் சேர்ந்ததுதான். இவ்வாறு அவர்கள் சேருவதற்குக் காரணம், பொதுச் சட்டமானது, பாராளுமன்றத்தால் மட்டுமே மாற்றப் படக் கூடியது என்ற நிலைதான். மேலும், ஒரு புதிய விளக்கும் திறனை (technique of interpretation) நீதிபதிகள் வகுத்தனர். இவ் விளக்க முறையானது நிலவரச் சட்டத்தை விளக்கும் போது, பொதுச்சட்டத்துக்கு வெளிப்படையான மாறுதலைத் தவிர வேறெந்த மாறுதலும் ஏற்படலாகாது என்ற ஒரு அனுமானத்தை அல்லது எண்ணத்தைத் தோற்றுவித்தது.[1] ஆயினும் பதினேழாம் நூற்றாண்டிலேயே வெகுகாலமாகச் செய்யப்படாதவை என்று கருதப்பட்ட அரசியலமைப்புப் பற்றிய தீவிரமான மாறுதல்கள், பொதுச் சட்டத்தால் தோற்றுவித்திருக்கப்பட முடியாதவை ஆகிவிடும். இந்தத் தீவிர மாறுதல்கள் பாராளுமன்றத்தால் செய்யப்படுவதற்கு

[1] அடிக்குறிப்பைப் பக்கம் 98-ல் காண்க.

இருப்பதுபோலவே விசேட அதிகாரத்தால் செய்யப்படுதற்கும் இருக்கின்றன. ஆனால், பாராளுமன்றமும், பொதுச் சட்டம் அறிந்த வழக்கறிஞர்களும் சேர்ந்த கூட்டமைப்பானது, நாளாவட்டத்தில் சட்டத்தின் தலைமையான நிலை என்பது, பாராளுமன்றத்தின் தலைமை என்ற பொருளைத் தரும் என்பதைத் தெளிவாக ஆக்கிவிட்டது. 'நடைமுறையிலிருக்கும் சட்டத்தின் தலைமையான நிலைமையை மாற்றாமல் விட்டுவிடப் பாராளுமன்றம் கருதியிருக்கும்வரை, அத்தகைய நிலை பாராளுமன்ற அதிகாரங்களால் நீடித்து இருக்கிறது; மேலும், பொதுச் சட்ட மறிந்த வழக்கறிஞர்கள், மேற்படி நிலைமையைப் பாதுகாக்கும் வேலையைப் பாராளு மன்றத்திடமே ஒப்படைத்துவிடலாம்.'[1] இச் சொற்களைப் பதினேழும் நூற்றாண்டில், இதுபற்றிய பிரச்சினை அரசருக்கு எதிராக எழுப்பப்படுவதற்கு முற்பட்ட காலத்திலேயே சர் வில்லியம் ஹோல்ட்ஸ்வொர்த் எழுதினார். ஆனால், இவை தற்கால அரசியலமைப்பின் அடித்தளத்தை அமைத்த 1689ஆம் ஆண்டின் புரட்சியின் விளைவுகளினால் சரியெனக் காட்டப்பட்டன. சட்டத்தின் ஆட்சியைப்பற்றி டைசி செய்த ஆராய்ச்சி பெரும்பாலும் மேற்படி அடித்தளத்தில்

[1] (முன் பக்கம்) ஒரு அடிப்படையான, மாற்றப்பட முடியாத சட்டம் உண்டு என்ற மத்திய காலக் கருத்தைப் பொதுச்சட்டமானது புறக்கணித்துவிட்டு, சட்டம் இயற்றுவதற்குப் பாராளுமன்றத்துக்கு உள்ள தலைமையான அதிகாரத்தை ஒப்புக்கொண்டது. ஆயினும், அதனால் இவ்வாறு ஒப்புக்கொள்ளப்பட்ட அதிகாரத்தை உடைய பராராளுமன்றத்தின் சொற்களுக்கு அது தனது சொந்தக் கோட்பாடுகளுக்குக் கொடுக்கக் கூடிய மதிப்பில் ஒரு சிறு பகுதியையும், தாராளமான இயல்புள்ள விளக்கத்தையும் கொடுக்கவில்லை. நீதிமன்றங்கள் பெந்தம் (Bentham) போன்றோருடைய இயல்புகளோடு எதனையும் காணவில்லை; எனினும் அவை முழு மாட்சியும் உடைய பொதுச்சட்டத்தில் அதிகாரமின்றித் தலையிடுவதாகவே நிலவரச் சட்டத்தைக் (statutory law) கருதின. இத்தகைய போக்கு இன்றளவும் இருக்கிறது. வெகுகாலமாக இருந்து வரக்கூடிய நிறுவனங்களை அவை நிலவரச் சட்டத்தினால் தோற்றுவிக்கப் பட்டாலும், அல்லது பொதுச்சட்டத்தினால் தோற்றுவிக்கப்பட்டாலும் நீதிமன்றங்கள் முழுமையாகப் புரிந்துகொண்டுள்ளன. ஆயினும் இக்காலச் சட்டங்களின் மூலமாகத் தோற்றுவிக்கப்பட்டிருக்கும் சூழ்நிலைகளின் இயல்பையும், நிறுவனங்களின் இயல்பையும் மறுப்பதினின்றும் நீதிமன்றங்கள் தங்களைத் தடுத்துக் கொள்கின்றன. இதற்கு எதிராக சட்டத்தை வரைபவர்கள் மிகச் சிறு விபரங்களைப் பற்றியும் எழுதுவதில் கவனமாக இருக்கின்றனர். எனவே, பொதுச் சட்டத்துக்கு சாதகமாகப் பல்வேறு வகைகளில் நீதிமன்றங்களால் கொடுக்கப்படும் விளக்கங்களை மாற்றி விடுவது என்ற அவர்களுடைய நோக்கம் ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் வெளிப்படையாகத் தெரிகிறது. [R. T. E. Latham, The law and Commonwealth in Survey of British Commonwealth Affairs, Vol. I (1937), பக்கங்கள் 510-511]. ரைட் பிரபுவின் கருத்தின்படி (Lord Write) இவ்வாறு சட்டத்தை அமைத்தல் என்ற கொள்கை இப்போது ஒப்புக்கொள்ளப்படவில்லை என்பதும் ஈண்டு குறிப்பிடுவது பொருத்தமாகும்.

[1] Holdsworth, History of English Law, Vol. iv (1924), பக்கங்கள் 187-188.

அமைந்திருக்கிறது. இது, உரிமைகள் மசோதாவின் முக்கியப் பிரிவுகளோடு இந் நூலின் 5ஆம் இயலிலிருந்து 10ஆம் இயல்வரையுள்ள இயல்களை ஒப்பிட்டால் தெரியவரும். அரசியலமைப்புச் சட்டத்தின் பொதுச் சட்டம் என்று ஹோல்ட்ஸ்வொர்த் குறிப்பிடுவதை, அவர் ஆள் சுதந்திரம், கூடி ஆராயும் சுதந்திரம், கூட்டமாகக்கூடும் உரிமை முதலியவற்றின் வாயிலாக ஆராய்கிறுர்.

இன்றைய நாளில் பொதுச்சட்ட வழக்கறிஞர்களை எதிர் நோக்கியுள்ள பிரச்சினையே வேறு. கடந்த காலத்தில் பொதுப் பணித் துறைகளைப் (public service) பாதுகாத்தல் என்பது அரசாங்கத்தின் அலுவலில் ஒரு பாகமாக அமைந்திருக்கவில்லை. ஆனுல், இப்போது அவற்றைப் பாதுகாப்பதற்காகச் சிக்கலான ஆட்சித்துறை இயல்பான சட்டங்களைப் பாராளுமன்றம் நிறைவேற்றியுள்ளது. இந்தப் பணித்துறைகளைத் தவிர, அரசாங்கமானது நிலத்தைப் பயன்படுத்துதல் என்ற செயலின்மீது தனது கட்டுப்பாட்டை நிறுவியுள்ளது. மேலும் பல சூழ்நிலைகளில் அரசாங்கமானது, பொதுக் காரியங்களுக்காக நிலத்தைக் கட்டாயமாக எடுத்துக்கொள்ளுவதற்கும் வலி உடையதாக இருக்கிறது. ஆனுல், இவையெல்லாம், பொதுச்சட்டமானது ஆள் சுதத்திரத்துக்கும், பலருடன் கலந்து ஆராயும் உரிமைக்கும், தொன்றுதொட்டு அளித்து வந்த பாதுகாப்பைப் பொறுத்தவரையில் எந்தப் பெரும் மாறுதலையும் செய்யவில்லை. தனி மனிதர் சுதந்திரத்தைப் பற்றிய இத் துறைகளை மீறக்கூடிய வகையில் விரிவாகப் பாராளுமன்றமானது நிர்வாகத்துக்கு, இரு உலகப் போர்கள் நடைபெற்ற காலத்தில் அதிகாரம் அளித்தது. அப்படி இருந்தும், சிறை பிடிக்கவும் (detention), தணிக்கை செய்யவும் (censorship) கூடிய அதிகாரங்கள் நிர்வாகத்திஞல் மிகச் சுருங்கிய அளவில்தான் கையாளப்பட்டன; மேலும், அத்தகைய அதிகாரங்கள் போர் நடவடிக்கைகள் நின்றபின் மிகக் குறுகிய காலத்திலேயே மீண்டும் எடுக்கப்பட்டுவிட்டன. அத்தகை அதிகாரங்கள் நடைமுறையில் இருக்கும்போது அவை எப்போதும் பாராளுமன்றத்தின் குறைகூறும் அதிகாரத்துக்கு (criticism) உட்பட்டே இருந்தன.[1] அரசாங்கத்துக்குப் புதிய அலுவல்கள் வளர்ந்துள்ள நிலைமையானது, டைசியின் ஆராய்ச்சியின் இயல்பை விரிவான இயல்புடையதாக ஆக்கவில்லை; ஆனுல், '1689ஆம் ஆண்டின் கொள்கைகள் குடியாட்சியைப்பற்றி யாவராலும் ஒப்புக்கொள்ளப்பட்ட

[1] Wade and Phillips, பக்கங்கள் 386—397.

கருத்தின் பாகமாக அமைந்துவிட்ட காரணத்தால்', அது (டைசியின் ஆராய்ச்சி) இக்கால அரசியலமைப்புக்கு இன்றும் பொறுத்தமாக இருக்கின்றது. ஜென்னிங்ஸ் கூறுவதுபோல[1], எந்தக் குடியாட்சிவாதியாலும், (democrat) ஒப்புக் கொள்ளப்படத்தக்க கருத்து விக் கட்சியின் (Whig party) கருத்துகளில் இருக்கிறது. மேலும் விக் கட்சியின் கருத்து 1689ஆம் ஆண்டின் கொள்கைகளிலிருந்து வருவிக்கப்படுகிறது. சட்டத்தின் ஆட்சி என்பதற்கு டைசியின் விளக்கத்தில் காணும் குறைபாட்டுக்கு முக்கிய காரணமாக இருப்பது எது என்ருல், அது விக் கட்சியின் மரபிலே அவ் வாசிரியருக்கு உள்ள ஈடுபாட்டைக் காட்டுகிறது என்பதே ஆகும். இவ்வாறு இந் தமரபை ஒட்டி இருப்பவையும், எனவே இவ் வாராச்சியில் எடுத்துக் கொள்ளப்படுபவையும், பின்வருவன ஆம்: நடைமுறையிலும், பெயரளவிலும் ஒரு பிரதிநிதித்துவ சட்டமன்றமாக 1885ஆம் ஆண்டில் வந்த சட்டமன்றத்தினுடைய தலைமையான இயல்பு (supremacy), நாட்டின் படைகளைப் பாராளுமன்றம் தனது கட்டுப்பாட்டில் வைத்திருத்தல், ஆட்சித்துறை அலுவலர்களுடைய வரம்பு கடந்த செயல்களுக்கெதிராகச் சுதந்திரமான நீதிமன்றத் துறையின்மூலம் பாதுகாப்பு அளித்தல், சுதந்திரமாக கலந்து ஆராய்தல், சுதந்திரமாகக் கூடுதல் முதலிய அரசியற் கோட்பாடுகளைப் பாதுகாக்கின்ற வழிகளே, சட்டத்துக்கு மாருன செயல்களுக்கு எதிராகப் பொதுச் சட்டத்தால் அளிக்கப்படும் பாதுகாப்புக்களாக இருத்தல் முதலியனவாம்.

உயர்தர நீதிமன்றங்களின் நீதிபதிகளால் சுதந்திரம் அடையப்பட்ட நிலைமையே, சட்டத்தின் ஆட்சி என்ற டைசியின் கருத்தை வலியுறுத்திற்று. மேலும், இத்தகைய சுதந்திர நிலையே குற்றம் செய்த தனிப்பட்டவர்களைத் தண்டிப்பதற்கு நீதிமன்றங்களுக்கு உள்ள அதிகாரத்தின்மீது சார்ந்திருக்கிறது. நீதிமன்றத்தின் சுதந்திரம் என்பதற்கு இரு பகுதிகள் இருக்கின்றன—அது ஆட்சித் துறையினுல் (administration) ஆணையிடப்படுதலினின்றும் சுதந்திரமாக இருத்தல் என்பது ஒன்று; பாராளுமன்றத்தினுல் கட்டுப்படுத்தப்படுவதினின்றும் சுதந்திரமாக இருத்தல் என்பது மற்ருென்று. அரசருடைய அமைச்சர்கள் நீதி வழங்கப்படும் அலுவலில் தலையிட்டு அதனை அழிப்பதில்லை என்பது இப்போது யாவராலும் ஒப்புக்கொள்ளப்பட்ட அரசியலமைப்புக் கோட்பாடாக இருக்கிறது. ஆனுல் தற்காலச்

[1] The Law and the Constitution, பக்கங்கள் 299-300, 4ஆம் பதிப்பு,

சட்டமுறைக்கு உள்ள இயல்பின் மூலமாக நீதிமன்றத்தின் சுதந்திரத்துக்கு இருக்கும் செல்வாக்கின் எல்லையைப் பாராளுமன்றம் மறைமுகமாகக் குறைத்துள்ளது. தனியார் உரிமை (laissez faire) என்ற கொள்கையானது கைவிடப்பட்ட காரணத்தால், நமது சட்டத்தின் தன்மை பெரும்பாலும் மாறுதலுக்கு உள்ளாகி இருக்கிறது. பொதுச் சட்டத்தைப் போலவே, தனி மனிதர்களுடைய உரிமைகளின் பாதுகாப்பு என்ற அடிப்படையில் அமைந்திருக்கும் ஒரு சட்டமுறையானது, பொது மக்களுடைய நலனை, அல்லது அவர்களுள் பெரும்பாலோர் அடங்கிய பகுதி முழுவதினுடைய நலனைத் தனது குறிக்கோளாகக் கொண்டுள்ள ஒரு சட்டத்தோடு ஒத்துப்பார்க்க முடியாதபடி இருக்கிறது. பொதுச் சட்டம் என்பது (common law) சமுதாயத்தைத் தனி மனிதருடைய மனப்பான்மையோடு காணும் கருத்தின் அடிப்படையில் அமைந்தது. மேலும், பொது வாழ்வு பற்றிய உரிமைகளை (public rights) நடைமுறையில் நிறைவேற்றுவதற்குரிய வழிகளையும் அதனுல் கூறமுடியாது. மக்களுடைய செயலையெல்லாம் பொதுவுடமையாக்குதல் என்ற செயலானது, அரசாங்க உறுப்புகளின்மீது, புது வகையான அதிகாரங்களை வழங்கி, அவற்றின் மூலமாகத் தனியார் உரிமைகளைக் கட்டுப்படுத்துதல் என்ற விளைவை உண்டாக்கி யுள்ளது. ஆனுல், இந்த அதிகாரங்கள் எந்த அதிகாரியினுல் கையாளப்படுகின்றனவோ, அந்த அதிகாரியும், நீதிமன்றங்கள் தங்களுடைய சொந்த அதிகார எல்லைக்குள் கட்டுப்பாட்டை விதிப்பதற்குப் பயன்படுத்தும் அதிகாரியைப் போலச் சட்டபூர்வமான இயல்பை உடையவர் என்பதில் ஐயமில்லை. சமுதாயப் பணிகளை அரசாங்கமே அளித்தல் என்பதும், பொருளாதார நிலைமைகளைக் கட்டுப்படுத்தி ஒழுங்கு செய்தல் என்பதும், அரசாங்கத்தால் ஒப்புக்கொள்ளப்பட்ட கோட்பாட்டுக் கருத்துகளாக ஆகிவிட்டபடியால், சட்டத்தின் ஆட்சி என்பதும் பாராளுமன்றத்தின் தலைமை என்பதன்மீது அமைந்திருக்கிறது. அரசியலமைப்புச் சட்டம் சம்பந்தப்பட்ட வகையிலே, அதாவது ஆள் சுதந்திரம், பேச்சு சுதந்திரம் முதலியவை பாதுகாக்கப்படுகின்ற அளவில் சிறியதான, ஆனுல் முக்கியமான துறையைப் பொறுத்தமட்டில்தான், சட்டத்தின் ஆட்சி என்பது பொதுச் சட்டத்தின் ஆட்சி என்ற கருத்தைக் குறிக்கும். எவ்வாறெனில் இத் துறையில் மட்டுமே, பாராளுமன்றமானது சட்டத்தை வெகுவாக மாற்ருமல் விட்டுவிடுதல் சரி என்று கருதியுள்ளது. மேலும் அது, தனி மனிதர்களின் சுதந்திரத்தைப் பாதுகாத்தலைப் பொதுச் சட்டம் செயல்படுதல் என்ற நிலைக்கு விட்டுவிட்டது. இத்தகைய நிலையிலும்

தனி மனிதர் சுதந்திரம், சட்டங்கள் மூலமாகக் கட்டுப்படுத்தப் படுதற்கு எடுத்துக்காட்டுகள் பல இன்று இருக்கின்றன. 1948ஆம் ஆண்டின் தேசீயப் பணிச் சட்டம் (The National Service Act, 1948), 1911, 1920ஆம் ஆண்டுகளின் அலுவல் துறை இரகசியச் சட்டங்கள் (Official Secrets Acts, 1911, 1920) முதலியவை இதற்குச் சிறந்த எடுத்துக்காட்டுகளாகும்.

பாராளுமன்றத்தின் தலைமை என்பதற்கு, சட்ட அளவிலே ஆட்சித்துறை நிறுவனங்களின் அதிகாரமானது மேலும் விரிவாக்கப்படலாமென்பதே பொருளாகும். ஆயினும், நீதித் துறை நிறுவனங்களுக்கும், ஆட்சித்துறை நிறுவனங்களுக்கும் இடையே உள்ள வேறுபாடு அடிப்படையான ஒன்று அன்று. இரண்டுமே சட்டத்தைத் தனிப்பட்ட நிலைகளுக்கு அல்லது வழக்குகளுக்குக் கையாளுகின்றன. எதேச்சாதிகார அமைப்பை உடைய நாட்டிலே, ஆட்சித் துறையினரால் செய்யப்படும் ஆட்சியானது (சட்டத்துக்குக் கட்டுப்படாமல்) தன் விருப்பத்திலமைந்திருக்குமென்பதை வரலாறு காட்டியுள்ளது. ஆயினும், நீதித்துறையின் அலுவல் செய்யப்படுவதைக் காப்பதற்காக உள்ள பாதுகாப்புகள், ஆட்சித்துறைக் குழுக்களுக்கும் அல்லது நிறுவனங்களுக்கும் கொடுக்கப்படுமாயின், மேலே குறிப்பிட்ட விளைவு தோன்றுது.[1] 'நாட்டில் சட்டத்துக்கு ஒத்து இருக்கும் (lawful) எல்லா அதிகாரியும் சட்டபூர்வமான அதிகாரியே(legal)' என்பதை டைசி ஒப்புக் கொள்ளத் தவறிவிட்டார் என்பதில்லை; ஆட்சித் துறையினருடைய சட்டத்துக்குப் புறம்பான வரம்பற்ற செயல்களைத் தடுப்பதற்கு, அவர் 'நீதிமன்றங்கள் என்ற ஒரு உறுப்பைச் சுட்டிக்காட்டினுர்' என்பதும், 'ஆட்சித்துறையினருடைய சட்டத்துக்கு ஒத்த அதிகாரங்களின் முழு அளவையும் அவர் ஆராயவில்லை' என்பதுமே (நாம் இங்கு குறிப்பிட வேண்டிய) நிலை ஆகும். ஆட்சித்துறையைப்பற்றிய இத்தகைய சுருங்கிய அளவிலுள்ள கருத்தின் அடிப்படையிலேயே, சட்டத்தின் ஆட்சியைப் பற்றிய அவருடைய விளக்கம் அமைந்திருக்கிறது. ஆனுல், அரசாங்க அலுவல்களைப்பற்றி வலியுறுத்திக் கூறுவதில் ஏற்பட்டுள்ள இந்த மாறுதல், ஆள் சுதந்திரம் (personal liberty) என்ற கருத்தைப்பற்றி டைசியால் விளக்கப்பட்டதும், சட்டத்தின் ஆட்சியினுல் பாதுகாக்கப்பட்டதுமான பழைய கொள்கைகளை அழித்துவிடவில்லை.

[1] Lauterpacht, Function of Law in the International Community (1933), இயல் 19, பிரிவு 2.

எவ்வாறெனில் மிக விரிவாக அமைக்கப்பட்ட அரசாங்கத் துறைக்குப் பின்னனியாகக் குடியாட்சி அரசாங்க வகையிலே மக்களிடம் ஒரு அடிப்படையான நம்பிக்கையை உண்டாக்கும் எண்ணம் அமைந்திருக்கிறது. சுதந்திரமான தேர்தல்கள் நடைபெறுவதை உறுதிப்படுத்துவதற்கு ஏற்ற பேச்சு சுதந்திரம், அரசியல் கூட்டம் கூடும் உரிமை முதலியவற்றில் அரசாங்கங்கள், பாராராளுமன்றங்கள் முதலியவற்றின் தலையீடு இருத்தல் கூடாது என்ற ஒரு நம்பிக்கையை, உணர்வை, கொள்கையை, அல்லது விருப்பத்தை (இதனை யாவரும் தாம் விரும்பியவாறு அழைக்கலாம்) மேற்படி எண்ணம் தோற்றுவித் துள்ளது; இவ் வெண்ணம் பொதுமக்கள் கருத்திலே வலுவாக வேரூன்றி இருக்கிறது. காரணத்தை அறியும் இயல்பானது சட்டத்தினால் கட்டுப்படுத்தப்பட இயலாத தாகும்; எவ்வாறெனில் அவ் வியல்பே குடியாட்சி அரசாங்க வகைக்கு அடித்தளமாக இருக்கிறது. ஓரஞ்சாராத நீதிபதிகள் மூலமாகப் பொதுச் சட்டத்துக்கு எதிரான குற்றங்கள் ஆய்வு செய்யப்படக் கூடிய அளவுக்கு, ஆள் சுதந்திரம், பேச்சு சுதந்திரம் முதலியவற்றின் மீதுள்ள கட்டுப்பாடுகளைத் தளர்த்தியும், அலுவலர்கள் சட்டத்துக்குப் புறம்பாகச் செய்யும் செயல்களுக்கு அவர்களை நேராகப் பொறுப்பு ஆக்கியும் (personal liability), டைசி இன்று குடியாட்சியின் கொள்கையாகக் கருதப்படும் ஒரு கருத்துக்குச் சட்டத் துறையின் சொற்களை வைத்து ஒரு விளக்கம் கொடுத்தார். இவ் விளக்கத்துக்கு உள்ள மதிப்பானது அவ் வாசிரியருடைய வாழ்நாளி லிருந்ததைவிட 1958ஆம் ஆண்டில் மிகவும் தெளிவாக இருக்கிறது.

ஆட்சித்துறை நீதிமன்றங்களையும், ஆய்வு முறைகளையும் பற்றிய குழுவானது (Committee on Administrative Tribunals and Inquiries, 1957) 'யாவருக்கும் தெரிந்த கொள்கைகளை அல்லது சட்டங்களைக் கையாளுவதன் மூலமாகத் தீர்ப்புகள் செய்யப்படுதல் வேண்டும் என்ற கருத்தையே சட்டத்தின் ஆட்சி என்பது காட்டுகிறது' என்று கூறிற்று. பொதுவாக அத்தகைய தீர்ப்புகள் அளிக்கப்படு முன்னரே, அவற்றை எதிர்பார்க்கக் கூடியனவாக (predictable) அவை இருக்கும். இதனால் ஒவ்வொரு குடியாளும் தன்னைப் பொறுத்தவரையில் நிலை என்ன என்பதைத் தெரிந்துகொள்ளுவார். ஒரு தீர்ப்பானது கொள்கையின்மீது அமையாமல் இருக்கலாம்; விதிகள் எதன்மீதும் அமையாமலும் இருக்கலாம். ஆகையால் அத்தகைய தீர்ப்பு முன்னரே அறியக்கூடாததாக இருக்கிறது.

மேலும் அது சட்டத்தின் ஆட்சியை ஒட்டி அளிக்கப்படும் ஒரு தீர்ப்புக்கு முரணானதாகவும் இருக்கிறது. நீதிமன்றத்தின் இயல்பை உடையதற்கும், ஆட்சித்துறையின் இயல்பை உடையதற்கும் இடையே தோன்றும் முரண்பாட்டைப் போலவே, மேற்கூறிய முரண்பாடு (antithesis) இருப்பதனால், சில தீர்ப்புகளை வழங்கக்கூடிய கடமை ஒரு நீதிமன்றத்துக்குக் கொடுக்கப்படுதல் வேண்டுமா, அல்லது ஒரு அமைச்சருக்குக் கொடுக்கப்படுதல் வேண்டுமா என்று தீர்மானிப்பதற்கு உரியதும், செல்லுபடியாகக் கூடியதுமான கொள்கை எதுவும் வகுக்க முடியாமலிருக்கிறது என்று மேற்படிக் குழு கூறிற்று. இத்தகைய கொள்கையைப் புறக்கணிக்காமல், குழுவினர் செயலுக்குகந்த ஒரு நோக்கைக் (empirical approach)கையாளுகின்றனர். நீதிமன்றமோ, அல்லது ஒரு அரசாங்க விசாரணைக் குழுவோ (public enquiry), அல்லது எப்போதாவது விதி விலக்காக நீதிபதியாக அலுவல் செய்யும் அமைச்சரோ, எல்லா வகையான நிறுவனங்களையும், ஒவ்வொன்ருகப் பல எடுத்துக்காட்டுகளின் மூலமாக ஆராயும்படி குழு கேட்டுக் கொள்ளப்பட்டபடியால், அவர்கள் முதலில் செய்த விரிவான சொற்பொழிவுகள், சட்டத்தின் ஆட்சி என்பதன் உண்மைத் தன்மையை, அதாவது செல்லுபடியாகும் தன்மையை நிலைநிறுத்துவதைப் பொறுத்தவரையில் போற்றத்தக்க புதிய கருத்துகள் எதனையும் அளிக்கவில்லை. ஆயினும், குழுவின் கருத்தின்படிச் சரியான நீதிமன்றத் தீர்ப்பு முறை என்பது, வெளிப்படையான தன்மை, நேர்மை, ஓரஞ்சாராமை முதலிய இயல்புகளை உடையதாக இருக்கவேண்டும். உயர்தர நீதிமன்றங்களின் நீதிபதிகள் தங்களுடைய சுதந்திரமான நிலையைப் பாதுகாத்துக் கொள்ளுவதற்கு ஏற்ற பண்புகள் இந்த இயல்புகளேஆம். இத்தகைய நீதிபதிகள் சுதந்திரத்தை அடைந்தனர் என்ற உண்மைதான், 'குற்றம் செய்பவர்கள் ஆட்சி அலுவலர் என்ற நிலையைப் பெற்றிருந்தாலும், அவர்களைத் தண்டிப்பதற்கு நீதிமன்றங்களுக்குத் தகுதி அல்லது அதிகாரம் உண்டு' என்ற பொருளில் சட்டத்தின் ஆட்சி என்பதற்கு டைசி கூறும் கருத்தை வலியுறுத்துவதாக இருக்கிறது. இந்தக் குழுவின் அறிக்கையானது, இவ் வகையில் கடந்த பதினன்கு ஆண்டுகளாகக் காணப்பட்டுவரும் சட்டத்தின் ஆட்சி என்ற கருத்தை நிலைநிறுத்துவதற்கு வெகுவாக உதவுகிறது என்று கருதலாம்.

சர்வதேச விஷயங்கள் என்ற துறையை நாம் காணும்போதுதான் (சட்டத்தின் ஆட்சி என்ற) இந்த

விஷயமானது, போலந்து போன்ற சிறு பொதுவுடமை நாடுகள் உட்பட உலகமெங்கிலும் அண்மையில் தோற்று வித்துள்ள ஒரு பெரும் ஈடுபாட்டிற்கு மிகத் தெளிவான ஒரு சான்று சர்வதேசத்துறையில் காணப்படுகிறது. இத்தகைய ஈடுபாட்டிலிருந்து தோன்றக் கூடிய செயல்களையெல்லாம் முழுவதும் விரித்துரைக்காமல், சர்வதேசச்சட்ட வல்லுநர்கள் அடங்கிய குழுவும் (International Commission of Jurists), ஒப்பியல் சட்டத்தை ஆராயும் மற்றக் கழகங்களும் (other organisations of comparative law), சட்டத்தின் ஆட்சி என்ற கருத்தை ஆராய்வதில் கவனம் செலுத்தியுள்ளன. இத்தகைய சட்டத்தின் ஆட்சியினுடைய அடிப்படையான கூறுபாடுகளை (elements) வகுத்து உரைப்பதற்கு மேற்படிக் குழு முயன்றுள்ளது. எழுபத்தைந்து ஆண்டுகட்கு முன்னர் டைசி மிகத் தெளிவாகக் கண்டுகொண்ட கருத்துகளையெல்லாம் இப்பொழுது சரியென்று ஒப்புக்கொள்ளுவதில் சிரமம் இருப்பதாக உணருபவர்களுக்கு, 'சட்டத்தின் ஆட்சி என்பது ஒரு எளிதான கருத்து அன்று, அது ஒரு சிக்கலான கருத்து ஆகையால் அதனை யாவரும் ஒப்புக்கொள்ளக் கூடிய ஒரு வாய்பாட்டின் (formula) வடிவத்தில் எடுத்து வெளியிடுதல் இயலாது,' என மேற்படி குழு அல்லது கழகம் கூறியிருப்பது உற்சாக மூட்டக்கூடியதாக இருக்கும். இந்தக் கருத்து (சட்டத்தின் ஆட்சி என்ற கருத்து) உலகத்திலுள்ள சட்ட அமைப்புக்களிலே, நடைமுறையில் விளைவை ஏற்படுத்த வேண்டுமானால், அது டைசியினால் மட்டுமே கருதப்பட்ட பொதுச்சட்டத்தீர்ப்பு அதிகாரத்துக்குப் (comman law jurisdictions) பொருந்துமாறு, அதனைச் சுருக்கமுடியாது; இது இந் நிலையில் இவ்வாறு இருப்பது இயல்பேயாகும். சட்டத்தின் ஆட்சி என்பதன் அடிப்படைக் கூறுகளை வகுப்பதற்காகக் கையாளப்படும் போக்கு, இங்கிலாந்தின் பொதுச் சட்டத்துக்கும் மற்ற ஐரோப்பிய நாடுகளின் குறிப்பாகப் பிரான்சின் நீதிமன்ற முறைக்குமிடையே டைசி ஏற்படுத்த முயன்ற பொருத்தமில்லாத ஒப்புமையை மறுத்து விடுகிறது.

பல்வேறு சட்ட அமைப்புகளிலுள்ள சட்ட அறிஞர்களை யெல்லாம் ஒன்றாக இணைக்கும் அடிப்படைக் கருத்து, சட்டத்தின் ஆட்சி என்ற கருத்தாக இருக்கிறது என்று சர்வதேசச் சட்ட வல்லுநர்களின் குழு கருதுகிறது. இக் கருத்து பின்வருமாறு வெளியிடப்படுகிறது:

'பல்வேறு வகைப்பட்ட அரசியலமைப்புகளையும் பொருளாதாரச் சூழ்நிலைகளையுமுடைய நாடுகளின் செயலறிவும், மரபும், அவற்றினுடைய மிக நெருங்கிய ஒற்றுமையில்லாத, ஆனால் பெரும்பாலும் ஒத்திருக்கின்ற நிறுவனங்களும், செயல்விதிகளும், எதேச்சாதிகார அரசாங்கத்தினின்றும் தனிப்பட்ட மனிதரைக் காப்பதற்கும், மனிதன் என்ற மதிப்பை அவர் அனுபவிக்குமாறு செய்வதற்கும், மிக இன்றியமையாமலிருக்கின்றன என்று காட்டியுள்ளன'.

இந்தக் கருத்தை மனத்திற் கொண்டு, மேற்படி குழுவானது ஒரு கேள்வித் தொகுதியை (questionnaire) எழுதியுள்ளது; இத் தொகுதியிலுள்ள கேள்விகள், சட்ட திட்டங்களின் மூலம் நன்கு உருவாக்கப்பட்டுள்ள ஒரு சமுதாயத்திலே தனி மனிதரின் பாதுகாப்புக்கு இன்றியமையாதனவாகக் கருதப் படுகின்ற சில சட்டமுறைகள், நிறுவனங்கள் ஆகியவற்றின் இயல்பையும், அவை செயல்படும் வகையையும் பற்றிய கேள்விகளாக இருந்தன. இந்தக் கேள்விக்குக் கொடுக்கப் பட்ட விடைகளில் காணப்பட்ட செய்தியை ஆதாரமாகக் கொண்டு எழுதப்பட்ட பொது அறிக்கையானது, இந்த நூல் எழுதப்படும் காலத்தில் கிடைக்கவில்லை. இத்தகைய ஒரு திட்டம், குறைந்த அளவு இருபத்தாறு நாடுகளிலாவது மேற்கொள்ளப்பட்டது என்ற உண்மையே, சட்டத்தின் ஆட்சி என்பது தற்காலத்தில் நடைமுறையில் உள்ள ஒரு உண்மையான கருந்தாக இருக்கிறது என்பதற்குப் போதிய சான்றுக இருக்கிறது.

1957 ஆம் ஆண்டில் சிகாகோ பல்கலைக் கழகத்தில், ஒரு மாநாடு கூட்டப்பட்டது; அது தான் கூடிய ஐந்து நாட்களையும், 'மேற்கத்திய நாடுகளில் புரிந்து கொள்ளப்படும் கருத்தாகிய சட்டத்தின் ஆட்சி' (The Rule of Law as understood in the West) என்பதைப்பற்றி உரையாடுவதற்காகச் செலவிட்டது. இந்த மாநாட்டில், ஐக்கிய அமெரிக்க நாட்டிலிருந்து ஐந்து சட்டக் கல்லூரிகளின் தலைவர்கள் (Deans) உட்பட, முப்பத்து நான்கு பேர் கலந்து கொண்டனர். இதில் கலந்து கொண்ட மற்ற இருபத்துநான்கு பேர்களும், யுனைட்டெட் கிங்டம், மேற்கு ஜெர்மனி, இத்தாலி, கனடா, ஸ்வீடன், துருக்கி, பிரேசில், மெக்சிகோ, இஸ்ரேல் முதலிய நாடுகளின் பிரதிநிதிகளாகவும், யு. எஸ். எஸ். ஆர், போலந்து ஆகிய இரு நாடுகளுக்கு ஒரு பிரதிநிதியும் இருந்தனர். இந்தக் கூட்டம் ஐக்கிய நாடுகள் சபையினுடைய கல்வி,

விஞ்ஞான, கலாச்சாரக் கழகத்தின் பொதுவான வேலைத் திட்டத்தினுள் அடங்கியதாக இருக்கும்படிச் செய்யப்பட்டது. இதைப் போன்ற வேறொரு உரையாடல் கூட்டம் (colloquium) 1958ஆம் ஆண்டு செப்டம்பரில் கிழக்கு ஐரோப்பாவில் வார்சா நகரத்தில் கூடுவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டது. மேற்கத்திய நாடுகளில் காணப்படுகின்ற சட்டத்தின் ஆட்சி என்ற முறையானது ஒரு உயர்தரமான சாதனை என்றும், அது பொதுச் சட்டத்தை ஆதாரமாகக் கொண்ட சட்ட அமைப்புகளை உடைய நாடுகளுக்கு மட்டுமே உரியது அன்று எனவும், எந்த மனிதரும் தனது திறமைகளை முழுவதும் வளர்த்துத் தனது நோக்கங்களை நிறைவேற்றிக் கொள்ளக்கூடிய ஒரு சமுதாயத்தைத் தோற்றுவிக்கும் நோக்கத்தை உடைய நாட்டிற்கு மேற்படிச் சட்டத்தின் ஆட்சி என்பது ஒரு தக்க கருவி எனவும், சிகாகோ மாநாடு முடிவு கூறிற்று. சுருங்கக்கூறின் சட்டத்தின் ஆட்சி என்பது, ஒரு சுதந்திரமான சமுதாயத்தின் குறிப்பிடத்தக்க நிகழ்ச்சியாகவும், அதனுடைய அறிகுறியாகவும் இருக்கிறது என்பதே முடிவு ஆகும்.

இதனைப்பற்றிய ஆராய்வை இரண்டு பெரும் தலைப்புகளின் கீழ் சுருக்கிக் கூறலாம்: (1) குறிப்பிட்ட தேசிய சம்பந்தமான கருத்துகளை அளித்தல். எடுத்துக்காட்டாக, யுனைட்டெட் கிங்டத்திலும், பிரான்சிலும் நிர்வாக அதிகாரத்தைக் கட்டுப்படுத்துவதற்கான வழிகள்; அல்லது யுனைட்டெட் ஸ்டேட்ஸ், மேற்கு ஜெர்மனி ஆகியவை போன்ற கூட்டரசுச் சமுதாயங்களில் இருப்பது போன்று, சட்டமன்றங்களின்மீது நீதிமன்றங்களினால் கையாளப்படும் கட்டுப்பாட்டு அதிகாரம். (2) சமுதாய நல அரசு (Welfare State) என்ற நிலையினால் சட்டத்தின் ஆட்சியின் மீதும், ஆட்சித்துறைச் சட்டத்திலுள்ள சமயோசித அதிகாரங்களுக்குச் சட்டத்தின் ஆட்சியோடு உள்ள தொடர்பின் மீதும் ஏற்பட்டுள்ள மாறுதல்.

இந்த ஆராய்ச்சி விரிவான வகையாக அமைந்தது. இதில் பொதுவான இயல்பாக வுள்ள அறிக்கைகளுள் முக்கியமானவை இவ்வுரையாடல் மாநாட்டின் செயலாளரால் பின்வருமாறு சுருக்கிக் கூறப்பட்டன.[1]

[1] J. A. Jolowicz, Fellow of Trinity College, Cambridge, செயலாளர் ஆவார். இந்த உரையாடல் மாநாட்டின் அறிக்கையும், அதன் ஆராய்ச்சியின் சுருக்கமும் இன்னும் வெளியிடப்படவில்லை: ஆயினும் இதனைக் குறிப்பிடும் சில பகுதிகளைப் பேராசிரியர் குட்ஹார்ட் (Professor Goodhart) எழுதிய The Rule of Law and Absolute Sovereignty (Pennsyl) vania Law Review, Vol. 106, Pages 943-963.) என்ற நூலில் காணலாம்.

(1) சட்டத்தின் ஆட்சி என்பது, மிக எளிதாக விளக்கப்பட முடியாத ஒன்றுக்கு உண்மையான வடிவம் கொடுப்பதற்காகச் செய்யும் முயற்சியைக் காட்டுகிற ஒரு சொற்றொடர் ஆகும். இத்தகைய இடர்ப்பாடு தோன்றுவதற்குக்காரணம் சட்டத்தின் ஆட்சி என்பதை மனிதனின் உரிமைகள் என்ற கருத்தோடு ஒன்ருக்குவதே ஆகும்.........சட்டத்தின் ஆட்சி என்பதில் தெளிவான சில கருத்துகள் அடங்கியிப்பதாக மேற்கத்திய நாடுகள் எல்லாம் ஒப்புக்கொள்கின்றன; ஆயினும் அவ்வாறு அதில் அடங்கியிருப்பது வெவ்வேறு நாடுகளில் வெவ்வேறு வகையாக இருக்கிறது. அந்தக் கருத்து நடைமுறையில் உள்ள உண்மையே ஆகும். அது சாதாரண நீதிமன்றங்களால் மட்டுமே காப்பாற்றப்படுவதாக இல்லாவிட்டாலும், முக்கியமாக அவற்ருல் காப்பாற்றப்பட வேண்டும்.

(2) சட்டத்தின் ஆட்சி என்பது தனிமனிதனின் சுதந்திரம் என்ற அடிப்படையில் அமைந்திருக்கிறது; தனி மனித சுதந்திரம், பொதுமக்கள் ஒழுங்கு (public order) என்ற ஒன்றுக்கொன்று முரணன கருத்துகளை இணைப்பது மேற்படிக் கருத்தின் நோக்கமாகும். நீதி என்ற கருத்தே, மேற்படி முரணன கருத்துக்களிடையே ஒரு சம நிலையைத் (a balance) தோற்றுவிக்கிறது. நீதி அல்லது நேர்மை என்பது (Justice) ஒரு மாறுபடக்கூடிய பொருளை உடையது. மேலும் திட்டவட்டமாக அதற்கு இலக்கணமோ வரையறையோ செய்ய முடியாது. ஆனால் ஒரு குறிப்பிட்ட காலத்திலும், இடத்திலும், தனியார் நலனுக்கும், பொது மக்கள் நலனுக்கும் இடையே ஒரு சமநிலையை (நேர்மையை நிறுவுவதற்கு ஏற்ற ஒரு தக்க உறைகல் (standard) இருக்கிறது.

(3) அரசாங்கத்தின் மீது சட்டத்திற்கு உள்ள தலைமையான நிலைமை (Supremacy of law over the government) என்ற பொருளில் வழங்கப்படும் சட்டத்தின் ஆட்சி என்ற கருத்துக்கும், பொதுவாக சமுதாயம் முழுவதிலும் சட்டத்துக்கு உள்ள தலைமையான நிலைமை என்ற பொருளில் (supremacy of law in society generally) வழங்கப்படும் சட்டத்தின் ஆட்சி என்ற கருத்துக்கும் ஒரு முக்கியமான வேறுபாடு உண்டு. இவற்றுள் முதலில்கூறப்பட்ட கருத்துதான் மேற்கத்திய நாடுகளிலெல்லாம் பொதுவாக இருக்கும் இயல்பு ஆகும்; அது சட்டத்தின் அடிப்படையிலல்லாத

எதேச்சாதிகாரமான அரசாங்கத்துக்கு எதிராகத் தனி மனிதருக்கு உள்ள பாதுகாப்பு என்ற பொருளைக் குறிக்கிறது.......... ஒரே வகையான குறிக்கோள்களை அடைவதற்குப் பலவகைப்பட்ட செய்முறைகள் (techniques) கையாளப்படுதல் கூடும். சட்டத்தின் ஆட்சி என்பது ஏதேனும் ஒரு குறிப்பிட்ட செய்முறையோடு இணைக்கப்பட்ட ஒன்று என்று நாம் எண்ணுதல் கூடாது. ஆயினும் அரசாங்கத்தைச் சட்டத்துக்குக் கீழ்ப்படிந்து இருக்குமாறு தூண்டுதற்கு ஏதாவதொரு செய்முறை இருத்தல் வேண்டுமென்பது அடிப்படையான உண்மையாகும்; இத்தகைய ஒரு செய்முறை இல்லையென்றால், சட்டத்தை அடைவதற்கு உரிய கருவியாக அரசாங்கமே அமைந்துவிடுகிறது. இவ்வாறு ஏற்படுதல் சட்டத்தின் ஆட்சி என்பதற்கு நேர்முரணான ஒன்று ஆகும்.

(4) மேற்கத்திய நாடுகள் சிலவற்றில் சட்டமன்றத்தின் தலைமை என்பது வலியுறுத்திச் சொல்லப்பட்டபோதிலும், சட்டத்தின் ஆட்சி என்பது இக் காலத்திய எளிய சட்டத்தை (positive law) சார்ந்து இருக்கவில்லை... அது எளிய சட்டத்தில் கூறப்பட்டிருக்கலாம். ஆனால் அதனுள் அடங்கியிருப்பவை சில மதிப்பீடுகளேயல்லாமல் (values), நிறுவனங்கள் (institutions) அல்ல; அது சட்டபூர்வமான ஆதாரம் என்ற ஒரு சூழ்நிலையைக் குறிப்பிடுகிறது. மேலும் அது, மேற்கத்திய நாடுகள் இப்பொழுது எந்தச் சட்ட ஒழுங்கில் வாழுகின்றனவோ. எந்தச் சட்ட ஒழுங்கில் தொடர்ந்து வாழ விரும்புகின்றனவோ அந்தச் சட்ட ஒழுங்கு அமைந்த சூழ்நிலையையும் குறிப்பிடுகிறது.

பத்தொன்பதாம் நூற்றாண்டின் கடைசியில் ஒரு குடியாட்சி அரசாங்க அமைப்பிலே தமது நம்பிக்கையை வைத்திருந்த நாடுகளிலே, சட்டத்தின் ஆதாரத்தில் அமைந்திராத அதிகாரத்துக்கு (arbitrary power) எதிராக ஏற்பட்ட எதிர்ப்பையும், அச்சத்தையும் விடக் கூடுதலாக அத்தகைய அதிகாரத்துக்கு எதிராக எதிர்ப்பும் அச்சமும் பெருமளவில் இன்று காணப்படுகின்றன. இதற்கு முக்கியமான காரணம், பொதுவுடைமை அல்லது கம்யூனிசத்தில் காணப்படுகிற பேரிடரே என்று வலியுறுத்திச் சொல்ல வேண்டியதில்லை. இவ்வாறு, கடந்த காலத்தில் ஆசிரியர் டைசியின் நூலிலுள்ள (சட்டத்தின் ஆட்சி என்ற) இந்தப் பகுதியைப்பற்றிச் சிறிது வலுவாகக் குறைபாடுகள் கூறப்பட்டன; எனினும் இப்பொழுது சோவியத் யூனியனிலும்,

அதனைச் சார்ந்துள்ள துணை நாடுகளிலும், ஆசியாவில் சீனாவிலும் மற்ற பகுதிகளிலும் தோன்றியுள்ள எதேச்சாதிகார அரசாங்க அமைப்புகள் அல்லது வடிவங்களுக்கு நேர்மாறான ஒரு கருத்து என்ற அளவில் சட்டத்தின் ஆட்சி என்ற கருத்தை அறிவதில் தோன்றியுள்ள ஈடுபாடு மேலே குறிப்பிட்டக் குறைபாடுகளை நீக்கிவிட்டது.

சட்டத்தின் ஆட்சி என்ற கருத்து, சட்டத்தி னடிப்படையில் அமையாத எதேச்சாதிகாரம் இல்லை என்ற அனுமானத்தில் அமைந்திருக்கிறது; எனவே அது, ஒரு தனி மனிதரின் தனி வாழ்வு பற்றிய உரிமைகளைப் (private rights) பாதிக்கக்கூடிய ஒரு முடிவு அல்லது தீர்மானம் இருக்கு மானால், அதற்கெதிராக, அரசாங்கத்துக்குச் சட்டபூர்வமான அதிகாரங்கள் என்ன இருக்கின்றன என்று காரணத்தோடு கூடிய உறுதிப்பாட்டைத் தனிமனிதர் அடையக் கூடும் என்று உறுதி கூறுகிறது. ஒரு வழக்கறிஞரைக் கலந்து ஆலோசிப்பதற்கு முயற்சி எடுக்கும் ஒருவர், தனது சொந்த செயல்களின் சட்டப்படியான விளைவுகள் என்ன என்று தெளிவுபடுத்திக் கொள்ளவும், அத்தகைய தனது செயல்களில் தலையிடுவதற்கு மற்றவர்களுக்கு இருக்கும் அதிகாரங்கள் என்ன என்று அறியவும் கூடும். பகிர்ந்தளிக்கப்பட்ட அல்லது ஒப்படைக்கப்பட்ட சட்டமியற்றும் அதிகாரங்களைப்பற்றியும் (delegated legislation), நீதிமன்றத் தீர்ப்புகளை வழங்கும் அதிகாரங்களை ஒழுங்கான நீதிமன்றங்களைத் தவிர வேறு நிறுவனங்கள் (bodies) கையாளுவதைப்பற்றியும் சட்ட அல்லது வழக்கறிஞர்கள் (lawyers) குறை அல்லது குற்றம் கண்டுபிடிக்கும் இயல்போடு இருப்பதற்குக் காரணம், இத் தகைய அதிகாரங்களால் தோன்றக்கூடிய நிச்சயமல்லாத, தெளிவில்லாத விளைவுகளேயாம். பல விஷயங்களைப் பொறுத்தவரையில், சாதாரண நீதிமன்றங்களிலே கையாளப்படும் சட்டமானது என்ன விளைவைத் தரும் என்று உறுதியாகச் சொல்ல முடியாதவாறு சிக்கலாக இருக்கிறது என்பது உண்மைதான். ஆனால் அரசாங்கத்தின் சட்டத்திலே (public law) இந்த உறுதியற்ற நிச்சயமில்லாத நிலைமை அல்லது விளைவு மேலும் கூடுதலாகத் தோன்றுகிறது; எவ்வா றெனில் ஆட்சித் துறையின் அமைச்சர்களால் செய்யப்படும் நிலவரச் சட்டம் என்ற கருவிகளில் நுட்பமான செய்திகள் நிறைய இருக்கின்றன. மேலும் ஒரு வழக்கிலே, அதைப்பற்றி முடிவான தீர்ப்பு அளிக்கக்கூடிய அதிகாரம் ஒரு நீதி மன்றத்தில் இருக்கிறதா, அல்லது ஒரு அமைச்சரிடத்தில்

இருக்கிறதா என்ற கேள்வியைப் பொறுத்தவரையில், சமயோசித அதிகாரம் (discretion) எவ்வாறு கையாளப் படுமென்பது முன்னதாகவே கூறப்பட முடியாதவாறு இருக்கிறது; இவ்வாறுன காரணங்களால் அரசாங்கச் சட்டத்திலும் உறுதி இல்லாத விளைவு (uncertainty) பெரும் அளவில் தோன்ற இடமிருக்கிறது.

அண்மையில் சில ஆண்டுகளாக, இத்தகைய நிலையற்ற விளைவு ஏற்படுவதைத் தடுக்கும் பொருட்டுப் பல முயற்சிகள் செய்யப்பட்டுள்ளன; அவற்றுள் குறிப்பிடத்தக்கவை, 1946ஆம் ஆண்டின் நிலவரச்சட்டக் கருவிகள் சட்டம் (Statutory Instruments Act, 1946) செய்யப்பட்டதும், ஆட்சித்துறை நீதி மன்றங்கள், வெளிப்படையான அரசாங்க விசாரணைகள் ஆகியவற்றின் செயல்விதிகளைப்பற்றி பிராங்க்ஸ் குழு (Franks Committee) ஆய்ந்து எழுதிய பரிந்துரைகளையெல்லாம் (recommendations) அரசாங்கம் ஏற்றுக்கொண்டதும் ஆம். ஆட்சித் துறைச் சட்டம் என்பது (Droit Administratif) பிரான்சின் சட்டத்தின் அளவைப் பெருக்கி யிருக்கிறது; ஏனெனில், அச் சட்டம் ஒரு நீதிமன்றக் குழுவின் இயல்புகளை யெல்லாம் உடைய ஒழுங்கான நீதிமன்றங்களினுல் (tribunals) அல்லது விசேட நீதிமன்றங்களினுல் கையாளப்படுகிறது. இந்த நாட்டிலே பாராளுமன்றத்தால் அவ்வப்போது சிறிது சிறிதாக ஏற்படுத்தப்பட்டுள்ள ஆட்சித்துறை நீதிமன்றங்களினுல் அளிக்கப்பட்டுள்ள சட்டக் கருத்துகளைச் சரியா என்று மதிப் பிட்டுக் கூறுவது மிகவும் கடினமான காரியம் ஆகும். அத் தகைய நீதி மன்றங்கள் பல வகைப்பட்டவை; அவற்றின் தீர்ப்புகளும் பல்வேறு வழிகளில் வெளியிடப்பட்டன; எனவே, அச் சட்டத்தினுடைய நிலைமையைப்பற்றித் தெளிவாக எதுவும் இது வரையில் கூறப்படவில்லை. முரண்பாடில்லாத வகையில் விளக்குவதற்குரிய செய்முறை இருந்தால்தான் (consistent technique of interpretation) ஆட்சித்துறை நீதிமன்றங்களின் தீர்ப்புகள் எத்தகையனவாக இருக்கும் என்று தக்க காரணங்களின் வாயிலாக முன்னதாகவே எதிர்பார்க்கக் கூடியனவாக இருக்கும். இவ்வாறு முரண்பாடில்லாமல் விளக்கக்கூடிய செய்முறை இத்தகைய சட்டத்தில் இருக்கு மென்று உறுதியாகக் கூறமுடியாம லிருப்பதே, இச் சட்டத்தி லுள்ள குறைபாடு ஆகும். ஆனுல் இப்பொழுது உயர்நீதி மன்றத்துக்கும், ஒரு உயர்தர ஆட்சித்துறை நீதிமன்றத்துக்கும் சட்டத்தின் செய்திகளைப்பற்றி மேல் முறையீடு செய்து கொள்ளுவதற்கு உறுதியாக வழி செய்யப்பட்டிருப்பதால்,

ஆட்சித்துறை நீதி அலுவலரின் சமயோசித அதிகாரத்துக்கு வரம்புகளை அமைப்பது முன்னைவிட இப்போது எளிதாக இருக்க வேண்டும்.[1] ஆட்சித்துறை நீதிமன்றங்கள், நேர்மையான தன்மை, ஒரஞ்சாராமை ஆகிய இயல்புகளை வெளிப்படுத்துகின்றன என்று குடிமக்களை நம்பச் செய்வதற்கு, வெகுவாக ஆராயப்பட்ட காரணங்களோடு பொருந்திய தீர்ப்புகளை அத்தகையை நீதிமன்றங்கள் வழங்குவதுதான் பெரிதும் துணை செய்யும்.

இருபத்தைந்து ஆண்டுகட்கு முன்பாக அமைச்சர்களைப் பற்றிய குழுவினுல் (Committee on Ministers' Powers) நன்கு ஆராயப்பட்ட விஷயம், பகிர்ந்தளிக்கப்பட்ட சட்டம் இயற்றும் அதிகாரம் (delegated legislation) என்பதாகும்; இது பிராங்ஸ் குழுவினுடைய ஆராய்ச்சிக்கு எடுத்துக் கொள்ளப் படவில்லை. இந்தக் குழு தனது அலுவல்களைச் செய்வதற்கு உதவும் முறையில் அதற்கு அளிக்கப்பட்ட மேற்கோள் குறிப்புகள் (terms of reference) சட்டத்தால் நிறுவப்பட்ட சாதாரண நீதிமன்றங்களல்லாத மற்ற நீதிமன்றங்களின் அமைப்பு, அவை வேலைசெய்யும் முறை, விசாரணை நடத்துதல் உட்படப் பல ஆட்சித்துறையின் செயல் விதிகள் கையாளப் படும் விதம் ஆகியவற்றைப்பற்றி மட்டுமே தெளிவாகக் கூறின. ஆட்சித்துறை நீதிமன்றத்தின் சட்டத்தினுடைய இந்தப் பகுதியைப்பற்றிக் கூறப்படும் குறையை விளக்கக்கூடிய ஒரு கூறுபாடு இந்த அமைப்பில் (அதாவது பகிர்ந்தளிக்கப்பட்ட சட்டம் இயற்றும் அதிகாரம் என்ற அமைப்பில்) இருக்கிறது. பகிர்ந்தளிக்கப்பட்ட சட்டம் இயற்றும் அதிகாரம் என்பது அதன் வடிவத்தைப் பொறுத்து அல்லாமல், வேறு வகையாக, ஒரு குடியாட்சி முறையில் தேர்ந்தெடுக்கப்பட்ட சட்டமன்றத் தால் ஆராயப்படுவதுமில்லை, கட்டுப்படுத்தப்படுவது மில்லை. ஒரு பாராளுமன்றச் சட்டத்துக்குக் கீழ்படிதல் என்பது, மிக எளிதில் கிடைத்து விடுகிறது; எவ்வாறெனில், சட்டமானது மக்களுடைய பொதுவான விருப்பத்தைக் காட்டுவதாகக் கருதப்படுகிறது. பாராளுமன்றத்தில் ஒரு மசோதா நிறை வேறுவதைச் செய்தித் தாள்களின் மூலமாக அறியலாம்; மக்கள் அதுபற்றிக் கூறக்கூடிய குறைகளை நீக்குவதற்காக, அந்த மசோதாவின் பிரிவுகள் பலதடவை மாற்றப்படுகின்றன. நிலவரச் சட்டத்தின் கருவிகள் சட்டத்தன்படி (Statutory Instruments Act) ஒரு சட்டத்தின் பிரிவுகளை நிறைவேற்று வதற்கு அதிகாரம் பெற்றுள்ள ஒரு அரசாங்கத்தின் துறை

[1] Tribunals and Inquiries Act, 1958.

யானது, அது வெளியிட உத்தேசித்திருக்கும் விதிகளினுல் பாதிக்கப்படக்கூடிய, நன்கு உருவாகியுள்ள தனியார் நலக் குழுக்களைக் (well-organized private interests) கலந்து ஆலோசிப்பதற்கு முயற்சி எடுத்துக்கொள்ளும். ஆனுல் நிலவரச் சட்டத்தின் கருவிகள் சாதாரணமாகப் பாராளு மன்றத்தின் ஒப்புதலைப் பெறுவதில்லை. மேலும் அவை செயல் படுவதற்கு முன்னர், அவை சட்டமன்றத்தின் எந்த மன்றத் தாலும் திருத்தப்பட முடியாதவையாக இருக்கின்றன. 1944ஆம் ஆண்டு முதல் அவை யெல்லாம் பொதுமக்கள் சபையினுடைய, சில காலத்துக்கு அமைக்கப்பட்ட தேர்வுக் குழுவின் (Sessional Select Committee) பரிசீலனைக்கு உட்பட்டு இருக்கின்றன. கொள்கை அளவிலே மேற்படிக் கருவி எதனையும் எந்தச் சட்ட மன்றமும் தள்ளி விடலாம்—செயல் முறையில் இது நடப்பதில்லை. இத்தகைய ஒரு சட்டத்துக்கு 1946ஆம் ஆண்டின் நிலவரச் சட்டங்களின் கருவிகள் சட்டத்தின்படி நிறைய விளம்பரம் கொடுக்கப்படுகிற போதிலும், அமைச்சர்களுடைய சட்டம் இயற்றும் அதிகாரம் கட்டுப்படுத்தப்படாமல் இருக்கிறது எனவும், எனவே அத்தகைய அதிகாரம் சமுதாயத்தின் பொதுவான விருப்பத்தை எடுத்துக் காட்டவில்லை எனவும், ஒரு உணர்வு இருந்து வருகிறது. இத்தகைய ஒரு எண்ணம் சட்டத்துக்கு அவமதிப்பைக் காட்டும் ஒரு இயல்பைத் தோற்றுவிக்கிறது. இந்த இயல்பும் கீழ்ப்படியாமை என்ற கடுமையான நிலைமை யாகச் சில சமயங்களில் மாறலாம். மோட்டார் வண்டிகளைச் செய்தல், பயன்படுத்துதல் ஆகியவைபற்றிச் செய்யப்பட்ட சட்டத்தின் விதிகளை மோட்டார் வண்டியைப் பயன்படுத்தும் பொதுமக்கள் புறக்கணித்தது, மேற்கூறிய நிலைமைக்கு எடுத்துக்காட்டாக இருக்கிறது. இவ்வாறு அவர்கள் இச் சட்டத்தைப் புறக்காணித்தாலும், இந்த சாலைப் போக்கு வரவுச் சட்டங்களில் (Road Traffic Acts) குறிப்பிடப்படும் முக்கியமான குற்றங்களெல்லாம் குறிப்பிடப்படுவதற்கு உரியவை அல்ல என்ருே, அல்லது அவை செய்யப்படக் கூடாதவை என்ருே ஒருவராலும் உறுயாகச் சொல்ல இயலாது.

சட்டத்தின் ஆட்சி என்பதனை இன்று கையாளுதல்: டைசி, சட்டத்தின் ஆட்சி செயல்பட்ட வகையை 1885ஆம் ஆண்டில் அவர் அறிந்த வகையிலாவது, அல்லது அது 1914ஆம் ஆண்டில் செயல்பட்ட வகையிலாவது, அதனை, அது இப்பொழுது செயல்படும் வகையோடு ஒப்பிட்டுக் கூறுதல்

கடினமானதாகும். இந்தச் சிக்கலானது, ஆசிரியர் டைசி இங்கிலாந்தில் ஆட்சித்துறைச் சட்டம் என்ற முறை இருப்பதை மறுப்பதனுல் தோன்றியதாகும். மேலும் அவர் பிரான்சிலுள்ள ஆட்சித்துறைச் சட்டத்தின் கொடுங்கோன்மை என்று (tyranny of administrative law) கருதி, அதனை வெறுத்தார். இவ்வாறு இருந்தும் பிற்காலத்தில் அவர் தனது கருத்துகளை மாற்றினுர்.[1] அவர் ஆட்சித்துறைபற்றிய சட்ட அமைப்பு முழுவதையும் பற்றிக் கவனம் செலுத்தவில்லை; அதில் பிரான்சில் ஆட்சித் துறையின் நீதி வழங்கும் அதிகாரம் என்பதைப்பற்றி மட்டுமே அவர் கவனம் செலுத்தினுர். அரசாங்கத்துக்கு எதிராக வழக்கில் ஈடுபட்டிருக்கும் ஒருஆங்கிலக் குடியாளுக்கு இருக்கும் சாதகமான நிலைமையை, அதே நிலையிலுள்ள ஒரு பிரஞ்சுக் குடியாளின் நிலைமையோடு ஒப்பிடுவதையே அவர் செய்தார். அரசாங்கத்தின் அதிகாரங்கள் சாதாரணப் பொதுச் சட்டத்தின் கொள்கைகளோடு இயைந்த வகையில் கையாளப்படுதல் வேண்டும் என்றும், இதற்கு மாருகப் பிரான்சில் ஆட்சித்துறைச் சட்டம் வேருெரு தனி வகையான அமைப்பில் காணப்படுகிறது எனவும் வலியுறுத்துவதற்கு அவர் மிகவும் முயற்சி எடுத்துக் கொண்டார். இதில் ஒரு குறிப்பிட்ட நிலை வரையிலும் டைசி, வரலாற்றின் அடிப்படையில் ஒரு சரியான கருத்தைக் கூறினுர்; ஆனுல் அவர் Conseil d' Etat அல்லது Council of State என்ற உயர்தர ஆட்சி நீதிமன்றத்தின் இயல்பு என்ன என்பதை முதலில் விளக்கத் தவறிவிட்டார். காலப்போக்கிலே, பிரெஞ்சு அமைப்பில் உள்ள நன்மையை (merit) வரவர முழுவதும் சரியாகப் புரிந்து கொள்ளுதல் கூடுமென்பது யாவருக்கும் தெரியலாயிற்று. ஆயினும், 1915ஆம் ஆண்டுவரை, டைசி ஆட்சித்துறைச் சட்டத்தை ஆங்கில அரசாங்கச் சட்டத்தின் (English public law) ஒரு கிளை என்று ஒப்புக்கொள்ளவில்லை. எனினும் இத்தகைய வரம்புகளெல்லாம் அவர், ஆள் சுதந்திர உரிமை (right to personal freedom), கலந்து பேசும் உரிமை (right to discussion), பொதுக் கூட்டமாகக் கூடும் உரிமை முதலியவற்றுக்கு அவர் அளித்த விளக்கத்தின் மதிப்பை எவ்வளவிலும் குறைக்கவில்லை. எவ்வாறெனில் இந்த விஷயங்களைப் பொறுத்தவரையில்தான், சிறைப்படுத்தப்படுதலோ, அல்லது வேறு வகையான அடக்குமுறைகளோ ஏற்படும் என்ற அச்சமில்லாமல், ஒரு தனி மனிதர் அரசாங்கத்தைக் குறைகூறுவதற்கு உள்ள

[1] இது பற்றிப் பேராசிரியர் எப். எச். லாசன் (Lawson), Political Studies (இது 1959ல் வெளியிடப்பட இருக்கிறது) என்பதில் எழுதிய, 'டைசியின் கருத்துப்பற்றிய மறுபரிசீலனை' (Dicey Revisited) என்ற கட்டுரையின் 7ஆம் இயலிலுள்ள செய்திகளைப் பார்க்கவும்).

சுதந்திரத்தைக் காப்பாற்றுவதில், முன்பிருந்ததுபோலவே இப்பொழுதும், பொதுச்சட்டமானது மிக முக்கியமான பணி செய்கிறது. நிலவரச் சட்டத்தின் பிரிவுகளின் மூலமாக மேற்படி விஷயங்களைப் பற்றியும், பொதுச் சட்டத்துக்குத் துணையாகச் சில விதிகளைச் செய்ய வேண்டிய கட்டாயம் அரசாங்கத்துக்கு ஏற்படலாம். ஆனால் சிறைபிடிக்கப்படுதல் பற்றிய (arrest) சட்டமும், அவதூறு சம்பந்தமான சட்டமும் பொதுச் சட்டத்தை (common law) ஆதாரமாகக் கொண்டு அமைந்திருக்கும் வரையிலே, 'எந்த மனிதரும் தனது உடல் சுதந்திரத்துக்குக் கட்டுப்பாடு ஏற்படுத்தப்பட்டுத் துன்பப்பட மாட்டார். எந்த மனிதரும் சட்டத்தினால் தடை செய்யப் படாத கருத்தை வெளியிடுவதற்காக மானநஷ்டத் தொகை அபராதத்தைச் (damages) செலுத்தும்படி துன்புறுத்தப் படமாட்டார்,' என்று டைசி உறுதியாகக் கூறியவை உண்மையாக நிலைத்திருக்கும். மேலும் மேற்கூறிய நிலை இருக்கும்வரை அவருடைய உரிமைகளும் கடமைகளும் சாதாரண நீதிமன்றங்களால் தீர்மானிக்கப்படும். மேற்கூறிய வரம்புகளை நாம் ஒப்புக்கொண்டால், டைசி உறுதியாகக் கூறியவாறு, ஒரு தனி மனிதரின் உரிமைகளெல்லாம், நமது அரசியலமைப்புச் சுதந்திரம் அல்லது அரசியலமைப்பு என்பதற்கு ஆதாரம் இல்லாததுபோல, நமது அரசியலமைப்பின் விளைவாக, அல்லது அதனின்றும் தோன்றியவை அல்ல.

ஆசிரியர் டைசியின் நூலிலுள்ள 'சட்டத்தின் ஆட்சி' என்ற இரண்டாம் பகுதியின் செய்திகளை அறிவது பயனுள்ளதாக இருக்கும். அந்த இயலின் தலைப்புகள், படை, வருமானம் ஆகிய நடு அரசாங்கத்தின் துறைகள் மட்டுமே ஆராய்வதற்கு எடுத்துக்கொள்ளப்பட்டிருக்கின்றன என்று காட்டுகின்றன. உள்ளூர் ஆட்சி முறையைப்பற்றி (local government) டைசி கருத்திற் கொள்ளவே இல்லை. மேற்படி இயல்களிலே (chapters) குடிமக்களின் உரிமைகளைப் பற்றிக் கவனிக்கிற காவல்படைகள் (police forces) முக்கியத்துவம் பெறுகின்றன. ஏனென்றால், அவர்களுடைய அதிகாரங்கள் பொதுச் சட்டத்தினால் (Common law) கட்டுப்படுத்தப்படுகின்றன. அதிகாரத்தைக் கையாளுதலின்மீது சட்டத்தினால் விதிக்கப்பட்டுள்ள வரம்புகளே வலியுறுத்தப்படுகின்றன. வரி முறையை நாட்டின் செல்வத்தைச் சம விகிதமாகப் பகிர்ந்து கொடுப்பதற்கோ அல்லது பொதுவான சமுதாயப் பணிகளை ஏற்படுத்துவதற்கோ ஏற்பட்ட ஒரு வழியாக, வரி

முறையைக் (taxation) கருதாமல், ஒழுங்கை நிலைநாட்டுவதற்குரிய அளவுக்கு அரசாங்கத்தின் அலுவல்களைச் சுருக்குவதற்கு விரும்புகிற சமுதாயத்திலே, படை, வருமானம் (Revenue), காவல்துறை (Police) முதலியவற்றுக்குத் தனிக் குடிஆளோடு உள்ள தொடர்புதான் ஆராய்வதற்குரிய மிக முக்கியமான செய்தியாகத் தெளிவாக இருக்கிறது. இது பொதுஆட்சித் துறையில் ஒரே ஒரு பாகமாகத்தான் இருப்பதை யாவரும் ஒப்புக்கொள்ளுவர். அரசாங்கங்களின் செயல்கள் சட்டத்தினுலும் பாராளுமன்றத்துக்கு அமைச்சர்களின் பொறுப்பு (Ministrial responsibility) என்ற ஒரு தன்மையினுலும், கட்டுப்படுத்தப்படுகின்றன. இதில் டைசி மிகவும் வற்புறுத்துவது சட்டத்தின் மூலமாகக் கட்டுப்படுத்துவது என்பதையே. அவருடைய நூலில் மூன்று பக்கங்களுக்கு மட்டுமே அமைச்சர்களின் பொறுப்பு என்ற 11ஆம் இயல் அமைந்திருக்கிறது. அது பாராளுமன்றத்துக்கு அமைச்சர்களின் பொறுப்பு என்பது (Responsibility of Ministers to Parliament) அரசியலமைப்பின் வழக்கங்களின்மீது சார்ந்திருப்பது எனவும், வழக்கங்கள் சட்டத்தோடு நேரான தொடர்புடையன அல்ல என்றும் கூறி, இந்த இயல் அதனேடு விட்டுவிடுகிறது. அந்த இயலின் எஞ்சிய பகுதியில் அவர் இறைமையதிகாரியின் விசேட அதிகாரங்களின் மூலமாகச் செய்யப்படும் செயல்களுக்கு அமைச்சர்களுக்கு உள்ள சட்டபூர்வமான பொறுப்பை மட்டும் ஆராய்கிருர். தனி மனிதருடைய செயலாற்றும் உரிமை என்ன என்பதும், அது எவ்வாறு நீதிமன்றங்களால் பாதுகாக்கப்படுகிறது என்பதுமே அவர் எடுத்துக்கொண்ட விஷயமாகும். சட்டத்துக்கு மாருன செயல்கள் எவரால் செய்யப்பட்டபோதிலும் அவற்றுக்கு நிவாரணங்களை (remedies) நீதிமன்றங்கள் அளிக்கின்றன என்பதும், இந்த நிவாரணங்கள் எல்லாம் ஒரு முறையான அரசியலமைப்பிலுள்ள உறுதிமொழிகளைப் (guarantees) போலவாயினும் பயனுடையனவாக இருக்கின்றன என்பதும் அவர் கூறும் விவாதமாகும்.

ஒரு வகையின் தனிமனிதர் சுதந்திரம் என்பதைப்பற்றி அவர் காலத்தில் நடைமுறையிலிருந்த சட்டம் கூறியதைவிட அதைப்பற்றி ஒரு சாதகமான கருத்தைக் கூறுகிருர்; எவ்வாறெனில், 1947ஆம் ஆண்டின் அரசர்மீது வழக்குத் தொடுப்பது பற்றிய சட்டம் (Crown Proceedings Act, 1947) செய்யப்படுவதற்கு முற்பட்ட காலத்தில் அரசர் அனுபவித்து வந்த சில விதிவிலக்குகளை (immunities) அவர் விவாதிக்க

வில்லை; மேற்படிச் சட்டமானது, அரசருடைய செயலாளரோ அல்லது வேலையாட்களோ செய்யும் செயல்களுக்கு அரசர் பொறுப்பேற்க வேண்டுமென்னும் பொருள்படும்படியாக, ஒருவருக்காக வேறொருவரைப் பொறுப்பாக்கும் சாதாரண விதிகளுக்கு (vicarious liability) அரசரை முதன் முதலாக உட்படுத்திற்று. ஆள் சுதந்திரத்திலோ சொத்துரிமையிலோ தகாத முறையில் தலையிடுவதைத்தான் அவர் மிகவும் ஈடுபாட்டோடு கவனித்தார். கவனமின்மையால் ஒரு சிறு இடரை அல்லது நஷ்டத்தை உண்டாக்குகிற, ஆனால் மற்றபடி சட்டபூர்வமாக உள்ள செயலைப்பற்றி டைசி அவ்வளவாகக் கவனம் செலுத்தவில்லை.[1] ஆட்சித்துறை சட்டத்தின் முழு அளவும், அரசாங்க அதிகாரிகளின் அதிகாரங்கள் அவர்களின் மீதுள்ள கட்டுப்பாடு (control), அவர்களின் அமைப்பு, வகை முதலிய எல்லாவற்றையும் உள்ளடக்கிய ஒன்றாக ஆட்சித் துறைச் சட்டத்தின் முழு அளவையும் டைசி ஆராய்ந்தறிந்திருப்பாரானால், நீதிமன்றங்களால் விசாரணைக் குட்படுத்தப் பட இயலாத சமயோசித அதிகாரங்களைக் கையாளுவதற்கு உடன்பாடு அளிக்கிற பல சட்டங்களின் (satutes) பட்டியல் ஒன்றை அவர் 1885ஆம் ஆண்டிலேயே எடுத்துக் கூறவேண்டிய கட்டாயம் தோன்றியிருக்கும். அதிகாரங்களைத் தகாத வகையில் கையாளுதல், மிகையாகக் கையாளுதல் போன்ற செயல்களெல்லாம், இப்பொழுது தடுக்கப் படுவது போலவே, அந்தக் காலத்திலும், certiorari என்ற வழக்கு பரிசீலனை முறையினாலும், prohibition என்ற தடையாணை முறையினாலும், ஓரளவு man damus என்ற நீதிமன்றத்தால் பொது அலுவலருக்கு விடுக்கப்படும் ஆணை முறையினாலும் தடுக்கப்பட முடியும். எடுத்துக்காட்டாக, 1875ஆம் ஆண்டின் பொதுச் சுகாதாரச் சட்டமானது, இத்தகைய அதிகாரங்களைப்பற்றிக் கூறிற்று. ஆட்சி என்பது சட்டத்துக்கு மாறாக அதிகாரத்தைக் கையாளுதல் என்பதின் மீது அமைந்தது அன்று. அதற்குமாறாக அது, ஆட்சியாளரால் சமயோசித அதிகாரம் கையாளப்படுதலின்மீது அமைந்

[1] பிரெஞ்சு அரசாங்க அலுவலர்களால் செய்யப்படும் தகாத செயல்களைப் பிரெஞ்சு அரசாங்கம் எவ்வாறு கையாளுகிறதென்பதை டைசி அறிந்து கொண்டுள்ள விதத்தைப்பற்றி பேராசிரியர் லாஸன் தனது 'டைசியின் கருத்துகளைப் பற்றிய மறுபரிசீலனை' என்ற நூலில் கூறும் பொழுது, இந்தக் கருத்தைக் கூறுகிறார். டைசி முதன் முதலில் எழுதிய போதும், 1908ஆம் ஆண்டிலும்கூட, அரசாங்க அலுவலரால் செய்யப்பட்ட தகாத செயல்கள், மேற்கூறப்பட்டவற்றுள் முந்திய வகையைச் சேர்ந்தனவாக இருந்தன. எனவேதான், ஒரு சாதாரண பிரெஞ்சு நீதிமன்றத்தில் ஒரு அரசாங்க அதிகாரிக்கு எதிராக ஒரு நடவடிக்கையும் கொண்டுவர முடியாது என்று டைசி வலியுறுத்திச் சொன்னார்.

திருக்கிறது. ஆனால், சமயோசித அதிகாரங்களைப் பொறுத்த அளவில் டைசிக்கு இருந்த ஈடுபாடு, அவை மறுபரிசீலனை மூலமாக எதிர்பார்க்கப்படுவதற்கு உரியன என்பதிலோ, அல்லது அவற்றை நீதிமன்றங்கள் கட்டுப்படுத்த இயலும் என்பதிலோஅல்ல. ஆனால் அவை (சமயோசித அதிகாரங்கள்) நடைமுறையில் இல்லை என்று மறுப்பதிலேயே அவர் ஈடுபாடு காட்டினார். எனினும், சமயோசித அதிகாரங்களே எல்லா விஷயங்களிலும் மிக முக்கியமானவையாக இக் கால அரசியலமைப்புச் சட்ட வழக்கறிஞருக்கு இருக்கின்றன.[1] எனவே, 'அதிகாரத்தில் (ஆட்சியில்) உள்ளவர்கள் பிறரை வற்புறுத்துதற்குரிய தன் விருப்பமான அல்லது சமயோசித அதிகாரங்கள் நிறையக் கையாளுதல்' ஒப்புக்கொள்ள மறுக்கின்ற வகையில் சட்டத்தின் ஆட்சி என்ற கருத்துக்குக் கூறப்படுகின்ற விரிவுரை அல்லது விளக்கமானது (exposition), தற்கால அரசாங்கம் செய்கின்ற கூட்டமான செயல்களை (collectivist activities) எதிர்க்கின்றவர்களுக்கு ஒரு நல்ல பாடப்புத்தகமாகப் பயன்படுவதில் வியப்பொன்றுமில்லை. இன்றைய நாளில் ஆட்சியாளர் நிலவரச் சட்டத்தின் மூலமாக அதிகாரங்களை முழுமையாகப் பெற்றிருக்கிறார். ஆகையால் பொதுமக்களின் நன்மையை உத்தேசித்து அவர் தனக்குரிய ஆட்சித் துறையின் அலுவலை நிறைவேற்றுவதற்கு வேண்டிய சமயோசித அதிகாரத்தைச் சட்டத்திலே பெற்றிருக்கிறார். ஆயினும், பொருளியல் துறையில் சுதந்திரம் என்பதைவிட, அரசியல் துறையிலே சுதந்திரம் என்ற கருத்தையும், பல்வேறு வடிவங்களில் வெளிப்படக்கூடிய ஆள் சுதந்திரம், கருத்துச் சுதந்திரம் முதலியவற்றையும் அறிவதில் அதிக நாட்டம் உடையவர்களாக வாசகர்கள் இருப்பாரேயானால், அவர்கள் சட்டத்தின் ஆட்சி என்பதைப்பற்றி டைசி எழுதியுள்ள இயல்களைப் புரட்டிப் பார்த்தால், பயன் அடைவார்கள். ஆகையால், மிகவும் சிக்கலான இக்காலத்திய ஆட்சி அமைப்பிற்குச் சட்டத்தின் ஆட்சி என்ற கருத்தைக் கையாள முயலுவதைவிட, டைசி அந்தக் கருத்தை அறிந்துகொண்ட வகையில் அதனைக் கையாளுதல் இயலுமா என்று ஆராய்வதே மிகவும் பயனுடையதாக இருக்கும். சிக்கலான இக் காலத்திய ஆட்சித்துறை அமைப்பானது, அவருடைய காலத்திலேயே சிறிது தொடங்கப் பெற்றிருந்தாலும்கூட, அதனைப்பற்றி அவர் செவ்வனே நன்றாக அறிந்திருத்தல் இயலாது.

[1] K. & L. 256-Cases in Constitutional Law by Sir David Keir and Professor F. H. Lawson, 4th Edition.

அவர் அக் கருத்துக்குக் கொடுத்த மூன்று பொருள்களைக் கீழ்வருமாறு விளக்கலாம்:

(i) நீதிமன்றங்கள் கையாளக்கூடிய ஒழுங்கான சட்டத்தின் விதிகளினுல், இங்கிலாந்தில் தனி ஆளின் செயல் சுதந்திரம் கட்டுப்படுத்தப்பட்டிருக்கிறது. அரசாங்கம் தன் விருப்பப்படி தலையிடுதலென்பது இதனுல் தவிர்க்கப்படுகிறது. அரசாங்க அதிகாரிகளல்லாத தனி மனிதர்களைப் போலவே அரசாங்க அலுவல்களிலுள்ள அதிகாரிகளும், பணியாட்களும் தாங்கள் செய்யும் குற்றச் செயல்களுக்காக (criminal acts)மட்டுமல்லாமல், தாங்கள் செய்யும் ஒப்பந்தத்தை மீறுதல், சட்டத்தை மீறுதல் (tort) ஆகிய செயல்களால் துன்புறுவோருக்குக் குடி உரிமைச் சார்பிலும் (civilly) பொறுப்புள்ளவர்களாக இருக்கின்றனர். அவர், ஆட்சியாளர்களால் சட்டத்தினடிப்படையில் அல்லாத அதிகாரம் கையாளப்படுதலை அடிப்படையாகக் கொண்ட அரசாங்க அமைப்புகளுக்குச் சட்டத்தின் ஆட்சி என்பது மாறுபட்டது என்று காட்டினர்.

(ii) எது சட்டத்தை மீறிய செயல் என்று தீர்மானிப்பதற்கு நீதிமன்றங்களால் மட்டுமே இயலும். அவை சட்டத்தை எல்லா மனிதர்களுக்கும் ஒத்த வகையாகக் (equally) கையாளுகின்றன. ஒரு குறிப்பிட்ட வழக்கில் பிரதிவாதியாக (defendent) இருப்பவருக்கு அரசாங்கத்தில் உள்ள அலுவல் நிலையானது, அவரைக் காக்க இயலாது. அவர் சிவில் நீதிமன்றங்களில் தான் ஒரு தனி மனிதரென்ற அளவில் விசாரித்துத் தீர்ப்புக்குள்ளாவாரே தவிர, ஒரு தனிப்பட்ட அல்லது விசேட நீதிமன்றத்தின் தீர்ப்புக்கு உள்ளாகமாட்டார்.

(iii) அயல்நாட்டு அரசியலமைப்புச் சட்டங்கள் உறுதி கூறப்பட்ட அல்லது உத்திரவாதமளிக்கப்பட்ட உரிமைகளைக் கூறும் சில பகுதிகளைப் பெற்றிருக்கின்றன. நமது நாட்டைப் பொறுத்தவரை அத்தகைய உரிமைகளெல்லாம் எல்லாச் சட்டத்துக்கும் மாறுன செயல்களையும் தண்டிப்பதற்கு ஆற்றலுடைய நீதிமன்றங்களின் தனிவாழ்வு உரிமைகளை நிறைவேற்றும் செயல்களினின்றே (enforcement) தோன்றியுள்ளன. ஆகையால், தனிவாழ்வு உரிமைகளுக்கு (private right) அரசியலமைப்புச் சட்டம் பாதுகாப்பளித்தல் என்பதைப் பொறுத்தவரையிலே, அரசியலமைப்புச் சட்டமானது பொதுச் சட்டம் என்பதிலிருந்தே (common law) தோன்றுகிறது. சிறைப்படுத்துதல், சிவில் அவதூறு, கிரிமினல் அவதூறு,

சட்டத்துக்கு மாருகக் கூட்டம் கூடுதல், இராணுவச் சட்டத்தை விதித்தலுக்குப் பொதுச்சட்டத்தின் மூலமாக உள்ள தடை, வரிமுறை (taxation), பொதுச் செலவு முறை (public expenditure) முதலியவற்றின் மீது பாராளுமன்றத்தால் ஏற்படுத்தப்பட்டுள்ள கட்டுப்பாடு ஆகிய இவைகளையெல்லாம் பற்றிக் கூறும் சட்டத்திஞலேயே மேற்கூறிய தனி வாழ்வு உரிமைகள் பாதுகாக்கப்படுகின்றன.

இன்றைய நாளில், தனி மனிதனின் செயலாற்றும் உரிமை, முக்கியமாக அவனுடைய சொத்துகளைப் பயன் படுத்தவும், மற்றவருக்கு விற்கவும் கூடிய உரிமை என்பதற்கு உள்ள பொருளைச் சுருக்கி அமைக்கும் இயல்பை உடையதாகச் சட்டம் இருக்கிறது. ஒரு குறிப்பிட்ட பொதுக் காரியத்துக்காகக் கட்டாயமான முறையில் நிலத்தை எடுத்துக் கொள்ளுதல் என்பது அண்மையில் நடைபெறுவதே இதற்கு ஒரு எடுத்துக்காட்டு ஆகும். நிலத்தின் உடைமையாளர் தனது சுதந்திரமான நியாய உணர்வுக்கு (free judgement) மாருகத் தனது நிலத்தை விற்கவேண்டி வருகிறது. தனக்கு அரசாங்கம் அளிக்கும்படியாகப் பாராளுமன்றத்தால் வழங்கப் படும் நஷ்ட ஈட்டுத் தொகையானது போதாது என அவர் கருதுகிருர். இதற்கு மாருக அவருடைய அயலவர் முதலில் கூறப்பட்டவருக் குள்ளதைப்போன்ற அளவுள்ள தனது நிலத்துக்குப் பொதுவாக வெளியில் உள்ள விலைமதிப்பைப் பெறக்கூடிய சுதந்திரத்தை உடையவராக இருக்கிருர். நிலத்தை விற்க மறுப்பவருக்கு நியாயம் கிடைக்கும்வரையில், கட்டாயமான முறையில் நிலத்தைப் பெறுவதற்கு வழி செய்கின்ற விதிகள் எவ்வளவுதான் கவனமாக மாற்றி அமைக்கப்படுவதாக இருந்தாலும், நிலத்தைப் பெறுவதா, அல்லது பெறவேண்டாமா என்று முடிவு செய்யக்கூடிய அதிகாரம் இறுதியாக நிர்வாகக் குழுவின் உறுப்பினரிடமே, சாதாரணமாக ஒரு அமைச்சரிடமே இருத்தல் வேண்டும். இதுவே பொதுச் சட்டத்திஞல் உறுதி செய்யப்படுவதும், நிலத்தை விருப்பம் போல் விற்பதற்கு உரிமை தருவதுமான சுதந்திரத்தை மறுப்பதாகும். மேலும், நிலச் சொந்தக்காரரின் மறுப்புகளை விசாரிக்கிற விசாரணைக்குழு (inquiry) ஒரு பாராளு மன்றச் சட்டத்தின் மூலம் நிறுவப்படுகிறது. இக் குழு, பொதுச் சட்டத்தைச் செயல்படுத்துவதற்காகப் பாராளுமன்றத்தால் நிறுவப்படவில்லை. அண்மைக்காலம் வரையிலும் ஒரு சட்ட நீதிமன்றத்தின் செயல்விதியைக் கையாளுவதற்காகவும் இதனைப் பாராளுமன்றம் நிறுவவில்லை. 'அதிகாரிகள் சட்டம்',

அதாவது 'ஆட்சித்துறைச் சட்டமானது,' 'ஆட்சித் துறை அனுபவத்தோடு, சட்ட அறிவும் பொருந்தியவர்களை உடைய ஒரு குழுவினுல்' எவ்வளவு திறமையாகச் செயல் படுத்தப்படுகிறதோ, அவ்வளவு திறமையாக உயர்நீதி மன்றத்தினுல், அந்த நீதிமன்றமும் நடைமுறையில் இருக்கும் ஆட்சி யாளரினின்றும் முற்றிலும் விடுபட்டுச் சுதந்திரமாக இருந்தாலல்லாமல் செயல்படுத்த முடியுமா, என்று டைசியே தனது வாழ்நாளின் இறுதியில் ஐயப்பாடு கொண்டார்[1]. ஆட்சித்துறைச் சட்டமானது, பொதுச் சட்டத்தைப் போன்று, செல்லுபடியாகும் தன்மையைப் பெற்றிருக்கிறபடியால், பொதுச்சட்டமானது சில விஷயங்களுக்கு, முக்கியமான உடைமைபற்றிய சட்டத்துக்கு, கையாளுதலுக்கு முக்கியமாகக் கருதப்படவில்லை.

ஆட்சித்துறைச் சட்டம், விஷயங்களைப் பற்றிய விதிகள் (Administrative Law; Substantive Rules): இன்றைய நாளில் அரசாங்க அதிகாரிகளின் கட்டுப்பாடு என்பதைப் பொறுத்த வரையில் நீதிமன்றங்களின் முக்கியமான அலுவல் என்ன வென்றுல், அவர்களுக்கு நிலவரச் சட்டதின் மூலமாக அளிக்கப்பட்ட அதிகாரத்தை (statutory power) அவர்கள் அளவுக்கு மீறிக் கையாளுதலையும், தவருகப் பயன் படுத்துவதையும் தடுப்பதே ஆகும். இந்தச் சூழ்நிலையில்தான் சமயோசித அதிகாரங்களைப்பற்றிய விஷயத்துக்கு எல்லா முக்கியத்துவமும் கிடைக்கிறது. ஆயினும், ஒப்பந்தங்களை நடைமுறையில் நிறைவேறச் செய்தல், சித்திரவதைத் துன்பங்களுக்கு ஈடுசெய்தல், தேவைப்படுமாயின் பொது அரசாங்க அதிகாரிகளும், அவர்களுடைய பணியாட்களும் செய்த குற்றங்களுக்குத் தண்டித்தல் முதலியவையும் நீதி மன்றங்களின் முக்கியமான அலுவல் ஆகும். சட்டத்தின் மூலமாக நிவாரணம் எதுவும் இல்லாதபோது, ஒவ்வொரு தனி ஆளும், தான் ஒரு செயலைச் செய்ததனுலோ அல்லது செய்யாமல் விட்டதனுலோ வரும் குற்றச் செயல்களுக்கு (wrongful acts) நேராகப் பொறுப்பாளி ஆவார். குற்றச் செயலுக்கான நடவடிக்கைகள் பொதுச்சட்டத்தில் இருக் கின்றன; சட்டத்தினுல் விதிக்கப்பட்ட கடமையை மீறுதலுக் கான நடவடிக்கைகளும் இருக்கின்றன. மேல் அலுவலரின் ஆணைகளுக்குக் கீழ்படிதலென்பது (ஒரு செயலைச் செய்தவர்), தன்னைக் காத்துக் கொள்ளுதற்குக் கூறும் சரியான நியாயமாகச் சாதாரணமாக ஆவது இல்லை. ஆணைகள் அரசரிடமிருந்தும்

[1] எட்டாம் பதிப்பு (1915).

அவருடைய அமைச்சர்களிடமிருந்தும், அவருடைய அல்லது ஒரு உள்ளூர் அதிகாரியிடமிருந்தோ அல்லது வேறு அரசாங்கக் குழுவினிடமிருந்தோ விடுக்கப்பட்டாலும், மேலே கூறிய நிலையே இருக்கும். ஒரு தனிப்பட்ட வேலை கொடுப்பவரிடமோ, அல்லது வாணிப நிறுவனத்திலோ வேலைசெய்யும் பணியாள் தனதுமேலாளின் ஆணையின்படியேதான் நடந்ததாகக் கூறித் தனது செயலுக்கு எவ்வாறு சமாதானம் கூறமுடியாதோ, அதே போலவே பொய்யான காரணத்திற்காக ஒருவரைச் சிறை பிடித்த குற்றத்துக்காக வழக்குக்குள்ளான போலீஸ் காவலர், தான் தனது மேலதிகாரியின் ஆணையின்படி நடந்ததாகக் கூறி சமாதானம் கூற இயலாது. மேலும், அரசாங்க அதிகாரிகளின் பணியாட்கள் தங்களுடைய கடமையின் போக்கில் செய்த செயல்களுக்காக வழக்குக்கு உள்ளாகும்போது, அவர்களை அமர்த்திய மேலதிகாரியும் அவர்களோடு பிரதிவாதியாகச் சேர்க்கப்பட்டாலல்லாமல், பணியாட்கள் மீதுமட்டுமே வழக்குத் தொடர்தல் என்பது அருமையே. இந்த நிலைமை ஏற்பட்டுள்ளதற்கு முக்கிய காரணம், குறிப்பிட்ட அரசாங்க அதிகாரி மற்றொருவர் செய்யும் செயல்களுக்குப் பொறுப்பு ஏற்கின்ற, ஒரு தனிப்பட்ட வேலை கொடுப்பவரைப் போலவே, பணியாளைவிடப் பொருள் வசதியுள்ள ஒரு பிரதிவாதி ஆவார். ஒரு உள்ளூர் அதிகாரியின் பணியாட்கள் தமது கடமையைச் செய்யும்போது நல்லெண்ணத்தோடு செய்யும் சில செயல்களைப் பொறுத்த வரையில் அவர்களுக்கு விதிவிலக்கு வழங்கக் கூடிய பல சட்டங்கள் இருக்கின்றன.[1] இதற்கு மாறாக அரசர்மீது வழக்குத் தொடுப்பது பற்றிய சட்டம், 1947ஆம் ஆண்டில் செய்யப் படுவதற்கு முற்பட்ட காலத்தில், குற்றச் செயல்களுக்காக அரசர் மீது வழக்குத் தொடுக்க இயலாமலிருந்தது. எனவே, அவருடைய குற்றச் செயல்களுக்குப் பொறுப்பு அவருடன் தொடர்பு உள்ள தனிப்பட்ட பணியாள்மீதே சுமத்தப்பட்டது. தவறு நிறைந்த செயலானது ஒரு கடமையை நிறைவேறுற்கையில் செய்யப்படாமலிருக்குமாயின், அதற்குரிய நடவடிக்கை தனிப்பட்ட அத் தவறு இழைத்தவருக்கு எதிராகத்தான் எடுக்கப்படும்.

எல்லா அரசாங்க அதிகாரிகளும், இப்பொழுது, தமது பணியாட்களோ அல்லது செயலாளர்களோ தமது கடமையில்

[1] Public Health Act, 1875, s. 265; Public Health Act, 1936, s. 305; Food and Drugs Act, 1938, s. 94; National Health Servie Ac, 1946, s. 72.

செய்யும் தவறுன அல்லது தகுதியற்ற செயல்களுக்குப் பொறுப்புடையவராக இருக்கின்றனர். பதிவு செய்யப்படாத உள்நாட்டு அஞ்சல்களேயும், சிறு பொட்டலங்களேயும் கொண்டு உரியவரிடம் சேர்ப்பதுபற்றி அஞ்சல் அலுவலகத்துக்கும், தனது கடமையைச் செய்யும் படைவீரர் ஒருவர் மற்றெருரு படைவீரரால் அடையும் காயங்கள்பற்றி, படைத்துறைகளுக்கும் மேற்படி விதியிலிருந்து முக்கியமான விலக்குகள் அளிக்கப்பட்டிருக்கின்றன.[1] மெர்சி துறைமுகம், துறைமுகக்கழகக் காப்பாளர் ஆகியோருக்கும் கிப்ஸ் என்பவருக்கும் இடையே 1866ஆம் ஆண்டில் தோன்றிய முக்கியமான வழக்கில் (Mersey Docks and Harbour Board Trustees v. Gibbs) மேலே குறிப்பிட்ட பொறுப்பானது நிறுவப் பட்டது. இதன்படி தங்களது பணியாட்கள் அல்லது செயலாட்கள் தமது கடமைகளேக் கவனமின்றிச் செய்வதற்கு உள்ள பொறுப்பை (liability) பொறுத்த அளவிலே, ஒரு தனியார் வாணிபக் கழகத்துக்கு அல்லது ஒரு மனிதருக்கு எந்த நிலைமை இருக்கிறதோ, அதே நிலேயிலேயே ஒரு அரசாங்கக் கழகமும் இருக்கிறது.

பாராளுமன்றம் எப்பொழுது ஒரு காரியம் செய்யப்படுதல் வேண்டுமென்று வெளிப்படையாக ஆணை கொடுத்துள்ளதோ, அப்பொழுது அந்தக் காரியத்தைச் செய்வது தவறு உடையதாக ஆகாது. அதனுல் விளேயும் நஷ்டத்துக்கு உரிய ஈட்டுத்தொகையும் (compensation) வழக்கமாகப் பாராளுமன்றத்தாலேயே அளிக்கப்படுகிறது. ஆனுல், சட்டத்தின் மூலமாகக் கொடுக்கப்படும் அதிகாரத்தை விளக்குவதில் சில அனுமானங்கள் பின்பற்றப்படுகின்றன. ஒரு அரசாங்கக் கழகத்துக்குச் சமயோசித அதிகாரம் கொடுக்கப்படும்போது, தனிவாழ்வு உரிமைகளில் குறிக்கிடுதல் அல்லது தலேயிடுதல் தவிர்க்க முடியாதவாறு அதிகாரம் கொடுக்கப்பட்டாலொழிய, தனிவாழ்வு உரிமைகளில் தலேயிடும் நோக்கம் இல்லே என்று அனுமானித்துக் கொள்ளப்படுகிறது (assumed). இவ்வாறு, லண்டன் நகரத்தின் சுற்றுப்புறப் பகுதி ஒன்றிலே அம்மைநோய் மருத்துவ நிலேயம் கட்டுவதற்கு அதிகாரம் அளிக்கும் சட்டங்கள், பொதுச் சட்டத்தின்படி தொல்லே தருவதற்குரிய வகையிலே மேற்படி கட்டிடத்தைக் கட்டுவதற்கு அனுமதி அளிக்கவில்லே

[1] ஆயினும் அரச ஆணையின்படி, காயமுற்று ஊனமடைந்தவருக்கு உதவிப் பணம் அளிக்கப்படுவதற்கு வகை செய்யப்பட்டிருக்கிறது.

என்பதாகக் கூறப்பட்டது.[1] ஆனால், சட்டத்தின் மூலமாக அளிக்கப்பட்ட அதிகாரத்தைக் கையாளுதல் என்ற செயலும், மேலும் வன்மையான காரணத்தோடு சட்டத்தின் மூலமாக உள்ள ஒரு கடமையைச்செய்தல் என்பதும், தவிர்க்க முடியாத வாறு தனிவாழ்வு உரிமைகளுக்குத் தீமை விளைவிக்குமானால், அல்லது ஊறு விளைக்கக் கூடிய வகையிலே, ஒரு குறிப்பிட்ட காரியத்துக்காக ஒரு குறிப்பிட்ட மனையிலே (site) ஒரு கட்டிடத்தைக் கட்டுதல் போன்ற ஒரு காரியத்தைச் செய்வதற்கு வெளிப்படையாக அதிகாரங்கள் வழங்கப்படு மானால், நஷ்ட ஈட்டுக்காக நிலவரச் சட்டம் (statute) வழி செய்தாலல்லாமல், அத்தகையை தீங்குக்கு நிவாரணம் இல்லை.[2] ஆயினும் சட்டத்தினால் விதிக்கப்பட்ட கடமையைக் கவனக் குறைவாகச் செய்தல் அல்லது சட்டத்தினால் அளிக்கப்பட்ட அதிகாரத்தைக் கவனக் குறைவாகக் கையாளுதல் குற்றச் செயலாக ஆகலாம். சட்டதினு லளிக்கப்பட்ட ஒரு அதிகாரம் கையாளப்படுதலில் ஊறு விளையும் என்பது நிச்சயமானால், அதனைக் கவனக் குறைவாகக் கையாளுதலினால் விளையும் துன்பம் மிகாமல் தடுப்பதற்குக் கவலை எடுத்துக் கொள்ளவேண்டும்.[3] ஒரு தனி மனிதருக்குத் தீங்கு விளைவிக்கக் கூடிய வகையிலும், அல்லது ஒரு தனிமனிதருக்குத் தீங்கு விளைவிக்காத வகையிலும், சட்டத்தினால் அளிக்கப்பட்ட ஒரு அதிகாரம் கையாளப்படும் போது, அதனைக் கையாளுபவரோ அல்லது கையாளு பவர்களோ தனது அல்லது தங்களுடைய அதிகாரத்தைக் கையாளுவதற்கு மேலே கூறியவற்றுள் முதலாவது வகையைக் கையாளுவாரானால், அவர் அல்லது அவர்கள் கவனக் குறைவாக இருந்த குற்றம் செய்தவர்களாகக் கருதப் படுவார்கள். இரண்டு வகையான செயல் முறைகளுமே, செய்பவருக்கு அல்லது செய்பவர்களுக்கு முன்னே இருக்கும்போது இரண்டாவது வகையில் செய்தவர் குற்றம் செய்தவராக மாட்டார்.[4] இவ்வாறு பிஷர் என்பவருக்கும் ரூயி ஸ்லிப்—நார்த்வுட் நகர மாவட்டக் கழகத்துக்கும் இடையே ஏற்பட்ட வழக்கில்[5] மோட்டாரை இயக்கியவர் விளக்குப் போடப்படாத பாதுகாப்பிடத்தின்மீது

[1] Metropolitan Asylum District v. Hill, 1881.

[2] Hammersmith and City Railway Co. v. Brand, 1869.

[3] Geddis v. Proprietors of Bann Reservoir, 1878.

[4] Lagan Navigation Co. v. Lambeg Bleaching, Dyeing and Finishing Co., (1927).

[5] Fisher v. Ruislip-Northwood Urban District Council, 1945.

மோதியதனுல் காயம் அடைந்தாரென்று கூறப்பட்டது; இதில் அந்தக் காலத்தில் (1945-ல்) சாதாரணமான தெருவிளக்குப் போடுதல் என்பது தடைசெய்யப்பட்டிருந்தபோதிலும், அனுமதிக்கப்பட்ட அளவிலே தனிப்பட்ட முறையில் விளக்கு வசதிகளைக்கொண்டு பொதுமக்கள் பொதுச்சாலைகளைப் பயன்படுத்துவதைக் காப்பாற்றுவதில் தக்க கவனம் செலுத்த வேண்டிய கடமைக்கு உட்பட்டே, நெடுஞ்சாலையிலுள்ள விமானத் தாக்குதல் பாதுகாப்பறைகளை நிறுவுவதற்கான சட்டத்தின் மூலமாக அளிக்கப்பட்ட அதிகாரம் கையாளப்பட முடியு மென்று தீர்ப்புக் கூறப்பட்டது.

சட்டத்தில் விதிக்கப்பட்ட ஒரு கடமையைச் செய்யத் தவறுவதனுல் குற்றச்செயலுக்குப் பொறுப்பைச் சில சமயங்களில் தோற்றுவிக்கலாம். ஆனுல், இத்தகைய நிலைமையும், குறிப்பிட்ட கடமையானது பொதுமக்களின் உறுப்பினருக்குச் செய்யப்படுதற்கு உரியது என்று இருந்தால்தான் தோன்றும். அந்தக் கடமை ஒரு உயர்தர அரசாங்க அதிகாரிக்குச் செய்யப்பட வேண்டியதாக இருக்கலாம். ஒரு குடியானவர் கடற்கரைப் பாதுகாப்புகள் பழுது செய்யப்படாததனுல் தனது நிலம் சில மாதங்களாக நீர் தேக்கத்துக்கு உள்ளாயிற்று என்று கூறி முறையிட்டார். தக்க பழுதுகளைப் பார்த்துவைக்க மேலதிகாரி தவறியதனுல் ஏற்பட்ட நஷ்டத்துக்கு உரிய ஈட்டை உரிய அரசாங்க அதிகாரியிடமிருந்து பெற அவர் தவறினுர். இவ்வகையில் சட்டமானது மேற்படி அதிகாரியை நடு அரசாங்கத்தின் ஆட்சித்துறைக்குத்தான் பொறுப்பாக ஆக்கிற்றே தவிர அந்தப் பகுதியில் உள்ள தனிப்பட்ட நிலச் சொந்தக்காரர்களுக்குப் பொறுப்பாக ஆக்கவில்லை.[1] ஒரு சட்டத்தினுல் விதிக்கப்பட்ட ஒரு கடமையும், ஒரு பொதுச் சட்டத்தினுல் விதிக்கப்படும் கடமையும் ஒன்றுக இருக்கும் போது, அந்தக் கடமையைச் செய்யத் தவறுவதால் ஏற்படும் நஷ்டத்துக்குரிய ஈட்டுத்தொகையைக் கோரும் உரிமையை, நிலவரச் சட்டமானது நீக்கிவிட்டாலொழிய, அவ் வுரிமை நடைமுறையில் இருக்கிறது; அதேபோல அக் கடமையைச் செய்யத் தவறுவதற்கு ஒரு தண்டப் பணமும் (money penalty) சட்டம் விதிக்கலாம். இந்த நிலைமையில், ஒரு கடமையைச் செய்யத் தவறுதல் தண்டனைக்கு மட்டுமே உரியது ஆகுமா, அல்லது, அதற்காகக் குற்றச் செயலுக்கான நடவடிக்கையும் எடுக்கப்படுமா என்பது விளக்கத்துக்கு உரிய கேள்வியாக

[1] East Suffolk Catchment Board v. Kent, 1941.

ஆகிறது. வழக்கமாக, சட்டப்படியான ஒரு அரசாங்க அதிகாரி, பொதுமக்களுக்கு மட்டுமே ஒரு கடமையைச் செய்யவேண்டியவராக இருந்தால், அந்த நிலையில் (அதனைச் செய்யாததற்காக) குற்றச் செயலுக்குரிய நடவடிக்கை எடுக்கப்படமாட்டது. நீர்க்குழாய்களில் போதிய அளவு அழுத்தம் இருக்குமாறு, நீர் வழங்கும் நிறுவனம் பார்த்துக் கொள்ளுதல் வேண்டுமென்று சட்டம் விதித்திருக்க, அவ்வாறு செய்யத் தவறும் நிறுவனத்தின்மீது, நீர் அழுத்தம் இல்லாததனால், தனது வீடு தீப்பற்றி அழிந்து போனதற்காக அதன் சொந்தக்காரரான வாதி(plaintiff),குற்றச் செயலுக்கான நடவடிக்கையைக் கோருதல் இயலாது. சட்டத்தின் மூலமாக விதிக்கப்பட்டுள்ள சில கடமைகள் முழுமையான, கட்டாயமான இயல்புடையவை. குறிப்பாக 1937ஆம் ஆண்டின் தொழிற்சாலைகள் சட்டம் இடர்ப்பாடான பொறிகளை அல்லது இயந்திரங்களைச் சுற்றி வேலியிடுதல் வேண்டுமென்ற கடமையை விதிக்கிறது. இந்தக் கடமை அரசரையும், மற்றெல்லா அரசாங்க அதிகாரிகளையும் கட்டுப்படுத்துகிற தாகையால், ஒரு காயமுற்ற தொழிலாளி, ஒரு அரசாங்க அதிகாரியிடமிருந்து, சிவில் வழக்குத் தொடருவதன் மூலம் நஷ்டஈடு கோரிப் பெறலாம்[1].

அரசாங்க அதிகாரிகளுக்குக் குற்றச் செயல்களிலே இருக்கக்கூடிய சட்டப்படியான பொறுப்பைப்பற்றி இதுவரை கூறப்பட்டச் சுருக்கமான இந்த விளக்கமானது, டைசியினால் சட்டத்தின் ஆட்சி என்பதற்குக் கொடுக்கப்பட்ட இரு பொருள்களுள் முதலாவது பொருளுக்குப் பொருந்தி இருக்கிறது. ஆயினும், சமயோசித அதிகாரங்களை ஆட்சித் துறை நிறுவனங்கள் நீதிமன்ற முறையில் கட்டுப்படுத்து வதைப் பொறுத்த அளவில்தான், சட்டத்தின் ஆட்சி என்பதைப்பற்றிய விளக்கமானது கடினமான அல்லது சிக்கலான நிலைமையை உண்டாக்குகிறது. சமயோசித அதிகாரத்தைக் கையாளுவதில் அரசாங்க அதிகாரி தனது அதிகாரங்களை அளவுகடந்து கையாண்டார் என்று சான்றுடன் காட்டப்படுமானால், அவருடைய செயல் செல்லுபடியாகாத தெனத் தீர்மானிக்கப்படும். இது நஷ்டஈட்டுத் தொகைகளைக் கோரும் உரிமையை வழக்கமாக அளிப்பதில்லை. இதற்கு நிவாரணம் அல்லது நஷ்டஈடு கிடைக்க வேண்டுமானால், அதனை அரசாங்க அதிகாரி தனது கடமைகளைச் செய்வதி

[1] 1947ஆம் ஆண்டின் அரசர் மீது வழக்கு தொடருவதுபற்றிய சட்டமானது குற்றச் செயலுக்கான பொறுப்பை அரசர்மீது சுமத்தவில்லை,

னின்றும் ஒரு நன்மையைச் சட்டப்படியாகப் பெறக்கூடியவர் எவரோ, அவரால்தான் நீதிமன்றங்களிலிருந்து பெறமுடியும். இதற்கு ஒரு சிறிய எடுத்துக்காட்டு ஒரு தீர்வை கட்டுபவருடைய (rate payer) உள்ளூர்க் கழகமானது தனக்கு அளிக்கப்பட்ட எல்லைக்குள்ளாகத் தனது அதிகாரங்களைக் (powers intra vires) கையாளுதலில் அவர் காட்டும் ஈடுபாடு ஆகும். பொதுவாகக் காரியங்களின் இயல்பைப் பொறுத்த வரையில் தனக்கு அளிக்கப்பட்டுள்ள எல்லை மீறி ஒரு அதிகாரி ஒரு காரியத்தைத் துணிந்து செய்தல் என்பது ஒரு விதிவிலக்கான செயலாகவே இருக்கும். மேலும் ஒரு பாராளுமன்றச் சட்டமானது, அப் பாராளுமன்றத்துக்கு உள்ள அதிகாரத்தின் எல்லைக்கும் அப்பாற்பட்டதென்ற காரணத்தால் அதனுடைய செல்லுபடியாகும் தன்மை மறுக்கப்பட முடியாததாகும். எனவே, ஒரு அதிகாரமானது அளவு கடந்து கையாளப் படுதலைத் தவிர்ப்பதற்காக அல்லாமல், அது தவருகக் கையாளப் படுதலைத் தவிர்க்கும் நோக்கத்தோடுதான் நீதிமன்றங்களின் தலையீடு கோரப்படுகிறது. ஒரு சமயோசித அதிகாரத்தைக் கையாளுதலில், அதற்குப் பொறுத்தமான காரணங்களை மனத்திற் காள்ளாமலிருத்தல், மேற்படி அதிகாரத்தைக் கையாளத் த றுகின்ற செயலுக்கு ஒப்பாக ஆகலாம். தகாத ஒரு நோக்கத் காக ஒரு அதிகாரம் கையாளப்பட்டால், அச் செயல், அவ் வதிகாரத்தை அளிக்கும் சட்டத்தின் வரம்புக்குள் செய்யப்பட்டதாக நீதிமன்றங்களால் கருதப்பட மாட்டாது. மேலும், முதல் தோற்றத்திலேயே சட்டத்துக்கு ஒத்தவையாக இருக்கும் செயல்கள், ஒரு தவருன செயல்விதி கையாளப்படுதலின் மூலமாகச் செல்லுபடியாகாதவையாகவும் ஆகலாம். கையாளப்படும் அதிகாரமானது, நீதி வழங்கும் இயல்புடையதாக இருந்தால், இயற்கையான நீதியை (natural justice) வழங்குவதில் அது தகாத முறையில் கையாளப் பட்டால், அச் செயல், மேற்படி அதிகாரத்தைக் கையாளத் தவறிய செயலாகவே கருதப்படும். எனவே, இவ் வகையாக அதிகாரியினுல் செய்யப்படும் தீர்ப்பு தள்ளிவிடப்படலாம். இதனுல், எங்கு ஒரு ஆட்சி அலுவலருக்குச் சமயோசித அதிகாரம் கொடுக்கப்படுகிறதோ அங்கு அவருடைய தீர்ப்பின் இயல்புகளை மட்டுமே அடிப்படையாகக் கொண்டு மேல் முறையீடு நீதிமன்றங்களுக்குச் செய்ய இயலும் என்பது பொருளன்று. இத்தகைய ஒரு வழக்கிலே, மேல் முறையீடு சாதாரணமாக ஒரு உயர்தர ஆட்சி அலுவலருக்கே செய்து கொள்ளப்படவேண்டும்; அல்லது இவ் விஷயத்தைப் பாராளு மன்றத்தில் கொண்டுவருவதன் மூலமாக மேல் முறையீடு

(appeal) செய்யலாம். ஒரு அலுவலர் தனது அதிகாரங்களை நியாயமாகக் கையாளுதலில் அவரால் கையாளப்பட வேண்டிய சமயோசித அதிகாரங்களுக்குப் பதிலாக நீதி மன்றங்கள் தங்களுடைய சமயோசித அதிகாரங்களைக் கையாளுதல் அவற்றின் அலுவல் அன்று.

இந்தச் சந்தர்ப்பத்தில்தான் சட்டத்தின் ஆட்சி என்பதற்கு டைசி அளித்த விளக்கத்தை ஒத்துக்கொள்ளுவது மிகவும் கடினமாக இருக்கிறது. 'ஆட்சியில் இருப்பவர்கள், தங்களுடைய கட்டாயப்படுத்தக்கூடிய சமயோசித அதிகாரங்களைக் கையாளுவதன் மூலமாக, எவரும் தனது உடலைப் பொறுத்த வரையிலோ, அல்லது உடைமைகளைப் பொறுத்த வரையிலோ—உடைமை என்பதற்கு அவர் நிலம் உள்ளிட்ட பொதுவாக எல்லாச் சொத்தையும் குறிப்பிட்டாரானல்—சட்டப்படியாகத் துன்பத்துக்கு உரியவராக மாட்டார் என்று பொருள்கொண்டார்.(இதனை ஏற்பது ஏன் கடினமாக இருக்கிறதென்றல்) நிலத்தை உடைமையாகப் பெற்றிருத்தலைப் பற்றியும், அதனைப் பயன்படுத்துதலைப் பற்றியுமே, சில கட்டுப்பாடுகள் இக்கால ஆட்சி இயந்திரத்தினல் சட்டத்துக்கு ஏற்ப விதிக்கப்படக்கூடியனவாக இருக்கின்றன. வழக்குகளைத் தீர்ப்பதற்காக விசேட நீதிமன்றங்களை உடைய சில ஆட்சிச் செயலின் துறைகள் இருக்கின்றன. நிலத்தைப் பற்றிய வழக்குகளைத் தீர்ப்பதற்குரிய நீதிமன்றங்களைத் தவிர, பொது வாழ்வு பற்றிய உரிமைகளுக்கும், தனிவாழ்வு பற்றிய உரிமைகளுக்குமிடையே நேரான முரண்பாடு இருக்கக்கூடிய செயல்களான தேசீய உயிர்காப்புத் திட்டம் (national insurance), தேசீய உதவி, (national assistance), தேசிய மருத்துவப்பணி (National Health Service), படைத்துறைப்பணி (military service), போக்குவரவுக் கட்டுப்பாடு (regulation of transport), வரியை விதித்தல், இன்னும் மற்ற விஷயங்கள் ஆகிய எல்லாவற்றையும் பற்றிய வழக்குகளுக்கும் நீதிமன்றங்கள் (tribunals) இருக்கின்றன. நாம் முன்னரேயே பார்த்துள்ளபடி, பெருவாரியான வழக்குகளில், சட்டத்தின் செய்திகளைப்பற்றி மேல்முறையீட்டை, ஒரு உயர்தர ஆட்சி அலுவலாளருக்கும், சாதாரண மன்றங்களுக்கும் செய்து கொள்ளும் ஒரு உரிமை அளிக்கப்படுகிறது. இதுவரையில் விசேட நீதிமன்றங்கள் அல்லது ஆட்சித்துறை நீதிமன்றங்கள் (administrative tribunals), நிறுவப்பட்ட நீதிமன்ற இயல்பான ஓரஞ் சாரமையோடு பணிபுரியும்போது, அவைகள் இருப்பதனல் சட்டத்திற்கு முரணான நிலைமை எதுவும் தோன்றி

விட்வில்லை. ஆனால் அத்தகைய நீதிமன்றங்கள் பலதரப்பட்டனவாகவும், எண்ணிக்கையில் மிகுந்தும் இருந்த போதிலும், அவற்றின் அதிகார எல்லை, ஆட்சித்துறையின் செயலின் முழு அளவிலே, ஒரு சிறு பாகத்தையே பற்றியதாக இருக்கிறது. இதனை நாம் நினைவிற் கொள்ளுதல் வேண்டும். கட்டாயப்படுத்துவதற்கு உரிய, சட்டத்திலல்லாத அதிகாரம் மிக விரிவாக இக் காலத்தில் எல்லா அரசாங்கங்களுக்கும் இருக்கின்றன என்றும், இத்தகைய அதிகாரம் இருப்பதையே டைசி ஒத்துக்கொள்ளமாட்டாரென்றும் வாதிட இடமுண்டு. இந்த முரண்பாடு தீர்க்கப்படுதல் வேண்டுமானல், அதற்கு டைசி இப்பொழுது இருப்பதைவிடக் குறைந்த அளவு அலுவலுள்ள ஆட்சி அமைப்பைப் பற்றியே ஆராய்வுக்கு எடுத்துக் கொண்டாரென்றும், இதைவிடத் தனி ஆளின் சுதந்திரம், பேச்சு சுதந்திரம் முதலியவற்றைப் பொறுத்த வரையில் அரசாங்கத்தின் நோக்கத்தை அறிவதிலேயே அவர் விருப்பமுடையவராக இருந்தாரென்றும் ஒத்துக்கொள்ளுதல் வேண்டும்.

ஒரு பொதுவான ஆட்சித்துறைக்குரிய மேல் முறையீட்டு நீதிமன்றத்தை நிறுவுதல் வேண்டுமென்பதாக அவ்வப்போது திட்டங்கள் கொண்டு வரப்பட்டது உண்டு. இரண்டு வகையான திட்டங்கள் பிராங்ஸ் குழுவின் முன்னர்க் கொண்டு வரப்பட்டன. முதலாவது வகைத் திட்டம் பேராசிரியர் W. A. ராப்சன் என்பவருடையதாகும்; இது ஒரு பொதுவான நீதிமன்றம் நிறுவப்படுதல் வேண்டுமெனவும், அரசாங்க விசாரணைகளை நடத்திய பின்னர் அமைச்சர்களால் அளிக்கப் படும் தீர்ப்புகளினின்றும், நீதிமன்றங்களினின்றும் வரும் மேல் முறையீடுகளை மட்டுமன்றி, ஒரு தனிப்பட்ட நீதிமன்றமோ அல்லது விசாரணை முறையோ இல்லாததும், மிக விரிவானது மான ஆட்சித்துறையில் அளிக்கப்படும் கடுமையான நியாய மில்லாத தீர்ப்புகளுக்கு எதிரான மேல்முறையீடுகளையும் ஏற்று விசாரிப்பதற்கு மேற்படி நீதிமன்றத்துக்கு அதிகாரம் இருக்க வேண்டுமென்றும் அவருடைய திட்டம் கூறிற்று.[1] திறமையற்ற ஆட்சிச் செயல்களில் குறைகளைத் தீர்ப்பதற்காக, சாதாரண நீதிமன்றங்களின் அமைப்புக்கு வெளியே மேல் முறையீடு நீதிமன்றம் நிறுவப்படுதல் வேண்டுமென்று பேராசிரியர் ராப்சன் நெடுங்காலமாகக் கூறிவந்துள்ளார். இரண்டாவது திட்டம் 1955ஆம் ஆண்டில் நீதிமன்ற பழமைப்

[1] Cmnd. 218, para 120; Minutes of Evidence, Days 31—14, pages 491-495, 506—512.

போக்கான ஒன்றிப்புக் கழகத்தால் (Inns of Court Conservative and Unionist Society) வெளியிடப்பட்ட 'சட்டத்தின் ஆட்சி' (The Rule of Law) என்ற சிறு துண்டு வெளியீட்டில் முதல் முதலில் வெளியிடப்பட்டது; இது உயர்தர நீதிமன்றத்தால் ஆட்சித்துறை பற்றிய நீதிமன்றப் பிரிவு ஏற்படுத்தப் படுதல் வேண்டுமென்று கூறிற்று. ஆட்சித் துறைகளின் மீது பொதுவான மேல்முறையீட்டு நீதி அதிகாரம் இந்தப் புதிய பிரிவுக்கு இருத்தல் வேண்டுமென்று கூறப்பட்டது. இந்தப் பிரிவில் மிக அனுபவம் உள்ள ஆட்சியாளரும் வல்லுநரும், இப்பொழுது படைத்துறைபற்றிய வழக்குகளில் இருப்பது போல, ஒரு உயர்தர நீதிமன்ற நீதிபதியோடு தீர்ப்புச் செய்ய உதவுபவர்களாக(assessors) அமர்ந்தும், அல்லது முன்பு இருந்த இரயில்வே, கால்வாய் குழுவில் இருந்ததுபோல, அவர்கள் நீதிமன்றத்தின் ஒரு பாகமாக அமைந்தும் இருக்கலாம். ஆட்சித் துறையினரின் தீர்ப்புகளுக்கு எதிராக மேல்முறை யீடுகளை விசாரிப்பதற்கு ஒரு நிறுவனம் ஏற்படுத்தப்படுதல் வேண்டுமென்ற விருப்பத்துக்கு பிராங்ஸ் குழுவினர் பரிவு காட்டினாலும், தங்களுக் களிக்கப்பட்ட மேற்கோள் குறிப்பு களிலே (terms of reference) ஒதுங்கிக்கொண்டுவிட்டனர்; மேற்படி குறிப்புகள் ஒரு விசாரணையையோ அல்லது ஆய்வையோ பற்றிய, விசேட சட்டப்படியான செயல் முறைகளையே குறிப்பிட்டன. வல்லுநரடங்கிய ஒரு நீதி மன்றத்திடமிருந்து, மேல் முறையீடுகளை ஏற்கக்கூடிய ஒரு பொது நீதிமன்றத்தில் நன்மை ஏதும் இருப்பதாக அக் குழுவினர் காணவில்லை. பேராசிரியர் ராப்சனின் திட்டத்தைப் பற்றிக் குழுவினர் தமது கருத்தைத் தெரிவிக்கையில், ஒரு பொதுவான மேல் முறையீட்டு நீதிமன்றத்தை நிறுவுதல் என்பது, 'எல்லா நீதிமன்றங்களும் நீதி வழங்கும் அதிகாரத்தைப் பொறுத்த வரையில் உயர்தர நீதிமன்றத்தின் கட்டுப்பாட்டில் இருக்கின்றன' என்ற கொள்கைக்கு மாருகச் செல்லுவதாகும் என்று கூறிற்று. உயர்தர நீதிமன்றம் நீங்கலாக, கீழ்த்தர நீதிமன்றங்களினுல் தீர்ப்பளிக்கப்பட்ட விஷயங்களில் விசேட நீதிமன்றங்களுக்கும் மேலாக, சட்டத்தின் செய்திகளைப்பற்றி ஓர் ஆட்சித்துறை மேல் முறையீட்டு நீதிமன்றம் (administrative appeal Court) வழங்கும் முடிவான தீர்மானங்கள், இரண்டு விதமான சட்ட அமைப்புகளை மீண்டும் தோற்றுவிக்கும் என்று மேற்படி குழுவினர் கருதினர். இவ்வாருன நிலைமை முன் காலத்தில் சட்டத்துக்கும் தர்ம நியாயத்துக்கும் (equity) தோன்றிய வேறுபாட்டை ஒத்து இருக்கும்; இதனுல், கடைசியில்

இருபதாம் நூற்றுண்டிலும் ஒரு நீதிமன்றச் சட்டம் (Judicature Act) செய்யப்படவேண்டி வரும். இங்கு கூறப்பட்ட இந்த இரு மறுப்புகளும், சட்டத்தின் ஆட்சி என்பதை அடிப்படையாகக் கொண்ட திட்டத்துக்குப் பொருந்தவில்லை; இந்த இரண்டாவது திட்டத்தின் முக்கிய நோக்கமே, குழுவினரால் கருத்தில் கொள்ளப்பட்ட பல வகையான விசேட நீதிமன்றங்களின் (types of tribunals) தீர்ப்புகளைப் பற்றி ஏதும் குறிப்பிடாமல், ஆட்சியாளர்களின் தீர்ப்புகளுக்கு எதிராக மேல் முறையீடு செய்தற்கு, ஒரு பொது மன்றத்தை அல்லது மேடையை (forum) அமைப்பது என்பதுதான்.

சட்டபூர்வமான அதிகாரங்களை அளவு கடந்து கையாளுதல், தகாத நோக்கத்துக்குக் கையாளுதல் முதலிய செயல்களினின்றும் வேறுபட்ட, தீய ஆட்சியின் செயல்களைத் திருத்துவதற்காக, ஆட்சி இயந்திரத்தை நீதிமன்றத்தின் கட்டுப்பாட்டில் வைத்தல் வேண்டுமென்று ஒரு வலுத்த எண்ணம் இருந்து வருகிறது. இது சட்டத் தொழிலை ஏற்றுள்ளவர்களுக்கு மட்டும் உரிய எண்ணமாகவும் இல்லை. இத்தகைய ஒரு திட்டம் நமது சட்ட அமைப்பின் மரபுகளினின்றும் வழுவிச் செல்லக்கூடிய ஒரு புரட்சியான மாறுதல் ஆகும். மேலும் இத்தகைய திட்டம் நீதி வழங்கும் அதிகாரத்தைக் கையாளுதலோடு, கொள்கை பற்றிய கேள்விகளைத் (policy issues) தீர்த்து வைத்தல் என்பதனேடு தவிர்க்க முடியாத வகையில் குழப்பிவிடும். (இத் திட்டத்தின்படி) கொள்கையை வகுக்கும் வேலை வட்டத்தில் (arena)விசேட நீதிமன்றத்தின் நீதிபதிகளைக் கொண்டு வருவதனுல், அவர்களுடைய நீதிமன்றச் சுதந்திரத்தைப் பாதுகாப்பதும் கடினமானதாக ஆகிவிடும். 'ஆட்சித்துறை நீதிமன்றங்கள் ஆட்சியின் இயந்திரத்தினுடைய ஒரு பாகமாகக் கருதப்படலாகாது; அவை நீதி வழங்குவதற்குரிய தனிப்பட்ட உறுப்புகளாக கருதப்பட வேண்டும்' என்பவை சரியான கருத்துகளாக இருந்தால், முடிவான மேல் முறையீட்டு நீதிமன்றத்தைச் சாதாரண நீதிமன்றத்தினின்றும் பிரித்துவிடுவது, ஒரு பிற்போக்கு வகையாக அமைந்த செய்கையாகும். தீய ஆட்சி என்பது அலுவலருடைய தவருன நடத்தையைக் குறிப்பிடுவதாகும்; அது முற்றிலும் தனித்த ஒரு பிரச்சினை; ஆதலால், அது சிவில் பணித்துறை உறுப்பினரையோ (members of civil service) அல்லது உள்ளூர் அரசாங்கப் பணித் துறைகளின் உறுப்பினரையோ அலுவலராகக் கொள்ளாமல், சாதாரணமாக அரசாங்க உறுப்பினர்களையே அலுவலராகக் கொண்டுள்ள ஆட்சித்

துறை விசேட நீதிமன்றங்களின் தீர்ப்புகளினுல் கட்டுப்படுத்தப்பட முடியாத பிரச்சினையாகும்.

சமயோசித அதிகாரங்களைக் கையாளுதலின் மீது முக்கியமான கட்டுப்பாடுகள் இருக்கின்றன. எனவே, அவற்ருல் பாதிக்கப்படும் ஒரு ஆளின் முயற்சியின் பேரில் நீதிமன்றங்கள் அதில் தலையிட முடியும். 'சமயோசித அதிகாரத்தை வேறொருவரிடம் ஒப்படைக்கும் அதிகாரி எவரோ, அவரிடமே அவ் வதிகாரம் கையாளப்படுதற்குரிய பொறுப்பும் இருக்கிறது என்பதாகத் தெளிவாக எடுத்துக் கூறப்பட்டிருந்தாலொழிய, சமயோசித அதிகாரத்தைக் கையாளும் அலுவலைப் பெற்றிருக்கும் அதிகாரி, அதனைக் கையாளும் அலுவலை வேறொருவரிடம் ஒப்படைக்க முடியாது. போர்க்காலத்தில் வேளாண்மையின்மீது கட்டுப்பாடு விதிக்கப்பட்டிருக்கும்போது, வேளாண்மை நிர்வாகக் குழுவானது, தனது அலுவலருள் எவருக்காவது, அறுவடை செய்யுமாறு குடியானவர்களுக்கு ஆணைகள் விடுப்பது பற்றித் தமக்கு இருக்கிற சமயோசித அதிகாரத்தை ஒப்படைக்க இயலாது என்று கூறப்பட்டது.[1] எனவே, உள்ளூரில் வேளாண்மை செய்பவரின் நலன்களை எடுத்துக் காட்டக்கூடிய ஒரு வல்லுனர்கள் குழுவினிடமிருந்தே (An Expert Committee) ஒவ்வொரு குடியானவரும் ஆணைகளைப் பெறுதற்கு உரியவர் என்று நடைமுறையில் பொருளாக ஆயிற்று. கீழ்த்தர அலுவலர்கள் ஆலோசனை கூறுவதற்கு பயன்படுத்தப்பட மாட்டார்கள் என்பது இதன் பொருள் அன்று; ஆனுல் சமயோசித அதிகாரம் எந்த அலுவலருக்கு கொடுக்கப்பட்டிருக்கிறதோ, அவர் அந்த ஆலோசனை கூறும் அதிகாரம் கையாளப்படுவதற்கு உரிய பொறுப்பை ஏற்க வேண்டும். ஆட்சித்துறை பற்றிய சமயோசித அதிகாரத்தை விட்டுக்கொடுத்தல் என்பது ஒரு குறிப்பிட்ட வகையில் அதனைக் கையாளுவதற்கு முன் கூட்டியே ஒத்துக் கொள்ளுதல் என்ற வடிவத்திலோ, அல்லது அவ் வதிகாரம் எந்த வகையில் கையாளப்படும் என்பதை முன்னரே தீர்மானிக்கக் கூடிய வடிவத்திலோ, செய்யப்படுமாயின், அவ்வாறு விட்டுக்கொத்தல் (surrender) செய்யப்படலாகாது என்றும் தீர்மானிக்கப்பட்டிருக்கிறது. வாணிபம் செய்வதற்கு உரிமை வழங்கும் விஷயங்களிலே (licensing matters) நடுவர்களை (justices) உடைய உரிமை வழங்கும் குழுக்களுக்கு (Licensing Committees) நிறைய சமயோசித அதிகாரம்

[1] Allingham v. Minister of Agriculture and Fisheries, 1948.

இருந்தாலும், அவர்கள் ஒவ்வொரு விண்ணப்பத்தையும் நன்றாகப் பார்த்து, அவர்கள் எவ்வகையான பொதுக் கோட்பாட்டைத் தீர்மானித்திருந்த போதிலும், அவர்கள் தங்களிடம் அளிக்கப்படும் ஒவ்வொரு காரியத்தையும் தங்கள் அறிவால் ஆராய்தல் வேண்டும். இதுவே நீதிமன்றங்கள், ஒரு நீதிமன்ற முறைக்கேற்பக் கையாளப்படுதற்கு மிக விரிவான சமயோசித அதிகாரங்களை வேண்டுவதற்கு ஒரு வலுவான எடுத்துக்காட்டாக இருக்கிறது,[1] மேலும் ஒரு சமயோசித அதிகாரத்தைக் கையாளும் அலுவலை, ஒரு கீழ்த்தர அலுவலரிடமிருந்து ஒரு உயர்தர அதிகாரி தனது ஆணைகளின் மூலமாக அகற்றிவிட முடியாது. எடுத்துக்காட்டாக, தொழில், தேசியப்பணி ஆகிய துறைகளின் அமைச்சரகத்திலே உள்ள ஒரு கீழ்த்தர அதிகாரி, வேலையினின்று நீக்கப்பட்ட பணியாட்களைத் திரும்பவும் தனது சமயோசிதம் போல வேலையில் அமர்த்துதற்கு நிலவரச் சட்டத்தின் மூலமாக அதிகாரம் பெற்றிருந்தார்; அவ்வாறிருந்தும் அவ் வதிகாரி அச் சமயோசித அதிகாரத்தைக் கையாளத் தவறினர். ஆனால் அவர் அதற்குப் பதிலாகத் தனது அமைச்சரால் கொடுக்கப்பட்டதும், ஒரு குறிப்பிட்ட வகையியிலுள்ள வேலை நீக்கம் செய்யப்பட்டவர்களையெல்லாம் திரும்பவும் வேலையிலமர்த்த ஆணை விடுக்கும்படி செய்வதுமான ஒரு பொது உத்தரவைக் கையாண்டார்[2]. மேலே குறிப்பிட்ட மூன்று எடுத்துக்காட்டுகளும், 'ஆட்சி அதிகாரியின் சமயோசித அதிகாரத்துக்குப் பதிலாக நீதிமன்றம் தனது சொந்த சமயோசித அதிகாரத்தை மேற்படி மூன்று வழக்குகளிலும் விதிக்காமல், ஒரு சமயோசித அதிகாரம் சரியாகக் கையாளப்படும்படி நீதிமன்றங்கள் செயல்படுகின்றன' என்பதைக் காட்டுகின்றன. மேலும், இந்த மூன்று எடுத்துக்காட்டுகளும், இந்தத் துறையிலும்கூட ஆட்சி என்பது சட்டத்தை ஒட்டியே இருத்தல் வேண்டுமென்பதை ஆதரிக்கின்றன. மேலும் வேறுவகைப்பட்ட நீதி ஆட்சிகளிலே, வழக்கானது நாட்டின் சாதாரண நீதிமன்றங்களுக்கு அல்லாமல், ஒரு ஆட்சித்துறை நீதிமன்றத்துக்கே எடுத்துச் செல்லப்படுதல் இயல்பாக இருத்தலை இந்த எடுத்துக்காட்டுகளிலிருந்து காணலாம்.

ஆட்சித்துறை இயல்பான சமயோசித அதிகாரங்களை நீதிமன்ற இயல்போடு கட்டுப்படுத்துவதின் மூலமாகத்தான்

[1] Sharp v. Wakefield, 1891.

[2] Simms Motor Units Ltd. v. Minister of Labour, 1946.

இயற்கையான நீதியின் விதிகளைப் பின்பற்றுதல் (observance of natural rules of justice) என்பது நடைமுறையில் கொண்டு வரப்படுகிறது. இவ் விதிகள், 'நீதிவழங்கும் இயல்பையும், ஓரளவு நீதிவழங்கும் இயல்பையும் (quasi judicial character) உடைய அலுவல்களைக் கொண்டவை என்று சாதாரண நீதி மன்றங்களால் விளக்கப்படுகின்ற அதிகாரங்களைப் பெற்றிருக்கிற, சட்டத்தால் நிறுவப்பட்ட விசேட நீதிமன்றங்கள், ஆட்சித்துறை நீதிமன்றங்கள் முதலியவற்றின் செயல் விதிகளுக்கும் பொருந்தக்கூடியன. எது நீதிவழங்கும் இயல் போடு கூடிய அதிகாரம் என்றும், எது ஓரளவு நீதிவழங்கும் இயல்போடு கூடிய அதிகாரம் என்றும் சீர்தூக்கிப் பார்த்து, அவற்றின் வேறுபாட்டில் உள்ள நுட்பங்களையெல்லாம் ஆய்தல் இங்கு தேவையில்லை.எந்த ஒரு விசேட நீதிமன்றத்தின் செயல் முறைகளும்,'நீதி வழங்கப்படும்' என்ற உறுதிப்பாட்டை ஏற்படுத்துவதாக மட்டும் இல்லாமல், 'நீதிவழங்கப்படுமாறு பார்த்துக் கொள்ளப்படும்' (justice shall also be seen to be done) என்ற உறுதிப்பாட்டை ஏற்படுத்துவதாகவும் இருத்தல் வேண்டும்; எனவே, இதற்கு ஏற்ற முறையிலேயே எந்த ஒரு விசேட நீதிமன்றத்தின் செயல்முறைகளும் நடத்தப் படுதல் வேண்டும் என்ற கொள்கையை எளிதாக நாம் விளக்கிக் கூறலாம். இயற்கையான நீதி (natural justice) என்ற கருத்து, வெகுகாலமாகச் சாதாரண நீதிமன்றங்களால் ஒப்புக்கொள்ளப்பட்ட ஒன்று ஆகும். ஒரு வழக்கில் ஈடு பட்டுள்ள இரு கட்சியாரும், தத்தம் வழக்கை எடுத்துக் கூறுமாறு வாய்ப்புக் கொடுக்கப்படுவதன் மூலமாக, மேற்படி கருத்து நிறைவேற்றப்படுகிறது எனவே, மேற்படி விதிகள் கடைப்பிடிக்கப்படுதலை உறுதிப்படுத்துவதில் எந்த இடர்ப் பாடும் இருக்க முடியாது. ஆனால், ஓரவஞ்சகம் என்ற மனப் பான்மை (bias) தோன்றி, ஓரஞ்சாராத தீர்ப்பு வழங்கப் படுவதைத் தடுத்தல் கூடும்; மேலும் எந்த ஒரு ஆளும் தான் சம்பந்தப்பட்டிருக்கிற வழக்கில் தானே நீதிபதியாக இருத்தல் கூடாது என்பது இயற்கை நீதியின் கொள்கை களுள் ஒன்று ஆகும். ஒரு தனிப்பட்ட (அரசாங்க அலுவலில்லாத) ஆளுக்கும் (private individual) ஒருஅரசாங்க அதிகாரிக்கும் இடையே ஒரு வழக்கு தோன்றுமானால், அதில் தீர்ப்பு வழங்கப்படு முன்பாக, அந்த வழக்கு வெளிப் படையாக, ஒரு ஆட்சித்துறை நீதிமன்றத்தின் முன்பாகவோ அல்லது ஒரு அரசாங்க விசாரணைக் குழுவின் முன்பாகவோ (public inquiry) விசாரணை செய்யப்படுவதற்குச் சாதாரண மாக வகை செய்யப்படுகிறது. இதில் வழங்கப்படும் தீர்ப்பு

அரசாங்க அதிகாரியால் இறுதியாகத் தீர்மானிக்கப்பட வேண்டிய ஒன்ருக இருக்குமானுல், இதில், 'அரசாங்கத்தின் நோக்கத்தை ஒட்டியே, தனி ஆளின் நோக்கத்துக்கு மாருக, தெளிவாகத் தெரியக்கூடிய ஓரவஞ்சகத்துடனேயே, ஒரு தீர்ப்பை அரசாங்க அதிகாரி வழங்கக்கூடும்' என்று எதிர் வழக்காடுகின்ற தனி ஆள் எண்ணுகிறபடி ஒரு இடர்ப்பாடு எப்பொழுதும் தோன்றும். (மக்களுக்கு நன்மை செய்கின்ற) ஒரு பொதுப்பணியை நடத்தும்போது, அதில் தோன்றுகிற வழக்கு, 'அது தனியார் நலன்களுக்கு முரணுக இருக்கிறது' என்ற ஒரே காரணத்திஞல் மட்டுமே, அந்தப் பணியை செய்வதற்குப் பொறுப்பு ஏற்றிருக்கும் ஆட்சித் துறையி னுடைய, பொதுவான ஆட்சி இயல்பான பொறுப்பினின்றும் தனியாகப் பிரித்துவிடப்படக் கூடாது. இந்த ஒரு காரணத்திற்காகவே, பல நிலைமைகளிலும், வழக்கைத் தீர்ப்பதற்கு ஒரு சுதந்திரமான விசேட நீதிமன்றத்தைப் பாராளுமன்றம் ஏற்படுத்தியுள்ளது. ஆனுல் ஒரு அமைச்சர், தீர்ப்பு செய்வதற்குக் கடமைப்பட்டவராக இருக்கும்போது, தான் வழங்கும் தீர்ப்பு சரியானதே என்று காட்டுவதற்குரிய காரணங்களை விளக்கவேண்டுமென்பது முக்கியமானது. இவ்வாறு செய்வதன் மூலமாக மட்டுமே, அவர் வழக்கில் சம்பந்தப்பட்ட தனிக்குடி ஆளின் விவாதங்களைக் (arguments) கவனமாகக் கேட்டார் என்று அவருக்கு நிறைவு ஏற்படும்படிச் செய்ய முடியும். அந்த அமைச்சர் பொதுமக்கள் நலன் என்ற ஒன்றை மட்டுமே காரணமாகக் காட்டித் தனது தீர்ப்புச் சரியானதே என்று கூற முயன்ருலும், அவர் மேற்கூறிய வகையில் காரணம் காட்டுதல் வேண்டுமென்பது மிகவும் முக்கியமாகும். வெறும் விளக்கங்கள் மட்டும் போதா; அதிகாரத்தைத் தகாத வழியில் கையாளுதல் என்பது, அவ் வதிகாரத்தைக் கையாள வேண்டிய கடமையில்லாத ஒரு நிலைமையினின்றும் தோன்றலாம்; ஆனுல் மேற்கூறிய வாறு காரணம் காட்டுதல் தகாத வழியில் அதிகாரம் கையாளப்படுதலைத் தவிர்த்தல் கூடும்.

நீதி வழங்கித் தீர்ப்பு செய்யும் அலுவலில் ஓரவஞ்சகம் தோன்ருமல் தடுக்க முயலுகிற, இயற்கை நீதியின் விதியைத் திட்டவட்டமாக வரையறை செய்தல் கடினமான காரியமாக இருக்கலாம்; அப்படியாயின் வேறு சில விதிகள் இருக்கின்றன. ஆனுல், அவற்றின் வடிவமோ இன்னும் தெளிவாகத் தெரியப் படக்கூடாதவாறு இருக்கிறது. அரசாங்க விசாரணைகளிலே மறுப்புகள் எடுத்துக் கூறப்படாவிட்டால், முற்காலத்தில்

ஏற்பட்ட நிலைமையைப்போல, ஒரு கட்சி மற்றக் கட்சியினுடைய நோக்கங்களைப் பற்றி யாதொன்றும் அறிய முடியாத நிலைமை ஏற்பட, அப்பொழுது அந் நிலைமை இயற்கை நீதியோடு எந்த அளவில் ஒட்டியதாக இருக்கும்? இந்த விஷயங்களெல்லாம் பிராங்க்ஸ் கமிட்டியின் பரிந்துரைகளுக்கு இலக்கான விஷயங்களில் அமைந்து இருந்தன. இத் தீர்ப்புக்களைச் செய்வதில் அரசாங்கத் துறைகள் தங்களுடைய துறைச் சார்பான முறைகளைக் கையாளுகின்றன; அத்தகைய முறைகள் முழுவதும் மேலும் தெளிவாக வெளிப்படுத்தப் படுதல் வேண்டுமென்று, மேற்படிக் குழுவினர் விரும்பினர். இவர்கள் செய்த பரிந்துரைகள் ஏற்றுக் கொள்ளப்பட்டன. அவை யெல்லாம் சம்பந்தப்பட்ட அரசாங்கத் துறைகளினுல் செயலிலும் கொண்டுவரப்பட்டுள்ளன. ஆனுல், அந்தப் பரிந்துரைகளெல்லாம், இக் குழுவினுல், எடுத்துக் கொள்ளப் பட்ட பல்வேறு வகைப்பட்ட செயல்விதிகளைப் பற்றி மட்டுமே கூறின.

ஆட்சித் துறையின் செயல்களின்மீது கட்டுப்பாட்டை நீதிமன்றங்கள் கையாளுவதில் தோன்றும் கஷ்டமெல்லாம் பெரும்பாலும் எதனுல் தோன்றுகிறதென்றுல், நீதிமன்றங்களின் செயல் முறையைப்பற்றி நாம் பின்னர் ஆராயும் போது நாம் காணுகிறவாறு, எது ஒரு நீதி வழங்கும் அதிகாரம் என்பதைப்பற்றி நீதிமன்றங்கள் அளிக்கும் விளக்கத்திலிருந்தே தோன்றுகிறது.[1] பொதுச் சட்டத்தைப் பொறுத்த வரையிலும், இயற்கை நீதியைப் பற்றிய பழைய கொள்கைகள், சாதாரண நீதிமன்றங்களில் நீதி வழங்கும் செயலிலும், மாஜிஸ்ட்ரேட் நீதிமன்றங்களிலே குற்றச் சட்டங்கள் (criminal laws) செயல்படுத்தப்படுவதிலும், கையாளப்படுகின்றன; இந்த நீதிமன்றங்களிலிருந்தே மேல் முறையீட்டின் மூலமாக உயர் நீதிமன்றங்களினுல் மறுபரிசீலனை செய்யப்படுவதற்கு உரிய (review) வழக்குகள் பெரும்பாலும் தோன்றுகின்றன. இதைப்பற்றி ஐயப்பாடு எதுவும் இல்லை. முதலில் உள்ளூர் அரசாங்கமும், பின்னர் நடு அரசாங்கமும் பாராளுமன்றத்திலிருந்து அதிகாரங்களைப் பெற்றிருக்கின்றன. எனவே, தனி மனிதருடையை உரிமையானது தீர்ப்புக்கு உரியதாக இருக்கிற ஒரு வழக்கிலே, கேள்வியின் இரு புறங்களையும் சரிவர ஆராயாமல் தீர்ப்புக் கூறப்படாமலிருக்கும் பொருட்டு, நீதிமன்றங்கள் இயற்கையான நீதியின் கொள்கைகளைக் கையாளுமாறு கேட்டுக்கொள்ளப்பட்டன. ஒருஆட்சித்

[1] பக்கம் 139ஐப் பார்க்கவும்.

துறையின் தீர்ப்பு செய்யப்படு முன்பாக, இரு கட்சியின் கருத்துக்ளும் கேட்கப்படுதல் வேண்டும் என்ற விதியை மீண்டும் எடுத்துக் கையாளுதலின் மூலமாக, மேலே குறிப் பிட்ட நோக்கம் அல்லது செயல் நிறைவேற்று. எனவே, ஒரு சில குறிப்பிட்ட வகையான ஆட்சித்துறையின் செயல் களைச் செய்யும் முன்பாக, நீதிமன்றத்தின் செயல்முறை கையாளப்படுதல் வேண்டுமென்பது ஒரு நிபந்தனையாக (condition) ஆயிற்று.[1] ஒரு மனிதருடைய உடைமை பறிக்கப் படுவதற்குப் பாராளுமன்றத்தினுல் வெளிப்படையாக அதிகாரம் கொடுக்கப்பட்டபோதிலும், குறிப்பிட்ட அந்த மனிதருக்கு இது பற்றி முன்னறிவிப்புக் கொடுக்கப்பட்டிருந்தா லொழிய — அவருடைய உடைமை பறிக்கப்படுதல் கூடாது என்று அவர் மறுத்துக் காரணம் காட்டுவதற்கு அவருக்கு வாய்ப்புக் கொடுக்கப்பட்டிருந்தாலொழிய—அவருடைய உரிமை பறிக்கப்படுவதற்கு இசைவு கொடுக்க நீதிமன்றம் விரும்பாமலிருந்தது. இதற்கு முதலில் ஒரு எடுத்துக்காட்டாக இருந்தது, கூப்பர் என்பவருக்கும் வேண்ட்ஸ்வொர்த் பணிக் கழகத்துக்கும் இடையே தோன்றிய ஒரு வழக்கு ஆகும்.[2] இதில் வாதி (plaintiff) தான் ஒரு வீடு கட்டப்போவதாக மாவட்டக் கழகத்துக்குச் சட்டப்படியாக அறிவிப்புச் செய்யத் தவறிய காரணத்தினுல், அவர் ஓரளவு கட்டி முடித்திருந்த வீட்டை இடித்துத் தள்ளிவிடுவதற்கு, மாவட்டக் கழகத்துக்கு அதிகாரம் இருந்தது. இவ்வாறு இருந்தாலும் மாவட்டக் கழகமானது வாதிக்கு ஒரு முன் அறிவிப்புக் கொடுத்திருத்தல் வேண்டுமெனவும், முழுவதும் கட்டி முடிக்கப் படாத கட்டிடத்தை இடிப்பதற்குத் தங்களுக்கு உரிய அதிகாரத்தைக் கையாளு முன்பாக, அவர்கள், வாதி தனது காரணங்களை எடுத்துத் தங்களிடம் சொல்லுவதற்கு உடன்பாடு அளித்திருத்தல் வேண்டுமென்றும், நீதிமன்றம் தீர்ப்பளித்தது. ஒருவருக்கு எதிராக எடுக்கப்படும் நடவடிக்கையானது நீதி மன்ற இயல்போடு இல்லாமலிருக்கும்போது, குறிப்பிட்ட அந்த ஆள் கூறும் காரணங்கள் கேட்கப்படாமல், அவர் தண்டிக்கப்பட லாகாது என்ற நிலைமை அண்மைக் காலம் வரையிலும் நீதிமன்றங்களால் கையாளப்பட்டு வந்தது. இந்தப் பொருளைப் பற்றிய முக்கியமான வழக்கு உள்ளூர் அரசாங்கக் கழகத்துக்கும் ஆர்லிட்ஜ் என்பவருக்கு மிடையே தோன்றிய

[1] H. W. R. Wade எழுதிய Quasi-Judicial and its Background என்ற நூலையும் (பக்கம் 216), The Twilight of Natural Justice (பக்கம் 103) என்ற நூலையும் பார்க்கவும்.

[2] Cooper v. Wandsworth Board of Works, 1863.

தாகும். ஒரு சட்ட நீதிமன்றத்தைப்போல நடந்துகொள்ள வேண்டிய தேவை ஒரு ஆட்சியாளருக்கு இல்லாவிட்டாலும், அல்லது அவர் திட்டவட்டமான சாட்சிக்குரிய விதிகளை ஒட்டி நடந்துகொள்ளவேண்டிய தேவை இல்லாவிட்டாலும், நீதிமன்றங்கள் நீதி வழங்குமாறு செய்வதோடல்லாமல், நீதி வழங்கப்படுமாறு பார்த்துக் கொள்ளவும் செய்யும் என்பதை மேற்படி வழக்கு காட்டுகிறது. எனவே, அலுவலர்கள் தங்களுக்கு அனுப்பப்படும் கேள்வியை ஓரவஞ்சகமில்லாமல் தீர்த்தல் வேண்டுமென்பதும், மேலும், அவர்கள் சம்பந்தப் பட்ட கட்சியினருக்குப் போதிய அளவில் தத்தம் வழக்குகளை உரைத்தற்கு ஒரு வாய்ப்பு அளித்தல் வேண்டுமென்பதும், ஆனால், ஆட்சியாளர் தனது குறிப்பிட்ட சொந்தச் செயல் முறைகளைப் பின்பற்றலாமென்பதும், அவர் ஒரு நீதிமன்றம் கையாளுகிற செயல் முறைகளை அப்படியே நுட்பமாகப் பின்பற்ற வேண்டியதில்லை என்பதும் பொருளாகின்றன. இந்த நிலையில் ஒரு நீதிமன்றத்தில்கூடச் சான்று கூறுதல் என்பது வாய்மொழி வகையாகச் சில சூழ்நிலைகளில் கொடுக்கப்பட வேண்டியதில்லை என்பதை நாம் நினைவில் இருத்தல் வேண்டும். இரண்டாவது உலகப் போரை அடுத்த ஆண்டுகளிலே பலதடவைகளில் தனிக்குடி யாட்களுக்கும் அரசாங்க அதிகாரிகளுக்கும் இடையே தோன்றிய வழக்குகளில் நீதிமன்றங்கள் தலையிடுவதற்கு நீதிமன்றங்கள் விருப்பமில்லாமல் இருந்தன.[1] ஆனால் இத்தகைய ஒரு இயல்பு மறைந்து வருகிறதென்றும், நீதி மன்ற முறையை ஒட்டிச் செயல்பட வேண்டுமென்ற கடமையின் பொருள் நீதிமன்றங்களால் மீண்டும் விரிவாக வலியுறுத்தப்படுகிறது எனவும் காட்டும் அறிகுறிகள் தோன்றியிருக்கின்றன. 'நமக்குத் தெரிந்தவரையில், சரியான கருத்து என்னவென்றால், நீதிமன்ற முறையை ஒட்டி நடத்தல் என்ற கடமையானது, மிகப் பரந்த பல்வேறு வகையான சூழ்நிலைகளில் தோன்றக்கூடும் என்பதும், அத்தகைய சூழ்நிலைகளையெல்லாம் ஒன்று விடாமல் வரை யறுத்துக் கூறுவது இயலாத காரியம் மட்டுமல்லாமல்,

[1] குறிப்பாக பிராங்க்லின் என்பவருக்கும், நகர நாட்டுப்புற அமைப்பு அமைச்சருக்கும் 1948-ல் ஒரு வழக்குத் தோன்றிற்று. அதில் ஒரு புதிய பட்டணம் அமைப்பதற்கு வேண்டிய நிலத்தை அல்லது மனையைத் தேர்ந்தெடுத்தல் முழுவதும் ஒரு நிர்வாகக் குழுவின் முடிவு என்று கருதப்பட்டது. 1915-ல் நாக்குடி அலி என்பவருக்கும், ஜயரத்னே என்பவருக்கும் இடையே தோன்றிய ஒரு வழக்கில், போர்க்காலத்தில் துணி விற்பனை செய்வதற்காக வழங்கப்பட்ட உரிமையைத் (licence) தள்ளுபடி செய்வதில், நீதிமன்றத்துக்கு உரிய முறையில் நடக்கவேண்டிய கடமை அரசாங்க அதிகாரிக்கு இல்லை என்று கூறப்பட்டது.

வேண்டாத காரியமாகவும் இருக்கிறது என்பதும் ஆம். சுங்கத் தீர்வை தண்டும் உரிமையை வழங்கும் நீதிபதிகள் ஒருஆணையை நிறைவேற்றும் செயலை மட்டுமே செய்கின்றனர்; இந்த நிலையில் ஒரு நீதிமன்றம் செயல்பட்டாலொழிய, அது செய்யும் முடிவு ஒரு நீதிமன்றத்தின் தீர்ப்பாக இருக்குமானால், அது நீதிமன்ற முறையை ஒட்டியே செயல்பட வேண்டிய தெளிவான கடமை அதற்கு உண்டு. இதற்கு மாறாக, முடிபானது ஒரு ஆட்சித் துறைக் குழுவினுடையதாகவும், அது முழுவதும், அல்லது ஓரளவில் கொள்கையைப் பொறுத்த கேள்விகளால் (questions of policy) ஆக்கப்பட்டும் இருக்குமானால், அப்பொழுது நீதிமன்ற முறையை ஒட்டிச் செயல்பட வேண்டிய கடமை, அந்த முடிபைச் செய்கின்ற, அல்லது அந்த முடிபுக்கு வருகின்ற செயலிலேயே வருகின்றது. இவ்வாறு முடிபைச் செய்யும் பொருட்டுச் சம்பந்தப்பட்ட ஆட்சிக் குழு சில திட்டங்களையும், சில சான்றுகளையும் ஆராய வேண்டியிருந்தால் அப்பொழுது அந்த விசாரணை அல்லது ஆய்வு நடக்கும்போது, நீதிமன்ற இயல்பை ஒட்டிச் செயல்பட வேண்டிய கடமை இருக்கிறது.'

மேற் கூறப்பட்ட எடுத்துக்காட்டு ஒரு வழக்கில் கூறப்பட்ட தீர்ப்பிலிருந்து எடுக்கப்பட்டது.[1] எந்த அதிகாரத்துக்கு எதிராக வழக்குப் போடப்படுகிறதோ, அல்லது எதிர்ப்புக் காட்டப்படுகிறதோ, அந்த அதிகாரமானது சான்றுகளைமட்டுமே அடிப்படையாகக் கொண்டு, அதற்குப் புறம்பான கொள்கைபற்றிய கேள்விகளை அடிப்படையாகக்கொள்ளாமல் தீர்க்கப்படுவதற்கு உரியதாக இருந்தால், அப்பொழுது நீதி மன்றங்கள் ஒரு ஆட்சித் துறைக் குழுவின்மீது தங்களுக்கு உள்ள கட்டுப்பாட்டு அதிகாரத்தைக் கைவிட மனமில்லாமல் இருக்கின்றன. இதனையே மேற்படி தீர்ப்பிலிருந்து எடுக்கப்பட்ட பகுதி காட்டுகிறது. ஒரு சட்ட உதவிக் குழுவானது கொள்கை பற்றிய கேள்விகளோடு எவ்வகையிலும் தொடர்பு உடையது அன்று; எனவே, அது ஒரு விண்ணப்பத்தின்மீது தீர்ப்பு வழங்கும்போது, குறிப்பிட்ட விஷயத்திலுள்ள உண்மைகளை மட்டுமே கருத்திற்கொண்டு, நீதிமன்ற இயல்புக்கு ஏற்பச்

[1] அரசிக்கும் மாஞ்செஸ்ட்டர் சட்ட உதவிக் குழுவுக்கும் இடையே 1952-ல் தோன்றிய வழக்கு (The Queen v. Manchester Legal Aid Committee). இங்கு சட்ட உதவிக் குழு ஒன்று உதவிசெய்யும்படிக் கேட்டு ஒரு சான்றிதழ் வழங்க, அக் குழுவின் முன்னர் தீர்க்கப்படுதற்கு எந்த ஒரு வழக்கும் வராவிட்டாலும், அது நீதிமன்றத்தின் இயல்பை ஒட்டியே செயல்படவேண்டுமென்று தீர்ப்புக் கூறப்பட்டது.

செயல்பட வேண்டும். இதற்கு நேர்மாருக ஒரு ஆட்சியாளரால் தீர்க்கப்படவேண்டிய பல விஷயங்களும் கொள்கை பற்றிய கேள்விகளோடு தொடர்புடையனவாக இருக்கின்றன. இத்தகைய கொள்கைபற்றிய கேள்விகளோடு தொடர்புடைய விஷயங்களைப்பற்றி ஆட்சி நிறுவனத்திற்கு முரணுன வகையிலோ, அல்லது உடன்பட்ட வகையிலோ இருக்கக் கூடிய ஒரு தீர்ப்பை வழங்குவது ஒரு சட்ட நீதி மன்றத்தின் வேலை அன்று. ஒரு தீர்ப்பைச் செய்யும் கடமையைப் பாராளு மன்றமானது ஆட்சியாளரிடத்தில் விட்டு இருக்கின்றது. ஆட்சியாளர் தனது அதிகாரத்தை அளவுக்கு மீறிக் கையாளும் பொழுதோ, அல்லது தகாத நோக்கத்துக்குக் கையாளும் பொழுதோதான் நீதி மன்றமானது தலையிடும்படிக் கேட்டுக் கொள்ளப்பட முடியும். அப்பொழுதும் கூட நீதிமன்றமானது தனது சொந்தத் தீர்ப்பை ஆட்சியாளரின் தீர்ப்புக்குப் பதிலாக நிலைநிறுத்த முடியாது; அது ஆட்சியாளரின் செயல் சட்ட பூர்வமானது அன்று என்று தீர்ப்பளித்து அதனைத் தள்ளி விடுதல் மட்டுமே செய்யலாம்.

பொதுமக்கள் எல்லாரும் ஆட்சித்துறையின் (administrative) இயல்புக்கும், நீதி மன்ற இயல்புக்கும் இடையே உள்ள நுட்பமான சிறு வேறுபாடுகளை யெல்லாம் அறிவதில் ஈடுபாடு உடையவர்களாக இருப்பதில்லை. ஒரு உள்ளூர் அதிகாரி ஒரு குடியாளின் வீட்டைக் கைப்பற்றும்போது, அல்லது அவருடைய நிலத்தைப் பறிக்கும்போது, தன்மீது தவருன நடத்தைக் குற்றம் அவரால் சாட்டப்பட்டு அதற்காகச் சட்டப்படியான முறையில் அல்லாமல், அதிகாரியிஞல் அபராதம் விதிக்கப்பட்டதுபோல மிகவும் துன்பப்படலாம். மேற்படி ஆட்சியாளரின் செயல் முடிவானதாக ஆவதற்கு முன்னரே, அந்தக் குடிஆள், ஒரு நீதி மன்ற இயல்புக்கு ஒத்த முறையில் தனது கருத்தை எடுத்து ஆட்சியாளரின் முன் கூறுவதற்கு உடன்பாடு அளிக்கப்பட்டால், 'இயற்கை நீதியின் விதிகள் கடைப்பிடிக்கப்படவேண்டுமென்ற நீதி மன்றங்களின் வற்புறுத்தல், மேற்படி குடிஆளின் துன்ப உணர்ச்சியைக் குறைப்பதற்கு வெகுவாகத் துணை செய்யும்.

ஆட்சித் துறைச் சட்டம்; அதில் நீதிமன்றக் கட்டுப்பாடு கையாளப்படும் வகைகள்: சட்டத்திஞல் ஆணையின் மூலம் கொடுக்கப்படாத ஒரு ஆட்சிச் செயலைச் செயல் விதிகளாக உள்ள காப்புக்களின் மூலம் (procedural remedies) நீதி மன்றங்கள் கட்டுப்படுத்துகின்றன. இத்தகைய செயல்

விதிகளான காப்புக்களைப் பற்றி விவரமாக நாம் இங்கே எடுத்துக் கூறுமல், நீதிமன்றங்களினுடைய மிகவும் தனிப்பட்ட நுண்ணிய செயல்முறைகளைச் (highly technical process) சிறிது விளக்குதல் வேண்டும். இந்த விளக்கம் அரசாங்க அதிகாரத்தைப் புரிந்துகொள்ளுவதில், 'நீதிமன்ற இயல்பு' (judical) என்பதற்குரிய பொருளுக்கு ஏன் மிகுந்த முக்கியத்துவம் அளிக்கப்படுகிறது என்று அறிய உதவியாக இருக்கும். சிறைபிடிக்கப்பட்டவரை நீதி மன்றத்துக்குக் கொண்டுவரும் ஆணையானது (writ of habeas corpus) நீதிபதிகளுக்குச் 'சட்டத்தின் அமைப்பினுல் ஆணையின் மூலம் கொடுக்கப்படாத ஒரு நடவடிக்கையைத் தள்ளி விடவும், அவ்வாறு ஆணையின் மூலம் கொடுக்கப்படாத ஆட்சித்துறை இயல்பான அரசாங்க நடவடிக்கையை முழுவதும் தடுக்கவும், அல்லது கண்காணிக்கவும் கூடிய வழிகளைப் பெயரளவில் இல்லாவிட்டாலும் நடைமுறையில் உண்மையில் கொடுக்கிறது,' என்பது டைசியின் கருத்து ஆகும். இந்தப் பாதுகாப்பைப் பற்றியே அவர் முக்கியமாகக் கவனித்தார்; ஏனெனில், இதுவே தனி ஆள் சுதந்திரத்துக்கு முடிவான பொறுப்பாக இருக்கிறது. அவருடைய காலத்தில் இருந்தவையும், சட்டத்திஞல் அளிக்கப்பட்ட அதிகாரங்களைக் கையாளுவதில் ஆட்சியாளரின் செயலைக் கட்டுப்படுத்தவும் மறு பரிசீலனை செய்யவும் கூடியவையும் ஆன, மற்ற விசேட அதிகார ஆணைகளை (prerogative writs) அவர் ஆராயாமல் விட்டுவிட்டது வியப்பாக இருக்கிறது. அவர் ஆட்சியினைப் பற்றி முழுவதும் ஆய்வு செய்வதற்கு இணங்கியிருந்தால், இப்பொழுது நீதி மன்ற ஆணைகள் என்று குறிப்பிடப்படுகிற தடை ஆணை (prohibition), வழக்கை மறுபரிசீலனைக்கு உயர் நீதி மன்றத்துக்கு அனுப்பச் செய்யும் ஆணை (certiorari), ஆட்சி அலுவலரை ஒரு கடமையைச் செய்யும்படி கட்டுப் படுத்தும் ஆணை (mandamus) முதலியவற்றையும்பற்றிக் கட்டாயமாக அவர் கூறியிருப்பார்.

தடை ஆணையின் முக்கியமான நோக்கம் என்னவெனில், ஒரு கீழ்த்தர நீதி மன்றமானது, தனது நீதி வழங்கும் அதிகாரத்தை அளவு கடந்து கையாளவோ, அல்லது இயற்கை நீதியின் விதிகளை மீறி, அதன் மூலமாகச் சட்ட பூர்வமான செயல்முறையைத் தகாத வழியில் கையாளவோ செய்தால், அதை ஒரு உயர்தர நீதி மன்றத்தின் அரசியாரின் நீதிபதிகள் அடங்கிய பிரிவின்மூலம் தடுப்பதேயாகும்; கீழ்த்தர நீதிமன்றம் என்பது மாஜிஸ்ட்ரேட் நீதிமன்றத்தையும்,

சிறு வட்டார நீதி மன்றங்களையும் மட்டுமல்லாமல் (county courts), ஆட்சித்துறை நீதிமன்றங்களையும் குறிக்கும். இதே போலவே வழக்கை மறுபரிசீலனைக்காக உயர்நீதிமன்றத்துக்கு அனுப்பக்கோரும் ஆணையானது (certiorari) கீழ்த்தர நீதி மன்றத்தின் பதிவேடுகளில் (records), காணப்படுகிறபடி சட்டத்தில் செய்யப்பட்ட தவற்றை மறுப்பதற்காகவோ, அல்லது நீதி வழங்கும் அதிகாரத்தைத் தகாத வழியில் கையாளுவதையும், அல்லது அளவு கடந்து கையாளுவதைம் நீக்குவதற்காகவோ, அல்லது நேர்மையான விசாரணை கிடைக்கும்படி செய்வதற்காகவோ உயர்நீதிமன்றத்துக்கு ஒரு கீழ்த்தர நீதிமன்றத்திலிருந்து ஒரு வழக்கை மாற்றும்படி செய்கிறது. கட்டளையிடும் ஆணை (mandamus) என்பது ஒரு அரசாங்கக் கட்டளையைச் செய்யும்படிக் கட்டாயப்படுத்தி, உயர்நீதிமன்றம் விடுக்கும் ஆணை ஆகும். மற்ற ஆணைகளைப் போலவே இந்த ஆணையும் முழுவதும் நீதி மன்றத்தின் சமயோசித அதிகாரத்தின் பேரில் விடுக்கப்படவேண்டிய விஷயம் ஆகும். இந்த ஆணை ஒரு அரசாங்க அதிகாரியின் மீது நிலவரச் சட்டத்தினால் (statutory law) விதிக்கப்பட்ட ஒரு பொதுக் கடமை செய்யப்படுதல் வேண்டுமென்று கட்டாயப்படுத்துகிறது. ஆனால் இவ்வாணை விடுக்கப்படுதல் வேண்டுமென்று கோரி விண்ணப்பம் செய்பவர், அதில் கூறப்படும் கடமையானது, தனக்கு நேரடியாகச் செய்யப்பட வேண்டிய ஒன்று என்றும், அது அரசருக்கோ, பொது மக்களுக்கோ உரிய கடமை அன்று என்றும் காட்டுதல் வேண்டும். மேலும், இதற்கு ஏற்ற வேறொரு நிவாரணமுறை இருக்குமானால் (remedy), இவ்வாணை கிடைக்காது. இத்தகைய வரம்புகள் இவ்வாணைக்கு இருப்பதால், மற்ற ஆணைகளைவிட, இந்தக் கட்டளையிடும் ஆணையானது, பொதுக் காரியங்கள் நடத்தப்படுவதைப் பாதிக்கக் கூடிய ஒரு சில சுருங்கிய எண்ணிக்கையான வழக்குகளில் மட்டுமே கையாளப் படுகிறது.

தனி ஆளின் சுதந்திரத்தைப் பாதுகாத்தல் என்பதைப் பொறுத்த அளவிலே, மறு பரிசீலனைக்காக வழக்கை மாற்றும் ஆணையும், தடை ஆணையும் கையாளப்படுவதில்லை. இதற்குக் காரணம் என்னவென்றால், சிறை பிடிக்கப்பட்டவரை நீதி மன்றத்துக்குக் கொண்டுவரும் ஆணை (writ of habeas corpus) சிறைபிடிக்கப்பட்டது சட்டபூர்வமான செயலா என்ற பொதுவான பிரச்சினையைத் தோற்றுவிக்கிறது; ஆனால், மறு பரிசீலனைக்காக வழக்கை மாற்றக் கட்டளையிடும் ஆணை

யானது, சில குறிப்பிட்ட நீதிமன்றச் செயல் முறைகளை மறு பரிசீலனை செய்வதற்கு மட்டுமே கையாளப்படுகிறது; இதே போலவே, தடையாணை என்பதும், நீதிமன்ற இயல்பை ஒட்டிச் செயலாற்ற வேண்டிய ஒரு குழு, தனது நீதி வழங்கும் அதிகாரத்தை அளவு கடந்து கையாளுவதினின்றும், அல்லது அதைத் தகாத நோக்கத்துக்குக் கையாளுவதினின்றும் அதைத் தடுப்பதற்காகக் கையாளப்படுகிறது. எவ்வாறுயினும் இக்கால ஆட்சிஇயல் முறைகள், ஒரு ஆளின் உடல் சுதந்திரத்தைச் சட்டத்துக்கு ஒவ்வாத முறையில் பாதிக்கக்கூடிய விளைவை ஏற்படுத்துவதில்லை.[1] சில சந்தர்ப்பங்களில் காவல்துறை அதிகாரிகள் பொய்யான முறையில் ஒருவரைச் சிறைபிடித்தாலும் கூட, சட்டத்துக்கு ஒத்த முறையில் அயலவரைச் சிறைப்பிடித்தலைத் தவிர அரசாங்கத் துறைகளும், உள்ளூர் ஆட்சிக் கழகங்களும் சட்டத்தின் அடிப்படையிலல்லாமல் சிறைப்பிடித்து வைப்பதில்லை. ஒரு ஆளைச் சிறைப் பிடித்து வைக்கும் செயலை உடனேயே மறுப்பதற்கு உரிய ஒரு வழியாக, சிறைபிடிக்கப்பட்டவரை நீதி மன்றத்துக்குக் கொண்டுவரச் செய்யும் ஆணை (writ of habeas carpus) இருக்கிறது. மறுபரிசீலனை ஆணையும் (certiorari), தடையாணையும் (prohibition) விடுக்கப்படுதல் வேண்டுமானுல், நடவடிக்கையானது பாதுகாப்பை அளிப்பதற்காக ஒரு நீதி மன்றச் செயலின் வகையில் அடங்கியதாக இருத்தல் வேண்டுமென்ற கட்டாயம் இருப்பது போல, கட்டாயம் ஏதும் மேற்படி ஆணையில் இருக்க வேண்டுவதில்லை. ஆகவே, சிறை பிடிக்கப்பட்டவரை நீதி மன்றத்துக்குக் கொண்டுவரக் கட்டளையிடும் ஆணையானது சிறைக்கூட அலுவலருக்கு விடுக்கப்படுவதாகும். அவர் தண்டனை வழங்கும் நீதி மன்றத்தால் விடுக்கப்பட்ட ஒரு ஆணையின் பேரிலேயே (commital warrant) ஒருவரைச் சிறைப்பிடித்து வைத்திருக்கும்போது, அவர் நீதிமன்ற இயல்பை ஒட்டிச் செயல்படுபவராக எவ் வகையிலும் கூறவே முடியாது. அத்தகைய அலுவலருக்கு எதிராக மறு பரிசீலனை ஆணையோ, அல்லது தடை ஆணையோ விடுக்கப்பட மாட்டாது. (ஆளைக் கொண்டுவரச் செய்யும்) இந்த ஆணையானது பைத்தியம் பிடித்தவர்களைச் சிறைப் பிடித்து வைப்பது சட்டபூர்வமானதுதானு என்று ஆராய்ச்சி செய்ய உதவுகிறது. ஒரு இளம்பெண்ணை அவளுடைய பெற்றோர்கள்

[1] ஆனுல் அரசியாருக்கும், கட்டுப்பாட்டுக் கழகத்துக்கும் இடையே தோன்றிய வழக்கைப் பார்க்கவும் (Queen v. Board of Control, exparte Rutty, 1956).

கைவிட்டு விட்டபடியால், அவள் உள்ளூர் ஆட்சியாளரின் பாதுகாப்பில் வளர்க்கப்பட்டு வந்தாள். அவளைப்பற்றிய வழக்கே ருட்டியின் வழக்கு (Rutty's Case) ஆகும்; இதில் அவள் 17ஆவது வயதை அடைந்ததும், சித்த சுவாதீனமற்றவர்களுக்கான நிலையத்தில் வைக்கப்படுதல் வேண்டுமென ஒரு நீதி மன்ற ஆணை விடுக்கப்பட்டது. அந்த வயதை அடையும் வரையில் அவள், பெற்றோர்களால் கைவிடப்பட்ட குழந்தைகளைக் கவனிப்பதற்கு உள்ளூர் அர்சாங்க அதிகாரிக்குக் கொடுக்கப்பட்டிருக்கும் அதிகாரங்களின்படி, அவ்வதிகாரியின் பாதுகாப்பில் இருந்தாள். இந்த நோயாளியைப் பரிசோதித்த மருத்துவ அதிகாரி, அவள் மிகவும் சித்த சுவாதீனமற்றவளென்று கருதினர். அவருடைய கருத்து உண்மையா என்று மறுக்கவேண்டிய தேவையில்லை. ஆனல், மேற்படி ஆணை செய்யப்பட்டபோது, கைவிடப்பட்ட குழந்தையைப் பொறுத்தமட்டில்தான் அது கையாளப்பட வேண்டியதாக இருந்தது. அப்படியிருந்தும் மேற்படி மருத்துவ அதிகாரி, இந்தப் பெண் பாதுகாப்பில் வைக்கப்படுதற்காகவே, மேற்படி ஆணையை விடுக்கும் தவற்றைச் செய்தார். அந்தச் சமயத்தில், அவள் ஏவராலும் கைவிடப்பட்ட நிலையில் இல்லாமல் மேற்படி ஆணையை விடுப்பதற்கு எந்த அரசாங்க அதிகாரி கோரினரோ, அந்த அதிகாரியினுல் காப்பாற்றப்பட்டு வந்தாள். ஆனல், சட்டத்துக்கு மாருன ஒரு ஆணையின்படி அந்தப் பெண் சித்த சுவாதீனமற்றவர்களுக்கான ஒரு நிலையத்தில் இருந்தாள். சில ஆண்டுகள் கழித்து ஒரு அனுமதிச் சீட்டு அல்லது உடன்பாட்டுச் சீட்டின் மூலமாக மேற்படி நிலையத்திலிருந்து விடுவிக்கப்பட்டு, அந்தப் பெண் தனது வாழ்க்கைக்காக வேலை செய்து சம்பாதித்துக்கொண்டிருந்தாள். அவள் தனது நெருங்கிய உறவினர் ஒருவருடைய உதவியால், மேற்படி ஆணையைத் தள்ளுபடி செய்யும்படிக் கேட்டு உயர் நீதி மன்றத்துக்கு வெற்றியாக விண்ணப்பம் செய்து கொண்டாள். இந்த வழக்கின் விளைவு மிகவும் சுவையானது. எவ்வாறெனில், இவளைப் போலவே நிறையப் பேர்களை நோயாளிகள் எனப் பாதுகாப்பில் வைக்கும் பொருட்டு விடுக்கப்பட்ட ஆணைகளெல்லாம் பரிசீலனைக்கு உள்ளாயின. ருட்டியின் வழக்கிலே அளிக்கப்பட்ட தீர்ப்புக்கு மருத்துவத் துறையின் காரணம் இருந்திருக்கலாம்; அல்லது, இல்லாமலும் போகலாம். ஆனல் இதில் உறுதியாக மறுப்புக்கு இடமில்லாமல் நிலைநிறுத்தப்பட்டது என்னவென்றல், சட்டத்திற்கு ஒத்த வகையான முறையில்

அல்லாமல், ஒருவரும் தனது சுதந்திரத்தை இழத்தல் கூடாது என்பதே ஆகும்.

இதற்கு மாருக, ஒரு செயலைத் தடை செய்வதற்கு விடுக்கப்படும் ஆணையும், மறு பரிசீலனைக்கு வழக்கை மாற்றச் செய்யும் ஆணையும், தற்கால ஆட்சி முறையின் கட்டுப்பாட்டு முறைகளினுல் மிகவும் பாதிக்கப்படுகிற தனியாருக்கு உடைமையான நலன்களைப் பாதுகாப்பதற்கு மிகவும் ஏற்றவையாக இருக்கின்றன. நிலத்தைப் பயன்படுத்துவதைக் கட்டுப்பாடு செய்தல் என்பது அரசாங்கத்தின் கொள்கையாக இருக்கின்றவரையிலே இத்தகைய கட்டுப்பாடுகளெல்லாம் தனது நிலத்தையும், தனது பொருட்களையும் தான் அநுபவிக்கவும், வேருெருவருக்குக் கொடுக்கவும் ஒரு தனி உடைமையாளருக்கு இருக்கக்கூடிய உரிமைகளை எப்பொழுதும் பாதுகாத்துவந்திருக்கிற பொதுச் சட்டத்தோடு மாறுபட்டே இருக்கவேண்டும். இத்தகைய கட்டுப்பாட்டு விதிகளெல்லாம், பொதுச் சட்டக் கொள்கைகளோடு முரண்பட்டிருக்கிற நிலவரச் சட்டங்கள் (statutes) துல்லியமாக விளக்கம் செய்யப்படுதற்குத் துணையாக இருக்குமாறு நீதி மன்றங்களெல்லாம் அவற்றைக் கையாளுகின்றன. இம் முறையானது வெகுவாகக் கையாளப்படுகிறபடியால், இத்தகைய பாதுகாப்புகள் (remedies) குடி ஆளுக்குக் கிடைக்காதபடி செய்யக் கூடிய பலவகைப்பட்ட வாய்பாடுகளின் மூலமாக (formulas), நீதி மன்றங்களினுடைய கட்டுப்பாட்டு அதிகாரத்தினின்றும் விலக்கு அளிக்கக்கூடிய சில நிலவரச் சட்டங்கள் இயற்றப்படுவதும் சாதாரணமான ஒரு செயலாக ஆகிவிட்டது. ஆனுல், நீதி வழங்கும் அலுவலிலே மறுபரிசீலனை ஆணையை (certiorari) விலக்கக்கூடிய வாய்பாடு எதுவும் நிலவரச் சட்டத்தின் மூலமாக வகுக்கப்பட்டது என்பது ஐயத்துக்கு இடமானதாகும். ஒரு ஆணையோ (order) அல்லது தீர்மானமோ எந்த நீதிமன்றத்திலும் மறுக்கப்பட முடியாதது என்றும், உயர்தர நீதிமன்றத்தின் அதிகாரங்களில் எதையேனும், இது போன்ற சொல்அமைப்புகளின்மூலம் விதி இருக்கிறது என்றும், நடைமுறையில் இருக்கிற ஒரு நிலவரச் சட்டத்தின் விதி கூறலாம்; அவ்வாறு அது கூறினுலும், 1958ஆம் ஆண்டின் விசேட நீதிமன்றங்களையும் அரசாங்க விசாரணைகளையும் பற்றிய சட்டத்தின் 11ஆம் பிரிவின்படி (Section 11 of the Tribunals and Enquiries Act, 1958) அத்தகைய நிலவரச் சட்டத்தின் விதியினுல் மறு பரிசீலனைக்குரிய ஆணையின் வழக்குபற்றிய நடவடிக்கைகளை உயர்நீதிமன்றத்துக்கு

மாற்றுவதைத் தடுக்கவோ, கட்டளைக்குரிய ஆணைகளை விடுப்பதற்கு (orders of madamus) அவ் வுயர்நீதிமன்றத்துக்கு இருக்கிற அதிகாரங்களைத் தடுக்கவோ முடியாது. இத்தகைய ஒரு விதி மேற்படிச் சட்டத்தில் சேர்க்கப்பட்டதன் விளைவு என்னவென்றால், நீதி வழங்கும் அதிகாரத்தைப் பொறுத்த வரையிலே மறு பரிசீலனை ஆணை விடுக்கும் அதிகாரத்தை விலக்க வேண்டுமென்ற நோக்கம் பாராளுமன்றத்துக்கு இருக்கிறது போலும் என்ற தவறான எண்ணத்தை அல்லது ஐயத்தை நீக்குவதே ஆகும். இந்த விதியின்படி மறு பரிசீலனைக்குரிய ஆணை கிடைப்பது என்பது, நீதி வழங்கும் அதிகாரத்துக்குரிய விஷயங்களுக்கு மட்டுமே என்பது இல்லை. மறுபரிசீலனை ஆணையும், தடையாணையும் எந்த வழக்கில் விலக்கப்பட்டதோ, அந்த மிகச் சாதாரணமான வழக்கு, ஒரு ஆட்சித் துறையின் செயல் சரியானதென்று முடிவுகட்டப்படும் பொருட்டு, அதனை மறுக்கக்கூடிய முறையை மேலும் சுருக்கமாக ஆக்கும் நோக்கத்தை உடையது. இந்த ஆணைகளினால் இவ் வழக்கில் நீதி வழங்கும் அதிகாரம் கையாளப்படுவதை மறுப்பதற்கு வேண்டிய அளவு கிடைக்கக்கூடிய நீண்டகால வரம்புக்கு மேற்படி வழக்கு உட்படாமல், அதைவிட விரைவான, மேற்படிச் சுருக்கமான மறுப்பு முறையின் மூலம் (summary method of challenge) இத்தகைய வழக்கு நிறுவப்படுகிறது.

மேற் கூறப்பட்ட ஆணைகள் (மறுபரிசீலனை, தடை) செயல்படுவதற்கு மிகவும் கடுமையான வரம்பு என்னவென்றால், எந்தக் குழு (body) எதிர்ப்புக்கு உள்ளாகிறதோ, அந்தக் குழுவுக்கு நீதிமன்ற இயல்பை ஒட்டிச் செயல்பட வேண்டிய கடமை இருக்கும்போதுதான், அந்த ஆணைகள் விடுக்கப்படக் கூடியனவாக இருக்கின்றன. முந்திய பிரிவிலே, மேற் கூறியவாறு நீதி மன்ற இயல்பை ஒட்டிச் செயல்பட வேண்டிய கடமை எது என்பதைப்பற்றி ஓரளவு விவாதிக்கப்பட்டது. அரசாங்கத்தால் செய்யப்பட வேண்டிய தீர்மானங்கள் பலவற்றையும் பொறுத்தமட்டில் அவற்றில் காணப்படும் வாசகத்தை எப்படி மாற்றினாலும் அவற்றை நீதிமன்ற இயல்பில் அல்லது நீதி மன்ற முறையில் அமைந்தவை என்று கூற இயலாது என்பது தெளிவு. இந்த விவாதத்தின் மற்றொருபுறமாக, குடிகளிடையே எழும் துன்பங்களுக்காக (civil injuries) ஒரு நடவடிக்கையை எடுக்கும் ஒரு உயர் நீதி மன்றத்தின் அலுவல்கள் முழுவதும் நீதிமன்ற முறையை ஒட்டியனவாகவே இருப்பதாக ஒருவரும்

மறுத்துக் கூறமாட்டார். இந்த மாறுபட்ட இரு முனைகளி லுள்ள நிலைகளுக்கு இடையிலே, நீதிமன்ற முறையை உடைய கடமை இருக்கிறதென்று வாதிட்டுக் கூறுவதற்கு ஏற்ற பல்வேறு வகையான மாறுபட்ட சூழ்நிலைகள் இருக்கின்றன என்பதே இந்தக் கேள்வியிலுள்ள ஒரு சிக்கல் அல்லது கஷ்டம் ஆகும். மான்செஸ்ட்டர் சட்ட உதவிக் குழுவைப் பற்றிய வழக்கின் தீர்ப்பிலிருந்து எடுத்துக் காட்டப் பட்ட சிறு பகுதியில் (பக்கம் 138) நீதிபதிகள் மதுபானம் விற்கும் உரிமையை அளித்தல் என்பது, முழுவதும் அமைச்சருக்கு உரிய ஒரு அதிகாரத்தைக் கையாளுவதாக எடுத்துக்காட்டப்பட்டது. ஆனால், இந்த எடுத்துக்காட்டு சரியா என்பது ஐயப்பாட்டுக்கு உரியது. மது விற்பனை உரிமை பற்றிய சட்டங்களைச் செயல்படுத்தும் பொறுப்பை ஏற்றிருக்கிற நீதிபதிகள், இது சம்பந்தமாகக் கொடுக்கப்படும் ஒவ்வொரு விண்ணப்பத்தையும், முழுவதும் கவனித்துத் தீர்மானிக்க வேண்டுமென்பதும், விண்ணப்பத்தைக் கொடுக்கும் ஆட்களை விசாரிக்காமல், எந்த ஒரு விண்ணப் பத்திலும் கேட்கப்பட்ட வேண்டுகோளை அளிப்பதோ, அல்லது மறுத்துத் தள்ளுவதோ கூடாது என்பதும் உண்மைதான். இந்த அளவுக்கு அவர்கள் நீதிமன்ற இயல்பை ஒட்டிச் செயலாற்றுவதற்கு ஒரு செயல்விதியைப் பின்பற்ற வேண்டிய கடமையில் இருக்கிறார்கள். நீதிமன்றங்களின் தீர்ப்புகளின் பொதுவான தன்மைகள் முன்னரே ஆராயப்பட்டன. அவை எவ்வாறு இருப்பினும், அத் தீர்ப்புகள், பல்வேறு வகைகளில் விரிவான ஆட்சிதுறைச் செயல்களைப்பற்றிக் கூறுகின்றன ஆகையால், 'எது ஒரு நீதிமன்ற இயல்புள்ள அலுவல்?' என்ற கேள்வியானது முற்சான்றுக் கோட்பாட்டை (doctrine of precedent) எவ்வளவில் சார்ந்துள்ளதோ அவ்வளவுக்கு அது ஒரு குறிப்பிட்ட நீதி மன்றத்தின் அமைப்பையும் பொறுத் திருக்கிறது என்று முடிவுகட்டத் தோன்றுகிறது. ஆனால், சட்டத்தின் ஆட்சி என்ற கருத்தைக் கையாளும் கோணத்தி லிருந்து பார்த்தால், இக் கேள்விக்கு விடை தெளிவாகக் காணப்படுகிறது. நீதி மன்றங்களின் தலையீடு ஒரு பாராளு மன்றச் சட்டத்தின் மூலமாகத் தவிர்க்கப்பட்டிருந்தால் அல் லாமல், அல்லது ஒரு அதிகாரமானது சமயோசித இயல்புள்ள அதிகாரமாக இருப்பதால், அவ் வதிகாரம் கையாளப்பட்டது சரிதானா என்று தீர்மானிப்பது தங்களுடைய கட்டுப்பாட்டு அதிகாரத்துக்கு அப்பாற்பட்டது என்று நீதிமன்றங்களே

விளக்கம் கொடுத்தாலல்லாமல், நீதி மன்றங்கள் சட்டத்தின் ஆட்சி என்ற மரபைப் பின்பற்றுகின்றன.[1]

நீதி மன்றத்தின் கட்டுப்பாட்டு அதிகாரம் வெளிப்படுவதற்கு வேறு இரு முறைகள் இருக்கின்றன. அவை ஒரு செயலை நிறுத்த உயர் நீதி மன்றம் இடும் ஆணையும், நீதிமன்றத்தின் அறிக்கையும் (injunction and judicial declaration) ஆகும். இதில் முற்கூறப்பட்டது, காப்பு முறை என்ற உண்மையான பொருளில் அமைந்த காப்பு ஆகும்; பிற்கூறப்பட்டது, அதன் பெயரிலேயே குறிப்பிடப்படுவதுபோல, சட்ட பூர்வமான நிலையைப்பற்றியதும், நேரடியாகச் செயல்படுத்தப்பட முடியாததுமான ஒரு அறிக்கை மட்டுமே ஆகும். உயர்நீதி மன்றமானது சட்டத்துக்கு மாருன முறையிலே செயல் படுகிறதென்ருே, அல்லது செயல்பட உத்தேசித்துள்ளதென்ருே கருதி, அதனுடைய தீர்ப்பைப் புறக்கணிப்பதற்கு எந்த ஒரு அரசாங்கக் குழுவும் துணியாது ஆகையால், இந்தப் பாதுகாப்பு முறை (அறிக்கை முறை) விரிவானதொரு நிவாரணம் அளிக்கக்கூடிய ஒன்ருக இருக்கிறது; நீதி மன்றங்கள் கற்பிதமான கேள்விகளுக்கு (hypothetical questions) அல்லது வழக்குகளுக்கு விடையளிக்க மாட்டா; அவ்வாறு செய்தால், அதன் பின்னர், அவற்றின் முன்னிலையில் உண்மையிலேயே அவ்வாறு (கற்பனை செய்யப்பட்டவாறு) வரக்கூடிய ஒரு வழக்கில் தீர்ப்பை முன்னதாகவே இவைகள் செய்துகொண்டதாக ஆகும்.

எவரொருவர் ஒரு அலுவலுக்கு உரியவராக இல்லையோ, அவர் அவ் வலுவலில் செயல்படுவதைத் தடுப்பதற்காக ஒரு செயல் நிறுத்த ஆணையை (injunction) உயர் நீதி மன்றம் வழங்கக் கூடும்.[2] ஒரு உள்ளூர் அரசாங்கத்தைத் தேர்ந்தெடுக்கும் ஒரு வாக்காளர், ஒரு உள்ளூர் ஆட்சிக் குழுவின் தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினராகச் செயல்படுவதற்கு ஒருவருக்கு உள்ள உரிமையை மறுத்தல் கூடும்.[3]

[1] நீதி மன்றக் கட்டுப்பாட்டின் வழிகளைப் பற்றிய விவரங்களுக்கு, Wade என்பவரும் Phillips என்பவரும் எழுதிய Constitutional Law, (ஐந்தாம் பதிப்பு), 2, 3ஆவது இயல்களைப் பார்க்கவும்; Hood Phillips எழுதிய Constitutional Law, இயல்5, Griffiths என்பவரும் Street என்பவரும் எழுதிய Principles of Administrative Law, இயல் 5ஐப் பார்க்கவும்.

[2] நீதியை வழங்கும் அலுவல் (1938ஆம் ஆண்டின் பலதரப்பட்ட விதிகள் சட்டம், 9ஆம் பிரிவு)—இந்தச் செயல் விதி, 'எந்தக் கட்டளையின் மீது' (Quo Warrants) என்ற ஆணையின் தன்மையைப் பற்றிய பழைய செய்தியை மாற்றுகிறது.

[3] Local Government Act, 1933, Section 84.

ஆனால் இந்தச் செயல்நிறுத்த ஆணை மிகச் சாதாரணமாக எப்பொழுது கையாளப்படுகிறதென்றால் ஒரு குடியாள், தன்மீது ஒரு அதிகாரி சட்டத்துக்கு மாருக நடவடிக்கை எடுக்கக் கருதியிருப்பதால், தான் சில தனிப்பட்ட துன்பங்களுக்கு உட்படுதல் கூடுமென்று அவர் காட்டும் போதும், அல்லது, அவ்வாருன நடவடிக்கை எடுக்கப்பட்டு விட்டதனுல், தான் துன்பம் அடைந்துவிட்டதாகவும், எனினும் அத்தகைய நடவடிக்கையைத் தடுப்பதற்குக் காலங் கடந்து விடவில்லையாகையால், மேற்படி அதிகாரியை இந்தக் காப்பு ஆணையின் மூலமாகத் (preventive order) தடுக்கும்படி அவர் கேட்டுக் கொள்ளும்போதும், இந்த (செயல் நிறுத்த) ஆணை கையாளப்படுகிறது. நகராட்சிக் கழகத்தின் நிதிகள் (borough funds) தவருன முறையில் செலவழிக்கப்படுவதைத் தவிர்ப்பதற்காக இது கையாளப்படுகிறது. ஒரு அரசாங்கக் குழு பொதுமக்களுக்குத் தீமை விளைக்கக் கூடிய செயலைச் செய்யுமானுல், அரசாங்க வழக்கறிஞர் (Attorney-General) தனது சொந்த முயற்சியின்பேரிலேயோ, அல்லது, தனக்கு இதுபற்றிச் செய்தி அறிவிப்பவர் கேட்டுக்கொள்ளுவதின் பேரிலேயோ, இதனைத் தடுப்பதற்கு நிறுத்தல் ஆணையைப் பெறுதல் கூடும். இதுபற்றிச் செய்தி அறிவிப்பவர், மேற்படி ஆட்சிக் குழுவின் செயலில், பொதுமக்களில் ஒருவர் என்ற முறையில் ஈடுபாடு உடையவராக இருந்தால் மட்டும் போதும்; மேற்படி செயலில் அவர் நேரான ஈடுபாடு எதுவும் கொண்டிருக்கவேண்டுமென்ற கட்டாயம் இல்லை. மேலும், இச் செயலைப்பற்றி நடவடிக்கை எடுப்பதா, வேண்டாமா என்பது அரசாங்க வழக்கறிஞருடைய சமயோசித அதிகாரத்தைப் பொறுத்தது. இவ்வகையான செயலின் செல்லுபடியாகும்தன்மை மறு பரிசீலனைக்குஉரிய ஆணையின் மூலமாகப் பரிசோதித்துப் பார்க்கப்பட்ட போதிலும், பொது மக்கள் உரிமைகள் மீறப்படுதலுக்கு வேறுவகையான தண்டனைகள் கொடுக்கப்படாமல், மேற்படி நிறுத்தல் ஆணையின் மூலமாக நடவடிக்கை எடுக்கப்படலாம். இதற்கு ஒரு எடுத்துக்காட்டு, ஒரு உள்ளூர்ச் சட்டத்தை மீறிய செயலுக்காக ஒரு மோட்டார் சொந்தக்காரர் தனது போக்குவரவுப்பணியை நடத்துவதினின்றும் தடுக்கப்பட்டபோது, பொதுப்பணிக்கான வண்டிகள் பற்றிய தற்காலச் சட்டங்களின்படி தோன்றியது. அவர் பல தடவைகள் மேற்படி சட்டத்தின்கீழ் மான்செஸ்டர் நகராட்சிக் கழகத்தினுல் வெற்றியாக வழக்குக்கு உட்படுத்தப்பட்டிருக்கிருர்; எனினும் அவர் தனது மோட்டார்களைத் தன் விருப்பப்படி நடத்துவது ஊதியம் தரும்

என்று தெரிந்துகொண்டார். இவ்வாறு இந்தச் சட்டத்திஞல் பொதுமக்களுக்கு அளிக்கப்பட்ட பாதுகாப்புகள் பயனற்றவையாகப் போய்விட்டபடியிஞலும், மேற்படி மோட்டார் சொந்தக்காரருடைய செயலிஞல் பொதுமக்களுடைய உரிமைகள் பாதிக்கப்பட்டதஞலும் (இந்த வழக்கில்) நீதிமன்றம், நிறுத்தல் ஆணையை (injunction) வழங்கிற்று.[1]

ஒரு அறிக்கையின் இயல்பை உடைய தீர்ப்பின் மூலமாக, உயர்தர நீதிமன்றத்தின் விதிகளில் ஆணை XXV-ல் விதி 5-ன்படி நிவாரணம் அளிக்கப்படக் கூடும்; இவ்விதி கூறுவதாவது:

'ஒரு அறிக்கையின் இயல்பை உடைய தீர்ப்பு அல்லது ஆணை கோரப்படுகிறது என்ற ஒரே காரணத்தால் மட்டுமே, எந்த நடவடிக்கையும் அல்லது செயல்முறையும் மறுப்புக்கு உரியதாகாது; மேலும் நீதி மன்றம் கட்சியினரைக் கட்டுப் படுத்தக்கூடிய அறிக்கைகளைச் செய்யலாம்; அதன் விளைவாகப் பின்னர் நிவாரணம் கோரப்பட்டாலும், கோரப்படாவிட்டாலும் இத்தகைய அறிக்கைகளை அது செய்யலாம்.' இந்த (அறிக்கை இயல்பான தீர்ப்பு என்ற) 'பாதுகாப்பு' முறை (remedy) காமன்வெல்த் நாடுகளிலும், ஐக்கிய அமெரிக்க நாட்டிலும், நிலவரச் சட்டங்களின் (statutory laws) செல்லுபடியாகும் தன்மையை எளிதாக விளக்கும்பொருட்டுக் கையாளப்படுகிறது. ஒரு கூட்டரசு அரசியலமைப்பிலே, கூட்டரசு அரசாங்கத்துக்கும், மாகாண அரசாங்கங்களுக்கும் இடையே தோன்றும் வழக்குகளிலே கையாளப்படுவதற்கு இது பொருத்தமாக இருக்கிறது. ஒரு வரிசெலுத்துபவருக்கும், அவருடைய உள்ளூர் அதிகாரிகளுக்கும் இடையே தோன்றும் ஒரு வழக்கைத் தீர்ப்பதற்கும், தங்களுடைய வழக்கிலே வன்செயலின் மூலமாகக் கட்டுப் படுத்தக் கூடிய ஒரு பாதுகாப்பைத் தேட வேண்டுவதில்லை என்று கருதிச் சட்டத்தைமட்டும் தீர்மானிக்கக்கூடிய இரண்டு உள்ளூர் அதிகாரிகளுக்குமிடையே தோன்றும் வழக்கைத் தீர்ப்பதற்கும் இது ஒரு வசதியான வழி ஆகும். வேறு வகையான பாதுகாப்பு ஒன்று இருக்கும்போது, இந்தப் பாதுகாப்பு கிடைக்காது; மேலும், முன்பே கூறப்பட்டுள்ளபடி வழக்கில் எழும் கேள்வி கற்பிதமானதாக (hypothetical) இருக்கக் கூடாது. ஆயினும், வேறுவகைப்பட்ட பாதுகாப்பு

[1] Attorney General v. Sharp, 1931.

முறையானது காலங்கடந்த காரணத்தால் (by lapse of time) கிடைக்காமற் போனுல், இதனைப் பெறுவதற்கு முயற்சி செய்யலாம். ஒரு நீதி மன்றமானது இந்த சமயோசித அதிகார இயல்பை உடைய நிவாரணத்தைச் சில சமயங்களில்தான் கையாளும்; என்றுலும் மேல்முறையீட்டு நீதி மன்றமானது (court of appeal) தனது நீதி அதிகாரத்தின் வரம்புகளைக் குறிப்பிடாமல், வேறுவகைப்பட்ட பாதுகாப்பு இல்லாத நிலைமையில், ஏதேனும் ஒரு நீதியற்ற செயலைச் சட்டத்துக்கு ஒவ்வாததென்று அறிக்கை செய்யவும், மேலும் அந்த நீதியற்ற செயலை ஒரு நிறுத்தல் ஆணையின் மூலம் தடை செய்யவும், தான் தகுதியும், விருப்பமும் உடையது என்று கூறியிருக்கிறது. இந்த நிவாரணம் ஆட்சித்துறை நீதி மன்றங்களுக்கு எதிராக மட்டுமல்லாமல், ஒரு உள்நாட்டு விசேட நீதிமன்றத்துக்கு எதிராகவும் கிடைக்கக்கூடும்.[1]

ஒரு உள்ளூர் அரசாங்க அதிகாரி சமயோசித அதிகாரத்தைக் கையாளுவதில், மிகவும் முக்கியமாகச் செயல்படுகிற தடை இன்னென்று இருக்கிறது. அளவு கடந்தோ, அல்லது சட்டத்துக்கு மாருன வகையிலோ செலவு செய்யும் ஒரு குழுவின் உறுப்பினர்கள், அவ்வாறு செலவு செய்ததையும், கூடுதலாகச் செலவு செய்ததையும் சரியானவை என்று ஒப்புக் கொள்ளாமல், அதற்கு இசைவு கொடுக்காமல் மறுக்கும் (disallowance) அதிகாரமே இந்தத் தடையாகும்[2]. மாவட்டக் கணக்குத் தணிக்கையாளர் (district auditor) கூடுதலாகச் செலவழிக்கப்பட்டது (surcharge) என்று ஆணையின் மூலம் கூறினுல், அதனை அடிப்படையாக வைத்து, அதிலிருந்து மேல்முறையீடு செய்ய ஒரு உரிமை உண்டு. இந்த மேல்முறையீடு உயர் நீதி மன்றத்துக்குச் செய்யப் படுதல் வேண்டும். ஆனுல் கூடுதல் செலவு 500 பவுனுக்கு மேற்படாமல் இருந்தால், உயர்நீதி மன்றத்துக்குப் பதிலாக வீட்டு வசதி, உள்ளூர் அரசாங்கம் முதலியவற்றின் அமைச்சருக்கு மேல்முறையீடு செய்யலாம். கூடுதல் செலவுத் தொகையைத் திருப்பிச் செலுத்தும்படி ஆணை செய்வதற்கு நீதி மன்றத்துக்கும், அமைச்சருக்கும் சமயோசித அதிகாரம் உண்டு. இவ்வாறு ஒரு உள்ளூர் அரசாங்கமானது அரசாங்கப் பணத்தைச் செலவழிக்கிறதாகையால் அது சட்டப்பூர்வமான நோக்கத்திற்காக அதனைச் செலவிட்

[1] Barnard v. National Dock Labour Board, 1953; Lee v. Showmen's Guild, 1952.

[2] Wade and Phillips, பக்கங்கள் 329-330.

டாலும் அச் செலவு நியாயமற்றது என்று தோன்றக்கூடிய அளவுக்கு, அதற்கு அளவு கடந்து செலவு செய்தல் கூடாது.

சட்டத்தின் ஆட்சியைப்பற்றி டைசி கொண்டிருந்த பிற்காலக் கருத்துகள்: டைசி தனது நூலின் கடைசிப் பதிப்புக்கு ஒரு முன்னுரை எழுதினர். அதில் அவர் சட்டத்தின் ஆட்சி என்ற கொள்கையைப் பற்றி யாதொரு மாறுதலும் செய்யவில்லை. ஆனல் அதற்கு முந்திய பதிப்பிலே ஆட்சித் துறைச் சட்டத்தின் தன்மையைப்பற்றித்தான் முன்பு கொண்டிருந்த எண்ணத்தை அவர் சிறிது மாற்றிக் கொண்டார். அவருடைய நூலின் எட்டாம் பதிப்பிலுள்ள முன்னுரையில், அவர் கூறும் முக்கியமான விஷயம் என்னவெனில், தாம் கண்டுகொண்டபடி, சட்டத்தின் ஆட்சி என்பதைப்பற்றி ஆங்கிலேயர் கொண்டிருந்த உயர்ந்த எண்ணம் அல்லது மதிப்பு மிகவும் குறைவாகக் காணப்பட்டது என்பதேயாம். சட்டத்துக்குக் கீழ்ப்படியாத மனப்பான்மைக்குக் காரணங்களாக இவ் வாசிரியர் அந்தக் காலத்தில் கண்டவைகளைப்பற்றி இப்பொழுது அவ்வளவாக எவருக்கும் ஈடுபாடு கிடையாது. தொழிற் சங்கக்காரர்கள் நீதிபதிகளிடத்துக் காட்டிய நம்பிக்கையில்லாத தன்மை வளர்ந்து கொண்டே வந்ததைப் பற்றி அவர் கவலைப்பட்டார். இதேபோலத் திருச்சபையின் கூட்டத்தைப் பொறுத்தவரையில் சமயக் குருமார்களிடையே காணப்பட்ட கீழ்ப்படியாமையையும், உள்ளூர்த் தீர்வைகளை செலுத்துவதைப்பற்றி ஆங்கிலத் திருச்சபையோடு சேராத கிறிஸ்தவர்கள் காட்டிய சாத்வீக எதிர்ப்பையும், அம்மைப் பால் வைத்தல் வேண்டுமென்று கூறும் சட்டத்துக்கு எதிராக மக்களிடையே தோன்றிய மனமார்ந்த எதிர்ப்பையும், பெண்களுக்கு வாக்குரிமை கேட்டுப்போர்க்கோலங் கொண்டெழுந்த பெண்களின் கீழ்ப்படியாமையையும் ஆகிய இவற்றையெல்லாம் பற்றி அவர் மிகவும் கருத்தாகக் கவனித்தார். சட்டத்துக்கு மதிப்புக் கொடாமை என்பதைப்பற்றி அவருடைய காலத்தில் அவருடைய கருத்தை மிகவும் ஈர்த்தது எது எனில், அது கட்சி அரசாங்க முறை தவருன வகையில் வளர்ந்துள்ளதைக் காட்டிய சட்டத்துக்கு ஒவ்வாத முறையே ஆகும். 'ஒரு கட்சியினுடைய ஆட்சியானது, நாடு முழுவதினுடைய அதிகாரமாகவோ, அல்லது நாட்டு உணர்ச்சி அல்லது நாட்டுப் பற்றுடனே எப்பொழுதும் ஒன்றுக இணைத்துப் பார்க்கவோபட முடியாத ஒன்று ஆகும்.' இந்தச் சொற்றொடர் எழுதப்பட்ட காலத்தில், ஒரு லிபரல் கட்சி அரசாங்கம் ஆட்சியில் எட்டு ஆண்டுகளாக இருந்தது.

1914ஆம் ஆண்டில் அல்ஸ்ட்டரில் நடைபெற்ற நிகழ்ச்சிகள், 'போர்க் கருவிகளுடன் கலகம் செய்தல், சில சமயங்களில், ஆனால், மிக அரிய சூழ்நிலைகளில், நியாயமானதே ஆகும்,' என்று இவ் வாசிரியரை ஒத்துக்கொள்ளச் செய்தன. 1911ஆம் ஆண்டில் பாராளுமன்றச் சட்டப் பிரிவுகளின்படி, 1914ஆம் ஆண்டில் சட்டமாக நிறைவேறிய அரசாங்கத்தினால் கொண்டுவரப்பட்ட சுய ஆட்சி மசோதாவுக்கு (Home Rule Bill) எதிர்ப்புக் காட்டும்படி கூறியவர்களுள் அவர் முக்கியமானவராக இருந்தார்.

ஆட்சித்துறைச் சட்டத்தைப் பொறுத்தவரையிலே, அவர் அந்தக்கால அளவில் ஆட்சித்துறை உயர் நீதி மன்றமாகிய நாட்டின் உயர் நீதி மன்றத்துக்கு (Conseil d' Elat or Council of State) நீதிமன்ற இயல்பான அதிகாரமும், வழக்குகள் பற்றிய விசேட நீதிமன்றத்துக்கு வேலையும் உண்டு (Tribunal des conflits or Court of Conflicts) என்று ஒப்புக் கொண்டார். ஆங்கில அரசாங்கச் சட்டத்தைப் பொறுத்த வரையில் அரசாங்கச் சட்டத்தைச் செயல்படுத்துவதற்கு உயர்நீதி மன்றத்தின் தகுதியை அவர் ஆராய்ந்ததனால், அவர் கருத்தில் மாற்றம் ஏற்பட்டது. 'சிவில் அதிகாரிகளின் தவறுகளைப் பற்றியோ, அல்லது குற்றங்களைப்பற்றியோ எழும் வழக்குகளை விசாரித்துத் தீர்ப்புச் செய்வதற்குச் சாதாரண நீதி மன்றங்கள் எல்லாச் சூழ்நிலைகளிலும் மிகவும் திறமை உடையன என்று முழுவதும் உறுதியாகக் கூற முடியாது. அலுவல் துறையில் செயலறிவும் (experience) சட்ட அறிவும் பொருந்தியவர்களை உடைய ஏதாவது ஒரு குழு, நடப்பில் ஆட்சியிலிருக்கும் அரசாங்கத்தினின்றும் முற்றிலும் விடுபட்ட அல்லது சுதந்திரமான நிலையில் இருந்துகொண்டு, உயர் நீதி மன்றத்தின் எந்தப் பிரிவையும்விட மிகவும் பயனுள்ள வகையிலே ஆட்சித்துறைச் சட்டத்தை அதனால் நிறைவேற்ற முடியாதா என்பது ஆராய்ந்தறியப்பட வேண்டிய ஒன்று ஆகும்.' இந்தக் கருத்தில் இருந்து முடிவான ஆட்சித்துறை மேல்முறையீட்டு விசேட நீதி மன்றம் ஒன்று எதிர்காலத்தில் தோன்றப் போவதை டைசி எதிர்பார்த்தார் என்று வாதிட இடமிருக்கிறது.

இந்தச் சந்தர்ப்பத்திலே 'பொருளின் சுருக்கம்' (Outline of the subject) என்ற பகுதியில் ஆசிரியர்களால் வெளியிடப்பட்ட கருத்துகளோடு, அவர் 1914ஆம் ஆண்டில், 'சட்டமும்

கருத்தும்' என்ற நூலுக்கு எழுதிய முன்னுரையையும் (Law and Opinion, 2nd edition, 1914) மீண்டும் அவர், 1915-ன் தொடக்கத்தில், 'இங்கிலாந்தில் ஆட்சித்துறைச் சட்டத்தின் வளர்ச்சி' என்ற தலைப்பில் எழுதிய கட்டுரையையும் (The Development of Administrative Law in England) (இது Law Quarterly Review என்ற வெளியீட்டின் 1915ஆம் ஆண்டின் 31ஆவது வால்யூமில் 148-ஐ அடுத்த பக்கங்களில் வெளியாகி இருக்கிறது.) ஒப்பிட்டுப் பார்ப்பது மிகவும் சுவையாக இருக்கும். 'பொருளின் சுருக்கம்' என்பதில் ஆசிரியர் எடுத்து ஆண்டுள்ள சொற்கள், பொருளைப் பொறுத்தவரையில் எட்டு பதிப்புகளிலும் மாற்றப்படாமல் இருந்து வந்துள்ளன. டைசி 1915ஆம் ஆண்டிலேயே, ஆட்சித் துறைச் சட்டம் என்ற சொற்றொடரைக் கையாண்டார் என்பது குறிப்பிடத்தக்கது. அதற்கு அடுத்த சில காலத்தில்தான் இதுபற்றிய பொருள், பள்ளிக்கூட அல்லது கல்விக்கூட இயல்பைப் பொறுத்த நிலையிலே (academic level) மதிப்பு உடையதாக ஆயிற்று.

முழுவதும் அளந்து கணக்கிடப்படாத ஒரு சட்டத் துறையே அரசியலமைப்புச் சட்டமாகும் என்ற கருத்து வெளியிடப்பட்டதை யாவரும் அறிவர். இவ்வாறான கருத்து வெளியிடப்படுவதற்கு சர் வில்லியம் அன்சன் (Sir William Anson) என்பவருடைய பிற்கால நூலிலிருந்து ஒரு கருத்து துணையாக இருந்ததை அடிக்குறிப்பு (foot note) ஒப்புக் கொள்கிறது. ஆயினும், இந்த நூல் அரசாங்கத்தின் ஆட்சித் துறைகள் பலவற்றின் அமைப்பைப் பற்றி முழுவதும் கூறினாலும், அது இப்பொழுது காணப்படுகிற அளவில் ஆட்சித்துறைச் சட்டத்தின் பொருளைப் பற்றிய ஆராய்ச்சியையே எடுத்துக் கொள்ளவில்லை.

உண்மையான சட்டமெனப்படும் அரசியலமைப்புச் சட்டத்துக்கும், சட்டங்களாகாத விதிகள் எனப்படும் (rules which are not laws) அரசியலமைப்பின் வழக்கங்களுக்கும் இடையே ஆஸ்டின் வகுத்த கோட்பாட்டைப் பின்பற்றி டைசி பாகுபாடு செய்யும்போது, அவர் பல எடுத்துக் காட்டுகளைக் கொடுத்தார்; அவர் கொடுத்துள்ள எடுத்துக் காட்டுகள், இறைமை அதிகாரியைப்பற்றி மட்டுமே அவர் கருத்தில் கொண்டார் என்றும், முக்கியமாக இறைமை அதிகாரிக்கு காபினெட்டோடும் (cabinet), நடுச் சட்ட மன்றத்

தோடும் (central legislature), பதிவு செய்யும் உயர்நீதி மன்றங்களோடும் (superior court of record) உள்ள தொடர்புகளைப் பற்றி மட்டுமே கருத்தில் கொண்டார் என்று காட்டுகின்றன.

1914ஆம் ஆண்டில் Law and Opinion என்ற நூலை எழுதும்போது அவர் குறிப்பிட்டதாவது: '1900ஆம் ஆண்டு அளவிலே தனியார் உரிமைக் கோட்பாடு (laissez faire) என்பதிலே எவ்வளவு பெரிய உண்மை இருந்தபோதிலும், அது ஆங்கில மக்களிடத்திலே உள்ள பிடிப்பை இழந்து விட்டது' அவர் 1906ஆம் ஆண்டுக்கும் 1913ஆம் ஆண்டுக்கும் இடையிலே கூட்டு உரிமை தத்துவம் என்பது (collectivism) மிக வளர்ச்சியடைந்துள்ளது என்பதைச் சுட்டிக்காட்டி, அதற்கு எடுத்துக் காட்டுகளாக, ஆட்சித்துறைச் சட்டத்தின் முக்கியமான மூலாதாரங்களாக 1908ஆம் ஆண்டின் முதியோர் உதவிநிதிச் சட்டம், 1911ஆம் ஆண்டின் தேசீய உயிர் காப்பு உறுதிச் சட்டம் (National Insurance Act), 1908ஆம் ஆண்டின் நிலக்கரிச் சுரங்கங்களின் (ஒழுங்கு) சட்டம், 1912ஆம் ஆண்டின் நிலக்கரிச் சுரங்கங்களின் (குறைந்த பட்ச சம்பளம்) சட்டம், 1910ஆம் ஆண்டின், 1909-10ஆம் ஆண்டின் நிதிச் சட்டம், மற்றும் பல சட்டங்கள் ஆகியவற்றைக் கூறினார்.

தேசீய உயிர்காப்பு உறுதிச் சட்டமானது, அரசாங்கத்தினுடைய, அல்லது ஆட்சியிலிருக்கும் அரசாங்கத்தோடு நெருங்கிய தொடர்பு கொண்ட அலுவலர்களினுடைய சட்டம் செய்யும் அதிகாரத்தையும், நீதி வழங்கும் அதிகாரத்தையும் கூடுதலாக ஆக்கியுள்ளது என்று அவர் கூறி, அந்தச் சட்டமானது பிரான்சிலுள்ள ஆட்சித்துறைச் சட்டத்தை மிகவும் ஒத்திருக்கிற ஒரு அமைப்பை இங்கிலாந்திலும் உண்டாக்கியிருக்கிறது என்று ஒத்துக் கொண்டார். மேலும் அத்தகைய சட்டத்துக்குச் சில தகுதிகள் அல்லது நன்மைகள் உண்டு என்றும் அவர் ஒத்துக்கொண்டார். இருபதாம் நூற்றாண்டின் தொடக்கத்திலிருந்து, கூட்டு உரிமை தத்துவத்தை (collectivism) நோக்கியே மிகவும் கடுமையாக சட்டக் கருத்தின் முக்கியமான போக்கு அமைந்திருப்பதன் காரணங்களை அவர் ஆராயலானார். பொது நலன்களும், தனியார் நலன்களும் ஒன்றையொன்று சார்ந்துள்ளன. இது இரயில்வேக் கம்பெனிகளில் தனிப்பட்டவர்கள் பங்கு கொண்டிருப்பதனால் தெரிய வருகிறது; இந்த நிலைமையில் தனிப்பட்டவருக்கும் அரசாங்கத்துக்கும் இடையே முரண்பாடு

காண்பது கடினமாகும். தேசிய உணர்வில் மக்கள் முன்னாட்களில் கொண்டிருந்த பற்று குறைந்து வருவதையும் அவர் கண்டு, அத்தகைய தேசீய உணர்வு ஜெர்மனியிலும், இத்தாலியிலும் சாதித்த செயல்களையும் அவர் கண்டு ஏமாற்றமடைந்தார். இதுவும், இதைப் போன்ற மற்ற இயக்கங்களின் செல்வாக்கு குறைந்ததுவும் பொதுவுடைமை அல்லது சோஷியலிசம் என்பது மக்களிடையே கவர்ச்சியுடையதாகத் தோன்றும்படி செய்தன என்று அவர் கூறினார். கூட்டு உரிமை தத்துவத்தை நோக்கிச் செய்யப்படும் திட்டங்களுக்கு, முக்கியமாகச் சொத்து உரிமைகளை பாதிக்கக்கூடிய திட்டங்களுக்கு, பொதுவாக ஒப்புதல் அளிக்கப்படுவதைக் கண்டு, முக்கியமாகச் செல்வந்தர்கள் ஒப்புதல் அளிப்பதைக் கண்டு அவர் வியப்புத் தெரிவித்தார். சிறுபான்மையான ஒரு தொழிற்கட்சி வலுவாக வளர்ந்து வரும்போது, ஒரு பாராளுமன்றக் குடியாட்சி தோன்றுவதை அவர் ஒப்புக்கொண்டார். அவர் மற்ற நாடுகளிலும் கூட்டு உரிமை தத்துவம் பரவி வருவதைக் குறிப்பிட்டுக் கடைசியில் தொழிலாளரிடையே நிறைவற்ற தன்மை நிலவி வருவதைப்பற்றிக் குறிப்பிட்டார். எனினும், அரசாங்கத்தின் தலையிடுதலிலே நம்பிக்கையில்லாத ஒரு நிலைமை பொதுவாக ஆங்கிலக் குடிகளிடம் இருந்தது. அவருடைய கருத்திலே, கூட்டு உரிமை தத்துவமானது உண்மையான குடியாட்சிக்கு முரணான ஒன்று ஆகும். 'குடியாட்சியின் நோக்கமானது, மக்களுடைய நன்மைக்காக, மக்களால், மக்களுடைய விருப்பத்தை ஒட்டி நடைபெறும் அரசாங்கமாகும்; கூட்டு உரிமைத் தத்துவத்தின் நோக்கமானது, அலுவலரல்லாதவரைவிட அல்லது குடிமக்கள் அனைவரையும் விட, தங்களுக்கே மக்களுக்கு நன்மை தருவது எது என்று தெரியும் என்று எண்ணுகிற, அல்லது தெரிந்து வைத்திருக்கக்கூடிய வல்லுநர்களால், அல்லது அதிகாரிகளால் மக்களுடைய நன்மைக்காக நடைபெறும் அரசாங்கமாகும்.' அரசியல் நோக்கங்களை அல்லது சமுதாய நோக்கங்களை நிறைவேற்றுவதற்காக வரிப்பொருள்களைப் பயன்படுத்துவதைக் கண்டிக்கும் அரசியற் கோட்பாட்டைப் பின்பற்றுபவர், கூட்டு உரிமைத் தத்துவத்தினால் ஏற்படும் வரிச் சுமைகளுக்கு எதிர்ப்புக் காட்டுவது இயற்கையே. கடைசியாக, டைசி, ஐயத்துக்கு இடமில்லாத சொற்களிலே தனியார் உரிமைக் கோட்பாட்டில் (individualsm) தனக்கு இருக்கும் நம்பிக்கையை உறுதி செய்தார். ஆயினும், அவருடைய நூல் கூட்டு உரிமைத் தத்துவத்தின் அடிப்படையான அனுமானத்தை (fundamental assumption)

அவர் நன்ருக உணர்ந்திருந்தாரென்று காட்டுகிறது — அரசாங்கத்தின் தலையீட்டின் மூலமாக மக்களுக்குக் கிடைக்கக் கூடிய நன்மையில் நம்பிக்கையே மேற்படி அனுமான மாகும்; இந்த நூற்ருண்டின் தொடக்கத்தில் இங்கிலாந்தில் நிலவியிருந்த கருத்திற்குக் காரணமே இந்த அனுமானமென்று அவர் எண்ணிஞர்.

அவர் எழுதிய 'இங்கிலாந்தில் ஆட்சித்துறைச் சட்டத் தின் வளர்ச்சி' (The Development of Administrative Law in England) என்ற கட்டுரையானது, உள்ளூர் அரசாங்கக் கழகத்துக்கும், ஆர்லிட்ஜ் என்பவருக்கும் (1915-ல்) இடையே தோன்றிய வழக்கில் பிரபுக்கள் மன்றத்தாலளிக்கப்பட்ட (House of Lords) தீர்ப்பின் விளைவாகத் தோன்றியதாகும்; இந்த வழக்கு கல்விக்கழகத் துக்கும், ரைஸ் என்ப்வருக்கும் இடையே 1911-ல் தோன்றிய (Board of Education v. Rice) வழக்கோடு சேர்த்து ஆராயப் பட வேண்டிய ஒன்று ஆகும். இதில் பிற்கூறப்பட்ட வழக் கானது, ஒரு ஆட்சித்துறையானது, சட்டத்தைப் பற்றிய ஒரு கேள்வியை முடிவாகத் தீர்ப்பதற்கு அதிகாரத்தை உடையது என்பதாக முடிந்த முடிபாகத் தீர்மானித்தது. ஆர்லிட்ஜின் வழக்கானது, ஒரு ஆட்சித்துறை நீதி மன்ற இயல்பானதும், தனக்கு நிலவரச் சட்டத்திஞலளிக்கப் பட்டதுமான அலுவல்களைச் செய்யும்போது, அது ஒரு சட்ட நீதிமன்றத்தினுடைய செயல்விதியைப் பின்பற்ற வேண்டுவ தில்லையெனவும், அது தனது அலுவல்களை நடத்துவதற்கு நியாயமானதாக இருக்கக்கூடிய எந்த விதியையும் பின்பற்றலா மென்றும் காட்டிற்று. இந்த இரு வழக்குகளிலிருந்து டைசி வருவித்த முடிபுகள் வருமாறு:

(1) ஒரு அரசாங்கத் துறைக்கு அளிக்கப்பட்ட எந்த ஒரு அதிகாரமும் நிலவரச் சட்டத்திலுள்ள சொற்களை மிகவும் ஒட்டியிருக்கக்கூடிய வகையிலேயே கையாளப்படுதல் வேண்டும்.

(2) ஒரு நிலவரச் சட்டத்திஞல் நிறுவப்பட்ட நீதி அதிகாரியோ, அல்லது ஓரளவு நீதிவழங்கும் அதிகாரத்தைப் பெற்ற நீதி அதிகாரியோ, ஒரு சட்ட நீதி மன்றத்துக்குப் பொருந்துவதான செயல் விதிகளைப் பின்பற்ற வேண்டு மென்ற கடமை கிடையாது; ஆஞல் அவ்வதிகாரி நீதி

மன்றத்தின் முறையோடும் தரும நியாய உணர்வோடும் செயல்படுதல் வேண்டும்.

பின்னர் அவர் இந்த முடிபுகள் பின் வரும் கேள்விக்கு விடை அளிக்கின்றனவா என்று ஆராய்ந்தார்: 'இப்பொழுது (அதாவது 1915ஆம் ஆண்டில்) ஆங்கில நீதி மன்றங்களால் விளக்கப்பட்டுள்ள வடிவத்திலே இருக்கும் இக்காலத்திய சட்டமானது, பிரான்சின் சட்டமியற்றுபவர்களாலும், சட்ட வல்லுநர்களாலும் கடந்த நூருண்டுகளாகக் கவனமாக முழுமையாக வளர்க்கப்பட்டதும், பல நூற்ருண்டுகளாகப் பிரஞ்சுக்காரர்களுக்கு அறிமுகமானதுமாகிய பிரஞ்சு ஆட்சித் துறைச் சட்டத்தைப் போன்றதாக இல்லா விட்டாலும், இயல்பில் அதை ஒத்து இருக்கிற ஆட்சித்துறைச் சட்டத் தொகுப்பை, இங்கிலாந்தின் சட்டத்தில் புகுத்தி யிருக்கிறதா, அல்லது புகுத்தும் இயல்போடு இருக்கிறதா?'

இதற்கு அவர் பல செய்திகளை வைத்துப் பார்க்கும் போது, அவருக்குச் சரியான விடை கிடைத்தது.

1. கடந்த ஐம்பது ஆண்டுகளாக (1865—1915) அரசாங்கம் ஏற்றுக்கொண்டுள்ள புதிய கடமைகளினுல், நடு அரசாங்கத்தின் ஆட்சித் துறைகளுக்கு நீதிமன்ற இயல்பான, அல்லது ஓரளவு நீதிமன்ற இயல்பான அலுவல்க ளெல்லாம் மாற்றப்பட்டுள்ளன் அல்லது குறிப்பாகக் கொடுக்கப்பட்டுள்ளன. வேலையாட்கள் நட்டஈடுபற்றிய சட்டங்களிலுள்ள (Workmen's Compensation Acts) செயல் முறையிலுள்ளதைப் போல இத்தகைய கடமைகளெல்லாம் நீதி மன்றங்களுக்கு விடப்பட்டிருக்கலாம்; ஆனுல் இவற்றை மாற்றுவதனுலுண்டாகக் கூடிய வசதி ஒப்புக்கொள்ளப் பட்டது. ஆயினும், 'அதிகாரத்தை இவ்வாறு மாற்றுவத ஞல் பல தலைமுறைகளுக்கு ஆங்கில அரசியலமைப்பின் முக்கியமான இயல்பாக இருந்துவந்த சட்டத்தின் ஆட்சி என்பதின் அடிப்படையே அழிக்கப்பட்டுவிடுகிறது'. ஆயினும் ஒரு நீதிமன்றம் ஒரு வழக்கை விசாரிப்பதுபோல, அரசாங்க மும் ஒரு தனிப்பட்ட ஆளைப்போல ஒரு செயலைச் செய்ய முடியாது என்று டைசி தொடர்ந்து சொன்ஞர். இந்த இரண்டு செயல்களும் பலவகைகளில் முற்றிலும் வேருன விதிகளினுல் கட்டுப்படுத்தப்படுதல் வேண்டும்.

2. 'உள்ளூர் அரசாங்கக் கழகத்தின் தலைவர் (President of the Local Government Board) ஒரு சட்ட நீதி மன்றத்தின்

செயல்விதியைக் கையாளுவதைவிடத் தனது துறையின் வசதிக்கும் நெறிமுறைக்கும் ஏற்றதென்று தோன்றுகிற விதிகளையே பின்பற்றுதல் வேண்டுமென்று பிரபுக்கள் மன்ற மானது தீர்ப்புக் கூறியிருத்தல் வேண்டுமென்ற கருத்து 1915-ல் முக்கியமான சட்டக் கருத்து உடையவர்களின் கருத்தோடு ஒத்து இருக்கிறது,' என்று அவர் கூறினர்.

3. நீதிமன்ற இயல்புள்ள அதிகாரத்தை அல்லது ஓரளவு நீதிமன்ற இயல்புள்ள அதிகாரத்தைத் தவருகக் கையாளு வதற்கு, இரண்டு வகையான தடைகள் இருக்கின்றன—(a) செல்லுபடியாகாததாக அல்லது சட்டத்துக்குப் புறம்பான தாக ஆக்கும் கோட்பாடு (ultra vires doctrine), (b) இயற்கை நீதி (natural justice).

ஆர்லிட்ஜ் வழக்கில் ஹால்டேன் பிரபுவினுல் (Lord Holdane) ஆட்சித் துறையின் முறைகேடுகளுக்குத் தடையாக உரைக்கப்பட்ட அமைச்சின் பொறுப்பு(ministerial responsibility) என்பதை நீதி மன்றங்கங்களின் மறுவிசாரணை முறையோடு ஒப்பிட்டுப் பார்க்கும்போது, அமைச்சின் பொறுப்பு என்பது ஒரு வலியற்ற காப்புமுறை (guarantee) ஆகும் என்று டைசி கூறினர். எவ்வாறெனில் அமைச்சரின் பொறுப்பு என்பதற்குப் பாராளுமன்றத்தில் ஒரு குறிப்பிட்ட காலத்தில் பெரும் பான்மையாக இருக்கும் கட்சிக்குப் பொறுப்பு என்றுதான் பொருள். உயர்நீதி மன்றமாகிய பாராளுமன்றத்திஞல் எடுக்கப்படக்கூடிய சட்ட நடவடிக்கையாகிய துரோகக் குற்றச்சாட்டு முறையானது இன்னும் இங்கிலாந்தின் சட்டத் திலே ஒரு பாகமாக இருக்கிறது என்று அவர் கூறினர். அவராலேயே எழுப்பப்பட்ட கேள்விக்கு அவர் தயக்கத்துடன் அளித்த விடையாவது:

ஆகவே இருபதாம் நூற்ருண்டின் முற்பகுதியிலே நிகழ்ந்த சில புது மாறுதல்கள் டைசியின் கவனத்திலிருந்து தப்பவில்லை என்பதற்கும், மேலும் அவர் உண்மையில், இங்கிலாந்தில் ஆட்சித்துறைச் சட்டம் இருப்பதை ஒப்புக் கொண்டார் என்பதற்கும் சான்று இருக்கிறது. இதேபோலவே பிரஞ்சு அமைப்பைப் பொறுத்தவரையிலும், அவர் ஆட்சித் துறைச் சட்டத்தைப் பற்றி, முன்பு குறையாகக் கூறிய கருத்துகளை மாற்றியும் விட்டார். இந்த நூலின் பன்னிரெண் டாவது இயலாகிய ஆட்சித்துறைச் சட்டத்தோடு ஒப்பிடப்பட்ட சட்டத்தின் ஆட்சி என்பது, பல்வேறு

பதிப்புகளிலும் பொருளளவிலே வெகுவாக மாறுதலடைந்துள்ளது. எனவே, டைசியின் கருத்தைக் குறை கூறியவர்களின் மூலமாக நாம் அவரைப்பற்றி எண்ணியதைவிட அவர் மிக விரைவாக ஆங்கிலக் கால்வாய்க்கு அக் கரையிலுள்ள நாடுகளில் ஏற்படும் வளர்ச்சிகளைப்பற்றி நன்ருக அறிந்திருந்தார் என்று தெரிகிறது. எவ்வாருயினும் பிரஞ்சு முறையைப்பற்றி அவர் சுட்டிக் காட்டிய குறைகளுக்கு அவருக்குப் பின் வந்த ஆசிரியர்கள் முழுவதும் விடைகூறியுள்ளார்கள்.

5. அரசியலமைப்பின் வழக்கங்கள்

(Conventions of the Constitution)

அரசியலமைப்பின் வழக்கங்களுக்கு உள்ள விரிவான எல்லை: அரசியலமைப்பிலுள்ள கடமை நிறைவேற்றப் படுவதற்குச் சட்ட நீதி மன்றத்தில் சாதாரணமான வழிகள் இல்லாவிடினும், அக் கடமைக்குக் கீழ்ப்படிதல் என்பது நிறைவேற்றப்படுகிறது. இத்தகைய ஒரு அரசியலமைப்பின் கடமையை (constitutional obligation) விரிவாகக் குறிப்பிடுவதற்கு 'வழக்கம்' என்ற சொல் (convention) ஏற்றுக் கொள்ளப் பட்டதே, டைசியின் செல்வாக்கினுல்தான். 'அரசருடைய (அல்லது அரசருடைய அலுவலர்களென்ற முறையிலுள்ள அமைச்சர்களுடைய) சமயோசித அதிகாரங்கள் எவ்வகையில் கையாளப்படுதல் வேண்டுமோ, அவ்வகையைத் தீர்மானிக்கும் விதிகளே வழக்கங்கள் ஆகும்,' என்பதாக டைசி வழக்கங்களுக்கு இலக்கணம் வகுத்தார். 'வாக்காளர்களே நாட்டின் உண்மையான அரசியல் சார்பான இறைமை அதிகாரி என்ற (political sovereign) முடிவான உயர்தர நிலைமையை நிறுவுவதற்காக' இருப்பவை வழக்கங்கள் என்று எடுத்துக்காட்ட அவர் முனைந்தார்.

அரசியலமைப்புச் சட்டத்தின் ஒரு மூலாதாரமென்று வழக்கங்களை ஆராயும்போது, அவற்றினுல் வலியுறுத்தப்படும் கடமை வெளிப்படையான ஒப்பந்தத்தின் மூலமாக வருவிக்கப்படவில்லை; வழக்கமாக அவ்வாறு கொள்ளப் படுவதுமில்லை. வழக்கம் என்பது, கால இடச் சூழ்நிலை ஒன்றிலிருந்தே தோன்றிய செயல் என்பதுதான் பொருத்தமாகும். ஆயினும், தனிப்பட்ட நாடுகளுக்கு இடையே நடைபெறும் பல மாநாடுகளில் செய்யப்படும் வெளிப்படையான உடன்படிக்கைகளிலிருந்து தோன்றும் விளைவுகளைக் குறிப்பிடுவதற்கே சட்ட அறிஞர்கள் இச் சொல்லைக் கையாளுகின்றனர்; செஞ்சிலுவைச் சங்கத்தைப் பயன்படுத்துதல்

போர்க் கைதிகளை நடத்துதல் ஆகியவைகளைப் பற்றிய ஜெனிவா வழக்கங்கள் (Geneva Conventions) எடுத்துக் காட்டுகளாகும். இவ்வாறாக 1949ஆம் ஆண்டின் ஜெனிவா வழக்கங்களை ஒப்புக்கொண்ட ஒரு நாடு என்ற நிலைமையில் யுனைட்டெட் கிங்டத்தின் அரசாங்கம் நிறைவேற்ற வேண்டிய வெளிப்படையான கடமைகளுக்கு ஆங்கிலச் சட்டத்தில் ஒரு இடத்தை 1957ஆம் ஆண்டின் 'ஜெனிவா வழக்கங்கள் சட்டம்' அளிக்கிறது.

அரசருடைய அமைச்சர்கள், அரசருடைய விசேட அதிகாரத்தைக் கையாளுவதை ஒழுங்குபடுத்தும் விதிகளையும், வழக்கத்தை மட்டும் ஆதாரமாகக் கொண்டுள்ள, பாராளு மன்றதின் 'சட்டமும் வழக்கமும்' அடங்கிய பாகத்தையும் டைசி முக்கியமாக ஆராய்கிறார். இந்த இரண்டு பகுதிகளிலும் விதிகளெல்லாம் வழக்கத்தையே அல்லது கால இடச் சூழ் நிலையையே ஆதாரமாகக் கொண்டிருக்கின்றனவே யன்றி, முறையான ஒரு ஒப்பந்தத்தின் விளைவாகத் தோன்றவில்லை. ஆயினும், வழக்கங்கள் மிகவும் விரிவாகக் கையாளப் படுவதற்கு இருக்கின்றன; மேலும் அவையே இந்த நூற் றாண்டில், பிரிட்டிஷ் காமன்வெத்திலுள்ள பல்வகைப்பட்ட உறுப்பு நாடுகளுக்கிடையே அரசியல் உறவை வளர்ப்பதில் ஒரு முக்கியமான பங்கை எடுத்துக் கொண்டன. இவற்றுள் சில வழக்கங்கள், முக்கியமாகச் சட்டம் இயற்றுவதற்குக் காமன்வெல்த் பாராளுமன்றங்களுக்கு இருக்கும் முழுத் தகுதியையும் வகுக்கும் விதிகள், 1931ஆம் ஆண்டின் வெஸ்ட் மின்ஸ்டர் சட்டத்தின்படியும், பிந்திய சட்டங்களின்படியும் நிலவரச் (statutory) சட்டமாக ஆக்கப்பட்டன. ஆயினும், இவைகளுக்கு இடையே உள்ள உறவு பெரும்பாலும் இன்னும் வழக்கத்தையே அடிப்படையாகக் கொண்டு இருந்து வருகிறது; அது பல பேரரசு மாநாடுகளில் (Imperial Conferences) முதலமைச்சர்களுக்கு இடையே ஏற்பட்ட ஒப்பந்தத்தை ஆதாரமாக உடையது. அவ்வப்போது நடைபெறும் காமன் வெல்த்தின் முதல் அமைச்சர்களின் கூட்டங்களோ, அல்லது அவற்றின் மற்ற அமைச்சர்களின் கூட்டங்களோ, முற்காலத்திய பேரரசு மாநாடுகளைப்போல முறையாக இல்லாமல், அவற்றை விடச் சாதாரணமாக ஆகிவிட்டன; இக் கூட்டங்களின் நிகழ்ச்சி நிரலிலே, அர்சியலமைப்புப் பற்றிய விஷயங்கள் இப்பொழு தெல்லாம் முக்கியத்துவம் பெறுவதில்லை. இது ஏதனாலென்றால், அரசியலமைப்புப் பற்றிய கேள்விகள் இப்பொழுது தீர்க்கப்பட்டுவிட்டன. மேலும், இவ்வாறான நிலையானது,

இந்தத் துறையில் அரசியலமைப்பு வளர்ச்சியை ஏற்படுத்துவதில் வழக்கங்கள் செய்துள்ள வேலையின் முக்கியத்துவத்தை எவ்வகையிலும் குறைக்கவுமில்லை. இதை நாம் அறிந்து ஒப்புக்கொண்டால், பிரிட்டிஷ் காமன்வெல்த்தின்வரலாற்றிலே நெடுங்காலமாக யாவரும் உணரக்கூடிய வகையிலே, அரசியலமைப்பு வழக்கங்களைச் சட்டத்தோடு இணைத்தல் என்பது ஏற்பட்டு வருவதைப்பற்றி மேலும் குறிப்பிட வேண்டுவதில்லை. வெஸ்ட்மின்ஸ்டர் சட்டம் நிறைவேற்றப்படு முன்பு 1929ஆம் ஆண்டில் நடைபெற்ற மாநாடு ஒப்புக்கொண்டபடி, இவ்வாறு சட்டத்தோடு அரசியலமைப்பு வழக்கங்களை இணைத்தல் என்பது (association), காமன்வெல்த் நாடுகளின் உள்நாட்டு அரசாங்கங்களிலும், அவை ஒன்றுக் கொன்று தம்மிடையே கொண்டுள்ள தொடர்புகளிலும் காணப்படும் அரசியல் வளர்ச்சியின் இயல்பாக அல்லது தன்மையாக இருக்கிறது. இந்த மாநாடு, டைசி தனது நூலின் பதினுன்காம் இயலில் விரித்துச் சொன்னதையே வேருெரு சூழ்நிலையில் அமைத்துச் சொல்லிற்று. அவர் மேற்படி இயலில் சொன்னதாவது: 'முற்றிலும் சட்டபூர்வமான முறையிலேயே நடைமுறைப் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பது இயலாததாக இருக்கும் போது, அல்லது அவ்வகையான (முற்றிலும் சட்டபூர்வமான) தீர்வு காண்பது, அரசியல் நிறுவனங்களுக்கு உயிர்நாடியாக இருக்கும் தன்மையை அல்லது இயல்பைப் பற்றிக் கொள்ளாமல் வழுவிவிடும்போது, அல்லது அது அந் நிறுவனங்களின் சுதந்திரமான வளர்ச்சியைத் தடைப்படுத்தக் கூடுமென்று இருக்கும்போது, வழக்கங்கங்களைச் சட்டத்தோடு இணைப்பதுதான் (நிறுவனங்களுக்கு இடையேயுள்ள) தொடர்புகளைச் சிக்கலில்லாமல் ஒன்றுபடுத்தக்கூடிய வழியை ஏற்படுத்துகின்றது.'[1]

முன் நிகழ்வினுல் அல்லது மேற்சான்றினுல் காபினெட் வேலை செய்வதற்கு ஓர் ஆதாரமாகக் காட்டப்பட்ட அரசியலமைப்பு விதிகளைப் பற்றியே டைசி ஆராய்வதில் கவனம் செலுத்தினுர்; அவரும் தனது ஆராய்ச்சியிலே பரம்பரை அடிப்படையிலே அமைந்த பிரபுக்கள் சபைக்கும், தேர்ந்தெடுக்கப்பட்ட பொதுமக்கள் சபைக்குமுள்ள வழக்கமான சில உறவுகளையும் சேர்த்து ஆராய்ந்தார் என்பதனுல், அரசருடைய விசேட அதிகாரங்களுக்கும், பாராளுமன்றத்தின்

[1] K. C. Wheare எழுதிய The Statute of Westminster and Dominion Status, (ஐந்தாம் பதிப்பு, 1953), Sir Ivor Gennings எழுதிய Constitutional Laws of the Commonwealth, Volume I, 1957 என்ற நூல்களைப் பார்க்கவும்.

உரிமைகளுக்கும் ஒற்றுமை இருக்கிறதென்பது வலியுறுகின்றது. இந்த இரண்டில் (அரசருடைய விசேட அதிகாரமும், பாராளுமன்ற உரிமையும்) எதுவும், 'சட்டங்கள்' என்பதற்கு உரிய குறுகிய பொருளில் சட்டங்கள் ஆக மாட்டா; சட்டங்கள் என்றால், அவை கையாளப்படும் முறை நீதி மன்றங்களின் பரிசீலனைக்கு உட்படுதல் வேண்டும் (ஆனால் இவை கையாளப்படுதலை நீதி மன்றங்கள் விசாரணை செய்வதில்லை); ஆனால் இவ் வதிகாரங்களும் உரிமைகளும் தவருகக் கையாளப்பட்டாலும் அல்லது அளவுக்கு மீறிக் கையாளப்பட்டாலும், அதனைத் தடுப்பதற்குத் தங்களுக்கு உரிமை உண்டு என நீதிமன்றங்கள் எப்பொழுதும் வற்புறுத்தி யிருக்கின்றன.

முதலமைச்சரை அலுவலில் அமர்த்துவதென்பது அரசருடைய விசேட அதிகாரமாகும். பொது மக்கள் மன்றத்தில் பெரும்பான்மை நிலைமையை அடையக்கூடிய கட்சித் தலைவரைத் தேர்ந்தெடுத்தல் என்ற அளவுக்குக் கட்டுப்படுமாறு, இவ்வாறு அமர்த்தும் விசேட அதிகாரத்தை வழக்கம் வரம்பு படுத்துகிறது. மற்ற துறைகளுக்கு இருக்கும் கட்டுப்படுத்தும் அதிகாரத்தைவிட, இந்த வழக்கத்துக்கு இருக்கும் கட்டுப்படுத்தும் அதிகாரம் குறைவாகவே இருக்கிறது. இதனால் இவ் விதிகளெல்லாம் சாதாரணமாக மீறப்படலா மென்பது பொருளன்று; ஆனால், எதிர்பாராத சூழ்நிலைகளினால் ஒரு குறிப்பிட்ட காலத்தில் வழக்கங்களுக்கு உள்ள கட்டுப்படுத்தும் அதிகாரம் மறையும் என்பதுதான் இதன் பொருள். சாதாரணமான நிலைமையிலிருந்து பிரிந்து அல்லது மாறிச் செல்லும்படி நேரிடுதல் என்பதும், வாக்காளருடைய உயர்தர அதிகாரத்தை ஒப்புக்கொள்ளு மளவுக்கு ஒத்திருக்க வேண்டுமேயன்றி, எதேச்சாதிகாரப் போக்குகளை ஆதரிப்பதாக இருக்கக்கூடாது. கட்டாயமானதாகக் கருதப் படாத ஒரு செயல் அல்லது வழக்கம் நடைமுறையில் கையாளப்பட்டு வந்தாலும் கூட, அதனை அரசியலமைப்புச் சார்ந்த வழக்கங்களின் பட்டியலிலே சில ஆசிரியர்கள் சேர்ப்பதில்லை.[1] ஆயினும் ஒரு கட்டாயமான செயல் முறைக்கும், கட்டாயமில்லாத செயல்முறைக்கும் வேறுபாடு காண்பது அரிது. நீதி மன்றங்களினால் செயல்படுத்தப்படும் சட்டங்களுக்கு வழக்கங்கள் துணையாக இருக்கும் இயல்பை உடையனவாகையால், அவற்றுக்குத் தெளிவான இலக்கணம்

[1] Hood Phillips எழுதிய Consitutional Law, 2nd Edition, பக்கம் 61 பார்க்கவும்.

அல்லது வரையறை வகுப்பது இயலாது போலும். தலைமை அமைச்சர்களை அரசர்கள் அமர்த்துவது என்ற அரசியற் செயலைப் பற்றிய வழக்கமான விதிகள் (Conventional rules) இன்னும் ஓரளவுக்குத் தெளிவானதாக இல்லாமலும், எனவே எதிர்பாராத சூழ்நிலைகளில் பயன்படக்கூடியவாறு அவை வளைந்து கொடுக்கக்கூடியவையாகவும் இருக்கின்றன. இவ்வாறு இருந்தாலும், மொத்தத்தில் முதலமைச்சர்களை அரசர்கள் தேர்ந்தெடுத்தல் என்னும் அரசியற் செயல்களையும், வழக்கங்களென்ற விதிகளினுள் அடங்கியனவாகக் கருதுவதே பொருத்தமாகத் தோன்றுகிறது. எவ்வாறெனில், அரசியலமைப்பை ஒட்டிய அரசாங்கத்தின் தேவைகளுக்காக மேற்கொள்ளப்படக்கூடிய செயல்விதிகளாக (rules of conduct) அவை தெளிவாகத் தெரிகின்றன;மேலும் அவை வாக்காளரின் உயர்தர அதிகார நிலைமையை (supremacy of electorate) எடுத்துக் காட்டக் கூடியவையாகவும் இருக்கின்றன. பாராளுமன்றத்தைக் கலைத்தலுக்கான விசேட அதிகாரத்தைச் சார்ந்துள்ள செயல்களையும் விதிகளையும் பொறுத்தமட்டில் இதுவே உண்மையாகும். ஆனால், இந்தச் செயலைப் பொறுத்தவரை, இந்தக் கலைப்பு அதிகாரமானது அமைச்சர்களின் ஆலோசனையின்பேரில்தான் கையாளப்படுதல் கூடுமென்ற ஒரு அடிப்படையான உடன்பாடு இருக்கிறது. இத்தகைய ஒரு ஆலோசனை, ஒரு முதலமைச்சர் இறந்து போனதனுலோ, அல்லது வேலையை விட்டுவிட்டதனுலோ, அவருக்கு அடுத்த நிலையிலுள்ளவரை அரசர் அமர்த்த வேண்டுமென்ற சந்தர்ப்பத்தில் கிடைக்காது.

அமைச்சர்களின் சட்டப்படியான நிலைமையோடு அவர்களுடைய வழக்கப்படி வந்த நிலைமையை (conventional position) முரண்படுத்துவதுதான், சட்டத்துக்கும் வழக்கத்துக்கும் உள்ள தொடர்பை மிக நன்ருக விளக்கிக் காட்டும் வகையாகும். சிவில் ஊழியர்களைப் போலவும், படைகளில் உள்ளவர்களைப் போலவும் அமைச்சர்கள் சட்டப்படியாக அரசருடைய ஊழியர்களாவர். வழக்கத்தின்படி (by convention) அவர்கள், அரசருடைய மற்ற ஊழியர்களைப்போல் அல்லாமல், தங்களுடைய சொந்தச் செயல்களுக்காகவும், தங்களுக்குக் கீழ்ப்பட்டவர்களான சிவில் ஊழியர்களினுடைய செயல்களுக்காகவும் பாராளுமன்றத்துக்கு நேரடியாகப் பொறுப்பு உடையவர்களாக இருக்கிருர்கள். இந்த சிவில் ஊழியர்களின் பெயர்களைப் பாராளுமன்றத்தில் குறிப்பிடுதல் வழக்கமில்லை. இத்தகைய

அமைச்சர்களின் பொறுப்பு என்ற முறையானது, அவர்களைப் பாராளுமன்றத்தின் மூலமாக வாக்காளர்களுக்குப் பொறுப்போடு இருக்கும்படிச் செய்கிறது. அவர்களுடைய மேலதிகாரியான அரசருக்கு அவர்களுக்கு உள்ள சட்டப்படியான பொறுப்பு (legal responsibility) ஒன்றை மட்டுமே நம்பி இருந்தால், அப்போது பொதுமக்களுக்கு அவர்களைப் பொறுப்போடிருக்குபடி செய்தல் என்பது இயலாததாய்விடும். மேலும் அவ்வாறு இருப்பது (சட்டப்படியான பொறுப்பை மட்டும் உடையதாகச் செய்தல்), பாராளுமன்றத்திலுல் விசேட அதிகாரங்கள் கட்டுப்படுத்தப்படாமல் இருந்த நாட்களில் இருந்ததைப்போல, பொதுமக்களுடைய கருத்தைப் பொருட்படுத்தாத ஒரு அரசரின் கையாட்களாக அமைச்சர்களை ஆக்கிவிடும்.

அரசருடைய விசேட அதிகாரம் கையாளப்படுவதிலிருந்தும், பாராளுமன்றத்தின் இரு சபைகளுக்கிடையே உள்ள உறவுகளிலிருந்தும், டைசி எடுத்துக்காட்டிய விளக்கங்களை விட விரிவான இயல்போடு உள்நாட்டு அரசாங்கத்தைப் பற்றிய வழக்கங்கள் அமைந்திருக்கின்றன. இந்த வழக்கங்கள் சிக்கலான அரசாங்க இயந்திரம் முழுவதும் வேலைசெய்யுமாறு இக்காலத்தில் உதவுகின்றன. ஒரு காபினெட் ஒரு கோட்பாட்டைத் தீர்மானிக்கும்போது, தான் விரும்பிய செயலைச் செய்வதற்குச் சட்டப்படியான அதிகாரத்தைப் பெற்றிருக்கிறதா என்று அது அறியவேண்டும். வழக்கத்தின் மூலமாகக் காபினெட்டுக்கு ஒப்படைக்கப்பட்ட அரசருடைய விசேட அதிகாரங்களை மட்டுமே அது கையாளுதல் வேண்டுமென்ற வரம்பு இல்லை. பொதுமக்கள் மன்றத்தில் (house of Commons) தனக்குப் பெரும்பாலானவர்மீது இருக்கும் கட்டுப்பாட்டு அதிகாரத்தின் மூலமாகக் காபினெட், சட்டபூர்வமான அதிகாரங்கள் தனக்கு முன்பே இல்லாமலிருந்தால், அவற்றை ஏற்றுக் கொள்ளக் கூடிய நிலையில் சாதாரணமாக இருக்கிறது. அரசியலமைப்பின் முறையிலே (constitutional system) ஒருமைப்பாடு ஏற்படும்படி உறுதி செய்வதும், முக்கியமாகப் பல்வேறு ஆட்சித்துறைகளுக்கிடையே எழும் கொள்கை முரண்பாடுகளும், செயல் முரண்பாடுகளும் தோன்றுமல் தடுப்பதும்; கூடுமானல் அவற்றைத் தீர்ப்பதும், காபினெட்டின் பொறுப்பு ஆகும். இத்தகைய செயல்களிலெல்லாம், அதனுல் விரும்பப்படும் நோக்கம் நிறைவேறுவதற்கு ஏற்ற விதிகளும், செயல் முறைகளும் தோன்றுகின்றன. குழு அல்லது கமிட்டி முறை

(committee system) காபினெட் அமைப்புக்கு உள்ளாகத் தோன்றியிருப்பது, சட்டத்துக்கு வெளியே, அல்லது அதனுல் விதிக்கப்பட்டதற்குக் கூடுதலாக உள்ள ஒரு வளர்ச்சி ஆகும். அரசியலமைப்பு முறை செயல்படுவதிலே வழக்கங்களுக்கு உள்ள பங்கைப்பற்றி டைசி தனது கருத்துகளை வகுத்துக் கூறிய காலத்துக்குப் பின்னர், மேற்படி வளர்ச்சியானது காபினெட் அரசாங்க முறையில் முக்கியமான மாறுதல்களைப் புகுத்தியிருக்கிறது. இந்த வளர்ச்சியை எவரும் ஒரு வழக்கத்தில் வந்த வளர்ச்சியாக விரித்துக் கூறலாம். மிக விரிவான கமிட்டி முறையை அமைச்சர்கள் கலந்து ஆலோசிக்க வேண்டுமென்பதான ஒரு கடமை சட்டத்தின் மூலம் அமைச்சர்களின்மீது விதிக்கப்பட்டிருப்பதாக ஒருபோதும் கருத முடியாது. ஆயினும் இத்தகையதொரு அமைப்பு இல்லாமல் ஒரு தற்கால அரசாங்கம் நடைபெற முடியுமென்று எவரும் எண்ண முடியாது. ஆகையால் எல்லா வகைப்பட்ட நோக்கங்களையும், கருத்துகளையும் நாம் மனதில் கொண்டு பார்க்கும்போது, காபினெட் என்ற அமைப்பே, அரசருக்கும் குடிமக்களுக்கும் இடையே நல்ல அரசியலுறவை ஏற்படுத்துவதற்காகத் தோன்றிய ஒரு வழக்கமான அல்லது சம்பிரதாயமான செயலினுல் (convention) தோற்றுவிக்கப்பட்டிருக்கிறது என்ற நிலைமை நமக்குப் புலனுகின்றது. வழக்கத்தின் மூலமாகத் தோன்றிய இந்த நிறுவனத்தினின்றும் (conventional institution), இந்த நூற்றுண்டிலே தற்காப்புக்குழு (Defence Committee), தற்காலிகக் குழுக்கள் (adhoc committees) முதலிய முறையான குழுக்கள் போன்ற பல செயல் முறைகள் தோன்றியுள்ளன. தற்காலிகக் குழு தனிப்பட்ட நோக்கத்துக்காக அமைக்கப்படுவது; ஆனுல் அது அதன் மூலாதார நோக்கம் நிறைவேறிய பின்னரும் நடைமுறையில் பெரும்பாலும் இருந்துவருகிறது. காபினெட்டுக்கு வெளியே, அமைச்சர்களைத் தலைவர்களாகக் கொண்ட குழுக்கள் இருக்கின்றன; இவற்றுக்கு எடுத்துக்காட்டுகள், முன்னுளிலிருந்த பேரரசுத் தற்காப்புக் குழுவும் (committee on Imperial Defence), இப்பொழுது விவாதத்துக்கு உள்ளாகி இருப்பதான விலைகள், உற்பத்தி, வருமானம் ஆகியவைபற்றிய ஆலோசனைக் குழுவைப் போன்ற பல்வேறு ஆலோசனைக் குழுக்களும் ஆம். இவற்ருேடுகூட அரசர் குழுக்களும் (Royal Commissions), பாராளுமன்றத்தின் எந்தச் சபையினுலும் அமைக்கப்படும் தேர்வுக் குழுக்களும் (select committees), ஆட்சித் துறைகளின் அமைச்சர்களினுல் அமர்த்தப்படும் குழுக்களும் இருக்கின்றன. இவையெல்லாம் கொள்கையை வகுப்பதில்

ஒரு முக்கியமான பங்கு கொள்ளுகின்றன. இவை அமர்த்தப் படுதல் வேண்டுமென்பதாக இவற்றுள் எதற்காவது ஒரு சட்டபூர்வமான ஆதாரம் கிடையாது. ஆனால், அவற்றைச் சேர்த்து எண்ணிப் பார்த்தாலல்லாமல், அரசாங்க இயந்திரம் செயல்படுவதைப்பற்றி ஒரு முழுமையான கருத்தை எவரும் கொள்ளமுடியாது. அவற்றின் நோக்கமெல்லாம் ஒரு குறிப்பிட்ட பிரச்சினையின்மீது பொதுமக்கள் கவனத்தைத் திருப்புவது ஆகையால், அவை அரசருடைய அமைச்சர்களுக்கும், பொதுமக்களுக்கும் இடையே நல்லுறவை ஏற்படுத்தும் பொருட்டு ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன. இத்தகைய நல்லுறவை ஏற்படுத்துவதுதான், அரசியலமைப்புச் சட்டத்துக்குத் துணையாக வழக்கங்களைச் சேர்த்து வைப்பதற்கு முக்கியமான காரணம் ஆகும்.

வழக்கங்களும், அரசாங்க அதிகாரம் கூடுதலாக ஆதலும்: 1914ஆம் ஆண்டிலேயே டைசி புதியனவாகக் கண்ட வழக்கங்களிலே, பாராளுமன்றத்தில் பெரும்பான்மையான நிலையைப் பெற்றிருக்கிற எந்தக் கட்சியின் அதிகாரமும் கூடுதலாக ஆகும் ஒருபொதுவான இயல்பையும் கண்டார்.[1] 'இங்கிலாந்தில், கட்சிச் சண்டை என்பது, சுருங்கச் சொல்லின், நடைமுறையில் இருக்கிற, அல்லது ஏற்படுத்தப் படப்போகிற காபினெட்டை அமைக்கும் முக்கியமான பாராளு மன்ற உறுப்பினர்களால் நடத்தப்படுகிறது......பாராளுமன்றச் சட்டத்தினால் தோற்றுவிக்கப் பட்டிருக்கிற ஐந்தாண்டுகாலப் பாராளுமன்ற முறைப்படி, நாட்டை ஐந்து ஆண்டுகளுக்கு ஆளக்கூடிய கட்சியை அல்லது முதலமைச்சரை பிரிட்டிஷ் வாக்காளர்கள் ஒவ்வொரு ஐந்தாண்டுகளுக்கும் தேர்ந்தெடுப்பதைத் தவிர வேறொன்றும் செய்வதில்லை என்று, யாவரும் ஒத்துக்கொள்ளக்கூடிய வகையில் கூறலாம்.' பாராளுமன்றத்தின் தனி உறுப்பினரின் செல்வாக்குக் குறைந்து வருவதையும், சட்டம் செய்தல் என்பது உண்மையில் காபினெட்டிற்கே உரிய வேலையாக ஆகி விட்டதையும், அவர் கண்டார். 'இப்பொழுது உள்ள அரசியலமைப்பை ஒட்டி, இங்கிலாந்தில் மக்களாட்சியை நடத்துவதற்கு, காபினெட்டிடம் சேர்ந்துவிட்ட அதிகாரம் தேவைதான் என்பதே வெளிப்படையான உண்மை ஆகும்.'

இக்காலத்தில் மேற்கூறிய டைசியின் கருத்துகளிலுள்ள உண்மையை ஒருவரும் மறுக்கமாட்டார். இன்றைய நாளில்

[1] எட்டாம் பதிப்பின் (1915) பக்கங்கள் lv-lvii பார்க்கவும்.

ஒவ்வொரு புதிய பாராளுமன்றத்தின் தொடக்கத்திலும், எதிர்க் கட்சியிலுள்ள முக்கிய உறுப்பினர்களால் நிழல் காபினெட் (shadow cabinet) அமைக்கப்பட்டுவருவதைக் காண்கிறோம். பொதுத் தேர்தல்கள், அதிகாரத்தைக் கைப் பற்றுவதற்காக இரு கட்சிகளுக்கிடையே நடைபெறும் போட்டிகளாக ஆகிவிட்டன. லிபரல் கட்சி ஆட்சியை ஏற்கு மென்று இனிமேல் எதிர்பார்க்கக் கூடியதாக இல்லை. பல்கலைக் கழகங்களுக்கான தொகுதிகள் நீக்கப்பட்டுவிட்டபடியினாலும், சுயேச்சை வேட்பாளர்களுக்கு எங்கும் ஆதரவு கிடைப்பதற்கு வழி இல்லை ஆதலாலும், சுயேச்சை உறுப்பினர்களுக்கு உள்ள நிலைமை மாறிப்போய்விட்டது. தனி உறுப்பினரின் (private member) செல்வாக்கு மேலும் குறைந்து விட்டது. (சட்டம் இயற்றுதல் போன்ற செயல்களில்) அவர் தன்முயற்சி எடுப் பதற்கு நாற்பத்தைந்து ஆண்டுகளுக்கு முன்பு இருந்த வாய்ப்புகளைவிட இப்பொழுது உள்ள வாய்ப்புகள் குறைந்துவிட்டன. ஓரளவு போர்க்கால ஆட்சிமுறைகளின் விளைவினாலும், முக்கியமாகத் தற்கால அரசாங்க முறையின் சிக்கலான தன்மையினாலும் காபினெட்டின் அதிகாரமானது மேலும் வளர்ந்துள்ளது. போர்க்காலத்தில் காபினெட்டின் அமைப்பைப்பற்றி ஆராய்வது இங்கு நமது வேலை அன்று. ஆனால். (அக் காலத்தில்) சாதாரணக் காலத்திலுள்ள காபினெட் முறையை வேறொன்றுக்கு உட்பட்டிருக்கச் செய்ய வேண்டும்மென்பதும், கட்டுப்பாட்டு அதிகாரமானது, ஒரு சிறிய குழுவினிடம் ஒப்படைக்கப்படுதல் வேண்டுமென்பதும் செயலறிவினால் தெரியவருகின்றன. எனினும், போர்க்கால ஆட்சிகளினால் நிரந்தரமாக விட்டுச் செல்லப்பட்ட ஒரு விளைவு உண்டு; அதுவே காபினெட்டின் அதிகாரத்தை, முக்கியமாக முதலமைச்சர்களின் அதிகாரத்தைக் கூடுதலாக ஆக்கியுள்ள ஒன்று ஆகும். காபினெட்டின் அளவு ஒரே படித்தாகவே இருக்கிறது; மேலும், இந்த நூற்றுண்டின் போர்கள் ஒவ்வொன்றுக்கும் பின்னர், காபினெட்டானது அமைதிக்கால அமைப்பையும், அளவையும் திரும்பவும் பெற்றுள்ளது. அதிலுள்ள உறுப்பினர் எண்ணிக்கை பதினைந்துக்கும் இருபதுக்கும் உள்ளாகவே இருந்து வந்துள்ளது. காபினெட்டின் அதிகாரத்தைக் கூடுதலாக ஆக்கியது எது என்றால், 1917-ல் மிஸ்டர் லாயிட் ஜார்ஜினால் முதன்முதலாகத் தோற்றுவிக்கப்பட்ட காபினெட் செயலகம் (Cabinet Secretariat) என்ற நிறுவனம்தான். குறிப்பிட்ட இந்தக் காலம் வரையிலும் காபினெட்டுக்கு இதுபோன்ற முறையான நிறுவனம் எதுவும் கிடையாது. மேலும் இது

வரையிலும் ஒவ்வொரு காபினெட் கூட்டத்திலும் நடைபெற்ற அலுவலை அரசருக்குத் தெரிவித்து முதலமைச்சர் அனுப்பும் வழக்கமான கடிதத்தைத்தவிர, காபினெட் வேறு எந்த விதமான பதிவேடுகளையும் (records) வைத்துக் கொள்ளவில்லை. இவையெல்லாம் இப்பொழுது முழுவதும் மாறிவிட்டன; இப்பொழுது காபினெட்டின் முடிபுகள் (conclusions) என்றழைக்கப்படும் காபினெட்டின் தீர்மானங்களெல்லாம், அது நிறைவேற்றிய அலுவலைப்பற்றிய நம்பகமான பதிவேடுகளாகவே இருக்கின்றன. இத் தீர்மானங்களெல்லாம் எந்தச் செய்தியை அடிப்படையாகக் கொண்டிருக்கின்றனவோ, அச் செய்தியின் சுருக்கத்தையும், எந்த விவாதங்களை ஆதாரமாக உடையனவோ, அவ் விவாதங்களின் பொதுவான தன்மையையும் காட்டக்கூடிய வடிவத்தில் முடிபுகள் அமைந்திருக்கின்றன. முடிபுகள் ஆட்சித்துறைகளின் அமைச்சர்களுக்குத் தெரிவிக்கப்படுகின்றன; அவற்றை நிறைவேற்றக்கூடிய நடவடிக்கை எடுக்கப்படுமாறு உறுதிசெய்வதே, அவ்வமைச்சர்களின் கடமையாகும். இதற்கு நேர்மாறாக முற்காலத்தில், காபினெட்டின் தீர்மானங்கள் ஒவ்வொரு ஆட்சித்துறையின் பொறுப்புகளை எவ்வளவில் பாதிக்கின்றனவோ, அவ்வளவுக்கு அவற்றுக்குத் தனது சொந்த விளக்கங்களை அளிப்பதே காபினெட்டின் ஒவ்வொரு உறுப்பினரின் அலுவலாக இருந்தது. காபினெட்டின் ஆற்றலையும் பயனையும் கூடுதலாக ஆக்குவதற்கு இந்த ஒரு பணியை மட்டுமே காபினெட் செயலகத்தின் தோற்றம் செய்யவில்லை. இந்த நிறுவனம், காபினெட்டும், அதனுடைய பல்வேறு குழுக்களும் தமது கூட்டங்களை நடத்துவதற்கு முன்னதாக, அவற்றுக்குத் தேவையான செய்திகளைச் சேகரிப்பதிலும், பிரித்துக் கொடுப்பதிலும், வெகுவாக வளர்ந்துள்ளது. மேலும், இது ஆட்சித் துறைகளுக்கு இடையே உள்ள அலுவலையெல்லாம் முரண்பாடின்றி இணைப்பதிலும் (co-ordination) வெகுவாக முன்னேறியுள்ளது. இந்தச் செயலகத்துக்கு ஒரு ஆட்சித்துறைக்கு உள்ளதுபோல நிர்வாக அலுவல்கள் இல்லை; ஆயினும் அது காபினெட்டிலும், காபினெட் குழுக்களிலும் எடுக்கப்பட்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்படுகின்றனவா என்று கவனிப்பதிலும், செய்திகளைச் சேகரிப்பதிலும், அறிக்கை செய்வதிலும், பிரித்தளிப்பதிலும் மிகவும் பயனுள்ள ஒரு கருவியாக ஆகியிருக்கிறது.

முதலமைச்சரின் நிலைமையும் அண்மையில் சில ஆண்டுகளாக மாறுதலுக்கு உட்பட்டிருக்கிறது. இவ்வாறு மாறுதல்

ஒன்றும் நடைபெறவில்லை என்பதாக முதலமைச்சர் அடிக்கடி மறுத்துக் கூறியபோதிலும், சர் வின்ஸ்ட்டன் சர்ச்சிலை சமநிலையிலுள்ளவர்களுள் (equals), ஒருவர் என்பதாக, காபினெட்டிற்கு உள்ளேயோ, அல்லது வெளியிலோ எவரும் கருத மாட்டார். எந்த ஒரு குறிப்பிட்ட முதலமைச்சரும் காபினெட்டின் மீது செலுத்தக்கூடிய ஆதிக்கமும், எந்த ஒரு வழக்கமான செயலையும் போலவே, அவருடைய ஆளுமையையும் (personality) பொறுத்திருக்கிறது என்பதில் ஐயமில்லை. முறையாகப் பதிவு செய்யப்படாமல், ஆனால் செயல்படுத்தப்படும் பொருட்டு ஒவ்வொரு ஆட்சித் துறையின் அமைச்சருடைய திறனுக்காக விடப்படுகின்ற தீர்மானங்களைச் செய்கின்ற ஒரு குழுவின் தலைவராக மட்டும் இப்பொழுதெல்லாம், முதலமைச்சர் இருப்பதில்லை. இப்பொழுது, அவர் தேவையான நடவடிக்கை எடுக்கப்படும்பொருட்டு ஆட்சித்துறை அமைச்சர்களுக்குத் தெரிவிக்கப்படும் தீர்மானங்களைச் செய்கின்ற ஒரு நிர்வாகக் குழுவின் தலைவர் ஆவார். இந்த நிலையில் பார்க்கும்போது, அவர் காபினெட் செயலகம் காபினெட்டின் முடிவுகளை அமைச்சர்களுக்கு முறையாகத் தெரிவிக்கும் பழக்கத்தைத் தொடங்குவதற்கு முந்திய நாளிலிருந்ததைவிட, செயலைத் தூண்டுவதற்குரிய மிக்க வலுவான நிலையிலே, காபினெட்டில் தலைவராக இருப்பதனால் காணப்படுகிறார்.

ஒவ்வொரு முதலமைச்சருக்கும் தன்னோடு தொடர்பு வைத்துக்கொள்ள வேண்டிய ஆட்சித்துறை ஒன்று உண்டு, எப்பொழுதும் சிக்கலான தன்மையிலுள்ள அயல்நாட்டு உறவுகள், அயல்நாட்டு உறவுச் செயலரின் வேலையோடு முதலமைச்சர்கள் நெருக்கமாகத் தொடர்பு கொண்டிருத்தல் வேண்டுமென்பதை வலியுறுத்துகின்றன. உலகப் போருக்கு முன்பெல்லாம் அயல்நாட்டு விஷயங்கள் காபினெட்டின் நேரத்தை அவ்வளவாக எடுத்துக் கொண்டதில்லை. அண்மையிலே, முதலமைச்சரும் காபினெட்டும் அயல்நாட்டு உறவு அலுவலைப் பற்றிப் பெரும்பாலும் கவனம் செலுத்தி வருவது தெளிவாகத் தெரிகிறது.

காபினெட் அரசாங்கத்தின் திறமையைக் கூடுதலாகச் செய்யக்கூடிய எந்த ஒரு செயல் முறையும், ஒரு அமைச்சர் அவையினிடத்தே மிகவும் கூடுதலாக அதிகாரத்தை அமைக்கவே செய்கிறது. இரண்டாம் உலகப்போர் தொடங்கும் வரையில் அரசியலமைப்பில் காணப்பட்ட ஒரு இயல்பு என்னவெனில்

பொதுமக்கள் சபையில் அமைச்சரவைகளுக்கு இருந்த வலிமையே ஆகும். எடுத்துக்காட்டாக 1905ஆம் ஆண்டிலிருந்து 1910ஆம் ஆண்டு வரையிலும், 1931ஆம் ஆண்டிலிருந்து 1939ஆம் ஆண்டு வரையிலும் இவ்வியல்பு காணப்பட்டது. எதிர்க் கட்சிகளின் வலிமைகள் குன்றியதையும், கூட்டு அரசாங்கங்கள் அல்லது தேசீய அரசாங்கங்கள் அலுவலை ஏற்றதனால் கட்சி அரசாங்க அமைப்பின் அடித்தளமானது தகர்ந்து விட்டது என்பதையும் மேற்கூறிய இயல்பு காட்டுகிறது. கட்சி நலன்களும் தேசீய நலன்களும் ஒன்றே என்று கோருவதும், எதிர்க்கட்சியானது அரசாங்கத்தின் செயல்களை இடித்துறைத்து, கூடுமானால் எதிர்த்து, ஒரு எதிர்க்கட்சிக்கு மரபு வழியாக உரிய அலுவலைச் செய்யுமானால், அது தேசீய நலனுக்கு மாருக இருப்பதாக அதனுடைய நிலைமையைப் பொய்யான ஒன்ருக ஆக்கிக் கூறுவதும் ஆகிய ஒரு புதிய போக்கு தோன்றிற்று. ஆயினும், அரசாங்கமானது எதிர்க்கட்சியோடு இணைந்து ஆளுதல் வேண்டுமென்பதே பாராளுமன்ற அரசாங்கத்துக்கு இருக்கவேண்டிய ஒருமுக்கியமான நிபந்தனையாக இருக்கிறது. எத்தகைய வேறுபாடுகள் இருப்பினும் அவையெல்லாம் தருக்க முறையின் மூலமாக, அதில் ஒரு தரப்புக்குப் பொறுப்பாக இருக்கும் எதிர்கட்சியோடு காரண வகையாக வாதிட்டுத் தீர்த்துக் கொள்ளப்படுதல் வேண்டும். ஒரு அரசாங்கமானது, தனது நாட்டின் மதிப்புக்கும், பாதுகாப்புக்கும் பொருந்துமாறு வெற்றியாக நிறைவேற்றுமாயின், எதிர்கட்சியினுடைய கடமையானது நாட்டின் நலனுக்கு முரணுடையதாக ஆகிறது. இதே போக்கில் ஆட்சியிலிருக்கும் கட்சியினுடைய கட்சிப் போக்கிலமைந்த அதிகாரமானது விரிவடைகிறது. 1940ஆம் ஆண்டில் சர்ச்சிலின் அரசாங்கம் அலுவலை ஏற்ற நாளிலிருந்து 1945ஆம் ஆண்டின் தொடக்கக்காலம் வரையிலும், இரண்டாம் உலகப்போர் நடைபெற்ற காலம் முழுவதும், கட்சிப் பூசலானது நின்றிருந்தது. 1945ஆம் ஆண்டிலிருந்து 1950ஆம் ஆண்டு வரையிலும், தொழிற் கட்சி அரசாங்கமானது பொது மக்கள் மன்றத்தில், மிகப் பெரும்பான்மையான நிலைமையைத் தன்வசம் வைத்திருந்து, அலுவலை ஏற்றிருந்தது. இந்தக் குறிப்பிட்ட காலம் வரையிலும், மேலே குறிப்பிட்ட போக்குகள் தொடர்ந்து வந்துள்ளதாகத் தோன்றுகிறது. 1950ஆம் ஆண்டிலிருந்து, அடுத்தடுத்துத் தோன்றிய அரசாங்கங்கள், ஆறிலிருந்து அறுபதுவரை மாறுதலடைந்து கொண்டு வந்த பெரும்பான்மை நிலைமைகளைப் பெற்றே அலுவலை ஏற்று வந்திருக்கின்றன. அரசாங்கத்துக்கும், எதிர்க்கட்சிக்கும்

இடையே ஒரு குறுகிய வேறுபாடே இருக்குமானுல், அத்தகைய நிலைமை, கடந்த காலத்தில் திறமாக அதிகார மானது நீண்ட காலத்துக்குக் கையாளப்படுவதைத் தடுத்திருக்கும். அரசாங்க இயந்திரத்தைக் கட்டுப்படுத்துவதன் மூலமாகவும், செய்திகளைத் தரும் பல்வேறு ஆதாரங்களிலிருந்தும் அரசாங்கங்கள் தங்களுக்கு வேண்டிய அதிகாரங்களைப் பெறுகின்றன. அவ்வா றிருந்தாலும், எதிர்க்கட்சிகள் அந் நிலையில் அரசாங்கத்தைப் பொது மக்கள் மன்றத்திலே தோற்கடிக்கக்கூடுமாயினும், அவை (அவ்வாறு) செய்யாமல் மிகச் சிறிய பெரும்பான்மை நிலைமைகளைச் சார்ந்துள்ள (slender majorities) அரசாங்கங்களின் வாழ்நாள் (life) அவற்றின் முழு அளவுக்கும் இருக்குமாறு விட்டு விடுகின்றன. இதற்குப் பல காரணங்கள் இருக்கின்றன. அடிக்கடி தேர்தல்கள் நடக்கும்படி செய்வதின் மூலம் சமுதாயத்தின் வாழ்க்கை பிளவு படும்படி செய்ய விருப்பமில்லாதிருப்பதே மேற்படிக் காரணங்களுள் ஒன்று; ஆயினும், எவ்வளவுதான் ஒரு எதிர்க் கட்சியினுல் நெருக்கப்பட்டாலும், அரசாங்கங்கள் அதிகாரத்தில் தொடர்ந்து இருப்பதற்கு முக்கியக் காரணம் அவைகளின் கொள்கைகளுக் கிடையேயுள்ள வேறுபாடானது சுருங்கிவருவதே என்று தெரிகிறது. இத்தகைய நிலைமை தோன்றுவதற்கும் ஒரு முக்கிய காரணம் நாட்டில் மூன்ருவது பெரிய கட்சியாக இருந்துவந்த லிபரல்கள் விரைவாக மறைந்து வந்ததே ஆகும். எவ்வாறெனில் வெளிப்படையாக ஒன்றுக்கொன்று முரண்பட்டு நிற்கும் கன்சர்வேட்டிவ், தொழில் ஆகிய இரு கட்சிகளுக்கு மிடையேயுள்ள வேறுபாடுகளை நாம் ஆராய்ந்து பார்க்குமிடத்து, (மூன்ருவது) ஒரு தனியான கட்சிக்கு ஒரு தனிப்பட்ட கொள்கைய நாம் கண்டுபிடிப்பது கடினமென்பதை அனுபவம் நமக்குக் காட்டுகிறது. எல்லாக் கட்சிகளுமே, சமூக நல அரசு என்பதன் கடமைகளையும், தேசிய அலுவல்களிலும், சர்வதேச அலுவல்களிலும் சட்டத்தின் ஆட்சி என்ற கருத்தையும், செயல் முறைக்கு இயன்ற அளவில் நமது கூட்டாளிகளுக்கு (Allies) ஏற்புடைத்தாகிய ஒரு தற்காப்புக் கொள்கையையும் ஒத்துக் கொள்கின்றன. பொருளாதாரத் துறையைத் தவிர, மற்றவற்றில் பெரும் முரண்பாடுகளுக்கு இடமில்லை. பொருளாதாரத் துறையிலும்கூட (வாணிபத்தில்) மிச்சமில்லாமல் செலுத்திச் சமநிலையை அடைதல் (சமநிலைச் செலுத்துகை) (balance of payments) என்பதும், எந்த அரசாங்கமும் கட்டாயமாக ஏற்க வேண்டிய பொறுப்பே ஆகும்.

வழக்காறுகளைப் பற்றி டைசி பிற்காலத்தில் கொண்டிருந்த கருத்துகள் : அரசியலமைப்பின் வழக்காறுகளைப் பற்றிய டைசியின் ஆராய்ச்சியானது, அவருடைய கருத்துகளை வெகுவாகக் குறைகூறும் ஒரு ஆசிரியரால், ஆங்கிலப் பொதுச்சட்டத்தின் வளர்ச்சிக்கு அளிக்கப்பட்ட ஒரு சிறப்பான கொடை என்று பொறுத்தமாகக் குறிப்பிடப்படுகிறது.[1] அரசியலமைப்பின் அல்லது அரசியலின் உள்ளீடாக விளங்குகின்ற பல்வேறு வகைப்பட்ட வழக்கங்களையும், செயல் முறைகளையும், கோட்பாடுகளையும், கொள்கைகளையும் குறிப்பிடுவதற்கே அவர் வழக்கங்கள் அல்லது வழக்காறுகள் (conventions) என்ற சொல்லைக் கையாண்டார். அவற்றின் உட்பொருளை யெல்லாம் அவர் வியக்கத்தக்க வகையில் விளக்கிய பின்னர், அரசியலமைப்பில் உள்ள சட்டஇயல்பான கூறுகளுக்கும், வழக்க இயல்பான கூறுகளுக்கும் இடையே உள்ள தொடர்பை விளக்கினார். வழக்காறுகளுக்குக் கீழ்ப்படிதலுக்கான காரணங்களை அவர் சுட்டிக் காட்டினார். அக்காரணங்கள் இக் காலத்தில் ஒத்துக்கொள்ளப்படாவிட்டாலும், அவை, அரசியற் கொள்கையை அவர் ஆராய்வதற்கு இவ் வகையான வாய்ப்பை அளித்தன என்று நாம் நிறைவு கொள்ளலாம்.

1958ஆம் ஆண்டில் வழக்காறுகள் என்ற துறையை ஆராய்வதென்றால், அது 1885ஆம் ஆண்டில் ஆராய்வுக்குக் கிடைத்த வழக்காறுகளைவிட அளவில் மிகப் பெரியதாக இருக்கும். அந்தக் காலத்திலிருந்து, காமன்வெல்த் உறுப்பு நாடுகளுக்கிடையேயுள்ள அரசியலமைப்புக்குரிய தொடர்புகளை உறுவாக்கும் வழக்காறுகள் மிகவும் வளர்ந்து உள்ளன. ஆசிரியர் டைசி தனது நூலின் எட்டாம் பதிப்பின் முன்னுரையில், '1885ஆம் ஆண்டுக்கும் 1914ஆம் ஆண்டுக்கும் இடைப்பட்ட காலத்தில் குறிப்பிடத்தக்க மாறுதல்கள் ஏதேனும் நடைபெற்றனவா?' என்று தனக்குத் தானே ஒரு கேள்வியைக் கேட்டுக்கொண்டார். இதற்கு இரு வகையான விடை இருந்ததை அவர் கண்டார். ஏனென்றால் (A) புதிய வழக்காறுகள் தோன்றிவிட்டன; (B) பழைய வழக்காறுகள் நிறைவேற்றப்பட்ட சட்டமாக மாறிவிட்டன, அல்லது அதற்கு மாறாக, அவை நடைமுறையில் செயல்படுவது சட்டத்தில் செய்யப்பட்ட மாறுதல்களினால் மிகவும் பாதிக்கப்பட்டன. இவற்றுள் இரண்டாவ

[1] சர் ஐவர் ஜென்னிங்ஸ் எழுதிய டைசியைப்பற்றிய புகழுரை, 13 பொது ஆட்சித் துறை, 2.

தாக கூறப்பட்ட வழக்காறுகளின் தொகுப்புக்கு ஒரு எடுத்துக் காட்டாக டைசி அப்பொழுது அண்மையில் நிறைவேற்றப் பட்ட 1911ஆம் ஆண்டின் பாராளுமன்றச் சட்டத்தைக் குறிப்பிட்டாரென்ருல், இப்பொழுது தொகுப்புக்குச் சிறந்த எடுத்துக் காட்டாக இருப்பவை 1931ஆம் ஆண்டின் வெஸ்ட் மின்ஸ்டர் சட்டமும், அதற்குப் பின்னர் அதையொட்டிச் செய்யப்பட்ட சட்டங்களும் ஆகும். இவ்வாறு செய்யப் பட்ட சட்டங்கள் காமன்வெல்த்திலுள்ள ஆசிய, ஆப்பிரிக்க உறுப்பு நாடுகளைப் பாதிக்கின்றன. இவை, முன்பு டொமீனியன்களைப் பொறுத்தவரையில் கையாளப்பட்ட சட்டம் இயற்றும் அதிகாரத்தைக் கட்டுப்படுத்திய வழக்காறுகளுக்குப் பொருந்தி இருக்குமாறு சட்ட வடிவத்தை ஆக்கியுள்ளன. டைசி ஆய்வு செய்த வழக்காறுகளுள், ஒரு பொதுத் தேர்தலில் ஒரு அமைச்சருக்கு ஏற்படும் தோல்விக்குப் பின்னர் அவர் தனது அலுவலைத் துறந்து விடும்படிசெய்யும் வழக்காறு ஒன்று ஆகும். 1860ஆம் ஆண்டுக்கும் 1886ஆம் ஆண்டுக்கும் இடையே இவ்வாருன சூழ்நிலைகளிலே நான்கு தடவைகள் ஒரு முதலமைச்சர் பாராளுமன்றத்தைக் கூட்டுவதற்குக் காத்திராமலே அலுவலைத் துறந்தார். இவ்வாறு செய்தல் 1834ஆம் ஆண்டில் பீல் (Peel) என்பவரால் நிறுவப்பட்ட ஒரு முன் நிகழ்வு அல்லது முற்சான்றுக்கு (precedent) முரண்பட்டதாகும். இந்தப் புதிய ஒரு வழக்காறு 'வாக்காளர்களே உண்மையில் அரசியல் சார்பான மேலான அதிகாரத்தை உடையவர்கள்' என்பதையும், 'ஒரு பொதுத் தேர்தலானது ஒரு குறிப்பிட்ட அரசியற் கட்சியே புதிய பாராளுமன்றம் இருக்கக்கூடிய வாழ்நாளுக்கு அலுவலை ஏற்கும்படி செய்யத் தீர்மானிக்கும் இயல்புடையது, ஒருசில சூழ்நிலைகளில் அத்தகைய காலத்துக்கு ஒரு குறிப்பிட்ட முதலமைச்சரைத் தேர்ந்தெடுக்கவும் தூண்டுகிறது' என்பதையும் ஒப்புக்கொள்வதாக அவர் கருதினுர்.

அவர் எழுதியதற்கு முந்திய முப்பது ஆண்டுகளிலே தோன்றிய வழக்காறுகளிலே அவரால் சுட்டிக் காட்டப்பட்ட எடுத்துக்காட்டுகள் வருமாறு: (1) பிரிட்டிஷ் மக்களுடைய உள்ளார்ந்த (ஒழுக்கச் சார்பான) உணர்ச்சிகளைத் (moral feelings) தாமும் பகிர்ந்து கொள்ளவும், அவற்றை வெளிப்படுத்தவும் ஆட்சி செய்யும் அரசருக்கு இருக்கும் பழக்கம்; (2) தடங்கலை (obstruction) தடுப்பதற்காக பொதுமக்கள் மன்றத்தினுல் கையாளப்படும் செயல்முறை; அதாவது சட்டம் இயற்றும்

அலுவலை விரைவு படுத்துவதற்காக முடிவுறச் செய்யக் கூடிய (closure) பல வழிகளைப் பின்பற்றுதல்.

இத்தகைய கருத்துகளை ஆதரிக்கக்கூடிய, இவற்றுக்குப் பிற்பட்ட காலத்திய நிகழ்ச்சிகள் யாவை?

A. (1) **பொதுத் தேர்தலிலேற்பட்ட தோல்வியை ஒட்டி ஒரு அமைச்சரவை அலுவலைத் துறத்தல்:** வேலையில்லா நிலைமையை நீக்கும்பொருட்டுத் தாம் கொண்டுவரும் ஒரு காப்புவரிகள் திட்டத்திற்கு (நாட்டினரின்) ஒப்புதலைப் பெறும் நோக்கத்துடன் பால்ட்வின் என்ற முதலமைச்சர் 1923ஆம் ஆண்டில் பாராளுமன்றத்தைக் கலைக்கும்படி ஆலோசனை கூறினார். தேர்தலுக்குப் பின்னர் அவருடைய கட்சியே எண்ணிக்கையில் மிகுதியாக இருந்தது. எனினும் தொழில், லிபரல் முதலிய எதிர்க்கட்சிகளுக் கெதிராக அது முற்றிலும் பெரும்பான்மை நிலையைப் (absolute majority) பெற்றிருக்கவில்லை. கன்சர்வேட்டிவ் அரசாங்கமானது பாராளுமன்றத்தைக் கூட்டிற்று. ஆனால், அது தோற்கடிக்கப்பட்டு அலுவலைத் துறந்தது. அதற்கு அடுத்த ஆண்டில் லிபரல் கட்சியினரால் ஆதரிக்கப்பட்ட காலத்தில் தவிர மற்ற காலங்களில் சபையில் மூன்றில் ஒரு பங்கினருடைய வாக்குகளையே பெற்றிருந்த ராம்சே மாக்டனல்டின் தொழிற்கட்சி அமைச்சரவையானது, ஒரு அரசியல் சாட்டு வழக்கை (அல்லது காம்பெல் வழக்கை) அது திரும்பப் பெற்றது என்ற ஒரு கேள்வியின் காரணமாகத் தோற்கடிக்கப்பட்டது. இதில் முதலமைச்சர் சபையைக் கலைத்துவிடுமாறு ஆலோசனை கூறினார். கன்சர்வேட்டிவ் கட்சியினர் பெரும்பான்மை நிலையுடன் வந்தனர். அமைச்சரவையானது பாராளுமன்றத்தைக் கூட்டாமலே அலுவலைத் துறந்தது. 1929ஆம் ஆண்டின் பொதுத் தேர்தலில் கன்சர்வேட்டிவ் கட்சியினர் பெரும்பான்மை நிலையை இழந்துவிடவே, அமைச்சரவை அலுவலைத் துறந்தது. பாராளுமன்றம் கூடுவதற்கு முன்னரே, தனக்கு ஒரு பெரும்பான்மை நிலை இல்லாவிட்டலும், ஒரு தொழிற் கட்சி அமைச்சரவை அலுவலை ஏற்றது. இதே போலவே 1945ஆம் ஆண்டில் வின்ஸ்ட்டன் சர்ச்சிலும், 1951ஆம் ஆண்டில் அட்லியும், பொதுத் தேர்தலின் முடிவுகள் தெளிவாகத் தெரிந்த உடனேயே தங்களுடைய அலுவல் துறப்புக் கடிதங்களை (அரசரிடம்) அளித்துவிட்டனர்.

டைசி கூறிய புதிய வழக்காற்றுக்கு 1923ஆம் ஆண்டில் மிஸ்ட்டர் பால்ட்வின் கட்டுப்பட வேண்டுவதில்லை என நாம்

ஒப்புக்கொள்ளலாம். ஏறக்குறைய ஒத்த எண்ணிக்கைகளி லேயே மூன்று எதிர்க்கட்சிகளைப் பொதுமக்கள் மன்றத்துக்கு வாக்காளர் தொகுதி தேர்ந்தெடுத்ததனால் தோன்றிய இந்த நிலைமையானது, வாக்காளரே 'உண்மையில் அரசியற் சார்பான மேலான அதிகாரி' (true political sovereign) என்பதை நாம் ஒப்புக்கொள்ள முடியாதபடி செய்கிறது. எவ்வாறெனில், 'இந்த மேலதிகாரி 1923ஆம் ஆண்டில், ஆஸ்ட்டினின் சொற்களில் கூறப்படுதல் வேண்டுமெனில், 'ஒன்ரேடொன்றுதொடர்புடையசொற்களாகிய'ஒப்படைக்கப் பட்ட அதிகாரம்' (delegation), 'பிரதிநிதித்துவம்' (representation) என்பனவற்ருல் உணர்த்தப்படுகின்ற' நம்பிக்கையை (trust) எந்த ஒரு கட்சியினிடத்தும் சுமத்தத் தவறி விட்டது. 1924ஆம் ஆண்டிலும், மீண்டும் 1945ஆம் ஆண்டிலும், 1951ஆம் ஆண்டிலும் ஒரு புதிய கட்சியே அதனால் ஒப்புக் கொள்ளப்பட்ட தலைவரை முதலமைச்சராகக் கொண்ட அரசாங்கத்தை ஏற்க வேண்டுமென்று பொதுத் தேர்தல் தீர்ப்பளித்தது. 1929ஆம் ஆண்டில் இத் தீர்ப்பு அவ்வளவு தெளிவாக இல்லை.(அப்பொழுது)தொழிற்கட்சி அமைச்சரவை யானது மற்ற இரு கட்சிகளுக் கெதிராகவும் ஒரு வலுவான பெரும்பான்மை நிலை தனக்கு இல்லாமலே அலுவலை ஏற்ற போதிலும், ஆளும் கட்சி மாறவேண்டுமென்ற ஒரு விருப்பம் தெளிவாக இருந்ததையே தேர்தல் எடுத்துக் காட்டிற்று[1].

(2) **பிரிட்டிஷ் குடிகளின் ஒழுக்கஞ் சார்ந்த உணர்ச்சி களைத் தாம் பகிர்ந்து, அவற்றை வெளிப்படுத்துவதற்கு ஆளும் அரசருக்கு இருக்கும் பழக்கம்:** (a) அரசர் ஐந்தாம் ஜார்ஜ் 1914-18ஆம் ஆண்டுகளில் தனது செயல்களின் மூலமாகவும், 1928-29ஆம் ஆண்டுகளில் அவர் நோயுற்ற போது அவரிடம் மக்கள் காட்டிய பரிவு உணர்ச்சியின் மூலமாகவும், 1935ஆம் ஆண்டில் அவருடைய ஆட்சியின் வெள்ளி விழாவின்போது அவருக்கும், மேரி அரசிக்கும் அளிக்கப்பட்ட பாராட்டுதலின் மூலமாகவும் (இவ் விழாவை நடத்துவதற்காகத் தீர்மானிக்கப்பட்டபோது அதனை அரசிய லில் சிலர் தமக்குச் சாதகமாகப் பயன்படுத்திக்கொள்ள முயன்ற போதிலும்), மேற்படி அரசர், ஓர் அரசரிடத்து எதிர்

[1] அமைச்சரவைகளைத் தேர்ந்தெடுப்பதில் மக்களே மிக முக்கியமான பங்கு பெறுவரென்பதைப் பற்றிய முழு விவாதத்துக்கு Emden என்பவர் எழுதிய The people and the Constitution (2ஆம் பதிப்பு) என்ற நூலின் 159-166ஆம் பக்கங்களைப் பார்க்கவும். மக்களிடத்துக் கொடுத்த உறுதிமொழிக் கோட்பாட்டிற்கு Jennings எழுதிய The Law and the constitution (பக்கங்கள் 162-165, 4ஆம் பதிப்பு), Cabinet Government (3ஆம் பதிப்பு, 503-509ஆம் பக்கங்களையும் பார்க்கவும்.

பார்க்கப்படுதற்குரிய ஒழுக்க விதிகளுக்குரிய மதிப்பை முழுமையும் எடுத்துக் காட்டினர். இதனையும், பின்வரும் செய்தியையும் இங்குக் குறிப்பிடலாம். (b) அரசர் எட்டாம் எட்வர்ட், தமது தகப்பனருடைய குடிமக்களுள் மிகவும் தாழ்ந்த நிலையிலுள்ளவர்களோடும், மிகவும் ஒதுக்கப்பட்டிருந் தவர்களோடும் மிகவும் நெருங்கிய தொடர்பு கொண்டிருந்தார். இதன் மூலமாகவே அவர் ஒழுக்க விதிகளை வளர்க்க முயன்ருர். அவர் தனக்கு ஆலோசனை கூறியவர்கள் உணர்ந்ததைப் போல,இப் புதிய வழக்கம் தனது சொந்த வாழ்விலும்கையாளப் படுதல் வேண்டுமென உணர்ந்தார். இந்த 'அரசியல் பழக்கத்தை' டைசி சேர்த்துக் குறிப்பிட்டது சரியென்ருகு மாயின், இது எவ்வளவுதான் மறைமுகமாகச் செயல்படுத்தப் பட்டபோதிலும்,இது ஒரு சரியான சட்டத்தின் கட்டுப்படுத்தும் ஆற்றலுக்கு மிகவும் தெளிவாக அப்பாற்பட்ட தென்பதையும் நாம் காணலாம்.[1] இந்த வழக்காறு மீறப்படுமேயானல், அரசருக்குக் கெதிராகவோ, அல்லது அவருடைய திருமணத் துக்குப் பொறுப்பேற்றுள்ள அவருடைய ஆலோசகர்களுக் கெதிராகவோ, அவர் அரியணையில் தொடர்ந்து இருக்கத் தீர்மானித்தால், நீதிமன்றங்களில் நடவடிக்கை எடுக்கப்படு மென்று வாதிடுவதற்கு இடமில்லை. அரசர் ஆரும் ஜார்ஜ் தமது தகப்பனர் நிறுவிய அவைக்கள ஆட்சியைத் (Court regime) திரும்பவும் நிலை நிறுத்துவதற்காக மிகவும் விரைந்து செயல்பட்டதை நாம் காணும்போது, அவருடைய அமைச்சர்கள் மேற்படி வழக்காறு மிகவும் விரைவாக வளர விடப்பட்டதைக் கண்டு அஞ்சினர் என்று தெரிகிறது. இப்போதுள்ள ஆட்சியிலே இந்த வழக்காருனது மாட்சிமிக்க அரசியினல் ஒப்புக்கொள்ளப்பட்டிருக்கிறதென்பதற்குப் பல அடையாளங்கள் இருக்கின்றன.

(3) **தடைகளை விலக்குவதற்குப் பொதுமக்கள் மன்றம் கையாளும் செயல்முறை:** இந் நூலாசிரியரின் வாழ்நாளில் தான், அரசாங்க அலுவல்களைத் தடுக்கும் செயல்களை நீக்கு வதற்கும், முக்கியமாக மசோதாக்களை நிறைவேற்றுவதற்கும் பொதுமக்கள் மன்றம் பல வழிகளைக் கையாள வேண்டிய கட்டாயம் தோன்றிற்று. தடைச்செயலென்பது (obstruction) ஐரிஷ் சுயஆட்சி பற்றிய சர்ச்சை நடந்த காலத்தில் ஐரிஷ் உறுப்பினர்களுடைய மனப்பான்மையினல் தோன்றிற்று. சுய ஆட்சியைப்பற்றிய செய்தியானது, இந் நூலாசிரியர் தனது

[1] வழக்காறுகள் ஏன் கையாளப்படுகின்றன என்பதைப் பற்றிய விவாதத்துக்கு 15ஆம் இயலைப் பார்க்கவும்.

நூலின் எட்டாம் பதிப்புக்கு முன்னுரை எழுதும்போது அவருடைய மனதில் இருந்தது. இதற்குப் பிற்பட்ட நிகழ்ச்சிகள் இரண்டு உலகப் போர்களையும் அடுத்து வந்த ஆண்டுகளிலே பாராளுமன்ற அலுவலின் நெரிசலான தன்மையில் தோன்றின. இதில் தோன்றிய பிரச்சினை, எதிர்க்கட்சிகள் பிடிவாதமாகக் கையாளும் தடைச் செயல்களை எவ்வாறு குறைப்பது அன்று. சர்ச்சைக்கு உள்ளானதாக ஒரு சட்டம் இருக்கும்போது, அந்த மசோதா குழு நிலையில் (committee stage) பரிசீலனை செய்யப்படுவதற்குக் கையாளப்படும் முறை எவ்வாறு இருக்கிறதெனில், அரசாங்கமும், எதிர்க்கட்சியும் ஏதாவதொரு உடன்பாட்டுக்கு வந்தாலல்லாமல், பரிசீலனையில் எவ்வித முன்னேற்றமும் ஏற்பட முடியாதவாறு இருக்கிறது; அல்லது மசோதாவின் ஒவ்வொரு பாகத்தையும், அல்லது பல பிரிவுகளின் தொகுதியையும் ஆய்வு செய்வதற்கு, முதலிலேயே காலவரையறை திட்டம்போல ஏதேனுமொரு செயல்முறை வகுக்கப்படவேண்டும்.

(விவாதத்தை) முடித்தல் (closure) என்பதைப்பற்றியும், அதைப்போன்ற வேறு சில வழிகளையும் பற்றிக் கீழே மிகச் சுருக்கமாகக் குறிப்பிடப்படுகிறது:

ஒவ்வொரு மசோதாவும், பல்வேறு சிக்கலான நிலைகளின் மூலம் செல்லவேண்டியிருப்பதாலும், ஒவ்வொன்றுக்கும் காலம் தேவைப்படுவதாலும், பாராளுமன்றத்தால் கவனிக்கப் படவேண்டிய அலுவல்களும், பேசவிரும்பும் உறுப்பினர்களின் எண்ணிக்கையும் அளவில் பெருகிவருவதாலும், சொற்போர்களைக் குறைப்பதற்காகப் பல்வேறு வழிகள் கையாளப் பட்டு வருகின்றன. இவற்றுள் மிக எளிமையானதும், எதிர்க் கட்சியினர் தடைச் செயல்களைக் கையாளுவதைத் தடுப்பதற்காக முதலில் கையாளப்பட்டதுமான வழி, (விவாதத்தை) 'முடித்தல்' என்பதாகும். இதன்படி மன்றத்திலோ அல்லது குழுவிலோ, 'இக் கேள்வியை இப்போது (வாக்கெடுப்புக்கு) வைப்போம்' (be now put) என்ற ஒரு தீர்மானத்தை எந்த உறுப்பினரும் கொண்டுவரலாம். இத் தீர்மானமானது சிறுபான்மையரது உரிமைகளை மீறுவதாகும் என்ற காரணம் காட்டி, அதனை வாக்கெடுப்புக்கு விடத் தலைவர் மறுக்கலாம்; ஆயினும், அது வாக்கெடுப்புக்கு விடப் பட்டு ஏற்றுக்கொள்ளப்படுமானால், அது அப்போது நடைபெற்றுக் கொண்டிருக்கிற சொற்போரை ஒரு முடிவுக்குக் கொண்டுவருகிறது. 'இக் கேள்வியை இப்போது வாக்

கெடுப்புக்கு வைப்போம்' என்ற தீர்மானமே விவாதிக்கப் படாமல் வாக்கெடுப்புக்கு விடப்படுகிறது. (பொதுமக்கள்) மன்றத்திலேயே நூறுக்குக் குறையாத உறுப்பினர் வாக்களித்தால்தான் இத் தீர்மானம் நிறைவேற்றப்படமுடியும். வேறொரு முறையானது, 'கங்காரு முறையில் முடித்தல்' (Kangaroo closure) எனப்படும். ஒரு மசோதாவானது அறிவிக்கப்படும் நிலையில் (report stage) விவாதிக்கப்படும் போது, அதற்குக் கொண்டுவரப்படும் பல திருத்தங்களுள் (amendments) விவாதத்துக்கு உரியனவாக ஒரு சில திருத்தங்களை மட்டும் பொறுக்கி எடுப்பதற்கு மன்றத் தலைவருக்கு (speaker) அதிகாரம் இருக்கிறது. முழுச்சபை யினரும் அடங்கிய குழுவின் தலைவருக்கும் (committee of the whole House), 1934ஆம் ஆண்டிலிருந்து நிரந்தரக் குழுக்களின் தலைவருக்கும் (Chairman of Standing Committees) இத்தகைய அதிகாரம் இருக்கிறது. இவற்றைவிடத் தீவிரமான வழியே 'வெட்டுதல்' (guillotine) என்பதாகும். மன்றம் செய்யும் தீர்மானத்தின் மூலமாக, ஒரு மசோதாவின் ஒவ்வொரு நிலைக்கும் காலங்கள் வரையறுத்து ஒதுக்கப்படுகின்றன. ஒவ்வொரு காலவரையின் முடிவிலும்,குறிப்பிட்ட மசோதாவின் அப் பகுதி மேலும் விவாதிக்கப்படாமல் வாக்கெடுப்புக்கு விடப்படுகிறது. மன்றத்தினுல் நிறைவேற்றப்பட்ட ஒரு கால ஒழுங்கு ஆணையின் (time order) மூலமாக இந்த வெட்டுதல் முறையை நிரந்தரக் குழுக்களும் கையாளலாம்; இந்தக் கால ஒழுங்கு ஆணையானது, குறிப்பிட்ட நிரந்தரக் குழுவின் அலுவல் துணைக்குழுவுக்கு (Business Sub-Committee), மசோதாவுக்கு அளிக்கப்பட்டிருக்கும் கால அளவுக்கு உட்பட்டு ஒரு நேரத்திட்டத்தை வரையறுக்கும்படி அதிகாரம் அளிக்கிறது. மேலும், அது மசோதா மீண்டும் மன்றத்துக்கு அளிக்கப்பட வேண்டிய தேதியையும் உறுதி செய்கிறது.[1] 'வெட்டுதல்' வழிக்கு மாறுக, மன்றத்தினருடைய ஒப்புதலின் பேரில் நேரத்தை ஒதுக்குதல் என்ற வழியானது 1935ஆம் ஆண்டின் இந்திய அரசாங்கச் சட்டத்தைப்பற்றிய மசோதாவைக் கவனிப்பதற்குக் கையாளப்பட்டது. மேலும் சிலவற்றிலும் இவ்வழி கையாளப்படக் கூடும்.

[1] 1945ஆம் ஆண்டில் முதன் முதலாகக் கொண்டுவரப்பட்ட இந்தச் செயல் முறையானது, 1947ஆம் ஆண்டில் போக்குவரவு, நகர நாட்டுப்புறத் திட்டங்களைப் பற்றிய மசோதாக்களில் கையாளப்பட்டது. இதனுல் இவற்றில் ஒவ்வொரு மசோதாவின் பெரும்பகுதியும் குழுவில் ஆய்வு செய்யப்படாமலே போயிற்று. எனவே, அரசாங்கமும், எதிர்க் கட்சியும் பிரபுக்கள் சபையில் பெருமளவில் திருத்தங்களைக் கொண்டு வந்தனர்.

B. 1911ஆம் ஆண்டின் பாராளுமன்றச் சட்டம் காட்டுவது போல, சட்டங்களாக ஆக்கப்பட்ட வழக்காறுகள்: சட்டம் இயற்றுதலைப் பற்றிய விஷயங்களில் இரு சட்ட மன்றங்களுக்கு மிடையேயுள்ள உறவுகளை அல்லது தொடர்பு களை ஒழுங்குபடுத்தக் கூடிய விதிகள் (rules) சட்டமாக ஆக்கப்பட்டபோது, அதில் சில செயல்களை டைசி கண்டறிந்தார். அவை வருமாறு: (1) சட்டமாக ஆக்கப்பட்ட அரசியலமைப்பை ஏற்படுத்துவதில் சிறிது முன்னேற்றம்; (2) பிரபுக்கள் மன்றத்தைத் தனது ஆதரவாளர்களின் மூலம் நிரப்புவதற்காகப் (swamp) புதிதாகப் பிரபுக்களை அமர்த்து வதற்கு அரசருக்கு இருக்கும் விசேட அதிகாரத்தை (prerogative) ஒழித்துவிடாவிட்டாலும், அதற்குப் பெருந் தடைகளை விதித்தல்; (3) ஒவ்வொரு பாராளுமன்றமும் ஐந்து ஆண்டுகளென்ற முழுக்கால அளவுக்கும் நீடித்து இருக்கக் கூடிய இயல்பு (இது 1715ஆம் ஆண்டின் ஏழாண்டுச் சட்டத்தில் விதிக்கப்பட்ட ஏழாண்டுகள் என்ற கால அளவை மாற்றிற்று)—இவ்வியல்பு 1911ஆம் ஆண்டிலிருந்து உறுப்பினர்களுக்குச் சம்பளம் வழங்குதலென்ற விதியினுலும் தோற்றுவிக்கப்பட்டது; (4) வாக்காளர்களுடைய கருத்துகளை எதிர்க்கவோ அல்லது மீறிச் செயல்படவோ பொதுமக்கள் மன்றத்தில் பெரும்பான்மை நிலையிலிருக்கும் கட்சியினருக்கு ஆற்றல் இருத்தல்; (5) மன்றத் தலைவருடைய (speaker) சுதந்திர நிலைக்கு ஏற்பட்டுள்ள இடர்ப்பாடு.

மேற்படிப் பாராளுமன்றச் சட்டத்தின் முன்னுரையில் (preamble) அது ஒரு தற்காலிகமான சட்டமென்றே கூறப்படு கின்றது; அவ்வாறிருந்தபோதிலும், 1949ஆம் ஆண்டு வரையிலும் அது சட்டமாகவே இருந்து வந்தது; இந்த ஆண்டில் (ஒரு சாதாரணச் சட்டத்தை இரண்டாண்டுகளுக்கு ஒத்திப்போடுவதற்கு மேற்சபைக்கு இருந்த அதிகாரம்) ஓராண்டாகக் குறைக்கப்பட்டு மேற்படி சட்டமானது திருத்தப்பட்டது. 1958ஆம் ஆண்டில் செய்யப்பட்ட வாழ்நாள் பிரபுக்களை அமர்த்தும் சட்டத்தின் மூலமாக (Life Peerages Act), எண்ணிக்கை வரம்புக்கு உட்படாத அளவுக்குப் பிரபுக்களையும், பெண் பிரபுக்களையும் (Peeresses) அவர்தம் வாழ்நாட்களுக்கு மட்டும் அமர்த்துவதற்கு அரசர் அதிகாரத் தைப் பெற்றுர். எனினும், பிரபுக்கள் மன்றத்தின் அதிகாரங்களில் ஏற்பட்டுள்ள மாறுதல்களைப் பற்றி பலரிடையேயும் ஒருமித்த கருத்து இருப்பதைக் காட்டக்கூடிய அடையாளங்கள் இல்லை. மேற்படி பாராளுமன்றச் சட்டத்தின் பிரிவுகளின்படி, சட்ட

நூலில் எழுதப்பட்டும், நடைமுறைக்கு வந்தும் இருப்பவை இரண்டே சட்டங்கள்தாம். அவையாவன: 1914ஆம் ஆண்டின் வெல்ஷ் திருச்சபைச் சட்டம், 1949ஆம் ஆண்டின் பாராளு மன்றச் சட்டம் என்பவை. 1914ஆம் ஆண்டின் அயர்லாந்து அரசாங்கச் சட்டம் என்ற இன்னொரு சட்டம் நிறைவேற்றப் பட்டு, நடைமுறைக்கு வராமல் விடப்பட்டுக் கடைசியில் தள்ளுபடி செய்யப்பட்டது. எனவே, மேற்படி (1911ஆம் ஆண்டின் பாராளுமன்றச்) சட்டத்தினுல் தோன்றிய விளைவு மிகச் சிறியதே ஆகும். இத்தகைய விளைவு தோன்று வதற்கு இரண்டு காரணங்கள் இருக்கின்றன. 1915ஆம் ஆண்டிலிருந்து 1945ஆம் ஆண்டுவரையிலே பெரும்பாலான காலங்களிலே கூட்டரசாங்கங்கள் அல்லது தேசீய அரசாங்கங்களே (Coalition or National Governments) அலுவலை ஏற்றிருந்தன. இத்தகைய ஒரு அரசாங்க முறையைத் தோற்றுவித்த காரணங்கள் பொதுமக்கள் மன்றத்துக்கும், பிரபுக்கள் மன்றத்துக்குமிடையே ஒரு போராட்டத்தைத் தோற்றுவிக்கக் கூடிய நிலைமைகளை உண்டாக்க மாட்டா. முதல் இரண்டு தொழிற்கட்சி அரசாங்கங்களும் பொதுமக்கள் மன்றத்திலே மற்றெல்லாக் கட்சிகளையும்விட பெரும்பான்மை நிலையைப் பெற்றிராமையால், அவை (பிரபுக்கள் சபையோடு) போராட்டத்தி லிறங்குவதை ஒதுக்கின. இதற்குமுற்றிலும் மாருன நிலைமைகள் 1945ஆம் ஆண்டு முதல் 1951ஆம் ஆண்டுவரை இருந்தன; அப்பொழுது அரசாங்கத்தின் ஆதரவாளர்களைவிட, எதிர்ப்பாளர்களே பிரபுக்கள் சபையில் எண்ணிக்கையில் கூடுதலாக இருந்தனர். ஆயினும், 1947ஆம் ஆண்டின் பாராளுமன்ற மசோதாவைப்பற்றிய கருத்து மாறுபாடு தோன்றியதே தவிர, 1948ஆம் ஆண்டில் மரண தண்டனையை நீக்குவதைப் பற்றிக் கருத்து மாறுபாடு தோன் றியதே தவிர (இந்தக் குறிப்பிட்ட ஆண்டில் பொதுமக்கள் சபையைப் போல அல்லாமல் பிரபுக்கள்சபையானது அரசாங்கத்தால் ஒப்புக்கொள்ளப்படக் கூடிய கருத்தையே தானும் ஏற்றுக் கொண்டது) ஒரு முன்னேற்றப் போக்குள்ள அரசாங்கத்துக்குப் பிரபுக்கள் சபை காட்டும் வழக்கமான மாறுபாட்டைத் தவிர, (இரு மன்றங்களுக்கு மிடையே) கடும் போர் ஏதும் தோன்றவில்லை.

(1) சட்டமாக இயற்றப்பட்ட அரசியல்மைப்பை நோக்கி ஏற்பட்ட முன்னேற்றம்: வெஸ்ட்மின்ஸ்ட்டர் சட்டமானது, டொமீனியன்களின் சட்டமியற்றும் அதிகாரத்தில் இங்கிலாந்து தலையிடாதிருத்தல் என்ற வழக்கத்துக்கு எவ்வாறு ஒரு சட்ட

வடிவத்தைக் கொடுத்துள்ளதோ, அதே போலவே, 'நாட்டின் நிதியைப்பற்றி மட்டுமே குறிப்பிடுகிற ஒரு மசோதாவைப் பிரபுக்கள் மன்றமானது தள்ளிவிடலாகாது,' என்று ஒன்றரை ஆண்டுக் காலாமாக இருந்து வந்த ஒரு வழக்கமான விதியைத் தெளிவான சொற்களிலே ஒரு சட்டமாகப் பாராளு மன்றச் சட்டமானது ஆக்கிற்று. 1909ஆம் ஆண்டின் நிதி மசோதாவானது தள்ளுபடி செய்யப்படும்வரை, மேற்படி வழக்கமான விதியானது மீறப்படாமலே இருந்து வந்தது. 1860ஆம் ஆண்டின் காகிதச் சுங்க மசோதா மட்டுமே தள்ளுபடி செய்யப்பட்டது. இவ்வாறு செய்யப்பட்டதனுல், அரசாங்கங்கள் தாங்கள் கொண்டுவரவிருக்கும் புதிய அல்லது திருத்தத்துக் குள்ளான வரிகளை யெல்லாம் முழுமையும் திட்ட மிட்டு ஒரே நிதி மசோதாவில் சேர்ப்பது என்ற வழக்கத்தைக் கையாளலாயின. ஆனுல், பாராளுமன்றச் சட்டமானது இவற்றையும்விடக் கூடுதலாக வேறுசில காரியங்களையும் செய்தது. எவ்வாறெனில் அது, நிதியைப்பற்றி மட்டுமே அமைந்துள்ள மசோதாக்களைத் தவிர மற்ற மசோதாக்களையும் தள்ளிவிடுவதற்கு (பிரபுக்கள் மன்றத்துக்கு இருந்த) அதிகாரத்தை அழித்தது. அத்தகைய அதிகாரத்துக்குப் பதிலாகக் குறுகிய காலத்துக்குத் தள்ளிவைப்பதற்குரிய அதிகாரத்தை அது கொடுத்தது. (முன்பு) இவ்வாறு முழுமையும் தள்ளிவிடுவதற்கு இருந்த அதிகாரமானது அடிக்கடி கையாளப்பட்டது.இவ்வதிகாரமானது ஏதாவதொரு நிலையில் பிரபுக்கள் பொதுமக்கள் மன்றத்துக்கு இணங்கி, விட்டுக்கொடுத்துப் போகவேண்டுமென்ற ஒரு வழக்கத்துக்கு மட்டுமே உட்பட்டிருந்தது. சட்டமாக இயற்றப்பட்ட அரசியலமைப்பில், சட்டமன்றத்தின் இரு சபைகளுக்கு மிடையே யுள்ள முரண்பாடுகளைத் (deadlocks) தீர்ப்பதற்குச் சாதாரணமாக வழிகள் வகுக்கப்பட்டுள்ளன. எடுத்துக் காட்டாக, 1867ஆம் ஆண்டின் பிரிட்டிஷ் வட அமெரிக்கச் சட்டத்தின் 26ஆம் பிரிவு, 1900ஆம் ஆண்டின் ஆஸ்திரேலிய காமன்வெல்த் அரசியலமைப்புச் சட்டத்தின் 57ஆம் பிரிவு முதலியவை. எனவே, ஓரளவுக்குத் தெளிவாக இல்லாம லிருந்த அரசியல் வழக்காறுகளைச் சட்டமாக ஆக்கியதனுல், பிரபுக்கள் சபையானது அரசாங்கத்தின் சட்டங்களுக்கு எதிர்ப்பான மனப்பான்மை கொள்ளும்போது, அச் சபைக்கும் அரசாங்கத்துக்கும் இடையே தோன்றக் கூடிய மாறுபாடு நீக்கப்பட்டுள்ளது என நாம் கூறலாம். எனினும், பாராளு மன்றச் சட்டங்களிலுள்ள விதிகள் சில, சட்டங்களாக இருந்த போதிலும், அவை ஒரு நீதிமன்றத்தில் எவ்வாறு செயல்

படுத்தப்படக் கூடுமென்பதை எளிதில் சொல்ல இயலாது. இத்தகைய ஒரு கேள்வி, பண மசோதாக்களை அத்தகையன எனச் சான்றிதழ் மூலமாக உறுதிகூறுவதற்கு மன்றத் தலைவருக்கு (speaker) இருக்கும் கடமைகளைப் பொறுத்தவரை எழாது. (நீதி மன்றத்தின் மூலமாகச் செயல்படுத்தப்பட முடியுமா என்ற) இத்தகைய கடினமான சூழ்நிலை, செயல் படுத்தும் உரிமை விதிக்கப்படாமல் சட்டங்களாக ஆக்கப் பட்டுள்ள மற்ற அரசியலமைப்பு விதிகளைப் பொறுத்தவரையில் (Constitutional documents which prescribe no sanction) தோன்று கிறது. இவ்வாறு அமைந்த அரசியலமைப்பு விதிக்கு ஒரு எடுத்துக்காட்டு, 'பாராளுமன்ற உறுப்பினர்கள் தேர்ந் தெடுக்கப்படுதல் சுதந்திரமாக இருக்கவேண்டும்' என்று உரிமைகள் மசோதாவில் (Bill of Rights) காணப்படும் ஒரு பிரிவு இந்தப் பிரிவு பதினெட்டாம் நூற்றுண்டில் முழுமையும் நிறைவேற்றப்படா விட்டாலும் கூட, இது நாட்டின் அரசிய லமைப்பிலுள்ள ஒரு குடியாட்சிக் கோட்பாட்டின் வேர் ஆக அமைந்துள்ளது.

(2) **பிரபுக்களைப் புதிதாக அமர்த்துதல்:** பிரபுக்கள் மன்றத்தில் தமக்கு ஆதரவாளர்களை நிரப்புவதற்கு அரசருக்கு இருக்கும் விசேட அதிகாரத்தை முற்றிலும் ஒழிக்கா விட்டாலும், அதனைப் பெருமளவில் தடுக்கவாவது செய்கிறது பாராளுமன்றச் சட்டம், என்பதாக டைசி கருதினர். மேல் சபையில் எதிர்கட்சியினருக்குப் போதிய அளவு பிரதி நிதித்துவம் இருக்கும்பொருட்டு, வாழ்நாள் முழுவதற்கும் பிரபுக்களை அமர்த்துவதற்காக, 1958ஆம் ஆண்டின் வாழ்நாள் பிரபுக்களை அமர்த்தும் சட்டத்திலே, சட்டப்படியான அதிகாரங்களை ஒரு கன்சர்வேட்டிவ் அரசாங்கம் ஏற்றுக் கொள்ளுவதை, இப்பொழுது திருத்தப்பட்ட வடிவத்திலுள்ள பாராளுமன்றச் சட்டமானது தடுக்கவில்லை என்பதை இப்பொழுது நாம் காணலாம். இந்தப் புதிய அதிகாரமானது, பிரபுக்கள் சபையில் இருக்கிற கன்சர் வேட்டிவ்களின் பெரும்பான்மை நிலையை மாற்றக்கூடிய அளவுக்குப் போதிய பிரபுக்களை அமர்த்துவதற்காக முறையற்ற வகையிலே கையாளப்படுதல் கூடுமென்று எண்ண இட மில்லை. எனினும், பரம்பரை அடிப்படையிலே அமைந்த பிரபுத்துவ நிலைகளுக்குப் பதிலாக (hereditary peerages) வேறொரு நிலையை (அதாவது வாழ்நாள் பிரபுத்துவ நிலையை) மேற்படி 1958ஆம் ஆண்டின் சட்டமானது வகுத்திருப்பதன் மூலமாகப் பிரபுக்கள் மன்றத்தை மாற்றியமைப்பதில் காணப்

பட்ட முக்கியமான இடர்ப்பாடுகளில் ஒன்றை நீக்கிற்று. பாராளுமன்ற அரசாங்க அமைப்பிலே முன்னேற்றம் காண்பதை ஆதரிக்காத சிலருடைய கருத்து ஒன்றும் இருக்கிறது. இத்தகைய கருத்தை உடையோர், தாம் விரும்பும் மாறுதல்கள் ஒரு அவசரச் சட்டத்தின்படி (emergency act) ஆட்சித்துறை ஆணைகளின் மூலமாக (administrative decrees) நிறைவேற்றப்படுதல் வேண்டுமென விரும்புகின்றனர். அத்தகைய (அவசர) சட்டம் நிறைவேற்றப்படுதல் வேண்டுமானால், தீவிரமான வகையில் பொருளாதார, சமுதாய மாறுதல்களைச் செய்வதற்கு ஒத்துக்கொள்ளுகிற பெரும்பான்மையாளருடைய ஆதரவைப் பெற்றுள்ள ஒரு அரசாங்கம் ஆட்சிக்கு வந்தவுடனேயே, ஓரளவுக்குத் தள்ளிவைப்பதற்குப் பிரபுக்கள் சபைக்கு இருக்கும் அதிகாரம் ஒழிக்கப்படவேண்டும் என இவ்வாறு வாதிடப்படுகிறது. இப்பொழுது தள்ளிவைக்கப்படும் காலஅளவு முன்னிலும் பாதியாகக் குறைக்கப்பட்டுவிட்டபடியால், மேற்படி வாதத்தில் பொருளில்லை. மேலும், இரண்டாம் உலகப் போரின் அவசரச் சட்டத்தில் அடங்கிய பாதுகாப்பு விதி 55-ல் ஒரு மேற்சான்று காணப்படுகிறது. ஆலோசனை மன்றத்தின் ஆணையின் மூலமாக (order in council) பொருள் உற்பத்தியையும், பங்கீட்டு முறையையும் கட்டுப்படுத்துவதற்கு அரசாங்கத்துக்கு மேற்படி விதி அதிகாரம் அளிக்கிறது.

இப்பொழுது உள்ள பிரபுக்கள் சபைக்கு இருக்கும் அதிகாரங்களை விடக் கூடுதலான அளவில் அதிகாரங்களோடு, குடியாட்சிக்கொத்த அடிப்படையில் ஒரு இரண்டாம் மன்றத்தை (second chamber) அமைப்பதுதான் பிரபுக்கள் மன்றத்தார் தங்களுடைய அழிவுக்குத் தங்களுடைய ஒப்புதலை அளிக்கக் கூடிய வகையில் அரசருடைய விசேட அதிகாரத்தைத் தீவிரமாகக் கையாளுதலைவிட, நமது அரசியலமைப்பின் வரலாற்றில் காணப்படும் படிப்படியான வளர்ச்சிமுறைக்கு முற்றிலும் ஏற்றதாக இருக்கிறது. ஆயினும், இப்பொழுது வாழ்நாள் பிரபுக்களின் மசோதாவைப் பற்றிப் பாராளுமன்றத்தில் நடைபெறும் சொற்போர்களிலிருந்து, பிரபுக்கள் சபையின் அமைப்பிலே மேலும் எம் மாறுதலும் செய்யப்படமாட்டாது என்பதும், அந்த மன்றத்தின் அதிகாரங்களைக் கூடுதலாக்கக் கூடியவாறு, அரசாங்கத்துக்கும் எதிர்க் கட்சியினருக்கும் உடன்பாடு எதுவும்நேராது என்பதும் தெரியவருகின்றன. ஆயினும், வெகுவான திருத்தம் கொண்டு வரப்படுமென்று வைத்துகொண்டாலும், அது பாராளுமன்றச்

சட்டங்களென்ற அமைப்பின் மூலமாகத்தான் சட்டமாகச் செய்யப்படல் வேண்டும். ஆகையால், அது பிரபுக்களால் ஓராண்டுக்கு மிகாத கால அளவுக்கு—இரண்டு கூட்டங்களுக்கு (sessions) மிகாத கால அளவுக்கு-நிறுத்திவைக்கப்பட முடியாததாகும். எனவே, மேற்சபையில் அரசாங்கத்துக்குப் பெரும்பான்மை நிலையை உண்டாக்கும் பொருட்டுப் பெருமளவு எண்ணிக்கையில் பிரபுக்களைப் புதிதாக அமர்த்துவதற்கு அரசர் உடன்படுமாறு கேட்டுக் கொள்ளப்படக் கூடுமென்று தோன்றவில்லை. அரசாங்கத்துக்கு வெளியே மக்களில் பெரும்பான்மையோரால் ஆதரிக்கப்படுகின்ற ஒரு சட்டத்தைப் பிரபுக்கள் தள்ளுபடி செய்யாவண்ணம் காப்பதற்கு வேறு ஒரு முறையை மேற்படிப் பாராளுமன்றச் சட்டங்கள் வகுத்திருக்கின்றன. புதிதாகப் பிரபுக்களை அமர்த்தும் அதிகாரத்தின் மூலம் பிரபுக்களைக் கட்டுப்படுத்துவதற்கு உரிய விசேட அதிகாரமானது (prerogative power) ஒழிக்கப்படாவிட்டாலும், அது கையாளப்படுமென்று தோன்றவில்லை.

(3) ஐந்து ஆண்டுகளென்ற முழுக்கால அளவுக்கும் பாராளுமன்றம் கூடியிருத்தல்: 1910ஆம் ஆண்டு டிசம்பரில் தேர்ந்தெடுக்கப்பட்ட பாராளுமன்றம் அதன் பின்னர் எட்டு ஆண்டுகட்குப் பின்னரே கலைக்கப்பட்டது. அதனுடைய வாழ்நாளானது, போர்க்காலத்தில் பொதுத் தேர்தலைத் தவிர்ப்பதற்காக நான்கு தடவைகள் சட்டத்தின் மூலமாக நீடித்து வைக்கப்பட்டது. காலவரம்பு என்ற காரணத்தினால், இதை அடுத்த நான்கு பாராளுமன்றங்களின் காலவரம்பு தீர்மானிக்கப்பட்டது. 1924ஆம் ஆண்டு அக்டோபரில் தேர்ந்தெடுக்கப்பட்ட பாராளுமன்றத்தின் கால அளவு (duration) முழுமைக்கும் தலைமை அமைச்சராக இருந்த மிஸ்டர் பால்டுவின் கூறிய ஆலோசனையின்படி இப் பாராளுமன்றம் 1929ஆம் ஆண்டு மே மாதத்தில் கலைக்கப்பட்டது. 1931ஆம் ஆண்டு அக்டோபர் மாதத்தில் தேர்ந்தெடுக்கப்பட்ட 'தேசீய' (national) பாராளுமன்றம், 1935ஆம் ஆண்டு இலையுதிர் காலத்தில் கலைக்கப்படும் வரையிலும் நான்கு ஆண்டுகளுக்குக் கூடியிருந்தது. 1935ஆம் ஆண்டு தேர்ந்தெடுக்கப்பட்ட பாராளுமன்றமானது, பல தடவைகளில் தனது வாழ்நாளை நீட்டிக்கும் பொருட்டுத் தனது சட்ட அதிகாரங்களைக் கையாண்டு 1945ஆம் ஆண்டில் இரண்டாம் உலகப்போர் முடிவுற்றதற்குப் பிற்பட்ட காலம் வரையிலும் ஆட்சியில் இருந்தது. 1950ஆம் ஆண்டில் நடை

பெற்ற பொதுத் தேர்தலை ஒருசில மாதங்களுக்கு ஒத்திவைத் திருக்கலாம். ஏனெனில் அப்போது பாராளுமன்றச் சட்டங் களின் படியே பாராளுமன்றம் கலைக்கப்பட வேண்டியிருந்தது. 1955ஆம் ஆண்டிலே ஒரு புதிய அமைச்சர், தனக்கு மக்களின் ஆதரவை மீண்டும் வெற்றியாகத் தேடிக் கொள்ளும் நோக்கத்துடனே, பாராளுமன்றத்தின் சட்டப்படியான கால அளவு முடிவடைவதற்குப் பதினெட்டு மாதங்களுக்கு முன்னுலேயே (பொதுத் தேர்தலை நடத்த) நாளைத் தேர்ந் தெடுத்தார். இத்தகைய மேற்சான்றுகளிலிருந்து அறியப் படுவது என்னவென்ருல், பாராளுமன்றத்தின் சட்டப்படியான வாழ்நாள் முடிவடைவதற்குச் சற்றேறக்குறைய இரண் டாண்டுக்கால அளவுக்கு முன்னரேயே, ஒரு தலைமை அமைச்சர் மன்றத்தைக் கலைப்பதற்கு அரசாங்கக் கட்சிக்குச் சாதகமான காலம் எது என்று தனக்குப் படுகிறதோ, அதை அவர் தீர்மானிப்பார் என்பதேயாகும். 1931-35ஆம் ஆண்டுக் காலத்திய பாராளுமன்றத்தில் அப்பொழுதைய தேசீய அரசாங்கத்தை ஆதரித்த பெருவாரியான உறுப்பினர்களின் தலைவராக மிஸ்டர் பால்டுவின் இருந்தார். அவரே மேற்கூறிய சூதற்ற, எளிமையான காரணத்தை (naive reason) மனத்திற் கொண்டே பாராளுமன்றத்தின் வாழ்நாளானது ஐந்தாண்டுக ளென்ற முழு அளவுக்கும் குறைவானதே எனத் தாம் கருதுவ தாகக் குறிப்பிட்டார்.

உறுப்பினர்களுக்குச் சம்பளம் வழங்குதல் என்ற முறை யானது, மன்றத்தின் பின் வரிசை உறுப்பினரை மன்றக் கலைப்பை விரும்பாமலிருக்கும்படிச் செய்துள்ளது. இந்த நிலைமையே, முக்கியமாக, அரசாங்கக் கட்சியிலே, அதன் ஆதாரவாளர்களின்மீது கட்சி கொறடாவுக்கு (whip) உள்ள அதிகாரத்தைக் கூடுதலாக்கியுள்ளது. (இதனுல்) ஒரு பாராளு மன்றத்தின் வாழ்நாளின் தொடக்க நிலையிலேயே, எதிர்க்கட்சி யினர் மீண்டும் வாக்காளர்களை எதிர்நோக்கும் விருப்பமின்றி இருக்கின்றனர். இத்தகைய ஒரு விளைவை, உறுப்பினர் களுக்குச் சம்பளம் என்பது தவிர, வேறு சில நிகழ்ச்சிகளும் உண்டாக்கியுள்ளன. அவையாவன: ஒரு பொதுத் தேர்தலின் மூலமாக வாழ்வில் ஒரு பெரும் கொந்தளிப்பில் நாட்டினர் ஆழ்ந்திருத்தல் என்ற தவிர்க்க முடியாத நிலைமை; கட்சி களுக்கு ஏற்படும் பெரும் செலவு; வயது வந்தோர் யாவருக்கும் வாக்குரிமை என்ற நிலைமையில் ஒரு பெரிய தொகுதியின் பெரும்பாலான வாக்காளரும் நிலைமாறுவர் என்ற ஒரு சூழ்நிலை. அண்மைக் காலத்தில் ஏற்பட்டது

போல ஒரு அரசாங்கம் செயலாற்றக்கூடுமளவுக்கு இருபது என்ற எண்ணிக்கையில் பெரும்பான்மை நிலையைப் பெற்றிருந்தாலல்லாமல், எதிர்காலத்தில் பாராளுமன்றமானது தனக்குச் சட்டபடி உரியதான வாழ்நாளுக்குக் குறைவாகவே இருக்குமென்று தோன்றவில்லை.

4. **பொதுமக்கள் மன்றமும், வாக்காளரும்:** வாக்காளர்களுடைய கருத்துகளை மீறுவதற்கு அல்லது தடுப்பதற்குப் பொதுமக்கள் மன்றத்திலுள்ள பெரும்பான்மையாளருக்கு (majority) இருக்கும் அதிகாரமானது, பண மசோதாக்களைத் தவிர மற்றச் சட்டங்களைப் பொறுத்த வரையில், பாராளுமன்றச் சட்டத்தின் வெளிப்படையான விளைவு அன்று. ஒரு இரண்டாம் சபையின் மூலமாக ஒரு வலுவான தடுப்பு அதிகாரம் (veto) எதுவும் கிடையாது என்றிருக்குமானால் வாக்காளரில் பெரும்பாலானவர்களால் எதிர்க்கப்படுகின்ற ஒரு புதிய திட்டத்தை (proposal) ஒரு பண மசோதாவின் சொற்களுக்கிடையே இருக்கும்படி மறைவாக வைத்து, அதை வலுக்கட்டாயமாகக் கொண்டு வருவதற்கு ஒரு அரசாங்கம் துணியக்கூடும் என்ற ஒரு இடர்ப்பாடு தோன்றுகிறது. பணமசோதாக்களை அத்தகையவை என்று மன்றத் தலைவர் சான்று கூறவேண்டுமென்ற சட்டப் பிரிவுகளின் மூலமாக மேற்படி இடர்ப்பாடு முதுவதும் நீக்கப் படாவிட்டாலும், மிகவும் குறைக்கப்படுகிறது. பண மசோதாக்க ளல்லாத மற்றச் சட்டப் பிரேரணைகள் ஒவ்வொன்றும் பொது மக்கள் மன்றத்தின் முதற் கூட்டத்தில் (first session) அதன் இரண்டாவது வாசிப்புக்கும் (second reading) அதே மன்றத்தின் இரண்டாவது கூட்டத்தில் அதனுடைய மூன்றாவது வாசிப்பு நடைபெறும் நாளுக்கும் (date) இடையே-இரு தொடர் கூட்டங்களுக்கு இடையே-குறைந்தது ஓராண்டு அளவுக் காலத்துக்காவது ஓரளவு தள்ளிவைக்கப்படக்கூடியவையாக இருக்கின்றன. (இவ்வாறு ஓரளவு தள்ளி வைக்கப்படக் கூடிய) இடைவெளிக் காலமானது, 1911ஆம் ஆண்டின் பாராளுமன்றச் சட்டத்தின்படி, மூன்று தொடர் கூட்டங்களுக்கு அமைக்கப்பட்டிருந்தது. (இந்த இடைவெளிக் காலத்தை) 1949ஆம் ஆண்டின் பாராளுமன்றச் சட்டப் பிரிவுகளின்படி ஓராண்டாளவாகக் குறைத்ததன் காரணம் என்ன வென்றால், அப்பொழுது ஆட்சியிலிருந்த தொழிற்கட்சி அரசாங்கமானது, தேவையான குறைந்த அளவு காலத்துக்கும் கூடுதலாக, பிரபுக்கள் மன்றமானது, பொதுமக்கள் மன்றத்துக்கும், வாக்காளர்களுக்கும் நடுவே ஒரு தடையாக,

(அதாவது, வாக்காளரால் விரும்பப்படும் ஒரு செயலைப் பொது மக்கள் மன்றம் நிறைவேற்றுதபடி அதனைத் தடுக்கக் கூடியதாக) இருக்கும் என்ற எண்ணத்தை நீக்க விரும்பியதே ஆகும். பிரபுக்கள் சபையின் அமைப்பில் காணப்படும் பரம்பரைக் கோட்பாடு நீடித்து இருப்பதைத் தொழிற்கட்சி அரசாங்கத்தின் ஆதரவாளர்கள் எதிர்த்தபோதிலும், பிரபுக்கள் மன்றத்தை ஒரு மறு பரிசீலனை மன்றமாகப் (a revising chamber) பயன்படுத்துவதற்கு அரசாங்கம் ஆயத்தமாக இருந்தது. சீர்திருத்தப்பட்ட பிரபுக்கள் மன்றத்தின் அமைப்பு எவ்வாறு இருக்க வேண்டுமென்று யாவரும் ஏற்றுக் கொள்ளக் கூடிய முடிவு தோன்றுமலிருக்கிறது. இந்த நிலையில் இப்பொழுது இருந்துவரும் பிரபுக்கள் மன்றத்தின் அதிகாரங்களைக் குறைப்பது எவ்வாறு என்றால், அரசாங்கத்தால் கொண்டுவரப்படும் எந்த மசோதாவும் ஐந்தாண்டு காலத்தின் இறுதியில் கொண்டுவரப்படாமலிருக்குமானால், அது பிரபுக்கள் மன்றத்தினால் தள்ளுபடி செய்யப்பட்டாலும் ஒரு பாராளுமன்றத்தின் வாழ்நாளிலே (life time) அது சட்டமாக நிறைவேற்றப்படக் கூடியவாறு (பிரபுக்கள் மன்றத்தின் அதிகாரத்தைக்) குறைப்பதே ஆகும். 1911ஆம் ஆண்டின் சட்டத்தின்படி, மசோதாவை நிறுத்தி வைக்கக்கூடிய குறைந்தபட்சக் கால அளவு, முதலில் அந்த மசோதாவின் இரண்டாவது வாசிப்புக்கும், அதே மன்றத்தின் மூன்றுவது கூட்டத்தில் அதன் மூன்றுவது வாசிப்புக்கும் இடையே உள்ள இரண்டு ஆண்டுகளாகவாவது இருந்தது. எனவே, அப்பொழுது இருந்த அதிகாரத்தின்படி, பிரபுக்கள் மன்றமானது, ஒரு பாராளுமன்றத்தின் வாழ்நாளின் கடைசி மூன்றுண்டுக் காலத்தில் ஓரளவு நிறுத்தி வைக்கும் தள்ளுரிமை அதிகாரத்தைக் கையாளுவதற்கு வலுவான நிலையிலிருந்தது. ஒரு மசோதா பொதுமக்கள் மன்றத்தின் மூன்று கூட்டங்களுக்குப் பின்னரும் நாட்டினரின் வலுவான எதிர்ப்புக்கு உள்ளாகுமானால், வாக்காளர்களிடம் அரசாங்கமானது (சட்டப்படியான ஐந்தாண்டுக் காலத்துக்கு) முன்னதாக முறையிட்டுக் கொள்ள (அதாவது மறு தேர்தல் நடத்த) வேண்டிய நிலை இருக்கும்போது, அது பாராளுமன்றச் சட்டத்தின் மூலம் தனது நோக்கத்தை நிறைவேற்ற(அதாவது தற்காலிகமாக நிறுத்தி வைக்கும் அதிகாரத்தின் மூலமாகத் தான் கொண்டு வரும் மசோதாவைத் தள்ளி வைக்க) துணியாது.

(5) சட்டமன்றத் தலைவரின் நிலைமை (Speaker's position): (1911-ம் ஆண்டுச் சட்டத்தின் மூலமாக) மன்றத்

தலைவருக்குப் பண மசோதாக்களை அத்தகையன என அவற்றுக்கு உறுதிமொழி வழங்கும் அதிகாரம் கொடுக்கப்பட்டதனுல் அவருடைய சுதந்திரமான சார்பற்ற நிலைமைக்கு இடுக்கண் நேர்ந்தது என ஆசிரியர் டைசி கூறுகிருர். இதனுல் பெரும்பான்மை நிலையிலுள்ள கட்சியானது, மன்றத் தலைவருடைய அலுவலுக்கு ஒரு நீதிபதியை அமர்த்தாமல், ஒரு கட்சி சார்புள்ளவரை அமர்த்தும் என டைசி அஞ்சினுர். 1914ஆம் ஆண்டிலிருந்து நடைபெற்ற நிகழ்ச்சிகள், சில சமயங்களில் தொழிற்கட்சியானது டைசியின் அச்சங்களைத் தானும் கொண்டிருந்ததென்பதைக் காட்டுகின்றன. 1935ஆம் ஆண்டில் அப்பொழுது அலுவலிலிருந்த மன்றத் தலைவரை பாராளுமன்றத்திலுள்ள தொழிற்கட்சித் தலைவர்கள் ஒப்புக்கொள்ளாததனுல், அவருடைய தொகுதியிலே, உள்ளூர்த் தொழிற்கட்சியானது எதிர்த்துப் போட்டியிட முடிவு செய்தது. இதற்கு முன்பு பல ஆண்டுக் காலமாகத் தொடர்ச்சியாக மன்றத் தலைவர்கள் போட்டியின்றியே தேர்ந்தெடுக்கப்பட்டு வந்தார்கள். மன்றத்தலைவர் கட்சி நிலைமைக்கு அப்பாற்பட்டவரென்பது வழக்கமாகக் கொள்ளப்பட்டது. (இப்பொழுது தொழிற்கட்சி அவரை எதிர்த்துப் போட்டியிடக் கருதியதன்) நோக்கம் என்னவெனில் மேற்படி நோக்கத்தின் விளைவாக, மன்றத் தலைவருடைய தொகுதிக்கு மன்றத்தில் திறமான பிரதிநிதித்துவம் இல்லாமற் போவதைத் தடுப்பதே ஆகும். எனினும், இத் தேர்தலில் மன்றத்தலைவர் போட்டியிட்டார். அவர் பெருவாரியான வாக்காளர்களால் வெற்றியாகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். இந்த நாளிலிருந்து பொதுமக்கள் மன்றத்திலேயே அலுவலிலுள்ள மன்றத்தலைவர் மீண்டும் அந்த அலுவலுக்குத் தேர்ந்தெடுக்கப்படுவதுபோல, பொதுத் தேர்தல்களிலும் மற்றவர்கள் அவரை எதிர்த்துப் போட்டியிட்டாலும் அவரே வெற்றிபெறுகிருர். ஆளும் கட்சியிலிருந்தே உதவி மன்றத் தலைவரையும் அமர்த்துவது என்ற போக்கு இப்போது இருக்கிறது. 1911ஆம் ஆண்டில் பாராளுமன்றச் சட்டத்தினுல் பண மசோதாக்களுக்குச் சான்று அளிக்கும் கடமை மன்றத் தலைவருக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது. இவ் வதிகாரமானது தெளிவு படுத்தப்பட வேண்டுமென்ருே அல்லது ஒரஞ்சார்ந்து கையாளப்படுகிறது எனவோ குறைகள் கூறுதற்கு இடமில்லாமலிருக்கிறது என்பது இங்கு குறிப்பிடத்தக்க ஒன்று ஆகும்.

பாராளுமன்றச் சட்டத்தைப் பற்றி முடிவாக ஒருகருத்தைக் குறிப்பிட்டால் அது போதுமானது. ஒரு மசோதாவைத்

தள்ளிவிடுவதற்குப் பிரபுக்கள் மன்றத்துக்கு இருக்கும் அதிகாரங்கங்கள் குறைக்கப்படுவதன் மூலமாக அம் மன்றத்தின் பெருமை மிகுதியாகியுள்ளது என்ற கருத்துக்கு ஓரளவு சான்று இருக்கிறது. பகுத்தறிவுக்குப் பொருத்தமான கருத்தானது பிறரைக் கட்டாயப்படுத்த வல்லதாக இல்லாமல் பிறருக்கு இணக்கமாக வெளிப்படுத்தப்பட்டால், அது மிகவும் விருப்பத்தோடு கேட்கப்படுகிறது. பிரபுக்கள் மன்றத்தில் தங்களுடைய பாராளுமன்ற அலுவல்களை மிகவும் கருத்துடன் கவனிப்பவர்கள் ஒரு சிறு அளவில் இருந்தாலும், அவர்கள் நாட்டின் வயது முதிர்ந்த அரசிய லறிஞர்களாகவும், ஆளுந ராகவும், தொழிலிலும், வாணிபத்திலும் ஈடுபட்டவர்களாகவும் இருக்கிறார்கள். (செசில், ஸ்டான்லி முதலிய பெருமை மிக்கப் பழைமையான பிரபுக்களின் குடும்பங்களெல்லாம் இருந்த போதிலும்) பரம்பரை அடிப்படையிலே சட்டமன்ற உறுப் பினர் இருப்பதென்பது சரியென ஒப்புக் கொள்ளப்படத் தகாத தாக இருக்கலாம். ஆயினும், பொதுவாழ்வில் தலைவர்களாக இருப்பவர்களுக்குப் பிரபுக்களென்ற நிலைமையை அளிப்பதன் மூலமாகப் பிரபுக்கள் மன்றத்தில் செயலறிவுடன் கூடிய கருத்துகளை உடைய ஒரு குழு இருப்பதற்கு உறுதியாக வழி உண்டாகிறது. இவ்வாறு இல்லாவிட்டால், இத்தகைய கருத்துகள் அரசியலுக்குக் கிடைக்க வழியில்லாமல் போய் விடும். வாழ் நாள் முழுமைக்கும் பிரபுக்களையும், பெண் பிரபுக்களையும் அமர்த்துவதன் மூலமாக மேற்கூறிய நன்மை கிடைக்க வழி உண்டாகிறது. பாராளுமன்ற அலுவலைக் கவனிப்பதில் ஈடுபாடுடைய பிரபுக்கள் மட்டுமே அதன் கூட்டங்களுக்கு வந்து தேவைப்பட்டால் தங்களுடைய வாக்குகளை அளித்தல் வேண்டுமென்ற நிலைமையைக் கொண்டுவரும் பொருட்டு, 1958ஆம் ஆண்டு ஜூன் மாதத்தில் பிரபுக்கள் மன்றமானது (உறுப்பினர் கூட்டத்துக்கு) வராம லிருக்கும் அனுமதியைப் பற்றி (leave of absence) ஒரு புதிய நிரந்தர ஆணையைச் (நிரந்தர ஆணை—Standing Order, 21) செய்தது. இந்த ஆணையானது பாராளுமன்றத்திலுள்ள பிரபுக்க ளனைவரும் தங்களுக்கு விடுக்கப்பட்ட அழைப்புஆணைக்கு (writ of summons) இணங்க, மன்றத்தின் கூட்டங்களுக்கு வரவேண்டிய கடமையை வலியுறுத்துவதோடு, எந்தப் பிரபுவும் பாராளுமன்றம் நடைபெறுங் காலத்தில் அதனுடைய முழுக் கூட்டத்துக்கோ அல்லது அதனுடைய ஒரு பகுதிக்கோ வராமலிருக்க விடுமுறைக்கு விண்ணப்பம் செய்யவும் வழி செய்கிறது. வராமலிருக்க விடுமுறை பெற்ற ஒரு பிரபு தனது விடுமுறைக் காலத்தில் மன்றத்தின் கூட்டங்களுக்கு வர

வேண்டுவதில்லை. தனது விடுமுறைக் காலத்தை முடித்துக் கொள்ள விரும்பும் பிரபு அல்வாறு செய்வதற்கு ஒரு மாத முன் அறிக்கை விடுப்பதற்கு இவ் வாணையில் வழி செய்யப் பட்டிருப்பதால், (மன்றத்தில்) பின் நிலையிலிருப்போரது (back woodsman) செல்வாக்கு குறைக்கப்படுமென எதிர்பார்க்கப் படுகிறது.

பிரபுக்கள் மன்றத்தில் சட்டம் ஏதும் நிறைவேற்ற வேண்டியிராதபோது, அரசாங்கக் கொள்கையை (policy) விவாதிப்பது பிரபுக்களுடைய அலுவலாகும். பொதுமக்கள் மன்றத்தில் காணப்படும் முரண்பாடு மிக்க அல்லது எதிர்ப்பு மனப்பான்மை மிக்க சூழ்நிலையினின்றுப் விடுபட்டு, கேள்விகள் முக்கியமாக அயல்நாட்டு விவகாரங்கள் மிகவும் பயனுள்ள வகையிலே பிரபுக்கள் மன்றத்தில் ஆய்வு செய்யம் படுகின்றன. எதிர்ப்புக் குட்படாது, சட்டமியற்றுவதற்கு உகந்த பொருள்கள் (non-controversial subjects of legislation), எடுத்துக்காட்டாக சட்டச் சீர்திருத்தம் போன்ற அமைப்பியல்பு (technicality) பற்றிய மசோதாக்கள் அரசாங்கத்திற்கும், எதிர்க் கட்சிக்கு மிடையே வழக்கமாகத் தோன்றக்கூடிய பிளவினால் பாதிக்கப் படுவதில்லை; அவைகளுக் கெல்லாம் பொதுமக்கள் மன்றத்தில் இருக்கக்கூடிய ஆய்வைவிட முழு அளவில் (பிரபுக்கள் மன்றத்தில்) ஆய்வு இருக்கக் கூடுமென்ற உறுதியுடன் அவற்றை அந்த இரண்டாம் சபையில் கொண்டு வரலாம். அண்மைக் காலத்தில் பொதுமக்கள் மன்றத்தைவிடப் பிரபுக்கள் மன்றமானது மிக உயர்ந்த நிலைமைக்கு வந்த சில சூழ்நிலைகள் இருக்கின்றன. 1927ஆம் ஆண்டிலும், 1928ஆம் ஆண்டிலும் திருச்சபைக் கூட்டங்களைப் பற்றிய மசோதாக் களின் மீது நடைபெற்ற விவாதங்கள் (Measures of the Church Assembly) நடைபெற்றபோது, சீர்திருத்தப்பட்ட பொது வணக்க நூல் பயன்படுத்தப்பட வேண்டுமென்று (பிரபுக்களி னால்) கொண்டுவரப்பட்ட பிரேரணையானது, மக்கள் மன்றத்தைவிடப் பிரபுக்கள் மன்றமே உயர்ந்திருந்ததைக் காட்டும் ஒரு நிகழ்ச்சி ஆகும். 'மோட்டாரின் மூலமாகக் கொலை' (massacre by motor) என்பதைப்பற்றி 1937ஆம் ஆண்டில் அரசாங்கத்தின் கவனத்தை ஈர்த்தது பிரபுக்களே யன்றி, பொதுமக்கள் மன்றம் அன்று. இவ்வாறு அதிகார இழப்போடு, பெருமையில் கூடுதல் ஏற்பட்டாலும் குடியாட்சி அரசாங்க முறையைப் பொறுத்தவரையில் ஒரு இடர்ப்பாடும் இருக்கிறது. எவ்வாறெனில் (பிரபுக்கள்) மன்றத்தில் ஒரு கட்சியின் உறுப்பினர்கள் நிரந்தரமாகச் சிறுபான்மையராக

இருக்கவும், பின்னணியில் கன்சர்வேட்டிவ் கட்சிப் பிரபுக்களின் கூட்டம் பெருகி, (சிறுபான்மையருக்கு எதிராக இருக்கக்கூடிய) அஞ்சத்தக்க சூழ்நிலை தோன்றவும், கன்சர் வேட்டிவ் பிரபுக்கள் 1909ஆம் ஆண்டில் செய்ததைப் போன்று 'பின் நிலையிலிருந்து' (backwoods) மீண்டும் தோன்றி, ஒரு முற்போக்கு அரசாங்கத்தைத் தோற்கடிக்கவும், இதன்மூல மாக, அரசியலில் தனக்கு அழிவை விரைவில் தேடிக் கொள்ளவும் ஆகிய இடர்ப்பாடு தோன்றுகிறது.

வழக்காறுகள் ஏன் கடைப்பிடிக்கப்படுகின்றன: பொது மக்களுடைய ஆதரவோடுகூட, அதற்கு அப்பாலுமுள்ள ஏதோ ஒரு ஆற்றலினுல் வழக்காறுகள் ஆதரிக்கப்பட்டுச் செயல் படுத்தப்படுகின்றன என்று டைசி முடிவு கூறினர். அவர் கருதிய 'ஏதோ ஓர் ஆற்றல்' என்பது சட்டத்தின் ஆற்றல் என்பதைத் தவிர வேறென்றுமில்லை. இதனுல் வழக்கற்றுப்போன துரோகக் குற்றச்சாட்டு முறையின் (impeachment) மீது உள்ள அச்சமே இந்த ஆற்றல் என அவர் கருதியதாகப் பொரு ளாகாது. 'அரசியலில் மிகவும் துணிவாக ஈடுபடக் கூடிய எவரையும், வழக்காறுகளென்ற வடிவத்தில் வெளியிடப்பட் டுள்ள அரசியலமைப்பின் அடிப்படையான கொள்கைகளுக்குக் கீழ்ப்படும்படியாகச் செய்யக்கூடிய ஆற்றல் (sanction) எது என்ருல், அது, (வழக்காறுகளை) மீறும் செய்கையானது அவ்வாறு மீறுபவரை (offender) நாட்டின் நீதிமன்றங்களோடும் சட்டத் தோடும் முரண்பட்டு நிற்கச் செய்யுமென்ற உண்மையே' என்று அவர் கருதினர். அரசருடைய விசேட அதிகாரம் கையாளப்படுவதைக் கட்டுப்படுத்தவல்ல சில வழக்காறுகளை எடுத்துக்காட்டாகக் கொண்டால், டைசியின் கருத்தை ஆதரிப்பது எளிதாக இருக்கிறது. ஆயினும், ஒரு காலத்திய வழக்காற்றின் அடிப்படையில் அமைந்திருந்த விதிக்கும், பின்னர் எழுதப்பட்ட சட்டத்தின் மூலமாக நாட்டின் சட்டமாக ஆக்கப்பட்ட விதிக்கும் தெளிவான ஒரு பாகுபாடு காண்பது கடினமாகும். சட்டத்தினின்றும் வழக்காற்றை ஒரு தெளிவான வேறுபாடு காட்டுவது கடினமாக இருப்பதற்குக் காரணம் ஒரு எழுதப்பட்ட அரசியலமைப்புச் சட்டம் இல்லாததே ஆகும் ஆயினும், வழக்காறுகள் அரசியலமைப்பில் எழுதப்படா விட்டாலும், அரசாங்கம் இயங்குவதில் அவை முக்கியப் பங்கு கொள்கின்றன என்பது எழுதப்பட்ட அரசியலமைப்புகளை உடைய நாடுகளைப் பொறுத்தவரையிலும் உண்மையே. மேலும் ஒரு வழக்கத்தைச் சட்டமாக நிறைவேற்றவும், அது நீதிமன்றங்களின் நடவடிக்கையின் மூலமாகச் செயல்படுத்தப்

7

படுவதினின்றும் விலக்கவும் இயலும். இவ்வாறு இலங்கை அரசியலமைப்புச் சட்டமானது, அமைச்சர்களுடைய ஆலோசனையின்பேரில் அரசர் அதிகாரங்களைக் கையாளுவதைப்பற்றிய சில வழக்காறுகளைச் சட்டமாக ஆக்குகின்றது. ஆயினும் அவற்றை நீதிமன்ற நடவடிக்கையின் மூலமாக அவை செயல்படுத்தப்படுவதினின்றும் அவற்றைத் தெளிவாக விலக்குகின்றன.

பாராளுமன்றத்தின் இறைமை அதிகாரத்துக்குப் புறவகையிலுள்ள வரம்புகளை அரசியல் சார்பான ஆற்றலும் (external limitations) டைசி ஆய்வு செய்கையிலும், பொது மக்கள் கருத்தின் ஆற்றலை அவர் ஆய்வு செய்கையிலும் கண்ட வழக்காறுகளுக்குக் கீழ்ப்படியும் நிலையை உண்டாக்குகின்றன என்று அறிந்திருத்தார். (இதனை உண்டாக்குவதற்கு) சட்ட நடவடிக்கை எடுக்கப்படுதல் கூடுமாயினும், நீதிமன்றத்தில் நடவடிக்கை எடுக்கப்படுவதைவிட, அரசியல் நடவடிக்கை எடுக்கப்படு மென்பதே நடைமுறையில் பெரும்பான்மையும் நடைபெறக் கூடியதாகும். தோல்வியுற்ற ஒரு அமைச்சரவை அலுவலைத் துறக்க மறுக்குமானால் பாராளுமன்றத்தால் ஒப்புதலளிக்கப்படாத ஆட்சிச் செயலை அது செய்யக்கூடிய முடிவான நிலை ஏற்படுமென்றும், அதனால் நீதிமன்றங்களால் நீக்குதல் செய்யப்படக் கூடிய சட்டத்துக்கு முரணான செயல்கள் தோன்றுமெனவும், டைசி வாதம் செய்தார். இத்தகைய நிலைமை தோன்றுவதற்கு முன்னரேயே அமைச்சரவையானது அலுவலைத் துறக்கும்படியாகப் பொது மக்களின் கட்டாயத்துக்கு உட்படுமென அனுமானிக்க இடமிருக்கிறது. நீதிமன்றங்களில் நடவடிக்கை எடுக்கப்படுமென்பதற்கு அஞ்சி அமைச்சர்கள் பொறுப்பினின்றும் நழுவி விடுவதில்லை. தேர்தலில் அமைச்சர்களுக்கு மாறாகக்கிடைக்கும் வாக்குகளின் மூலமாகப் பொதுமக்களின் கருத்து வெளிப்படுவதாலோ, அல்லது பொதுமக்கள் மன்றத்தில் அமைச்சர்களுடைய ஆதரவாளர்களில் சிலர் அவர்களிடம் முரணியிருப்பதனாலோ, அமைச்சர்களுடைய நடத்தை பாதிக்கப்படுகிறது. அவர்கள் தங்களுடைய அரசியல் நடத்தையில் பிரதிநிதித்துவ அரசாங்க முறையின் மரபுகளுக்கேற்ப ஆளும் விருப்பத்தோடு இருக்கின்றனர். சுருங்கக் கூறின், அரசர் தனது விசேட அதிகாரங்களைக் கையாளுதல் என்றாலும் சரி அல்லது அமைச்சர்களுடைய பொதுவாழ்வின் நடத்தை என்றாலும் சரி, யாவராலும் கீழ்ப்படியக் கூடிய அரசியல் அதிகாரம் (standard of political authority) என்ற ஒரு நிலை

இருக்கிறது. ஆட்சி செய்பவர்கள், பொதுமக்கள் கருத்து என்ற தீர்ப்பை முடிவாகக் கட்டுப்படுத்த வியலாது. அவர்கள் அந்த தீர்ப்பைத் தங்களுடைய அரசியல் செயல்களிலே பாதிக்க அல்லது உருவாக்க மட்டுமே செய்யக்கூடும். காமன்வெல்த் நாடுகள் ஒவ்வொன்றும் தத்தமக்குள் கொண்டுள்ள உறவுகளடங்கிய துறையைப் பொறுத்த வரையிலே, ஒரு வழக்கத்தை மீறும் செயல் முடிவில் சட்டத்துக்கு முரணான நடத்தையில் கொண்டு விடுமென்ற டைசியின் வாதம் எவ்வாறு ஒப்புக்கொள்ளப்படக் கூடியதென்று தோன்றவில்லை. இத்தகைய நிலைமையில் சமமான நல்ல நிலையை உண்டாக்குவது எது என்றால், தீவிர நிலையில்லாமல் நடுத்தரமான நிலையில் (moderation) கையாளப்படவேண்டிய பொருளாதார, அரசியற் கேள்விகள் உள்ளன என்பதும், இந் நிலையைக் கையாள ஒவ்வொரு உறுப்பு நாட்டுக்கும் சுதந்திரம் உண்டு என்ற எண்ணமுமே யாகும். (காமன் வெல்த்தின்) மற்ற எந்த உறுப்பு நாட்டுக்கும் எதிராகச் சட்ட ஆற்றலைக் (legal sanction) கையாளுவதற்கு யுனைட்டெட் கிங்டத்தால் இயலுமென்பதாக இக் காலத்தில் எவரும் எண்ணமாட்டார். ஆயினும், இத் துறையில் வழக்காறுகளின் முக்கியத்துவமானது காமன்வெல்த் நாடுகளுக்கிடையே உள்ள உறவுகளில் அவ்வளவாகக் காணப்படாமல், ஒரு புதிய நாட்டினுடைய எழுதப்பட்ட அரசியலமைப்புச் சட்டத்திலே பாராளுமன்ற அரசாங்கத்தின் விதிகளும், செயல் முறைகளும் ஏற்றுக் கொள்ளப்பட்டிருக்கின்றன என்பதில்தான் காணப்படுகிறது. பொறுப்பாட்சி முறையில் புதிதாக ஈடுபடும் அமைச்சர்களுடைய விருப்பத்திற்கு வழக்க விதிகளை விட்டு விட்டு அவைகளைப்பற்றி அரசியலமைப்புச் சட்டத்தில் யாதொன்றும் கூறாமல் விட்டு விடுவதா, அல்லது ஒரு புதிய அமைப்பிலே ஏற்றுக் கொள்ளப்பட இயலாததாகவும், செயல் படுத்தப்பட முடியாததாகவும் மாறிவிடக் கூடியவாறு ஒரு விதியை சட்டத்தைப்போல நெகிழ்ச்சி யில்லாததாக ஆக்குவதா என்பதே ஈண்டு தீர்மானிக்கப்பட வேண்டிய தாகும். மேலே குறிப்பிட்டவாறு இலங்கை அரசியலமைப்பில், ஒருவழக்காற்றை (convention) நீதிமன்றங்களின் மூலமாகச் செயல்படுத்தப்படுதல் விலக்கப்பட்டுள்ளது. இதேபோல விலக்கப்பட்டாலல்லாமல் நாட்டின் சட்டத்தின் ஒரு பாகமாக ஆக்கப்பட்டுள்ள ஒரு வழக்காறு என்பது, ஒரு வழக்கத்தினடிப்படையில் தோன்றியது என்ற ஒரே காரணத்தினால், அது நீதிமன்றங்களினால் செயல்படுத்தப்பட முடியாது என்று வாதிட முடியாது.

வழக்காறுகளுக்குக் கீழ்படியச் செய்வது என்பது அவை ஒரு சட்ட ஆற்றலோடு பொருந்தியிருப்பதால்தான் என்று டைசி கண்ட முடிபானது, எதனுல் தோன்றியது எனில், அவர் வழக்காறுகளை அரசியலமைப்புச் சட்ட வழக்கறிஞரின் ஆய்வுக்குரிய துறையிலிருந்து விலக்கியதனுல்தான் தோன்றிய தாகும். உண்மையில் எது அரசியலமைப்புச் சட்டம், எது வழக்காறு என்று திட்டவட்டமான வரையரையை உறுதியாக எந்த அரசியலமைப்புச் சட்ட வழக்கறிஞராலும் திட்டமாகக் கூற முடியாது.சில சட்ட நூல்களி லடங்கியுள்ள வழக்கங்களை அதன் சட்டமானது அடிப்படையாக உடையது என்ற அனுமானத்தி லமைந்திருக்கின்றன. மேலும் வழக்காறு களுக்குச் சட்ட ஆற்றல் இருப்பதாக நீதிபதிகள் கருதியதைக் காட்டக்கூடிய வழக்குகளும் (cases) இருக்கின்றன. வெஸ்ட் மின்ஸ்டர் சட்டத்தின் முன்னுரையிலே குறிப்பிடப்படும் ஒரு வழக்காருனது செயல் படுத்தப்படக்கூடிய 4ஆவது சட்டப் பிரிவாகச் செய்யப்பட்டிருக்கிறது. எனவே, இந்த எடுத்துக் காட்டு அரசியலமைப்புச் சட்டத்திலே வழக்காறுக்கு உரிய இடத்தை ஐயத்துக்கு இடமில்லாமல் நிறுவிற்று. அரசிய லமைப்பிலுள்ள சில விதிகள் நீதிமன்றத்தில் நிறைவேற்றப் படக் கூடியவை யாகையால் அவை கட்டுப்படுத்தும் ஆற்றலுடையவை. அரசியலமைப்பிலுள்ள வேறு சில விதிகள் செயலாற்றுவதற்கு வசதியானவையாகக் கையாளப் படுகின்றன. இவ் விரு வகையான விதிகளுக்கிடையே ஒரு தெளிவான பாகுபாடு உள்ளதென்பதை நாம் ஏற்றுக் கொண்டால், பிற் கூறப்பட்டவை (அதாவது வசதிக்காகக் கையாளப்படும் செயல் முறைகள்) முற் கூறப்பட்டவற்ருேடு தொடர்புடையன என்று விளக்கும். அதன் மூலமாகப் பிற் கூறப்பட்ட விதிகள் ஏன் கடைப்பிடிக்கப்படுகின்றன என்ற விளக்கத்தை ஏற்றுக்கொள்ளுவது எளிதாக இருக்கின்றது. ஆனுல், அரசரின் விசேட அதிகாரத்தைக் கையாளுதலில் பாராளுமன்றத்துக்கு அமைச்சர்கள் பொறுப்புடையவர்கள் என்பதை நிறுவும் விதிகளையும்விட மிகப்பெரிய அளவில் வழக்காறுகள் இருக்கின்றன; இது ஒப்புக் கொள்ளப்பட்டு விட்டால், மேற்கூறிய இருவகை விதிகளுக்குமிடையே வேறுபாடு கிடையாது.அமைச்சர்களின் பொறுப்பு என்பது முற் காலத்தில் துரோகக் குற்றச்சாட்டு முறையின் (impeachment) மூலமாக நிறைவேற்றப்பட்டுவந்த சட்டவியலான பொறுப்பை (legal responsibility) நடை முறையில் நீக்கியிருக்கிற ஒரு வழக்கமான கடமையாகும்.

வழக்காறுகளுக்கு (கீழ்ப்படியும்) ஆற்றலைத் தருவது முடிவில் சட்டவியல்பான ஆற்றலே (legal sanction) என்பதை விளக்குவதற்கு டைசி எடுத்துக்கொண்ட எடுத்துக்காட்டு எதுவெனில், பண ஒதுக்கீடு மசோதாவையும் (Appropriation Bill), நிதி மசோதாவையும் (Finance Bill) நிறைவேற்றும் பொருட்டு ஆண்டுதோறும் பாராளுமன்றக் கூட்டங்கள் நடைபெற வேண்டுமென்று வலியுறுத்துகிற விதியேயாகும். பாராளுமன்றத்தின் ஆண்டுக் கூட்டம் நடைபெற வேண்டுமென்று வலியுறுத்தக் கூடிய தெளிவான விதி ஏதும் கிடையாது. 1694ஆம் ஆண்டின் மூவாண்டுச் சட்டமானது (Triennial Act, 1694) பாராளுமன்றம் ஒவ்வொரு மூன்றாண்டுகளுக்கும் கூடவேண்டுமென்று வலியுறுத்துகிறது. ஆனால், நடைமுறையிலே அரசாங்க-நிதிகளின் செலவையும், வரி திரட்டுவதின் ஒரு முக்கியமான பகுதியையும் பற்றிக் கூறுகின்ற சட்டமானது, ஓராண்டுக் காலத்துக்கு மட்டுமே நிறைவேற்றப்படுகிறது. எனவே, இத்தகைய சட்டமானது ஆண்டுதோறும் புதுப்பிக்கப்பட வேண்டியதாகின்றது. இந்தக் கட்டாயமான நிலைமையே, மற்றச் செயல்களோடுகூட, வருமான வரியைத் திரட்டுவதற்கும், அதைச் செலவிடுவதற்கும் தேவையான சட்டப்படியான அதிகாரமானது தொடர்ந்து இருக்கும்பொருட்டுப் பாராளுமன்றத்தின் கூட்டமானது ஆண்டுக்கு ஒரு முறையேனும் இருக்கும் என்ற உறுதிப்பாட்டை உண்டாக்குகிறது. ஆசிரியர் (டைசி) உள்நாட்டு வரித்துறையின் ஆணையாளர்களுக்கு ஆலோசகராகப் (Counsel to the Commissioners of the Inland Revenue) பல ஆண்டுகளாக இருந்தார் என்பது நினைவுகூறுதற் குரியது. இதுவே (அவர் கூறும்) இந்த எடுத்துக்காட்டை விளக்குகிறது. எனினும், ஒரு வரியை மக்களிடமிருந்து வாங்குவதற்குப் பாராளுமன்றம் அதிகாரத்தை (authorisation) அளிக்கு முன்பாகவே அவ்வாறு வரியை வாங்கும் வழக்கமானது சட்டத்துக்கு முரணானது என்பதாக அவர் வாழ்நாளிலேயே தீர்ப்பளிக்கப்பட்டது. (இவ்வாறு தீர்ப்பளிக்கப்பட்ட) உடனேயே, பாராளுமன்றத்தினின்றும் அதிகாரத்தைப் பெறுமுன்னரே, வரிகளை வாங்கும் சட்டத்துக்கு முரணான வழக்கத்தைச் சட்டத்துக்கு ஒத்ததாக ஆக்கும் பொருட்டுப் பாராளுமன்றத்தினால் சட்டமானது மாற்றியமைக்கப்பட்டது.[1] சட்டத்தை வரிவாங்கும் ஆணையாளர் மீறுவதனால் உண்டான

[1] Bowles என்பவருக்கும் Bank of England-க்கும் 1913-ல் நடந்த வழக்கையும், 1912ஆம் ஆண்டின் Provisional Collection of Taxes Act என்ற சட்டத்தையும் பார்க்க.

விளைவு என்னவெனில், சட்டத்தில் ஒரு மாறுதல் செய்ததே ஆகும். இதனைப்போன்ற பல செயல்களை அரசாங்கம் செய்ய இயலும். எவ்வாறெனில், கடந்த காலத்தில் செய்யப்பட்ட சட்டத்துக்கு முரணான செயலின் குற்ற விளைவுகளைப் பொறுத்துவிடுவதற்காக ஒரு நட்ட ஈட்டு மசோதாவை (Indemnity Bill) அரசாங்கத்தினுடைய பெரும்பான்மைக் கட்சியானது பொதுமக்கள் மன்றத்தில் நிறைவேற்றக் கூடு மென்பது சாதாரணமானதே ஆகும்.

அரசியல் வழக்கங்களின் விரிவான பரப்பைப் பற்றியும், அரசாங்கச் செயலின் முழு அளவிலும், அவை பரவியுள்ளன என்பதைப் பற்றியும், காமன்வெல்த்திலுள்ள பல நாடுகள் சுதந்திர நிலையை அடைவதில் அவை மிக முக்கியமான பங்கு கொண்டுள்ளதைப் பற்றியும், 1931ஆம் ஆண்டில் வெஸ்ட்மின்ஸ்ட்டர் சட்டம் நிறைவேறும் வரையில் இருந்து வந்த சட்டற்தின் மூலமாக யாதொரு உதவியையும் பெறுமல் காமன்வெல்த்தின் பழைய உறுப்பு நாடுகள் சுதந்திர நிலையை அடைந்தன என்பதைப் பற்றியும் நாம் முன்னரே சிறிது கூறினேம். பேரரசு மாநாடுகளில் (Imperial conferences) அரசாங்கங்களின் தலைவர்களுக்கிடையே ஒப்பந்தங்கள் ஏற்படுவதற்கு வழக்கங்கள் உதவி செய்தன.கூட்டங்களுக்குப் பின்னர் தத்தம் நாடுகளுக்கு அத் தலைவர்கள் திரும்பியதும் அவ் வழக்கங்கள் செயலில் சாதாரணமாகக் கையாளப்பட்டன. எனவே, அவை யாவரையும் கட்டுப்படுத்த வல்லவையெனக் கருதப்பட்டன.எந்தெந்த அரசாங்கங்களின் முதலமைச்சர்கள் (இத்தகைய ஒப்பந்தங்களின் மூலமாகப்) பொறுப்புகளை ஏற்றுக் கொண்டார்களோ அவ் வரசாங்கங்கள் அப் பொறுப்பு களுக்கு அளிக்கும் ஒப்புதல்களின் மூலம் மேற்கூறிய வழக்கங்கள் கட்டுப்படுத்தும் ஆற்றலைப் பெறுகின்றன. இத்தகைய மாநாடுகளின் தீர்மானங்களுக்குச் சட்டத்தின் மூலமாகக் கட்டுப்படுத்தும் ஆற்றல் கிடையாது. ஒரு சமயம், ஒரு அரசாங்கம் மாறி, வேறொன்று வந்தபோது (மேற்படி மாநாட்டின்) தீர்மானங்கள் செயல்படுத்தப்படுவது தடை பட்டது. இத்தகைய வழக்கங்களின் பொருளைப்பற்றியும் அவற்றைக் கையாளுதலைப்பற்றியும் எழும் விவகாரங்களைத் தீர்ப்பதற்கு யாதொரு நீதிமன்றமும் கிடையாது. காமன்வெல்த் நாடுகளுக்கான நீதிமன்றமொன்று ஏற்படுத்தப்படுதல் வேண்டுமென்று கூறும் கருத்துகள் செயலாக்கப்படவில்லை. என்றுலும்,சர்வதேசச் சட்டத்திலுள்ள ஒரு செய்தியைப் பற்றிக் காமன்வெல்த்திலுள்ள உறுப்பு நாடுகளுக்கிடையே தோன்றும்

எந்தக் கருத்து வேறுபாடும் ஹேக் நகரத்திலுள்ள அனைத்துலக நீதி மன்றத்தின் தீர்ப்புக்கு விடப்படுவதில்லை.

சட்டமும், வழக்காறும் கலந்துள்ளதைக் காட்டும் பல எடுத்துக் காட்டுகள் பாராளுமன்றத்தினுடைய சட்டத்திலும், வழக்கத்திலும் நிறைந்திருக்கின்றன. பாராளுமன்றத்தின் சட்டத்தில் ஒரு பகுதி எழுதப்பட்ட சட்டமாக இருக்கிறது பொதுமக்கள் மன்றத்தில் பிரதிநிதித்துவத்தைப் பற்றிய சட்டமானது, அதாவது, இடங்களைப் பகிர்ந்தளித்தல், வாக்களிக்கும் உரிமை, இரகசிய வாக்கெடுப்பு முதலியவை யெல்லாம் அரசியலமைப்புச் சட்டத்தின் பகுதியாகத் தெளிவாக அமைந்துள்ளன; எனவே, நீதி மன்றங்களில் நிறை வேற்றி வைக்கப்படுதல் கூடும். பிரபுக்கள் மன்றத்தின் அதிகாரங்களுக்கு 1911ஆம் ஆண்டின் பாராளுமன்றச் சட்டத்தினுல் ஏற்படுத்தப்பட்ட சட்டவரம்பும் (statutory limitation) மேற்கூறிய வகையில் (நீதிமன்றங்களின் மூலமாக) செயல்படுத்தப்படுமென்று தெளியப்படுமா? பாராளுமன்றச் சட்டத்தில் சேர்க்கப்படாததும், பிரபுக்கள் மன்றத்தால் பண மசோதாக்களுக்குக் கொண்டு வரப்பட்ட திருத்தங்களைப் பொதுமக்கள் மன்றம் தடுப்பதற்கு உரிமையுடையது என்று ஆக்குவதும் ஆகிய ஒரு விதி (rule) இருக்கிறது. இதனைப் போல வேறு பல விதிகளும் முற்றிலும் வழக்கங்களாகவே இருக்கின்றன. (1911ஆம் ஆண்டின் பாராளுமன்றச் சட்டத்தில் விதிக்கப்பட்ட வரம்புகளெல்லாம்) மேற்கூறியவற்றைப் போல, சட்டத்தைப் பற்றிய விஷயமாக அல்லாமல், முற்றிலும் வழக்கங்களாகவே இருக்கின்றனவா? பிரபுக்களுடைய அதிகாரத்தைக் குறைக்கும் சட்டத்தைப் போலவே, (பிரபுக்களால் பண மசோதாக்களுக்குக் கொண்டு வரப்படும் திருத்தங்களைப் பொதுமக்கள் மன்றம் மறுக்கும் அதிகாரத்தை ஒரு உரிமையாக ஆக்கும்) விதியும் (rule) கட்டுப்படுத்தக் கூடியதாக (binding) இருக்கிறது.

(பாராளுமன்றத்தின்) ஒவ்வொரு மன்றத்தினுடைய நிரந்தர ஆணைகளும் (Standing Orders) ஒரு நல்ல சட்டத்தை ஒத்திருக்கின்றன. அவையெல்லாம் மன்றத்தால் செயல் படுத்தப்படுகின்ற திட்டவட்டமான விதிகளென்பதும், மன்றத்துக்கு வெளியே சுதந்திரமான ஏதேனுமொரு நீதிமன்றத்தால் அவை செயல்படுத்தப்படுவதில்லை என்பதும், ஆனாலும், அவை பெரும்பாலும் யாவரையும் கட்டுப்படுத்தக் கூடியவையாகவே கருதப்படுகின்றன என்பதும் உண்மையே.

அவற்றைச் சாதாரண நீதிமன்றங்களின் மூலம் செயல்படுத்தக் கூடிய ஆற்றலுள்ள விதிகளெனவும் அவைகளைக் கருத முடியாது. பிரிட்டிஷ் அரசியலமைப்புச் சட்டத்தில் ஒரு அடிப்படையான கொள்கையாக இருப்பதும், பல காமன் வெல்த் நாடுகளின் அரசியலமைப்பில் சட்டமாக ஆக்கப்பட்டிருப்பதுமாகிய, ஒரு கொள்கை, மேற்கூறிய நிரந்தர ஆணைகளில் காணப்படுகிறது. அரசாங்கத்தின் நிதி (public money) பற்றிய பொதுமக்கள் மன்றத்தின் நிரந்தர ஆணைகளில் மிகப் பழைமையானவையும் பொதுமக்கள் மன்றத்தின் சுய ஆட்சிக்காகவே[1] ஒரு நூற்றுண்டுக் காலத்துக்கு முன்பே செய்யப்பட்டும் இருக்கும் பல ஆணைகள் காணப்படுகின்றன. அவைகளின்படி, பொது அல்லது அரசாங்க வரிப்பணத்தி லிருந்து (public revenue) செலவு செய்வதற்கு வழிவகுக்கும் ஒவ்வொரு தீர்மானமும் பொதுமக்கள் மன்றத்தால் ஒப்புக் கொள்ளப்படு முன்பாக, அரசருடைய பரிந்துரையை (recommendation) பெறுதல் வேண்டும்; அதாவது அரசருடைய ஒரு அமைச்சரால் ஏற்றுக்கொள்ளப்பட வேண்டும். அத்தகைய பரிந்துரையை அமைச்சரால் அது பெற்ற பின்னர், அது பிற்பட்ட ஒரு நாளுக்கு ஒத்திவைக்கப்பட்டு, பொது மக்கள் மன்ற உறுப்பினர் அனைவரையும் கொண்ட ஒரு குழுவின் (மன்றத்தார் குழு—Committee of the whole House) பரிசீலனைக்கு (referred) அனுப்பப்பட வேண்டும்; அதன் பின்னரே அதன் மீது மன்றத்தின் தீர்மானமோ அல்லது வாக்கெடுப்போ நிறைவேற்றப் பெறுகிறது.

மேற்படி கொள்கையானது யுனைட்டெட் கிங்டத்தின் ஒரு வழக்கமாக இருக்கிற தென்பதனுலும், ஆனுல் அதே கொள்கை மற்ற நாடுகளில் அரசியலமைப்புச் சட்டத்தில் சேர்க்கப்பட்டுள்ளது என்பதனுலும், அக் கொள்கை பிரிட்டிஷ் காமன்வெல்த்தின் ஏனைய பகுதிகளைவிட இங்கே (அதாவது யுனைடெட் கிங்டத்தில்) அவ்வளவு அடிப்படையானதாகக் கருதப்படவில்லை என்று பொருள்படாது. இக் கொள்கை யானது, நீதிமன்றங்களினுல் நிறைவேற்றி வைக்கப்படக் கூடிய நாட்டின் சட்டத்தின் பகுதியாக இருக்கின்ற காரணத்தினுல் அல்லாமல் அது மிக நெடுங்காலமாகப் பயனுள்ளதாகத் தெரியவந்திருப்பதனுலும், அவ்வாறு அது வழக்கத்தில் நிறுவப்பட்டிருப்பதனுலுமே, அது அரசிய

[1] மே என்பவர் எழுதிய பாராளுமன்றச் செயல்முறை (Parliamentary Practice) 16ஆம் பதிப்பு, பக்கங்கள் 687-692. நிரந்தர ஆணைகள் 66-71B. Nos. 66, 67, 68, ஆண்டுகள் முறையே 1713, 1707, 1715.

லமைப்புச் சட்டத்தின் ஒரு விதியாக வந்து விட்டது. எனவே, இந்த விதியை மாற்றுவதற்கு, அரசியலமைப்புச் சட்டத்தைத் திருத்துவதைவிட நிரந்தர ஆணைகளைத் திருத்துவதே எளிது என்ற கருத்தை நாம் ஒப்புக்கொள்ளலாம். ஆயினும், ஆட்சி அலுவல்களில் அரசாங்கத்துக் குள்ள பொறுப்புக்கு அடித்தள மாக அமைந்திருக்கும் மேற்கூறிய கொள்கையை எந்த ஒரு அரசாங்கமும் தகர்க்கத் துணிவு கொள்ளாது. எனவே, இக் கொள்கை டொமீனியன்களின் அரசியலமைப்புச் சட்டங் களின் சட்ட விதியானது எவ்வாறு காப்பாற்றப்படுகிறதோ, அது போலவே, வழக்கம் என்ற வடிவிலே காப்பாற்றப் படுகிறது.

வழக்கங்கள் (conventions), அரசியலமைப்புச் சட்டத்தின் பகுதிகளாக அமைந்துள்ளன என்பதற்கு, தலைமை அமைச்ச ருடைய நிலையும், அவருக்குப் பின்னர், அவ் வலுவலை ஏற்கக் கூடிய எதிர்க்கட்சித் தலைவருடைய நிலையும் எடுத்துக் காட்டுகின்றன. ஆசிரியர் ஜென்னிங்க்ஸ்[1] கூறுவது போல, தலைமை அமைச்சர் 1917ஆம் ஆண்டுக்கு முன்னர், சட்ட நூல் எதிலும் குறிப்பிடப்படவில்லை என்பதும், எனவே இதே காரணத்தினுல் அவர் ஆண்டொன்றுக்கு 10,000 பவுன் ஊதியமும், ஓய்வுச் சம்பள உரிமையும் பெறுகிறுர் என்பதும், இரண்டு உடற் பயிற்சி மன்றங்களுக்கு உறுப்பினர்களை அவர் அமர்த்தும் வேலையைச் செய்வதனுல் அதற்கு ஈடாக அவர் ஒரு நாட்டுப்புற இருக்கையைப் (country seat) பெறுகிறு ரென்பதும், எதிர்க்கட்சித் தலைவர் என்ற (Leader of the Opposition) அலுவலுக்குச் சம்பளம் ஒதுக்கப்படுவதனுலல்லாமல், மற்றபடி சட்ட வகையில் அது கிடையாது[2] என்பதும் உண்மையே. ஆனுல் சட்டம் இயற்றுதல் என்ற செயலே (legislation), தலைமை அமைச்சர் என்ற ஒருவரும், எதிர்க்கட்சித் தலைவரென்ற ஒருவரும் இருக்கின்றன ரென்ற அனுமானத்தின் (assumption) அடிப்படையில் இருக்கின்றது.

[1] Jennnings, The Law and the Constitution, 4ஆம் பதிப்பு, பக்கம் 117.

[2] அமைச்சர்களுக்கும் எதிர்க் கட்சித் தலைவருக்கும் சம்பளங்கள் கொடுக்கப்படுவதற்கு வகை செய்கிற 1937ஆம் ஆண்டின் அரசரின் அமைச்சர்களுக்கான சட்டமானது வழக்கத்தி னடிப்படையிலிருக்கிற காபினெட் இருப்பதைக் குறிப்பாக ஒப்புக் கொள்கிறது. இதேபோலவே 1917ஆம் ஆண்டின் செக்கர்ஸ் எஸ்டேட் சட்டத்தின் (Chequers Estate, Act) பிற்சேர்க்கையானது (Schedule) தலைமை அமைச்சர் அலுவல் இருப்பதை அனுமானித்துக் கொள்ளுகிறது; தலைமை அமைச்சரின் அலுவல்கள் சட்டப்படியாக அவர் இன்னொரு அலுவலை, அதாவது கருவூல முதற் பிரபு (First Lord of the Treasury) என்ற வேறென்றை ஏற்றிருப்பதைச் சார்ந்திருக்கின்றன.

ஆட்சியிலே மிக முக்கியமான அலுவலும், காபினெட் முழுமையும், இரு நூறுண்டுகளுக்கும் மேலாக இருந்து வந்திருக்கும்போது, அவற்றுக்குச் சட்ட வடிவில் இடம் இருப்பதை (legal entity) மறுப்பது வெறும் நூலறிவுக்கு ஒத்த (pedantic) இயல்பே ஆகும்.

சட்டத்தையும், வழக்கத்தையும் வேறுபடுத்திக் காட்ட வல்ல ஏதேனுமொரு வரையறையை அல்லது எல்லைக் கோட்டைச் சுட்டிக் காட்ட இயலாது. இதனை நாம் ஒப்புக் கொள்வதே, 'நீதிமன்றம்'[1] (court) என்ற சொல்லுக்குக் கொடுக்கப்படும் பொருளை ஒட்டியே மேற்படி வேறுபாடு அமைந்துள்ளது என்பதும், (சட்டத்தைச் கையாளுவதற்கு நிறுவனங்கள் இருக்கின்றன; ஆனால் நீதிமன்ற இயல்பை உடைய நிறுவனங்கள் எதுவும் வழக்கங்களைக் கையாளுதற்கு இல்லை என்பதைத் தவிர) அவை இரண்டின் இயல்பைப் பொறுத்தவரையில் வேறுபாடு இல்லை என்பதும், குறிப்பாகத் தெரியவருகின்றன. சில வழக்கங்கள் அவற்றின் சொல்லமைப் பிலே சட்டத்தின் விதிகளைவிட மிகவும் திட்டவட்டமாக இருக்கின்றன. இந்த நிலைமை, பேரரசு மாநாடுகளில் ஏற் பட்ட ஒப்பந்தத்தின் விளைவாகத் தோன்றிய வழக்கங்களைப் பொறுத்தவரையில் உண்மையே ஆகும். வேறுபல வழக்கங்கள் தெளிவான இயல்பினை உடையனவாக இருக்கின்றன. இதுவே நடைமுறைகளுக்கும் (usages), வழக்கங்களுக்கும் (conventions) இடையே உள்ள வேறுபாட்டைக் காட்டுகின்றன. ஒரு விதி யானது சட்டத்தைச் சேர்ந்ததா, அல்லது வழக்கத்தைச் சேர்ந்ததா என்று பிரித்தறிய இயலாதவாறு ஒரு எல்லைக் கோடு அல்லது வரையறை சட்டத்துக்கும் வழக்கத்துக்கும் இடையே இருக்கிறது. பண மசோதாக்களைப் பொறுத்த வரையில் பாராளுமன்றச் சட்டத்தால் மன்றத் தலைவருக்கு (speaker) விதிக்கப்பட்ட சட்டப்படியான கடமைகளை எந்த நீதிமன்றம் செயல்படும்படி செய்ய முடியும் என்ற கேள்வி ஒருபுறம் எழுப்பப்படுகிறது. இதற்கு மாறுகச் சட்டத்தினுலோ அல்லது நீதிபதியினுல் செய்யப்பட்ட சட்டத்தினுலோ கூறப் படாவிட்டாலும், சட்டவகையாகப் பார்க்கும்போது தேவை யானதாகக் கருதப்படும் மரபு வழியாக வந்த செயல்முறைக்கு மாறுக முத்திரையிடப்பட்ட ஒரு அரசாங்கப் பத்திரமானது

[1] ஜென்னிங்க்ஸ் எழுதிய நூலின் 1933ஆம் ஆண்டின் முதற்பதிப்பு, பக்கம் 98. இந்தப் பகுதி பிந்திய பதிப்புகளில் காணப்படவில்லை; ஆயினும், இதற்கு ஆதாரமான காரணம் காணப்படுகிறது. நான்காம் பதிப்பு, பக்கம் 102-105.

செல்லுபடியாகாது என்று ஒரு நீதிமன்றம் மறுத்துக் கூறமுடியுமா?

இரண்டுக்குமுள்ள எல்லைக் கோடு தெளிவாக இல்லை யென்பதை நாம் ஒப்புக்கொள்ளுவதே, முழுமையாக நிறை வேற்றப்படுதற்குறிய இறைமை அதிகாரியின் ஆணை யே சட்டம் ஆகும் என்று ஆஸ்டின் கூறிய சட்டம் பற்றிய கருத்தையே ஆசிரியர் டைசி பெரும்பாலும் ஏற்றுக் கொண்டார் என்று காட்டுகிறது. ஆசிரியர் டைசி ஆஸ்டின் காட்டிய பிரித்தறியும் வழியைப் பின்பற்றி, முதன்முதலாக அதனை அரசியலமைப்புச் சட்டத்திலும் கையாண்டார் என்பது நமக்குத் தெளிவாகத் தெரியவருமானால், வழக்கங்க ளுக்குக் கீழ்ப்படிதல் வேண்டுமென்றும், ஏனென்றால் அரசிய லமைப்புச் சட்டங்களைப் போலவே வழக்கங்களும் செயல் படுத்தப்படக்கூடிய ஆற்றலுடையன (enforcement) என்றும் அவர் ஏன் விளக்கிக் கூற வேண்டுமென்பதை நாம் எளிதில் தெரிந்து கொள்ளலாம். ஆயினும், பல சட்டங்களும், எல்லாச் சட்டங்களும் கீழ்ப்படியப்படுதலுக்கு உரியன; ஏனென்றால், அவற்றின் உட்பொருளைப் பற்றிச் சமுதாயத் தினரிடையே பொதுவான உடன்பாடு இருக்கிறது. (சட்டத்தை மீறுவதனால் ஏற்படக் கூடிய) பின் விளைவுகளைப்பற்றிய அச்சமே, சமுதாயத்தில் பெரும்பாலானவரும் சட்டத்தை ஏற்று நடக்கும்படித் தூண்டுகிறது என்ற கருத்து மறுப்புக்கு (questio-nable) உரிய ஒன்று ஆகும். உண்மையில் ஒரு சட்டமானது காரண இயல்புக்கு மாறானதாகக் (unreasonable) கருதப் படுமானால், அதனைச் சாதாரண முறைகளின் மூலம் செயல் படுத்துவது இயலாது என்ற அளவுக்கு அது அடிக்கடி மீறப்படுகிறது. இவ்வாறு இருந்தால், காபினெட் அமைச்சர்கள் வழக்கங்களுக்குக் கீழ்ப்பட்டு நடப்பதற்குக் காரணம், அவற்றை மீறினால் சட்டத்துக்கு முரண்பட்ட நிலைமைக்கு அவர்கள் வரக் கூடுமென்பதே என்று ஏன் சொல்லப்படுகிறது? இன்றைய நாளில் தலைமையமைச்சர் அமைச்சரின் பொறுப்பைப் பற்றிய விதிகளை ஏற்று நடக்க வேண்டுமென்ற காரணத்துக்காக, துரோகக் குற்றச்சாட்டை (impeachment) எதிர் நோக்க வேண்டிய அச்சத்துக்கோ, அல்லது ஓல்ட் பெய்லி (Old Bailey) நீதிமன்றத்துக்கு வர வேண்டிய கட்டாயத்துக்கோ, அல்லது உயர்நீதி மன்றத் துக்கு (High Court) வரவேண்டிய கட்டாயத்துக்கோ ஆளாவதில்லை.

வழக்காறுகள் கீழ்ப்படியப்படுவதற்கு வேறு பல வலுவான நோக்கங்கள் இருக்கின்றன. அவை டைசியினுல் ஆராயப் படுகின்றன. அவையான: (1) அரசியலமைப்புச் சட்டத்தை ஒட்டிய அரசாங்க மரபுகளைத் தொடர்ந்து நடத்த வேண்டுமென்ற விருப்பம்; (2) மிகச் சிக்கலான இயந்திர அமைப்பை உடைய ஒரு கப்பலைப்போல இருக்கும் அரசாங்க இயந்திரத்தை (ship of state) வேலை செய்வதற்குத் தக்க நிலையில் வைத்திருக்க வேண்டுமென்ற எண்ணம்; (3) பொது மக்களுடைய நம்பிக்கையையும் அதனுேடு கூட அலுவலையும், அதிகாரத்தையும் நீடித்துத் தம் வசம் வைத்திருக்க வேண்டுமென்ற ஆவல். இந்தத் தூண்டும் ஆற்றல்களே (influences) யாவரையும் கட்டுப்படுத்தக் கூடிய முன் நிகழ்வுகள், வசதிக்குகந்த வழக்கங்கள் ஆகியவற்றின் அடிப்படையில் அமைந்துள்ள காபினெட் அரசாங்க முறையின் வழக்காறுகளை அடுத்தடுத்து வரும் பல தலைமுறையின் அமைச்சர்கள் ஏற்று நடக்கும்படி செய்கின்றன. ஒரு வழக்கத்தின் உட்பொருள் மாறலாம், அல்லது மாற்றியமைக்கவும் படலாம். ஆயினும் இவ்வாறு முந்திய செயல்முறையினின்றும் செய்யப்படும் ஒவ்வொரு மாறுதலும், பழைய மேற்கோள்களை மீருத மாறுதல் என்பதாகப் பொறுப்புள்ள அதிகாரிகளினுல் காட்டப்படுகின்றன. பழைய மேற்சான்றுக்கு மாருகச் செய்யப்பட்ட மாறுதல், ஒரு புதிய வழக்கத்தைத் தோற்றுவித்தது என்றும், அல்லது அத்தகைய மாறுதல் ஒரு தீய மேற்சான்று எனவும், எனவே அது வழக்கத்தை மீறுவதாகுமெனவும் காலப் போக்கில் தெளிவாக ஆகும்போது, மறுப்புகள் மறைகின்றன. இதனை ஒரு எடுத்துக் காட்டின் மூலம் தெளிவாகக் கூறலாம். 1932ஆம்ஆண்டில், காபினெட், சுங்க வரிபற்றிய கேள்வியைப் பொறுத்தவரையில் இறக்குமதி சுங்கங்களின் மசோதா (Import Duties Bill), மாறுபட்டிருப்பதற்கு இசைவது (agreement to differ) என்றும், அரசாங்கக் கொள்கையின் மற்ற விஷயங்களிலெல்லாம் ஒன்றுபட்டிருப்பது என்றும் வகை செய்தது. அப்போது காபினெட் பொதுமக்கள் மன்றத்துக்குக் கூட்டுப் பொறுப்போடு இருப்பதால், அது ஒன்று பட்ட கருத்தோடு எதனையும் பேசுதல் வேண்டுமென்று விதித்த ஒரு முன் நிகழ்வை (precedent) காபினெட் மாற்றி அமைத்தது.

மேற்படி தீர்மானமானது கீழ்க்காணும் சொற்ருெடர்களில் வெளியிடப்பட்டது:

காபினெட் வாணிபமீதம் பற்றிய குழுவின் அறிக்கையை (Report of the Committee on the balance of Trade) தன் முன்னர் வைத்து ஆய்வு செய்தது. நீண்ட விவாதத்துக்குப் பின்னர் மேற்படி பரிந்துரைகளின் மீது ஒரு மனப்பட்ட முடிவு எடுப்பது இயலாது என்று தெளிவாகத் தெரிகிறது.

எனினும், இந்த நாட்டையும், உலகம் முழுவதையும் எதிர்நோக்கும் கடுமையான பிரச்சினைகளுக்கிடையில், நாட்டின் ஒற்றுமையை நிலைநாட்டவேண்டிய முக்கியத்துவத்தை காபினெட் நன்றாக உணர்ந்துள்ளது.

எனவே, அது வழக்கமான அமைச்சரவைச் செயல் முறையில் ஏதாவதொரு மாற்றம் தேவை எனத் தீர்மானித்துள்ளது; மேலும், இறக்குமதிச் சுங்கங்கள், அவை தொடர்பான வேறு விஷயங்கள் ஆகியவற்றில் காபினெட் அமைச்சர்கள் தங்களுடைய சகாக்கள் செய்த முடிபுகளை ஆதரிக்க இயலாமலிருந்தால், அவர்கள் தங்களுடைய பேச்சின் மூலமாகவும், வாக்கின் மூலமாகவும் (vote), தங்களுடைய கருத்துகளைத் தெரிவிப்பதற்கு உரிமையுடன் இருக்கவேண்டுமென்று காபினெட் தீர்மானித்துள்ளது.

மற்றெல்லாக் கொள்கை விஷயங்களிலும் ஒன்றுபட்டிருக்கும் காபினெட், இத்தகைய ஒரு தனிப்பட்ட விதியின் மூலமாக, நாட்டினருடைய முடிவான கருத்தையும், இக் காலத்தின் தேவைகளையும் சரிவர விளக்கிக் காட்டுகிறது.

காபினெட், நாட்டினரின் கருத்தையும் இக் காலத் தேவைகளையும் சரிவர விளக்கிக் காட்டுகிறதென்ற நம்பிக்கையே,இங்கு ஒரு நியாயமாகக் காட்டப்படுகிறதென்பது கவனித்தற்கு உரியது. அரசாங்கத்தின் விசேட அதிகாரங்களைக் கையாளுதலை ஒழுங்குபடுத்தி அல்லது மாற்றி அமைக்கும் எல்லா வழக்காறுகளுக்கும் முடிவாகக் காட்டப்படும் நியாயம் இதுவே ஆகும். (மேற்படி சுங்கப் பிரச்சினையில்) மாறுபட்ட கருத்தைத் தெரிவித்த அமைச்சர்கள், சில மாதங்கள் கழித்து, மேற்படி விஷயத்துக்குத் தொடர்பான ஏகாதிபத்தியத் தனிச்சலுகை (imperial preference) என்ற கேள்வி எழுந்தபோது, அதன் காரணமாக வேலையை நீத்துவிட்டனர். இதன் விளைவாக காபினெட் ஒற்றுமை (cabinet unanimity) என்ற வழக்காறுனது மீண்டும் வலியுறுத்தப்பட்டது. ('மாறுபட்டிருக்க இசைதல்' என்ற தீர்மானத்தில் அமைந்த) இந்தப் பரிசோதனை வெற்றி

யாக இருந்திருக்குமானுல் மேற்படித் தீர்மானத்தைப் போன்று பல்வேறு தீர்மானங்கள் செய்யப்பட்டிருந்தால் (காபினெட் ஒற்றுமை என்ற) இந்த வழக்காறு மாற்றப்பட்டிருக்கும்.

இரண்டாவது எடுத்துக்காட்டு டைசியினுல் தனது கடைசிப் பதிப்பின் முன்னுரையில் புதிய ஒரு வழக்காறு என்று குறிப்பிடப்படுகிறது. இந்த வழக்காறு, பொதுத் தேர்தலில் தோல்வியுற்ற ஒரு அமைச்சரவையானது, புதிய பாராளு மன்றத்தைக் கூட்டும் வரையிலும் காத்திராமல், உடனடியாக வேலையை விட்டுவிடுமாறு வற்புறுத்துகிறது. 1834ஆம் ஆண்டின் பொதுத்தேர்தலுக்குப் பிறகு சிறுபான்மை நிலைமையை அடைந்த பீல் (Peel) என்ற தலைமை அமைச்சர், தன்னை அலுவலிலிருந்து நீக்குவதற்குப் பாராளுமன்றத்தில் செய்யப்பட்ட முயற்சியைத் தடுத்தார். இவ்வாறு அவர் செய்த ஒரு முன் நிகழ்ச்சியை, 1868ஆம் ஆண்டுக்கும் 1886ஆம் ஆண்டுக்கும் இடையே நடைபெற்ற நான்கு முன் நிகழ்ச்சிகள் (precedents) மாற்றி அமைத்தன. இத்தகைய ஒரு எடுத்துக் காட்டின் மூலமாகப் பழைய வழக்கத்தைப் பல தடவை மீறிய பின்பு, ஒரு புதிய வழக்கம் தோன்றிற்று. காலப்போக்கில் புதிய முன் நிகழ்ச்சிகள் யாவரையும் கட்டுப் படுத்தக் கூடியனவாகக் கருதப்பட்டன.

வழக்கத்தை மீறுதல் என்பதைத் தொடர்ந்து சட்டத்தை மீறும் செயலும் தோன்றும் என்ற வாதமானது, காபினெட்டுக்கும், பொதுமக்கள் மன்றத்துக்குமிடையே யுள்ள உறவுகளைத் தீர்மானிக்கின்ற வழக்கங்களுக்கே பொருத்தமாகும். பொதுமக்கள் மன்றமானது தனது நிரந்தர ஆணைகளைச் செயல்படுத்தத் தவறுமாயின், அதனுல்சட்டத்தை மீறுதல் என்ற விளைவு ஒன்றும் தோன்ருது. மேற்படி ஆணைகளில் சில மன்றத்தவர்கள் தமக்குள் செய்துகொள்ளும் ஒப்பந்தங்களின் மூலம் ஒதுக்கி வைக்கப்படுகின்றன. ஒரு சட்டத்தைச் செய்யும்போது, அதனுல் பாதிக்கப்படக் கூடிய தனியார் குழுக்களை (organised interests) ஒரு அரசாங்க ஆட்சித்துறை கலந்து ஆலோசிக்கத் தவறினுலும், அப்போது அது சட்டத்தை மீறிற்று என்ற விளைவு தோன்ருது. யுனைட்டெட் கிங்டத்தின் அரசாங்கமானது, கனடிய அரசாங்கத்தோடு, அவ் விரு நாடுகளுக்கும் பொதுவான ஒரு காரியத்தைப் பற்றி ஆலோசிக்கத் தவறினுல், அப்போதும் அது சட்டத்தை மீறிற்று என்ற விளைவு தோன்ருது. அண்மையில் ஏற்படுத்தப்பட்ட ஒரு வழக்கத்திற்கு முரணுக,

அரசியார் ஒரு பிரபுவை அழைத்துத் தலைமைஅமைச்சராகவும், கருவூல முதற் பிரபுவாகவும் (First Lord of the Treasury) அலுவலை ஏற்கும்படிக் கூறினார். அப்போதும் அச் செயல் சட்டத்தை மீறிய வினாவாகத் தோன்றாது. பல சூழ் நிலைகளிலே இவற்றைவிட மிக முக்கியமான அல்லது மிகச் சாதாரணமான வினாவுகள், ஏற்படுத்தப்பட்ட வழக்கங்களை மீறுவதால் தோன்றலாம். ஆயினும், இத்தகைய சூழ்நிலை எதிலும், நீதிமன்றங்களின் தீர்ப்புக்கு விடப்படக் கூடிய வினாவு எதுவும் தோன்றாது.

ஆசிரியர் டைசி அரசியலமைப்பின் வழக்காறுகளைப்பற்றிய தனது ஆய்வைத் (analysis) தனது நூலில் சேர்த்தது முற்றிலும் சரியே. அதுவே அவருடைய நூலின் மிகச் சிறப்பு மிக்க பகுதியாகும். ஆயினும் அவர் அரசியலை (politics) நீக்கியே ஆய்வு செய்வது என்ற ஒரு வரம்பைத் தமக்குத் தாமே விதித்துக் கொண்டார். ஆனால் வழக்காறுகளோ அரசியல் சூழ்நிலைக் கேற்ற செயல்முறைகளே (political expedients) ஆகும். 'சட்டத்தைச் செயல்படுத்தும் அதிகாரிக்குக் கீழ்ப்படிதலிலேதான் சட்டத்தின்முக்கியத்துவம் இருக்கிறது' என்ற கருத்தை உடையவர் அவர்.எனவே, அவர் இவ் வழியிலேயே தமக்கு ஏற்பட்டத் தடைகளை நீக்கிக் கொண்டார். சட்டத்துக்குக் கீழ்ப்படிதலைப்பற்றி அவர் கொண்டிருந்த இத்தகைய கருத்து, மிகவும் சிக்கலான, பெரிய அளவிலுள்ள பல்வேறு கோட்பாடுகள் (precepts) யாவராலும் ஏற்றுக் கொள்ளப்படுவதற்குத் தக்க காரணங்களை இப்பொழுது விளக்கவில்லை. இத்தகைய கோட்பாடுகள் பிரிட்டிஷ் காமன்வெல்த்தின் நிலையையும், பாராளுமன்ற அரசாங்க முறையையும் நாம் விளங்கிக் கொள்வதற்கு உறு துணையாக இருக்கின்றன. சட்டத்துக்குக் கீழ்படிதலைப்பற்றி அவர் கொண்டிருந்த கருத்து, (மேற்படி) சிக்கலான, பெரிய அளவிலுள்ள கோட்பாடுகள் ஒப்புக்கொள்ளப்படுவதற்கான காரணத்தை இப்பொழுது சரியாக விளக்காவிட்டாலும், இவ் வாசிரியர் வழக்காறுகளின் இயல்பை மிக வியக்கத்தக்க வகையில் விளக்கியமைக்காக அவருக்கு இக் காலத்தவர் கடப்பாடு உடையவர் என்பது நிலைபெறுகிறது.

6. முடிவுரை

பகுப்பு முறையை (analytic method) அரசியலமைப்புச் சட்ட ஆய்வில் ஆசிரியர் டைசி பொருந்தக் கையாண்டதே அவருடைய நூலில் காணப்படும் சிறப்பு ஆகும். எந்தப் பகுப்பு முறையும் சில முடிபுகளைத் தருகிறது. நமது அரசியலமைப்பு இயந்திரத்தின் அடிப்படையாகச் சில வழி காட்டி விதிகள் (guiding principles) என்று ஆசிரியர் டைசி கருதினர். அவற்றை அவர் மேற்படிப் பகுப்புமுறையின் மூலம் வருவித்தார். இத்தகைய விதிகளை அவர், அக் காலத்தவர் ஐயத்துக்கு இடமில்லாமல் ஒப்புக்கொள்ளக் கூடிய சொற்றொடர்களில் விளக்கினர். அவர் எடுத்தாண்ட சொற்றொடர்களின் தெளிவே, அவருடைய நூலை ஒரு உயர்தனிச் சிறப்பு நூலாக (classic) ஆக்க உதவிற்று. அவருடைய முறையைச் சட்ட நிறுவனங்களைப் பற்றிய (legal institutions) விளக்க உரைகளோ (descriptive writings) ஒப்பிடும்போது, அவருடைய முறையில் சில குறைபாடுகள் காணப்படுகின்றன. பேஜ்ஹாட் (Bagehot) என்ற ஆசிரியர் பத்தொன்பதாம் நூற்றுண்டின் நடுவில் காபினெட் அரசாங்க முறை இயங்கியதை எவ்வாறு கண்டாரோ அதை, 'ஆங்கில அரசாங்கம்' (The English Constitution) என்ற தமது நூலில் விளக்கியுள்ளார். அந்தக் காலத்தில் காபினெட்டுக்கும், அரசர், பாராளுமன்றம் ஆகியோருக்கும் இடையேயுள்ள உறவுகளைத் தெளிவாகத் தெரியப்படுத்துவதற்கும், வரலாற்ருசிரியருக்குப் பயன்படுவதற்கும் ஏற்ற வகையில் அவ்வாசிரியர் விளக்கியுள்ளார். ஆனல் டைசியின் ஆராய்ச்சியோ, பேஜ்ஹாட்டினுடையதைவிட மிகப்பெரிய விருப்பம் ஒன்றை அடிப்படையாக உடையது. எழுத்து வடிவில் இல்லாத ஒரு அரசியலமைப்பு, கோட்பாட்டு ஆசிரியர்களுக்குப் பயனுள்ள ஆய்வுக்கு ஆக்கம் அளிக்காது. ஆனல் இத்தகைய அரசியலமைப்பில் கொள்கைகளைக் (principles) காண்பதற்காக

டைசி ஆய்வு செய்தார். மிகவும் அடிப்படையானவை என்று கருதப்படக்கூடிய அரசியலமைப்புச் சட்டங்களுக்கும் வழக்கங்களுக்கும் விளக்கம் ஒன்றை அவர் வரைந்தார். அவர் யுனைட்டெட் கிங்டத்தின் எழுத்து வடிவத்திலில்லாத அரசியலமைப்பையும், காமன்வெல்த்தின் மற்றப் பகுதிகளில் நடைபெறுவதும், அண்மைக்கால ஆசிரிய யொருவரால் குறிப்பிடப் படுவதுமான 'கட்டுப்பாடான பரிசோதனைகளையும்' (controlled experiments) ஒப்பிட்டுப் பார்க்கக் கூடிய நிலையில் இல்லை.[1] பாராளுமன்ற இறைமையைப் பற்றி அவர் கொண்டிருந்த கருத்தை, யுனைட்டெட் கிங்டத்தின் சட்ட மன்றம் ஒன்றை மட்டிலும் வைத்து இப்பொழுது ஆராய முடியாது என்று நாம் இக்காலத்தில் கூறி, அவருடைய கருத்தைக் குறைகூறுவது எளிது. ஒரு அரசியலமைப்பு எப்பொழுது சட்டமாக ஆக்கப்படுகிறதோ, அப்பொழுதே அவ் வரசியலமைப்பானது எவ்வளவில் சாதாரணச் சட்டமியற்றும் வழியில் மாற்றப்படக் கூடுமென்ற கேள்வியும் உடன் எழுகிறது. அரசியலமைப்பைப் பாராளுமன்றமே தனது செயல் ஒன்றினுலேயே மாற்ற இயலாது என்று மேற்படி கேள்விக்கு விடை கிடைக்குமானுல், அத்தகைய அரசியலமைப்பில் சட்டப்படியான இறைமை அதிகாரியைப்பற்றி டைசி கூறிய விளக்கத்தினின்றும் மாறுபட்ட வேருெரு விளக்கத்தையே நாம் காணவேண்டும். ஆயினும் பாராளுமன்ற இறைமை என்பது யுனைட்டெட் கிங்டத்தின் அரசியல் நிறுவனங்களுக்கு மட்டுமே உள்ள தலை சிறந்த இயல்பு என்பதாக டைசி விளக்கினுரென்பதை நாம் வலியுறுத்தவேண்டும்.

அரசாங்கத் துறையை மட்டுமே உடைய (அவருடைய ஆய்வு முறை பற்றிச்) சில குறைபாடு கூறப்படுகிறது. அவருடைய நூலின் முதற் பதிப்பு வெளிவந்த 1885ஆம் ஆண்டில், அரசியலமைப்புச் சட்டத்தைப் பற்றி இருந்த பாடப் புத்தகங்களெல்லாம், அரசர், பாராளுமன்றம், நீதி மன்றங்கள் ஆகியோரைப் பற்றி விளக்கம் கூறுவதில்தான் நாட்டம் கொண்டிருந்தன. அவற்றில் உள்ளூர் அரசாங்க முறையைப்பற்றி யாதும் கூறப்படவில்லை. நடு அரசாங்கத்திற்கு விரிவாக வளர்ந்து வரும் ஆட்சிச் செயல்களின்அளவைப் பற்றி அவை ஏதும் கூறவில்லை. ஒருசில ஆண்டுகளுக்குப் பின்னரே அதனை ஆசிரியர் மெயிட்லண்ட் (Maitland) சுட்டிக் காட்டினுர். குடியேற்ற நாடுகளைப் பொறுத்த வரையில் புதிய

[1] G. Marshall: Parliamentary Sovereignty and the Commonwealth.

வழக்காறுகள் தோன்றியதை சர் வில்லியம் ஆன்சன் போன்ற ஆசிரியர்கள்கூடக் குறிப்பிடாமல் விட்டு விட்டார்கள். அரசாங்கத்தின் அலுவலைப்பற்றிய கருத்து எவ்வளவில் மாறிக்கொண்டு வந்தது என்பதை டைசி பிற்காலத்தில் உணரவேண்டியிருந்தது. அவர் எழுதிய 'பத்தொன்பதாம் நூற்றுண்டில் சட்டமும் கருத்தும்' (Law and opinion during the Nineteenth Century) என்ற நூல் வெளிவந்தபோது, அரசாங்கத்தின் அலுவல்கள் மாறுதலடைவதை அவர் உணர்ந்திருந்தா ரென்பதும், நன்கு தெரிய வந்தது; ஆனல், அவர் இத்தகைய மாறுதலை முழுமனத்தோடு விரும்பவில்லை என்று அந் நூல் காட்டுவதும் அவருடைய இயல்பே ஆகும்.

எனவே 'அரசியலமைப்பின் சட்டம்' (The Law of the Constitution) என்ற நூல் எழுதப்பட்ட பின்னணியை நாம் நினைவில் வைத்துக் கொள்ளுவோமானல், மேற்படி நூலுக்கு இருக்கும் வரம்புகளைப்பற்றி (limitations) எவரும் வருந்த வேண்டுவதில்லை. எனினும், இது, அந் நூல் ஏறக்குறைய எழுபத்தைந்து ஆண்டுக் காலமாக வியக்கத்தக்க செல்வாக்கு பெற்றிருந்தது ஏன் என்று காட்டவில்லை. ஆயினும், அரசியலமைப்பைப்பற்றி எழுதும் எந்த இந்தக்கால ஆசிரியரும் ஆசிரியர் டைசியின் நூலில் எவ்வளவு குறை கூறினும், அவருடைய கொள்கைகளைப்பற்றி விரிவான விளக்க உரையை எழுதத் தவறுவதில்லை. இருபது ஆண்டுகளுக்கு முன்னர், சட்டத்தின் ஆட்சி (rule of law) என்பதைப் பற்றிய அவருடைய கருத்தே, பாராளுமன்ற இறைமை என்ற கொள்கையைவிட மிகவும் கடுமையான எதிர்ப்புக்கு உள்ளாயிற்று. இன்றே இந்த நிலைமை மாறிவிட்டது. இப்பொழுது பாராளுமன்றத்தின் இறைமை என்பதே எதிர்ப்புக்கு உள்ளாகி இருக்கிறது. சட்டத்தின் ஆட்சி என்ற கருத்தை ஏற்றுக்கொள்ளும் இயல்பே இப்பொழுது பெருமளவில் காணப்படுறது.

எனவே, இந்த நூலுக்கு (The Law and the Constitution) உள்ள வரம்புகளுக்காக வருத்தம் ஏதும் தெரிவித்து, இந்த முன்னுரையை முடிக்க வேண்டிய தேவை இல்லை. ஆயினும் இன்றைய நாளில், அதிலுள்ள கொள்கைகள் நடைமுறையில் கையாளப்படுவதைச் சுருக்கிக் கூறுவது பயனுள்ளதாகும்.

பாராளுமன்றத்தின் இறைமை: பாராளுமன்றம் தலைமையான அதிகாரமுடையது என்ற சட்ட இயல்பான விதி

(legal rule) நீதி மன்றங்களால் ஒப்புக்கொள்ளப்பட்டும், ஆட்சித் துறையினுல் ஏற்றுக் கொள்ளப்பட்டும் இருக்கிறது. அரசியல் அதிகாரம் எவ்வகையாகக் கையாளப்படுகிறது என்பதைத் திட்டவட்டமாகக் கூறுவதற்கு எந்த வழக்கறிஞருக்கும் தனிப்பட்ட தகுதி இல்லை யென்ருலும், வாக்காளர்களுக்கு இருக்கும் அரசியல் இயல்பான தலைமை அதிகாரமே (political supremacy); சட்டம் இயற்றும் அதிகாரம் கையாளப்படுதலுக்கு ஒரு வரம்பாக இருக்கிறது என்பது இன்னும் ஒப்புக்கொள்ளப்படுகிறது. தனக்கு வாக்காளர்களால் கொடுக்கப்பட்ட அதிகாரத்தைத் தனது விருப்பம்போல் சட்டத்தை மாற்றும்பொருட்டுப் பயன்படுத்தக்கூடிய நிலையிலுள்ள காபினெட்டினுடைய அதிகாரம் வளர்ந்துள்ளது. இதனை ஒப்புக்கொள்ளுவதே, வாக்காளர்களுடைய அதிகாரத்துக்கு இருக்கும் வரம்பாகும். ஆனுல், வாக்காளர்கள் ஆங்காங்கே கூறிக்கொண்டிருக்கும் குறைபாடுகளை அறிவதற்காக ஒவ்வொரு அரசாங்கமும் கவனத்தோடேயே இருக்கிறது. வேறு வகையாகச் சொன்னுல், எது வலியுறுத்தப்படவேண்டுமோ, அதில் மாறுதல் உண்டாகிறது. பாராளுமன்ற அரசாங்க முறைக்கு அடிப்படையாக இருப்பது காபினெட் முறையே ஆகும். காபினெட் முறை அரசாங்கத்தின் கருவியாகத் திறமையாகச் செயல்பட வேண்டுமாயின், அது பாராளுமன்றத்தினுடைய (அல்லது பொது மக்கள் மன்றத்தினுடைய) சட்ட இயல்பான தலைமை அதிகாரத்தைத் தனது நோக்கங்களை நிறைவேற்றும் பொருட்டுக் கையாளக்கூடிய நிலையிலிருப்பதைப் பொறுத்திருக்கிறது. அது ஒரு எதேச்சாதிகாரமான அரசாங்கக் கருவியாக ஆகிவிடுவதினின்றும், எதனுல் தடுக்கப்படுகிறது என்ருல், நடுவில் ஏற்படும் இடைத் தேர்தல்களில் வாக்காளர்கள் பொதுமக்கள் மன்றத்தின் இயல்பை மாற்றி, அவ் வகையில் பாராளுமன்றத்திலுள்ள தலைமை நிலையை வேறு கட்சிகளிடத்தில் கொடுத்தல் கூடும் என்ற எண்ணத்தினுல்தான். ஆனுல், குடியாட்சிக் கொள்கையைக் காப்பாற்றுவது, அரசியல் இயல்பான இறைமையைத் தவிர (political sovereignty) சட்ட இயல்பான கோட்பாடு அன்று. உண்மையில் பாராளுமன்றத்தினுடைய சட்ட இயல்பான தலைமை அதிகாரம் என்ற கருவி, எந்த நேரத்திலும் ஒரு தீவிரமான போக்கை வடிவமாக உடைய அரசாங்கம் எளிதில் தோன்றக்கூடிய ஒரு இடர்ப்பாட்டை உண்டாக்குகிறது. எவ்வாறெனில், சட்டத்தில் எத்தகைய அடிப்படையான இயல்புடைய மாறுதலேயும் பாராளுமன்றத்தினுடைய ஒரு சாதாரணச் சட்டத்தின் மூலம் நிறைவேற்ற

முடியும். சுதந்திரத்தையும், ஒரு எழுதப்பட்ட அரசியலமைப்பையும் பெற்றிருக்கிற காமன்வெல்த்திலுள்ள நாடுகள் ஒவ்வொன்றையும் பொறுத்த வரையில், சுதந்திரம் என்பது யுனைட்டெட் கிங்டத்தின் பாராளுமன்றமானது இனி அவற்றின் மீது இறைமை அதிகாரத்தைக் கையாளவில்லை என்ற பொருளையே காட்டுகிறது. ஆயினும், யுனைட்டெட் கிங்டத்தின் அரசியலமைப்பை ஒட்டியே அமைக்கப்பட்டுள்ள மேற்படி நாடுகளின் அரசியலமைப்புக்களெல்லாம், நாட்டினுள்ளே இறைமை அதிகாரம் அமைந்திருக்கிறதென்ற எண்ணத்தை அடித்தளமாகக் கொண்டிருக்கின்றன.[1] ஆனால், ஒரு எழுதப்பட்ட அரசியலமைப்பை ஆதாரமாகக் கொண்ட ஒரு அரசு அல்லது நாடு (State), தனது சட்டமன்றமானது அதிகாரத்தினுடைய அடிப்படைத் தளத்தின் மீது தலைமையான கட்டுப்பாட்டு அதிகாரத்தைக் கையாளுவதற்கு உடன்படாது. (அரசியலமைப்பை) மாற்றக்கூடிய அதிகாரமானது, சட்டமன்றத்தாலும், வாக்காளர்களாலும் பகிர்ந்து கொள்ளப்படக்கூடு மென்று அரசியலமைப்புச் சட்டமானது கூறினால், அப்பொழுதே பாராளுமன்ற இறைமை என்ற டைசியின் கருத்தையும், அந்த அரசிலுள்ள இறைமை அதிகாரத்தையும் முரணில்லாத வகையில் இணைப்பது இயலாது என்ற நிலைமை தோன்றுகிறது.

சட்டத்தின் ஆட்சி (Rule of Law): அரசர், அவருடைய அமைச்சர்கள் ஆகியோருக்கு எதிராகவும், நடு, உள்ளூர் ஆட்சி அரசாங்கங்கள், தனிப்பட்ட அரசாங்கங்கள் ஆகியவற்றின் உறுப்புகளுக் கெதிராகவும், சாதாரணச் சட்டத்தின் மூலம் (common law) பாதுகாப்பு அளித்தல் என்ற பொருளுக்கு ஏற்பச் சட்டத்தின் ஆட்சியைக் கையாளக்கூடிய அளவு, இப்பொழுது சுதந்திரம் என்ற கருத்தில் ஏற்பட்டுள்ள மாற்றத்தினால், குறைந்துள்ளது. தனிப்பட்ட குடியாளுக் கெதிராக எடுக்கப்படுவதும், சட்டத்துக்கு முரணானதும், எதேச்சாதிகார இயல்பை உடையதுமான நடவடிக்கையைப் பொறுத்த வரையில், விசேட அதிகாரமானது மிகையாகக் கையாளப்படுவதை (excesses of the prerogative) நீதிமன்றங்கள் இன்றும் கட்டுப்படுத்துகின்றன. ஆயினும், பொதுமக்கள் மூலமாகக் கையாளப்படுகின்ற அரசியல் கட்டுப்பாடு தான், அரசாங்கத்தினுடைய சட்டப்படியான அதிகாரங்களைச் சட்டமானது விரிவாக ஆக்கும்போது, மிகவும் முக்கிய

[1] ஒரு வரம்புக்கு உட்பட்ட அளவில், இந்தக் கருத்து கனடா டொமினியனைப் பொறுத்த வரையில் உண்மை அன்று.

மானதாக ஆகிறது. தனிப்பட்ட ஆட்களினுடைய சுதந்திரத்தை எவ்வளவில் பாராளுமன்றத்தின் சட்டம் கட்டுப் படுத்தியபோதிலும், எதனை ஒரு சட்டமாகப் பாராளுமன்றம் கூறுகிறதோ, அதனை நீதிமன்றங்கள் சட்டத்துக்கு முரணானது என்று கூறமாட்டா. ஆயினும், கட்டுப்படுத்துதல் என்ற வகையில் அழிவு எதனையும் பாராளுமன்றம் செய்யாத ஒரு துறை உண்டு. பேச்சுரிமையும் (freedom of speech), ஒன்று கூடும் உரிமையும் (freedom of association) ஆள் சுதந்திர உரிமையைப் போலவே (freedom of person) குடியாட்சி முறைக்கு இன்றியமையாதவை ஆகும். எவ்வாறெனில், அவை இல்லாமல் அரசியல் நிறுவனங்களின் குறை பாடுகளையும், சமுதாய நிலைமைகளிலுள்ள குறை பாடுகளையும் எடுத்துக் கூறுதல் இயலாது. ஒரு தனிப்பட்ட ஆள் தனது உடைமையைத் தான் விரும்பியவாறு கையாளு வதற்கு இருக்கும் உரிமையைப் பாராளுமன்றம் எவ்வாறு கட்டுப்படுத்தியுள்ளதோ, அவ்வாறே பேச்சுரிமைக்குப் பல தடைகளை அதனால் விதிக்க இயலும். ஆட்சிக்கு எதிராகச் சிறைபிடிக்கப்பட்டவரை நீதி மன்றத்துக்குக் கொண்டு வர இடப்படும் ஆணையின் மூலமாக (writ of habeas corpus) வலிமை பெற்றுள்ள பொதுச் சட்டத்தில் (Common Law) ஆள் சுதந்திர உரிமைக்கு ஒரு நல்ல பாதுகாப்புமுறை இன்னும் காணப்படுகிறது. இந்தத் தொடர்பிலேதான் சட்டத்தின் ஆட்சியைப்பற்றிய டைசியின் கருத்து இன்று நடைமுறையில் செயல்படுகிறது. நமது பாராளுமன்ற அரசாங் கத்துக்கு அடிப்படையாக இருக்கிற அரசியல் சுதந்திரம் அல்லது அரசியல் உரிமை என்பதை வலுவாக்குவதில் அவருடைய சட்டத்தின் ஆட்சி என்ற கருத்து மிகவும் பணியாற்றிற்று; இப்பொழுதும் பணியாற்றி வருகிறது. தங்களைக் குறை கூறுவோருடைய செயலினால் இடர்ப் பாட்டுக்கு உள்ளாகும் அரசாங்கங்கள் பாராளுமன்றத்தின் உரிமையைக் குறைப்பதற்காக செய்யும் முயற்சிகளைத் தடுப்பதற்குப் பொதுமக்களுடைய கவனம் எப்பொழுதுமே ஆயத்தமாக இருக்கிறது.

தனி ஆளின் உரிமை பாதிக்கப்படுவதற்குப் பொதுச் சட்டத்தின் மூலம் எதிர்ப்புக் காட்டப்படுவதை டைசி விளக்கினார். அவருடைய இந்த விளக்கமே பொதுமக்கள் கருத்தைத் தூண்டியிருக்கிறது. அரசாங்க அதிகாரம் விரிவாக்கப் படும் போதெல்லாம், அதற்கு ஏற்படுகின்ற புயல் போன்ற வலுவான குற்றச்சாட்டே, பொதுமக்கள் கருத்து டைசியின்

விளக்கத்தினுல் ஆக்கப்பட்டுள்ளது என்பதற்குச் சான்ருகும். அரசாங்க அலுவலரிடத்து நம்பிக்கையில்லாத ஒரு காரணமே மேற்படிக் குற்றச்சாட்டைத் தோற்றுவிக்கிறது என்பது உண்மை அன்று. ஏனெனில் சிவில் அலுவலர் குழுவின் மேல் நிலைகளிலுள்ளவர்களினுடைய அலுவல் தரம் எந்தக் குற்றச்சாட்டுக்கும் உட்படாதவாறு உயர்ந்துள்ளது என்பதை வெறுப்பு விருப்பு இல்லாத எவரும் ஒப்புக்கொள்ளுதல் வேண்டும். தனி ஆளின் சுதந்திரத்தை வலியுறுத்துவதில் மிகவும் அழுத்தமான பற்று இன்றும் காணப்படுகிறது. இதற்கு முழுக்க முழுக்கத் தன்னல நோக்கங்களே காரணங்களாகமாட்டா. 1934ஆம் ஆண்டில், பற்றுறுதியை நீக்கத் தூண்டும் செயல்பற்றிய மசோதா (Incitement to the Disaffection Bill) பாராளுமன்றத்தின் முன்னர்க் கொண்டுவரப்பட்ட போது, படையினரிடையே அரசியல் பிரச்சாரத்தைப் பரப்புவதைத் தடுக்கும் பொருட்டு, இப்போது உள்ளதைப் போல கடுமையாக இல்லாத சில திட்டங்கள் கொண்டு வரப்பட்டன. அவை சட்டத்தின் ஆட்சியை அடிப்படையாகக் கொண்ட விவாதங்களின் எதிர்ப்புக்கு உள்ளாயின. வலது சாரிக் கொள்கையை எந்நாளும் ஆதரிக்கிறவர்களால் பாசிசக் கோட்பாடு (fascism) வளர்ந்துவிடுமென் றஞ்சிய இடதுசாரிக் கொள்கையினருடைய வாதத்தின் மூலம் மேற்படித் திட்டங்கள் எதிர்ப்புக்கு உள்ளாயின. வெளிப் பார்வைக்கு நல்லவையாகத் தோன்றும் சில கழகங்களுக் கெதிராகக் கடுமையான நடவடிக்கை எடுப்பது நெடுநாட்களுக்கு ஒத்தி வைக்கப்பட்டு வந்தது; என்ருலும் இத்தகைய கழகங்களின் செயல்களினுல், மக்கள் நிறைந்த மாவட்டங்களில் அமைதியாக வாழ்பவர்களுக்கு வருந்தத் தக்க இடர்ப்பாடுகள் தோன்றின. (மேற்படி சுணக்கம் ஏற்படுவதற்குக் காரணம்) காவற் படையினருடைய (police) அதிகாரங்களைக் கூடுதலாக்க வேண்டியதன் தேவையைப் பொதுமக்கள் கருத்து ஒப்புக் கொள்ள மனமில்லாமலிருந்ததே ஆகும். 1936ஆம் ஆண்டில் பொது ஒழுங்கு மசோதா (Public Order Bill) பொதுமக்கள் மன்றத்தில் எல்லாப் பிரிவினராலும் தீவிரமாக ஆராயப்பட்டது. இதனை விட மிக முக்கியத்துவமுடைய மசோதாக்களுக்குக் கொடுக்கப்பட்ட கவனத்தைவிட இதற்குக் கொடுக்கப்பட்ட ஆய்வு வரவேற்கத் தக்க வகையில் மாறுபட்டிருந்தது. போர்க்காலத்திலும் கூடச் சிறைபிடிக்கும் அதிகாரங்களும், தணிக்கை செய்யும் அதிகாரங்களும் எவ்வாறு கையாளப் பட்டன என்பதைப் பொதுமக்கள் மன்றம் மிகவும் ஆவலுடன் கண்காணித்து வந்தது. ஐரோப்பாவில் போர் முடிந்த

வுடனேயே மேற்படி அதிகாரங்கள் தள்ளுபடி செய்யப் பட்டன. எப்பொழுதாவது தனிமனிதனுடைய சுதந்திரம் பாதிக்கப்படக்கூடிய ஒரு அஞ்சத்தக்கசூழ்நிலை தோன்றுமா ளுல், அப்பொழுது ஆசிரியர் டைசியின் கருத்தைத்தான் எந்த அரசியல்வாதியும், வழக்கறிஞரும் துணைக்கொண்டு நிற்பார். தனிமனிதருடைய குறிக்கோள்களெல்லாம், நாட்டின் குறிக் கோள்களுக்கு உட்பட்டனவாக இருக்கும்படி அமைக்கப் பட்ட நாடுகளில் அரசாங்கத்தின் சட்டதிட்டத்தை மக்கள் தாங்கிக்கொள்ளு மளவிற்கு இருப்பதைவிட, இந்த நாட்டில் (யுனைட்டெட் கிங்டத்தில்) அரசாங்கத்தின் சட்ட திட்டம் மக்களால் மிகவும் மகிழ்ச்சியாகத் தாங்கிக் கொள்ளப்படு மளவுக்குக் கவனமான பாதுகாப்புக்களோடு அது இருத்தல் வேண்டுமென வற்புறுத்தப்படுவது, ஆசிரி'பர் டைசி கூறிய கருத்தின் தூண்டுதலால்தான்.

அரசியலமைப்பின் மரபுகள் : மரபுகள் நடைமுறையில் செயல்படுவதை சட்ட அறிஞர் அல்லது வழக்கறிஞர் கண்டு கொள்ள இயலாதவாறு எவ்வாறு அதிசயமாக இருக்கிறதோ, அதேபோலவே அவற்றுக்கு ஏன் மதிப்புக் கொடுக்கப்படு கின்றன என்பதும் யாவருக்கும் விளங்காத ஒன்ருக இருக்கலாம். ஆயினும் காபினெட் அரசாங்கமும், முழு ஆட்சி இயந்திரமும் இவ் வழக்கங்களின் மூலமாகத்தான் செயல்பட முடியுமென்பது ஒப்புக்கொள்ளப்பட வேண்டிய ஒன்றே ஆகும். அவற்றைக் காபினெட் அரசாங்கத்துக்குப் பொருந்தக் கையாளுதலில், அவற்றின் இயல்பைப் பிரித்து அறிந்த முதல் அரசியலமைப்புச் சட்ட அறிஞர் டைசியே ஆவார். எமது பொது அல்லது அரசாங்கச் சட்டத்துக்கு அவர் அளித்த புதிய கருத்து மிகவும் பாராட்டத் தக்க ஒரு புதிய கருத்தாக இருப்பது ஏனென்ருல், எமது சட்ட இயல்பான நிறுவனங்களைச் சரிவர அறிந்து கொள்ளுவதற்கு வழக்கங்கள் (conventions) இன்றியமையாதவை என்று நாம் உணர்ந்து கொள்ளுமாறு, அவருடைய புதிய கருத்து நம்மைத் தூண்டியதனுல்தான். உண்மையில் வழக்கங்கள் அரசிய லமைப்புச் சட்டத்தின் பகுதியாகவும், கூருகவும் (part and parcel) அமைந்திருக்கின்றன. வழக்கங்கள் கையாளப்படக் கூடிய அளவு பெருகப் பெருக, சட்டத்துக்கும், வழக்கத்துக்கும் இடையேயுள்ள வேறுபாடு தெளிவாக இல்லை என்ற உண்மை வெளியாகி இருக்கிறது. மேலும் வழக்கத்தின் மதிப்பை டைய விதிகளுக்கு ஏன் மதிப்புக் கொடுக்கப்படுகிற

தென்பதையும் நீதிவழங்கும் மன்றங்களினுல் செயல்படுத்தப் படுகின்ற சட்டத்துக்கு உள்ள முடிவான கட்டுப்படுத்தும் ஆற்றலேயே(ultimate sanction of law) எப்பொழுதும், அல்லது வழக்கமாகக் காரணம் காட்டி விளக்குதலும் இயலாது.

நூலின் சுருக்கம்

அரசியலமைப்புச் சட்டத்தின் உண்மையான இயல்பு

ஆங்கில அரசியலமைப்புபற்றிய நன்னம்பிக்கையான கருத்து.

1—1: **1791**ஆம் ஆண்டில் பர்க் (Burke) என்ற ஆசிரியர் எழுதும்போது குறிப்பிட்டதாவது: 'எப்பொழுதாவது லிவி (Livy), வெர்ஜில் (Virgil) போன்ற பெரும் புலவர்களினுடைய, அல்லது ரபேல் (Raphael), அல்லது மைக்கேல் அஞ்ஜெலோ (Michael Angelo) போன்ற கற்றோர் ஏத்தும் கலைஞர்களினுடைய அரிய படைப்புகளை அறிந்து, வியந்து பாராட்டக் கூடிய அளவுக்கு நம்மிடம் மனப்பக்குவம் இல்லை என்று நாம் அறிந்தால், அப்பொழுது நாம் நமது கற்பனைத் திறனையே கையாளாமல், அவ்வரிய படைப்புகளை நாம் ஆராய்ந்து அறியவும், எதனை எவ்வாறு பாராட்ட வேண்டுமென்பதை அறியவும் வேண்டும். இவ்வாறு நாம், அறிவு ஆராய்ச்சியோடு பொருந்திய வியந்து பாராட்டும் ஆற்றலைப் பெருவிட்டால், நாம் உலகத்தில் மற்றவர்களைவிட அறிவுவளர்ச்சியற்றவரெனவே ஒப்புக்கொள்ளுதல் வேண்டும். இதுவே புகழ்வாய்ந்த நூல் ஆராய்ச்சியாளர்கள் நமக்குக் கற்றுக் கொடுத்துள்ள ஒரு விதி ஆகும். இந்த விதி பலராலும் வியந்து பாராட்டப்படுகிற இங்கிலாந்தின் அரசியலமைப்பைப் பொறுத்தவரையில், அதற்கும் பொருந்துவதாகும். இவ்வரசியலமைப்பை நாம் நமக்கு இயன்றவரையில் நன்ருக ஆராய்ந்து அறிதல் வேண்டும். இதில் எந்தெந்தப் பகுதியை இப்பொழுது நம்மால் சரிவர அறிந்து கொள்ளக் கூடவில்லையோ, அந்தப் பகுதிக்கு நாம் நல்ல மதிப்பு அளித்தல் வேண்டும்.' [1]

[1] 1872-ல் பதிப்பிக்கப்பட்ட 'எட்மண்ட் பர்க்கின் நூல்கள்' என்பதில் மூன்ருவது பாகம், 114ஆம் பக்கத்தில் காணப்படுகிறது.

1—2: ஹாலம் (Hallam) என்ற ஆசிரியர் 1818ஆம் ஆண்டில் எழுதும்போது குறிப்பிட்டதாவது: 'மக்களுடைய நலனில் ஈடுபாடுள்ள, நடுநிலைமையான நோக்குடைய எவரும், மனித வரலாற்றிலேயே மற்றெல்லா நாடுகளைக் காட்டிலும் மிகச் சிறந்த ஓர் நிகழ்ச்சியாக ஆங்கில நாட்டில் இடைவெளி இல்லாமல் நீண்டகாலமாக வளர்ந்து வரும் செழிப்பைக் காணத் தவற மாட்டார்கள். அந் நாட்டில் குடியிருந்து வசிப்பதாலுண்டாகும் சுகங்களை மட்டும் அந் நாட்டிலிருப்பதைவிட வேறு நாட்டிலுள்ள தட்பவெப்ப நிலைகள் நமக்கு மிகவும் அளித்தல் கூடும். ஆனால் வேறு எந்த நாட்டிலும், இங்கிலாந்தில் காணப்படுவதைப்போல, அதனுடைய அரசியல் நிறுவனங்களாலுண்டாகும் நன்மைகள் மக்கள் யாவருக்கும் கிடைக்கக்கூடிய அளவுக்குப் பரந்து காணப்படுவதில்லை. ஒன்றோடொன்று ஒத்துப்போகாத செல்வம், ஒழுங்கு, உரிமை முதலிய கருத்துகளெல்லாம், ஆங்கிலேயரைப்போல், வேறு எந்த மக்களும் செவ்வையாக ஒன்றோடொன்று பொருந்தக் கையாளவுமில்லை எனினும் உண்மையில் இத்தகைய நன்மைகளெல்லாம் தீவாகிய இந்த நாட்டின் மண்வளத்தாலோ, அல்லது இந்த நாடு நிலவியலில் அமைந்திருக்கும் இடத்தினாலோ ஏற்பட்டவை அல்ல. இவை யெல்லாம் இந் நாட்டின் சட்டங்களினுடைய இயல்பினின்றும் அல்லது தன்மையினின்றும் தோன்றியவையாகும். நமது நாட்டவரிடம் இயல்பாகக் காணப்படும் சுதந்திர உணர்வும், செயலாக்க உணர்வும் இச் சட்ட இயல்பிலிருந்தே தோன்று கின்றன. எனவே, நம்மைவிட, மற்றெல்லா நாடுகளிலுமுள்ள நுண்ணுணர்வு மிக்க ஆராய்ச்சியாளர்களுக்கெல்லாம் இங்கிலாந்தின் அரசியலமைப்பானது, மற்றெதனையும்விட மிகவும் ஈடுபாட்டை உண்டாக்கக்கூடிய ஒன்றாக விளங்குகிறது. மேலும் அது, வரலாற்றில் குறிப்பிடப்படும் வலிமைமிக்க நாடுகளின் சுதந்திர அரசாங்கங்களினின்றும் வேறுபட்ட, சில சிறப்பான இயல்புகளை உடையதாக இருக்கிறது. எவ்வாறெனில், அது பல நூற்றாண்டுகள் கழிந்த பின்னரும், மீட்க முடியாத அளவுக்கு அது மறைந்துபோகக் கூடிய அடையாளங்களெதுவும் அதில் காணப்படவில்லை; மாறாக, எங்கும் பரவி வளரக்கூடிய ஓர் ஆற்றலுக்குரிய அடையாளம் அதில் இருக்கிறது.'[1]

[1] 1860-ல் 12ஆம் பதிப்பாக ஹாலம் எழுதிய 'மத்திய காலங்கள்' (Middle Ages) என்ற நூலின் 2ஆம் பாகம், 267ஆம் பக்கத்தில் காணப் படுகிறது. பதினெட்டாம் நூற்றாண்டி னிறுதியில் ஆங்கிலேயர் தங்களுடைய அரசியலமைப்பைப்பற்றிப் பெருமையான தேசீய உணர்வோடு பறை சாற்றிக் கொண்டிருந்ததைப் புகழ்வதுபோல இகழ்ந்து கூறும் நூல் கோல்ட் ஸ்மித் எழுதிய உலகக் குடியாள் (Citizen of the World) என்பதாகும்.

இரண்டு வகையான, வேறுபட்ட புகழ்மிக்க ஆசிரியர்களிட மிருந்து மேலே காட்டப்பட்டுள்ள இரண்டு மேற்கோள்களும், நமது மூதாதையர்களெல்லாம் தமது நாட்டின் அரசியல் நிறுவனங்களைப் பற்றிக் கொண்டிருந்த மேலான உணர்வை மிகவும் நன்றிப் பெருக்கோடு எடுத்துக் காட்டுகின்றன. நமது மூதாதையர்கள் தமது நாட்டின் அரசியலமைப்பை 'மக்களால் தோற்றுவிக்கப்பட்டவற்றுளெல்லாம் சிறந்ததாக' எண்ணினரென்று மூன்றும் ஜார்ஜ் அரசர் குறிப்பிட்டார். இந் நாட்டின் அரசியலமைப்பானது மற்றெந்த நாட்டின் அரசாங்க அமைப்போடும் ஒப்பிடத்தக்க ஒன்று அல்ல எனவும், மாறுக அது அரசியலுணர்வினுல் விளைந்த அற்புதமான ஒரு புனித விளைவு எனவும் அவர்கள் எண்ணினர். மேலும், (நமது இளமைக் காலத்திலிருந்தே நாம் கேட்டு வந்திருக் கிறபடி) 'நமது அரசியலமைப்பானது உண்டாக்கப்பட்ட ஒன்று அல்ல, மாறுக அது வளர்ந்து வந்துள்ள ஒன்று'; அது கருத்தியலான புலன்களுக்கு அப்பாற்பட்ட ஒரு (abstract theory) கோட்பாட்டினின்றும் தோன்றிய ஒன்று அல்ல. தேன் கூட்டைக் கட்டவேண்டிய விதிகளெவற்றையும் படிக்க வேண்டிய தொல்லை இல்லாமலேயே, தேனீக்கள் மிகச்சிறந்த கலைப்பொருளாகிய கூட்டை நுட்பமாக எவ்வாறு அமைக் கின்றனவோ, அதேபோல ஆங்கில மக்களிடத்தில், முக்கிய மாக நாகரிக வளர்ச்சி பெருத ஆங்கில மக்களிடத்தில் காணப் பட்ட இயற்கை உணர்வே, பயனுள்ள, எக்காலமும் நிலைத் திருக்கக்கூடிய நிறுவனங்களைத் தோற்றுவிக்கத் தூண்டிற்று. மனித அறிவுக்கு எட்டாத மேம்பட்ட பல சிறப்பு இயல்புகள் இங்கிலாந்தின் அரசியலமைப்பில் இருக்கின்றன. கடந்த நூறு ஆண்டுக் காலத்தில் நாகரிக உலகத்தால் ஆங்கில அரசிய லமைப்பை ஒட்டியும் அல்லது அதைப்போல வெளித் தோற்றத்தில் மட்டும் அமைந்தும், அல்லது அதை ஏளனம் செய்தும் நிறுவப்பட்ட மற்ற நாட்டு அரசியலமைப்புகளை யெல்லாம்விட ஓர் உயர்வான நிலைக்கு, இங்கிலாந்தின் அரசியலமைப்பை அதனுடைய சிறப்பியல்புகள் உயர்த்து கின்றன. அதனுடைய பிறந்த நாளை இதுதான் என எவராலும் குறிப்பிட்டுச் சொல்ல இயலாது. சிலர் அடங்கிய குறிப்பிட்ட எந்தக் கூட்டமும், தான் அதனைத் தோற்றுவித்ததாகக் கூறும் உரிமையை நிலைநாட்ட முடியாது. அதனுடை பல்வேறு பிரிவுகளையும் அடக்கிய ஓர் சாசனம் அல்லது பிடிபாடு எதனையும் எவரும் சுட்டிக் காட்ட இயலாது. சுருங்கச் சொன்னல், அது தானுகவே ஒரு தனித்த இயல்பைக் கொண்டதாக இருக்கிறது. அதனுடைய தனித்த இயல்பை

ஆங்கிலேயரும், அயல் நாட்டினரும், 'இப்பொழுது புரிந்து கொள்ள இயலாதவராயிருந்தால், அதை வியந்து பாராட்டுதலாவது செய்தல் வேண்டும்.'

அரசியலமைப்பைப் பற்றிய இக்காலக் கருத்து

இக்காலத் தலைமுறையினர், 1791ஆம் ஆண்டிலேயோ, 1818ஆம் ஆண்டிலேயோ இருந்த உணர்வுகளுக்கு மாறான உணர்வின் மூலமாகவே அரசியலமைப்பை ஆராய்ந்து அறிதல் வேண்டும். பர்க் தனது கருத்துகளை எழுதிய காலத்தில், காட்டுமிராண்டித்தனமான நாகரிகமற்ற விதிகளைக் கொடுமையின் ஆட்சி என்ற வடிவத்தில் 'தற்கால அறிஞர்கள்' (doctors of modern school) புதுப் பித்துக் கொண்டிருந்தார்கள். அந்தகையோரைத் தக்க காரணத்தோடு பர்க் வெறுத்தார். அவர் சமயப்பற்றைப் போன்றதொரு உறுதியான பற்று உள்ளத்தோடு, வெறி உணர்வோடு அரசியலமைப்பைப் புகழ்ந்தார். அவருக்கிருந்த அத்தகைய பற்று உணர்வை நாம் கொள்ள இயலாது; மேலும், அயல்நாடுகளில் அரசியல் சீர்திருத்தவாதிகள் ஒழுங்கு, கட்டுப்பாடு முதலியவற்றைச் சுதந்திரம், உரிமை முதலியவற்ருேடு இணைப்பதற்குச் செய்த முயற்சிகளெல்லாம் தோல்வியில் முடிவுற்ற காலத்தில், இங்கிலாந்திலே அரசியல் நிறுவனங்கள் நிலைத்துநின்று, வளர்ச்சியுற்று வந்ததை, இயல்பாகப் பெருமித உணர்வுடன் ஆங்கில மக்கள் கண்டனர். பேராசிரியர் ஹாலம் கொண்டிருந்த இத்தகைய உணர்வையும் நாம் பிரதிபலித்தல் இயலாது. இக் காலத்தில் அரசியலமைப்பைக் கற்பவர்கள் அதனைக் குறைகூறவும் விரும்பவில்லை; அதனைப் போற்றவும் விரும்பவில்லை; அதனை அறிந்து கொள்ளவே விரும்புகின்றனர். எனவே அரசியலமைப்புச் சட்டத்தைப் பற்றி விரிவுரையாற்ற வேண்டிய கடமையை உடைய எந்த பேராசிரியரும், தான் அதனைக் குறைகூறும் தொழிலைச் செய்யவோ, அதனைச் சரியென்று எடுத்துக் காட்டவோ அல்லது அதனைப் புகழ்ந்து கூறவோ வேண்டுவதில்லை என்பதையும், அதன் சட்டங்களை விளக்க வேண்டிய தொழில் ஒன்றினையே செய்தல் வேண்டுமென்பதையும் உணர்தல் வேண்டும். மேலும், நமது அரசியலமைப்பிலுள்ள அற்புதங்களெல்லாம் எவ்வளவுதான் நம்மிடத்து ஈடுபாட்டைத் தோற்றுவித்திருந்தாலும், பிரான்ஸ், பெல்ஜியம், யுனைட்டெட் ஸ்டேட்ஸ் போன்ற நாடுகளைச் சேர்ந்த பேராசிரியர்களைக் கண்டு சிறிது பொருமைப் படுதற்கும் தக்க காரணங்கள் இருக்கின்றன என்பதையும்

எப் பேராசிரியரும் ஒப்புக்கொள்ள வேண்டும். எவ்வாறெனில் இந் நாடுகளிலெல்லாம் அரசியலமைப்புகளின் பிரிவுகள் யாவும் பத்திரங்களாக அச்சிடப்பட்டு, எல்லா குடிமக்களுக்கும் தெரியக்கூடியனவாகவும், படிக்கத் தெரிந்த எவரும் அறியக் கூடியனவாகவும் இருக்கின்றன. 'எழுதப்பட்ட வடிவத்தில் இல்லாத' (unwritten) அரசியலமைப்புச் சட்டம் எனப்படும் அரசியலமைப்பிலே, எவ்வளவுதான் சிறப்புகள் இருந்த போதிலும், அத்தகைய அரசியலமைப்பு வழக்கத்தி லிருத்தலினால், அதனுடைய பிரிவுகளை எடுத்து விளக்கிக் கூறும் ஆசிரியர்களுக்குச் சில தனிப்பட்ட இடர்ப்பாடுகள் தோன்றுகின்றன. அமெரிக்காவின் அரசியலமைப்பைப்பற்றி விளக்கிய கென்ட் (Kent), ஸ்டோரி (Story) முதலிய ஆசிரியர்களுடைய நிலையை, இங்கிலாந்தினுடைய அரசிய லமைப்புச் சட்டத்தைக் கற்றுக் கொடுக்க முயலுகின்ற எந்த ஆசிரியருடைய நிலையோடும் ஒப்பிட்டுப் பார்த்தால், மேற் கூறியவாறு இடர்ப்பொருள் இருப்பது தெரியும்.

ஆங்கில அரசியலமைப்பை விளக்கம் செய்வதில் உள்ள தனிப்பட்ட இடர்பாடுகள்

தமது விரிவுரைகளின் வாயிலாக மேற்கூறிய புகழ்மிக்கச் சட்ட அறிஞர்கள் யுனைட்டெட் ஸ்டேட்சின் அரசியலமைப்பைப்பற்றி விளக்கங்களை எழுதியபோது தாம் கற்றுக்கொடுக்கும் பாடம் என்ன என்பதைப் பற்றியும், அதனை எடுத்து ஆளுதற்கு உரிய சரியான வழி என்ன என்பதைப்பற்றியும் அவர்கள் சரிவர அறிந்திருந்தனர். அவர்கள் கற்றுக்கொடுத்த பாடமானது அவர்களுடைய நாட்டின் சட்டத்திலே திட்டவட்டமாகக் குறிப்பிடத்தக்க பாகமாக அமைந்திருந்தது. அது ஒரு குறிப் பிட்ட பத்திரத்திலே இருந்தது. அதனை உலகம் முழுவதும் கற்க முடியும். அதுவே, 'யுனைட்டெட் ஸ்டேட்சின் மக்களால் நிறுவப்பட்டு, புனிதமாகக் கருதப்படுகிற யுனைட்டெட் ஸ்டேட்சின் அரசியலமைப்புச் சட்டம் ஆகும்.' இந்த அரசியலமைப்பின் பிரிவுகளெல்லாம், உண்மையில் தருக்க வடிவ அமைப்பில் இல்லை; அவைகளை வெளிப்படுத்தும் வாசகமும் தெளிவாக இல்லை. ஆனால், அவை அந்தக் கூட்டரசின் அடிப்படையான சட்டத்தைத் தெளிவாக யாவரும் விளங்கிக் கொள்ளக்கூடிய வகையில் காட்டுகின்றன. இந்தச் சட்டமானது, மற்றச் சட்டங்களெல்லாம் செய்யப் படுதற்கோ அல்லது மாற்றப்படுவதற்கோ கையாளப்படும் முறையினின்றும் வேறுபட்ட ஒரு முறையின்

மூலமாகத்தான் செய்யப்படவும், மாற்றப்படவும் கூடும்; இதையும் நாம் கருத்திற் கொள்ளவேண்டும். எனவே இது ஆராய்ச்சிக்குத் தனிப்பட்ட ஒரு பாடமாகும். அது சட்டமன்றம், நிர்வாகம், நீதிமன்றம் முதலிய வற்றைப் பற்றிக் கூறுகிறது. மேலும் அது, தன்னைத் திருத்துவதற்கான சட்டப்பிரிவுகளை விதிப்பதன் மூலமாக யுனைடெட் ஸ்டேட்ஸின் தலைமையான சட்டமியற்றும் அதிகாரம் தங்கி யிருக்கிற குழுவை அல்லது கூட்டத்தை மறைமுகமாக விளக்குகிறது. எனவே, எந்தச் சட்டத் துறையைப் பற்றி விளக்கம் எழுத ஸ்டோரி, கென்ட் முதலிய ஆசிரியர்கள் விரும்பினார்களோ, அந்தச் சட்டத்துறையின் இயல்பையும், வரம்புகளையும்பற்றி அறிந்திருந்தனர். தாங்கள் செய்தியை எடுத்து ஆளுதற்குரிய வகை என்ன என்பதையும் அவர்கள் அறிந்தனர். அரசியலமைப்பைப் பற்றி அவர்கள் விளக்கம் எழுதுவது என்ற அலுவல், அமெரிக்கச் சட்ட நூலின் (American Jurisprudence) வேறு எந்த பிரிவைப் பற்றியும் விளக்கம் எழுதுதல் என்ற அலுவலைப் பெரிதும் ஒத்திருக்கிறது. அமெரிக்க வழக்கறிஞர் (lawyer) எவரும் எந்த ஒரு சட்டத்தின் பொருளையும் அறிவதற்கு எந்த முறையைக் கையாளுவாரோ, அதே முறையை அவர் கையாண்டு அரசிய லமைப்பின் பிரிவுகளிலுள்ள பொருளையும் கண்டு அறிதல் வேண்டும். அவர் (இவ்வாறு அறிய முயலுகையில் மொழி) இலக்கண விதிகளை ஒட்டி ஆராயவேண்டும்; அவர் அமெரிக்க வரலாறு, ஆங்காங்கே அமெரிக்கச் சட்டத்தைப் பற்றிக் கூறும் செய்திகளையும் மனத்துள் கொள்ளவேண்டும்; மேலும் அவர் நீதிமன்றத் தீர்ப்புகளைக் கவனமாக ஆராய்ந்து அவற்றி லிருந்து கிடைக்கும் முடிவுகளையும் மனத்துட் கொள்ளுதல் வேண்டும். சுருங்கச் சொல்லின், புகழ்மிக்க அமெரிக்க விளக்கவுரை யாசிரியர்கள் செய்யவேண்டிய கடமை என்ன வென்றால், சட்டத்தை விளக்கும்போது அதில் கொள்ளப்பட வேண்டிய, யாவராலும் ஒப்புக்கொள்ளப்பட்ட விதிகளை (canons) ஒட்டியே ஒரு திட்டவட்டமான சட்டப் பத்திரத்தை விளக்குவதே ஆகும். அவர்களுடைய வேலை கடினமானதென்பது ஒப்புக்கொள்ளப்பட்ட ஒன்றே; ஆயினும் அது வழக்கறிஞர்களுக்குப் பழக்கமான வேலையே ஆகும். அதனைச் சாதாரணமான சட்டமுறைகளைப் பின்பற்றியே நிறைவேற்ற இயலும். உண்மையில் ஸ்டோரி யும், கென்ட்டும் சிறந்த திறமை உடையவர்களே ஆவர். ஆயினும், அவர்களைப் போன்றே நம் நாட்டவரான பிளாக்ஸ்டனும், பிளாக்ஸ்டனின் நூல்களைப் பதிப்பித்த

பதிப்பாளர்களில் ஒருவராயினும் திறமை உடையவராக இருக்கின்றனர். அமெரிக்கச் சட்ட அறிஞர்கள், இங்கிலாந்தின் அரசியலமைப்புச் சட்டத்தைப்பற்றிய விளக்கங்கள் எதனையும் விட மிக உயர்வாகவும், மிகவும் மாருகவும் யுனைட்டெட் ஸ்டேட்ஸின் அரசியலமைப்பைப் பற்றி விளக்கங்களை எழுதியுள்ளனர் என்பதை நாம் ஒத்துக்கொள்ளுதல் வேண்டும். இத்தகைய விளக்கங்களை அவர்கள் எழுதியுள்ளனரென்றால், அவர்களுடைய வெற்றிக்கு, ஆங்கில விளக்க ஆசிரியருக்கோ அல்லது விரிவுரையாள ருக்கோ இல்லாத சில சாதகமான சூழ்நிலைகளை அவர்கள் பெற்றிருந்ததே ஓரளவு காரணமாகும். ஆங்கில விளக்கவுரை ஆசிரியருடைய நிலைமையோ, அமெரிக்க விளக்கவுரை யாசிரியர்களுடைய நிலைமையினின்றும் முற்றிலும் வேறு பட்டது. அவர் சட்டநூலைத் தொடக்கத்திலிருந்து இறுதிவரை தேடலாம். ஆனால் அரசியலமைப்புச் சட்டத்தின் பிரிவுக ளடங்கிய எந்தச் சட்டத்தையும் அவர் அதில் காண இயலாது. அரசியலமைப்பின் இயல்பை, அல்லது அடிப்படையான இயல்பை உடைய சட்டங்களை, சாதாரணச் சட்டங்களி னின்றும் பிரித்தறிவதற்கான சோதனை முறை (test) எதனையும் அவ் விளக்கவுரை யாசிரியர் கொள்ள முடியாது. மேலும் 'அரசியலமைப்புச் சட்டம்' என்ற தொடரே, மிக அண்மைக் காலத்தே தோன்றியது என்பதை யும் அவர் கண்டுகொள்ளுவார். இந்தத் தொடர் பிளாக்ஸ்ட ஞல் கையாளப்படவில்லை என்பதும் எனக்கு நினைவில் இருக் கிறது. சுருங்கச் சொல்லில், எவரும் அரசியலமைப்புச் சட்டத்தைப்பற்றி விளக்கவுரை எழுதும் முன்பாக ஆங்கில அரசியலமைப்புச் சட்டத்தின் இயல்பையும், அளவையும் பற்றி அவர் திட்டவட்டமாக அறிந்து கொள்ளவேண்டும்.[1] [2]

[1] இந்தச் செய்தி மிகவும் தெளிவாக திருவாளர் பாட்மி (Monsieur Boutmy எழுதிய Etudes de Droit Constitutionnel என்ற நூலில் எழுதப்பட் டிருப்பதைக் காணலாம்; (இரண்டாம் பதிப்பு, 1888), பக்கம் 8. இத னுடைய ஆங்கில மொழி பெயர்ப்பு E. M. டைசி என்பவரால் 1891-ல் எழுதப்பட்டது, பக்கம் 8. திருவாளர் பாட்மி ஆங்கில அரசியலமைப் புச் சட்டத்தின் மூலாதாரங்களாக 1) உடன்படிக்கைகள் அல்லது ஓரளவு உடன்படிக்கைகள் (Treaties or Quasi-Treaties), எடுத்துக்காட்டாக இணைப்புச் சட்டங்கள்; 2) பொதுச்சட்டம் (The Common Law) 3) முக்கியமான ஒப்பந்தங்கள் (Pacts), எடுத்துக்காட்டாக உரிமைகள் மசோதா-Bill of Rights; 4) எழுதப்பட்ட சட்டங்கள் (Statutes) முதலிய வற்றைக் குறிப்பிடுகிருர். இவ்வகையான பாகுபாட்டு முறையை முற்றி லும் ஒத்த பாகுபாட்டு முறையை எந்த ஆங்கில ஆசிரியரும் ஏற்றுக் கொள்ளமாட்டார் என்பது இயற்கையே; எனினும் இந்த முறையானது ஆங்கில அரசியலமைப்புச் சட்டத்தினுடைய பல்வேறு மூலாதாரங்க ளிடையே காணப்படும் வேறுபாடுகளைச் சுட்டிக் காட்டுகிறது.

[2] இற்றை நாளில் வழக்காறுகளும் அரசியலமைப்புச் சட்டத்துக்கு ஒரு மூலாதாரமாகச் சேர்க்கப்படுகின்றன என்பது உண்மையே; மேலும் அரசியலமைப்புச் சட்டத்தின் ஒரு பாகமாக உள்ள ஆட்சி இயல் சட்டம் (administrative law) முழுவதும் எழுதப்பட்ட சட்டத்தினின்றே பெறப்படு கிறது.—பதிப்பாசிரியர்.

விளக்கவுரையாசிரியர், அரசியலமைப்புச் சட்ட வழக்கறிஞர்களிட மிருந்தும், அரசியலமைப்புச் சட்ட வரலாற்ருசிரியரிட மிருந்தும், அரசியலமைப்புக் கோட்பாட்டாசிரியரிடமிருந்தும் உதவி பெறுகிருர்.

அத்தகைய விளக்கவுரையாளருக்கு இயல்பாகவும், தவிர்க்க முடியாததாகவும் இருக்கக்கூடிய உதவியை அரசிய லமைப்புச் சட்டத்தைப் பற்றி முடிவான கருத்துகளை எழுதிய ஆசிரியர்களும் அரசியலமைப்புச் சட்டத்தின் வரலாற்றை எழுதிய ஆசிரியர்களும், அரசியலமைப்புச் சட்டத்தின் செயல்முறையைப் பற்றி எழுதிய ஆசிரியர் களும்தான் கொடுக்க இயலும். விளக்கவுரையாசிரிய ருக்குப் புகழ் வாய்ந்த வழிகாட்டிகள் இருக்கின்றன ரென்பதையும்நாம் ஒத்துக்கொள்ளுதல் வேண்டும். (எடுத்துக் காட்டாக) பிளாக்ஸ்டன் போன்ற சட்ட வழக்கறிஞர்க ளுடைய நூல்களையும், ஹாலம் அல்லது பிரீமன் (Freeman) போன்ற வரலாற்ருசிரியர்களுடைய ஆராய்ச்சிகளையும், பேஜ்ஹாட் அல்லது ஹெர்ன் ஆகியோரைப் போன்ற தத்துவக் கோட்பாடு ஆசிரியர்களுடைய கருத்துகளையும் அவர் பெறலாம். ஒவ்வொரு வகையான ஆசிரியரிடமிருந்தும் அவர் பெருமளவு கற்றுக்கொள்ளலாம்; ஆயினும், விளக்கவுரை யாசிரியர்தான் ஆராய முடியும். துறையினின்றும், அதில் கையாள வேண்டிய வேலை முறையினின்றும் விலகிச் செல்லும் படியாக ஒவ்வொரு வகையான ஆசிரியர்களும் செய்து விடுகின்றனர். இதற்குரிய காரணங்களை நான் உங்களுக்குக் காட்டுகிறேன். அவருடைய ஆராய்ச்சி முறைகளின் ஒவ்வொரு நிலைக்கும் வழிகாட்டியாக அவருக்கு ஏதாவதொரு குறிப்பு (clue) இருத்தல் வேண்டும்; அவ்வாறு இல்லாவிட்டால், அரசியலமைப்புச் சட்டம் எனப்படும் துறை முழுவதுமே ஒரு புதிர் அல்லது சிக்கலான வழி என்பதையும் (maze) அதில் செல்லுபவர் பல மாயங்களாலும் (unreality) பழமையி ளுலும், வழக்க முறைகளினுலும் திகைப்படைவர் என்பதையும், அவ் விளக்கவுரையாசிரியர் காண்பார்.

முதலில் நாம் வழக்கறிஞர்களுடைய கருத்துகளை, அவர்க ளெல்லாம் கடமைப்பட்டுள்ள பிளாக்ஸ்டனுடைய கருத்துக்களைக் காண்போம்.

அரசியலமைப்பைப் பற்றிய வழக்கறிஞர்களுடைய கருத்து, அதன் பொருந்தா இயல்பு-பிளாக்ஸ்டன்:

அரசியலமைப்புச் சட்டம் என்பதைப் பற்றியே ஒரு சொல்லும் அவர் எழுதிய விளக்கவுரைகள் (commentaries)

என்ற நூலில் காணப்படவில்லை. இதனேடு தொடர்பு உடையனவாகக் காணப்படுகின்ற செய்திகளெல்லாம், ஆட்களின்உரிமைகள் (rights of persons) என்ற தலைப்பில் அவரால் விளக்கப்படுகின்றன. இந்தத் தலைப்பை உடைய அவருடையநூல் பல்வேறு செய்திகளைப் பற்றிக் குறிப்பிடுவ தற்கு இடையே, பாராளுமன்றம், அரசர், அரசருடைய உரிமை, தலைவர், வேலையாள், கணவன், மனைவி, பெற்றேர், பிள்ளை ஆகியோரைப் பற்றிக் குறிப்பிடுகின்றது. இதன் அமைப்பு புதுமையாக இருக்கிறது. உண்மையில் அது அரசியலமைப்புச் சட்டத்தின் முழு அளவையோ, அல்லது இயல்பையோ எடுத்துக் காட்டவில்லை. ஆயினும் இது ஒரு சிறிய செய்தியே. நமது அரசாங்க முறையைப் பற்றிய உண்மையான அறிவு அந் நூலில் காணப்படுகிறது. பழைய, பொருந்தாத சொற் ருெடர்களைப் புதிய நிறுவனங்களுக்குக் கையாளுவதும், இக் காலத்திலுள்ள அரசியலமைப்புக்கு உட்பட்ட அரசருக்கு வெற்றிவீரர்வில்லியத்தால் உண்மையில் பெறப்பட்டிருந்ததும், கையாளப்பட்டதுமான எல்லா அதிகாரங்களையும், அவற் றுக்கும் கூடுதலான அதிகாரங்களையும் ஏற்றிச் சொல்லுவதும் பிளாக்ஸ்டனின் பழக்கம் ஆகும். இப் பழக்கம் அவருடைய காலத்திலிலுள்ள எல்லா வழக்கறிஞர்களிடத்தும் காணப் பட்டது; இத்தகைய இவருடைய பழக்கத்தால், அரசிய லமைப்புச்சட்டம் என்ற பொருள் முழுவதிலுமே சொல்லுக்கும் கருத்துக்கும் இடையே பெருங் குழப்பதைக் காட்டுவதாக அவருடைய நூல் இருக்கிறது; இது அதனுடைய உண்மை யான குறைபாடு ஆகும்.

பிளாக்ஸ்டன் எழுதுவதாவது: 'நாம் இனி, நமது மேன்மை தாங்கிய அரசருக்கு முழுமையான, அழிவில்லாத வகையிலே பல்வேறு வகையான அதிகாரங்களை வழங்குகின்ற விசேட அதிகாரப் பிரிவுகளை (royal prerogatives) காண்போம். இவ் வதிகாரங்களைக் கையாளுவதில்தான் அரசாங்கத்தின் நிர்வாகத் துறை அல்லது பிரிவு காணப்படுகிறது. (அலுவல்கள்) சீராக அல்லது ஒரே படித்தாகவும் (uniformity), உறுதியாகவும், விரைவாகவும் நடைபெறும் பொருட்டு, நிர்வாக ஆட்சித் துறையானது பிரிட்டிஷ் அரசியலமைப்பினுல் ஒரே ஆளிடத்து (single hand) அறிவுக் குகந்தவாறு வைக்கப்பட்டிருக்கிறது. அந்த ஆட்சித்துறை பலரிடத்து வைக்கப்பட்டிருந்தால், அது பல்வேறு முடிவுகளுக்கு உட்பட்டே இருக்கும். பல்வேறு வகைளில் இயங்கக் கூடிய, ஒற்றுமைப்பட்டிராத பல முடிவுகள், ஒரு அரசாங்கத்தில் வலுக்குறைவை உண்டாக்கும்.

பல்வேறு முடிவுகளையும் இணைத்து, ஒன்றாக இணைத்து வைப்பதற்கு, அரசாங்கத்தால் உடனடியாகக் கவனிக்கப்படுவதற்கு உரிய வேலைகளுக்கு ஆகும் காலத்தைவிடக் கூடுதலான காலம் ஆகும். ஆகையால், இங்கிலாந்தின் அரசரே நாட்டின் உண்மையில் ஒரே தலைவரும், நியாய அதிகாரியும் ஆவார். மற்ற யாவரும், அவரிடத்தில் இருந்தே அலுவலையும் அதிகாரத்தையும் பெற்றும், அவருக்குக் கீழ்ப்படிந்தும் இருக்கின்றனர். இதே வகையாகவே, ரோமானிய நாட்டில் ஏற்பட்டப் பெரும் புரட்சியைப்போலவே, நாட்டின் பண்டைய நிர்வாக நீதித் துறையின் எல்லா அதிகாரங்களும் புதிய பேரரசரிடத்தில் குவிக்கப்பட்டிருக்கின்றன. எனவே, கிருவினு கூறும் பின்வரும் சொற்றொடர்கள் பொருந்துவன: in ejus unius persona veteris reipublicae vis atque majestas per cumulatas magistratuum potestates exprimebatur.)[1]

இந்தப் பகுதியில் காணப்படும் மொழி அமைப்பு நமக்குச் சில கருத்துகளைப் பதிய வைக்கின்றன. ஸ்டீபன் எழுதிய விளக்கவுரைகளில் (commentaries) இது குறைவாக காணப்படுகிறது; ஆனால், பொருளைப் பொறுத்தவரையில் மாறாமல் இருக்கிறது.[2] ஆனால், இதில் ஒரு பிழை இருக்கிறது; அதில் காணப்படும் வாசகங்கள் உண்மைக்கு நேர்மாறானவை ஆகும். உண்மையில் இங்கிலாந்தின் நிர்வாகமானது காபினெட் என்று அழைக்கப்படுகிற ஒரு குழுவினிடத்து ஒப்படைக்கப்பட்டிருக்கிறது. நாட்டின் அதிகாரம், தன்னிடத்தே ஒப்படைக்கப்பட்ட ஒருவர் இருப்பாராயின், அவர் முதலமைச்சர் என்று அழைக்கப்படுகின்ற, குழுவின் தலைவரே ஆவார். அவர் அரசரே அன்று. அரசருடைய அதிகாரத்தைப் பற்றி பிளாக்ஸ்டன் தரும் விளக்கம், பிளாக்ஸ்டன் எழுதிய காலத்தில் அரசருக்கு இருந்த அதிகாரங்களைப் பற்றிய உண்மையான விளக்கம் என்றும் கருத முடியாது. மூன்றும் ஜார்ஜ் அரசர், அவருடைய வழிவந்த எந்த அரசரைக் காட்டிலும் மிகவும் கூடுதலான, உண்மையான அதிகாரத்தைக் கையாண்டார். ஆயினும், நான் மேலே எடுத்துக்காட்டிய மொழிவாசகமானது, அவ் வரசருடைய உண்மையான நிலையைக் காட்டுகிறதென்று கொள்வது பொருளற்றதாகும். விளக்கவுரையாசிரியர்

[1] பிளாக்ஸ்டன், விளக்கவுரைகள், பக்கம் 250.

[2] 1903-ல் வெளியான 14ஆம் பதிப்பு, 2ஆவது பாகம், பக்கம் 490. இதன்பின்னர் இந்நூல் திரும்ப எழுதப்பட்டு, இப்பொழுது இருபத்து ஒன்றும் பதிப்பாக வெளிவருகிறது.—பதிப்பாசிரியர்.

கையாண்ட சொற்ருெடர்கள், அவற்றை அவர் கையாண்ட காலத்தில், பொருளற்றவையாக இருந்தன; அவை அவ் வாருனவை என்றும் யாவரும் அறிவர்.[1] அவை அந்த நூற் ருண்டிலும், அதை அடுத்துவந்து சென்ற நூற்ருண்டிலும் மேலும் பொருளற்றவையாக ஆயின. பிளாக்ஸ்டன் மேலும் எழுதுவதாவது:'உள்நாட்டு விவகாரங்களில் நீதியின் இருப்பிட மாகவும், நாட்டின் அமைதியைப் பொதுவாகக் காப்பவராகவும் அரசர் கருதப்படுகிருர்......ஆகையால், நீதிமன்றங்களை நிறுவு வதற்கு உள்ள உரிமையை அவரே பெற்றிருக்கிருர். எவ்வா றெனில் சட்டங்களை நிறைவேற்றும் அதிகாரத்தை நாட்டின் அரசியலமைப்புச் சட்டமானது அவரிடத்திலே ஒப்படைத்தி ருந்தாலும், இவ்வாறு ஒப்படைக்கப்பட்ட முக்கியமான விரிந்த பொறுப்பை (trust)அவர் நேரடியாக நிறைவேற்றுதல் என்பது, நடைமுறையில் இயலாதது மட்டுமின்றி, பொருத்தமான செயலும் ஆகாது. ஆகையால் இந்த அதிகாரத்தை நிறை வேற்றுவதில் அவருக்கு உதவியாக இருக்கும்பொருட்டு நீதிமன்றங்கள் நிறுவப்படுதல் வேண்டுவது இன்றியமையாத தாகிறது. மேலும் அவ்வாறு அவை நிறுவப்படுமாளுல், அவை அவருடைய அதிகாரத்திஞலேயே நிறுவப்பட வேண்டு

[1] பேலி என்பவர் (Paley) எழுதிய ஒழுக்க தத்துவம் (Moral Philosophy, 1785) என்ற நூலின் VIஆம் பகுதி, இயல் 7ஐப் பார்க்கவும். அவர் கூறுவதாவது: 'பிரிட்டிஷ் அரசியலமைப்பிலும், மற்றெல்லா அரசிய லமைப்புகளிலும், நடைமுறை அரசாங்கஅமைப்புக்கும், கோட்பாட்டுக்கும் இடையே பெரும் வேறுபாடு இருக்கிறது. ஒன்று மற்றென்றிலிருந்து தோன்றுகிறது; எனினும் அவை வேறுபட்டவையே. பிரிட்டிஷ் அரசாங் கத்தின் கோட்பாட்டை நாம் ஆய்வு செய்தால், (அதில்) அரசருக்கே மிகவும் முழுமையான வரம்பற்ற தனி அதிகாரம் கொடுக்கப்பட்டிருக்கிற தென்பதை நாம் காண்கிருேம். பாராளுமன்றத்தின் இரு அவைகளாலும் தீர்மானிக்கப்பட்ட சட்டங்களைத் தள்ளிவிடவும், பாராளுமன்றத்தின் ஒரு அவைக்குப் பிரதிநிதிகளை அனுப்பும் உரிமையைத் தான் விரும்பும் ஆட் களுக்கோ அல்லது அவர்களுடைய வழியினருக்கோ வழங்கவும், மற்ற அவையில் தான் விரும்புபவரை உறுப்பினராக அமர்த்தவும் அதிகாரம் அவருக்கு இருக்கிறது. இது சுற்றி வளைத்த முறையில் எதேச்சாதிகாரம் அல்லாமல் வேறு என்ன என்று ஓர் அயலவர் வினவலாம். ஆயினும், சட்டப்படியான இந்த நிலையினின்றும், நடைமுறையில் இங்கிலாந்தில் அரசஅதிகாரம் கையாளப்படும் விதத்துக்கு நமது கவனத்தைத்திருப்புவோ மாளுல், அஞ்சத்தக்க (மேற்கூறிய) விசேட அதிகாரங்களெல்லாம் வெறும் சடங்குகளாகத் தேய்ந்து, குறைந்துவிடுவதைக் காண்கிருேம். அதற்குப் பதிலாக, மிகவும் பரந்தும், செல்வ வளத்தோடும் இருக்கும் பேரரசு தோன்றியதன் விளைவாக நிர்வாக நீதி அதிகாரியிடம் வந்து சேர்ந் துள்ள ஆதரவு அதிகாரத்தினின்று (patronage) ஒரு உறுதியான ஆணை செலுத்தும் அதிகாரம் தோன்றியுள்ளது; அதைப்பற்றி அரசியலமைப்புச் சட்டம் யாதொன்றும் கூறவில்லை. 'பிளாக்ஸ்டனைவிட மிகத் தெளிவாக பேலி தமது காலத்திலிருந்த அரசியலமைப்புச் சட்டத்தின் உண்மையான இயல்பை அறிந்துள்ளார். மேலும், பாராளுமன்றப் பட்டணங்களை (Parliamentary Boroughs) தோற்றுவிக்கக்கூடிய அதிகாரம், அரசருடைய விசேட அதிகாரமாகவே 1785ஆம் ஆண்டிலும் கருதப்பட்டது என்பதை நாம் இங்கு காணுதல் வேண்டும். அப்பொழுதும் அரசருடைய அதிகாரம் பெரிதாகவே இருந்தது; அது உண்மையில் (அவரிடத்திருந்த) பெரிய ஆதரவு அதிகாரத்தின் பேரிலேயே அமைந்திருந்தது.

மென்பதும் இன்றியமையாததாகிறது. ஆகையால், நீதிமன்றங்களின் எல்லா அதிகாரங்களும் நேரடியாகவோ, மறைமுகமாகவோ அரசரிடத்திலிருந்து பெறப்பட்டவைகளாகவும் அவை அவருடைய முத்திரையோடு இயங்குவனவாகவும் அவருடைய அலுவலர்களால் நிறைவேற்றப்படுவனவாகவும் இருக்கின்றன.'[1]

இங்கு நாம் நடைமுறையில் இல்லாதனவற்றையே அல்லது கற்பனைகளையே காண்கிறோம். அரசரோ அல்லது நிர்வாகத்துறையோ நீதிமன்றங்களை நிறுவுவது என்ற வேலையில் யாதொன்றும் செய்வதில்லை. ஒரு புதிய மேன் முறையீட்டு நீதி மன்றத்தை(court of appeal) நிறுவுதல் வேண்டுமென்று கூறும் ஒரு எழுதப்பட்ட சட்டத்தின் (statute) ஆதரவின் பேரில் அல்லது அதிகாரத்தின் பேரில் அல்லாமல் ஒரு ஆணையை ஆலோசனைக்குழு வெளியிடுமானால், அவ்வாறு ஒரு ஆணை செய்யப்பட்டதாக நாளை வெளியாகும் அரசாங்கச் செய்தி (Gazette) கூறுமானால், காபினெட் முழுவதும் சித்த சுவாதீனம் இழந்து விட்டது என்று நாம் முடிவு செய்வது சரியே. பிளாக்ஸ்டனும், அவரைப்போல அவ்வளவு புகழ் பெறாத அரசியலமைப்பு ஆசிரியர்களும் இவ்வாறு நடைமுறையில் இல்லாத கருத்துகளை ஒட்டியே விளக்கம் எழுதும் இயல்பைக் கொண்டிருத்தலினால், சட்டத்தைப்பற்றிய ஆராய்வுக்கு ஏற்படும் இழுக்கு என்ன என்று காண்பதே, இங்கு பயனுள்ளதாக இருக்கும். அரசருடைய அதிகாரத்தை இத்தகைய கருத்துகள் மிகைப்படுத்துகின்றன என்பது மட்டுமே, பெரும் குற்றமாக ஆகாது. இவ்வாறு வழக்கமாக மிகைபடக் கூறும் இயல்பை நாம் மரியாதையையோ அல்லது சமுதாய வழக்கிலுள்ள மரியாதையையோ குறிப்பிடும் அரசாங்கச் சொற்களாகவோ கருதி, அவற்றை விட்டுவிடலாம். இதனால் தோன்றும் இடுக்கண் என்னவெனில், உண்மையல்லாதவற்றைக் கூறும் மொழிகள், அரசி, பாராளுமன்றம் ஆகியோரது அதிகாரங்களினுடைய உண்மையான அளவை வெளிப்படுத்தாமல் மறைத்து விடுகின்றன.

அரசியார் வெஸ்ட்மின்ஸ்ட்டரில் அரியணையில் முடிசூடி அமர்ந்திருப்பதாகவும், அவர் தனது பொறுப்பிலேயே தனது குடிகளுக்கு நீதி வழங்குவதாகவும், ஒரு குழந்தையைத் தவிர வேறு எவரும் கற்பனைகூடச் செய்ய மாட்டார். ஆனால், நாட்டின் அரசாங்கத்தில் யாதொரு பங்கும் கொள்ளாமல் ஒரு ஆங்கில அரசரோ அல்லது அரசியோ ஆளுகின்றாரெனப் பல

[1]பிளாக்ஸ்டன், விளக்கவுரைகள், பக்கங்கள் 266, 267.

கற்றோரும் கூறும் கருத்தும் உண்மைக்கு மாறானதே. இந்தக் கருத்து,'அதிகாரம்உடைய அரசர், தனது நீதிமன்றங்களில் நீதி அதிகாரங்களைக் கையாளுகிறார்'என்ற கருத்து எவ்வளவு உண்மைக்கு மாறானதோ, அதே போல உண்மைக்கு மாறானதாக இருக்கிறது. இதில் ஒரு புதுமை என்னவெனில், அரசரால் நடைமுறையில் கையாளப்படுகிற அதிகாரத்தின் அளவெல்லாம் கற்பனைக்கு உரியது என்றே பல ஆங்கிலேயருக்குத் தோன்றுகிறது. இத்தகைய ஒரு கருத்தே முதலமைச்சராலும் மற்ற உயரிய அலுவலராலும் கையாளப்படும் அதிகாரத்துக்கும் பொருந்துவதாகும். இவ்வாறு உண்மை நிலைக்கு முற்றும் பொருந்தாத சொற்றொடர்களை அவ்வப்போது பயன் படுத்துவது என்பதை நாம் பிளாக்ஸ்டனிடமிருந்தும், அவரையொத்த ஆசிரியர்களிடமிருந்தும் அறிந்துகொண்டோம். எனவேதான் அரசியலமைப்பை ஒட்டிய அரசாங்கத்தின் உண்மை நிலைகளுக்கும், அவற்றைக் குறிப்பாகக் காட்டுகின்ற செயற்கை முறையிலமைந்த சொல்லடுக்குகளுக்கும் இடையேயுள்ள சரியான தொடர்பு என்ன என்பதை நாம் கூற இயலாமலிருக்கிறோம். இவ் வகையை ஒட்டி, அரசியாரே அமைச்சரவையை அமர்த்துகிறாரென்று கூறுவதும் உண்மை அன்று; அவரே நீதிமன்றங்களைத் தோற்றுவிக்கின்றாரென்று கூறுவதும் உண்மை அன்று; ஆயினும், இந்த இரு உண்மைக்கும் புறம்பான கூற்றுகளும் நடைமுறை நிலைகளுக்கு முற்றிலும் மாறாக இருக்கிறது. மேலும், அரசருக்கு ஏற்றிச் சொல்லப்படுகின்ற அதிகாரங்களுள் பல, உண்மையில் அரசாங்கத்தால் கையாளப்படுகின்றன. மற்றவை அரசிக்கோ அல்லது அமைச்சரவைக்கோ உரியவையுமல்ல. இதனால் அரசருடைய உண்மையான நிலையும், அரசாங்கத்தின் உண்மையான அதிகாரங்களைப்பற்றிய நிலையும், அரசருக்கு முழுமையான அரசியல் அதிகாரத்தை (political omnipotence) கற்பனையாக ஏற்றிச் சொல்லுகின்ற சொற்களால் மறைக்கப் பட்டுள்ளன. இதுவே இவ்வாறு கூறுவதன் விளைவு ஆகும். எனவே, பிளாக்ஸ்டன் எழுதிய நூலின் முதல் நூலைப் படிப்பவர்' அது இந்த உண்மைகளை வெளிப்படுத்துகின்ற வாசகத்தின் மாயைகள் (unrealities) நிறைந்துள்ள தாகையால், சட்டத்தின் உண்மைகளைக் காணமாட்டார்.

அரசியலமைப்பைப் பற்றி வரலாற்றாசிரியரின் கருத்து; அரசியலமைபின் தொன்மை

சட்ட அறிஞர்கள் கையாளும் வடிவ இயல்பை (formalism) நாம் மேலும் ஆராயாமல், நமது அரசியலமைப்பின் வரலாற்றாசிரியர்கள் கூறும் உண்மைகளைக் காண்போம்.

இங்கு அரசியலமைப்புச் சட்டத்தின் இயல்பைக் காண விழையும் மாணவருக்கு அல்லது பேராசிரியருக்குப் பல புகழ் மிக்க விளக்க ஆசிரியர்களுடைய உதவி கிடைக்கிறது. அவருக்கு உதவியாக ஓரஞ்சாராமல் கூறக்கூடிய ஹாலம் என்ற ஆசிரியர் இருக்கிறார். அவர் ஆக்ஸ்பர்ட் பிஷப்பின் வற்றாத புலமையில் மூழ்கலாம்.[1] சர் தாமஸ் மே எழுதிய நூலில் வரம்பற்ற பாராளுமன்றச் செயல்முறை அறிவு பொதிந்திருப்பதைக் காணலாம்[2]. மேலும் மிஸ்டர் பிரீமன் எழுதிய ஆங்கில அரசாங்கத்தின் வளர்ச்சி என்ற நூலில் விறுவிறுப்பான பகுத்தறிவும், தருக்க இயல்பான ஆராய்ச்சியும் (polemical research) இணைந்திருப்பதைக் காணலாம். வரலாற்று இயல்பிலமைந்துள்ள அரசியலமைப்புத் தத்துவத்துக்கு ஒரு சிறந்த எடுத்துக்காட்டாக (பிரீமனின்) இந்த நூலை நாம் எடுத்துக் கொள்ளுவோம். 'ஆங்கில அரசியலமைப்பின் வளர்ச்சி' என்ற நூலை யாவரும் அறிவர். அந் நூலில் முதலிலிருந்து இறுதி வரை ஒவ்வொரு வரியையும் யாவரும் அறிதல் வேண்டும். அவ்வாறு அறிந்தவருக்கு, அந் நூலினுடைய, யாவராலும் ஒப்புக்கொள்ளப்பட்ட சிறப்புகளையும், அதனுடைய தெளிவையும், அதனுடைய பழுதில்லாத இயல்பையும், அதனுடைய ஆற்றலையும்பற்றி நாம் ஏதும் கூறுதல் பயனற்றதும், ஆணவமானது மாகும். எனினும், அதில் ஒரு குறிப்பு நமது விசேடமான கவனத்தை ஈர்க்கிறது. மிஸ்டர் பிரீமனின் மிக உயர்ந்த பண்பு என்னவெனில் ஆய்வு செய்யப்படும் ஒவ்வொரு விஷயத்தையும், மிகத் தெளிவான ஒரு பிரச்சனையாகச் செய்து விடுவதில் அவருக்கிருந்த இணையற்ற அறிவுத் திறனேயாம். அவர் தனது வாசகர்களைத் தனது கருத்துகளை ஏற்கவோ அல்லது மறுக்கவோ செய்யுமாறு அறைகூவுகிறார். நாம் அவருடைய கருத்தை மறுத்தால், அம் மறுப்புக்குத் தக்க காரணங்களை நாம் காட்டுதல் வேண்டும். எனவே, அவ் வாசிரியருடைய கருத்துகளை ஐயத்துக் கிடமின்றி ஒப்புக் கொள்ளுவதன் மூலம் நாம் எவ்வளவு கற்றுக்கொள்ள முடியுமோ,அவ்வாறே அவ்வளவுஅவருடைய கருத்துகளை நாம் அறிவி னடிப்படையில் மறுப்பதன் மூலமாகவும் நாம் கற்றுக்

[1] டாக்டர் வில்லியம்ஸ் ஸ்டப்ஸ், இங்கிலாந்தின் அரசியலமைப்பு வரலாறு (Constitutional History of England), தேர்ந்தெடுக்கப்பட்ட பட்டயங்கள் (Select Charters), மற்றும் பல நூல்களின் ஆசிரியர் ஆவார்.

[2] சர் தாமஸ் எர்ஸ்கின் மே (பிற்காலத்தில் பார்ன்பரோ பிரபு) இங்கிலாந்தின் அரசியலமைப்பு வரலாறு (Contitutional History of England), 1760_1860, பாராளுமன்றச் செயல்முறை (Parliamentary Practice) என்ற நூல்களின் ஆசிரியர்.

கொள்ள முடியும். எனவே, ஆங்கில அரசியலமைப்பின் வளர்ச்சி என்ற நூல் அரசியலமைப்பை ஒரு வரலாற்றுசிரியர் கருதும் வகைக்கு ஒரு முதல்தர எடுத்துக்காட்டாக நாம் கொள்ளளலாம். சட்டத்தைப் பற்றிய அறிவைப் பெறும் நோக்கத்தை உடைய ஒரு சட்ட அறிஞர் (lawyer) இந் நூலி னின்றும் என்ன தெரிந்து கொள்ள இயலும்? இக்கேள்விக்கு விடையாக இந் நூலின் முதல் இரண்டு இயல்களில் கொடுக்கப் பட்டிருக்கும் முழுமையான, சிறந்த தலைப்புக் குறிப்புகளி லிருந்து சிலவற்றை மேற்கோளாகக் காட்டலாம். அந் நூல் கூறுவதாவது: (ஸ்விட்சர்லாந்து நாட்டிலுள்ள) ஊரி, அபென் செல்(Uri, Appenzell) முதலிய பிரிவுகளிலுள்ள உள்ளூர்ச் சட்டமன்றங்கள் அல்லது மக்கள் மன்றங்கள் (Landes gemein-den),ஆங்கில அரசியலமைப்பு வரலாற்றை அவை உருவாக்கிய வகை, டியூட்டானிய இனத்தவர் யாவருக்கும் பொதுவான அரசியல் கூறுபாடுகள் (political elements), தொடக்கத்தி லிருந்தே காணப்படுகின்ற முடியாட்சி, உயர்குடிச் செல்வ ராட்சி, குடியாட்சி முதலியவற்றின் கூறுபாடுகள்; பிரபு, சாதாரணச் சுதந்திர மக்கள், அடிமை என்ற மூன்று வகுப்பு மக்கள்; அடிமை நிலை என்பது எங்கும் பரவி யிருத்தல்; ஆரியக் குடும்பத்தைச் சேர்ந்த மக்கள் யாவருக்கும் பொதுவான டியூட்டானிய அரசியல் நிறுவனங்கள்; ஹோமர் கூறும் சான்றுகள்; ஜெர்மனியச் சட்ட மன்றங்களைப் பற்றி டாசிட்டஸ் (Tacitus) கூறும் விரிவான செய்தி; ஆங்கில நிறுவனங்களின் தொடர்ந்து நிலைபெற்றிருக்கும் தன்மை; ஆங்கில தேசீய இனம் தோன்றுதல்; ஆங்கில வெற்றியாளரால் (English conquerors) பிரிட்டனுக்குக் கொண்டுவரப்பட்ட டியூட்டானிய அரசியல் நிறுவனங்கள்; அங்குக் குடியேறுத லால் வெற்றியாளருக்கு ஏற்பட்ட பயன்கள்; அடிமை நிலை என்பது மேலும் வளரக்கூடிய நிலை; எர்ல்களும் (பிரபுக்களும்), சர்ல்களும்; அரசருடைய அதிகாரத்தில் வளர்ச்சி; அரச நிலையின் இயல்பு; அரசருடைய விசேடமான புனிதத்தன்மை; அரசர்களுக்கும், ஆல்டர்மன்கள் எனப்படும் அலுவலருக்கும் பண்டுதொட்டே இருந்து வந்த வேறுபாடு;......ஆங்கில அரசியலமைப்பின் படிப்படியான வளர்ச்சி; பெரும்பாலும் புதிய சட்டங்கள் செய்யப்படாத நிலை இருத்தல்; மேற்கோள் அல்லது முன் நிகழ்வு (precedent) என்பதன் முக்கியத்துவம்; இக்காலத்திய சட்ட வகைகளில் பண்டைய கொள்கைகள் மீண்டும் கையாளப்படுதல்; பண்டைய தேசீய மக்கள் மன்றங்கள் சுருங்கி வருதல்; விட்டனேஜ் மோட் (Witanagemote) என்ற மக்கள் மன்றத்தின் அமைப்பு;

பிரபுக்கள் மன்றத்தில் (House of Lords) விட்டனேஜ்மோட் தொடர்ந்து காணப்படுதல்; நார்மானிய வெற்றிக்குப் பின் தோன்றிய கீமோட்டுக்கள்; குடிகளை அழைப்பதற்கு அரசருக்கு இருக்கும் உரிமை; வாழ்நாளளவுக்கும் இருக்கக் கூடிய பிரபுத்துவ பட்டங்கள் (Life Peerages); பொது மக்கள் மன்றத்தின் (House of Commons) தோற்றம்; ஆங்கில, பிரஞ்சு தேசீய மன்றங்களுக்கிடையே ஒப்புமை; பொதுவாக ஆங்கில, பிரஞ்சு வரலாறுகளுக்கிடையே ஒப்புமை; குறிப்பிட்ட சிலரால் உருவாக்கப்பட்ட நிகழ்ச்சிகளின் போக்கு; மான்ட்பர்டின் சைமன் (Simon of Montfort)........ முதலாம் எட்வர்ட் அரசர்; அவருடைய ஆட்சியில் இறுதியாக முழு வடிவத்திலமைக்கப்பட்ட அரசியலமைப்பு; பிற்காலத்தி லேற்பட்ட மாறுதல்களின் தன்மை; ஆங்கிலச் சட்ட மன்றத்துக்கும், மற்ற ஐரோப்பியச் சட்டமன்றங்களுக்கு மிடையே உள்ள வேறுபாடு.

மேற்கூறிய செய்திகளெல்லாம் சுவையுடையனவாகவும், புலமை மிக்கவையாகவும், வரலாற்று முக்கியத்துவம் நிறைந்தவையாகவும், அரசியலமைப்பின் 'வளர்ச்சி'யைப் பற்றி மட்டுமே கூறும் ஒரு நூலில் இடம் பெறத்தக்கவை யாகவும் இருக்கின்றன. ஆயினும், ஆங்கிலச் சட்டத்தையும், அரசியலமைப்பின் சட்டத்தையும் பொறுத்தவரையில் ஊரிலுள்ள மக்கள் சட்டமன்றமும், ஹோமர் கூறும் சான்றும், ஆல்டர்மன் பற்றிய செய்தியும், விட்டனேஜ்மோட்டின் அமைப்பும், மற்றும் பல சுவையான செய்திகளும், பழைமையே தவிர வேறு ஏதும் அல்ல. இவ்வாறு சொல்லுவதனுல், வரலாற்றுக்கும், சட்டத்துக்குமுள்ள தொடர்பு மறுக்கப் படுவதாக எவரும் எண்ணவேண்டாம். இப்பொழுது உள்ள நிலையில், வரலாற்று மன இயல்பு இல்லையோ என்ற ஐயப்பாட்டுக்கு இடந்தருவதைவிட, வரலாற்று முறையி னுடைய, எந்நாளுக்கும் பொருந்துவதாகிய நல்ல மதிப்பை மறுப்பதைவிட, பண்டைய, நிலைநாட்டப்பட்ட கருத்துகளை மறுக்கிறோம் என்ற குற்றச்சாட்டே நல்லது. இத்தகைய பெரும் குற்றச்சாட்டுகளை ஏற்காத வகையில் நாம் உறுதியாகச் சொல்லக் கூடியது என்னவெனில், ஆங்கில அரசியல் நிறுவனங்களினுடைய பழைமைகளைப் பற்றிய (antiquitics) ஆராய்ச்சிகளடங்கிய இத்தகைய அரசியலமைப்பு வரலாறு, சட்டவகையாக விளக்கப்படுவதற்கு உரிய அரசியலமைப்பு விதிகளோடு நேர்வகையாக எவ்விதத் தொடர்பும் கொண்டிருக்கவில்லை என்பதே. விட்டனேஜ்

மோட்டைப் பற்றி வெளிவந்துள்ள செய்திகளையெல்லாம் நாம் கவனமாகக் கற்போம். அதனைப்பற்றி வெளிவராத செய்திகளையும் இன்றும் கவனமாகக் கற்றறிவோம். ஆயினும், பழைமை என்பது (antiquarianism) சட்டம் ஆகாது என்பதை நாம் நினைவில் இருத்தவேண்டும். மேலும், இங்கிலாந்தின் சட்டம் நேற்று யாதாக இருந்தது என்பதையோ, பல நூற்றாண்டுகளுக்கு முன்னர் அது யாதாக இருந்தது என்பதையோ, அல்லது அது நாளைக்கு யாதாக இருத்தல் வேண்டுமென்பதையோ அறிவது ஒரு பயிற்சி பெற்ற சட்ட அறிஞருடைய அலுவல் அன்று என்பதையும், இற்றை நாளில் நடைமுறையில் இங்கிலாந்தில் இருந்து வருகின்ற சட்டத்தின் கொள்கைகள் (principles of law) என்ன என்பதை அறிந்து, தெளிவாகச் சொல்லக் கூடியவராக இருப்பதே ஒரு பயிற்சி பெற்ற சட்ட அறிஞருடைய அலுவல் என்பதையும் நாம் நினைவில் கொள்ளுதல் வேண்டும். இவ்வாறு இதனை அறிந்து கூறுவதற்கு, ஊரியின் மக்கள் மன்றத்தின் இயல்பை அறிவதோ, அல்லது, விட்டனேஜ் மோட்டின் அமைப்பை அறியக் கூடுமாயின், அறிவதோ, சிறிதும் தேவை இல்லை. இவையெல்லாம் ஒரு சட்ட அறிஞருடைய நோக்கங்களைப் பொறுத்தவரையில் வெறும் பழைமையேயாம். இது யுனைட்டெட் ஸ்டேட்ஸின் அரசியலமைப்பைப் பற்றிக் கூறுவதுபோல, இங்கிலாந்தின் அரசியலமைப்பைப் பற்றிக் கூறுகிறது. அதாவது, சட்டவகையான கருத்தின்படி பார்த்தால், மேற்படி வகையிலமைந்த செய்தியானது எந்த அரசியலமைப்பைப் பற்றியும் ஏதும் சொல்ல வில்லை.

அரசியலமைப்பைப் பற்றிய சட்டவகையான கருத்துக்கும், வரலாற்று வகையான கருத்துக்கும் உள்ள வேறுபாடு

அரசியலமைப்பின் வரலாற்றாசிரியர்களுக்கும், சட்டக் கருத்துகளுள்ள அரசியலமைப்பு வாதிகளுக்குமுள்ள (legal constitutionalists) உண்மையான தொடர்பை நன்றாக நமக்கு எடுத்துக் காட்டுவதற்கு யுனைட்டெட் ஸ்டேட்ஸ் என்ற பெயர் மிகவும் உதவுகிறது. இவ் விருவகையாருள் ஒவ்வொருவரும் அரசியலமைப்பின் வெவ்வேறு இயல்பினைப் பற்றியே ஆராய்வதில் ஈடுபட்டுள்ளனர். ஒரு அரசியலமைப்பு இப்பொழுது உள்ள நிலைக்கு வளர்ந்துள்ள பல்வேறு நிலைகளை உறுதிப்படுத்துவதிலேயே வரலாற்றாசிரியர் முக்கியமாக ஈடுபட்டிருக்கிறார். (அரசியலமைப்பின்) 'தோற்றங்களைப்'

பற்றி அறிவதிலேயே அவர் ஆழ்ந்து, சில சமயங்களில் அளவு கடந்து, ஈடுபட்டிருக்கின்றார். 1908ஆம் ஆண்டில், அரசியலமைப்பின் விதிகள் என்ன என்று உறுதி செய்வதில் அவர் (வரலாற்றாசிரியர்) மறைமுகமாகத்தான் ஈடு பட்டிருக்கிறார். இதற்கு மாறாக, ஒரு சட்ட அறிஞருக்கோ (lawyer) இப்பொழுது நடைமுறையில் இருக்கும் சட்டத்தைப் பற்றிய ஆய்வுதான் முக்கியமான நோக்கமாக இருக்கிறது. அது எவ்வாறு தோன்றிற்று என்று அறிவதில் அவர் ஈடு படுவதில்லை. ஒரு அமெரிக்க வரலாற்றாசிரியரின் நிலையையும், ஒரு அமெரிக்கச் சட்ட அறிஞரின் நிலையையும் நாம் ஒப்பிட்டுப் பார்த்தால், மேற்கூறிய கருத்து முழுவதும் விளங்கும். அமெரிக்கக் கூட்டரசினைப் பற்றிக் கூறும் வரலாற்றாசிரியர், தனது ஆய்வை 1789ஆம் ஆண்டிலிருந்து தொடங்கமாட்டார். அவர் குடியேற்ற நாட்டின் வரலாற்றைப்பற்றியும், இங்கிலாந்தின் அரசியல் நிறுவனங்களைப் பற்றியும் நிறையச் செய்திகளைக் கூறவேண்டிவரும். அவர் காலத்தில் பின்னோக்கிச் சென்று விட்டேனேஜ்மோட்டைப் பற்றியும் கூற வேண்டிவருமென்று நான் கூறுவேன். அவர் ஊரியைப் பற்றி மட்டும் கூறாத அளவுக்குத் தனது ஆய்வுகளை விரிவாக்கி நிறுத்தக் கூடுமெனவும் நாம் கருதலாம். இதற்கு மாறாக, யுனைட்டெட் ஸ்டேட்ஸின் அரசியலமைப்பைப் பற்றி விரிவுரை செய்யும் ஒரு சட்ட அறிஞர், அரசியலமைப்பிலிருந்தே தொடங்கவேண்டிய கட்டாயம் ஏற்படுகிறது. ஆயினும், அரசியலமைப்பின் பிரிவுகளைப்பற்றி அறியவேண்டுமாயின், இணைப்பரசின் அமைப்புகளைப்பற்றிய (Articles of Confederation) அறிவு இருத்தல் வேண்டுமென்பதை, அவர் உணருவார். மேலும், வாஷிங்டன், ஹாமில்ட்டன் இன்றும் (அரசியலமைப்பின்) 'தந்தையர்கள்' என அமெரிக்காவில் பொதுவாக அழைக்கப்படுபவர் ஆகியோருடைய கருத்துக ளெல்லாம், பல்வேறு அரசியலமைப்புகளின் பிரிவுகளின் உட்பொருளை விளக்கியுள்ளன என்பதையும், இங்கிலாந்தி லிருந்து குடியேற்ற நாடுகள் பிரிந்து செல்லுவதற்கு முற்பட்ட காலத்தில் அவைகளிலிருந்த நிலைமையையும், பொதுச் சட்டத்தின் விதிகளையும் (rules of common law), ஆங்கிலக் குடியேற்ற நாட்டினர் தங்களுடைய ஆங்கில மூதாதையரிட மிருந்து வழிமுறையாக அடைந்துள்ள சட்டக் கருத்துகளைம் நீதிபற்றிய பொதுவான கருத்துகளையும் சரியாகத் தெரிந்து கொள்ளாவிட்டால், அரசியலமைப்பின் பொருள் முழுவதையும் எவராலும் விளங்கிக்கொள்ள முடியாது என்பதையும் சட்ட அறிஞர் உணருவார். அமெரிக்க வரலாற்றாசிரியரோடு

அமெரிக்கச் சட்ட அறிஞரை ஒப்பிட்டால் ஏற்படுகிற நிலைமையே, ஆங்கில வரலாற்ருசிரியரோடு, ஆங்கிலச் சட்ட அறிஞரை ஒப்பிட்டால், ஏற்படும். எனவே, நமது அரசியல் நிறுவனங்களின் வளர்ச்சியைப் பற்றி ஆய்வதில் சட்ட அறிஞர்கள் ஈடுபடும்போது, அரசியலமைப்பைப் பற்றிய வரலாற்று வகையான கருத்துக்கும், சட்டவகையான கருத்துக்கும் இடையே மேலும் ஒரு வேறுபாடு தோன்றுகிறது. நம்மால் உறுதியாக வரையறுக்கப்படக் கூடிய வரலாற்றின் முற்பகுதிகளில் பெரும் ஈடுபாடு கொண்டுள்ள வரலாற்ருசிரியர்கள், நமது அரசியல் நிறுவனங்களின் மூலாதாரங்களை அறிவதில் ஒரு தொற்றுநோய் போன்ற பேரார்வம் காட்டுகின்றனர். அவர்கள் காட்டும் பேரார்வம் மிகைபாடான ஒன்று எனவும்,அவர்கள் அந்நிறுவனங்களின் பிற்கால வளர்ச்சிகளைப் பற்றிக் கவனம் செலுத்துவதில்லை எனவும், சட்ட அறிஞர் கருதுவர். ஸ்டூவர்ட் அரசர்களின் காலமாகிய தற்கால வரலாற்றுக்கே மிஸ்டர் பிரிமன் தனது நூலில் மூன்றில் ஒரு பங்கை மட்டுமே ஒதுக்குகிருர். 'புகழ்பெற்ற புரட்சி' (Glorious Revolution) எனப்படும் நிகழ்ச்சிக்குப் பின்னர் இரண்டு நூற்ருண்டுகளுக்குமேல் சென்றுவிட்டது. இந்த இரு நூற்ருண்டுகளும் மாறுதலும்,வளர்ச்சியும் நிறைந்த காலமாகும். எனினும், இந்த இரு நூற்ருண்டுக் காலமும், இவ் வாசிரியரின் கவனத்தை ஈர்க்கவில்லை. இது இவ் வாசிரியர் இக் காலத்தைப் பற்றி அறியாதிருந்தனரெனக் காட்டாமல், நமது தற்கால அரசியலமைப்பின் வரலாற்றிலே அதனை வரைவதற்கு விருப்ப மில்லாமலிருந்தார் என்பதையே காட்டுகிறது. (இவருக்கு) முற்றும் வேருன வகையில் ஒரு சட்டஅறிஞர் இக் கருத்தினை ஆய்தல் வேண்டும். அவருக்கு நடைமுறையிலிருக்கும் சட்டத்தை ஆய்வதில் தேவைப்படும் உதவி எல்லாம் இங்கிலாந்தின் பிற்கால வரலாற்றிலிருந்தே கிடைக்கிறது. டாக்டர் ஸ்டப்ஸ், ஒரு பல்கலைக் கழகத்துக்கே உரிமையாக ஆக்கி இருக்கவேண்டிய தனது அரிய அறிவுச் செல்வங்களை அல்லது திறன்களையெல்லாம், பிஷப் அல்லது சமயமேலாளர் என்ற அலுவலுக்கு ஒப்படைத்திராவிட்டால், நமக்கு என்னென்ன அரும்பயன்கள் கிடைத்திருக்கு மென்பது இப்பொழுது கற்பனைக்கு உரியதாகும். ஆயினும், இப்பொழுது உள்ள நிலைமையிலே பார்க்கும்போது,சட்ட அறிஞர்களுடையதேவைகளைப் பெருமளவுக்கு நிறைவு செய்யக்கூடிய வரலாற்ருசிரியர் மிஸ்டர் கார்டினர் (Mr. Gardiner) ஆவார். பதினேழாம் நூற்ருண்டில் ஏற்பட்ட போராட்டங்கள், ஜேம்ஸ் அரசருக்கும், கோக் என்ற நீதிபதிக்குமிடையே நடைபெற்ற போராட்டம்,

விசேட அதிகாரத்தைப்பற்றி (prerogative) பேக்கன் வரைந்த கோட்பாடு, இங்கிலாந்தின் அரசருடைய சட்டப்படியான கருத்துக்கு மாருக, சார்ல்ஸ் ஸ்டூவர்ட்டினுடைய சொந்தக் கருத்தை நிலைநிறுத்துவதற்கு சார்ல்ஸ் செய்த முயற்சி ஆகிய இவையெல்லாம் நடைமுறைச் சட்டத்திலுள்ள பிரச்சினைகளை வெகுவாகப் பாதிப்பவைகளே ஆகும். இந் நிகழ்ச்சிகளைப் பற்றிய அறிவு, ‘இக் காலத்திய அரசியலமைப்புக்கு ஒத்த சுதந்திரமானது, பின்னேக்கிய வளர்ச்சி என்ற வியக்கத்தக்க முறையின் மூலம் நிறுவப்பட்டது’ எனவும், ‘நாகரிக வளர்ச்சியை நோக்கிய ஒவ்வொரு படியும், நாகரிகமற்ற நமது மூதாதையருடைய எளிய அறிவு வளர்ச்சியை நோக்கிய பிற்போக்கினுல் விளைந்தது’ எனவும் கூறப்படுகின்ற ஒரு பொய்யான கற்பனையினின்றும் நம்மைக் காப்பாற்றுகிறது. இந்தக் கற்பனைக்கு அடிப்படையாக இருப்பது, ‘நமது சாக்சனிய மூதாதையர் காலத்தில் ஏறக்குறைய பழுதற்ற ஓர் ஆட்சிமுறை இருந்தது,’ என்ற ஒரு அனுமானமே ஆகும். இந்த அனுமானம் சட்டத்திலும், வரலாற்றிலும் உள்ள ஒரு உண்மையை மறைக்கிறது. ‘எட்வர்டையும், ஹெரால்டையும் தேர்ந்தெடுப்பதற்கு நடைபெற்ற தேர்தல்களில் கலந்து கொண்ட (பண்டைக்காலக்)குடி ஆளுக்கும், காட்வினை அவருடைய நாட்டுக்கு அரசராக மீட்டுக்கொடுத்த பேரவையில் (great Assembly) தனது சொல்லாற்றலையும், தோள் ஆற்றலையும் வெளிப்படுத்திய (பண்டைக்காலக்) குடி ஆளுக்கும்’ [1] சட்டத்திலுள்ள நுட்பங்களெல்லாம் (legal subtleties) எவ்வாறு தோன்றும் என்று ஒரு கேள்வியைக் கேட்பது, ஆதாரமற்ற ஒரு அனுமானத்தை உள்ளடக்கிய ஒரு வினவை எழுப்புவதை ஒத்திருக்கிறது. இவ்வாறு கேட்பது, வரிவிதிப்பு அதிகாரத்தை பிரதிநிதித்துவ முறையினின்றும் பிரிப்பதற்காக மூன்ரும் ஜார்ஜ் அரசர் செய்த முயற்சியைப்பற்றி, அமெரிக்காவின் பூர்விகக் குடி ஆளாகிய செருக்கி இந்தியர் (Cherokee Indian) என்ன எண்ணி இருப்பார் என்று கேட்பதை ஒத்திருக்கிறது. இந்த இரு கேள்விகளும், ‘தன்னுல் விளங்கிக்கொள்ள முடியாத கருத்துகளை உடைய ஒரு பிரச்சினையை, ஒரு நாகரிகமற்றவர் (savage), நியாயமாகத் தீர்ப்பதற்கு அவருடைய எளிமை (simplicity) உதவுகிறது என்பதையே காட்டுகின்றன. நாகரிகம் மிக உயர்ந்து வளரலாம்; ஆனுல் காட்டுமிராண்டித்தனம் அல்லது அநாகரிகம் என்பது,

[1] பிரீமனின் ஆங்கில அரசியலமைப்பின் வளர்ச்சி (1872) என்ற நூலின் 125ஆம் பக்கம் பார்க்க.

சட்டவகையான கற்பனைத் தொடர்களின் மட்டத்துக்குக் கீழே அமுங்கிவிடுகிறது. நம்மோடு மட்டுமல்லாமல், நம்மைப் போன்ற மனிதர்களான கோக் (Coke), ஹேல் (Hale) என்பவர்களோடும் ஒப்பிட்டுப் பார்க்கும்போது, நமது மதிப்புக்குரிய சாக்சனிய மூதாதையர்களெல்லாம், மதிப்புக்குகந்த அநாகரீக மக்களே ஆவர். நமது முந்தைய அரசியலமைப்பிலுள்ள அழகிய எளிய தன்மையையெல்லாம், சூழ்ச்சிமிக்க சட்ட அறிஞர்கள், சட்டவகையான கற்பனைகளைக் கண்டுபிடித்து, அவற்றின் மூலம் கெடுத்துவிட்டார்களென்று கூறப்படுகிறது. இக் கூற்று, சட்ட அறிஞர்களுடைய அரசியல் அறிவைக் குறைத்து மதிப்பிடுவதுபோலவே, பண்டைய சமுதாயத்தினுடைய சிறப்பியல்புகளை (merits) மிகைப்படுத்தியும் காட்டுகிறது. நீதிமன்றங்களினால் பின்பற்றப்பட்ட கற்பனையான கருத்துகள், கோக் போன்ற சட்ட அறிஞர்களின் மூலமாக, நீதியையும், சுதந்திரத்தையும் காப்பதற்குப் பயன் பட்டன; மேலும் வேறு எந்தக் கருவிகளின் மூலமாகவும் அவை காப்பாற்றப்பட முடியாமலிருந்த காலத்தில் மேற்படி கருத்துகள் காப்பாற்றின. எவ்வாறெனில், ஆங்கில நாகரிகத்தினுடைய உண்மையான அடிப்படையாக அமைந்திருக்கும்' எல்லோருக்கும் ஒத்த, நிலைபெற்ற சட்டத்தினுடைய விதியை நிறுவுவதற்கு உரிய ஒரே வழியை சட்டப்படியான நுட்பங்கள் அல்லது கற்பனையான கருத்துகள் ஏற்படுத்துகின்றன. இவ்வாறு ஏற்படுவதற்கு உரிய சமுதாய நிலைமைகளும் இருக்கின்றன. நீதி மன்றங்களிலிருந்து வழக்குகளை மாட்சிமிக்க அரசருடைய நேரடியான தீர்ப்புக்காக (personal determination) மாற்றி விடுவதற்காக அரசர் ஜேம்ஸ் செய்த முயற்சியை, அவர் கைவிடவேண்டுமென்று அவரைத் தூண்ட அல்லது கட்டாயப் படுத்துவதற்கு கோக் கையாண்ட தருக்க முறையை அல்லது விவாதத்தைவிட வேறு எதுவும் கல்விப் பகட்டான தாகவோ, செயற்கையானதாகவோ, வரலாற்றுக்கு முரணானதாகவோ இருக்க முடியாது.[1] ஆனால் பெருமை மிக்க இந்த தலைமை நீதிபதியானவர் தனது பிடிவாதத்தின் மூலமாகவும், தனது சிறு பிழைகளின் மூலமாகவும் நிலை நிறுத்திய கொள்கையைப்போல, அரசியலமைப்பின் நிலை பேற்றுக்கே உகந்த எந்த ஒரு விதியையும், முறையான தருக்க வழியினாலோ அல்லது திறமையான அரசியலறிவினாலோ, எவரும் நிறுவவில்லை. சட்ட அறிஞர்களினுடைய நுண்

[1]Hearn எழுதிய Government of England என்ற நூலின் (1887) மூன்றும் இயல்.

திறன்களின் (technicalities) விளைவாக, விதிப்படி அமைந்த ஒரு அரசியலமைப்பு கெடுக்கப்பட்டு விட்டது என்ற கருத்தே, சட்ட அறிஞர்களுடைய கற்பனையில் அடித்தளமாக உள்ள ஒரு மாயத்தோற்றம் ஆகும். இது ஒரு புதுமையே ஆகும். பின்னேக்கிய முறையில் முன்னேற்றம் அல்லது வளர்ச்சி என்பதும், முன்நிகழ்வை அல்லது மேற்கோளை (precedent) எடுத்துக்காட்டுகின்ற ஒரு முறையே ஆகும். இவ்வாறு முன் நிகழ்வை மேற்கோள் காட்டுதலென்பது, இங்கிலாந்தின் வரலாற்றிலே ஒவ்வொரு நெருக்கடியான காலத்திலும் கையாளப்பட்டுள்ளது.புதியதை நிறுவுவதற்காகச் செய்யப்பட் முயற்சிகளெல்லாம் முன்பு இருந்த உரிமைகளை மேற் கோளாகக் காட்டுதலென்ற வடிவத்திலேதான் எப்போதும் அமைந்து இருந்தன என்று, நாட்டின் உரிமைகளை விரிவாகக் கையாளுவதற்காகச் செய்யப்பட்ட முயற்சிகளை என்னுடைய நண்பர் மிஸ்டர் பிரீமனைவிட வேறு எவரும் அழுத்தமாக எடுத்துக் கூறவில்லை. ஆனால், மேற்கோளை எடுத்துக் காட்டுவ தென்பது, ஒரு நீதிமன்றத் தீர்ப்பானது, நீதிமன்றத்தின் சட்டமாக மாறுதலடைவதை மறைப்பதற்கு நீதிமன்றங்களில் பயன்படக் கூடிய ஒரு கற்பனையே ஆக இருக்கிறது. மேலும் நீதிமன்றங்களிலிருந்து, அரசியல் துறை அல்லது வரலாற்றுத் துறைக்கு மாறி வருவதால் கற்பனை என்பது, கற்பனையே ஆகும். எனவே, இங்கு சட்ட அறிஞருடைய கூரிய அறிவுத் திறன், வரலாற்றுசிரியருடைய எளிமையினும் வலிமையுடைய தாக அமைந்திருக்கிறது. வடிவ இயல்பும் (formalism), பழமை யும் (antiquarianism) இணைந்து விடுகின்றன. அவை, அரசிய லமைப்பின் சட்டத்தை ஆராய்ந்தறிய முற்படும் மாணவருக்குத் தக்க வழிகாட்டக் கூடாத வகையில் இணைந்துவிட்டன.

அரசியல் கோட்பாட்டாசிரியர்களின் கருத்து. அது அரசியலமைப்பின் வழக்காறுகளைப் பற்றி மட்டுமே கூறுவதா லுண்டாகும் குற்றம்.

நாம் இப்பொழுது அரசியல் கோட்பாட்டு ஆசிரியர்களின் கருத்தைக் கண்டோம். இத்தகைய சிந்தனையாளர்களுக்கு எடுத்துக்காட்டாக பேஜ்ஹாட்டையும் (Bagehot), பேராசிரியர் ஹெர்னையும் தவிர வேறு சிறந்த எவரையும் கூற இயலாது. ஆங்கில அரசாங்கத்தின் உள் இயக்க வகைகளையெல்லாம்(intricate workings) தெளிவாக விளக்குவதற்கு பேஜ்ஹாட் செய்ததை விடக் கூடுதலாக இக் காலத்தில் வேறு எந்த ஆசிரியரும் செய்யவில்லை என்று உறுதியாகக் கூறலாம். அவர் எழுதிய

ஆங்கில அரசியலமைப்பு என்ற நூல் தெளிவும், தனித் தன்மையும் (originality), அறிவுத்திறனும் நிரம்பி இருப்பதால், அது செய்தியும், அறிவும், அறிவுக் கூர்மையும் நிரம்பி உள்ள தென்பதைப் பலரும் அறியார். எடுத்துக்காட்டாக, காபினெட் அரசாங்கத்தின் உண்மை நிலையை வெகு எளிதாக பேஜ் ஹாட் எடுத்துககாட்டியிருப்பது நமக்கு வியப்பை அளிப்பதனுல், நடைமுறை நிலைக்கு ஏற்ப காபினெட்டின் உண்மை இயல்பினையும், அரசரோடும், பாராளுமன்றத் தோடும் அதற்கு உள்ள உண்மையான தொடர்பினையும் விளக்கிய முதலாவது ஆசிரியர் பேஜ்ஹாட்தான் என்பதை நாம் மறந்து விடுகிறேம். சுருங்கச் சொன்னுல், இப்பொழுது மிகத் தெளிவாக இருக்கின்ற ஒரு கருத்துக்குப் பின் எக் காலத்தும் விளக்கம் தேவை இல்லை என்பதை மறந்து விடுமளவுக்கு முழுமையான தெளிவுடன் நுட்பமான செய்திகளை விளக்கிய அரிய ஆசிரியர்களுள், பேஜ் ஹாட் ஒருவர் ஆவார். பேராசிரியர் ஹெர்னை பேஜ்ஹாட்டின் முன்னேடியாகக் கருதலாம். எவ்வாருயினும், அவரும் ஆங்கில அரசியல் நிறுவனங்களை ஒரு புதிய கோணத்திலிருந்து ஒரு புதிய கருத்தினடிப்படையில் ஆய்வு செய்கிருர். அவர் மெல்போர்ன் பல்கலைக் கழகத்தில் பேராசிரியராகப் பணி யாற்ருமல், யுனைட்டெட் கிங்கிடத்திலுள்ள கல்வி நிலையம் எதிலாவது பணியாற்றியிருந்தால், அவர் ஆங்கில அரசியலமைப்பின் அதிசயங்களையெல்லாம் மிகுந்த அறிவுத் திறனேடு புகழத்தக்க வகையில் விளக்கிய ஆசிரியர்களுள் ஒருவராக நம்மிடையே யாவராலும் பாராட்டப்பட்டிருப்பார். இந்த இரு ஆசிரியர்களிடமிருந்தும் நாம் நிறைய எதிர் பார்க்கிறேம்; நாம் நிறையக் கற்றுக்கொள்ளவும் செய்கிறேம். ஆயினும், பல பயனுள்ள செய்திகளை நாம் மிஸ்டர் பிரீமனிட மிருந்து பெறுவதைப்போல இவ்வாசிரியரிடமிருந்து கற்றுக் கொண்டாலும், சட்ட அறிஞர்களென்ற வகையில் (as lawyers) நாம் எதனை அறிய முயலுகிறேமோ, அதனைநாம் இவர்களிட மிருந்து அறிய முடியவில்லை. பேஜ்ஹாட்டும், பேராசிரியர் ஹெர்னும் சட்டத்தின் விதிகளைப்பற்றி விளக்காமல், அரசியல் வழக்கங்களை (political understandings) அல்லது வழக்காறுகளை (conventions) விளக்குகின்றனரென்பதும், அவற்றை விளக்கு வதே அவர்களுடைய நோக்கமென்பதும்தான் உண்மை. ஒரு அறிவு மிக்க, அரயலமைப்புக்கு உட்பட்ட அரசரால் கையாளப்படக் கூடிய, ஒழுக்க வகையான ஆதிக்கம் அல்லது செல்வாக்கு என்ன என்ற கேள்வியையும், பாராளு மன்றத்தைக் கலைப்பதற்கு ஒரு அமைச்சருக்கு உரிமையை

அளிக்கும் சூழ் நிலைகள் யாவை என்ற கேள்வியையும், ஒரு குறிப்பிட்ட நோக்கத்துக்காகக் கூடுதலான எண்ணிக்கையில் பிரபுக்களை அமர்த்துவது அரசியலமைப்புச் சட்டத்தின்படி பொருத்தம் உடையதுதானு என்ற கேள்வியையும், காபினெட் வெளிப்படையான கேள்விகளை விவாதத்துக்கு எந்தக் கொள்கையின் மீது அனுமதித்தல் கூடும் என்ற கேள்வியையும்,—மற்றும் இவைகளைப் போன்ற கேள்விகளையும் இவ் வாசிரியர்கள் எழுப்பி விடை கூறுகின்றனர். இவ் வாசிரியர்கள் அரசியலமைப்பின் வழக்காருன சம்பிரதாயங்களைப் பற்றிக் கூறுகின்றன ராகையால், இவர்களை வழக்காறுகளின் ஆசிரியர்கள் (conventionalists) என்று குறிப்பிடலாம். இவர்கள் எழுப்பும் விஞக்கள் பலவும் பெரியவையாகவும், பொருள் உள்ளவை யாகவும் இருக்கின்றன. ஆயினும், அவை நீதிமன்றங்களில் எப்பொழுதேனும் விவாதிக்கப்படக்கூடிய கேள்விகள் ஆக மாட்டா. ஐந்நூறு புதிய பிரபுக்களை அமர்த்துதல் வேண்டு மென்பதாக முதலமைச்சர் ஆலோசனை கூறுவாராயின், இவ்வாறு அமர்த்தப்படுவதைத் தடை செய்து தடை ஆணையை சான்சரி நீதிமன்றம் (Chancery Division) விடுக்காது என நாம் உறுதியாகக் கூறலாம். முதலமைச்சர்மீது கண்டனத் தீர்மானம் நிறைவேற்றப்பட்ட பின்னரும், அவர் அலுவலைத் துறக்க மறுப்பாராயின், அரசியாரின் நீதிமன்ற மானது, (Queen's Bench Division) எக்காரணத்தின் மீது அவர் முதலமைச்சராகத் தொடர்ந்து இருக்கிருரென்று கூறும் படியாக, காரணம் காட்டுமாறு ஆணை ஒன்றை (quo warranto) அவருக்கு விடுக்காது. ஒரு சட்ட அறிஞரென்ற கருத்தில், இவையெல்லாம் எனது ஆய்வுக்கு அப்பாற்பட்டவை. இவற்றுக்கு விடைகளைப் பாராளுமன்ற உறுப்பினர்களுடைய ஆழ்ந்த சிந்தனை கூறும்படி விட்டுவிட வேண்டும். அவற்றுக்கு சிந்தித்து விடை காணுதல் அரசியல் கோட்பாட்டாசிரியர் களைச் சேர்ந்தது.

மேலும் வழக்க வகையில் அமைந்த கருத்து வழக்கங்கள் எவ்வாறு செயல் படுத்தப்படுகின்றன என்று விளக்கவில்லை.

சட்ட அறிஞர் ஈண்டு ஒரு செய்தியைக் குறிப்பிடுதல் வேண்டும். அரசியலமைப்பின் பெரும் பகுதியிலும் காணப் படுகின்ற வழக்காறுகளை விளக்குகின்ற ஆசிரியர்கள், விளக்கப்பட வேண்டிய ஒரு செய்தியை விளக்காமல் விட்டு

விடுகின்றனர். 'அரசியலில் உள்ள வழக்கங்களெல்லாம் (understandings of politics), கூட்டத்தினுடைய ஆணைகளைப் போலவே மிகவும் கடுமையாகச் சில சமயங்களில் பின்பற்றப் படுவது ஏன்' என்ற கேள்விக்கு அவர்கள் தக்க விடை கூறவில்லை.[1] இத்தகைய ஒரு புதுமையான பிரச்சினைக்கு விடையாகப் பொது மக்கள் கருத்தையும் (public opinion), சூழ்நிலைகளைப் பொறுத்த காரணங்களையும் (considerations of expediency) காட்டுவது, முழுமையான விடை ஆகாது. பொது மக்கள் கருத்து ஒப்பந்தங்களை ஒப்புக் கொள்ளுகிறது. பொது மக்கள் இடையே நிலவும் சூழ்நிலைகளும் ஒப்பந்தங்கள் நிறை வேற்றப்படுதல் வேண்டுமென விதிக்கின்றன. எனினும், ஒப்பந்தங்கள் எப்பொழுதும் நிறைவேற்றப்படுவதில்லை. சட்டமானது ஒப்பந்தங்கள் மீறப்படுதலைத் தண்டிக்கா விட்டால், அல்லது அவற்றை நிறைவேற்றும்படிக் கட்டாயப் படுத்தாவிட்டால், அவை பெரும்பாலும் நிறைவேற்றப் படாமல், மீறுதலுக்கே உள்ளாகும். மேலும், வழக்கங்கள் சட்டங்கள் அல்ல என்பது உண்மையே. மேலும் 'அரசிய லமைப்புச் சட்டம்' என்பது சட்டம் என்பதற்கு உரிய முழுப் பொருளின்படி, சட்டமாகக் கொள்ளப்பட்டாலும், அதனுடைய முழு இயல்பினையும், வழக்கங்கள் சேர்ந்த அமைப்பு எதுவும் விளக்க இயலாது என்பதும் உண்மையே.

அரசியலமைப்புச் சட்டம் என்பது உண்மையில் 'சட்டம்' ஆகுமா?

இந்த இடத்தில் அரசியலமைப்பைப்பற்றி ஆராய் பவருக்கு எப்பொழுதும் எழக்கூடிய ஒரு ஐயப்பாடு, நமக்கு எழுகிறது. 'அரசியலமைப்புச்சட்டம்' (Constitutional law) என அழைக்கப்படுவது, உண்மையில் சட்டம் என்ற பெயர் கொடுக்கப்படுவதற்குத் தகுதி இல்லாததாகவும், எனவே ஐயப்பாட்டுக் கிடமில்லாத இங்கிலாந்தின் சட்டத்தைத் தவிர வேறு எதனையும் கற்கவோ, கற்பிக்கவோ செய்யாத ஒரு பேரா சிரியருடைய கல்வி எல்லைக்குப் புறம்பானதாயும், வரலாறும், வழக்கமும் சேர்ந்தஒரு கலவைப்பொருள்ஆகவும் இருக்கிறதா? ஆங்கில அரசியலமைப்பு உண்மையில் கிடையாது' என இழித்துக் கூறிய டி டாக்குவிலியின், இச் செய்தியின் முழு உண்மையும் காணக் கிடக்கின்றதா?[2] இந்தக் கேள்வியைப்

[1] இந்தச் செய்தியைப் பற்றி மேலும் விளக்கங்களுக்கு மூன்றும் பாகம், 15ஆவது இயலைப் பார்க்கவும்.

[2] டிடாக்குவிலியின் 'அமெரிக்காவில் குடியாட்சி' என்ற நூலின் 1867ஆம் ஆண்டின் 14ஆவது பதிப்பில் 166-167ஆம் பக்கங்கள்.

பொறுத்த வரையில் தங்களுக்கு எவ்வுரிமையையும் நிலைநாட்ட முடியாத ஒரு புதிய துறைக்குச் சட்ட அறிஞர்கள் விட்டுக் கொடுத்து விடுவார்கள். இப் புதிய துறையின் ஒரு பாதி வரலாற்றைச் சேர்ந்ததனல் அது வரலாற்ருசிரியர்களுக்கு உரியதாகும். மற்றப் பாதி, சட்டத்தின் வளர்ச்சியைக் காட்டக்கூடிய வழக்கங்களைச் சேர்ந்தது. ஆகையால் அது, சட்ட நூலின் சில புதுமையான பகுதிகளை ஆராய்வதில் ஈடுபட்டிருக்கிற, எனது நண்பர் சட்ட நூல்பேராசிரியருக்குக் (Chichele Professor of International Law) கொடுக்கப்படுதல் வேண்டும். ஏனெனில், அவர் சட்டம் அல்லாத சட்டத்தைக் கற்பிக்கும் ஆசிரியராகவும்,சர்வதேசச்சட்டமென்று தவருக அழைக்கப்படுகின்ற பொது மக்களின் ஒழுக்க விதிகளை விளக்கும் பழக்கம் உடையவராகவும் இருக்கிருர். இதே போன்ற அனுமானத்திஞல் அரசியலமைப்புச் சட்டம் எனத் தவருக அழைக்கப்படுகிற அரசியல் ஒழுக்க விதிகளை சர்வதேசச் சட்டப் பேராசிரியர் விளக்குவதில் வல்லுநராதலின் (மேற்படி வரலாறும் வழக்கமும் சேர்ந்த கலவைப் பொருளின்) ஒரு பகுதி இவரிடமே கொடுக்கப்படுதல் வேண்டும்.

எனினும், ‘அரசியலமைப்புச் சட்டம்’ என்பது உண்மையில் சட்டமன்று என்ற கருத்திலுள்ள உண்மையை நாம் ஒப்புக்கொள்ளு முன்பாக, அரசியலமைப்புச் சட்டம் என்ற தொடருக்கு நாம் கொடுக்கும் திட்டவட்டமான பொருளிலுள்ள உண்மையை நாம் ஆய்வுசெய்வதும்,பின்னர் அது எந்த அளவுக்குச் சட்ட வகையாக விளக்கப் படுவதற்கு உரியது என்று ஆய்வு செய்வதும் நல்லது.

அது இரு வேறு வகையான விதிகளினுலாகியது.

இங்கிலாந்தில் கையாளப்படுகின்ற அரசியலமைப்புச் சட்டம் என்ற சொல் நாட்டில் இறைமை அதிகாரமானது பகிர்ந்தளிக்கப்படுவதையோ, அல்லது கையாளப்படுவதையோ நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ பாதிக்கக்கூடிய விதிகளை யெல்லாம் உள்ளடக்கியதாகும்.[1] எனவே, இறைமை அதிகாரத்தைக் கையாளும்

[1] ஹாலண்ட் என்ற பேராசிரியர் எழுதிய ‘சட்ட நூல் (Jurisprudence) என்ற நூலைப் (1906ஆம் ஆண்டு பத்தாவது பதிப்பு, 138, 139, 359-363 பக்கங்களை) பார்க்கவும். ‘ஒரு நாட்டினுடைய அரசியலமைப்பு என்பது, அதனுடைய சட்ட மன்றத்தின் பெயரையும், அமைப்பையும் பற்றிக் கூறும் சட்டத்தையும், சட்டமன்றத்தினுடைய பல்வேறு பகுதிகளினுடைய உரிமைகளையும், அலுவல்களையும் பற்றிக் குறிப்பிடும் சட்டத்தையும், நீதிமன்றங்களினுடைய அமைப்பையும், அலுவலையும், அதிகாரத்தையும் பற்றிக் குறிப்பிடும் சட்டத்தையும் குறிப்பிடுகின்றது. அரசியலமைப்பு என்பது, தான் விளக்கும் பொருளினுடைய மேலான முக்கியத்துவத்தின் காரணமாக, மற்றப் பொதுச் சட்டங்களினின்றும் வேறுபடுத்தப்பட்டு, பொதுச் சட்டங்களடங்கிய தொகுப்பில் ஒரு முக்கியமான பிரிவாக, அல்லது தலைப்பாக இருந்து வருகிறது.’ [1785-ல் வெளியிடப்பட்ட, ஆசிரியர் பேலி(Paley)என்பவருடைய ஒழுக்கத் தத்துவம்(Moral Philosophy) என்ற நூலின், ஆரும் பகுதியில் ஏழாம் இயல்].

உறுப்பினர் யாவர் என இலக்கணம் கூறும் விதிகளெல்லாவற்றையும் அவ் வுறுப்பினர்களுக்கிடையே உள்ள தொடர்புகளை ஒழுங்கு படுத்தவும், இறைமை அதிகாரியோ அல்லது அதன் உறுப்பினரோ தங்களுடைய அதிகாரத்தைக் கையாளும் வகையைத் தீர்மானிக்கவும் செய்யும் விதிகளெல்லாவற்றையும் அது தன்னகத்துக் கொண்டிருக்கிறது. அதன் விதிகள் அரியணைக்கு வழி உரிமை உடையவர்களுடைய வரிசையை வகுக்கின்றன. முக்கிய நீதிபதியின் (chief magistrate) விசேட அதிகாரங்களை ஒழுங்கு படுத்துகின்றன. அவை, சட்ட மன்றத்தின் அமைப்பையும், அது தேர்ந்தெடுக்கப்படும் வகையையும் தீர்மானிக்கின்றன. மேலும் இவ் விதிகள்,அமைச்சர்களைப் பற்றியும் கூறி, நாட்டின் இறைமை அதிகாரம் செல்லக்கூடிய நில எல்லையை வகுத்து, எவர் குடிகள் எனத் தக்கவர் எனத் தீர்மானிக்கின்றன. ஈண்டு, 'விதிகள்' (rules) என்ற சொல்லே கையாளப்பட்டிருப்பதனையும், 'சட்டங்கள்' (laws) என்ற சொல் கையாளப் படாமலிருத்தலையும் நாம் காணுதல் வேண்டும்.இவ்வகையான சொல்லாட்சி ஒரு நோக்கத்தின் பொருட்டே கையாளப் பட்டுள்ளது. இங்கிலாந்தில் கையாளப்படுகிற 'அரசியலமைப்புச் சட்டம்' என்பதனை ஆக்குகின்ற விதிகளிடத்துக் கவனம் செலுத்தும் பொருட்டே மேற்படி சொல் எடுத்தாளப் பட்டது. இந்த விதிகள், முற்றிலும் வேறுபட்ட இயல்பினை உடைய இருவகையான கொள்கைகளை அல்லது கோட்பாடுகளை உள்ளடக்கி நிற்கின்றன.

உண்மையான சட்டங்களாக இருக்கின்ற விதிகள்-அரசியலமைப்பின் சட்டம்

ஒரு வகைப்பட்ட விதிகள், 'சட்டங்கள்' (laws) எனப் படுதற்குரிய முழுமையான பொருளில் இருக்கின்றன. இந்த விதிகளெல்லாம் [அவை எழுதப் பட்டிருந்தாலும் அல்லது எழுதப்படாவிட்டாலும், சட்டத்தினுல் ஆக்கப்பட்டிருந்தாலும், அல்லது வழக்கங்களிலிருந்தும், மரபுகளிலிருந்தும், பொதுவான சட்டம் (common law) எனப் படுகின்ற நீதிபதிகளால் நிறுவப்பட்ட கோட்பாடுகளிலிருந்தும் வருவிக்கப்பட்டிருந்தாலும்]நீதிமன்றங்களினுல்செயல்படுத்தப் படுகின்றன வாகையால், இவை 'சட்டங்கள்' எனப் படுகின்றன; இந்த விதிகள் 'அரசியலமைப்புச் சட்டம்' என்ற தொடருக்குகந்த பொருளில் அமைந்துள்ளன. இப்பொருளில் அவற்றை வேறுபடுத்திக் காட்டுவதற்காக, அவற்றை

மொத்தத்தில் 'அரசியலமைப்பினுடைய சட்டம்' (Law of the Constitution) என அழைக்கலாம்.

சட்டங்களல்லாத விதிகள் — அரசியலமைப்பின் வழக்கங்கள்

வேறு வகைப்பட்ட விதிகள், வழக்கங்களையும், சம்பிரதாயங்களையும், செயல் முறைகளையும் குறிப்பிடுகின்றன. இவ் விதிகள் இறைமை அதிகாரியின் பல்வேறு உறுப்பினர்களுடைய நடைமுறையையும், அமைச்சர்கள் மற்றுமுள்ள அலுவலர்கள் ஆகியோரின் நடைமுறையையும் ஒழுங்கு படுத்தினாலும், இவற்றை நீதிமன்றங்கள் செயல் படுத்தாத காரணத்தினால், அவை உண்மையில் சட்டங்கள் அல்ல. அரசியலமைப்புச் சட்டத்திலுள்ள இப் பகுதியை வேறுபடுத்திக் காட்டும்பொருட்டு 'அரசியலமைப்பின் வழக்கங்கள்' அல்லது அரசியலமைப்பின் ஒழுக்க விதிகள் எனக் குறிப்பிடலாம்.

இதனையே ஒருசிறிது வேருன வடிவத்திலும் குறிப்பிடலாம் இங்கிலாந்தில் பொதுமக்களாலும், ஆதாரமாகக் கொள்ளப் படுகிற நூலாசிரியர்களாலும் குறிப்பிடப்படுகிற 'அரசியலமைப்புச் சட்டம்' என்ற தொடர் இரண்டு கூறுபாடுகளை உடையது. இதில் இங்கு 'அரசியலமைப்பின் சட்டம்' எனப்படும் ஒரு கூறு ஐயப்பாட்டுக்கு இடமில்லாத சட்டத் தொகுதியே ஆகும். இங்கு 'அரசியலமைப்பின் வழக்காறுகள்' எனப்படும் மற்றொரு கூறு உண்மையில் சட்டங்களாக ஆகாத கோட்பாடுகளை அல்லது செயல்களை உடையது. இக் கோட்பாடுகள் அல்லது செயல்கள் அரசியலமைப்பிலுள்ள அரசர் அமைச்சர்கள், மற்றும் பலர் ஆகியோருடைய சாதாரண நடைமுறையை ஒழுங்கு படுத்தினாலும், அவை சட்டங்கள் ஆகமாட்டா. அரசியலமைப்பினுடைய சட்டத்துக்கும், அரசியலமைப்பினுடைய வழக்கங்களுக்குமுள்ள வேறுபாட்டை எடுத்துக்காட்டுக்களின் மூலம் எளிதில் விளங்கிக் கொள்ளலாம்.[1]

அரசியலமைப்பினுடைய சட்டத்தைச் சேர்ந்த விதிகளுக்கு எடுத்துக்காட்டுகள்

அரசியலமைப்பினுடைய சட்டத்தில் கீழ்க்கண்ட விதிகள் அடங்கியுள்ளன: 'அரசியார் தவறு செய்தல் இயலாது

[1] ஆயினும், ஜென்னிங்ஸ் என்பவரெழுதிய The Law and the Constitution என்ற நூலின் 1952ஆம் ஆண்டு நான்காம் பதிப்பில் 102-105ஆம் பக்கங்களைப் பார்க்கவும்.

(The queen can do no wrong). அரசியார் தன்னால் செய்யப்படும் எச் செயலுக்கும் சொந்த முறையில் பொறுப்புடையராகும்படி, சட்டத்துக்குத் தெரிந்த எந்த முறையினாலும் அல்லது நடவடிக்கையினாலும் செய்யப்பட முடியாது என்பதே இப்போது நீதிமன்றங்களினுடைய விளக்கத்தின்படி, இந்தக் கோட்பாட்டுக்குக் கொடுக்கப்பட் பொருள் ஆகும். (இதற்கு ஒரு பொருளற்ற எடுத்துக் காட்டைக் குறிப்பிட்டால்) முதலமைச்சரை அவருடைய தலை துளைக்கும்படியாக, அரசியார் தாமே சுடுவதாக வைத்துக் கொள்வோம். இச் செயலை இங்கிலாந்தில் எந்த நீதி மன்ற மும் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளாது. மேலும், இந்தக் கோட்பாட்டுக்கு இரண்டாவதாக வேறொரு பொருளும் இருக்கிறது. எவரும் தான் செய்கின்ற சட்டத்தினால் ஒப்புக் கொள்ளப்படாத எந்தச் செயலையும் சரியென்று காட்டுவதற் காக, அரசியாரின் ஆணைகளையோ, அல்லது உயர்தர அலுவலரின் ஆணைகளையோ வேண்டிக் கொள்ள இயலாது. இவ் விருவகைப் பொருளிலும் இந்தக் கொள்கையானது ஒரு சட்டமே என்பதும், அரசியலமைப்பினுடைய ஒரு சட்டமே என்பதும், ஆனால் அது ஒரு எழுதப்பட்ட சட்டம் அன்று என்பதும் ஈண்டு கவனிக்கப்படுதல்வேண்டும். 'ஒரு சட்டத் துக்குக் கீழ்ப்படிய வேண்டிய கடமையினின்றும் விடுதலை அளிப்பதற்கு எந்த அதிகாரமும் அரசருக்குக் கிடையாது'. இத்தகைய விலக்கு அளிக்கும் அதிகாரத்தை மறுத்தல் அல்லது நீக்குதல் என்பது இப்பொழுது உரிமைகள் மசோதாவைச் (Bill of Right) சார்ந்திருக்கிறது. அது அரசிய லமைப்பினுடைய ஒரு சட்டம் ஆகும். அது ஒரு எழுதப் பட்ட சட்டமும் ஆகும். 'அரசரால் செய்யப் படும் ஒவ்வொரு செயலுக்கும் யாரேனும் ஒருவர் சட்டப் படியாகப் பொறுப்பு உடையவர் ஆகிறார்.' இந்த அமைச்சர் களின் பொறுப்பு என்பது வேறு நாடுகளில், அரசியலமைப்புச் சட்டத்திலே ஒரு முறையான பாகமாகக் காணப்படுகிறது. இங்கிலாந்தில், அமைச்சர்களின் பொறுப்பு என்பது, பல்வேறு சட்டக் கொள்கைகள் கூட்டாகச் செயல்படுவதனால் தோன்று கிறது. அச் சட்டக் கொள்கைகளாவன: முதற் கொள்கை அரசியாரால் எந்தத் தவறும் இழைக்க இயலாது என்பது; இரண்டாவது கோட்பாடு, ஒரு குறிப்பிட்ட வடிவத்தில் செய்யப்படாத எந்தச் செயலையும் அரசரால் செய்யப்பட்ட செயலாக நீதிமன்றங்கள் ஏற்றுக்கொள்ள மறுக்கின்றன என்பது. ஒரு குறிப்பிட்ட வடிவத்தில் செயலைச் செய்தல் என்பதில், அச் செயலைக் கூறும் ஆணையில்

ஒரு அமைச்சர் ஒரு குறிப்பிட்ட முத்திரையைப் பதித்தல் அல்லது ஒரு அமைச்சருடைய எதிர்க் கையெழுத்தை அல்லது அவருடைய எதிர்க் கையெழுத்துக்குச் சமமான வேறு ஏதேனு மொன்றை அவ் வாணையில் இடுதல் முதலியவை அடங்கியுள்ளன. மூன்ருவது கோட்பாடு, ஒரு குறிப்பிட்ட முத்திரையைப் பதிக்கின்ற, அல்லது தனது எதிர்க் கையெழுத்தை இடுகிற அமைச்சர் தான் ஆதரிக்கின்ற செயலுக்குப் பொறுப்பாகவும் இருக்கிருர் என்பது.[1] இதுவும் (அமைச்சர்களின் பொறுப்பு) அரசியலமைப்பின் ஒரு பாகமாகவும், ஒரு சட்டமாகவும் இருக்கிறது. ஆனல், அது ஒரு எழுதப்பட்ட சட்டம் அன்று. இவ்வாறே ஆள் சுதந்திரத்துக்கு உள்ள உரிமை (right to personal liberty) பொதுக் கூட்டங்களைக் கூட்டும் உரிமை, இன்னும் இவை போன்ற மற்ற எல்லா உரிமைகளும் அரசியலமைப்பின் சட்டத்தினுடைய பாகமாக இருக்கின்கிறன. ஆயினும், இந்த உரிமைகளில் பெரும்பாலானவை மிகவும் பொதுவான ஒரு சட்டத்திலிருந்து அல்லது கொள்கையிலிருந்து தோன்றிய விளைவுகளே ஆகும். இந்தப் பொதுவான சட்டம், 'எந்த மனிதரும் சட்டத்தை நேரடியாக மீறி னு லல்லாமல் (அதாவது குற்றங்களுக்காக அல்லாமல்) தண்டிக்கப்படுதல் கூடாது. இத்தகைய சட்டமீறும் செயலும் சட்டத்தினுல் வகுக்கப்பட்ட வகையிலேயே மெய்ப்பிக்கப்படுதல் வேண்டும் (அதாவது நாட்டின் நீதிமன்றங்களில் மெய்ப்பிக்கப்படுதல் வேண்டும்)[2].

அரசியலமைப்பின் வழக்கங்களுள் சேர்ந்துள்ள கொள்கைகள் பின்வருமாறு:[3]

அரசியலமைப்பின் வழக்கங்களைச் சேர்ந்த விதிகளுக்கு எடுத்துக் காட்டுகள்

'அரசர் பாராளுமன்றத்தின் இரு அவைகளாலும் நிறைவேற்றப்படுகின்ற எந்த மசோதாவையும், ஏற்றுக் கொள்ளுதல் வேண்டும், அல்லது, (பலர்

[1] ஹெர்ன் எழுதிய இங்கிலாந்தின் அரசாங்கம் என்ற 1887-ல் வெளியான நூலின் நான்காம் இயலைப் பார்க்கவும்.

[2] இவ்வெடுத்துக் காட்டுக்களுள் ஒன்றைத்தவிர மற்றவை யாவும் பொதுச் சட்டத்திலிருந்தே எடுக்கப்பட்டுள்ளன. அரசியலமைப்புச் சட்டத்தின் ஆதாரங்களுள் ஒன்ருக எழுதப் பட்ட சட்டங்கள், இந்த நூலில் நெடுகிலும், முக்கியமாக 'சட்டத்தின் ஆட்சி' (rule of law) என்ற இயல்களிலும் புறக்கணிக்கப் படுகின்றது.—பதிப்பாசிரியர்.

[3] ஜென்னிங்ஸ் எழுதிய Cabinet government (1959) என்ற நூலின் முதலாவது இயலைப் பார்க்கவும்.

தவருகக் குறிப்பிடுவதுபோல) அதனை அவர் தள்ளுபடி[1] செய்யக்கூடாது'; — 'பிரபுக்கள் மன்றமானது பண மசோதா எதனையும் கொண்டு வருவதில்லை;' — 'பிரபுக்கள் மன்றமானது ஒரு மேல்முறையீட்டு நீதிமன்றமாக அமைந்து (Court of appeal) பணியாற்றும்போது, அதில் செய்யப்படும் தீர்மானங்களில் அல்லது முடிபுகளில் சட்டம் பயின்ற பிரபுவாக (law lord) இல்லாத எந்த உறுப்பினரும் அதில் பங்கு கொள்வதில்லை'; — 'பொதுமக்கள் மன்றத்தினுடைய நம்பிக்கையை அமைச்சர்கள் இழக்கும்போது, அவர்கள் அலுவலைத் துறக்கின்றனர்;' — 'பொதுமக்கள் மன்றத்தில் ஒரு மசோதா நிறைவேற்றப்படுமுன்பாக, அது சில தடவை களில் அதில் வாசிக்கப்படுதல் வேண்டும்.' இந்தக் கோட் பாடுகள் ஒவ்வொன்றும் மன்றதனின்றும் பல வேறுபாடுகளை உடையது.[2] ஒரு புதிய அல்லது எழுதப்பட்ட அரசிய

[1] 'தள்ளுபடி' செய்தலென்ற சொல்லுக்குப் பொருளை ஹெர்ன் எழுதிய நூலிலும் (பக்கங்கள் 51, 60, 61, 63; முதலியவற்றிலும்), ஜென்னிங்ஸ் எழுதிய நூலின் 365-400, 539-542 பக்கங்களிலும் பார்க்கவும்.

[2] இந்தக் கோட்பாடுகளுள் சில ஒரு பொழுதும் மீறப்படுவதில்லை மேலும், அவை ஒரு போதும் மீறப்படாதவை எனவும் யாவராலும் ஒப்புக் கொள்ளப்படுகின்றன. இதற்கு மாருக, மற்றக் கோட்பாடுகள் ஓரளவு தான் வழக்கம் என்ற இயல்பிலுள்ளன. மேலும் அவைகளுடைய செல்லுபடி யாகத்தக்க தன்மையே விவாதத்துக்குரியதாக இருக்கிறது. பல்வேறு வகைப்பட்ட வழக்கமான விதிகளுக்கிடையேயுள்ள முக்கியமான வேறுபாட்டைப் பின்வருமாறு கூறலாம்: ஒழுங்காகவும், அமைதியாகவும் நடைபெறும் அரசாங்கத்தை நிறுத்தாமல், மேற்படி விதிகளுள் சிலவற்றை மீறமுடியாது; மற்ற விதிகளை மீறலாம்; அவ்வாறு மீறுவதனுல், இவற்றை மீறுகிற அமைச்சர் அல்லது வேறொருவர், அதற்காகக் குற்றம் சாட்டுதல் அல்லது சிறப்பு இழப்பு என்ற நிலைமைக்குக் கொண்டு வரப்படுவாரே தவிர, வேறு எந்த விளைவும் தோன்ருது.

ஒரு குறிப்பிட்ட அரசியலமைப்புக் கோட்பாட்டை மீறுகிறவர், அத்தகைய குற்றத்தின் மூலமாக, எவ்வளவில் நாட்டின் சட்டத்தோடு முரண்படுகின்ற நிலைக்கு உள்ளாகிருரோ, அவ்வளவில் மேற்படி விதிகளுக்கிடையேயுள்ள வேறுபாடு காணப்படுகிறது; இதுவே ஆசிரியரின் கருத்து ஆகும். இவ்வாறு பாராளுமன்றமானது ஓராண்டுக்கு மேலாகக் கூட்டப்படாமலிருப்பதற்கு ஒரு அமைச்சரவை ஆலோசனை கூறுமாயின் அப்பொழுது அது, படையினரின் ஆண்டுச் சட்டமானது (Army Annual Act) காலம் சென்றுவிடுமாதலின், இவ்வாறு மன்றத்தைக் கூட்டாததற் காகத் தனது செயலாட்களின் (agents) மூலமாக நீதிமன்றங்களோடு ஒரு முரண்பாடு கொள்ளும். அரசியலமைப்பின்வழக்கத்தை, மேற்படி சூழ் நிலையில் மீறுதல் என்ற செயல், புரட்சியான அல்லது பிற்போக்கான வன்செயலில் கொண்டுபோய்விடும். ஒரு மசோதா நிறைவேற்றப்படும் முன்பாக, அது ஒரு குறிப்பிட்ட தடவைகள் வாசிக்கப்படுதல் வேண்டு மென்ற விதியானது, நன்கு நிறுவப்பட்ட ஒரு அரசியலமைப்புக் கொள்கையாகும். எனினும், சாதாரணச் சட்டத்தோடுதான் முரண்பாடு கொள்ளாத வகையில், இந்தக் கொள்கையானது அரசாங்கத்தால் மீறப் படலாம். எடுத்துக் காட்டாக, குற்றவாளியை நீதிமன்றத்துக்குக் கொண்டுவர ஆணையிடும் சட்டத்தை நிறுத்தி வைக்கக் கோரும் சட்டத்தை ஒரே வாசிப்பின் மூலம் நிறைவேற்றுமாறு பொதுமக்கள் மன்றத்தைத் தூண்டுகிறது என்று வைத்துக் கொள்ளுவோம்; அல்லது, ஒரு மசோதா நிறைவேற்றப்படுமுன்பாக வாசிக்கப்படவேண்டிய தடவைகளைப்பற்றிய

லமைப்பின்படி, இவற்றுள் சில உண்மையில் சட்டங்களின் அமைப்பைப் பெறுகின்றன; சில அவ்வாறு பெறுவதில்லை. இக் கொள்கைகளெல்லாம் ஆங்கில அரசியலமைப்பில் ஒரு உண்மையைப் பொதுவாக உடையன; இவற்றில் எதுவும் 'சட்டங்கள்' என்ற சொல்லுக்கு உரிய பொருளில் சட்டங்கள் அல்ல. ஏனெனில், இவற்றுள் எதுவாயினும் அல்லது எவையாயினும் மீறப்படுமாயின், இத்தகைய மீறுதலை எந்த நீதிமன்றமும் விசாரணைக்கு ஏற்றுக் கொள்ளாது.

இந்தக் கோட்பாடுகளெல்லாம் 'வழக்க இயல்பானவை' (conventional) எனப்படுவது வருந்தத் தக்கதே. எவ்வாறெனில் இந்தச் சொல், பொருள் இல்லாத, உண்மையில் இல்லாத ஒன்றைக் குறிப்பிடுகிறது.[1] எனினும், இத்தகைய ஒரு முடிபை எந்த ஆசிரியரும் தனது மாணவருக்குக் கூற விரும்ப மாட்டார். அரசியலமைப்பை ஒட்டிய வழக்கங்களுள், அல்லது செயல் முறைகளுள், சில சட்டங்களைப்போலவே முக்கியமானவை. எனினும் சில வழக்கங்கள், சில சட்டங்களைப் போலவே பொருளற்றவை. இங்கு எனது நோக்கம், பொய்ம்மைகளை உண்மைகளோடு முரண்படுத்திக் காட்டுவதன்று; ஆனால், அரசியலமைப்புச் சட்டத்திலுள்ள சட்ட இயல்பான கூறுபாட்டை, வழக்க இயல்பான கூறுபாட்டோடு முரண்படுத்திக் காட்டுவதே எனது நோக்கமாகும்.

சட்டங்களுக்கும், வழக்கங்களுக்குமுள்ள வேறுபாடு, எழுதப்பட்ட சட்டத்துக்கும், எழுத்திலில்லாத சட்டத்துக்கும் உள்ள வேறுபாட்டை ஒத்ததன்று.

இந்த வேறுபாடு, 'எழுதப்பட்ட சட்டத்துக்கும்' (அல்லது சட்ட நூலிலுள்ள சட்டத்துக்கும்), "எழுத்திலில்லாத

விதிகளை மாற்றுமாறு ஒரு அமைச்சரவை பொதுமக்கள் மன்றத்தைத் தூண்டுகிறது என்று வைத்துக் கொள்ளுவோம்; இதனால் அவ்வமைச்சரவையானது, சாதாரண நீதிமன்றங்களோடு எவ்வித மாறுபாடும் கொள்ள வேண்டிய நிலைமை ஏற்படாது. செலவுக்குப் பொருள் வாக்கெடுப்பின் மூலம் அரசாங்கத்துக்கு வழங்கப்பட்ட பின்னர், படையினருக்குரிய ஆண்டுச் சட்டம் நிறைவேற்றப்பட்ட பின்னர், அமைச்சர்கள் மன்றத்தைக் கூட்டாமல் இருந்து, தாங்கள் பொதுமக்கள் மன்றத்தின் நம்பிக்கையை இழந்த பின்னரும் பல மாதங்களுக்கு அலுவலை ஏற்றிருப்பார்களாயின் அதனால் அவர்கள் பெருமளவில் தங்களுடைய சிறப்பை இழக்கலாம், அல்லது இழக்காமலிருக்கலாம்; ஆனால் இதன் மூலம் அவர்கள் ஒரு சட்டத்தை மீறிய செயலைச் செய்தவராகமாட்டார்.

[1] ஜென்னிங்ஸ் எழுதிய The Law and the Constitution என்ற நூலின் (1952ஆம் ஆண்டின் பதிப்பில்) 80ஆம் பக்கத்தில் இதைப்பற்றிய குறைபாடுகளைக் காண்க.

சட்டத்துக்கும்' (அல்லது பொதுவான சட்டத்துக்கும்) உள்ள வேறுபாட்டினின்றும், முக்கியமான வேற்றுமையை உடையது. அரசியலமைப்பின் சட்டங்களாகச் சில இருக்கின்றன.

எடுத்துக்காட்டாக, உரிமைகள் மசோதா, செட்டில் மென்ட் சட்டம் (Act of Settlement), குற்றவாளியை நீதி மன்றத்துக்குக் கொண்டுவர ஆணையிடும் சட்டங்கள் ஆகியவை. இவையெல்லாம், சட்ட நூல்களுள் காணப்படுகின்ற 'எழுதப்பட்ட சட்டம்' ஆகும்.—வேறு வகையாகச் சொன்னால், அவையெல்லாம் சட்டநூலில் எழுதப்படக்கூடிய சட்டங்கள் ஆகும். சட்ட நூலில் எழுதப்படக்கூடிய சட்டங்க ளாகாத, அல்லது எழுதி வைக்கப்படாத சட்டங்களாக, அரசியலமைப்பில் பல முக்கியமான சட்டங்கள் இருக்கின்றன (இவற்றுள் பல முன்னரே குறிப்பிடப்பட்டன). அரச முடியைப் பெறும் வழி உரிமையை ஒழுங்குபடுத்தும் சட்டத்தைப்போல, அரசியலமைப்பின் சட்டங்கள் பல இருக்கின்றன. முன்பு ஒரு காலத்தில் எழுதி வைக்கப்படாத அல்லது பொதுவான சட்டங்களாக இருந்த இவை, இப்பொழுது எழுதப்பட்ட அல்லது சட்ட நூலாக ஆக்கப் பட்ட சட்டங்களாக ஆகிவிட்டன. அரசியலமைப்பின் வழக்கங்கள் முறையாக எழுதிவைக்கப்படக் கூடியவையே ஆயினும், அவை சட்ட நூலில் பதிந்து வைக்கப்பட முடியாதவை. ஆகவே, நமது பாராளுமன்றச் செயல்முறை யெல்லாம் வழக்க இயல்பான சட்டத்தொகுதியே அன்றி வேறன்று. என்றாலும், அது எழுதப்பட்ட அல்லது அச்சிடப்பட்ட விதிகளாகப் பதிந்து வைக்கப்பட்டுள்ளது. சுருங்கச் சொல்லின், எழுதப்பட்ட சட்டத்துக்கும், எழுதப்படாத சட்டத்துக்குமிடையேயுள்ள வேறுபாடு (அரசியலமைப்புச் சட்டம் என்று அழைக்கப் படுகிற), அரசியலமைப்பின் சட்டத்துக்கும், அரசிய லமைப்பின் வழக்கங்களுக்கும் உள்ள வேறுபாட்டோடு எவ்வகையிலேனும் பொருந்தி வரவில்லை. பிற்கூறப்பட்ட வகையான வேறுபாடே நமது கவனத்துக்கு உரியது. எவ்வாறெனில், அது மிக முக்கியமானதாகவும், அரசிய லமைப்புச் சட்டம் என்ற முழு விஷயத்தையும் விளக்குகிறது. மேலும், ஒரு எழுதப்பட்ட, அல்லது சட்ட நூலாக ஆக்கப்பட்ட அரசியலமைப்பை உடைய நாடுகளில் மேற்படி

வேறுபாடு காணப்படலாம்.[1] யுனைட்டெட் ஸ்டேட்சில், தலைவர் (President), செனட் முதலியோரின் அதிகாரங்களும், தலைவரைத் தேர்ந்தெடுக்கும் வகையும், மற்றும் இவை போன்ற பிறவும், சட்டவகையைப் பொறுத்த அளவில் முழுவதும் அரசியலமைப்பின் சட்டத்தினால் ஒழுங்கு செய்யப் பட்டுள்ளன. ஆயினும், சட்டத்தை ஒட்டியே, சில கண்டிப்பான வழக்கமான விதிகளும் அங்கு தோன்றியுள்ளன. இவற்றை எந்த நீதி மன்றமும் ஒப்புக்கொள்ளாவிட்டாலும், நடைமுறையில் சட்டத்துக்கு உள்ள ஆற்றலை அவை பெற்றுள்ளன. எந்தத் தலைவரும் ஒரு தடவைக்கு மேல் தேர்ந்தெடுக்கப்பட்டதில்லை (அரசியலமைப்பினால் இத்தகைய வரம்பு ஏதும் குறிப்பிடப்படவில்லை). தலைவராக மீண்டும் தேர்ந்தெடுக்கப்படும் தகுதிக்கு, வழக்க இயல்பான இந்த வரம்புக்கு மக்கள் அளித்துள்ள ஒப்புதலான, துதளபதி கிராண்ட் என்பவர் மூன்றும் முறையாக வேட்பாளராவதற்குப் பெரும் தடையாக இருந்தது. அரசியலமைப்பின் சம்பிரதாயங்கள் தலைவரைத் தேர்ந்தெடுக்கும் தேர்வாளர்கள் அல்லது வாக்காளர்களுடைய நிலைமையை வெகுவாக மாற்றியுள்ளன. இவ் வாக்காளர்கள் என்ற பெயருக்கேற்ற நிலையில், அதாவது தலைவரைத் தேர்ந்தெடுக்கும் ஆட்களாக இவர்கள் இருத்தல் வேண்டுமென்று அரசியலமைப்பை நிறுவியோர் கருதினர். சுருங்கச் சொல்லின், குடியரசின் தலைமையான அலுவலர், சட்டப்படியாக ஒரு இரட்டைத் தேர்வு முறையின் மூலமே அமர்த்தப்படுதல் வேண்டும். இந்த நோக்கம் நிறைவேறவில்லை. இதில் 'வாக்காளர்கள்' எனப்படுபவர், ஒரு குறிப்

[1] யுனைட்டெட் ஸ்டேட்ஸின் அரசியலமைப்பில் காணப்படும் வழக்க இயலான கூறுபாடு, பல ஆங்கிலேயரும் எண்ணுவதைவிட மிக அதிகமாக உள்ளது. உட்ரோ வில்சன் எழுதிய Congressional Government (1925) என்ற நூலையும், பிரைஸ் என்பவரெழுதிய American Commonwealth (1910) என்ற நூலின் முதற்பகுதியில், 34, 35ஆவது இயல்களையும், ஹார்வில் என்பவரெழுதிய The Usages of the American Constitution (1925) என்ற நூலையும் பார்க்கவும். யுனைட்டெட் ஸ்டேட்ஸின் அரசியலமைப்பில், ஆங்கில அரசியலமைப்பில் காணப்படும் அளவுக்கு வழக்க இயலான கூறுபாடு இருக்கிறதென்று, மிகைபட அல்லாமால், அழுத்தமாகக் கூறலாம். ஆயினும், அமெரிக்க அமைப்பில் 'வழக்க இயல்பான விதிகளுக்கும், 'சட்டங்களுக்கும்' இடையே உள்ள வேறுபாட்டைக் காட்டும் கோடு மிகத் தெளிவாக வரையப்படக் கூடியதாக இருப்பதுபோல, இங்கிலாந்தில் வரையப்பட இயலாது.

இப்பொழுது இருக்கும் பிரெஞ்சுக் குடியரசின் அரசியலமைப்புச் சட்டத்திலே, அரசியலமைப்பு வழக்கங்கள் அல்லது சம்பிரதாயங்கள் மிகவும் கூடுதலான அளவில் ஆதிக்கத்தை உடையவைகளாக இருக்கின்றன. எடுத்துக்காட்டாக, அரசியலமைப்பின் பிரிவுகளினால் குடியரசுத் தலைவருக்கு வழங்கப்பட்டுள்ள பெரும் அதிகாரங்களை அவர் நடைமுறையில் கையாளுவதை, அந்த வழக்கங்கள் மிகவும வரம்பு படுத்துகின்றன. சார்தன் என்பவரெதிழுய நூலின் (1908) 79-105 ஆம் பக்கங்களைப் பார்க்கவும்.

பிட்ட வேட்பாளருக்கு வாக்கு அளிப்பதற்காக இருக்கின்ற வெறும் கருவியாக ஆகிவிட்டனர். அவர்கள் ரிபப்ளிகன் அல்லது டெமாக்ரடிக் வேட்பாளருக்காக அளிக்கப்பட்ட வாக்குகளாகவே (ballots) ஆகியுள்ளனர். ஒரு வாக்காளர் அல்லது தேர்வாளர் என்பவர் உண்மையில் தேர்ந்து எடுப்பதற்காக அன்று என்ற சம்பிரதாயமானது இப்பொழுது மிகவும் உறுதியாக நிறுவப்பட்டுள்ளபடியினுல்,சட்டப்படியாக அவருக்கு இருக்கும் தேர்ந்தெடுக்கக்கூடிய அதிகாரத்தை அவர் கையாளுவாராயின், அது சிறிதும் நேர்மையற்ற அரசியல்வாதியினுல்கூட செய்யப்பட முடியாத, அரசியல் மதிப்பை அழித்த குற்றமாகக் கருதப்படும். மிஸ்டர் ஹேய்ஸ் என்பவருக்கும், மிஸ்டர் டில்டன் என்பவருக்குமிடையே நடைபெற்ற போட்டியில் ஒரு சில ரிபப்ளிகன் வாக்காளர்கள் டெமொக்ரேடிக் வேட்பாளருக்கு வாக்களிக்கத் தங்களுக்குச் சுதந்திரம் உண்டு என்று கருதி இருந்தால், பொது இடையூறுகள் பல (இடுக்கண்கள் என்று சொல்லா விட்டாலும்) தடுக்கப்பட்டிருத்தல் கூடும். அவ் வாக்காளருள் ஒருவர்கூட தனது கட்சியினின்றும் மாறவில்லை. இங்கிலாந்தில் இரு மன்றங்களாலும் நிறைவேற்றப்படும் மசோதாக்களை நீக்குதற்கு அரசருக்கு உள்ள மறுப்பு அதிகாரம் எவ்வாறு ஒழிக்கப்பட்டுள்ளதோ, அதே வன்மையோடு, அமெரிக்கா விலும் அரசியலமைப்பின் சம்பிரதாயங்களால் தேர்ந்தெடுப் பதற்கு ஒரு வாக்காளருக்கு இருக்கும் அதிகாரமானது முழுவதும் ஒழிக்கப்பட்டுவிட்டது. ஆகையால், ஒரு எழுதப்படாத அரசியலமைப்பில் இருப்பதுபோல, ஒரு எழுதப்பட்டுள்ள அரசியலமைப்பிலும், அரசியலமைப்பின் சட்டத்துக்கும், அரசியலமைப்பின் வழக்கங்களுக்கும் வேறுபாடு முழுவதும் இருப்பதை நாம் காண்கிறேம்.

சட்டவகையான ஆய்வுக்குரிய அரசியலமைப்புச் சட்டமென்பதற்கு அரசியலமைப்பின் சட்டம் என்பதே பொருள்

இரண்டிற்குமுள்ள இந்த வேற்றுமையைப்பற்றி நான்மிகை பட வற்புறுத்தி யிருக்கிறேன். ஏனெனில், இந்த வேறுபாடே, ஈண்டு விவாதத்தினுடைய அடிப்படையான கருத்து ஆகும். ‘அரசியலமைப்புச் சட்டம்’ என்ற தொடரை நாம் புரிந்து கொண்டு விட்டால், இந்தப் பொருளோடு தொடர்புள்ள மற்றெல்லாச் செய்திகளும் தவறுக்கு இடமில்லாத வகையில் காணப்படுகின்றன.எனவே, இங்கிலாந்தின் சட்டத்தினுடைய

ஒரு கிளையாக இருக்கின்ற அரசியலமைப்புச் சட்டத்தைக் கற்பித்தலிலோ, அல்லது ஆய்வு செய்வதிலோ ஈடுபட்டுள்ள ஒரு சட்ட அறிஞர், தான் ஆய்வு எடுத்துக் கொள்ளும் பொருளின் இயல்பையும் அளவையும் தெளிவாகக் காணத் தவறமாட்டார்.

சட்ட அறிஞர் வழக்கங்களைப் பற்றியோ அல்லது சம்பிர தாயங்களைப் பற்றியோ ஆராய்தலில் அவர் நேரடியாக ஈடு படவில்லை. வழக்கங்கள் ஆண்டாண்டுதோறும், தலைமுறை தோறும் மாறுதலடைந்து வருகின்றன. தேர்தலில் தோற் கடிக்கப்பட்ட ஒரு அமைச்சரவை தேர்தலின் முடிவு வெளி வந்த நாளிலேயே அலுவலைத் துறத்தல் வேண்டுமா, அல்லது பாராளுமன்றத்தில் தோற்கடிக்கப்படும் வரையில் அலுவலை நீடித்து வைத்திருக்கலாமா என்ற கேள்வி நடைமுறை முக் கியத்துவம் உடைய கேள்வியாக இருக்கலாம். இந்தக் கேள்வியைப் பற்றிய இன்றையக் கருத்துகள் முப்பது ஆண்டு களுக்கு முன்னர் நிலவிய கருத்துகள் அல்லது சம்பிரதாயங் களினின்றும் மாறுபடுகின்றன என்று கூறப்படுகின்றது. மேலும் அவை இன்றிலிருந்து பத்தாண்டுகளுக்குப் பின்னர் நிலவக்கூடிய கருத்துகளினின்றும் அல்லது சம்பிரதாயங்களி னின்றும் வேறுபட்டிருத்தல் கூடும். எளிதில் விளங்காத இந்தப் பிரச்சினையைப்பற்றிக் கவனத்துக்குரிய மேற்கோள்களும், சிறப்பு மிக்க ஆசிரியர்களுடைய கருத்துகளும் எடுத்துக் கூறப் படுகின்றன. (இந்தக் கேள்வியைப் பற்றி) ரஸ்ஸலும் (Russel) பீலும் (Peel) எடுத்த முடிபு அல்லது செயல் முறையை பீக்கன்ஸ் பீல்டும் (Beaconsfield), கிளாட்ஸ்டனும் (Gladstone) எடுத்த முடிபு அல்லது செயல்முறை மாற்றியிருத்தல் கூடும். ஆயினும், இந்தப் பிரச்சினை சட்டத்தைப் பற்றிய ஒன்று அன்று. அது அரசியலைப் பற்றியது ஆகும். அது எந்தச் சட்ட அறிஞராலும் (lawyer) அல்லது சட்டப் பேராசிரியராலும் ஆய்வு செய்யப்படுதற்கு உகந்ததன்று. அவர் இந்தப் பிரச்சினையைப்பற்றி எப்போதாயினும் தொடர்பு கொள்ளுவா ராயின், அரசியலமைப்பின் வழக்கங்களுக்கும், அரசிய லமைப்பின் சட்டத்துக்கும் இடையே ஏதாவது தொடர்பு இருந்தால், அந்தத் தொடர்பு என்ன என்று எடுத்துக் காட்டும்பொருட்டே இந்தப் பிரச்சினையைக் கவனிப்பார்.[1]

அரசியலமைப்புச் சட்டம் என்ற முழு இயல்பை உடைய சட்டமே சட்ட அறிஞருடைய கவனத்துக்கு உரியது.

[1] ஜென்னிங்க்ஸ் எழுதிய 'காபினெட் அரசாங்கம்' என்ற நூலை (1959ஆம் ஆண்டு, 3ஆம் பதிப்பு, முதலாவது இயல்) பார்க்கவும்.

அவருடைய முழு அலுவலும், அரசியலமைப்பின் பல்வேறு பகுதிகளிலும் காணப்படுகின்ற சட்ட இயல்பான விதிகள் (அதாவது நீதி மன்றங்களால் ஒப்புக் கொள்ளப் படுகிற விதிகள்) யாவை என்று காட்டுவதே ஆகும். இத்தகைய விதிகளில் அல்லது சட்டங்களில் வேண்டுவனவற்றை அவர் கண்டுகொள்ளலாம். அரசருக்குள்ள சட்டப்படியான நிலைமையைத் தீர்மானிக்கும் விதிகள் அல்லது சட்டங்கள், அரசருடைய அமைச்சர்களுடைய சட்டப்படியான உரிமைகளைத் தீர்மானிக்கும் விதிகள், பிரபுக்கள் மன்றத்தின் அமைப்பைத் தீர்மானிக்கும் விதிகள், பொது மக்கள் மன்றத்தினுடைய அமைப்பைத் தீர்மானிக்கும் விதிகள் நாட்டின் அரசாங்கத் திருச்சபை முறையை நிறுவி, அதனைக் கட்டுப்படுத்தும் சட்டங்கள், அவ்வாறு நிறுவப்படாத திருச்சபைகளினுடைய நிலைமையைத் தீர்மானிக்கும் சட்டங்கள், படையை ஒழுங்குபடுத்தும் சட்டங்கள்—ஆகிய இவையும், மற்றும் நூற்றுக்கணக்கான சட்டங்களும், அரசியலமைப்பின் சட்டத்தின் பகுதியாக அமைந்திருக்கின்றன. மேலும், அவைகள் எவ்வாறு யுனைட்டெட் ஸ்டேட்சின் அரசியலமைப்பின் பிரிவுகள், அந்தக் கூட்டரசின் சட்டத்தின் பாகமாக இருக்கின்றனவோ, அதேபோல, இந்த நாட்டின் சட்டத்தின் பாகமாக ஐயத்துக்கு இடமின்றி அமைந்திருக்கின்றன.[1]

அரசியலமைப்பின் சட்டத்தை ஆங்கிலச் சட்டத்தின் மற்ற எந்தப் பகுதியையும்போல விளக்க இயலும்.

சுருங்கக் கூறின், அரசியலமைப்பின்பாகமாக இருக்கும் சட்டங்கள் என்ன என்று எடுத்துச் சொல்லுதலும், அவற்றை ஒரு ஒழுங்காக வரிசைப் படுத்துதலும், அவற்றின் பொருளை விளக்குதலும், கூடுமானவரையில் அவற்றின் தருக்கமுறையான தொடர்புகளை எடுத்துக் காட்டுவதும்—ஆகிய இவையே ஒரு ஆங்கிலச் சட்டப் பேராசிரியரின் அலுவல் ஆகும். எவ்வகையாக ஸ்டோரி (Story) என்ற ஆசிரியரும், கெண்ட் (Kent) என்ற ஆசிரியரும் எழுதப்பட்ட சட்டமாகிய அமெரிக்க அரசியலமைப்பை விளக்கியுள்ளனரோ, அவ்வகையிலேயே மேற்படி

[1] ஜென்னிங்க்ஸ் என்பவரெழுதிய The Law and the Constitution என்ற நூலின் (1952ஆம் ஆண்டு,4ஆம் பதிப்பில்) 69-70ஆவது பக்கங்களைப் பார்க்கவும். இவற்றில் பல விதிகள் சட்ட நூலில் சேர்ந்துள்ளன. இந்த விவாதமானது, வழக்கங்களின் விளைவாகத் தோன்றிய காபினெட் அரசாங்கத்தைப் பற்றிய விவாதம் அன்று என்றாலும் இந்த நூலின் மூன்றும் பகுதியானது, சட்டத்தின் விதிகளைச் சார்ந்த வழக்கங்களென்று நூலாசிரியர் டைசி கருதிய வழக்கங்களை அவர் விவாதத்துக்கு எடுத்துக் கொண்டாரென்று காட்டுகிறது.—பதிப்பாசியர்.

ஆசிரியரும் எழுதி வைக்கப்படாத அல்லது ஓரளவு எழுதிவைக் கப்படாத இங்கிலாந்தின் அரசியலமைப்பை விளக்குதல் வேண்டும். இவ்வாறு செய்வதில் தனிப்பட்ட சிக்கல்கள் இருக் கின்றன. ஆயினும், இந்தத் தலைப்பைப் பொறுத்தவரையில் எழும் இடர்ப்பாடுகள், இங்கிலாந்தின் சட்டத்தினுடைய ஒவ் வொரு துறையிலும் காணப்படுகின்ற இடர்ப்பாடுகளை, எண் ணிக்கையில் இல்லாவிடினும், தன்மையைப் பொறுத்தவரையில் ஒத்திருக்கிறது. இவ்வாறு ஆய்பவர், ஓரளவு சட்டநூலில் உள்ள சட்டத்தையும், ஓரளவு நீதிபதிகளால் செய்யப்பட்ட சட்டத்தையும் ஆய்தல் வேண்டும். ஆய்வாளர் பாராளுமன்றச் சட்டங்களைச் சார்ந்திருப்பதுபோல, நீதிபதிகளின் தீர்ப்புகளை யும், அதிகார அடிப்படையில் விடுக்கப்பட்ட ஆணைகளையும் (authoritative dicta) பலதடவைகளில் நீதிமன்றக் கோட்பாடுகளி லிருந்து வருவிக்கப்பட்ட முடிபுகளையும் சார்ந்திருத்தல் வேண்டும்; நடைமுறையிலிருக்கும் வழக்கத்துக்கும், ஒப்புக் கொள்ளப்பட்ட உரிமைக்குமிடையே பாகுபாடு காண்பது எளிது அன்று. இந்த விதி, அரசியலமைப்பின் சட்டத்தை விளக்க முற்படும் முயற்சிக்கும் பொருந்துவதாகும்; மேலும், ஒப்பந்தங்களைப்பற்றிய நமது நாட்டுச் சட்டத்தையும், குற்றச் செயல் பற்றிய நமது சட்டத்தையும், உடைமை பற்றிய நமது சட்டத்தையும் விளக்குதற்குச்செய்யப்படும் எந்த முயற்சியைப் பொறுத்தவரையிலும் மேற்படி விதி பொருந்துவதாகும்.

மேலும், அரசியலமைப்புச் சட்டத்தைக் கற்பிக்கும் ஆசிரியர்களுக்கு இந்த இடத்தில், ஒரு சிறப்பான அனுகூலம் இருக்கிறது. இந் நாளில் அவர்களால் எடுத்தாளப்படும் பொருள் (topic) யாவருடைய உடனடிக் கவனத்துக்கு உள்ளானதாகவும், மிக முக்கியமானதாகவும் ஆகியிருக்கிறது[1]. இத்த ஆண்டுகளிலே, புதிய அரசியலமைப்புப் பிரச்சினைகள் முக்கியத்துவம் பெற்றுள்ளன. அவற்றுள் பலவற்றுக்கு விடைகளும் காணப்பட்டுள்ளன. பதினெட்டாம் நூற்றாண்டில் ஜான் வில்க்ஸ் என்பவரோடு தொடர்புடையனவாக அமைந்த பல தொடர்பான நிகழ்ச்சிகள் நமது அரசியல் சட்டத்தின் பல பகுதிகளில் காணப்பட்டிருந்த பல தெளிவற்ற பகுதிகளை எவ்வாறு விளக்கினவோ, அதேபோல், மிஸ்டர் பிராட்லாவின்

[1] இந்தக் கட்டுரை முதன்முதலில் 1885ஆம் ஆண்டில் வெளியிடப் பட்டது. அந்த ஆண்டிற்கும் 1914ஆம் ஆண்டிற்கும் இடையே, அரசியலமைப்புச் சட்டத்தினுடைய பல விஷயங்களைப் பற்றி-எடுத்துக் காட்டாக, இராணுவச் சட்டத்தின் இயல்பு, பொதுக் கூட்டம் கூடும் உரிமைக்கு உள்ள வரம்பு ஆகியவற்றைப் பற்றி நீதிமன்றத் தீர்ப்புகளும், பொதுமக்களுடைய விவாதங்களும் பலசெய்திகளை வெளியிட்டுள்ளன.

பெயரோடு தொடர்பு படுத்தி எடுக்கப்பட்ட பல தொடர்பான நடவடிக்கைகளும் விளக்கியுள்ளன.[1] வாழ்க்கைச் செலவு பற்றிய சட்டமானது மீண்டும் நிலைநிறுத்தப்பட்டது. கடவுட் பழிப்பைப் பற்றிய சட்டமானது அண்மையில் புதியதொரு விளக்கம் கொடுக்கப்பட்டுள்ளது. குற்றத்துக்குரிய நடவடிக்கையின் தன்மை என்ன என்று இப்பொழுது யாவரும் அறிகின்றனர். பொதுமக்கள் மன்றத்துக்கும், நாட்டின் நீதி மன்றங்களுக்குமுள்ள தொடர்புக்கு இப்பொழுது துல்லியமாக இலக்கணம் வகுக்க இயலும். ஒரு உறுதிமொழியினுடைய சட்ட இயல்பும், முக்கியத்துவமும் உலகம் முழுவதற்கும் தெளிவாக விளக்கப்பட்டுள்ளது. உலக முழுவதற்கும் அது அவ்வாறு ஆக்கப்படாவிட்டாலும், சட்ட அறிக்கைகளைப் (Law Reports) படிக்கின்ற எல்லோருக்குமாவது அது தெளிவாக ஆக்கப்பட்டுள்ளது. இதற்கிடையில் மிஸ்டர் பிராட்லாவுக்குத் தொடர்பு இல்லாத சூழ்நிலைகள், பொதுக் கூட்டம் கூடும் உரிமையோடு தொடர்புள்ள பல்வேறு பிரச்சினைகளைக் கவனிக்குமாறு பொது மக்களைத் தூண்டுகின்றன. இத்தகையதொரு உரிமை சட்டத்தினுல் ஒப்புக்கொள்ளப்பட்டிருக்கிறதா? அது கையாளப்படுவதற்குரிய வரம்புகள் யாவை? 'சட்டத்துக்கு முரணுன கூட்டம் (unlawful assembly) என்பதற்கு முழு இலக்கணம் என்ன? சட்டத்துக்கு ஒத்த முறையில் கூடி இருக்கும் குடிமக்கள் எந்த அளவுக்கு வன்முறையைக் கையாண்டு, தங்களுடைய கூட்டம் கூடும் உரிமையைச் செயல்படுத்த இயலும்? தன்னைக் காத்துக் கொள்ளும் உரிமையை என்னென்ன வரம்புகளுக்குள் ஆங்கில அரசியலமைப்பு ஒப்புக்கொள்ளுகிறது? நீதிமன்றங்களின் முன்பாக அண்மையில் இவற்றுள் சில கேள்விகள் எழுப்பப் பட்டன. இவ்வெல்லாக் கேள்விகளுமே பின்னெரு நாளில் நீதிமன்றங்களில் எழுப்பப்படுதல் கூடும். நமது அரசாங்கச் சட்டத்தின் (public law) மூலாதாரத்தையே ஆய்வு செய்கின்ற கேள்விகளாக இவை அமைந்திருக்கின்றன. இவற்றுக்கு உண்மையான விடைகாணுதலென்பது ஒவ்வொரு குடி ஆளின் முக்கியமான வேலை ஆகும். இக் கேள்விகளுக்கு விடை காணப்படும்போது, அரசியலமைப்பின் சட்டத்தைப்பற்றி ஆராய்ச்சி என்பது மிகவும் உடனடியாக யாவருடைய கவனத்தையும் ஈர்க்கிற விஷயமாக இருக்கிறது. இந்த (அரசியலமைப்பின்) சட்டத்திலுள்ள பிரிவுகள், தீவிரமான

[1] மிஸ்டர் பிராட்லாவின் அரசியல் வாழ்வை Dictionary of National Biography, பகுதி 22 (1908-9ல் மீண்டும் வெளியிடப் பட்ட பின்சேர்க்கையில்), பக்கம் 148-ல் பார்க்கவும்.

அரசியல் கட்சி உணர்வுகளை உண்டாக்கிய, இகழத்தக்க முறையில் யாவருக்கும் தெரியவந்த வழக்குகளில் சில சமயங்களில் காணப்படுகின்றன. இவ்வாறு இவை காணப் படுகின்றன என்பதும் ஒரு மிகவும் தவருன கருத்தை வளர்த்தல் கூடும். மிகப் பெரிய அரசியலமைப்பு பற்றிய போராட்டங்களினுலும், அரசியல் போராட்டங்களினுலும் தோன்றிய விளைவுகளைப் போற்றிக் காப்பாற்றுகின்ற புகழ்மிக்க நீதிமன்றத் தீர்ப்புக்களிலிருந்து அரசியலமைப்பின் சட்டம் திரட்டப்படுகிறது என்பதாக அறிவுவளர்ச்சி பெருதவர்கள் எண்ணக்கூடும். உண்மையில் நிலைமை இது அன்று. பார்லமா பெல்ஜ் அல்லது தாமஸ் என்பவருக்கும் அரசியாருக்கும்[2] தோன்றிய வழக்கைப் போலப் பலருக்கும் தெரியாத பல வழக்குகள், அரசியலமைப்புச் சட்டத்தின் கொள்கைகளோடு தொடர்பு உடையனவாக இருக்கின்றன, அல்லது அவற்றை அவ்வழக்குகள் தீர்மானித்து உருவாக்கி இருக்கின்றன. (உயர்தர) ஆட்சி அலுவலருடைய ஆணைகளுக்குக் கீழ்ப்படிதல் என்பது, சட்டப்படியான அதிகாரத்துக்கும் மீறிய செயல்களுக்கு எதிராக எடுக்கப்படும் நடவடிக்கை களுக்கு அல்லது வழக்குத் தொடர்தலுக்கு (prosecution) எதிராக அல்லது தற்காப்பாகக் கூறக்கூடிய நியாயம் ஆகாது. அரசியலமைப்புச் சட்டத்திலுள்ள கொள்கைகளுள் இதுவே மிகவும் முக்கியமானதாகும். உண்மையில் ஒவ்வொரு காவலதிகாரிக்கும் (constable) அல்லது ரெவின்யூ வரி தண்டும் அதிகாரிக்கும் எதிராக எடுக்கப்படும் நடவடிக்கையானது மேற்படிக் கொள்கையைச் செயல் படுத்துகிறது. சுருங்கச் சொன்னுல் அரசியலமைப்பு அல்லாத மற்ற விஷயங்களைப் பற்றிய சட்டத்தை நாம் எந்த மூலாதாரங்களிலிருந்துதிரட்டுகிருேமோ அதே மூலாதாரங்களி லிருந்துதான் அரசியலமைப்பின் சட்டம் முழுமையும் திரட்டப்படுகிறது. இத்தகைய அரசியலமைப்பின் சட்டமே நன்ருக ஆய்வு செய்யப்படாவிட்டாலும், ஆய்வுக்குரிய மற்றெந்தத் துறையையும் போன்று, சட்ட ஆய்வுக்குரியதாக அல்லது சட்ட விளக்கத்துக்கு உரியதாக இருந்து, ஈடு பாட்டைத் தரவல்ல ஒரு தனிப்பட்ட துறையாக விளங்கிறது. இன்னும் முழுவதும் வரையறுக்கப்படாத ஒரு பொருளாக (subject) இது இருந்து வருகிறது. எனவே, ஒழுங்காக முற்றிலும்

[1] (1879) 4 P. D. 129; on appeal (1880) 5 P. D. 197. Walker v. Baird (1892) A. C. 491, at p. 497; K. and L. 115.

[2] (1874) L. R. 10 Q. B. 31

அமைக்கப்படாத, சட்டத்தினுடைய ஒரு துறையை (அதாவது அரசியலமைப்புச் சட்டத்தை) ஆய்வு செய்வதில் ஈடுபட்டு, இன்பமடைகின்ற ஆசிரியரும், மாணவரும் ஒரு வசதிக் குறைவின் காரணமாக இடர்ப்பாடு அடைகின்றனர்.[1]

இவ் வசதிக் குறைவுக்கு ஈடாக ஒரு பெரும் நன்மை இருக்கிறது. முதலாவதான அல்லது அடிப்படையான கொள்கைகளை வழிகாட்டியாக நாம் ஆராய்ந்து அறிவது கட்டாயமாக இருக்கிறது; சிக்கலான இந்த விஷயத்தின் புதிர்களினூடே உதவியாக ஒரு குறிப்பைப் பெறும்பொருட்டு நாம் ஆராயும்போது வழிகாட்டிகளாக மூன்று கொள்கைகள் படிப்படியாக நமக்குத் தெரியவருகின்றன. அவற்றுள் முதலாவதாக இருப்பது சட்டம் இயற்றுவதில் பாராளுமன்றத்தினுடைய இறைமை[2]; இரண்டாவதாக அரசியலமைப்பில் முழுவதும் சாதாரணச் சட்டமே பரவி இருத்தல் அல்லது சாதாரணச் சட்டமே தலைமையாக இருத்தல்[3]; மூன்றாவதாக வழக்கங்களெல்லாம், இறுதி நிலையிலே, அரசியலமைப்பின் சட்டத்தின் மீதே சார்ந்திருக்கும் நிலைமை[4] (மூன்றாவது கொள்கையைப் பொறுத்தவரையில், நாம் ஐயப்பாட்டுக்குரிய, கற்பனையான அனுமானத்தையே ஆதாரமாகக் கொள்கிறோம்). எவ்வாறாயினும் இந்த மூன்றுகொள்கைகளையும் ஆய்வு செய்வதும், விளக்குவதும், கையாண்டு பார்ப்பதும் (test) தான் (இவ்வாறு செய்வதன் விளைவு எதுவாக இருப்பினும்) அரசியலமைப்பின் சட்டத்தைக் கற்பதற்குத் தக்க ஒரு அறிமுகமாக அல்லது முன்னுரையாக அமையும்.

[1] இச் சொற்றொடர்கள் 1885ஆம் ஆண்டில் எழுதப்பட்ட பின்னர் ஆங்கில அரசியலமைப்புச் சட்டத்தின் முழு விளக்கத்தையும் சர் வில்லியம் ஆன்சன் என்ற ஆசிரியருடைய வியத்தகு நூலாகிய Law and Custom of the Constitution) என்பது வெகுவாக அளிக்க முற்பட்டுவிட்டது. இந் நூலின் அண்மைக் காலப் பதிப்புகள் முதலாம் பாகம் (5ஆவது பதிப்பு, 1922) பதிப்பாசிரியர் Gwyer; பாகம் இரண்டு(4ஆவது பதிப்பு, 1935)பதிப்பாசிரியர் கீத். இந் நூல் ஆட்சித்துறை அதிகாரங்களைப்பற்றி விவரமாகக் குறிப்பிடவில்லை.

[2] பாகம் i

[3] பாகம் ii

[4] பாகம் iii

பொருட் குறிப்பு அகராதி

அரசியலமைப்பின் சட்டம், 1, 11, 18
அரசாங்கச் சட்டம் (public law), 1, 114
அரசியல் தொகுப்பு, 10
அரசியல் தொழில் வாதி, 5
அரசியலமைப்புச் சட்டத்தின் கொள்கைகள், 14
அரசாங்க அலுவலரை ஒரு அலுவலைச் செய் என ஏவும் ஆணை, 17, 141, 142
அரசாங்க வழக்கறிஞர், 33
அரசியலமைப்புச் சட்டத்தின் தலைமை, 70
அரசியல் வகையான இறைமை அதிகாரி, 76, 161
அரசர் சட்டம் (1509), 95
அரசியலமைப்பின் கடமை, 161
அரசர் மீது வழக்குத் தொடுப்பது பற்றிய சட்டம் (1947), 55, 116, 122
அரசர் முதலாம் ஜேம்ஸ், 95
அதிகாரக் குவிப்பு, 75
அரசர் மூன்றும் ஜார்ஜ், 219
அமைச்சருடைய அதிகாரங்களைப் பற்றிய குழு, 3, 11, 112
அமர்வுக் காலம், 6
ஆட்சித் துறைச் சட்டம், 4, 12, 111
ஆள் சுதந்திரம், 8, 15, 213
ஆட்சித் துறை நீதி மன்றங்களையும் பொது விசாரணைகளையும் பற்றிய குழு (1957), 12, 103, 111
ஆஸ்டின், 16, 42, 154
ஆட்சித் துறை, 15, 100
ஆட்சித் துறை நீதி மன்றம், 17
ஆஸ்திரேலிய காமன்வெல்த் அரசியலமைப்புச் சட்டம், 24, 38, 183
ஆலோசனை மன்ற ஆணை (கௌன்சில் ஆணை), 64, 185
ஆணையின் வரைவு, 32, 33
இங்கிலாந்தின் எல்லைக்குழு 32
இணைப்புச் சட்டம், 55
இரட்டை அலுவலர் குழு, 75
இறைமையும் வெஸ்ட்மின்ஸ்டர் சட்டமும், 77
இந்தியா, 87
இலங்கை, 21, 87
இலங்கை அரசியலமைப்புச் சட்டம், 194, 195
இயற்கை நீதி, 25
உள்ளூர் அரசாங்கக் கழகம், ஆர்லிட்ஜ் வழக்கு, 137, 157
உரிமைகள் மசோதா, 96, 99, 184, 245
எல்லன் ஸ்டிரீட் எஸ்டேட் வழக்கு, 36
எழுதப்பட்ட சட்டம், 8
எடின்பரோ டால்கீத் ரயில்வே

கம்பெனிக்கும் வாச்சோப் புக்கும் இடையே தோன்றிய வழக்கு (1842), 30
ஏதேச்சாதிகார ஆட்சி, 9
ஏகாதிபத்தியத் தனிச் சலுகை 205
ஐக்கிய நாடுகள் சபை, 58, 94
ஐவர் ஜென்னிங்ஸ், 67, 100
ஒன்ட்டாரியோ அரசாங்க வழக்கறிஞருக்கும், கனடா அரசாங்க வழக்கறிஞருக்கு மிடையே எழுந்த வழக்கு (1967), 73
ஒப்படைக்கப்பட்டசட்டமியற் றும் அதிகாரம், 61
ஒப்பியல் சட்டம், 105
ஓல்ட் பெய்லி, 203
ஓரரசு நாடு, 75, 76
ஓரளவு நீதிமன்றத்தின் செயல் விதி, 30
கல்விக்கழகம், ரைஸ் வழக்கு, 157
கணை நாடு, 81, 87
கனடா டொமீனியன், 24
கட்டாய உயிர்காப்புமுறை 9
கப்பல் வரிப்பண வழக்கு, 26
கர்மன்வெல்த், 21—23
காபினெட் ஒற்றுமை, 205
கார்டினர், 235
கிரேட் வெஸ்ட்டர்ன் ரயில்வே கழகம், 63
கிளாட்ஸ்டன், 252
கில்லட்டீன், 90
குடியேற்ற நாடுகளின் சட்டங் களைப் பற்றிய சட்டம், 67
குழு முறை, 90
குறைந்த பட்ச சம்பளங்கள் சட்டம் (1935), 78
கூப்பர், வேண்ட்வோர்த் பணிக் கழக வழக்கு, 137
கூட்டரசு அரசாங்கம், 23
கூட்டுஉரிமைத்தத்துவம், 155
கூலிகளை ஒழுங்குபடுத்தும் சட்டம், 4
கென்ட், 221, 222, 253
கொறடா, 187
கௌவன் 47, 49 — 51, 53
சட்டத்தின் ஆட்சி, 3, 4, 7, 8, 9, 12, 93
சமயோசித அதிகாரங்கள், 8, 9, 111
சட்டப்படியான இறைமை அதிகாரம், 23, 42, 76
சர்வ வல்லமை, 40
சர்வதேசச் சட்ட வல்லு னர்கள் குழு, 105
சர் வில்லியம் அன்சன், 154, 210
சால்மண்ட், 45
சாலைப் போக்கு வரவு சட்டங் கள், 113
சான்று விதி, 50
சிறை பிடிக்கப்பட்டவரை நீதி மன்றத்துக்குக் கொண்டுவர இடப்படும் கட்டளை 17,141, 142, 143
சிகாகோ மாநாடு (1957), 106
சுயஆட்சி மசோதா(1914),153
செயல் நிறுத்த ஆணை, 148
செட்டில்மெண்ட் சட்டம் 96, 249
டாசிட்டஸ், 2 1
டாக்டர் ஸ்டப்ஸ், 235
டாக்கு விலி, 241
டில்டன், 251
டெமாக்ரடிக் கட்சி, 251
தடை ஆணை, 17, 66, 117,141, 142, 143
தனியார் தன்முயற்சிக் கொள்கை, 4, 155, 156

தனி நலம் பற்றிய மசோதா சட்டமாக ஆக்கப்படுதல், 29
தனிப்பட்ட மன்ற உறுப்பினர், 30
தனியார் உரிமை, 101
துரோகக் குற்றச்சாட்டு முறை, 193, 196
தூண்டும் ஆற்றல்கள், 204
தென்னுப்பிரிக்க யூனியனின் நிலைமைச் சட்டம் (1934), 85
தென்னுப்பிரிக்கச் சட்டம், 52
தென்னுப்பிரிக்கா, 21, 38
தேசீய சுகாதாரக் கழகங்கள், 16
தேசீய உதவி, 128
தேசீய மருத்துவப்பணி, 128
தேசீய சுகாதாரக் காப்புத் திட்டம், 4
தேசீய உயிர் காப்புத் திட்டம், 128
தொழிற்சாலைகளில் வாராந்திர ஓய்வுச் சட்டம் (1935), 73
நிர்வாகம், 8
நியூ சௌத்வேல்ஸ் அரசாங்க வழக்கறிஞர், டிரத்தோவன் வழக்கு (1932) 65, 67
நிழல் காபினெட், 169
நிரந்தர ஆணை, 21, 30, 191, 199
நிதி மசோதா, 34, 35, 183, 188, 190, 197
நிலவரச் சட்டத்தின் விதிகள், 97
நீதிக் குழுச் சட்டங்கள் (1833 78 1844,
நீதிபதி ஸ்டீபன், 31
நீதிபதி கூப்பர் பிரபு, 55, 56
நீதிபதி கோக், 35, 97, 235, 237
நீதிபதி ரஸ்ஸல் பிரபு, 55 1847, 78
நீதிக் குழு, 24, 37, 38
பர்க், எட்மண்ட், 217
படைத்துறை, 15, 128
பத்திரத்தைத் தாக்கல் செய்ய கட்டளை (மறு பரிசீலனை ஆணை) 17, 117, 141, 142
பண ஒதுக்கீடு மசோதா, 197
பாகிஸ்தான், 87
பாராளு மன்ற இறைமை, 2-9, 18, 20, 38, 67
பாராளுமன்ற இறைமையும், கூட்டரசுக் கோட்பாடும்,69
பாராளுமன்ற எல்லை ஆணைக் குழுவினர், 27
பாதுகாப்பு உரிமைப்பத்திரம், 64
பாராளுமன்றச் சட்டங்கள்,10
பிரான்ஸ், 21
பிரபுக்கள் அல்லது பெருமக்கள் மன்றம், 30, 35
பிராட்லா - கோசெட் வழக்கு, 31, 50, 255
பில்சன் கழகம், உல்வர் ஹாம்டன் கழகம் வழக்கு, 33
பிளாக்ஸ்டன், 35, 224
பிரிட்டிஷ் நிலக்கரிக் கழகம், வழக்கு, 37
பிரீமன், 230
பீல், 206, 252
பீக்கன்ஸ் பீல்ட், 252
புதிய பங்குமுறைச் சட்டங்கள் 71, 73
பெல்ஜியம், 21
பேக்கன், 68, 236
பேராசிரியர் W.A.ராப்ஸன்,129
பேஜ்ஹாட், 208, 238
பேச்சுரிமை, 8, 15, 213
பொதுச் சட்டம் (Common

Law) 8, 15, 18, 101
பொதுமக்கள் மன்றம், 5, 6, 31
பொதுச் (அரசாங்க) செலவு, 8
பொதுச் சட்ட வழக்கறிஞர்கள், 26
பொது நலம்பற்றிய மசோதா, 30
பொதுவான சர்வதேசச் சட்டம், 41
பொதுச் சட்டத்தின் தலைமை, 97
பொதுச் சட்டத்தின் விதிகள், 97
பொதுச் சுகாதாரச் சட்டம் (1875), 117
பொதுநல அரசாங்கம், 4
போக்கு வரவு நிறுவனம், 16
மன்றத்தார் குழு, 200
மறுபரிசீலனை மன்றம், 189
மலேயாக் கூட்டரசு, 87
மக்கார்மிக், வழக்கறிஞர்பிரபு, 54
மான்செஸ்டர், 32
மாபெரும் பட்டயம், 96
மாறுபட்டிருக்க இசைதல், 205
முற்சான்றுக் கோட்பாடு, 147
முரண்பாட்டைப் பற்றிய கோட்பாடு, 79
முன்னதாகக் கலந்து கொள்ளுதல், 58
முறைமை அதிகாரம், 29
முடிவான ஒப்புதல், 39
மூன்று வாசிப்பு நிலைகள், 33
மெயிட்லண்ட், 16, 209
மேல் முறையீட்டு நீதிமன்றம், 32, 66, 72
மைக்கேல் அஞ்ஜெலோ, 217
மோஹாம், 36
வழக்காறுகள் (193—207) 3, 14, 39
வரிப்பளு சாரும் நிலை, 9
வருமான வரித்துறை, 15
வாழ்நாள் பிரபுத்துவ சட்டம் (1958), 89
வாணிபக் கப்பல் சட்டம் (1894), 78
வாணிப மீதம் பற்றிய குழுவின் அறிக்கை, 205
வாக்ஸால் எஸ்டேட் வழக்கு, 36
விளம்பரங்கள் பற்றிய சட்டம் (1610), 95
விசேட அதிகாரம், 15, 63, 97
வெர்ஜில், 217
விசேட நீதி மன்றங்களையும், அரசாங்க விசாரணைகளையும் பற்றிய சட்டம் (1958), 145
விரிவாக நிலைபெற ஆக்கப்பட்ட சட்டப் பிரிவுகள், 50
வில்லியம் ஹோல்ட்ஸ்வர்த், 11, 93, 98, 99
வெஸ்ட்மின்ஸ்டர் சட்டம், 2 10, 22, 27, 29, 37, 51-54, 65, 77, 80, 81, 162-163
ரபேல், 217
ரஸ்ஸல், 252
ரிபப்ளிக்கன் கட்சி, 251
ருட்டியின் வழக்கு, 144, 145
லாசன் எப். எச், 12
லிவி, 217
லி-பியூட், டாரிங்டன் ரயில்வே கம்பெனி வழக்கு (1871), 30
ஜாப்ரே மார்ஷல், 2
ஜான் வில்க்ஸ், 254
ஜெனிவா வழக்கங்கள் சட்டம் (1957), 162
ஹாலம், 218, 280

ஹாட்ஜ் - அரசியார் வழக்கு (1883), 68
ஹாரிஸ் - உள்நாட்டு அமைச்சர் வழக்கு, 80
ஹார்ப்பர் - உள்நாட்டுச் செயலாளர் வழக்கு (1955), 32, 66
ஹெர்ன், 237–239
ஹேய்ஸ் 251
ஹேல், 237
ஸ்டாக்டேல் - ஹான்சர்ட் வழக்கு, 28, 31
ஸ்டோரி, 221, 222, 253
ஸ்டீபன், 226
1610, விளம்பரங்களைப் பற்றிய வழக்கு, 24
1694, மூவாண்டுச் சட்டம், 197
1835, குடியேற்ற நாடுகளின் சட்டங்களுடைய செல்லுபடியாகும் தன்மையைப் பற்றிய சட்டம், 64
1866, மெர்சி துறைமுகக் காப்பாளர், கிப்ஸ் வழக்கு, 123
1837, பிரிட்டிஷ் நார்த் அமெரிக்கச் சட்டம், 39, 77, 84, 183, 188
1908, முதியோர் உதவி நிதிச் சட்டம், 155
1908, நிலக்கரிச் சுரங்கங்கள் சட்டம், 155
1909, 1910, நிதிச் சட்டங்கள், 155
1911, பாராளுமன்றச் சட்டம் 21, 34
1911, 1920 அலுவல் துறை இரகசியச் சட்டங்கள், 102
1911, தேசீய உயிர் காப்பு உறுதிச் சட்டம், 155
1912, நிலக்கரிச் சுரங்கங்கள் குறைந்தபட்ச சம்பளச் சட்டம், 155
1921, அயர்லாந்தின் அரசாங்கச் சட்டம், 21
1922, ஐரிஷ் சுதந்திர நாட்டு உடன்படிக்கைச் சட்டம், 21
1934, பற்றுறுதியை நீக்கத் தூண்டும் செயல் பற்றிய மசோதா, 214
1936, பொது ஒழுங்குமசோதா, 214
1936, மாட்சி மிக்க அரசரது முடிதுறப்பு அறிக்கை, 21
1946, நிலவரச் சட்டக் கருவிகள் சட்டம், 111, 112, 113
1947, இந்தியசுதந்திரச்சட்டம், 21
1948, தேசீயப் பணிச் சட்டம், 102
1949, பொதுமக்கள் மன்றத்தின் (இடங்களை மீண்டும் பிரித்தல்) சட்டம், 32
1958, நீதி மன்றங்கள் விசாரணைகள் பற்றிய சட்டம், 13